ஸ்ரீகலா SRIKALA

# இம்மையும் நீயே! மறுமையும் நீயே!

IMMAIYUM NEEYE!
MARUMAIYUM NEEYE!



ஸ்ரீகலா SRIKALA



# இம்மையும் நீயே! மறுமையும் நீயே!

IMMAIYUM NEEYE!
MARUMAIYUM NEEYE!


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

# ஸ்ரீகலாவின் “இம்மையிலும் நீயே! மறுமையிலும் நீயே!”

Contents


அத்தியாயம் : 1
அத்தியாயம் : 2
அத்தியாயம் : 3
அத்தியாயம் : 4
அத்தியாயம் : 5
அத்தியாயம் : 6
அத்தியாயம் : 7
அத்தியாயம் : 8
அத்தியாயம் : 9
அத்தியாயம் : 10
அத்தியாயம் : 11
அத்தியாயம் - 12
அத்தியாயம் : 13
அத்தியாயம் : 14
அத்தியாயம் : 15
அத்தியாயம் : 16
அத்தியாயம் - 17
அத்தியாயம் : 18
அத்தியாயம் : 19
அத்தியாயம் : 20
அத்தியாயம் : 21
அத்தியாயம் : 22
அத்தியாயம் : 23
அத்தியாயம் : 24
அத்தியாயம் : 25

அத்தியாயம் : 26
அத்தியாயம் : 27
அத்தியாயம் : 28
அத்தியாயம் : 29

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

# அத்தியாயம் : 1

அந்த நள்ளிரவு பொழுதில் அந்த ஊரிலிருந்த எல்லா வீடுகளிலும் விளக்குகள் அணைக்கப்பட்டு எல்லோரும் நன்கு உறங்கி கொண்டிருக்க... அரண்மனை போன்று ஊரின் நடுவே இருந்த அந்தப் பெரிய வீடு மட்டும் அந்த நேரத்திலும் பரபரப்பாய்க் காணப்பட்டது.

"காவேரி, அழாதே... இப்போ நாம கிளம்பிறலாம்." என்று பொன்னம்பலம் தனது மனைவிக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்.

"எப்படிங்க நான் அழாம இருக்க முடியும்? என்னோட ஒத்த புள்ளைய காவு கொடுத்துட்டு நிற்கிறேனே." என்றவரது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

அதைக் கண்ட பொன்னம்பலத்தின் விழிகளும் சேர்ந்து கலங்கியது. இறந்தவர் அவருக்கும் மகன் தானே. அதே சமயம் அவருக்கு மகனை நினைத்து மிகவும் வருத்தமாகவும், கோபமாகவும் இருந்தது.

"ஐயா, நாம கிளம்பலாம்." என்று கூறியபடி சிவகுமரன் வேகமாய் அங்கு வந்து நின்றான்.

"ம், சரி... காவேரி, அழாம எழுந்திரு." என்று மனைவியை அதட்டியவர் அவனிடம் திரும்பி,

"உன் அம்மாவுக்குச் செலவுக்குப் பணம் எதுவும் கொடுத்தியா குமரா? எப்போ நாம திரும்ப வர்றோம்ன்னு தெரியாது. எல்லா ஜோலியும் முடிச்சிட்டு வர நாளாகும்."

"அதெல்லாம் கொடுத்துட்டேன் ஐயா. நாம கிளம்பலாம்." என்றவன் அவர்களது உடமைகளை எடுத்துக் கொண்டு காரை நோக்கி சென்றான்.

பெரியவர்கள் ஏறியதும் கார் கதவை சாற்றிய சிவகுமரன் தனது அன்னையிடம் விடைபெற்றுக் கொண்டு பின்பு ஓட்டுநர் இருக்கையில் அமர்ந்து காரை கிளப்பினான். எடுத்ததுமே அவன் வேகமெடுக்க... எப்போதும் அவனை

அதட்டும் பொன்னம்பலம் இன்று எதுவும் கூறாது தனக்குள் உழன்று கொண்டிருப்பதைக் கண்டு அவன் மிகவும் வருத்தமுற்றவன் பின்பு சாலையில் தனது கவனத்தைப் பதித்தான். திருப்பதி அருகே இருக்கும் வேதானந்தபுரத்தில் இருந்து சென்னையை நோக்கி கார் சீறிப் பாய்ந்தது.

அடுத்தச் சில மணித்துளிகளில் மூவரும் சென்னை வந்துவிட்டிருந்தனர். எங்கே, எப்படிச் செல்வது? என்று தெரியாது விழித்த சிவகுமரன் பின்னால் திரும்பி பார்த்து,

"ஐயா, அட்ரஸ் சொன்னீங்கன்னா இறங்கி போய் விசாரிச்சிட்டு வருவேன்." என்று கூற...

"எனக்கு வீடு தெரியும் குமரா... இப்படியே நேரா போ..." என்ற பொன்னம்பலம் மகனின் வீட்டிற்குச் செல்வதற்கான வழியை அவனிடம் கூறினார்.

அரை மணி நேரத்தில் அரண்மனை போன்றிருந்த வீட்டின் முன் வாயிலில் போய்க் காரை நிறுத்திய சிவகுமரன் அந்த வீட்டின் பிரம்மாண்டத்தை அண்ணாந்து பார்த்தான். வீடு தான் உயரம் என்றால், அதே போன்று சுற்று சுவரும் உயரமாக இருந்தது. இவர்களது காரை கண்ட காவலாளி யார்? என்னவென்று விசாரிக்க... பொன்னம்பலம் தான் யாரென்று கூறியதும் அவன் பணிவுடன் உடனே கதவை திறந்துவிட்டான். காரை உள்ளே செலுத்திய சிவகுமரன் வீட்டின் பிரம்மாண்டத்தைக் கண்டு விழி விரித்தான். இதுவரை அவனது ஐயாவின் வீடு மட்டும் தான் உலகிலேயே மிகப் பெரிய அரண்மனை என்று அவன் நினைத்திருந்தான். ஆனால் அந்த வீட்டை தூக்கி சாப்பிட்டு விடும் போலிருந்தது இந்த வீட்டின் அழகு, பிரம்மாண்டம் எல்லாம்...

வீட்டின் முன் கார் நிறுத்தும் இடத்தில் அவன் காரை கொண்டு போய் நிறுத்த... அதுவரை அடக்கி வைத்திருந்த அழுகையைக் காவேரி விம்மலாய் வெடித்தார். அதைக் கையாலாகாதத்தனத்துடன் பார்த்தபடி பொன்னம்பலம் காரிலிருந்து இறங்கினார். இருவரை தொடர்ந்து

PDF தமிழ் .com

சிவகுமரனும் காரிலிருந்து இறங்கியவன் அவர்களைப் பின்தொடர்ந்து வீட்டினுள் நுழைந்தான்.

அந்த வீடு இழவு வீடு போல் காட்சியளிக்கவில்லை. மாறாக நிசப்தத்துடன் காட்சியளித்தது. 'இதுவே நம்ம ஊரா இருந்திருந்தால் நாலு கெழவிங்க ஒண்ணு கூடி ஒப்பாரி வச்சிருக்குங்க' அவன் மனதில் நினைத்தபடி வீட்டை சுற்றிலும் தனது பார்வையை ஓட்டினான்.

அப்போது அங்கு வந்த ஒருத்தர் இவர்களைக் கண்டதும் பரபரப்பாக ஓடி வந்தார். பொன்னம்பலத்தின் மகன் சீனிவாசனிடம் அவர் செயலாளராக வேலை பார்க்கின்றார்.

"சார், இப்படி நடக்கும்ன்னு..." அவரால் மேலே பேச முடியவில்லை.

"நானுமே நினைக்கலையே. அவன் எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்ன்னு தானே நினைச்சேன்." மேலே பேச முடியாதபடி பொன்னம்பலத்திற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"என் பையன் எங்கே.? கடைசியா அவன் முகத்தை நான் பார்க்கணும்." காவேரி கதறியழுதார்.

"ஆக்சிடென்ட் கேஸ்... போலீஸ் அவங்க என்கொயரி முடிச்சு, போஸ்ட்மார்ட்டம் முடிஞ்சு தான் பிணத்தைக் கொடுப்பாங்க..." செயலாளர் கூற...

"அப்படிச் சொல்லாதப்பா... அவன் என் மகன்..." காவேரியின் அழுகை கூடியது.

"அம்மா, அழாதீங்கம்மா..." சிவகுமரன் தான் காவேரிக்கு ஆறுதல் கூறினான். அவனால் அவருக்கு ஆறுதல் மட்டுமே கூற முடியும். அவரது இழப்பை ஈடு செய்ய முடியாதே.

"எல்லாருக்கும் சொல்லியாச்சா?" பொன்னம்பலம் கேட்க...

"இல்லை சார்... சொன்னால், மீடியாக்காரங்க வீட்டை மொய்ச்சுருவாங்க... நீங்க வந்த பிறகு சொல்லலாம்ன்னு

இருந்தேன்." செயலாளர் கூறவும் அதை ஆமோதித்த பொன்னம்பலம் திடுமென ஞாபகம் வந்தவராய்,

"அபி எங்கே?" என்று கேட்க...

"மேம் ஷூட்டிங்கில் இருப்பாங்க..." அவர் சொன்னதைக் கேட்டுப் பொன்னம்பலத்திற்குக் கோபம் வந்துவிட்டது.

"அப்பா, அம்மா இறந்தது கூடத் தெரியாம அவளுக்கு என்ன ஷூட்டிங் வேண்டி கிடக்கு? முதல்ல ஃபோன் பண்ணி அவளை வர சொல்லு." பொன்னம்பலம் கோபத்தில் பொரிந்து தள்ளிவிட்டார்.

சிவகுமரன் காவேரியை தேற்றியபடி நடப்பதை அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்குப் பொன்னம்பலத்தின் மகன், மருமகள் மற்றும் பேத்தியை பார்த்த ஞாபகம் கொஞ்சமும் இல்லை. கிராமத்தில் இருக்கும் வீட்டிலும் அவர்களது புகைப்படங்கள் கிடையாது. இத்தனைக்கும் அவன் அந்த ஊர்க்காரன் வேறு...

செயலாளர் அபிஷரிகாவின் மேலாளர், ஒப்பனை செய்யும் பெண் என்று அனைவருக்கும் அழைத்துப் பார்த்து விட்டார். யாரும் அழைப்பை எடுக்கவில்லை.

"சார், கொஞ்சம் வெயிட் பண்ணுங்க... மேம் லைனில் கிடைச்சதும் விசயத்தைச் சொல்லி வர சொல்றேன்." என்ற செயலாளர் பொன்னம்பலத்தின் கோபத்தில் இருந்து தப்பிக்க எண்ணி வாயிலை நோக்கி சென்றார்.

அதே நேரம் அபிஷரிகா தமிழ்நாட்டின் முன்னணி கதாநாயகனுடன் செயற்கை மழையில் நனைந்தபடி காதல் பாட்டிற்கு நடனம் ஆடி கொண்டிருந்தாள். அவளது உடை அத்தனை கவர்ச்சியாக இருந்தது. உடை நனைந்து இருந்ததில் அது அவளது கவர்ச்சியைச் சற்று தூக்கலாய் எடுத்துக் காட்டியது. சுற்றிலும் இருந்த ஆண்களின் பார்வைகள் அவளை விரசமாய் வெறிப்பதை சிறிதும் கண்டு கொள்ளாது அவள் தனது நடனத்தில் கவனமாய்

PDF தமிழ் .com

இருந்தாள். உடன் ஆடி கொண்டிருந்த கதாநாயகனின் கைகள் நடனத்தைச் சாக்காக வைத்துக் கொண்டு அவளது மேனியில் அத்துமீற துவங்கியது. இந்தத் துறையில் இது எல்லாம் சகஜம் என்பதால் அவள் பல்லை கடித்துக் கொண்டு ஆடினாள்.

இயக்குநர் 'கட்' என்று குரல் கொடுத்ததும் தனது இடையை அழுத்தி பிடித்திருந்த கதாநாயகனின் கையை அவள் பட்டென்று உதறி தள்ளிவிட்டு விலகி நடந்தாள்.

"அபி, இன்னும் எத்தனை நாளைக்குத் தான் என்னை ஏமாத்த போற?" அந்தக் கதாநாயகன் விடாப்பிடியாய் கேட்டபடி அவளின் பின்னேயே வந்தான்.

"இங்கே பாருங்க சார்... நான் உங்களை ஏமாத்தணும்ன்னு நினைக்கலை. எனக்கு அடுத்தடுத்துக் கமிண்ட்மென்ட் நிறைய இருக்கு. ப்ரியானதும் நானே உங்களுக்கு ஃகால் பண்றேன். நாம ரெண்டு பேரும் டேட் போகலாம்." என்று அவனைக் கண்டு ஈயென்று இளித்தவள் சட்டென்று அங்கிருந்த கேரவனுக்குள் நுழைந்து கொண்டாள்.

"இடியட்... ஷிட்..." என்று முணுமுணுத்தபடி அவள் தனது ஈர உடைகளைக் கலைந்து வேறு உலர் உடையை அணிந்து கொண்டாள்.

அபிஷரிகாவின் முகத்தில் தெரிந்த கோபத்தைப் பார்த்தபடி ஒதுங்கி நின்றாள், அவளுக்கு ஒப்பனை செய்யும் பெண் ரஞ்சனி.

அடுத்த நொடி கேரவனில் இருந்து இறங்கிய அபிஷரிகா அருகில் வந்து நின்ற அவளது காரிலேறி பறந்தாள். அப்போது பார்த்து ரஞ்சனியின் அலைப்பேசி அழைத்தது.

"மேம் இப்போ தான் கிளம்பினாங்க. இன்னும் அரை மணி நேரத்தில் வீட்டுக்கு வந்திருவாங்க." என்று அவள் கூற... மறுபுறம் அழைப்புத் துண்டிக்கப்பட்டது. ரஞ்சனி தனது வீட்டிற்குக் கிளம்பினாள். அபிஷாரிகா அவளுக்கும் தனியே

சிறு கார் ஒன்று வாங்கிக் கொடுத்திருந்தாள். அதை ஓட்டி கொண்டு அவள் கிளம்பினாள்.

"டிரைவர், ஹோட்டலுக்குப் போ..." என்ற அபிஷரிகா இருக்கையில் சாய்ந்து விழிகளை மூடி கொண்டாள்.

இந்த இருபது வயதில் அவளுக்கு ஏனோ வாழ்க்கை மீது சலிப்பு தோன்றியது... எதுவுமே பிடிக்கவில்லை... எதிலுமே நாட்டமில்லை. தேவைக்கு அதிகமான பணம், புகழ் எல்லாமே அவளிடம் கொட்டி கிடந்தது. அத்தனை இருந்தும் அவளுக்கு ஒரு திருப்தியின்மை... ஒருவித எரிச்சல் இருந்து கொண்டே இருக்கிறது. எதனால்? ஏன்? என்று இன்னமும் அவளுக்குப் புரியவில்லை. இத்தனைக்கும் திரைப்படத் துறை அவள் விருப்பப்பட்டு வந்த துறை. அவளுக்கு மிகவும் பிடித்த துறை... 'அபி, அபி' என்று இளைஞன் முதல் கிழவன் வரை அவள் மீது பித்தாக இருப்பது கண்டு அவளுள் சுர்ரென்று ஒருவித போதை ஏறும். அந்தப் போதை அவளுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் அந்தப் போதையை மீறிய சலிப்பு இப்போது அவளுள் இருந்து கொண்டே இருக்கிறது.

ஓட்டுநர் காரை நட்சத்திர விடுதியின் முன் நிறுத்தினார். அதிலிருந்து இறங்கிய அபிஷரிகா நேரே சென்ற இடம் அங்கிருந்த மதுபான கடைக்கு... அங்கு நடனமாடியபடி 'காக்டெயில்' கலந்து கொடுத்து கொண்டிருந்தவனின் முன்னிருந்த இருக்கையில் அமர்ந்த அபிஷரிகா,

"விஸ்கி ஷோர்" என்று ஆர்டர் செய்ய...

அவன் விஸ்கி, எலுமிச்சைச்சாறு, சீனி, ஐஸ்கட்டிகள் எல்லாவற்றையும் சரியான விகிதத்தில் தனது கையிலிருந்த பெரிய பாட்டிலில் கலந்து குலுக்கத் துவங்கினான். ஐந்து நிமிடங்கள் அவனது கை அங்கும் இங்கும் அழகாய் நர்த்தனமாடியது. இறுதியாக அழகான 'ஒயின் கிளாஸ்'யை எடுத்து அதன் வாயிற்புறத்தை உப்பு தூளின் மீது வைத்து அதில் உப்பை லேசாக ஒட்ட செய்து, பின்பு அதனுள் 'காக்டெயில்' கலவையை நுரை பொங்க

PDF தமிழ் .com

ஊற்றியவன், அதன் விளிம்பில் எலுமிச்சை பழத்துண்டை சொருகி அவளிடம் கொடுத்தான்.

"தேங்க்ஸ்..." என்று புன்னகையுடன் வாங்கியவள் அதை அருந்தியபடி சுற்றுப்புறத்தை வேடிக்கை பார்த்தாள்.

"ஹாய் பேப்..." உற்சாகமாய்க் குரல் கொடுத்தபடி அங்கு வந்தமர்ந்தான் ஆகாஷ். அவளது பள்ளி தோழன்... பணக்கார வீட்டின் ஒரே வாரிசு...

"ஹாய் அக்கி..." என்றவளின் விழிகளில் லேசாகப் போதை ஏறியிருந்தது.

"நான் வர்றதுக்குள்ள ஆரம்பிச்சாச்சா?" என்றவன் தனக்கு வேண்டியதை ஆர்டர் கொடுத்தான்.

"இப்போ தான் வந்தேன் அக்கி..." என்றவள் தனது கையிலிருந்ததை முழுவதுமாய்க் குடித்து முடித்தாள்.

"உனக்குச் சொன்னதைப் போல் எனக்கும் சொல்லு அக்கி..."

"வொய் நாட் பேப்... நீ கேட்டா இந்த ஹோட்டலையே விலைக்கு வாங்கித் தருவேன். ஆப்டரால் விஸ்கி வாங்கித் தர மாட்டேனா?" என்றவன் அவளுக்கும் சேர்த்து ஆர்டர் கொடுத்தான்.

அந்நேரம் காரிலிருந்த அவளது அலைப்பேசி அடித்து, அடித்து ஓய்ந்து போனது. வேறுவழியின்றி ஓட்டுநருக்கு அழைத்து விசயத்தைச் சொன்னார் அவளது தந்தையின் செயலாளர்.

"சார், மேம் பாரில் இருக்காங்க... நான் எப்படி உள்ளே போறது?" ஓட்டுநர் மிகவும் தயங்கினான். அவன் தனது எஜமானி அம்மாவின் கோபம் பற்றி நன்கு தெரிந்தவனாயிற்றே.

"கால்ல நடந்து போ மேன். அவங்களைப் பெத்தவங்க இறந்துட்டாங்க... அதை விட அவங்களுக்குத் தண்ணி

அடிக்கிறது தான் முக்கியமா போச்சா." மறுபுறம் அவர் கத்திய கத்தலில் ஓட்டுநர் நட்சத்திர விடுதிக்குள் ஓடினான்.

ஓட்டுநர் ஒருவழியாக அபிஷரிகாவை தேடி கண்டுபிடித்து விசயத்தைச் சொன்னான். அவளோ போதையில் விழிகள் சொருகியபடி,

"அதுக்கு இன்னா மேன்? போ, போய் உன் வேலையைப் பாரு." என்று போதையில் அலட்டினாள்.

விசயத்தைக் கேள்விப்பட்டதும் ஆகாஷிற்குக் கூட ஏறியிருந்த போதை அப்படியே இறங்கிவிட்டது. அவனது விழிகள் சிறிது கலங்கி போனது. என்ன இருந்தாலும் இறந்து போனது அவனது தோழியின் பெற்றோர் அல்லவா!

"பேப், ஆக்சிடென்ட்ல உன்னோட மாம், டாட் இறந்துட்டாங்க. வா போகலாம்..." அவன் அவளின் கையைப் பிடித்து இழுத்தான்.

"ஷ்... கத்தாம அடங்கி உட்கார் அக்கி... அவங்க போனா என்ன? உனக்கு நான் இருக்கேன் அக்கி. உன் தோழி, தி கிரேட் ஆக்ட்ரஸ் அபிஷாரிகா உனக்குத் துணையா இருப்பாள். இப்போது மட்டுமல்ல, எப்போதும்..." என்றவளை கண்டு ஆகாஷ் தலையில் அடித்துக் கொண்டான்.

"இறந்தது என்னோட அப்பா, அம்மா இல்லை... உன்னோட அப்பா, அம்மா பேப்..."

"யாராயிருந்தா எனக்கென்ன?" என்றவள் மேலும் ஒரு கோப்பை மதுவை எடுத்து ஒரே வாயில் ஊற்றி கொண்டாள்.

"அங்கிள், இவள் சரிப்பட்டு வர மாட்டாள். நீங்க போய்க் காரை எடுங்க. நான் இவளை கூட்டிட்டு வர்றேன்." என்றவன் சொன்ன மாதிரி பத்து நிமிடத்தில் அவளைத் தாஜா செய்து காருக்கு அழைத்து வந்துவிட்டான்.

PDF தமிழ் .com

அடுத்தக் கால்மணி நேரத்தில் இருவரும் அவளது வீட்டிற்கு வந்துவிட்டனர். விசயம் கேள்விப்பட்ட ஊடகங்கள் அவளது வீட்டின் முன்னால் குவிந்திருந்தது. அதைக் கண்ட ஆகாஷ் ஓட்டுநரிடம்,

"காரை பின்பக்கமா கொண்டு போங்க..." என்க... அவரும் அவன் சொன்னதை அப்படியே செய்தார்.

அவளது வீட்டின் பக்கத்து வீட்டை அவளது தந்தை வாங்கிப் போட்டிருந்தார். அதன் பின்வாசல் வழியாக உள்ளே நுழைந்து அவளது வீட்டின் பக்கவாட்டு சுவற்றின் கதவின் வழியாக அவளது வீட்டினுள் நுழைந்தனர். ஆகாஷ் பின்பக்க வழியாக அவளை நேராக வரவேற்பறைக்கு அழைத்து வந்தான். அங்கு அமர்ந்திருந்த அவளது தாத்தா, பாட்டியை கண்டவன் அப்படியே பின்வாங்கினான்.

அபிஷரிகாவை கண்டதும் சிவகுமரனுக்கு அவளை நன்கு அடையாளம் தெரிந்தது. ‘இவளா ஐயாவோட பேத்தி’ என்று அவன் திகைப்புடன் நின்றிருந்தான்.

"டேய் அக்கி, எங்கேடா போற? நில்லு." என்று அவள் அவனது கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

போதையில் விழிகள் சொருக, தள்ளாடியபடி நின்றிருந்த தங்க சிலையின் அழகு சிவகுமரனின் மனதை தாக்கியதை விட அவள் குடித்துவிட்டு வந்திருப்பதைத் தான் அவன் ஆவென்று பார்த்திருந்தான். பின்பு அவன் மனதிற்குள்,

'அடியேய், குடிகாரி... குடும்பம் விளங்கிரும்.' என்று அங்கலாய்ப்பாய் முணுமுணுத்துக் கொண்டான்.

பொன்னம்பலம், காவேரி இருவரும் பேத்தியை கவலை பொங்க பார்த்திருந்தனர். இதற்காகத் தானே அவர்கள் தங்களது மகனிடம் தலைப்பாடாக அடித்துக் கொண்டது. எங்கே அவன் கேட்டால் தானே! அவர்களுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

"பேப், உன்னோட தாத்தா, பாட்டி வந்திருக்காங்க..." என்று ஆகாஷ் அவளது காதுக்கருகில் கிசுகிசுக்க...

"வாட்...?" அந்தப் போதையிலும் லேசாகத் திகைத்தவள் தனது விழிகளை விரித்து அவர்களைத் தேடினாள். காவேரியை அடையாளம் கண்டு கொண்டவளாய்,

"பாட்டி..." என்றழைத்தபடி அவள் ஆகாஷை விட்டு விலகி தனியே நடந்து வந்தாள்.

போதையில் இருக்கும் பேத்தியின் அருகில் கூடச் செல்லாது காவேரி அவளை முறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார். இதென்ன பழக்கம்? என்பது போல் அவரது விழிகள் பேத்தியை குற்றம் சாற்றியது.

காவேரியை மட்டும் பார்த்தபடி தள்ளாடி கொண்டு வந்த அபிஷாரிகா முன்னால் இருந்த மேசையைக் கவனிக்கவில்லை. அது தட்டி அவள் கீழே விழ போக... ஆகாஷ் ஓடி வந்து அவளைப் பிடிப்பதற்குள்... பொன்னம்பலம் சிவகுமரனை கண்டு,

"குமரா..." என்று கத்த... அவரது குரலுக்குக் கட்டுப்பட்ட சிவகுமரன் அபிஷாரிகாவின் இடையில் கை கொடுத்து அவள் கீழே விழாதபடி தூக்கி நிறுத்தினான்.

"ஹேய், யாரு மேன் நீ?" என்று குழறியபடி கேட்டவள் போதையில் நிற்க முடியாது அவன் மீதே சாய்ந்தாள். சிவகுமரன் சங்கடமாய் நெளிந்தபடி அவளைத் தாங்கி நின்றான். அவளை விலக்கவும் முடியவில்லை... தாங்கவும் முடியவில்லை. அவன் பெரும் அவஸ்தையுடன் நின்றிருந்தான்.

"காவேரி, அபியை ரூமுக்கு அழைச்சிட்டு போ..." என்று பொன்னம்பலம் உத்தரவிட...

காவேரி பேத்தியை அழைத்துச் செல்ல வந்தார். அவரால் அவளது பாரத்தைத் தாங்க முடியவில்லை. அதைக் கண்டு ஆகாஷ் தோழி அருகில் வந்தான்.

"ஆகாஷ், இப்போ என்ன மணி எத்தனைன்னு உனக்குத் தெரியுமா? நீ உன் வீட்டுக்கு போ." பொன்னம்பலம் அவனைத் தடுத்தார்.

PDF தமிழ் .com

"தாத்தா, அங்கிள்..." என்று பேச போனவனைத் தடுத்த பொன்னம்பலம்,

"விடிஞ்சதும் உன் அப்பா, அம்மா கூட மாலை மரியாதையோடு வந்து சேரு. இப்போ நீ இங்கே இருப்பது எங்களுக்கு மரியாதை இல்லை. முக்கியமா என் பேத்திக்கு..." என்று கூற... ஆகாஷ் சத்தம் காட்டாது பின்வாசல் வழியே வெளியேறி விட்டான்.

"குமரா, காவேரி கூடச் சேர்ந்து நீ அபியை ரூமுக்கு கூட்டிட்டு போ." என்று பொன்னம்பலம் மீண்டும் அவனுக்கு உத்தரவிட...

முதலில் திகைத்து விழித்த சிவகுமரன் பின்பு அவர் கூறியதை மறுக்காது செய்தான். அபிஷரிகாவின் ஒருபக்கம் அவனும், மறுபக்கம் காவேரியும் பிடித்துக் கொண்டு அவளது அறைக்கு அழைத்துச் செல்ல முனைய... அவர்களுக்கு அந்தச் செயலாளர் அவளது அறையை வழிகாட்டினார். காவேரியால் பேத்தியை தாங்கி கொண்டு செல்ல முடியவில்லை. அவர் பாதியில் மூச்சு வாங்க நிற்க... ஆபத்துக்குப் பாவமில்லை என்று நினைத்த சிவகுமரன் தனது வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு அபிஷரிகாவை தனது கைகளில் தூக்கி கொண்டான். காவேரிக்கு அவனைப் பற்றி நன்கு தெரியும். ஆதலால் அவர் ஒன்றும் கூறாது அவனைப் பின்தொடர்ந்தார்.

"டேய், யாருடா என்னைய தூக்குறது?" அந்தப் போதையிலும் அவள் அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

"ம், உன் மாமன்... குடிகாரி, குடிகாரி..." என்று அவன் மெதுவே அவளை வைதபடி தூக்கி சென்று அவளது கட்டிலில் அமர வைத்தான். அவளோ கட்டிலில் அமராது கைகளை, கால்களைப் பரப்பிக் கொண்டு மல்லாக்க வீழ்ந்தாள். அதைக் காண சகிக்காது அறையை விட்டு வெளியில் வந்த சிவகுமரன் அங்கு நின்று கொண்டிருந்த செயலாளரிடம்,

"இங்கே வேற லேடிஸ் யாருமில்லையா?" காவேரியால் அவளைத் தனியே கட்டுப்படுத்த முடியாது என்பதை உணர்ந்தவனாய் அவன் கேட்க...

"எல்லோரும் வேலையை முடிச்சிட்டு போயிருப்பாங்க... இப்போ மணி மூணாகுது. ஆறு மணிக்கு வந்திருவாங்க." என்று செயலாளர் கூற...

"எல்லோருக்கும் ஃபோன் பண்ணி சீக்கிரம் வர சொல்லுங்க... அவங்க வந்ததும் முதல்ல சின்னம்மாவை குளிக்க வச்சு போதையை இறக்க சொல்லுங்க... இப்படியே யாராவது பார்த்தா வம்பா போயிரும்." அந்த நிமிடத்தில் இருந்து அவன் அந்த வீட்டின் பொறுப்பைத் தனது கைகளில் எடுத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் செய்தி கேட்டு ஆறு மணியில் இருந்து ஒவ்வொருவராய் வர துவங்கினர். அபிஷரிகாவின் தந்தை சீனிவாசன் பெரிய தொழிலதிபர். தாய் தனுஜா புகழ் பெற்ற நடிகை. அதனால் இரு துறைகளில் இருந்தும் ஆட்கள் வந்து கொண்டே இருந்தனர். குளிர் பெட்டியில் வைக்கப்பட்டு இருந்த பெற்றோரின் உடல்கள் அருகே அபிஷரிகா அமர்ந்திருந்தாள். அவள் அணிந்திருந்த கருப்பு கண்ணாடியை தாண்டி அவளது விழிகளைப் பார்க்க முடியவில்லை. அதனால் அவள் என்ன நினைக்கிறாள்? என்பதை யாராலும் கணிக்க முடியவில்லை.

பொன்னம்பலமும், சிவகுமரனும் மாலையில் ஈமச்சடங்குகள் அனைத்தும் முடித்து விட்டு வீட்டிற்குத் திரும்ப வந்த போது அங்கு ஈ, காக்கை கூட இல்லை. வந்திருந்த அனைவரும் சென்றிருக்க... வேலையாட்கள் அவர்களது பணியில் மூழ்கியிருந்தனர். வரவேற்பறையில் அபிஷரிகா அமர்ந்திருந்து அலைப்பேசியில் தனது விழிகளைப் பதித்திருந்தாள். அவள் தலைக்குக் குளித்திருந்தாள் போலும். இடை வரை நீண்டிருந்த தலைமுடியை விரித்துக் காயப் போட்டிருந்தாள். அடர் கருப்பு நிறத்தில் இருந்த முடியில் ஆங்காங்கே தங்க நிறத்தில் 'கலரிங்' செய்திருந்தாள்.

"அபி..." என்றழைத்த தாத்தாவை அவள் ஏறிட்டு பார்த்தாள். செக்கச்செவேலென்று சிவந்திருந்த அவளது விழிகளைப் பார்த்த சிவகுமரன்,

'போதையில் சிவந்திருக்கா? இல்லை உண்மையில் அழுததால் சிவந்திருக்கா?' என்று மனதிற்குள் பட்டிமன்றம் நடத்தி கொண்டிருந்தான்.

"உன் கூடப் பேசணும். நான் குளிச்சிட்டு வந்துடறேன்." என்றவர் உள்ளே செல்ல... அவரைத் தொடர்ந்து அவனும் உள்ளே சென்றான்.

மீண்டும் பொன்னம்பலம் அவளிடம் பேச வந்த போது சிவகுமரன் வெளியில் செல்ல போனான். அவனைத் தடுத்த பொன்னம்பலம்,

"நீ இரு குமரா..." என்று கூற...

அவனோ அவளைப் பார்க்காது அமைதியாகக் கைகளைக் கட்டி கொண்டு அங்கு நின்றிருந்தான். அவளும் அவனைச் சிறிதும் கண்டு கொள்ளவில்லை. மதிக்கவும் இல்லை. போதையில் நடந்ததை மறந்துவிட்டாள் போலும்....

"அபி, நீ இங்கே இருந்தது போதும். பேசாம எங்க கூடக் கிளம்பு." என்று அவர் கண்டிப்புடன் கூற...

"வாட்? அந்தப் பட்டிக்காட்டுக்கா? நானா? குட் ஜோக்..." என்று தோளை குலுக்கியவள்,

"என்னால் வர முடியாது தாத்தா." என்றாள் அலட்சியமாக...

"அப்போ சரி... இந்தச் சொத்துக்களை எல்லாம் நான் அநாதை ஆசிரமத்துக்கு எழுதி வச்சிர்றேன். நீ உன் விருப்பத்துக்கு இருந்துக்கோ."

தாத்தா கூறியதை கேட்டு அவள் அதிர்ச்சியாக அவரைப் பார்த்தாள். பணம் இல்லை என்றால் தரணியில் மதிப்பு இல்லையே! அவள் சம்பாதிப்பதே அவளுக்குப் போதும் தான்... இருந்தாலும் மற்ற சொத்துக்களை விட்டுவிட அவளுக்கு மனம் வரவில்லை.

"இது எல்லாம் டாட் சாம்பாதிச்சது தாத்தா..." இருந்தாலும் தாழ்ந்து போக அவள் விரும்பவில்லை.

"உன் அப்பனுக்குச் சம்பாதிச்சுக் கொடுத்தது நான். இதோ நீ குடியிருக்கிற இந்த வீடு கூட என்னுடையது தான். நான் வேண்டாம்ன்னு உன் அப்பனுக்கு விட்டுக் கொடுத்தது தான் இந்தத் தொழில், வீடு, சொத்துக்கள் எல்லாம். இன்னமும் இது எல்லாம் என் பெயரில் தான் இருக்கிறது. ஏன்னா ஆட்டாக்காரியான உன் அம்மாவை நான் நம்பத் தயாராக இல்லை."

"தாத்தா, மாம்மை மரியாதை இல்லாம பேசாதீங்க..." அவளுக்குக் கோபம் வந்தது. ஏனெனில் அவளும் அதே துறையில் தானே இருக்கிறாள்.

"உனக்கு வேணும்ன்னா அவள் அம்மாவா இருக்கலாம். ஆனால் அவள் எங்களுக்கு மருமகள் இல்லை."

"தாத்தா..." என்று கோபத்துடன் கத்தியவள்,

"நானும் அதே ஆட்டக்காரி தான் என்பதை நீங்க மறந்துட்டு பேசுறீங்க." அவள் உக்கிரத்துடன் அவரைப் பார்த்தாள்.

"அந்த லட்சணத்தைத் தான் நான் பார்த்தேனே... நீ முழுப் போதையில் தள்ளாடியபடி அந்த அரைவேக்காடை கட்டிப்பிடிச்சிட்டு வந்ததை..." அவர் வெறுப்பாகக் கூறினார்.

"தாத்தா..." அவள் ஆத்திரத்தில் ஒற்றை விரலை நீட்டியபடி அவர் அருகே வர...

அடுத்து அவள் என்ன செய்ய நினைத்தாளோ...? ஆனால் அதைச் செய்ய விடாதபடி அவளது கையை மடக்கி பிடித்த சிவகுமரன் அடுத்த நொடி அவளை அப்படியே உதறித் தள்ளினான். அதில் நிலை தடுமாறியபடி அவள் கீழே விழுந்தாள்.

"பெரியவங்க பேசும் போது அது என்ன அசிங்கமா கை நீட்டுற பழக்கம்?" என்று அவன் அவளை அதட்ட... அவனது திடீர் செயலில் அவள் விக்கித்தபடி அவனைப்

பார்த்திருந்தாள். பொன்னம்பலம் உணர்வுகளைத் தொலைத்த முகத்துடன் அமர்ந்திருந்தார்.

"என்ன சத்தம் இங்கே?" என்றபடி உள்ளறையில் இருந்து வந்த காவேரி அங்குப் பேத்தி தரையில் விழுந்து கிடப்பதை கண்டு அவள் அருகில் ஓடி வந்தார்.

"ஐயோ அபி... என்னாச்சு?" என்று அவர் அவளைத் தூக்க முயல... அவரை ஒதுக்கிவிட்டு தானாக எழுந்து நின்றவள்,

"ஒண்ணுமில்லை பாட்டி... கால் தடுக்கி கீழே விழுந்துட்டேன்." என்று கூறி சமாளித்தாள்.

"உனக்கு இன்னும் போதை தெளியலையா? நான் வேணா எலுமிச்சம் பழச்சாறு கொண்டு வரவா அபி?" காவேரி அப்பாவியாகக் கேட்க...

"பாட்டி..." சிவகுமரனை கண்டு முறைத்தபடி அவள் பல்லை கடிக்க... அவனோ வேறு பக்கம் பார்த்தபடி நமட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

"இதோ இவன் தான் என்னைக் கீழே தள்ளிவிட்டான்." சிறுபிள்ளை போன்று அவள் அவன் புறம் தனது கையை நீட்டினாள்.

"குமரனா? இருக்காதே... அவன் நல்ல பையனாச்சே." காவேரி அவனுக்குப் பரிந்து பேச...

"அப்போ நான் பொய் சொல்றேனா?" அவள் கோபம் கொள்ள...

சிவகுமரனோ மறந்தும் அவள் புறம் திரும்பவில்லை. பொன்னம்பலம் நடந்ததை மனைவியிடம் கூற... காவேரி கணவரை முறைத்தவராய்,

"அபி, உனக்கு இங்கே தனியா இருக்கக் கஷ்டமா இருக்கும் இல்லையா? அதான் தாத்தா கூப்பிட்டு இருப்பார். தப்பா நினைச்சுக்காதே." என்று பேத்தியை சமாதானப்படுத்த முயன்றார்.

"நினைச்சப்போ எல்லாம் என்னால் எங்கேயும் வர முடியாது பாட்டி... என்னை நம்பி கோடிக்கணக்கில் பணம் போட்டு இருக்கிற புரொடியூசர்ஸ் எல்லாம் பாவம்."

"எவனோ ஒருத்தனை பாவம்ன்னு உனக்குச் சொல்ல முடியுது. ஆனா சொந்த தாத்தா, பாட்டியை பார்த்தால் உனக்குப் பாவமா இல்லையா?" பொன்னம்பலம் கோபத்துடன் கேட்க...

"ப்ச்சு... எனக்குக் கொஞ்சம் டைம் கொடுங்க..." என்றவளை அதற்கு மேல் பொன்னம்பலம் தொந்தரவு செய்யவில்லை.

ஆனால் அன்றிலிருந்து மூன்றாவது நாள் அபிஷேரிகா பொன்னம்பலத்தின் முன் கோபமாய் வந்து நின்றாள்.

"யாரை கேட்டு என்னுடைய ஒப்பந்தத்தை எல்லாம் கேன்சல் பண்ணினீங்க...?"

"யாரை கேட்கணும்...? நீ சொன்ன கோடிக்கணக்கான பணத்தைக் கொடுத்து உனக்கான நிம்மதியை நான் வாங்கிக் கொடுத்து இருக்கேன்." பொன்னம்பலம் சொன்னதும்... ஒரு நொடி அமைதி காத்தவள் மறுநொடி,

"சும்மா இருந்தால் நிம்மதி வந்துவிடுமா?" சற்று கோபத்துடன் கேட்க...

"எங்களுடன் வந்து பாரு... உண்மையான நிம்மதி உன்னிடம் வந்துவிடும்." என்ற தாத்தாவை கண்டு அவளுக்கும் போய்ப் பார்த்தால் தான் என்னவென்று தோன்றியது. சில நாட்களாக அவளது மனதில் எழும் சலிப்பு அவளை இப்படி யோசிக்க வைத்தது.

அவள் சம்மதித்ததும் ஒரே வாரத்தில் பொன்னம்பலம் வீடு, தொழில் எல்லாவற்றிற்கும் தனித்தனியே அவருக்கு நம்பகமான ஆட்களை வைத்துவிட்டு பேத்தியை அழைத்துக் கொண்டு தனது சொந்த ஊருக்குக் கிளம்பிவிட்டார்.

கிராமத்து வீட்டை கண்டதும் ஒரு நொடி முகத்தைச் சுளித்த அபிஷரிகா பின்பு தனது முகத்தைச் சரி செய்து கொண்டாள். வீட்டிற்குள் நுழைந்ததும் பொன்னம்பலம் பேத்தியை அழைத்து,

"நான் சொல்லும் பையனை நீ கல்யாணம் பண்ணினால் சொத்துக்கள் எல்லாத்தையும் உன் பெயருக்கு எழுதி வைப்பேன். இல்லைன்னா..." என்றவர் அவளை அழுத்தமாய்ப் பார்த்துவிட்டு,

"அப்புறம் உன் இஷ்டம்..." என்றுவிட்டுச் சென்றுவிட்டார். அவள் தான் உணர்வற்ற முகத்துடன் அப்படியே இறுகி போய் நின்றிருந்தாள்.

"என்னங்க... அபிக்கு இருபது வயசு தான் ஆகுது. அதுக்குள்ள எதுக்குக் கல்யாணம்?" அறைக்கு வந்த காவேரி கணவனிடம் கேட்க...

"உனக்குப் புரியாது காவேரி. இந்தச் சமயத்தில் அவளுக்குச் சொன்னால் தான் புத்தியில் ஏறும். அப்புறம் உன் மகனை மாதிரி வரைமுறை இல்லாத ஒரு போலியான வாழ்க்கையை அவள் வாழ நேரிடும். அவள் நம்மை மாதிரி சந்தோசமா இருக்கணுமா? இல்லை எப்படியோ போகட்டும்ன்னு அவளைச் சீரழிய விட்டுவிடவா?"

"ஐயோ..." காவேரி பயத்தில் வாயை மூடி கொண்டார். பேத்தியின் எதிர்காலம் தான் அவருக்கு முக்கியம்.

***************************

சரியாக ஒரு வாரம் கழித்து அபிஷரிகா தோட்டத்தில் அமர்ந்திருந்த தாத்தா, பாட்டியின் முன் வந்து நின்றாள். அவளைக் கண்டதும் பொன்னம்பலம்,

"இப்போ என்ன முடிவு எடுத்திருக்க அபி?" என்று கேட்டார்.

அபிஷரிகா தாத்தா பொன்னம்பலத்தின் கேள்விக்குப் பதில் சொல்லாது தூரத்தில் மாட்டுக்கு தண்ணி காட்டி

கொண்டிருந்த சிவகுமரனை இமைக்காது பார்த்து கொண்டிருந்தாள்.

"அபி, நான் உன் கல்யாணத்தைப் பத்தி கேட்டுட்டு இருக்கேன்." தாத்தாவின் குரலில் சற்றுக் காரம் கூடியது. பாட்டி காவேரியோ இருவரையும் பதற்றத்துடன் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார். கணவர் மற்றும் பேத்தியின் பிடிவாத குணத்தை அறிந்தவராயிற்றே அவர்...

"உங்க விருப்பப்படி நான் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கிறேன் தாத்தா." அவளது கூற்றில் தாத்தாவின் முகம் மலர்ந்து போனது.

"ரொம்பச் சந்தோசம் அபி..." என்றவர்,

"ஏலே குமரா, இங்கே வந்துட்டு போ..." என்க...

சிவகுமரன் மடித்துக் கட்டிய வேட்டியை அவிழ்த்து விட்டபடி அவரை நோக்கி வந்தான். மறந்தும் அவனது பார்வை அபிஷாரிகாவின் மீது படியவில்லை. அவன் வயது பெண்களை நிமிர்ந்து பார்ப்பது இல்லை. இவளை வயது வந்த பெண்ணாகவும் அவன் கருதவில்லை.

"சொல்லுங்கய்யா..." அவன் கைகளைக் கட்டி கொண்டு பவ்யமாக நின்றான்.

"அபி கல்யாணத்துக்குச் சம்மதிச்சிட்டாள். உடனே ஃபோன் போட்டு புரோக்கரை வர சொல்லு."

"சரிங்கய்யா..." என்று தலையாட்டியபடி அவன் தனது அலைப்பேசியை எடுத்தான். அவர் கூறிய திருமண விசயத்திற்குக் கூட அவன் பெரிதாக எந்தவித எதிர்வினையும் ஆற்றவில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்த அபிஷரிகா ஒரு பெருமூச்சை எடுத்துவிட்டுத் தன்னைச் சமன் செய்து கொண்டவள்,

"புரோக்கருக்கு எல்லாம் ஃபோன் போட வேண்டாம்." என்றவள் தாத்தாவிடம் திரும்பி,

"நான் உங்க விருப்பத்துக்குச் சம்மதிச்ச மாதிரி... எனக்கு விருப்பமான பையனை நீங்க ஏத்துக்கணும் தாத்தா." என்க...

"அந்த அரைவேக்காடு ஆகாஷை சொல்றியா?" தாத்தா கோபத்தில் சீறினார்.

"நான் சொன்னது சிவகுமரனை..." என்றவள் அவனை நோக்கி நேருக்குநேராய் தனது கையை நீட்டினாள்.

அவள் சொன்னது கேட்டு தாத்தாவும், பாட்டியும் மிகவும் சந்தோசம் அடைந்தனர். ஆனால் சிவகுமரனோ அதிர்ச்சியில் தனது கையிலிருந்த அலைப்பேசியை நழுவ விட்டான்.

'அச்சோ குடிகாரியை கட்டிக்கிட்டா என் குடியில்ல மூழ்கி போயிரும்.' அவன் உள்ளுக்குள் திகிலுடன் நினைத்தான்.

தொடரும்...!!!

அத்தியாயம் : 2

கண நேரத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்ட சிவகுமரன் பெரியவர்கள் தன்னைப் பார்க்கும் முன் கீழே விழுந்த அலைப்பேசியை எடுப்பது போல் கீழே குனிந்தான். அவன் அலைப்பேசியை எடுத்துக் கொண்டு மீண்டும் நிமிர்ந்த போது அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்திருந்தது. அவனைக் கூர்ந்து அவதானித்தபடி இருந்த அபிஷரிகாவின் விழிகளில் குரோதம் கொப்பளித்தது.

'நான் உனக்கு அவ்வளவு சீஃப்பா போயிட்டேனா?' அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

பேத்தியின் வார்த்தைகளில் பொன்னம்பலம் ஒரு நொடி மகிழ்ந்து தான் போனார். சிவகுமரன் தனது பேத்திக்கு ஏற்றவன் தான். ஆனால் அபிஷரிகா அவனுக்கு ஏற்றவளா? இந்த நினைவு வந்ததும் அவரது முகம் சந்தோசத்தைத் தொலைத்துப் போனது.

"அபி, உளறாம உள்ளே போ..." அவரது அதட்டலில் அபிஷரிகா முகம் மட்டுமல்லாது காவேரியின் முகமும் விழுந்து போனது.

"என்னங்க...?" காவேரி கணவனை அழைக்க...

"நீ பேசாமல் இரு காவேரி." என்று அவர் தனது மனைவியின் வாயை அடைத்து விட்டார்.

"தாத்தா, நான் என்ன சொல்ல வர்றேன்னா..." என்று ஆரம்பித்த அபிஷரிகாவை நோக்கி 'நிறுத்து' என்பது போல் தனது கையைக் காட்டினார் அவர். அதைக் கண்டு அவளது முகம் கருத்துப் போனது.

"யாருக்கு யாரை மாப்பிள்ளை பார்க்கணும் எனக்குத் தெரியும்? நீ விளையாடாம உள்ளே போ..." என்று பேத்தியிடம் சிடுசிடுத்தவர்,

"உன் பேத்தியை வீட்டுக்குள் கூட்டிட்டு போ..." என்று மனைவியிடம் காய்ந்தார்.

பொன்னம்பலம் இப்படிக் கூறியதும் தான் சிவகுமரனுக்கு நிம்மதியாக இருந்தது.

'தெய்வமே! தெய்வ...மே! நன்றி சொல்வேன் தெய்வமே!' என்று அவன் மனதிற்குள் வடிவேல் போல் பாடி ஆடினான்.

"குமரா..." பொன்னம்பலத்தின் குரலில் சுயவுணர்வு பெற்றவன்,

"என்னங்கய்யா?" என்று கேட்க...

"அபி ஏதோ விளையாட்டுத்தனமா கேட்டுட்டா... நீ தப்பா நினைச்சுக்காதே. அவள் சார்பா நான் உன் கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்." என்று அவர் கூற...

"ஐயா, பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிக்கிட்டு... யாரு பேசியது? நம்ம சின்னம்மா தானே... விடுங்கய்யா. சின்னப் பொண்ணு தெரியாம பேசியிருப்பாங்க." என்று அவன் சமாதானம் கூறினான்.

என்ன இருந்தாலும் அபிஷரிகா பொன்னம்பலத்தின் பேத்தி. அந்தக் காலத்தில் இருந்து அவனது வீட்டினருக்குப் படியளப்பவர் பொன்னம்பலம். அவரது பேத்தியை அவனுக்குப் பிடிக்காமல் இருக்குமா? என்ன ஒன்று அவளின் நடத்தையைத் தான் அவனுக்குப் பிடிக்காது போயிற்று. மற்றபடி பொன்னம்பலம் அக்கறை காட்டும் அவளிடம் அவனுக்கும் அக்கறை இருக்கிறது.

"வாங்க ஐயா... ஊருக்கு போயிருந்தப்போ விடுபட்ட கணக்கை இன்னைக்காவது பார்ப்போம்." என்று அவரை அழைத்துக் கொண்டு அவன் அலுவலக அறைக்கு வந்தான். வீட்டின் முன்னிருந்த சிறு அறையைத் தான் அலுவலக அறையாகப் பயன்படுத்தி வந்தனர். பொன்னம்பலம் நாற்காலியில் அமர்ந்ததும் அவருக்கு எதிரே அமர்ந்தவன் கணினியை உயிர்ப்பித்தான். அடுத்த ஒரு மணி நேரம் புத்தகத்தையும், கணினியையும் வைத்துக் கொண்டு அவரிடம் தொழில் கணக்கு பற்றி எடுத்து கூறியவன்,

"அவ்வளவு தான்... எல்லாம் முடிஞ்சது ஐயா." என்க...

"ம், சரி..." என்றதோடு அவர் முடித்துக் கொள்ள...

"ஐயா, கணக்கு எல்லாம் சரிதானுங்களா?" அவன் பணிவோடு கேட்க...

"உன் தாத்தா காலத்தில் இருந்து உங்க குடும்பம் இங்கே கணக்கு பார்க்கிறீங்க. ஒரு நாளும் உங்க வீட்டினர் கணக்குத் தப்பாய்ப் போனது இல்லை. அந்த ரத்தம் உன்னிலும் ஓடும்ங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு." என்று கூறி அவர் சிரித்தார்.

"நிச்சயம் உங்க நம்பிக்கையை நான் காப்பாற்றுவேன் ஐயா." என்றவன்,

"ஐயா, நம்ம சின்னய்யாவோட தொழில் கணக்குகள் மெயிலில் வந்திருக்கு." என்க...

"அதையும் நீயே சரி பார் குமரா... வரும் லாபத்தைத் தொழிலாளர் நலனுக்குக் கொஞ்சம் செலவளித்து விட்டு, மீதியை அப்படியே அபி பெயருக்கு இன்வெஸ்ட்மெண்ட் பண்ணிரு."

உடனே அவன் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பெயரை சொல்லி, "அந்தக் கம்பெனியோட ஷேர்ஸில் இன்வெஸ்ட்மெண்ட் பண்ணவா ஐயா? என்னுடைய கணிப்புபடி இன்னும் கொஞ்ச நாளில் அவங்க அவங்களோட கம்பெனியை வித்திருவாங்கன்னு நினைக்கிறேன். அப்போ நாம அதை வாங்குவதற்கு ரொம்பச் சுலபமா இருக்கும்." என்று கூற... அவனது புத்திசாலித்தனத்தைப் பார்த்து எப்போதும் போல் இன்றும் வியந்த பொன்னம்பலம்,

"இதுக்குத் தான் குமரன் வேணும்ன்னு சொல்றது. நீ சொன்ன மாதிரியே செய்து விடலாம்." என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

சிவகுமரன் தனது வேலையில் மூழ்கிவிட்டான். அவன் வேலைகளை முடிக்கும் தறுவாயில் அபிஷ்ரிகா அறையினுள் வந்தாள். அவளைக் கண்டதும் அவன் கணினியை அணைத்துவிட்டு எழுந்தான். அவளோ அதைக் கண்டு கொள்ளாதபடி தாத்தாவின் நாற்காலியில் அமர்ந்தாள். அவளைப் பற்றித் தெரிந்தவனாய் அவன் அறையை விட்டு வெளியேற போனான்.

"சிவகுமரன்..." என்று அவள் அவன் பெயரை சொல்லி அழைக்க...

"பெயரை சொல்லி கூப்பிட்ட... கூப்பிட்ட வாய் வெத்திலை போட்டுரும். ஜாக்கிரதை..." என்று அவன் ஒற்றை விரல் நீட்டி அவளை எச்சரிக்கை செய்தான்... அவள் அவனது கோபத்தை ரசித்துப் பார்த்தபடி அந்தச் சூழல் நாற்காலியை அங்கும் இங்கும் ஆட்டியபடி,

"இப்போ தானே உன் கண் முன்னாடி கூப்பிட்டேன். உன்னால் என்ன செய்ய முடிஞ்சது?" என்று அலட்சியமாகக் கேட்க...

அவன் செய்வதறியாது கோபத்தில் தனது கை முஷ்டியை இறுக்கியபடி அமைதியாக அவளை வெறித்துப் பார்த்தான். அவளது தாத்தா, பாட்டிக்காக அவன் இந்தளவிற்குப் பொறுமை காக்கின்றான்.

"இது தான் உன்னுடைய லெவல்... நீ உன் லிமிட்டை க்ராஸ் பண்ண நினைக்காதே." என்று எச்சரிக்கும் தொனியில் கூறியவள்,

"என்னைப் பார்த்தா உனக்கு எப்படித் தெரியுது? உன்னுடைய தகுதி என்ன? என்னுடைய தகுதி என்னன்னு உனக்குத் தெரியுமா?"

"ஆமா, நீ அப்படியே ஐஏஎஸ் படிச்சு கிழிச்சிட்ட... போடி இவளே... படிச்சது பத்தாங்கிளாஸ். அதுவும் ஃபெயில்... இதில் வாய் வேற... தகுதியாம் தகுதி... அப்படி ஒண்ணு

இருக்கா உனக்கு?" அவனும் தனது பொறுமையைக் கைவிட்டவனாய் அவளைக் கண்டு எகிறான்.

"ஏய், என்னோட உயரம் என்னன்னு தெரியாம நீ மோதுற?" அவள் ஆத்திரத்தில் கத்தினாள்.

"ஷ், கத்த கூடாது. நீயும், நானும் தானே பேசிக்கிட்டு இருக்கோம். எதுக்குத் தேவையில்லாம பெரியவங்க காதுக்குக் கேட்கணும்." அவன் வாயில் விரலை வைத்து அவளை எச்சரித்தான்.

"என்னோட கடைக்கண் பார்வைக்கு எத்தனை பேர் ஏங்கிட்டு இருக்காங்க தெரியுமா?" என்று சீறியவளை மேலும் கீழும் பார்த்தவன்,

"அது உங்க தமிழ்நாட்டில்... இது ஆந்திரபிரதேசம். முக்கியமா எனக்கு நீ யார்ன்னு கூடத் தெரியாது." என்று அலட்சியமாகக் கூற...

"ஹ... உங்க ஆந்திரபிரதேசம் மட்டுமல்ல தெலுங்கானாவில் கூட நான் கையசைச்சா ஆயிரம் பேர் வருவாங்க." அவள் திமிருடன் கூற... அவளது பேச்சில் அவன் குபீரென்று வாய்விட்டு சிரித்து விட்டான்.

"ஏய், என்னன்னு சொல்லிட்டு சிரி மேன்." அவள் எரிச்சலுற்று மீண்டும் கத்தினாள்.

"இல்லை... எங்க ஊருல இப்படிக் கையசைச்சு கூப்பிடற பொண்ணுங்களுக்கு வேறு பெயர்..." என்றவன் சத்தம் வராது தனது உதட்டை அசைத்து அந்தப் பெயரை கூறினான். அதைப் புரிந்து கொண்டவளின் முகம் அவமானத்தில் சிறுத்துப் போனது.

"இப்போ புரியுதா? நீ யார்? உன்னுடைய லெவல் என்னன்னு? உன்னை மாதிரி பொண்ணுங்களை எல்லாம் படுக்கைக்குத் தான் கூப்பிட முடியும். வீட்டில் விளக்கேத்த கூட்டிட்டு போக முடியாது. அதுவும் உன்னை மாதிரி ஒரு குடிகாரியை... ச்சே, கனவில் கூட நினைச்சு பார்க்க

முடியலை." என்று தலையை வேகமாய்க் குலுக்கி கொண்டவன்,

"இங்கே பார்... நான் உன் தாத்தா மேல் ரொம்ப மரியாதை வச்சிருக்கேன். நீ அவரோட பேத்தி என்பதற்காக மட்டும் தான் நான் உன் கிட்ட முகம் கொடுத்து பேசிக்கிட்டு இருக்கேன். மற்றபடி நீ லூசு மாதிரி நினைக்கிறதுக்கும், பேசுறதுக்குமான ஆள் நான் கிடையாது. உன் பணக்கார புத்திக்கு பகடைகாய் நானில்லை. உன் விளையாட்டுத்தனத்தை இத்துடன் நிறுத்தி கொள். என்ன புரிஞ்சதா?" என்று எச்சரிக்கும் குரலில் கோபமாய் உரைத்தவன் விருட்டென்று அறையை விட்டு வெளியேறினான்.

அதே எரிச்சலுடன் வீட்டிற்கு வந்தவனின் கால்களை ஓடி வந்து கட்டி கொண்டாள் அவனது ஐந்து வயது குட்டி தங்கை அம்ரிதா. அவளைக் கண்டதும் அவனது கோபம் முற்றிலும் மறைந்து போனது. விரிந்த புன்னகையுடன் அவளைத் தூக்கியவன்,

"அம்ரு குட்டிக்கு என்ன வேணும்?" என்று பாசத்தோடு கேட்க...

"அக்கா கிட்ட எண்ணெய் தேய்க்க வேண்டாம்ன்னு சொல்லு அண்ணய்யா." என்று விழிகளைச் சுருக்கி கொண்டு கொஞ்சும் குரலில் கெஞ்சியவளை அணைத்து அவளது கன்னத்தில் முத்தமிட்டவன்,

"அப்போ அண்ணய்யா எண்ணெய் தேய்ச்சு விடவா?" என்று கேட்க...

"ம், ம்..." என்று பலமாகத் தலையை ஆட்டியது அந்தச் சின்னச் சிட்டு.

"எப்போ பாரு இவளோட இதே தொல்லையா போச்சு." என்று அலுத்தபடி அவனிடம் எண்ணெய் கிண்ணத்தை நீட்டினாள் அவனது பெரிய தங்கை கங்கா.

"விடு கங்கா, சின்னப் பொண்ணு தானே..." என்றவன் சின்னவளை வெளியில் இருந்த கல்லில் அமர வைத்தவன் தானும் மற்றொரு கல்லில் அமர்ந்து கொண்டு அவளது தலைக்கு எண்ணெய் தேய்த்து விட்டான்.

"அண்ணய்யா எங்களுக்கும்..." அம்ரிதாவை தொடர்ந்து யமுனா, சரஸ்வதி இருவரும் அவன் முன் வந்து நின்றனர்.

"வரிசையில் உட்காருங்க..." என்று சிரித்தபடி கூறியவன் தனது வேலையைத் தொடர்ந்தான்...

"யமுனா, உனக்கு என்ன சின்னப் பொண்ணுன்னு நினைப்பா?" என்று கங்கா அவளை அதட்டினாள். பத்து வயது சரஸ்வதியையாவது கணக்கில் எடுத்துக் கொள்ளலாம். யமுனாவிற்குப் பதினைந்து வயதாகிறது... பெரிய பெண் ஆகிவிட்டாள். இன்னமும் அவள் இப்படி விளையாட்டுத்தனமாய் இருப்பது கண்டு கங்கா அவளைக் கண்டித்தாள்.

"பாரு அண்ணய்யா..." என்று விழிகளைக் கசக்கினாள் யமுனா.

"எத்தனை பெரிய பொண்ணா இருந்தாலும் யமுனா, நீ எனக்குச் சின்னத் தங்கை தான். நீ உட்கார்." என்றவன் கங்காவிடம்,

"நேற்று உனக்குத் தலைப்பின்னி விட்டேனே... அதை எந்தக் கணக்கில் எடுத்து கொள்வதாம்?" என்று ஒற்றைப் புருவத்தைக் கேலியாய் ஏற்றியிறக்க...

"அண்ணய்யா..." என்று செல்லமாய்ச் சிணுங்கினாள் கங்கா...

இதை எல்லாம் அறையின் ஜன்னலில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த அபிஷரிகாவின் மனதில் கோபம் கனன்று கொண்டிருந்தது. சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் அவளுள் நெருப்பை மூட்டி இருந்தது.

அன்று இந்தச் சின்னக் குட்டி அம்ரிதா தோட்டத்தில் பந்து விளையாடி கொண்டிருந்தாள். குண்டு, குண்டுவென மாம்பழ கன்னங்களுடன் துறுதுறுவென்று இருந்த அம்ரிதாவை பார்த்தவுடன் அபிஷரிகாவிற்கு மிகவும் பிடித்துப் போயிற்று.

"ஹாய் பேபி, உன் பெயர் என்ன?" என்று அவள் ஆசையோடு சின்னவளிடம் கேட்க... அம்ரிதாவோ கையில் பந்தை இறுக பற்றியபடி அவளைப் பயத்துடன் பார்த்தாள்.

"இங்கே வா..." அவள் கையசைத்து சின்னவளை கூப்பிட... அம்ரிதா இடமும் வலமுமாய்த் தலையசைத்து அருகில் வர மறுத்தாள். அதைக் கண்டு புன்னகைத்த அபிஷரிகா தானே அவளை நோக்கி எழுந்து சென்றாள்.

"சோ க்யூட் பேபி." என்று சின்னவள் கன்னத்தைப் பற்ற எண்ணி அவள் தனது கையைக் கொண்டு போக...

"உங்க கூடச் சேர கூடாதுன்னு எங்க அண்ணய்யா சொல்லியிருக்காரு." என்று கூறியபடி சின்னவள் விலகி நின்றாள்.

"யாரு உன் அண்ணய்யா?" அபிஷரிகா யோசனையாய் விழிகளைச் சுருக்கினாள்.

"சிவகுமரன் அண்ணய்யா... நீங்க பேட் கேர்ள்ளாம். உங்க கூடச் சேர்ந்தா நானும் பேட் கேர்ள் ஆகிருவேன்னு சொன்னாங்க." என்று கூறிய அம்ரிதா பந்தை தூக்கி கொண்டு ஓடி போய்விட்டாள்.

"டேய், இடியட்..." அபிஷரிகா கோபத்தில் பல்லை கடித்தபடி காலை உதைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.

அதை இப்போது நினைத்து பார்த்தவளின் மனதில் பெரும் பிரளயம்... அவனது 'குடிகாரி' மற்றும் அந்த அநாகரீக வார்த்தை இரண்டும் அவளது நெஞ்சில் நெருஞ்சி முள்ளாய் உறுத்தியது.

"ஷிட்... பொண்ணுங்கன்னாலேயே படுக்கைக்கு அலையறவங்கன்னு இவங்களா முடிவு பண்ணிக்கிறாங்க. அதுவும் ஒரு ஆண் பெண்ணின் நடத்தையை முடிவு பண்ணுவது எத்தனை கேவலமான எண்ணம். ஆணின் முத்தமும், அணைப்பும் பெண்களைப் பலவீனமாக்கி விடுமா? எந்த முட்டாள் சொன்னது? கற்பு என்பது உடலில் இல்லை. அது பெண்ணின் மனசில் இருக்கு. மண்ணில் அழிய போகும் பெண்ணின் உடலை தான் ஆண் திங்க முடியும். ஆனால் ஒரு ஆணால் பெண்ணின் மனதினுள் அத்தனை எளிதில் நுழைந்துவிட முடியாது. இது இந்த ஆணுக்கு உணர்த்துவது யார்?" என்று முணுமுணுத்தவளின் கோபம் எல்லாம் சிவகுமரனின் மீது திரும்பியது.

"நான் அப்படித்தான்டா குடிப்பேன்... உனக்கு என்ன வந்தது? என்னையவா குடிகாரி, வி.......ரின்னு சொல்ற... இந்தக் குடிகாரி, வி......ரி தான் உன்னுடைய மனைவியாகப் போகிறாள். இதை நீ என்ன... அந்த ஆண்டவனே நினைச்சாலும் மாத்த முடியாது. நீ என்னைப் பத்தி தெரியாம என் கிட்ட மோதுற... நான் யாருங்கிறதை உனக்குக் காட்டுறேன்." அவள் தனக்குள் சபதம் போட்டு கொண்டாள்.

பெற்றோரை இழந்த துக்கம் கூட அவளைத் தாக்கவில்லை. ஆனால் அவனது வார்த்தைகளின் வீரியம் அவளை அப்படித் தாக்கியது. இதுவரை அவளை இப்படி யாரும் கீழ்த்தரமாக விமர்சித்தது இல்லை. அவளது துறையில் அவளைப் பற்றி இப்படி அநாகரீகமாக எத்தனையோ பேர் பேசி இருக்கின்றனர். உடன் பணிபுரியும் இயக்குநர், நடிகர், இசையமைப்பாளர், பாடகர் என்று அவளோடு இணைத்துப் பேசப்படாத பிரபலங்கள் இல்லை. இந்தப் பட்டியலில் அரசியல்வாதிகள் மற்றும் தொழிலதிபர்கள் சிலரும் உண்டு. அது எல்லாமே ஆதாரமற்ற கிசுகிசு மட்டுமே... ஆனால் முகத்துக்கு நேரே இப்படி யாரும் அவளை அப்பட்டமாய்க் குற்றம் சாற்றியது இல்லை. அவளது நெஞ்சம் ஆத்திரத்தில் எரிமலையாய்க் கனன்றது.

"சின்னம்மா..." என்ற குரலில் திரும்பி பார்த்தாள் அபிஷரிகா... அங்குச் சிவகுமரனின் அன்னை வேணி நின்று கொண்டிருந்தார். இப்போது அவன் மீதிருந்த அவளது கோபம் அனைத்தும் அவர் மீது திரும்பியது.

"பானகம்..." என்றபடி அவர் ஒரு கண்ணாடி தம்ளரை அவள் முன் நீட்டினார்.

எலுமிச்சை சாறு, சுக்கு தூள், ஏலக்காய் தூள், அச்சுவெல்லம், சிறிது புதினா இலை கலந்த அந்த இயற்கை குளிர்பானத்தை உறுத்து விழித்தவள் அடுத்த நொடி அந்தத் தம்பளரை வாங்கிப் பானத்தை அவரது முகத்தில் ஊற்றிவிட்டாள்.

"என்ன... உன் மகன் சொல்லிவிட்டானா? அவள் ஒரு குடிகாரி... போதை தெளியாம சுத்திக்கிட்டு இருப்பாள். நீ போய் இதைக் கொடுத்து போதையைத் தெளிய வையின்னு..."

"சின்னம்மா, அப்படி எல்லாம் இல்லை... குமரன் எதுவும் சொல்லலை." அவளது செயலில் முதலில் திகைத்து விழித்த வேணி பின்பு தனது முகத்தைப் புடவை தலைப்பால் துடைத்தபடி அவசரமாக மறுத்துக் கூறினார்.

"போ இங்கிருந்து..." என்று அவள் ஆத்திரத்தில் கத்தினாள்.

வேணி ஒன்றும் பேசாது அமைதியாக அறையை விட்டு வெளியேறினார். அப்போது எதிரில் வந்த சிவகுமரன் தாயின் தோற்றத்தை கண்டு திகைத்தான்.

"அம்மா, என்னதிது?"

"ஒண்ணுமில்லை குமரா... கை தவறி தண்ணி கொட்டிவிட்டது." என்று கூறி அவர் சமாளித்தார். ஆனாலும் அவரது புடவையில் ஒட்டியிருந்த புதினா இலை அவரது பொய்யை காட்டி கொடுத்துவிட்டது.

"பொய் சொல்லாதீங்கம்மா..."

"நான் தான் உன் அம்மா மூஞ்சியில் பானகத்தை ஊத்தினேன்." அகந்தையுடன் கூறியபடி அங்கு வந்து நின்றாள் அபிஷரிகா.

"உன்னை..." அவன் அவளை நோக்கி ஆவேசமாய் நகர எத்தனிக்க... அவனைத் தடுத்து நிறுத்திய வேணி,

"பொறுமையா இரு குமரா... சின்னம்மாவுக்கு ஏதோ கோபம். அதான் இப்படிச் செஞ்சிட்டாங்க. விடு." என்று மகனை சமாதானப்படுத்தினார்.

"அதுக்குன்னு... பெரியவங்கன்னு ஒரு மரியாதை வேண்டாம்." என்று அவன் எகிற...

"பெரியவங்களா? யாரது? இந்த வீட்டில் நீங்க ரெண்டு பேரும் யார் தெரியுமா?" என்றவள் இருவரையும் ஆழ்ந்து பார்த்தாள்... பின்பு,

"வேலைக்காரங்க..." என்று திமிருடன் கூறினாள் அவள்...

"ஆமாம்டி, நாங்க வேலைக்காரங்க தான்... உன்னை மாதிரி..." என்றவன் அவளை அற்ப புழுவை பார்ப்பது போல் பார்த்து வைத்தான். அவனது கைகளை அவனது அன்னை கட்டி போட்டு விட்டார். இல்லை என்றால் நடப்பதே வேறு...

அதற்குள் பொன்னம்பலம், காவேரி அங்கு வந்துவிட... அவர்கள் கேள்வி கேட்கும் முன்னர் வேணி தனது மகனை இழுத்துக் கொண்டு சென்றுவிட்டார்.

"வேணி கிட்ட என்ன கேட்டுட்டு இருந்த?" காவேரி பேத்தியிடம் கேட்க...

"இன்னைக்கு என்ன லன்ச்ன்னு கேட்டேன் பாட்டி." என்றவள் தனது அறைக்குள் சென்றுவிட்டாள்.

இரவு அனைவரும் உறங்கிவிட... சிவகுமரனும், பொன்னம்பலமும் திண்ணையில் பாய் விரித்துப் படுத்தனர்.

"ஐயா, உள்ளே போய்ப் படுங்களேன்."

"இயற்கையான காற்று இருக்கிறப்போ எதுக்குடா செயற்கை காற்று..." என்றவர்,

"குமரா, நாளைக்குக் கங்காவை பொண்ணு பார்க்க வர்றாங்கல்ல..." என்று கேட்க...

"ஆமாங்கய்யா... எனக்கு அவளை மேலே படிக்க வைக்கணும்ன்னு ஆசை. ஆனா அம்மாவுக்கு அதில் விருப்பம் இல்லை. அடுத்தடுத்து பொண்ணுங்க இருக்கிறதை பார்த்து அவங்களுக்குப் பயமா இருக்கு." அவன் தனது ஆதங்கத்தை வெளியிட்டான்.

"அதான் ஒரு டிகிரி முடிச்சிட்டாளே... அப்புறம் என்ன? மாப்பிள்ளை வீட்டில் போய்ப் படிச்சிக்கட்டும்." என்ற பொன்னம்பலம் அப்படியே அமைதி காத்தார். பின்பு திடுமென அவர்,

"குமரா, தூங்கிட்டியா?" என்று கேட்க...

"இல்லைங்கய்யா... சொல்லுங்க..."

"காலையில் அபி பேசியதை நினைச்சு எனக்கு ஒரே கவலையா இருக்கு." அவரது பேச்சிற்கு அவன் மனதிற்குள் துணுக்குற்றாலும் வெளியில் அமைதி காத்தான்.

"அவள் திடுதிடுப்புன்னு அப்படிக் கேட்டது எனக்கு ரொம்ப அதிர்ச்சியா போச்சு."

'உங்களுக்கு மட்டுமா? எனக்கும் தான்' அவன் மனதில் நினைத்துக் கொண்டான்.

"அவள் நல்ல பொண்ணு தான். ஆனா உன்னுடைய குணத்துக்கும், அவளுடைய குணத்துக்கும் சரியா வராது. அவளோட லைஃப் ஸ்டைல் வேறு... உன்னுடைய லைஃப் ஸ்டைல் வேறு."

"சின்னம்மா ஏதோ தெரியாம சொல்லிட்டாங்க... விடுங்கய்யா."

"ஆனா எனக்கு மனசு ஆறலை குமரா. அவளைக் கட்டுறதுக்கான எல்லாத் தகுதியும் உனக்கு இருக்கு. அதை என்னால் மறுக்க முடியாது. ஆனா அவளுக்கு? அவள் ஒரு 'ஸ்பாயில்ட் சைல்ட்' குமரா... என் மனசாட்சிக்கு தெரியும் அவள் உனக்கு ஒத்து வர மாட்டாள்ன்னு. ஆனா பாழா போன பாசம் அதை ஏத்துக்க மறுக்குதே. உன்னை விட வேறு ஒரு நல்ல மாப்பிள்ளை அவளுக்குக் கிடைக்க மாட்டான். அவள் நல்ல மாதிரியா இருந்திருந்தால் உனக்கு அவளைக் கட்டி வச்சிருப்பேன். ஆனா இப்போ...???" அவர் ஆற்றாமையில் பெருமூச்சு விட்டார்.

அவரின் மனதை அறிந்த சிவகுமரன் அவரைத் திகைப்புடன் பார்த்தான்.

"உங்க ரெண்டு பேருக்கும் ஒருபோதும் செட்டாகாது. அவளுக்கு ஏத்த ராஜகுமாரனை நிச்சயம் நான் கண்டுபிடிப்பேன். அதே போல் உனக்கு ஏத்த மகாலெக்ஷிமியையும் நான் கண்டுபிடிப்பேன்."

தனது சொந்த பேத்திக்காகக் கூடத் தனது நியாய மனதை மாற்றிக் கொள்ளாது அவனது நலத்தை விரும்பும் அந்தப் பெரிய மனிதருக்காக எதையும் செய்யத் தோன்றியது அவனுக்கு...

"நீங்க மனசு வருத்தப்படும்படி ஒண்ணும் நடக்காது ஐயா..." அதைக் கேட்டு பெருமூச்சு விட்டவர்,

"அபியோட வருங்காலத்தை நினைச்சா இப்பவே எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு குமரா. என் மகன் வாழ்க்கை தான் பாழா போச்சு. அதே மாதிரி அபி வாழ்க்கையும் பாழா போயிருமோன்னு பயமாயிருக்கு."

அவரது கவலை அவனை அதிகமாய்த் தாக்கியது. ஏனெனில் அவனது உடம்பில் ஓடும் இரத்தம் அவருக்குச் சொந்தமானது அல்லவா. அவர் போட்ட உப்பை தின்று வளர்ந்த நன்றியுள்ள நாய் அல்லவா அவன்...!

"சின்னம்மாவை பத்தி நீங்க கவலைப்படாதீங்கய்யா. நான் அவங்களைப் பத்திரமா பார்த்துக்கிறேன்." என்றவனை அவர் முகம் மலர பார்த்தார்.

"குமரா..."

"உங்க ஆசை எதுவோ... அதுக்கு நான் கட்டுப்படறேன் ஐயா." என்றவன் அவரது கையைப் பிடித்துக் கொண்டு,

"சத்தியமா..." என்று கூற... அவர் அவனது கையை இறுக பிடித்துக் கொண்டார்.

"இது போதும் குமரா... இது போதும்." என்றபடி அவர் மனம் நெகிழ்ந்து போனார்.

சிவகுமரன் சொன்னதைக் கேட்டுப் பொன்னம்பலம் நிம்மதியாகத் தூங்கி போனார். ஆனால் அவன் தான் தூக்கத்தைத் தொலைத்துவிட்டு அவனது 'குடிகாரி'யை பற்றி நினைத்துக் கொண்டிருந்தான். பின்பு ஏதோ யோசித்தவனாய் அவசரமாய் அலைப்பேசியை எடுத்து எதையோ தேடினான். அவன் தேடியது கிடைத்ததும் அதை உன்னிப்பாய் படிக்க ஆரம்பித்தான். அதில் மது குடிப்பதை நிறுத்துவதற்கான வழிமுறைகள் வரிசையாக இருந்தது.

'ம், குடிகாரியை கட்டிக்கிட்டுச் சாராயக் கடையில் டூயட் பாடணும்ன்னு என் தலைவிதியில் எழுதியிருக்கு போலும். நாய்க்கு வாழ்க்கைப்பட்டா குரைச்சு தானே ஆகணும். குடி குடியை கெடுக்கும். இந்தக் குடிகாரி என்னைக் கெடுக்கப் போகிறாள்.' அவனது மனம் அது பாட்டிற்கு நினைத்துக் கொண்டிருந்தது.

தொடரும்...!!!

# அத்தியாயம் : 3

காலையில் எழுந்த பொன்னம்பலம் அருகில் படுத்திருந்த சிவகுமரனை காணாது தேடினார். பின்னர் எழுந்து சென்று பல் துலக்கி, முகம் கழுவி விட்டு வந்தவர் திண்ணையில் அமர்ந்தார். அவர் முன் காபி கோப்பையை நீட்டினார் வேணி.

"குமரன் எங்கே?"

"தோட்டதுக்குப் போயிருக்கான்..." என்ற வேணி உள்ளே சென்றுவிட்டார்.

பொன்னம்பலம் காபியை பருகியபடி நேற்றிரவு தானும், சிவகுமரனும் பேசியதை அசை போட்டுக் கொண்டிருந்தார். தன்னுடைய சுயநலத்திற்காக அவனது வாழ்க்கையைப் பலிகடா ஆக்குகிறோமோ? என்று அவருக்குச் சற்று உறுத்தலாக இருந்தது.

'உன் பேத்தியை பற்றி நீயே குறைவாக மதிப்பிட்டால் எப்படி? அவளும் நல்ல பெண் தானே.' அவரது மனசாட்சி கேள்வி கேட்டது.

'நல்ல பெண் தான்... ஆனால் அவள் இருக்கும் துறை சரியில்லையே. அதைவிட அவளது பழக்கவழக்கங்கள்? இதை எல்லாம் மாற்றி அமைத்தால் தானே அவளுடைய வாழ்க்கை நன்றாக இருக்கும்.' என்று நினைத்தவருக்கு அவளை எப்படி மாற்றுவது? என்பதற்கான வழிமுறை தான் தெரியவில்லை.

சிவகுமரன் நல்ல பையன் தான். மிகவும் பொறுமையானவன் தான்... அவனால் மட்டுமே அபிஷாரிகாவை பொறுமையாகக் கையாள முடியும். ஆனால் அந்தப் பொறுமையும் ஒரு நாள் வெடித்துச் சிதறிவிட்டால்...??? அதற்கான விடை என்ன யோசித்தும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் மனதில் ஏதோ பாரமேறிய ஒரு உணர்வு தோன்றியது.

அப்போது சிவகுமரன் தனது இருசக்கர வாகனத்தில் வந்திறங்கினான். வண்டியை நிறுத்திவிட்டுத் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து தோள் இருமங்கிலும் தொங்க போட்டு கொண்டவன், வேட்டியை மடித்துக் கட்டிவிட்டு வண்டியின் பின்னால் இருந்த நுங்குகளைத் தூக்கி கொண்டு அவரை நோக்கி வந்தான்.

"காலங்கார்த்தால தோட்டத்துக்குப் போகணுமா? கொஞ்சம் நேரம் கழிச்சுப் போகக் கூடாதா?" பொன்னம்பலம் அவனைச் செல்லமாகக் கடிந்து கொண்டார்.

"இன்னைக்குக் கங்காவை பொண்ணு பார்க்க வர்றாங்கல்ல ஐயா. அதான் காலையிலேயே தோட்டத்துக்குப் போயிட்டு வந்துட்டேன்." என்றவன் துண்டால் வியர்வையைத் துடைத்தபடி அங்கிருந்த படியில் அமர்ந்தான்.

"குமரா..."

"சொல்லுங்கய்யா..." என்றவன் அவரைக் கேள்வியாய் பார்த்தான்.

"நேத்து நீ சொன்னது எல்லாம் உண்மையா?"

"நான் உங்க கிட்ட பொய் பேச மாட்டேன் ஐயா." அவன் சிறு புன்னகையுடன் கூறினான்.

"அபி பிடிவாதக்காரி, கோபக்காரி... கூடவே ஆணவமும் இருக்கு. நீ எப்படி அவளைச் சமாளிக்கப் போற? எனக்காக நீ கல்யாணத்துக்குச் சம்மதிக்க வேண்டாம். எதுவாயிருந்தாலும் சொல்லு குமரா." என்றவரை புன்னகையுடன் பார்த்தவன்,

"இது எல்லாத்தையும் விட அவங்க உங்க பேத்தி... இந்த ஒரு காரணம் போதாதா?" என்று பதில் அளித்தான். அவனது தியாகம் கண்டு அவரது மனம் குளிர்ந்து போனது. நிச்சயம் அவன் தனது பேத்தியை நன்றாகப் பார்த்து கொள்வான் என்றே அவர் நம்பினார்.

"ஐயா, உங்களுக்கு நுங்கு வெட்டி தரவா?"

"எனக்கு வேண்டாம். இப்போ தான் காபி குடிச்சேன்..." என்றவர் அப்போது அங்கு வந்த பேத்தியை கண்டு,

"அபிக்கு வேணா வெட்டி கொடு..." என்க... அவன் திரும்பி அபிஷரிகாவை பார்த்தான்.

இரவு உடையில் தலைவிரி கோலமாய் வந்து நின்றவளை கண்டு அவன் மனதிற்குள், 'அச்சு அசல் காளியத்தாவே தான்.' என்று கேலி செய்தான். அவனது விழிகளில் தெரிந்த கேலியை கண்டு கொண்டவளின் விழிகள் சுருங்கியது.

"அவங்களுக்கு இது எல்லாம் பிடிக்குமோ என்னவோ?" என்றவனது வார்த்தையில் அத்தனை நக்கல் இருந்தது. அதில் ரோசமுற்றவள்,

"அதெல்லாம் பிடிக்கும்." என்று கூறியபடி தாத்தாவின் அருகில் வந்தமர்ந்தாள்.

சிவகுமரன் சிரித்தபடி நுங்கை எடுத்து வெட்ட ஆரம்பித்தான். அவள் அவனையே பார்த்திருந்தாள். நேற்று அவன் பேசிய பேச்சு எல்லாம் ஞாபகத்தில் எழுந்ததில் அவளது கோபம் அதிகரித்தது. என்ன வார்த்தை சொல்லிவிட்டான்? என்று அவளது மனம் ஆத்திரத்தில் குமைந்தது.

"இந்தாங்க..." அவன் அவள் முன் நுங்கை நீட்டினான். அவள் அதை எப்படி உண்பது? என்று தெரியாது விழித்தாள்.

"வாயடிக்க மட்டும் தான் தெரியும்..." என்று முணுமுணுத்தபடி அவன் லாவகமாய் நுங்கின் ஒரு கண்ணை ஒற்றை விரல் கொண்டு உடைத்து காட்டி அவளை அதைப் போல் செய்து உண்ண சொன்னான். அவளும் அதே போல் செய்ய முயற்சித்தாள். அந்தோ பரிதாபம்! அவள் நுங்கை அழுத்தி குத்தியதில் நுங்கின் நீர் அவனது விழிகளில் தெறித்தது.

"ஷ்..." என்றபடி அவன் தன் கண்ணைக் கசக்கினான்.

அவனை ஏறிட்டு பார்த்தவளுக்குத் தான் செய்தது தவறு என்று தெரிந்திருந்தாலும் அதற்காக வேண்டி எல்லாம் அவள் அவனிடம் மன்னிப்பு கேட்கவில்லை. மாறாக நுங்கை உண்பது போல் தலைகுனிந்து கொண்டாள்.

"அபி..." என்று பொன்னம்பலம் அவளை அதட்ட...

"விடுங்கய்யா... தெரியாம தானே பண்ணினாங்க." என்றவன் அவளை ஒரு பார்வை பார்த்தபடி அங்கிருந்து அகன்றான்.

அவன் சென்றதும் பொன்னம்பலம் தனது பேத்தியிடம், "என்ன முடிவு பண்ணியிருக்க...?" என்று கேட்க...

"என்ன முடிவு தாத்தா?" அவள் புரியாது விழித்தாள்.

"உன் கல்யாணம் பற்றித் தான்..." அதைக் கேட்டு அவளது முகம் இறுகி போனது.

"அதற்கான பதிலை நேற்றே சொல்லிவிட்டேன். குமரனை தவிர வேறு யாரையும் என்னால் கல்யாணம் பண்ணிக்க முடியாது." என்றவளை உற்று பார்த்தவர்,

"சரி, நான் அவனை உனக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன்." என்றவரை கண்டு அவளது விழிகள் பளபளத்தது.

"உன்னால் அவன் கூடக் கடைசிவரை சந்தோசமா வாழ முடியுமா? கல்யாணம் என்பது ஆயிரங்காலத்து பயிர். இன்னைக்குக் கல்யாணம் பண்ணிட்டு நாளைக்கு விவாகரத்து வாங்கிட்டுப் போறது என்பது நடைமுறை வாழ்க்கையில் சாத்தியம் இல்லை." அவரது வார்த்தைகள் மிகவும் கடுமையுடன் வந்தது.

அவரது கேள்விக்கு அவளிடம் பதில் இல்லை. அதனால் அவள் அமைதி காத்தாள். அதைக் கண்டதும் அவருக்கு விரக்தி எழுந்தது.

"உன்னால் பதில் சொல்ல முடியலைல்ல. இது தான் நீ... வீணே ஒரு நல்லவனின் வாழ்க்கையை அழிக்க நினைக்காதே. உன் நிம்மதியையும் கெடுத்து, அவனது நிம்மதியையும் கெடுக்காதே. அவனாவது நிம்மதியா வாழட்டும். உனக்கு ஏத்த மாதிரி ஒரு ஆட்டக்காரனை பார்க்கிறேன்." என்று அவர் முடித்துக் கொள்ள...

"அதெல்லாம் எனக்குத் தெரியாது தாத்தா. நான் கல்யாணம்ன்னு ஒண்ணு பண்ணினால் அவனைத் தான் பண்ணுவேன். இல்லைன்னா இப்படியே இருந்துட்டு போறேன்." அவள் பிடிவாதமாகக் கூற...

"அப்போ அவனை விட்டு பிரிய மாட்டேன்னு எனக்குச் சத்தியம் பண்ணி கொடு." பெரியவர் தனது கையை அவள் முன் நீட்ட... தாத்தாவின் கையை வெறித்துப் பார்த்தவள்,

"முடியாது..." என்று அழுத்தம் திருத்தமாய் உரைத்து விட்டு எழுந்து சென்றுவிட்டாள்.

பொன்னம்பலம் நீட்டிய கையுடன் அப்படியே திக்பிரம்மை பிடித்து அமர்ந்திருக்க... அவரது கை மீது ஒரு கை அழுத்தமாய்ப் பதியவும் அவர் தன்னுணர்வு பெற்று ஏறிட்டு பார்த்தார். அங்குச் சிவகுமரன் நின்றிருந்தான்.

"நான் சத்தியம் பண்ணி தர்றேன் ஐயா. உங்க பேத்தி என்ன செய்தாலும் அவங்களை விட்டு நான் பிரிய மாட்டேன். போதுமா?" என்றவனைக் கண்டு அவரது விழிகள் கலங்கியது.

"எனக்கு என்ன செய்றது? என்ன பேசறதுன்னு? ஒண்ணுமே புரியலை."

"நீங்க ஒண்ணும் யோசிக்க வேண்டாம். அதது நடக்கும் போது நடக்கும். நீங்க அமைதியா, நிம்மதியா இருங்க." என்றவன்,

"அம்ரு நுங்கு கேட்டாள்... எடுத்துட்டு போகவா ஐயா?" என்று அவரது அனுமதி வேண்டி நிற்க...

"இதென்ன கேள்வி படுவா? எல்லாத்தையும் எடுத்துட்டுப் போய்த் தங்கைகளுக்குக் கொடு..." என்றவர் நிம்மதியுடன் வீட்டினுள் சென்றார்.

நுங்குகளை எடுத்துத் தோளில் வைத்தபடி நடந்த சிவகுமரனின் மனம் பலத்த யோசனையில் ஆழ்ந்திருந்தது. அபிஷாரிகா பேசியது இன்னமும் அவனது காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளது இந்த முடிவிற்கு என்ன காரணம்? என்று அவனுக்குப் புரியாத புதிராக இருந்தது. ஒருவேளை தன்னைப் பார்த்தால் இளிச்சவாயனாகத் தெரிகிறதா? நுங்குகளைத் தன்னுடைய வீட்டின் திண்ணையில் வைத்துவிட்டு அங்குச் சுவற்று ஆணியில் மாட்டியிருந்த கண்ணாடியை எடுத்து தன்னுடைய முகத்தைப் பார்த்தான்.

'எவ்வளவு அடிச்சாலும் நீ தாங்குவேடா. நீ ரொம்பபபபபபப நல்லவன்டா' என்று அவனது பால்வடியும் முகம் அவனுக்கு நற்சான்றிதழ் வழங்கியது.

"அண்ணய்யா, நுங்கு..." அம்ரிதாவின் குரலில் கலைந்தவன் அவளுக்கு நுங்குகளை வெட்டி கொடுக்க ஆரம்பித்தான்.

சரியாகப் பத்து மணிக்கு எல்லோருக்கும் கிளம்பினர். அவர்களது ஊரில் இருக்கும் பெருமாள் கோவிலில் வைத்து தான் பெண் பார்க்கும் படலம் நடக்கவிருந்தது. உடன் பொன்னம்பலம் மற்றும் காவேரியும் கிளம்பினர். அப்போது அபிஷரிகாவும் கிளம்பி வந்தாள். இளஞ்சிவப்புப் பாவாடை, இரவிக்கையும், அடர் ஊதா நிற தாவணியும் அணிந்து தேவதை போல் வந்து நின்றவளை கண்டு அனைவரும் இமைக்க மறந்தனர். சிவகுமரன் எந்தவித உணர்வுகளையும் காட்டாது கைகளைக் கட்டி கொண்டு அவளைப் பார்த்திருந்தான். பேத்தியின் அழகினை கண்டு பொன்னம்பலம், காவேரியின் விழிகள் கலங்கியது.

"இப்படி இருந்தால் எவ்வளவு அழகாயிருக்கு..." காவேரி பேத்தியின் கன்னம் வழித்துத் திருஷ்டி கழித்தார்.

தோளில் வழிந்த மல்லிகை சரத்தை பின்னால் எடுத்து போட்டபடி சிவகுமரனை வெட்டும் பார்வை பார்த்த அபிஷரிகா,

"கிளம்பலாமா பாட்டி?" என்று கேட்டாள்.

"வேண்டாம்..." சிவகுமரன் பட்டென்று கூற... எல்லோரும் அவனைத் திகைப்புடன் பார்த்தனர்.

"ஐயா, உங்க பேத்தி அங்கே வர வேண்டாம்." அவன் மறுபடியும் பொன்னம்பலத்திடம் அழுத்தி கூறினான்...

அதைக் கேட்டு அபிஷரிகாவின் முகம் இறுகி போனது. அவளது மனமோ கோபத்தில் கொந்தளித்தது. அவள் அவனை முறைத்து பார்த்தபடி வீட்டை நோக்கி நடந்தாள்.

"அபி..." பொன்னம்பலம், காவேரியின் அழைப்பை அவள் சிறிதும் கண்டு கொள்ளவில்லை. விறுவிறுவென அவள் சென்றுவிட்டாள்.

"குமரா, என்னப்பா இது?" பொன்னம்பலம் ஆற்றாமையுடன் அவனிடம் கேட்டுவிட்டார்.

"சின்னம்மா நம்மை மாதிரி சாதாரணவங்க கிடையாது. இந்த ஊர்க்காரங்க நம்ம மேல் மரியாதை வச்சியிருப்பதால் சின்னம்மா இங்கே இருக்கும் விசயத்தை வெளியில் கசிய விடாம பார்த்துக்கிறாங்க. ஆனா இப்போ பெண் பார்க்க வர்றவங்க வெளியூர்க்காரவங்க... அவங்க விசயத்தை வெளியில் சொல்லிவிட்டால்...? சின்னம்மாவோட நிம்மதி போயிரும்." என்றான் அவன் தெளிவாக... அதைக் கேட்டு அனைவரின் முகமும் தெளிந்தது.

"நீ சொன்னால் சரி தான்..." என்றவர்கள் கிளம்பி சென்றனர்.

வீட்டினுள் இருந்த அபிஷரிகா கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தாள். தலையில் வைத்திருந்த பூவை எடுத்துக்

கட்டிலில் வீசியவள், அடுத்து வளையல், ஜிமிக்கி, சங்கிலி என அனைத்தையும் கழற்றி வீசி எறிந்தாள்.

"என்னைக் கூட்டிட்டுப் போனால் உன் கௌரவம் குறைஞ்சு போயிருமாக்கும். இருடா, உனக்கு வைக்கிறேன் ஆப்பு." என்று அவனைத் திட்டியவள் அதற்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருக்க ஆரம்பித்தாள்.

கோவிலில் பெண் பார்க்கும் படலம் நல்லபடியாக நடந்து முடிந்தது. மாப்பிள்ளைக்கும், கங்காவிற்கும் ஒருவரை ஒருவர் மிகவும் பிடித்துப் போயிற்று. ஆனால் மாப்பிள்ளையின் பெற்றோர் சற்று அதிகமாய் வரதட்சணை கேட்டனர். அதைக் கேட்டு சிவகுமரன் தயங்கினான். ஆனால் பொன்னம்பலம் அவனைக் கண்களால் அடக்கியவர் அவர்கள் சொன்னதற்குச் சரியென்று சம்மதித்தார். வீட்டிற்கு வரும் வழியில்,

"நீங்க எல்லாம் எனக்கு யாரோவா? நீங்களும் என் பேர பசங்க தான். நான் உங்களுக்குச் செய்யாம வேறு யாருக்குச் செய்யப் போறேன்." அவர் அவனைக் கண்டு சத்தம் போட்டார்.

அவரது வார்த்தைகளில் சிவகுமரன், வேணியில் விழிகள் கலங்கி போனது. ஆனாலும் அவனுக்கு அவரைத் தொந்தரவு செய்ய விருப்பம் இல்லை. முடிந்தளவு தானே பணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவன் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

மதிய உணவு நேரத்திற்கு எல்லோரும் வீட்டிற்கு வந்துவிட்டனர். அபிஷரிகா உணவு வேண்டாம் என்று மறுத்து அறையில் உண்ணாவிரதம் இருந்தாள். பொன்னம்பலம், காவேரி அவளைத் தேடி வந்தனர்.

"சாப்பிட வாம்மா..." காவேரி பேத்தியிடம் கெஞ்சினார்.

"எனக்கு ஒண்ணும் வேண்டாம் பாட்டி. நான் இந்த ரூமிலேயே அடைப்பட்டுச் செத்து போறேன்." என்று அவள் கத்த... பெரியவர்களின் முகம் இருண்டு போனது.

"அபி, என்ன பேச்சு இது?" என்று பொன்னம்பலம் அவளைக் கண்டு சத்தம் போட்டவர்,

"உன்னை வெளியில் கூட்டிட்டு போகணும். அவ்வளவு தானே...? குமரன் கிட்ட சொல்லி உன்னைக் கூட்டிட்டுப் போகச் சொல்றேன்." என்று கூற...

"நிஜமாவா?" அவள் விழி விரித்துக் கேட்க...

"நிஜமா தான்..." என்றவர் பேத்தியை அழைத்துக் கொண்டு உண்ண வந்தார். மூவரும் உணவு உண்டு முடித்ததும் அபிஷரிகா மீண்டும் பல்லவியை ஆரம்பித்தாள்.

"இப்பவே நான் வெளியில் போகணும்." என்று அவள் அடம்பிடித்தாள்.

"இப்பவேவா? இப்போ குமரன் மில்லுக்குக் கிளம்புற நேரமாச்சே." பொன்னம்பலம் யோசித்தார்.

"இப்பவே தான்... டாட்." என்று அவள் அந்தப் பேச்சிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

இருவரும் வெளியில் வந்து பார்க்கும் போது சிவகுமரன் தனது இருசக்கர வாகனத்தில் அரிசி ஆலைக்குக் கிளம்பி கொண்டிருந்தான். அவனை அழைத்த பொன்னம்பலம் தனது பேத்தியை உடன் அழைத்துச் சென்று ஊர் சுற்றி காண்பிக்கச் சொல்ல... அவனோ அவளைக் கூர்ந்து பார்த்தான். இன்னைக்கு என்ன செய்யக் காத்திருக்கிறாளோ? என்று அவனுக்கு யோசனையாக இருந்தது. அவள் அவனிடம் வம்பிழுத்தால் அவனது வாயும், கையும் சும்மாயிருக்காது. இப்போது என்ன செய்ய? என்று அவன் யோசித்தான்.

"ஐயா, அது வந்து..." அவன் இழுக்க...

"தாத்தா..." என்று அவள் அவரை அழைக்க...

"எனக்காகக் கூட்டிட்டு போ குமரா..." பெரியவரின் கெஞ்சலில் அவன் சரியென்று சம்மதித்தான்.

அபிஷரிகா வாகனத்தின் பின்னால் ஏறியமர்ந்ததும் அவன் அதைக் கிளப்பிச் சென்றான். இருவரும் சேர்ந்து போவதை கண்டு பொன்னம்பலத்தின் மனம் குளிர்ந்து போனது.

பெரியவர் கண்ணில் இருந்து மறைந்ததும் சிவகுமரன் அவளிடம், "இரண்டு பேருக்கும் இடையில் இரண்டடி இடைவெளி விட்டு உட்காரு. உன் மூச்சு காத்து கூட என் மேல் படக்கூடாது." என்று கறாராகக் கூற...

'ஹ, நீ சொல்லி நான் கேட்டிருவேனா?' என்று மனதில் அலட்சியமாக நினைத்தவள் வேண்டும் என்றே அவன் புறம் நெருங்கி அமர்ந்து, அவனது இடுப்பில் தனது இரு கரங்களையும் கோர்த்து, அவனது முதுகில் தனது முகத்தினைப் பதித்துக் கொள்ள... அதில் அவன் தான் நிலைகுலைந்து போனான்.

பெண்ணவளுக்கு நாளும் நடிக்கும் திரைப்படம் போல் வாழ்க்கை தோன்றியது போலும். ஆனால் பெண்களை உணர்ந்திராத ஆணவனுக்கு விதவிதமான உணர்வுகள் எழுந்தது. அவன் ஒன்றும் முற்றும் துறந்த முனிவன் இல்லையே. ஆனாலும் ராட்சசியிடம் தனது உணர்வுகளைப் பிரதிபலிக்க விரும்பாது அவன் தனக்குள் இறுகி போனான். அவன் தனது கோபத்தினை வண்டியின் மீது காட்ட... அது காற்றாய் வேகமாய்ப் பறந்தது.

தனது நெருக்கத்தில் அவன் ஏதாவது கூறுவான் என்று எதிர்பார்த்தவளுக்கு அவனது இந்த அமைதி எரிச்சலை தந்தது. அவள் எரிச்சலுடன் தள்ளி அமர்ந்தாள். அதன் பிறகே அவனது சுவாசம் சீரானது. அந்தக் கணம் அவள் தன்னைச் சோதிக்கிறாளோ? என்கிற சந்தேகம் அவனுள் எழுந்தது. அப்படித்தான் இருக்க வேண்டும் என்று நினைத்தவன்,

'ஸ்டெடி குமரா, ஸ்டெடி... நீ பார்க்காத பொண்ணுங்களா? இந்த ராட்சசி கிட்ட கவுந்துடாதே.' என்று தனக்குத் தானே சொல்லி கொண்டான்.

அரிசி ஆலையின் முன் வண்டியை நிறுத்தியவன் அவள் இறங்கியதும் தானும் இறங்கினான். "வா..." என்ற ஒற்றைச் சொல்லோடு அவளை உள்ளே அழைத்துச் சென்றவன் அங்கிருந்த ஒரு அறையில் அவளை அமர வைத்துவிட்டு,

"நான் வர்ற வரைக்கும் இங்கேயே பேசாம இருக்கணும்." என்று உத்தரவிட்டு விட்டு அவளது பதிலை எதிர்பாராது வெளியில் சென்றுவிட்டான்.

'ப்ச், திமிர் பிடிச்சவன்...' என்று முணுமுணுத்தவள் அந்த அறையைச் சுற்றிலும் பார்வையை ஓட்டினாள். சுமார் அரை மணி நேரம் சும்மா இருந்தவளுக்கு அதற்கு மேல் சும்மாயிருக்க முடியவில்லை. வெளியில் வந்தவளை கண்டு அங்கிருந்த வேலையாட்கள் எல்லோரும் வணக்கம் தெரிவித்தனர். அவள் பதிலுக்குத் தலையசைத்தாலும் ஒன்றும் பேசாது அவர்களைக் கடந்து சென்றாள். அவளது அழகினை அங்குள்ளவர்கள் சிலாகித்துப் புகழ்ந்தனர்.

சிறிது தூரம் வந்தவள் அங்குக் கண்ட காட்சியில் அப்படியே நின்றுவிட்டாள். சிவகுமரன் சட்டையைக் கழற்றிவிட்டு, வேட்டியை மடித்துக் கட்டியபடி நெல் மூட்டைகளைத் தூக்கி சுமந்தபடி வந்து கொண்டிருந்தான். முறுக்கேறிய புஜங்களும், திண்மையான தோள்களும், பரந்து விரிந்த நெஞ்சுமாய்க் கம்பீரமாய், அழகாய் இருந்தவனைக் கண்டு அவள் இமைக்க மறந்து பார்த்திருந்தாள். அவனது நெற்றியில் இருந்து காதோரம் வழிந்த வியர்வை கூட அவனுக்கு அத்தனை அழகாய் இருந்தது. அவள் அங்கிருந்த மூட்டை மீது சாய்ந்து நின்று கொண்டு அவனையே பார்த்திருந்தாள். வேலையை முடித்துக் கொண்டு உள்ளே வந்த சிவகுமரன் அப்போது தான் அபிஷரிகா அங்கிருப்பதைக் கண்டான். அவசரமாக மூட்டை மீதிருந்த தனது சட்டையை எடுத்து அணிந்து கொண்டான்.

அவள் வாழும் உலகில் பெண்களே இப்படிக் கூச்சப்பட மாட்டார்கள். அதிலும் ஆண்களைச் சொல்லவும் வேண்டாம். ஆனால் ஆணான இவனது கூச்சம் அவளுக்குப் புதிதாய்

இருந்தது. அதை அவள் ரசித்துப் பார்த்திருந்தாள். அவளது இதழ்களில் கேலி புன்னகை தோன்றியது.

"கொஞ்சமும் கூச்சம் இல்லாமல் ஆம்பிளையை வெறிச்சு பார்க்கிறியே? உனக்கு வெட்கமா இல்லை." என்று அவன் அவள் அருகில் வந்து சீறினான்.

"பொம்பளைங்க முன்னாடி இப்படி வேலை செய்றதுக்கு நீ தான் வெட்கப்படணும். நான் ஏன் வெட்கப்படணும்?" என்றவள் விழிகளால் அங்கு வேலை செய்து கொண்டிருந்த பெண்களைச் சுட்டிக்காட்டினாள்.

"யாரும் உன்னை மாதிரி வெறிச்சு பார்க்கலை." என்று சிடுசிடுத்தவன் அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தான். பின்பு அவளைப் பார்த்து,

"இந்த ஊரில் நாலு தெருவும், நாற்பது ஏக்கர் வயலும் தான் இருக்கு. இதை இப்படியே இங்கிருந்து சுத்தி பார்த்திரு." என்று நக்கலாய் கூற... அவள் அவனைப் பார்த்து ஒன்றும் கூறாது,

"போகலாம்..." என்க... அவன் ஆச்சரியத்துடன் வண்டியை கிளப்பினான். இதற்கு எதற்கு இவள் கிளம்பி வந்தாள்? என்று அவன் வழி எல்லாம் யோசித்துக் கொண்டே வந்தான்.

வீட்டிற்கு வந்ததும் வண்டியில் இருந்து இறங்கியவள் அவனைச் சொடக்கிட்டு அழைத்து, "இந்தக் குடிகாரி, வி......ரி கூட இப்போ ஊரெல்லாம் சுத்திட்டு வந்திருக்கியே. இப்போ உன் மானம், மரியாதை எல்லாம் ஸ்வாகா... காற்றில் பறந்து போச்சு... காக்கா தூக்கிட்டு போயிருச்சு." என்று கைகளை ஆட்டி ஆட்டி அபிநயம் பிடித்தவளை கண்டு அவனுள் வெறியேறியது. அவன் ஒன்றும் பேசாது அவளை வெறித்துப் பார்த்திருந்தான்.

"இதே மாதிரி தான் இனி எதுவும் பேச முடியாதபடி உன் வாயை அடைக்கப் போறேன். இந்தக் குடிகாரி, வி......ரியாகிய நான் தான் உன் மனைவியா வர போறேன்.

அப்போ நீ என்ன பண்ண போறேன்னு நான் பார்க்கிறேன்." என்று அவள் சவாலாகக் கூற...

சிவகுமரன் தான் அவளைத் திருமணம் செய்யச் சம்மதித்து விட்டானே. அதனால் அவன் அவளைக் கண்டு புன்னகைத்தான்.

"ம், கல்யாணம் பண்ணி உன் வாயை அடைக்கப் போறேன். எப்படின்னு ஒரு டிரையல் காட்டவா?" என்றவன் வண்டியில் இருந்து இறங்கி அவள் அருகே வர... அவள் அன்னிச்சை செயலாய்ப் பின்னால் நகர்ந்தாள். அதைக் கண்டவன் அப்படியே நின்றான்.

"ஐயாவுக்காகப் பார்க்கிறேன். இல்லைன்னா நடக்கிறதே வேற... எப்போதும் ஒரே மாதிரியா இருக்க மாட்டேன்." என்று அவளை எச்சரித்து விட்டு அவன் அங்கிருந்து அகன்றான்.

வீட்டிற்கு வந்தவன் குளிக்கத் தேவையான உடமைகளை எடுத்துக் கொண்டு வீட்டின் பின்பக்கம் சென்றான். பொன்னம்பலம் வீட்டின் பின்புறம் பெரிய தோட்டம் இருந்தது. அதில் காய்கறிகள் மற்றும் தென்னை, மா, முருங்கை, கொய்யா போன்ற மரவகைகள் இருந்தது. அத்தோடு வாழை தோட்டமும் சேர்ந்து இருந்தது. அவற்றை எல்லாம் தாண்டி மூலையில் ஒரு ஆழ்கிணறு இருந்தது. அவன் அங்குச் சென்ற போது அவனுக்கு முன்னரே அபிஷரிகா அங்கு வந்து நின்றிருந்தாள். அவளைக் கண்டதும் சுருங்கிய அவனது விழிகள் அடுத்த நொடி பிரகாசம் அடைந்தது. அவன் பூனை நடை போட்டு அவள் பின்னால் வந்து நின்று,

"பே..." என்று கத்தியவன் அவள் சுதாரிக்கும் முன் அவளைப் பிடித்துக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டான். அவள் அலறிக் கொண்டே உள்ளே சென்று விழுந்தாள்.

அந்த அந்தி நேரத்தில் வீட்டினர் யாரும் அந்தப் பக்கமாய் வரவில்லை. அதனால் அவளது அலறலை யாரும்

கேட்கவில்லை. அதைக் கேட்ட ஒருவனும் வெற்றியில் கொக்கரித்துக் கொண்டிருந்தான்.

"நேத்து எங்கம்மா முகத்தில் பானகத்தை ஊத்தினேல்ல... அதுக்குப் பழிக்கு பழி. யார் கிட்ட மோதுற?" என்றபடி அவன் மேலே இருந்து அவளைப் பார்த்து கத்தி கொண்டிருந்தான்.

அவன் கூறியதை கேட்டு ஸ்தம்பித்திருந்தவள் அப்போது தான் தன்னைச் சுற்றி இருக்கும் சூழலை கவனித்தாள். கருக்கல் நேரத்தில் ஆழ்கிணறும், அதைச் சுற்றியிருந்த கரும்பாறைகளும் இருட்டை பிரதிபலித்தது. ஏனோ அந்த இருட்டை கண்டவளுக்கு மூச்சு முட்டுவது போலிருந்தது. அவளது மனதில் இனம் புரியாத பயம் எழுந்தது.

"மாம், எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு மாம்... ப்ளீஸ், ஹெல்ப் மீ..." என்று அவள் அச்சத்தில் திரும்பத் திரும்பக் கத்தி கொண்டிருந்தாள்.

அவளுடைய அலறலை மேலிருந்து ரசித்துப் பார்த்திருந்தவன் அனைத்தும் அவளது நாடகம் என்றே எண்ணினான். 'உனக்கு நல்லா வேணும்டி' என்று அவன் மனதிற்குள் குதியாட்டம் போட்டான்.

நன்கு நீச்சல் பயின்ற அவள் அதற்கு மேல் தாக்கு பிடிக்க முடியாது அப்படியே மயங்கி தண்ணீருக்குள் மூழ்க துவங்கினாள். அவள் விளையாடுகிறாள் என்று முதலில் நினைத்தவன் சில நிமிடங்கள் கழித்தும் அவளது தலை தண்ணீருக்கு மேல் தெரியவில்லை என்றதும் அவனுக்கு உள்ளுக்குள் பயம் பிடித்துக் கொண்டது.

"ஏய், நடிக்காதடி... உன் நடிப்பை நம்பி நான் ஏமாற மாட்டேன். மேலே வாடி..." என்று அவன் பதற்றத்தில் கத்தியதற்குப் பதிலாக அவனது குரலே கிணற்றில் இருந்து எதிரொலித்தது.

"ஏய், எங்கேடி இருக்க...?" என்று பயத்தில் கத்தியவன் அடுத்த நொடி சிறிதும் தாமதிக்காது கிணற்றுக்குள் குதித்து இருந்தான்.

ஆழ்கிணற்றின் அடியாழம் வரை அபிஷரிகாவை தேடி துளாவியவன் கண்ணில், அங்கு நீருக்கடியில் பாறை மீது மயங்கிய நிலையில் கிடந்தவள் தென்பட்டாள். அவளது தோற்றம் கண்டு அவனது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது. உடனே அவளைத் தூக்கி கொண்டு நீருக்குள் மேலே வந்தவன் அங்கிருந்த படியில் அவளைப் படுக்க வைத்து அவளது கன்னங்களைப் பிடித்துத் தட்டினான்.

"ஏய் அபி, எழுந்திருடி... எழுந்திரு." அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. விளையாட்டு வினையாகி விட்டதோ! என்று...

பின்பு என்ன நினைத்தானோ அவளது வயிற்றில் தனது கைகளை வைத்து அழுத்தத் துவங்கினான். அவள் குடித்திருந்த நீர் மெதுவே வாய் வழியே கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறியது. அப்படியிருந்தும் அவன் விடாது அவளது வயிற்றைப் பிடித்து அழுத்தினான். சிறு இருமலுடன் கண் விழித்தவள் முதலில் கண்டது சிவகுமரனை தான்... உடல் முழுவதும் நீர் சொட்டி கொண்டிருக்க, கலங்கிய விழிகளுடன் தன்னைக் கவலையாகப் பார்த்து கொண்டிருந்தவனைக் கண்டவள் இமைக்க மறந்தாள்.

அந்நேரம் அவனது உதட்டில் இருந்து சொட்டிய ஒற்றைத் துளி நீரானது அவளது இதழ்களின் மீது விழுந்தது. அதிகாலை நேரம் பூவின் மீதிருக்கும் பனித்துளி போன்று அவளது இதழ்கள் மீது அந்த ஒற்றைத் துளி நீர் அழகாய் வீற்றியிருந்தது. அவனது உதடுகள் பட்டு விழுந்த நீர்த்துளியின் ஸ்பரிசம் அவளை ஏதோ செய்தது. அதே போல் அவளது உதட்டின் மீது பூத்திருந்த ஒற்றைப் பனித்துளி அவனுள் பல ரகசிய உணர்வுகளைத் தோற்றுவித்தது.

"உன் பனித்துளி பனித்துளி பனித்துளி
என்னைச் சுடுவது சுடுவது ஏனோ..?
என் சூரியன் சூரியன் சூரியன்
அதில் உருகுது உருகுது ஏனோ..?"

தொடரும்...!!!

அத்தியாயம் : 4

அபிஷரிகா கண் விழித்ததும் தான் சிவகுமரனின் பதற்றம், பயம், கவலை எல்லாம் அவனை விட்டு அகன்றது. அப்போது தான் அவன் அதை உணர்ந்தான். அவனது கைகள் அழுத்தி கொண்டிருந்த அபிஷரிகாவின் வயிற்று பகுதியின் மென்மையை... அவள் அணிந்திருந்த தாவணி விலகியிருக்க... அவனது கைகள் அவளது வயிற்றில் மொத்தமாய் அழுத்தமாய்ப் பதிந்திருந்தது. பெண்ணவள் மேனியின் மென்மை, குழைவு அனைத்தும் சேர்ந்து ஆணவனின் மனதினை தடம் புரள செய்தது. அவன் அவளையே பார்த்திருந்தான். விசிறி போல் விரிந்திருந்த அவளது இமை முடி ஒவ்வொன்றிலும் சிறு சிறு நீர்த்துளிகள் பாசிமணி போன்று வரிசையாகக் கோர்த்திருந்தது காண்பதற்கு அத்தனை கவர்ச்சியாக, அழகாக இருந்தது. அவளது கருவண்டு விழிகள் தன்னை இமைக்காது பார்த்ததில் அவனது விழிகளும் இமைக்க மறந்தது. அந்தக் கணம் அவனுள் என்னவென்று இனங்காண முடியாத உணர்வுகள் படையெடுக்க ஆரம்பித்தது.

சிவகுமரனின் உதட்டில் இருந்து விழுந்த நீர்த்துளி அபிஷரிகாவினுள்ளும் ஏதேதோ உணர்வுகளைத் தோற்றுவித்தது. ஆணின் நெருக்கம் அவளுக்கு ஒன்றும் புதிது இல்லை. ஆனாலும் இந்த ஆணவனின் நெருக்கம் அவளுக்கு மிகவும் புதிதாக இருந்தது. அவள் மெல்ல தனது கீழ் உதட்டினை மடித்து அந்த ஒற்றைத் துளி நீரை வாய்க்குள் உறிஞ்சி இழுத்தாள். கிணற்று நீர்த்துளி தேனாய்த் தித்தித்தது ஏனோ...! அவள் மெல்ல விழி மூடி அந்தக் கணத்தை ரசிக்க ஆரம்பித்தாள்... அவளது நிலையைக் கண்ட சிவகுமரனின் இதயம் தாறுமாறாகத் துடிக்க ஆரம்பித்தது. வயதின் கோளாறா? இல்லை அவள் தன்னவள் என்கிற சொந்தமா? ஏதோ ஒன்று அவனை அவளை நோக்கி செலுத்தியது. அவளது இதழ்கள் நோக்கி அவன் குனியும் போது அவள் மெல்ல தனது விழிகளை மலர்த்தினாள். அதில் சட்டென்று தன்னுணர்வு

அடைந்தவன் விரிந்த புன்னகையுடன் தனது தலையை அங்கும் இங்கும் சிலுப்ப... அவனது தலைமுடியில் இருந்த நீர்த்துளியானது அவளது முகம் முழுவதும் பட்டுத் தெறித்தது. அவள் எதுவும் கூறாது மௌனமாக அவனது செய்கையைப் பார்த்திருந்தாள்.

"குடிகாரி, என்னை மயக்க பார்க்கிறியா?" என்று அவன் கேலியுடன் கேட்க... அதைக் கேட்டு அவளது விழிகள் சுருங்கியது.

"உனக்கு நீச்சல் தெரியாதுன்னு நான் நம்பணுமாக்கும். நீ நடிக்க வரும் போதே இது எல்லாம் கத்துக்கிட்டு தானே வந்திருப்ப. நீ நீச்சல் அடிக்கிற மாதிரி எத்தனை ஃபோட்டோஸ் நான் பார்த்து இருக்கிறேன். என் கிட்டேயே கதை விடுறியா?"

அவன் கூறியதை கேட்டு அவளுள் அச்சம் முளைத்தது. அவளுக்கு நீச்சல் நன்கு தெரியும். எவ்வளவு ஆழம் என்றாலும் உள்ளே சென்று வெளியில் வந்துவிடுவாள். அதெல்லாம் வெளிச்சமாக இருக்கும் நீச்சல் குளத்தில் மட்டுமே. இது போன்று கருமை அடர்ந்த ஆழ்கிணற்றில் அல்ல. அவளுக்கு இருட்டு என்றால் மிகவும் பயம். அது எதனால் என்பதை உணர்ந்தவளின் மேனி பயத்தில் நடுங்கியது. அவளது கைகள் பயத்தில் அவளையும் அறியாது உயர்ந்து அவனது சட்டையை இறுக பிடித்துக் கொண்டது. அதை அவன் தவறாகப் புரிந்து கொண்டான்.

"குடிகாரி, நீ என்ன பண்ணினாலும் இந்தச் சிறுத்தை சில்வண்டு உன் கிட்ட சிக்காதுடி." என்று அவளிடம் கூறியவன் மனதிற்குள்,

'குமரா, குடிகாரி பார்க்கிறதை பாரு... அவள் பார்வையாலே உன்னை ரேப் பண்ணிருவாள் போலிருக்கே. குடிகாரி மெல்ல உனக்கு வலை விரிக்கிறாள். சிறுத்தை நீ சிக்கி சின்னாபின்னமாகிறாதே. அவளுக்கு உன் பலவீனம் தெரிஞ்சது, இன்னையில் இருந்து நீ அவளுக்கு அடிமை. அதனால் நீ ஸ்டெடியா இருந்துக்கோ. அவள் உன் பொண்டாட்டியே ஆனாலும் நீ உன் கெத்தை விட்டுறாதே. நீ

தான் அவளைக் 'குமரா, ஐ லவ் யூ'ன்னு உன் பின்னாடி கதற விடணும். அதை விட்டுட்டு நீ உன் கற்பு போச்சுன்னு அவள் பின்னாடி கதறிக்கிட்டு இருக்காதே. பீ கேர்புல் குமரா...' என்று தனக்குத் தானே அறிவுரை கூறிக் கொண்டான்.

அவன் பேசியது கேட்டுக் கோபம் அடைந்த அபிஷரிகா அவனது சட்டையைப் பிடித்திருந்த தனது கைகளால் அவனைத் தள்ளி விட்டாள். அவள் தள்ளிவிட்டதில் அவன் கிணற்றில் மல்லாக்க விழுந்தான். கிணற்றில் விழுந்தவன் அடுத்த நொடி நீரின் மேலே வந்து தனது முகத்தில் வழிந்த நீரை வழித்து எடுத்தவன் அதை அப்படியே அவள் மீது தெறித்தான்.

"சிக்க வச்சு காட்டுறேன்டா." என்றபடி அவனுக்குச் சவால் விட்டவள் எழுந்து நின்றாள்.

"அப்போ நீ சில்வண்டுன்னு ஒத்துக்கிறியா?" அவன் நமட்டு சிரிப்புடன் கேட்க... அவள் அவனை முறைத்து பார்த்தாள்.

"அடடா, இந்தச் சில்வண்டு தொல்லை தாங்கலையே." என்றபடி அவன் தனது காதை குடைந்தான்.

"இதெல்லாம் தொல்லையா? இனி தான்டா தொல்லைன்னா என்னன்னு நீ பார்க்க போற." அவள் சளைக்காது பதில் கொடுத்தாள்.

"அதையும் பார்க்கலாம்..." என்றவன் நீந்தி வந்து படியில் ஏறினான். அவன் வரவை உணர்ந்தவள் முகத்தைத் திருப்பிக் கொண்டு மேலே செல்வதற்காக மேல்படியில் கால் வைத்தாள்.

"ஏய், நில்லுடி..." என்றபடி அவன் அவளது கையைப் பிடித்துத் தடுத்தான்.

"பொறுக்கி கையை விடுடா." என்றவள் அவனை அடிப்பதற்காக மற்றொரு கையை ஓங்கினாள். சட்டென்று அதை மடக்கி பிடித்தவன்,

"கேமிரா முன்னாடி நடிச்சு நடிச்சு இயல்பிலேயே பெண்களுக்கு உண்டான வெட்கம், கூச்சம் எதுவுமே உனக்கு இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னால் அப்படி இருக்க முடியாது. ஐயாவோட பேத்தி நீ... அந்தக் கௌரவத்தை ஒழுங்கா காப்பாத்து. முதலில் உன் தாவணியை ஒழுங்கா போடு." என்று அவன் அவளது விழிகளைப் பார்த்து கூற...

தன்னைத் தவறாகப் பார்க்காது நேர்ப்பார்வை பார்க்கும் அவனைக் கண்டு அவள் ஒரு நொடி நெகிழ்ந்தாலும், அவனது வார்த்தைகளில் அவளுள் கோபம் முளைவிட்டது. அவனுக்கு முதுகு காட்டி திரும்பி நின்றவள் தனது தாவணியைச் சரியாகப் போட்டு கொண்டாள்.

"எவ்வளவு நேரம் இங்கேயே இருக்கிறது. மேலே ஏறு..." அவனது வார்த்தையில் அவள் எதுவும் பேசாது மேலே எறினாள்.

மேலே வந்ததும் அவள் வீட்டை நோக்கி செல்ல... அவன் அவளையே பார்த்தபடி நின்றிருந்தவன் பின்பு பெருமூச்சு விட்டபடி குளிக்கச் சென்றான்.

பின்வாசல் வழியே வீட்டிற்குள் நுழைந்தவளை வேணி திகைப்புடன் எதிர் கொண்டார். வேகமாய் அவள் அருகில் வந்தவர் தனது புடவை தலைப்பால் அவளது தலையைத் துடைத்தவர்,

"சின்னம்மா, எங்கே போய் நனைஞ்சீங்க?" என்று கேட்க...

அவரது அன்பான செயலில் அவள் அவரை இமைக்காது பார்த்தாள். அப்போது தான் வேணியும் தான் செய்து கொண்டிருக்கும் செயலை உணர்ந்தவராய் தீச்சுட்டார் போன்று அவளிடம் இருந்து விலகினார்.

"மன்னிச்சுக்கோங்க சின்னம்மா... ஏதோ ஒரு ஞாபகத்துல." அவருக்குப் பயத்தில் வார்த்தைகள் தந்தியடித்தது.

அபிஷரிகா ஒன்றும் பேசாது தனது அறைக்குச் சென்றாள். அவளது அமைதியை அவர் ஆவென்று பார்த்துக்

கொண்டிருந்தார்.

தனது அறைக்கு வந்து உடை மாற்றிய அபிஷரிகா வெளியில் இருந்த திண்ணைக்கு வந்தாள். அப்போது வேணி அவளுக்குச் சூடாகத் தேநீர் கொண்டு வந்தார். கொஞ்சம் பயத்துடன் தான் அவர் அவள் முன் தேநீரை நீட்டினார். நல்லவேளை அவள் அதை விசிறியடிக்காது தனது கையில் வாங்கிக் கொண்டு தேநீரை பருகியபடி,

"தாத்தா, பாட்டி இன்னமும் கோவிலில் இருந்து வரலையா?" என்று கேட்க...

"இல்லை சின்னம்மா... அவங்க வர லேட்டாகும்." என்றவர் உள்ளே சென்றுவிட்டார்.

அபிஷரிகா சிவந்திருந்த அந்திவானத்தைப் பார்த்தபடி தேநீரை பருகி கொண்டிருந்தாள். அவளது மனம் முழுவதும் சென்னையில் இருந்தது. அவள் இங்கிருந்து சீக்கிரம் கிளம்பி போக வேண்டும். அவள் மட்டுமல்ல, சிவகுமரனையும் அவளோடு அழைத்துப் போக வேண்டும். அதற்கு ஒத்துழைக்காது மறுக்கும் தாத்தாவின் மீது அவளுக்குக் கோபம் வந்தது.

'உங்களுக்கு என்னை விட அவன் பெருசா போயிட்டானா?' அவள் கடுப்புடன் அமர்ந்திருந்தாள்.

"சின்னம்மா..." என்றபடி கங்கா அவள் அருகே தயங்கி தயங்கி வந்து நின்றாள். அவளது குரலில் யோசனையைக் கலைத்த அபிஷரிகா அவளை ஏறிட்டு பார்த்தாள்.

"நம்ம தோட்டத்து ஜாதிமல்லி... அதான் உங்களுக்குக் கொடுத்துட்டு போகலாம்ன்னு..." என்று கங்கா தயங்கியபடி அவளைப் பார்த்தாள்.

அபிஷரிகா ஒன்றும் பேசாது தனது கையை அவள் புறமாய் நீட்டினாள். கங்கா மலர்ந்த முகத்துடன் பூச்சரத்தை அவளிடம் கொடுத்தாள். அதை வாங்கிப் பார்த்த அபிஷாரிகா பூ கட்டியிருக்கும் அழகில் மனதை பறிகொடுத்தாள்.

"யார் கட்டியது? ரொம்ப அழகாயிருக்கு..." என்க...

"நான் தான் சின்னம்மா... உங்களுக்குப் பிடிச்சியிருக்கா? நீங்க இங்கே இருக்கும் வரை தினமும் பூ கட்டி தர்றேன்." என்று கங்கா சந்தோசத்துடன் கூறினாள்.

அப்போது குளித்துவிட்டு வந்த சிவகுமரன் அபிஷரிகா தனது தங்கையுடன் பேசி கொண்டிருப்பதைக் கண்டு பயந்து போய் அங்கே வந்தான். அபிஷரிகா தங்கையிடம் வம்பிழுக்கிறாளோ என்கிற பயம் தான் அதற்குக் காரணம்...

"இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" அவன் தங்கையைச் சத்தம் போட்டான்.

"சின்னம்மாவுக்குப் பூ கொடுக்க வந்தேன் அண்ணய்யா."

"ஓ..." என்றவன் அபிஷரிகா கையில் இருந்த பூவை பார்த்தான். தங்கை முன்பு அவளிடம் எதையும் பேசி கலாய்க்க அவன் விரும்பவில்லை.

"சரி, நீ வா கங்கா..." என்று அவன் அவளை அழைத்துக் கொண்டு திரும்ப... அங்கே அவன் முன் இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு அவனை முறைத்தபடி நின்றிருந்தாள் சின்னவள் அம்ரிதா.

"என்னடா குட்டி...?" என்றவன் அவளைத் தூக்கி கொண்டான். அவனது செய்கையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள் அபிஷரிகா.

"இந்தக்கா கூட என்னைச் சேர கூடாதுன்னு சொல்லிட்டு... நீயும், கங்காவும் மட்டும் அவங்க கூடப் பேசிக்கிட்டு இருக்கீங்க. இப்போ நீங்க தான் பேட் பாய், பேட் கேர்ள்." என்று சின்னவள் கோபம் கொள்ள... அதைக் கேட்டு சிவகுமரன் பேய் முழி முழித்தான். அவனைக் கண்ட அபிஷரிகாவிற்குச் சிரிப்பு வந்தது. எழுந்து அவன் அருகில் வந்தவள் அம்ரிதாவிடம்,

"ஆமா, உன் அண்ணய்யா ரொம்ப ரொம்பப் பேட் பாய். நீ தான் குட் கேர்ள்." என்று கூற...

"அப்போ நீங்க பேட் கேர்ள் இல்லையா?" அம்ரிதா விழிகள் விரித்தபடி கேட்டாள்.

"நான் யாருன்னு உங்க அண்ணய்யா கிட்ட கேளு." அவள் அவனைக் கோர்த்து விட்டாள்.

'தைரியம் இருந்தால் இப்போ உன் தங்கை கிட்ட சொல்லுடா... நான் ஒரு குடிகாரி, வி.......ரின்னு' அவள் விழிகளால் சவால் விட... அவனுக்குத் தான் தர்மசங்கடமாகப் போய்விட்டது.

"அக்கா குட் கேர்ளா அண்ணய்யா?" அம்ரிதா அவனிடம் கேட்க...

"அவங்க உன் அக்கா இல்லை அம்ரு. அவங்க உன்னோட சின்னம்மா. அக்கான்னு சொல்ல கூடாது." அதைக் கூறி சின்னவளின் மனதினை திசை திருப்பி விட்டான். ஏனோ அவளை 'அண்ணி' என்றழைக்கச் சொல்லி தனது தங்கையிடம் கூற அவனால் முடியவில்லை.

"கிரேட் எஸ்கேப்..." சிரித்தபடி கூறிய அபிஷரிகாவை கண்டு முறைத்தவன் அம்ரிதாவை தூக்கியபடி தனது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவனுடன் கங்காவும் இணைந்து நடந்தாள்.

"அண்ணய்யா, சின்னம்மா நல்லவங்களா தானே இருக்காங்க... நீங்க ஏன் அம்ரு கிட்ட அப்படிச் சொன்னீங்க?"

"அவங்க எல்லாம் பணக்காரங்க கங்கா. நம்ம கூட எல்லாம் சரிக்குச் சமமா பழக யோசிப்பாங்க. இது எல்லாம் அம்ருவுக்குத் தெரியாது இல்லையா? அதான் அப்படிச் சொன்னேன். உங்க கிட்ட பழகிற மாதிரி அம்ரு அவங்க கிட்ட பழகி... அதை அவங்க ஏத்ததுக்காம அவளை ஏதாவது பேசிவிட்டால்? அம்ருவால் அதைத் தாங்கிக்க முடியாது

இல்லையா. அதனால் தான் அம்ரு கிட்ட அப்படிச் சொல்லி வச்சேன்." என்று அவன் விளக்கம் கூறினான்.

"அண்ணய்யா..." என்று அவனது முகத்தைத் தன்புறம் திருப்பிய அம்ரிதா, "நான் சின்னம்மா கூடப் பேச மாட்டேன். நீங்க பயப்படாதீங்க." என்று கூறி அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்.

"எங்க அம்ரு குட்டி குட் கேர்ள்." என்றவன் தானும் தங்கையின் கன்னத்தில் முத்தமிட்டான்.

கோவிலில் இருந்து வந்த காவேரி திண்ணையில் அமர்ந்திருந்த பேத்தியிடம், "என்னடா, தலைக்குக் குளிச்சியா?" என்று கேட்க...

"ஆமாம் பாட்டி..." என்று அவள் கூற...

"கொஞ்சம் இரு... வேணியைக் கூப்பிடறேன். அவள் உனக்குத் தலைப்பின்னி பூ வச்சி விடுவாள்." என்றவர் வேணியை அழைத்துப் பேத்திக்கு தலைப்பின்ன சொன்னார்.

வேணி அவளது முடியை தளர அழகாய் பின்னியவர் அதில் ஜாதிமல்லி சரத்தை சூடிவிட்டார். முழுநீள கருப்பு பாவாடையும், இளம் மஞ்சள் நிற சட்டையும் அணிந்து, பூச்சூடி அழகாய் இருந்த பேத்தியை கண்ட காவேரியின் மனம் நிறைந்து போனது.

"அழகா இருக்கக் கண்ணு." என்றவரது விழிகள் கலங்கியது.

"ஆமாங்கம்மா, சின்னம்மா அவங்கம்மா மாதிரி ரொம்ப அழகாயிருக்காங்க." என்ற வேணியின் விழிகளிலும் விழிநீர் கசிந்தது. வேணியின் வார்த்தையில் காவேரியின் முகம் இருண்டு போனது. அதைக் கேட்டபடி அங்கிருந்த கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்த பொன்னம்பலம் தனக்குள் இறுகி போய் அமர்ந்திருந்தார்.

'நான் டாட்டைப் போல் இருக்கிறேன்னு தானே எல்லோரும் சொல்வாங்க. இதென்ன இவங்க இப்படிச் சொல்றாங்க?' என்று நினைத்த அபிஷரிகாவுக்கு என்ன யோசித்தும் அவளது அன்னை தனுஜாவின் சாயல் தன்னிடம் இருப்பதாய் தெரியவில்லை.

அதே நேரம் சென்னையில் தீபன் கோபத்தோடு தனது ஆட்களைப் பார்த்தான். அவனது சொர்க்கத்தைக் கை நழுவ விட்ட ஆத்திரம் அவனுள் கனன்றது. அபிஷரிகா அவனுடைய செல்ல 'பேபி டார்லிங்'... அவளைக் காணாது அவன் அவனாக இல்லை.

"அபி எப்படிக் காணாமல் போனாள்?" அவன் தன் முன்னிருந்தவனின் கன்னத்தில் ஓங்கி அடித்தான்.

"அண்ணாத்த, ராவும் பகலும் அண்ணி வீட்டை கண்காணிச்சிட்டு தான் இருந்தோம். எப்படிக் காணாமல் போனாங்கன்னு எங்களுக்குத் தெரியலை." அந்த அடியாள் பயத்துடன் கூற...

"ஆமா அண்ணாத்த, அண்ணியோட அப்பா, அம்மா இறந்தப்போ அவங்களோட தாத்தா, பாட்டி வந்திருந்தாங்க. ஒருவேளை அவங்க கூடப் போயிருப்பாங்களோ?"

"இன்னுமாடா அவங்க அட்ரசை உன்னால் கண்டுபிடிக்க முடியலை. முழுசா பத்தொன்பது நாள் ஓடி போயிருச்சுடா. என் டார்லிங் எப்படி இருக்காளோ? என்ன செய்றாளோ? தெரியலையே." தீபன் தலையைப் பிய்த்துக் கொண்டான். இப்போது அவனைப் பார்க்க அச்சு அசல் பைத்தியக்காரன் போலிருந்தான்.

"ம்ஹூம், இல்லை அண்ணாத்த... அவங்க அட்ரசை கண்டுபிடிக்க முடியலை. கூகுள் ஆண்டவர் கிட்ட கூடக் கேட்டு பார்த்துட்டோம். அண்ணி, அவங்க அப்பா, அம்மா பத்தின டீடெயில்சில் எல்லாம் இருக்கு. ஆனா தாத்தா, பாட்டி பத்தின தகவல் எதுவும் அதில் இல்லை." அடியாள் கூறியதை கேட்டு தீபன் யோசனையில் ஆழ்ந்தான்.

தீபன் திரைப்படங்களுக்குப் பணத்தை முதலீடு செய்யும் 'பைனான்சியர்', அதாவது தயாரிப்பாளர்.... முதலில் சாதாரணக் கந்து வட்டிக்காரனாக வாழ்க்கையை ஆரம்பித்தவன் திடீரென்று ஆசை வந்து ஒரு திரைப்படத்தைத் தயாரித்தான். அவனது நல்ல நேரம் அந்தத் திரைப்படம் சூப்பர், டூப்பர் ஹிட் அடித்தது. அதன் பிறகு அவன் நிறையத் திரைப்படங்களைத் தயாரித்தான். அத்தோடு மட்டுமல்லாது இப்போது அவன் பல நடிகர்கள், தயாரிப்பாளர்களுக்குப் பணத்தைக் கடன் கொடுத்திருக்கின்றான். அதனால் அவன் திரைத்துறையில் மிகவும் முக்கியமானவன். தயாரிப்பாளர் சங்கத்தில் அவன் உறுப்பினர் மட்டுமே. அங்கு நடக்கும் தேர்தலில் அவன் நிற்க மாட்டான். ஆனால் அவன் கை காட்டும் ஆள் தான் அதில் வெற்றிப் பெறுவான். அந்தளவிற்கு அவன் எல்லோரையும் ஆட்டிப்படைத்தான். அப்படிப்பட்ட அவனையும் ஆட்டிப்படைத்தாள் அபிஷரிகா...

இப்போது பணம் அதிகரித்ததும் தீபன் தொழிலில் முதலீடு செய்து பெரிய தொழிலதிபராக அவதாரம் எடுத்து இருக்கின்றான். அவன் தொழில் விசயமாக வெளிநாடு சென்றிருந்த நேரத்தில் தான் அபிஷரிகாவின் பெற்றோர் இறந்தது. அவனால் உடனே அங்கிருந்து கிளம்பி வர முடியவில்லை. அதனால் அவனது ஆட்களிடம் சொல்லி அவளைக் கண்காணிக்கச் சொல்லியிருந்தான். அப்படி இருந்தும் அவர்கள் தனது பொக்கிசத்தைக் கோட்டை விட்டது கண்டு அவன் ஆத்திரத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தான்.

"டார்லிங், சீக்கிரம் என் கிட்ட வந்துவிடு. மாமன் உனக்காகக் காத்துக்கிட்டு இருக்கேன். மாமன் நான் உன்னைக் கண்டுபிடிச்ச பிறகு அடுத்த முகூர்த்தத்தில் நமக்குக் கல்யாணம் தான்." என்றவன் கற்பனையில் அபிஷரிகாவுடனான தனது திருமணத்தை நினைத்து பார்த்துச் சந்தோசப்பட்டுக் கொண்டான்.

*********************

அன்றிரவு நிலா சோறு சாப்பிடுவதற்காக எல்லோரும் மொட்டை மாடியில் கூடியிருந்தனர். தரையில் பெரிய ஜமுக்காளத்தை விரித்து எல்லோரும் அமர்ந்திருந்தனர். அபிஷரிகா மட்டும் மொட்டை மாடி கைப்பிடி சுவற்றில் அமர்ந்து கொண்டு வானில் தெரிந்த பௌர்ணமி நிலவை ரசித்துக் கொண்டிருந்தாள். நிலா பால் மழை போல் ஒளியை வாரியிறைத்துக் கொண்டிருந்தது. அவளுக்கு இந்தச் சூழ்நிலை மிகவும் வித்தியாசமாக இருந்தது. அதனால் அவள் இதை அனுபவித்து ரசித்திருந்தாள்.

சிவகுமரன் எல்லோரின் கைகளிலும் மருதாணி வைத்துக் கொண்டிருந்தான். அம்ரிதாவில் இருந்து பொன்னம்பலம், காவேரி என்று அனைவருக்கும் மருதாணி வைத்து விட்டவன் தனது அன்னையிடம்,

"அம்மா, உங்க கையைக் காட்டுங்க." என்று கூற...

"எனக்கு வேண்டாம் குமரா... பாத்திரத்தை எல்லாம் கீழே கொண்டு போய் வைக்கணும்." என்று கூறி அவர் மறுக்க...

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீங்க உங்க கையைக் காட்டுங்க." என்றவன் அவரது இடதுகையில் மருதாணி வைத்து விட ஆரம்பித்தான். அவனது செய்கையை அபிஷரிகாவின் விழிகள் தொடர்ந்தது.

"அபி, நீயும் மருதாணி வச்சுக்கோ... வெயில் சூட்டுக்கு ரொம்ப நல்லது. உடம்பு குளிர்ச்சியா இருக்கும்." என்று காவேரி அவரை அழைத்தார்.

"வேண்டாம் பாட்டி..." அவனிடம் மருதாணி வைப்பதை விரும்பாதவளாய் அவள் மறுத்தாள்... அவளைத் திரும்பி பார்த்தவன் பின்பு தோளை குலுக்கிவிட்டு தனது வேலையைத் தொடர்ந்தான்.

எல்லோர் கைகளிலும் மருதாணி இருக்க... இறுதியில் சிவகுமரன் தான் எல்லோருக்கும் உணவை ஊட்டி விட வேண்டியதாய் போயிற்று. எல்லோருக்கும் உணவை கொடுத்துக் கொண்டு வந்தவன் அபிஷரிகாவை கண்டதும்

கேள்வியாய் அவளைப் பார்த்தான். அவளோ அவனிடம் தான் கையேந்துவதா? என்று தனது இருகைகளையும் இறுக கட்டி கொண்டு அசையாது அமர்ந்திருந்தாள்.

"இப்போ நீ கை நீட்டலை. அப்புறம் நீ பட்டினி தான் கிடக்கணும்." அவன் மெல்லிய குரலில் அவளை எச்சரிக்க...

"ஒண்ணும் வேண்டாம் போடா." என்றவள் கையை மட்டும் நீட்டவில்லை.

"ஐயா, உங்க பேத்திக்கு சோறு வேண்டாமாம். இப்ப என்னங்கய்யா பண்றது?" அவன் பொன்னம்பலத்திடம் புகார் வாசித்தான்.

"அபி, இது என்ன பிடிவாதம்?" அவர் அவளை அதட்ட... வேறுவழியின்றி அவள் அவனை முறைத்துக் கொண்டே தனது வலக்கையை அவன் புறம் நீட்டினாள். அவன் சிரித்தபடி உணவை அள்ளி எடுத்து அவளது கையில் வைத்தான்.

சந்தோசமாய், அரட்டையுடன் உற்சாகமாய்க் கழிந்தது அந்த இரவு பொழுது. அபிஷரிகா மட்டும் எதிலும் ஒட்டாது அமைதியாக அமர்ந்திருந்தாள். அப்போது அம்ரிதா தூங்கி வழிவதை கண்டு வேணி கிளம்ப ஆயத்தமாக...

"அம்மா, நீங்க அம்ருவை கூட்டிட்டு போங்க... நான் எல்லாத்தையும் எடுத்து வச்சிட்டு வர்றேன்." என்றவன் அன்னை, தங்கைகளை வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டு பிறகு பெரியவர்களைக் கீழே அழைத்துக் கொண்டு வந்தான். அவர்கள் உறங்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொடுத்துவிட்டு மேலே வந்தவன் அங்குத் தனியாக அமர்ந்திருந்த அபிஷரிகாவை கண்டு கொள்ளாது எல்லாப் பாத்திரங்களையும் எடுத்துக் கொண்டு கீழே சென்றான். அவளும் இவனைக் கண்டும் காணாதது போல் அமர்ந்திருந்தாள்.

எல்லாவற்றையும் கொண்டு வந்து வைத்த சிவகுமரன் அப்போது தான் மருதாணி கிண்ணத்தைத் தான் எடுத்து

வராததை உணர்ந்தான். அவன் மீண்டும் மொட்டை மாடி வந்த போது அங்கு அபிஷரிகா தரையில் கால் நீட்டி அமர்ந்து மருதாணி கிண்ணத்தைத் தனது கையில் வைத்து பார்த்து கொண்டிருந்தாள்.

"சொன்ன நேரமே வச்சியிருக்கலாமே. வீம்பு, வறட்டு கௌரவம்..." அவனது கேலி குரலில் அவள் திடுக்கிட்டவளாய் நிமிர்ந்து பார்த்தாள்.

"கொடு... நானே வச்சு விடறேன்." என்றவன் அவள் அருகில் சம்மணமிட்டு அமர்ந்தான். அவளுக்குமே அவனிடம் பேச வேண்டியிருந்தது. அதனால் அவள் அமைதியாக இருந்தாள்.

சிவகுமரன் மெல்ல அவளது கைப்பிடித்து அவளது உள்ளங்கையில் மென்மையாக மருதாணி வைத்துவிட... சில்லென்ற மருதாணி அவளுள் சில்லென்ற உணர்வினை தோற்றுவித்ததா? இல்லை அவனது தொடுகை அந்த உணர்வினை தோற்றுவித்ததா? என்று பிரித்தறிய முடியாதபடி ஏதோ ஒரு மாய உலகில் அவள் மிதந்து கொண்டிருந்தாள்.

"அவ்வளவு தான் முடிஞ்சது." என்றவன் எழ போக...

"நான உன் கிட்ட கொஞ்சம் பேசணும்." என்றாள் அவள் தீவிரமான குரலில்... அவன் யோசனையுடன் அப்படியே அமர்ந்தான்.

"சொல்லு..."

"கங்கா கல்யாணத்துக்குப் பணத்துக்கு அலையற போல..."

'அது எதுக்கு உனக்கு?' என்று சுள்ளென்று கேட்க துடித்த நாவை அடக்கி கொண்டவன்,

"ஆமாம்..." என்றான்... ஏனெனில் அவள் அவனில் சரிபாதியாகப் போகின்றாளே. அதனால் அவன் எதையும் அவளிடத்தில் இருந்து மறைக்க நினைக்கவில்லை.

"கங்கா கல்யாணத்துக்கு வேண்டிய பணத்தை நான் உனக்குத் தர்றேன். நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கணும்." என்றவளை கண்டு முதலில் திகைத்தவன் பின்பு சுவாரசியம் பொங்க அவளைப் பார்த்தான். அவளது தாத்தா திருமணத்திற்குச் சம்மதித்த விசயம் அவளுக்குத் தெரியாது அல்லவா. அதனால் அவன் அவளிடம் சிறிது விளையாடி பார்க்க ஆசைப்பட்டான்.

"அதுக்கு நான் சந்நியாசம் போயிரலாம்." என்று அவன் வேண்டுமென்றே கேலி பேச...

"அப்போ உன் தங்கை கல்யாணம்..." என்று மிதப்பாய் பார்த்தவளை கண்டு அவன் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டான்.

'அதை எங்கய்யா பார்த்துக்குவாரு.' என்று நினைத்தவன் அதை அவளிடம் சொல்லவில்லை.

"சரி, இப்போ நான் என்ன செய்யணும் சொல்லு?" என்றான் நல்ல பிள்ளையாக...

"அப்படி வா வழிக்கு... நீ கேட்ட பணத்தை நான் உனக்குக் கொடுக்கிறேன். நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதிக்கணும்."

"ம், ஓகே..." என்று அவன் உடனே தலையாட்ட... அவள் அவனைச் சந்தேகமாகப் பார்த்தாள்.

"உண்மையா தான் சொல்லுறியா?"

"சத்தியமா..."

"உன்னை நம்ப முடியாது." என்றவள் தலை மீது அவன் தனது வலக்கையை வைக்கப் போக,

“ச்சீ, மருதாணி...” என்று அவள் முகத்தைச் சுளித்தாள்.

“நச்சுரல் கலரிங்...” என்று சிரித்தவன் வேண்டுமென்றே தனது கையை அவளது தலையில் அழுத்தி வைத்து,

"எங்கய்யா மேல சத்தியமா..." என்று தீவிரமான குரலில் கூற... தாத்தாவுக்கும், அவனுக்கும் இருக்கும் பிணைப்பை நன்கு அறிந்தவளாய் அவள் சந்தோசம் அடைந்தாள்.

"குட்... ஆனா இந்தக் கல்யாணம் சும்மா பெயருக்கு தான். கல்யாணம் முடிஞ்சதும் நீ இந்தச் சொத்துகளை எல்லாம் என் பெயருக்கு எழுதி கொடுத்துடணும்." என்றவளை அவன் கண்ணிமைக்காது பார்த்தான்.

'இப்படி ஒரு சொதப்பலா பிளானை என் வாழ்நாளில் நான் பார்த்தது இல்லை. உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டால் உன் சொத்து முழுவதும் எனக்குத் தான். அப்புறம் நான் எதுக்குக் கங்கா கல்யாணத்துக்கு உன் கிட்ட கடன் வாங்கணும். சுத்த முட்டாள்த்தனமா இருக்கு. அது சரி உனக்குப் படிப்பு வந்திருந்தால் நீ ஏன் இப்படிச் சொதப்பலா பிளான் போட போற? மங்குனி இளவரசியே, எங்கய்யாவுக்காக உன்னை மாதிரியான மக்கு மண்ணாந்தையை எல்லாம் சகிச்சுக்கிறேன்.' அவன் மனதிற்குள் அத்தனை நக்கலாய் அவளைக் கலாய்த்தான்.

"அப்புறம் கல்யாணமாகிருச்சுன்னு நீ என் கிட்ட ஓவர் அட்வான்டேஜ் எடுத்துக்கக் கூடாது." அவள் மொட்டையாகக் கூற...

"என்ன சொல்ல வர்ற? புரியலை..."

"அதாவது பொண்டாட்டிங்கிற உரிமையை..."

"உன் கிட்ட... பொண்டாட்டிங்கிற உரிமை... அதுவும் நான்..." என்று நிறுத்தி நிறுத்தி நக்கலாய் கூறியவன்,

"ம்ஹூம், நீயே என்னைத் தேடி வந்தாலும் நீ எனக்கு வேண்டாம்." என்றான் அவன் உறுதியான குரலில்.

"அப்புறம் ஒரு முக்கியமான விசயம்..."

"தலையெழுத்து... இன்னும் என்னென்ன இருக்கோ? முழுசா சொல்லி தொலை." என்றான் அவன் எரிச்சலுடன்...

"நீ என் கிட்ட வாங்கின கடனுக்கு என் கிட்ட வேலை பார்த்து அதை அடைக்கணும். சும்மா புருசன்னு காரணம் சொல்லிட்டு ஓசியில் சாப்பிட்டுட்டு ஊரை சுத்த கூடாது." அதைக் கேட்டு அவனுக்கு ஆத்திரம் வந்த போதும் தனது ஐயாவிற்காகத் தனது கோபத்தை அடக்கி கொண்டவன்,

"இன்னும் வேற ஏதாவது இருக்கா?" என்று முயன்று வரவழைத்துக் கொண்ட அமைதியான குரலில் கேட்டான்.

"இப்போதைக்கு இவ்வளவு தான்." என்றாள் அவள்.

"நீ இத்தனை கன்டிசன் போட்ட மாதிரி எனக்கும் ஒரு கன்டிசன் இருக்கு."

"என்ன?" என்று கேட்டாள் அவள் அலட்டலாக...

"இனிமேல் ஏதாவது சாக்கு வச்சிட்டு நீ குடிச்சிட்டு வந்த..." என்று நிறுத்தியவனைக் கண்டு,

"வந்தால்...? என்ன பண்ணுவ மேன்?" அவள் அலட்சியமாய்க் கேட்க...

"குடிக்கிற இந்த வாயை..." என்றவன் அடுத்த நொடி அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான். அவள் அதிர்ச்சியில் திமிற கூடத் தோணாது அவனை விழி விரிய பார்த்தாள்.

மருதாணி அப்பியிருந்த அவனது கைகள் அவளது சட்டையின் பின்புற இறக்கத்தில், அவளது வெற்று முதுகில் கோலம் போட்டது. அவர்களது அச்சாரத்திற்கு அடையாளமாய் அவனது கைவிரல்களின் மருதாணி தனது தடத்தினை அவளது முதுகில் அழுத்தமாய்ப் பதித்தது.

சிவகுமரன் தனது கோபத்தினைக் காட்ட எண்ணித்தான் இப்படிச் செய்தது. ஆரம்பித்த நோக்கம் என்னவோ கோபம் தான் என்றாலும் அது செல்லும் பாதை மயக்கமாக மாறிப் போனது தான் விந்தையிலும் விந்தை. அவன் மாலையில் கிணற்றுக்குள் தவற விட்ட சந்தர்ப்பத்தை இப்போது பூர்த்திச் செய்து கொண்டிருந்தான்.

சில நொடிகளில் அவளை விட்டு நிமிர்ந்தவன், "இனி நீ குடித்து விட்டு வந்தால் இது தான் தண்டனை..." என்று ஒற்றை விரல் நீட்டி அவளை எச்சரித்து விட்டு எழுந்தவன் அடுத்த நொடி விருட்டென்று அங்கிருந்து சென்றுவிட்டான்.

அவன் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தவள், "அப்போ தினமும் குடித்துவிட்டு வர வேண்டியது தான்." என்று தனக்குள் முணுமுணுத்து கொண்டாள். அவளது இதழ்களில் விசம புன்னகை தவழ்ந்தது.

தொடரும்...!!!

அத்தியாயம் : 5

சுற்றிலும் பச்சை பசேலென்று தெரிந்த வயல்வெளியை பார்த்தபடி நடந்து வந்து கொண்டிருந்தாள் அபிஷரிகா. அவளது விழிகள் சிவகுமரனை நாற்புறமும் தேடி அலைந்தது. கடந்த சில நாட்களாகத் தன் கண்முன் வராது கண்ணாமூச்சி ஆடியவனைக் கண்டு அவளுக்குக் கோபம் வந்தது. இன்று அவனை எப்படியாவது பார்த்து பேசிவிட வேண்டும் என்று தான் அவள் இங்கு வந்தது. அவனது அன்னை வேணி தான் அவன் இருக்கும் இடத்தை அவளிடம் சொன்னது. ஆனால் அவன் அவளது கண்களுக்கு மட்டும் அகப்படவில்லை. அப்போது அங்கு வந்து கொண்டிருந்த இளம்பெண்ணைத் தடுத்து நிறுத்தியவள்,

"சிவகுமரன்... ம், குமரன் எங்கே இருக்கான்னு தெரியுமா?" என்று கேட்க...

"நீங்க படத்துல நடிக்கிறவங்க தானே?" அந்தப் பெண் இவளை ஆச்சரியமாகப் பார்த்தாள். அந்தப் பெண் மிட்டாய் கடையைப் பார்ப்பது போல் தன்னை வெறித்துப் பார்த்தது கண்டு இவளுள் கர்வம் முளைவிட்டது.

"குமரன் எங்கே?" என்று அவள் அலட்சியமாகக் கேட்க...

"பாவாவையா கேட்கிறீங்க?" அந்தப் பெண்ணின் விழிகளில் நாணம் எட்டிப்பார்த்தது.

'பாவா' என்கிற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாதவள் அல்ல அபிஷரிகா... தென்னிந்திய மொழி நான்கிலும் அவள் நடிப்பதால் அவளுக்கு அத்தனை மொழிகளும் அத்துப்படி. அந்தப் பெண் சிவகுமரனை 'பாவா' என்று விளித்தது கண்டு அவளது மனம் துணுக்குற்றது. பின்பு அலட்சியமாகத் தோளை குலுக்கி கொண்டவள்,

"ம்..." என்றாள்...

"வாங்க, நான் கூட்டிட்டு போறேன்." என்று கூறிய அந்தப் பெண் சிவகுமரன் இருக்கும் இடத்திற்கு இவளை

அழைத்துச் சென்றாள்.

அங்கு வயலின் இரு வரப்புகளின் நடுவே இருந்த வாய்க்காலில் மம்பட்டி கொண்டு கொத்திவிட்டுக் கொண்டிருந்த சிவகுமரனை கண்டு, "பாவா..." என்று அந்தப் பெண் உரிமையோடு அழைக்க... அபிஷரிகா உணர்வற்ற முகத்துடன் நின்றிருந்தாள்.

"என்ன பத்மா, பாவா பக்கம் காற்று வீசுது?" அவன் நிமிர்ந்து பாராது அந்தப் பெண்ணைக் கேலி செய்தபடி தனது வேலையைத் தொடர்ந்தான்.

"பாவா இருக்கும் பக்கம் தான் இந்தப் பத்மா இருப்பாள்ன்னு உங்களுக்குத் தெரியாதா?" பத்மா நாணிக்கோணினாள்.

"உன் பாவாவுக்கும் அதே தான்... எப்பவும் உன் நினைப்பு தான்."

"நா பங்காரம் பாவா..." என்று அவனைச் சிலாகித்த பத்மா பின்பு ஞாபகம் வந்தவளாய்,

"பாவா, உங்களைத் தேடி ஐயாவோட பேத்தி வந்திருக்காங்க?" என்று கூற... அதைக் கேட்டு அவன் திகைப்புடன் நிமிர்ந்தான். தனது இரு கைகளையும் கட்டியபடி அவனது திகைப்பை உறுத்து பார்த்திருந்தாள் அபிஷரிகா.

"சின்னம்மா, நீங்க எங்கே?" என்றவன் அவசரமாகத் தலையில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்துத் தோளில் போட்டவன் மம்பட்டியை ஓரமாய் வைத்துவிட்டு, வாய்க்கால் நீரில் கைகளைக் கழுவிவிட்டு அவளை நோக்கி வந்தான்.

"பாவா, எப்படி வியர்த்து வழியுது பாருங்க." என்ற பத்மா உரிமையோடு தனது தாவணி முந்தானையைக் கொண்டு அவனது நெற்றி வியர்வையைத் துடைக்கப் போனாள்.

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ முதல்ல வீட்டுக்கு கிளம்பு." என்று அவன் அவளை விரட்டினான்.

இதை எல்லாம் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த அபிஷரிகா இருவரையும் பார்த்து, "ஒண்ணும் அவசரமில்லை. நீங்க உங்க கொஞ்சலை முடிச்சிட்டு வாங்க..." என்றுவிட்டு தள்ளி நின்றிருந்த வேப்பமரத்தை நோக்கி சென்றாள்.

"உங்க சின்னம்மாவே சொல்லிட்டாங்க..." என்று குதூகலித்த பத்மாவை கண்டு,

"ப்ச், நீ வேற... முதல்ல வீட்டுக்கு கிளம்பு." என்று அவள் அனுப்பி வைத்துவிட்டு அவன் அபிஷரிகாவை நோக்கி வந்தான்.

"கொஞ்சல் எல்லாம் முடிஞ்சதா?" என்று அபிஷரிகா அவனிடம் கேலியாகக் கேட்க...

"இன்னும் கொஞ்சம் மீதிமிருக்கு... பிறகு பார்த்துக்கலாம்ன்னு அனுப்பி வச்சிட்டேன்." என்றவனது விழிகளில் விசமம் வழிந்தது. அதற்கு அவனைப் பார்த்து முறைத்தவள்,

"இவ்வளவு நாளா எங்கேடா போய்த் தொலைஞ்ச?" என்று கோபத்துடன் கேட்டாள்.

அன்று அவளது பேச்சில் விளைந்த கோபத்தினை அடக்கத் தெரியாது அவளுக்கு முத்தம் கொடுத்துவிட்டு இவன் தான் மந்திரித்து விட்டது போல் அலைந்து கொண்டிருந்தான். 'மயக்கும் மோகினி பிசாசு... சரக்கு அடிச்சு, அடிச்சு மொத்த போதையையும் அவளுக்குள் தான் ஊற்றி வச்சியிருக்கிறாள்.' என்று நினைத்தவன் அடுத்து வந்த நாட்களில் அவளை முற்றிலும் தவிர்த்து வந்தான். அவனுக்கு அவன் மீதே பயம் வந்துவிட்டது. ருசி கண்ட பூனை போல் தான் மீண்டும் அவளைத் தேடி போய்விடக் கூடாது என்பதில் அவன் மிகுந்த கவனமாக இருந்தான்.

இதோ இப்போதும் கோபத்தில் முகம் சிவக்க நின்றிருந்தவளின் இதழ்களும் அதே சிவப்பில் மினுமினுத்து, அவனை வாவாவென்று அழைத்தது. அவன்

தலையைக் குலுக்கி தன்னைச் சமன்படுத்திக் கொண்டவன் பின்பு விசம சிரிப்புடன் அவளைப் பார்த்து,

"எதுக்கு என்னைத் தேடின? அன்னைக்குக் கொடுத்தது பத்தலையா? திரும்ப வேணுமா? நான் ரெடி..." என்றவன் அவள் அருகே நெருங்கி வந்தான்.

தன்னுடன் நடிக்கும் நடிகர்களிடம் இருந்து வியர்வை நாற்றம் வந்தால் அவளுக்கு வாந்தி வருவது போலிருக்கும். ஆனால் இவனிடம் இருந்து வரும் வியர்வை நாற்றம் கூட அவளுக்குச் சுகந்தமான நறுமணமாக இருந்தது போலும். அவள் ஆழ்ந்த மூச்சுடன் அசையாது நின்றிருந்தாள்.

'மரக்கட்டை, மரக்கட்டை... எப்படி நிற்கிறாள் பாரு? ஒண்ணு கோபப்படணும். இல்லை வெட்கப்படணும். ம்ஹூம், வெட்கமா? இவளா? உனக்கு இந்த ஜென்மத்தில் அந்தக் கொடுப்பினை இல்லை குமரா.' என்று மனதிற்குள் முணுமுணுத்தவன் மிகவும் நொந்து போய்விட்டான்.

"ஆமா, நீ பெரிய மன்மதன் பாரு... உன்னோட முத்தத்துக்கு இங்கே யாரும் ஏங்கி கிடக்கலை." என்று சிடுசிடுத்தவளை கொண்டு அவனது முகத்தில் புன்னகை தோன்றியது.

"சிரிக்காதேடா..." என்று அவள் அதற்கும் சிடுசிடுத்தாள்.

"சரி, சிரிக்கலை... நீ வந்த விசயத்தைச் சொல்லு." அவன் கூற...

"உன் தங்கச்சி கல்யாணத்துக்கு எவ்வளவு பணம் வேணும்ன்னு சொல்லு?" என்றவளை பார்த்தவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை.

நேற்று கூட அவன் தனக்குத் தெரிந்தவர்கள் சிலரிடம் கடன் கேட்டு இருந்தான். இந்த விசயம் பொன்னம்பலம் காதிற்குச் செல்லாதவாறு அவன் பார்த்துக் கொண்டான். அவன் கேட்டால் அவர் கொடுப்பார் தான். ஆனால் அதில் அவனுக்கு உடன்பாடு இல்லை. அவரைத் தொந்தரவு பண்ண அவன் விரும்பவில்லை. அவன் கடன் கேட்டவர்கள்

எல்லோரும் 'யோசித்துச் சொல்கிறோம்' என்று ஒரே மாதிரியான பதிலை கூறியிருக்க... இவள் மட்டும் பணத்தை அள்ளி கொடுப்பதை நினைத்து அவனது மனம் நெகிழ்ந்து போனது. அவளது இந்தச் செயலுக்குப் பின் ஆயிரம் காரணங்கள் இருந்தாலும் அதை அவன் கண்டு கொள்ளவில்லை. இந்தக் கணம் அவளது உதவி அவனுக்கு நிரம்பப் பிடித்திருந்தது.

அவனின் அமைதியை புரியாது பார்த்தவள் தனது கைப்பையில் இருந்து காசோலையை எடுத்து அதில் பத்து லட்சம் என்று எழுதி கையெழுத்து போட்டவள் அதை அவனிடம் நீட்டினாள்.

"இதில் பத்து லட்சம் இருக்கு. இதில் கல்யாண வேலையைப் பார். எல்லாம் கடன் தான்... நீ என்னிடம் வேலை செஞ்சு இதை அடைக்கணும்." என்று கறார் குரலில் கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"சரி, அப்புறம்..." என்றவன் அவளிடம் இருந்து காசோலையை வாங்கிக் கொண்டான்.

"அப்புறம்... இன்னும் இரண்டு நாளில் டாட், மாம்க்கு பூஜை இருக்கு. அது முடிஞ்சதும் வர்ற முகூர்த்தத்தில் நம்ம கல்யாணத்தை வைக்கச் சொல்லு. அதுவும் சிம்பிளா... நமக்குள் மட்டும்... ஊரை கூட்டுற வேலை எல்லாம் வேண்டாம்." என்றவளை அவன் சிறு அதிர்வுடன் பார்க்க...

"என்ன... கல்யாணம்ன்னு சொன்னதும் பயம் வருதோ?" என்று அவள் எள்ளலுடன் கேட்க...

"நான் எதுக்குப் பயப்படணும்?" அவன் நிமிர்வாகப் பதில் கூற...

"கற்பு பறி போயிருமோன்னு தான்...?" அவளது குரலில் மட்டுமல்ல விழிகளிலும் அத்தனை குறும்பு வழிந்தது.

"அது என்னமோ உண்மை தான்..." அவள் தனது முத்தத்தை ஆழ்ந்து அனுபவித்ததை எண்ணியவனாய் அவன் அவளை

மேலும் கீழுமாய் அளவிடுவது போல் பார்த்தபடி நக்கலாய்க் கூறினான்.

"உன்னை...?" என்று கோபத்தோடு கத்தியவளை கண்டு அவன்,

"நீ தான் ஆரம்பிச்ச... நானில்லை..." என்க... அவனைக் கோபத்துடன் பார்த்தபடி புசுபுசுவென்று மூச்சு வாங்க நின்றவள்,

"கல்யாணம் முடிஞ்சதும் அடுத்தச் செகண்ட் நாம சென்னைக்குக் கிளம்பியாகணும்." என்றவள் அவன் முகத்தைப் பார்க்க... அவனோ பதில் பேசாது 'மேலே சொல்' என்பது போல் நின்றிருந்தான்.

"சென்னைக்குப் போனதும் முதலில் உன் பெயரில் இருக்கும் சொத்துகளை என் பெயருக்கு மாற்றித் தரணும்." அதற்கும் அவன் வாய் திறக்கவில்லை.

"அப்புறம் விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து போடணும்." அவன் பேசாது கைகளைக் கட்டி கொண்டு அவளையே பார்த்திருந்தான்.

"எல்லாம் முடிஞ்சதும் நீ உடனே இங்கே கிளம்பி வந்துடாதே." என்றவளை அவன் கேள்வியாய் பார்த்தான்.

"நீ வாங்கிய கடன் பத்து லட்சம் பணத்தை என் கிட்ட வேலை பார்த்து நீ எனக்கு அடைக்கணும். அதுவும் காவல் வேலை பார்த்து..." என்றவளை கண்டு அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

"மொத்தத்தில் உனக்குக் கணவன் வேண்டாம். காவலன் வேண்டும்... அப்படித்தானே..."

"காவலன் இல்லை... அடிமை வேண்டும்." என்றாள் அவள் அலட்சியமாக...

"ம், நல்ல முடிவு..." என்றவன் மனதில் 'நான் சம்மதித்தால் தானே இதெல்லாம் நடப்பதற்கு.' என்று சொல்லி கொண்டான்.

"நீ உன் மனதில் உள்ளதை சொல்லிட்ட... நான் என் மனதில் இருப்பதைச் சொல்லலாம் இல்லையா?" என்றவனைக் கண்டு அவள் பயத்தில் பின்னால் நகர்ந்தாள். அன்று போல் அவன் முத்தம் கொடுத்து விட்டால்...???

அவளது பயத்தைக் கண்டு வாய்விட்டு சிரித்தவன், "அன்னைக்கு நான் ஒண்ணும் உன் மேல் ஆசைப்பட்டு முத்தம் கொடுக்கலை. அதுக்கான உண்மையான காரணத்தைச் சொல்லவா?" என்று கேட்க... அவள் அவனை முறைத்தபடி நின்றாள்.

"உன் அப்பா, அம்மா இறந்தப்போ நீ குடிச்சிட்டு வந்தியே அது உனக்கு ஞாபகம் இருக்கா?" அவள் முகம் மாறாது இமைக்காது அவனைப் பார்த்திருந்தாள்.

"அப்போ உன்னைத் தூக்கிட்டு போய் உன் ரூமில் படுக்க வச்சது நான்... எப்பா, என்னா கனம் கனக்கிற... அதுவும் பொண கனம்..." என்றவனைக் கண்டு,

"ஏய், நான் ஐம்பது கிலோ தான் இருப்பேன். சும்மா பொய் சொல்லாதே." என்று அவள் சிடுசிடுத்தாள்.

"எனக்குப் பொண கனம் தான். நீ தினமும் குடிச்சிட்டு வந்து... என்னால் உன்னைத் தினமும் தூக்கிட்டு போக முடியுமா? நீயே சொல்லு? அதான் முத்தம் கொடுத்தேன். இனி நீ குடிக்கணும்ன்னு நினைக்கிறப்போ எல்லாம் என் முத்தம் ஞாபகம் வரும். கூடவே இந்தப் பொண கனமும் ஞாபகம் வரும்ல..." என்று கேலி பேசியவனைக் கண்டு,

"நீ சொல்ல வந்ததை இன்னும் சொல்லலை." அவள் பட்டு கத்தரித்தார் போன்று கூற...

"எனக்கு ஒண்ணே ஒண்ணு தான் சொல்லணும். நம்ம கல்யாணத்தைச் சட்டப்படி ரெஜிஸ்டர் பண்ணணும்."

"அது எதுக்கு? அதெல்லாம் தேவையில்லை..." என்று அவள் பிடிவாதமாக மறுத்தாள்.

"அப்போ உனக்குச் சொத்துகள் வேண்டாமா?"

"வேணும்..." என்று அவசரமாகக் கூறியவளை கண்டு அவனது உதடுகளில் ஏளன புன்னகை தோன்றியது.

"அப்போ நீ இதுக்குச் சம்மதிக்கணும். நான் சட்டப்படி உன் கணவனாக மாறினால் தான் என் பெயரில் இருக்கும் சொத்துகளை உன் பெயருக்கு மாற்றுவதுக்கு ஈசியா இருக்கும்." அவன் கூறியதில் இருந்த லாஜிக் அவளுக்குமே ஏற்புடையதாக இருந்தது. அதனால் அவள் அதற்குச் சம்மதித்தாள்.

"சரி, நீ சொல்றதுக்குச் சம்மதிக்கிறேன்." என்றவள் அவனிடம்,

"நமக்கு விவாகரத்து ஆனதும் நீ வேற கல்யாணம் பண்ணிக்கலாம்... அதை நான் தடுக்க மாட்டேன்." என்று கூற...

"அதான் விவாகரத்து பண்ணியாச்சே. அப்புறம் எங்கிருந்து நீ தடுக்க முடியும். என் வாழ்க்கையைப் பார்த்துக் கொள்ள எனக்குத் தெரியும். நீ கிளம்பு." என்றான் அவன் சுள்ளென்று...

அவள் அமைதியாகக் கிளம்பி சென்றாள். அவன் தனது கையிலிருந்த காசோலையைப் பார்த்துக் கொண்டு நின்றிருந்தான். அவளது பேச்சினால் விளைந்த துன்பத்தை அந்த ஒற்றைக் காசோலை மறக்கடித்து இருந்தது. அவனது மனம் லேசாகியதில் அவனது உதடுகள் புன்னகையைச் சிந்தியது. அவன் காசோலையை எடுத்துக் கொண்டு பொன்னம்பலத்தைக் காண சென்றான். அவர் தென்னந்தோப்பில் நின்று கொண்டு தேங்காய் எண்ணுபவர்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஐயா, இங்கே வாங்க..." என்றவன் அவரைத் தனியே அழைத்துக் கொண்டு சென்றான். அவர் அவனைப் புரியாது பார்த்தார்.

"சின்னம்மா, கங்கா கல்யாணத்துக்குப் பணம் கொடுத்து இருக்காங்க..." என்றவன் பூரிப்புடன் காசோலையை எடுத்து அவரிடம் நீட்டினான்.

"உண்மையாவா சொல்ற?" அவர் சந்தோசம் மிக அவனைப் பார்த்தார்.

"உண்மை தான்ங்கய்யா." என்றவன்,

"அவங்க அழகுக்கு, வசதிக்கு நான் எல்லாம் அவங்க பக்கத்தில் கூட நிற்க அருகதை இல்லாதவன். அவங்க என்னைக் கல்யாணம் பண்றேன்னு சொன்னது உண்மையில் அதிசயம் தான்." அவன் மகிழ்ச்சியுடன் கூற...

"உண்மையில் அதிசயம் தான் குமரா... அவள் குடும்பம் என்கிற கட்டுக்குள் இருப்பாளா என்பது சந்தேகம் தான். இந்தக் கல்யாணம் எந்தளவுக்கு நிலைச்சு இருக்கும்ன்னு எனக்குச் சந்தேகமா இருக்கு. ஒருவேளை சொத்துக்காகக் கல்யாணம் பண்ண நினைக்கிறாளோ?" அவருக்குப் பெருத்த கவலையாக இருந்தது. அவனுக்கு விசயம் தெரிந்தும் அமைதியாக இருந்தான்.

"குமரா, எனக்காக லட்சக்கணக்கில் சம்பளம் கிடைத்த வேலையை வேண்டாம்ன்னு சொல்லிட்டு இந்த மண்ணில் கிடந்து கஷ்டப்படுற. இதில் என் பேத்தியை கல்யாணம் பண்ணி வச்சு உன்னை இன்னும் கஷ்டப்பட வைக்கணுமா?" அவருக்கு அவனை நினைத்து மிகவும் கவலையாக இருந்தது.

அவர் கூறுவது அனைத்தும் உண்மை தான்... அவன் ஐஐடியில் படிக்கும் போது கூகுள் நடத்திய 'ஆன்லைன்' தேர்வில் கலந்து கொண்டான். அந்தத் தேர்வில் வெற்றி பெற்ற அவனுக்கு மாதம் பத்து லட்சம் சம்பளத்தில் கூகுள் நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அந்தளவிற்கு அவன் புத்திசாலி மாணவன். படித்து முடிக்கும் போது தங்க பதக்கத்தோடு தான் வெளியில் வந்தான். ஊருக்கு வந்தவனின் சந்தோசம் அங்கு வந்த போது முற்றிலும் காணாமல் போனது. அவனது தந்தை திடுமென மாரடைப்பு

வந்து காலமடைந்தார். அவனின் தந்தை தான் பொன்னம்பலத்தின் கணக்கு வழக்கை கவனித்து வந்தார். அவரில்லாமல் பொன்னம்பலம் வயதான காலத்தில் தனியே திண்டாடுவதைக் கண்டு வருத்தமுற்று அவன் தந்தையின் பொறுப்பைத் தனது கையில் எடுத்துக் கொண்டான். பொன்னம்பலம் எவ்வளவோ சொல்லி பார்த்துவிட்டார். அவனை வேலைக்குப் போகச் சொல்லி... ஆனால் அவன் போகவில்லை. அவருடன் இந்தக் கிராமத்து மண்ணிலேயே இருந்துவிட்டான். வீட்டில் இருந்தபடி எம்பிஏ, மற்றும் பங்கு சந்தை பற்றிய படிப்புகளைப் படித்து முடித்துவிட்டான். அவனது புத்திக்கூர்மை அனைத்திற்கும் சாதகமாக இருந்தது.

பொன்னம்பலம் மீதிருந்த அதே விஸ்வாசம் இப்போதும் அவனுக்கு இருக்கிறது. அதனால் தான் விழுவது பாழுங்கிணறு என்று தெரிந்திருந்தும் அவருக்காகத் துணிச்சலாக அவரது பேத்தியை திருமணம் செய்ய அவன் முன்வந்துள்ளான். பொன்னம்பலம் சந்தோசத்திற்காக அபிஷாரிகாவை திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும் என்கிற எண்ணம் மட்டுமே அவனது மனம் முழுவதும் வியாபித்து இருந்தது. அவனது திருமணக் கனவுகளோ, அவனது எதிர்பார்ப்பு, அவனது சந்தோசம் இதை எல்லாம் அவன் கருத்தில் கொள்ளவில்லை. மொத்ததில் பொன்னம்பலம், காவேரி இருவரின் துயர் துடைக்கவே அவன் விரும்பினான்.

"உங்க பேத்தியை கல்யாணம் பண்ண கசக்குமா ஐயா? எனக்குப் பரிபூரணச் சம்மதம்." என்று அவன் தனது சம்மதத்தைத் தெரிவித்தான்.

அத்தோடு அபிஷரிகா அவனிடம் கூறிய அனைத்து நிபந்தனைகளையும் தான் கூறுவது போல் அவரிடம் கூறினான். மகன் இறந்த துக்கத்தை விடப் பேத்தியின் பாதுகாப்பு அவருக்கு முக்கியமாகத் தோன்றிய போதும், மகன் இறந்து ஒரு மாதம் கூட ஆகாத நிலையில் ஊரை கூட்டி திருமணம் செய்து வைப்பது என்பது இயலாத

காரியம். அதனால் அவரும் அதற்குச் சரியென்று சம்மதித்தார்.

"குமரா, அபி பற்றி உனக்கு ஒண்ணும் தெரியாது இல்லையா? அவள்..." என்று அவர் பேத்தியை பற்றி ஏதோ சொல்ல வர...

"ஒண்ணும் சொல்ல வேண்டாம் ஐயா. கல்யாணத்துக்குப் பிறகு அவங்களைப் பத்தி மெதுவா தெரிஞ்சிக்கிறேன்." என்று அவன் புன்னகையுடன் மறுத்துவிட்டான்.

அன்றே பொன்னம்பலம் தனது மனைவியுடன் சென்று வேணியிடம் இவர்களது திருமணம் பற்றிப் பேசிவிட்டார். வேணியோ திகைத்து போய் மகனை பார்த்தார். அவனது முகத்தில் இருந்த அமைதி அவரையும் சம்மதிக்க வைத்தது. பொன்னம்பலம், காவேரி சந்தோசமாகக் கிளம்பி சென்றனர். விசயம் அறிந்த அபிஷரிகா மிகவும் சந்தோசமாக இருந்தாள்.

வேணிக்கு தான் மிகுந்த கவலையாக இருந்தது. மகள்கள் நால்வரும் தூங்கியதும் திண்ணையில் அமர்ந்து கணக்கு எழுதி கொண்டிருந்த மகனிடம் வந்தார். அவர் வரவை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தவன் அவரைக் கண்டு புன்னகைத்தான்.

"என்னம்மா தூக்கம் வரலையா?"

"ம்..." என்றபடி அவர் அவன் அருகில் அமர்ந்தார். அவர் முகத்தில் இருந்த கவலையைக் கண்டவன்,

"கங்கா கல்யாணத்தைப் பத்தி கவலைப்பாடதீங்க. இன்னும் ரெண்டு மாசம் இருக்கு. ஜாம் ஜாம்முன்னு நடத்திடலாம்." அவர் அதற்காகக் கவலைப்படுகிறாரோ என்றெண்ணி அவன் ஆறுதல் சொன்னான்.

"நான் கவலைப்படுறது உன்னைப் பத்தி குமரா..." அதைக் கேட்டு அவன் திடுக்கிட்டவனாய் பேனாவை மூடி வைத்துவிட்டு அன்னை புறம் திரும்பினான்.

தொடரும்…!!!

## அத்தியாயம் : 6

"ஏன்ம்மா?"

"சின்னம்மா உனக்குச் சரிப்பட்டு வருவாங்களாப்பா." அவர் கேட்டதுக்கு அவனிடம் பதில் இல்லை.

"அவங்க குணத்துக்கும், உன் குணத்துக்கும் ஏணி வச்சாலும் எட்டாது. அதே மாதிரி தான் அந்தஸ்து, பணம், அழகு இப்படி நிறைய வேறுபாடுகள் உங்க ரெண்டு பேருக்கும் இடையில் இருக்கு. இப்படி இருக்கும் போது இந்தக் கல்யாணம் நடக்கிறதுக்கு என்ன காரணம்?"

"ஐயா மட்டும் தான் காரணம்..." என்றவன் அவரின் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டான். ஒரு நொடி திகைத்த வேணி மறுநொடி மகனின் தலையை வருடி கொடுத்தார்.

"அதுக்காக உன்னுடைய சந்தோசத்தை அடகு வைப்பியா?"

"என் சந்தோசத்துக்கு என்ன குறைச்சல்? நீங்க சொன்ன மாதிரி என்னை விடப் பல மடங்கு உயரத்தில் இருக்கும் பொண்ணு தானே எனக்கு மனைவியா வர போகிறாள். இது மாதிரி தான் எல்லா ஆணும் விரும்புவான்."

"நான் சொல்றது அதில்லை குமரா... உன்னைப் பார்த்துக்க, உனக்கு ஆறுதல் சொல்ல, உன் மனம் நோகாம நடக்கத்தான் மனைவி வேண்டுவது. ஆனால் இங்கே...??? நீ சின்னம்மாவை கல்யாணம் பண்ணிக்கிட்டால்... நீ தான் அவங்களுக்கு இதை எல்லாம் செய்யணும்." என்றவரின் முகம் தெளியவில்லை.

"நான் இதை எல்லாம் சின்னம்மாவுக்குச் செய்யக் கூடாதாம்மா?" என்று அவன் அவர் முகம் பார்த்தவன்,

"எப்பவும் பெண் தான் இதை எல்லாம் செய்யணும்ன்னு அவசியம் இல்லை. ஆண்களும் செய்யலாம்." என்றவன் அவரின் கையைப் பிடித்து ஒவ்வொரு விரலால் சொடக்கு எடுத்தான்.

"எனக்குக் கல்யாணத்தில் எந்த எதிர்பார்ப்பும் இல்லை. வாழ்க்கையைப் போகிற போக்கில் லேசா எடுத்துட்டு போக வேண்டியது தான். நீங்க ரொம்ப யோசிக்காதீங்கம்மா." என்றவன் அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டான்.

சிவகுமரனுக்குமே வாழ்க்கை தனக்கு என்ன வைத்துக் காத்திருக்கிறது என்று தெரியவில்லை. பெரியவரின் அன்பிற்குக் கட்டுப்பட்டு, அவர் மீதான விஸ்வாசத்திற்குப் பணிந்து தான் அவன் திருமணத்திற்குச் சம்மதித்தது. அபிஷரிகாவை பற்றி அவனுக்கு எந்தவித எண்ணமும் மனதில் இல்லை. இனியும் தோன்றுமா? அது அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அவன் இறுதிமூச்சு வரை அவள் தான் அவனது மனைவி... அதில் எந்தவித மாற்றமும் இல்லை. அப்படியே யோசித்துக் கொண்டிருந்தவன் அன்னையின் மென்மையான வருடலில், தென்றல் காற்றின் சுகமான தீண்டலில் மெல்ல உறக்கத்தைத் தழுவினான்.

வேணி மகனின் முகத்தைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தார். மகனுக்கு மனைவியாக மட்டுமல்ல, இந்த வீட்டிற்கு மருமகளாய், மகள்களின் அண்ணியாய் அந்த இடத்தில் அபிஷரிகாவை அவரால் பொருத்தி பார்க்க முடியவில்லை.

மறுநாளே இருவரது திருமணத்தையும் சட்டப்படி பதிவு செய்தார் பொன்னம்பலம். அத்தோடு சொத்துகள் முழுவதையும் சிவகுமரன் பெயருக்கு மாற்றி எழுதி வைத்துவிட்டார். அவன் திகைத்து போய் அவரைப் பார்த்தான். ஏனெனில் அவன் முற்றிலும் இதை எதிர்பார்க்கவில்லை. சொத்துகளை இருவரின் பெயருக்கும் பாதி, பாதி எழுதி வைப்பார் என்றே அவன் நினைத்திருந்தான். முழுவதும் தன் பெயருக்கு எழுதியதை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. அபிஷரிகாவும் இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை.

"தாத்தா, நீங்க சொன்னது என்ன? இப்போது செய்து கொண்டிருப்பது என்ன?"

"குமரன் உன் கணவன் தானே... அப்போ சொத்துகள் குமரன் பெயரில் இருந்தால் என்ன? உன் பெயரில் இருந்தால் என்ன? இரண்டும் ஒன்று தான்." என்று கூறி அவர் அவளது வாயை அடைத்து விட்டார்.

இல்லையென்று கூறி இருப்பதை இழப்பதற்கு அவளுக்குச் சம்மதம் இல்லை. சிவகுமரனிடம் இருந்து சொத்துகளை எழுதி வாங்குவது மிக எளிது. அதற்குத் தானே அவள் அவனுடன் ஒப்பந்தம் போட்டிருக்கிறாள். அதனால் அவள் இந்த விசயத்தைப் பெரிதுபடுத்தவில்லை.

பொன்னம்பலம் சிவகுமரனை தனியே அழைத்து, "எந்தக் காரணம் கொண்டும் இந்தச் சொத்துகளை அபி பெயருக்கு மாற்றி எழுதிவிடாதே. அவள் இதைக் கட்டி காப்பாற்றி அடுத்தத் தலைமுறைக்குக் கொண்டு செல்வாளா? என்பது சந்தேகமே. என் சொத்துகளோடு, என் கௌரவத்தையும் நீ தான் காப்பாற்ற வேண்டும்." என்று அவர் அவனது கைகளைப் பிடித்துக் கொண்டு நா தழுதழுக்கக் கூறினார்.

"ஐயா, அதுக்காக... எல்லாத்தையும் என் பெயரில்..." அவனுக்கு என்ன பேசவென்று தெரியவில்லை. விழிகள் கலங்கி போனது.

"அப்போ தான் பாதுகாப்பா இருக்கும். உன்னுடைய குழந்தைகள், அதனுடைய குழந்தைகள்ன்னு இந்தச் சொத்துகள் அடுத்தடுத்த தலைமுறைக்குப் போய்ச் சேரும். எனக்கு அபி மேல் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை." என்றவரது வார்த்தைகள் மிகவும் தளர்ந்து போய் விரக்தியுடன் ஒலித்தது.

"அப்படி எல்லாம் சொல்லாதீங்க ஐயா. உங்க இரத்தம் அவங்க உடம்பில் ஓடுவது உண்மையாக இருந்தால் நிச்சயம் அவங்க நல்லவங்களா தான் இருப்பாங்க." என்றவனை நிமிர்ந்து பார்த்தவரின் விழிகளில் கண்ணீர் நிறைந்தது.

"நிச்சயம் அவள் நல்லவள் தான்ப்பா... வளர்ப்பு முறை தான் சரியில்லாமல் போயிருச்சு."

"அவங்களை மாற்றி உங்க பேத்தியா உங்க கிட்ட ஒப்படைக்க வேண்டியது என் பொறுப்பு..." என்றவனைக் கண்டு அவரது மனம் நிறைந்து போனது.

"எனக்கு நம்பிக்கை இருக்கு குமரா. நம்பிக்கை இருக்கு." என்றவரது மனம் குளிர்ந்து போனது.

அடுத்த நாள் அபிஷரிகாவின் பெற்றோருக்கு முப்பதாவது நாள் பூஜை போடப்பட்டது. அங்கு அவளது தந்தை சீனிவாசனின் புகைப்படம் மட்டுமே இடம் பெற்றிருந்தது. தாய் தனுஜா புகைப்படம் அங்கு இல்லை. அதைக் கண்டதும் அபிஷரிகா கொதித்து எழுந்துவிட்டாள்.

"எதுக்கு எங்க மாம் ஃபோட்டோவை வைக்கலை?" தாத்தாவிடம் சண்டைக்கு நின்றாள்.

"பூஜையில் வைக்கும் அளவுக்கு உங்கம்மா ஒண்ணும் புனிதமானவள் இல்லை." என்று கறார் குரலில் கூறினார் பொன்னம்பலம்...

"இறந்த பிறகும் ஒரு மனுசியை எதுக்கு இப்படி அசிங்கப்படுத்துறீங்க? அவங்க சினிபீல்டில் இருந்தவங்க என்கிற ஒரே காரணத்துக்காகத் தானே நீங்க அவங்களைக் கேவலப்படுத்துறீங்க. அப்போ நானும் அசிங்கமானவளா? கேவலமானவளா?" என்று கேட்டவளின் பார்வை சிவகுமரனின் முகத்தில் வந்து நிலைத்தது.

அவன் அவளைப் பார்த்து கூறிய 'குடிகாரி, வி......ரி' என்கிற வார்த்தைகள் அவளது காதில் இன்னமும் ஒலித்து அவளை வெறிக் கொண்ட பெண் வேங்கையாய் மாற்றி இருந்தது. அடுத்த நொடி அவள் பூஜை பொருட்களைத் தூக்கி வீசியெறிய முற்பட்ட போது சிவகுமரன் சுதாரித்துக் கொண்டு அவளை நோக்கி வந்தவன் அவளது கையைப் பிடித்துத் தடுத்தான்.

"என்ன பண்றன்னு தெரிஞ்சு தான் பண்றியா?" அவன் அவளை அதட்டினான்.

"விடுடா என்னை... ஆக்ட்ரஸ்ன்னா அவ்வளவு கேவலமா போயிட்டோமா? எங்களை எல்லாம் பார்த்தால் எப்படித் தெரியுது?" அவள் எகிற...

"ஷ்... சத்தம் போடாதே." என்று அதட்டியவன் அவளை அவளது அறைக்குள் தள்ளி கதவை சாற்றினான்.

"நீ கதவை தான்டா மூட முடியும். என் வாயை மூட முடியாது." கதவிற்கு மறுபக்கம் இருந்து அவள் கத்த... உடனே கதவை திறந்தவன்,

"எப்படி மூடுறதுன்னு திரும்பச் செஞ்சு காட்டவா?" என்று அவன் அவளது இதழ்களை ரசனையுடன் பார்த்தபடி கூற... அவள் சட்டென்று கப்சிப் என்று அடங்கி விட்டாள்.

"போடா..." என்றவள் அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டாள். அவன் சிரித்தபடி அறை கதவை சாற்றிவிட்டு வந்தான்.

காவேரியும், வேணியும் பழையதை நினைத்து கண்கலங்க நின்றிருந்தனர். பொன்னம்பலம் பூஜையை ஆரம்பித்தார். சிவகுமரன் தனது தங்கைகளோடு சேர்ந்து நின்று கொண்டான். அறைக்குள் இருந்த பெண் புலி கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தது.

******************************

"அண்ணய்யா, அண்ணியைப் பாரு." அம்ரிதாவின் குரலில் சிவகுமரன் திரும்பி பார்த்தான்.

தன்னை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த அபிஷரிகாவின் அழகில் அவனது விழிகள் அகன்றது. மணப்பெண் அலங்காரத்தில் தேவதை போல் இருந்தவளை கண்டு எல்லோருமே இமைக்க மறந்தனர். தன் முன் அமைதியாக வந்து நின்றவளை கண்டு அவனது புருவங்கள் வியப்பில் உயர்ந்தது. அதைக் கண்டு அவள் கோபத்துடன் அவனை முறைத்தாள்.

"இப்போ சந்தேகமே இல்லை. நீ அபிஷரிகா தான்..." அவளது காதிற்கு மட்டும் கேட்கும்படி அவன் முணுமுணுத்தான்.

அபிஷரிகா சொன்னது போல் அடுத்த முகூர்த்தத்தில் இருவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டு இதோ இருவரும் நல்ல நேரத்திற்காகக் காத்திருக்கின்றனர். மணியைப் பார்த்த பொன்னம்பலம் அவனிடம்,

"சரியா பத்து மணியாச்சு குமரா. ம், தாலியை கட்டு..." என்று அவர் தனது மனைவியோடு சேர்ந்து பொன்மஞ்சள் கயிற்றில் கோர்க்கப்பட்ட தாலியை எடுத்து அவனிடம் கொடுத்தார்.

அலைப்பேசியில் மங்கள இசை முழங்க... சிவகுமரன், அபிஷரிகா கழுத்தில் மூன்று முடிச்சிட்டு அவளைத் தன்னவளாக்கி கொண்டான். என்னே அதிசயம்! அவளும் தலை குனிந்து அமைதியாகத் தாலியை கட்டி கொண்டாளே!

'இம்மையிலும், எம்மையிலும், எப்பிறப்பிலும் நீயே என் வாழ்க்கை துணையாக வேண்டும்.' என்று மனதிற்குள் வேண்டி கொண்டபடி சிவகுமரன் தனது மனைவியைப் பார்த்தான். அவளோ எந்தவித உணர்வும் இல்லாது அவனைப் பார்த்திருந்தாள்.

'ம்ஹூம், உன் மைன்ட் வாய்சை நான் கேட்ச் பண்ணிட்டேன்டி. உனக்கு ஒரு அடிமை சிக்கிட்டான்னு தானே நீ நினைக்கிற?' அவன் தன்னைத் தானே கலாய்த்துக் கொண்டான். பிறகு அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் அவளது காலில் மெட்டியை அணிவித்து விட்டான். அம்மி மிதிக்கவில்லை, அருந்ததி பார்க்கவில்லை... ஆனாலும் அவன் கணவனாய் அவளுக்கு எல்லாக் கடமையும் செய்தான்.

சம்பிரதாயம் முடிந்ததும் சிவகுமரன் பெரியவர்கள் காலில் விழ போக... அபிஷரிகாவோ விறைத்துக் கொண்டு நின்றிருந்தாள். அவளைத் திரும்பி பார்த்து முறைத்தவன்,

"இன்னைக்கு ஒரு நாளாவது ஒழுங்கா நடந்துக்கக் கூடாதா?" என்று கடிய...

"அவர் என்னை ஒரு மனுசியா மதிக்கலை. அப்புறம் நான் எதுக்கு அவருக்கு மரியாதை கொடுக்கணும்." என்று அவள் அலட்சியமாகக் கூற... மனைவியின் பதிலில் அவன் சட்டென்று அவளது காலை இடறிவிட்டான். அவள் நிலை தடுமாறி கீழே விழ போக... சட்டென்று அவளைத் தாங்கி பிடித்துக் கொண்டவன்,

"நீயாக விழுந்தால் சேதாரம் கம்மி. இல்லைன்னா சேதாரம் ரொம்ப அதிகமா இருக்கும்." என்று மிரட்ட... வேறுவழியின்றி அவள் கணவனோடு தாத்தா, பாட்டி காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினாள்.

சிவகுமரன் தன் அன்னையிடம் ஆசிர்வாதம் வாங்கும் போது அவளை அவரது காலில் விழ சொல்லவில்லை. அது நியாயம் இல்லை என்பதால் அவன் தான் மட்டும் விழுந்தான். அவளோ அன்னிச்சை செயல் போல் அவனுடன் சேர்ந்து வேணியின் காலில் விழுந்து எழுந்தாள். அவன் அதிசயித்து அவளைப் பார்த்தவன் ஒன்றும் கூறவில்லை. அவளோ அவன் புறம் திரும்பி கூடப் பார்க்கவில்லை.

எல்லாம் முடிந்த அடுத்த நிமிடம் அபிஷரிகா தனது அறைக்குள் நுழைந்தவள் உடனே உடை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தாள். எல்லோரும் அவளைத் திடுக்கிட்டு பார்க்க...

"என்ன மேன், இவங்க கிட்ட எதுவும் சொல்லலையா?" என்று அவள் கணவனிடம் திமிராய் கேட்க...

"நீ அரை மணி நேரம் ரூமில் இரு. நான் சொல்லிட்டு வர்றேன்." அவன் அவளிடம் தன்மையுடன் கூற... அவள் தாத்தாவை மிதப்புடன் பார்த்தபடி தனது அறைக்குள் சென்றாள்.

சிவகுமரன் அவள் ஏற்கெனவே தன்னிடம் கூறியதை அவர்களிடம் கூறி, "சென்னைக்கு உடனே போகணும். சின்னம்மாவுக்கு வேலை இருக்காம்." என்று கூற...

"திரும்ப நடிக்கப் போறாளா?" பொன்னம்பலம் அதிர்ச்சியுடன் கேட்டார்.

"நடிச்சால் என்னங்கய்யா தப்பு? நான் கூடவே இருக்கேன். நான் பார்த்துக்கிறேன்." அவன் அவருக்கு ஆறுதல் அளித்தான்.

"குமரா... உன்னைப் பிரிந்து..." வேணியால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"ம்மா, நான் வாரா வாரம் இங்கே வந்துட்டு போவேன். நீங்களும் என்னைப் பார்க்க அங்கே வாங்க. இதோ இருக்கிற சென்னைக்குத் தானே போகிறேன். டெல்லிக்குப் படிக்கப் போனப்போ கூட என்னைச் சந்தோசமா அனுப்பி வச்ச எங்கம்மா எங்கே?" அவன் அவரைக் கிண்டல் அடித்துச் சகஜநிலைக்குக் கொண்டு வந்தான்.

மற்ற மூன்று தங்கைகளைச் சமாதானப்படுத்தியவனால் கடைக்குட்டி அம்ரிதாவை சமாதானப்படுத்த முடியவில்லை.

"அண்ணய்யா, அண்ணய்யா..." என்றபடி சின்னவள் அண்ணனை கட்டி கொண்டு அழுதாள். அவளை அணைத்துக் கொண்ட அவனுக்குமே கண் கலங்கி போனது. அவளுக்கும், அவனுக்குமான பந்தம் தந்தை, மகள் போன்ற பந்தம் அல்லவா!

"அண்ணய்யா எங்கேயும் போகலை. நீ நினைக்கிறப்போ எல்லாம் உன் முன்னாடி வந்து நிப்பேன். உனக்கு என்னைப் பார்க்கணும் போல் இருந்தால் கங்கா கிட்ட சொல்லி அண்ணய்யாவுக்கு ஒரு ஃபோன் போடு. உடனே வந்திர்றேன். வரும் போது நிறைய டாய்ஸ், சாக்லேட் எல்லாம் வாங்கிட்டு வர்றேன்." என்று அவன் அவளைச் சமாதானப்படுத்திவிட்டுக் கிளம்பினான்.

அவன் கிளம்புவது தெரிந்து அபிஷரிகாவும் அறையை விட்டு வெளியில் வந்தாள். வந்தவள் நேரே வேணியிடம் சென்று,

"உங்க மகனை கண் கலங்காம பார்த்துக்குவேன்." என்று கூறியவள் கணவன் காதிற்கு மட்டும் கேட்கும்படி,

"பொண்ணைக் கல்யாணம் பண்ணி கொடுத்து அனுப்புற மாதிரி என்ன ஒரு பில்டப்..." என்று கிண்டலடிக்க...

"இங்கே எல்லாமே தலைகீழ் தானே..." என்று பதிலுக்குக் கிண்டலடித்தவன் எல்லோரிடமும் விடைபெற்று தன்னவளோடு காரிலேறினான்.

எல்லோரிடமும் விடைபெறும் போது அவனுக்குமே கண் கலங்கியது. 'ராட்சசி, என்னைக் கடத்திட்டு போகிறாள்.' என்று மனதிற்குள் எரிச்சல் பட்டவன் தனது கோபத்தினைக் காரிடம் காட்டினான். அது வேகத்துடன் காற்றாய்ப் பறந்தது. அவளோ இது எதையும் கண்டு கொள்ளாது வேறு எதையோ பற்றியோ யோசித்துக் கொண்டு வந்தாள்.

சென்னை வந்ததும் அபிஷரிகா வெளியில் கிளம்பி சென்றுவிட்டாள். சிவகுமரன் அவளைக் கண்டு கொள்ளாது அவளது தந்தையின் செயலாளர் ராஜனை அழைத்துத் தொழில் நிலவரத்தை கேட்க ஆரம்பித்தான். இருவரும் சேர்ந்து அனைத்து கணக்கு வழக்குகள் எல்லாம் பார்த்து முடிக்கும் போது மாலை மங்கி இரவு கவிழ்ந்திருந்தது.

"நீங்க போங்க... நாளைக்கு ஆபிஸில் பார்க்கலாம்." என்றவன் குளிக்கச் சென்றான். அவன் குளித்து முடித்து வெளியில் வந்த போது அபிஷரிகா அங்கிருந்த கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

"ஐயோ, வயசு பையன் கற்புக்கு கியாரண்ட்டி இல்லாம போச்சு." என்று கூச்சல் போட்டபடி அவன் துண்டால் தன்னை மறைக்க... அவன் போட்ட சத்தத்தில் திரும்பி பார்த்தவள் அவன் ஷார்ட்சும், டீசர்ட்டும் அணிந்து இருப்பதைக் கண்டு அவனை முறைத்து பார்த்தாள்.

"அதான் டிரெஸ் பண்ணி இருக்கேல்ல... அப்புறம் எதுக்குக் கத்துற...?"

"ஒரு சேஃப்டிக்கு தான்..." என்று கண்சிமிட்டியவன் கண்ணாடி முன் நின்று தலைவாரினான்.

'இவனுக்கு இருக்கிற கொழுப்புக்கு...' என்று பல்லை கடித்தவள்,

"உன் கிட்ட கொஞ்சம் பேசணும்." என்று கூற...

"சொல்லு..." என்றபடி திரும்பியவன் கண்ணாடி மீது சாய்ந்து நின்றான்.

"இது டிவோர்ஸ் பேப்பர்... இது சொத்துகளை என் பெயருக்கு மாற்றி எழுதுவதற்குத் தேவையான பத்திரங்கள். நீ இதில் சைன் போட்டு கொடுத்துட்டு..." என்றவள் மேலே சொல்லாது நிறுத்த...

"போட்டு கொடுத்துட்டு..." அவன் அவளைக் கேள்வியாய் பார்த்தான்.

"இந்த வீட்டை விட்டு வெளியில் போய்ப் பின்னாலுள்ள வேலைக்காரங்களுக்கு என்று தனியே இருக்கும் வீட்டில் போய்த் தங்கிக்கோ." என்று அவள் தயவுதாட்சண்யம் பார்க்காது கூறினாள்.

"ம்ஹூம், அப்புறம்..." என்றவன் அவளைக் கிண்டலாய் பார்க்க...

"அப்புறமென்ன... விழுப்புரம்..." என்று நக்கலாய் பதிலளித்தவள் காலையில் இருந்து தனது கால் விரலை அரித்துக் கொண்டிருந்த மெட்டியை கழற்றி கையில் எடுத்தாள். பின்பு அவளது கை கழுத்திற்குச் சென்றது. அதைக் கண்டவன் முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது. காலையில் கட்டிய மஞ்சள் கயிற்றில் பூசியிருந்த மஞ்சள் கூடக் காயவில்லை. அதற்குள்...??? அவனுக்குக் கோபம் வந்தது.

"ஒன் மினிட்..." அவள் அடுத்து என்ன செய்யப் போகிறாள்? என்பதை உணர்ந்தவனாய் சிவகுமரன் அவள் அருகில் வந்தான். அவள் எழுந்து நின்று இரு கரங்களையும் கட்டி கொண்டு அவனை அழுத்தமாய்ப் பார்த்தபடி நின்றாள்.

"உனக்கு எல்லாமே நடிப்பு தான் இல்லையா?" என்றவன் அவளது கழுத்தில் தான் கட்டிய தாலியை அவனே கழற்றி எடுத்தான். அடுத்து அவளது நெற்றியில் இருந்த குங்குமத்தை அவனே அழித்து விட்டவன்,

"திருமண நாடகம் முடிந்தது... அடுத்து வேறு நாடகத்தில் நடிக்கப் போ... அதற்கு நான் தடையாக இருக்க மாட்டேன்." என்றவனைக் கண்டு உணர்வுகள் பிரதிபலிக்காத விழிகளுடனும், வெறுமையான மனநிலையுடன் பார்த்திருந்தவள் சிறிதும் அசையவில்லை.

"கழுத்தில் இருக்கிற தாலி, காலில் இருந்த மெட்டியை நீ கழட்டலாம், நெற்றியில் வைத்த குங்குமத்தை நீ அழிக்கலாம். ஆனால்...???" என்றவனைக் கண்டு அவளது விழிகள் ஒரு நொடி சுருங்கி விரிந்தது.

"உனக்கும், எனக்குமான பந்தத்தை இந்தக் காகிதம் உறுதிப்படுத்துகிறது. நீ என்ன? யார் நினைச்சாலும் இந்தப் பந்தத்தை உடைக்க முடியாது... பிரிக்க முடியாது. அதாவது நான் உன் கணவன், நீ என் மனைவி என்னும் பந்தத்தை..." கட்டிலில் கிடந்த தனது பையில் இருந்து திருமணச் சான்றிதழை எடுத்து அவள் கண்முன் ஆட்டியவன் பின்பு அறை கதவை நோக்கி கையை நீட்டி,

"வெளியில் போ..." என்றான் கடுமையான குரலில்...

"இது என்னோட வீடு... நான் எதுக்கு வெளியில் போகணும்?" அவள் கோபத்துடன் வெடித்தாள்.

"யாரு சொன்னது?" என்றவனது விழிகள் கேலியாய் இடுங்கியது.

"என்ன சொல்ற நீ...?" அபிஷரிகா கோபத்தோடு அவனை உறுத்து விழித்தாள்.

"நான் இப்போ சாதாரண மனிதன் சிவகுமரன் இல்லை. தி கிரேட் பிசினஸ்மேன் சிவகுமரன். இந்த வீடு உட்பட அனைத்து சொத்துகளுக்கும் சொந்தக்காரன் இந்தச் சிவகுமரன் மட்டுமே..."

"யூ சீட்..." அவள் ஆத்திரத்தில் பல்லை கடித்தாள்.

"நீ உன் தாத்தாவை ஏமாத்த நினைக்கும் போது நான் உன்னை ஏமாத்த கூடாதா?" என்று ஒற்றைப் புருவத்தைத் தூக்கி வசீகரமாகக் கேட்டவனை முறைத்து பார்த்தவள் அடுத்த நொடி புயலென அந்த அறையை விட்டு வெளியேறி இருந்தாள்.

சிவகுமரன் தனது கையிலிருந்த தாலி மற்றும் திருமணச் சான்றிதழை வெறுமையுடன் பார்த்தான். ஒன்று அவளுடனான அவனது திருமணத்தைச் சட்டப்படி அங்கீகரித்து இருந்தது. இன்னொன்று அவளுடனான அவனது திருமணத்தைச் சாஸ்திரப்படி நிராகரித்து இருந்தது. அவனுள் பெரும் வேதனை உண்டானது. அவன் கால்கள் துவள அப்படியே கட்டிலில் அமர்ந்தான். அவன் எதிர்பார்த்த ஒன்று தான்... ஆனாலும் அவன் மனதின் மூலையில் சிறு வலியொன்று தோன்றி விரவி பரவியது.

"கோவம் உன் கோவம்
என் நெஞ்சை கொன்று போக
கண்கள் என் கண்கள்
கண்ணீரில் நெனையுதே
போதும் போதும்
எப்போதும் உன் நினைவுகள்
பாவம் என் உள்ளம்
சொல்லாமல் கரையுதே
காயத்தைக் கண்கொண்டு
பார்த்திட முடியும்
வலியை கண்டிட கண்கள் இல்லை
காற்றினைக் கை நீட்டி தீண்டிட முடியும்
ஓவியம் ஆக்கிட ஏதுமில்லை
காதல் மழலையின் வார்த்தை அல்லவா

சொன்னால் புரிவது கஷ்டம் அல்லவா"

தொடரும்...!!!

அத்தியாயம் : 7

சிவகுமரனின் கையிலிருந்த தாலி அவனது மனதினை போன்று கனத்தது. தனது உள்ளங்கையை விரித்துப் பார்த்தவன் அப்படியே பார்த்தபடி இருந்தான். காலையில் இந்தத் தாலியை அபிஷரிகாவின் கழுத்தில் கட்டிய போது அவன் மனதில் நினைத்தது என்ன? இப்போது அவன் செய்து வைத்திருக்கும் காரியம் என்ன? அவனுக்கே தன் மீது வெறுப்பாக வந்தது. அவள் தான் அறிவில்லாமல் தாலியை கழற்ற போனாள் என்றால்? தனக்கு எங்கே புத்தி போனது? அவளது கன்னத்தில் நாலு அறை விட்டு இந்தத் தாலியை, இந்தப் பந்தத்தை அவன் காப்பாற்றி இருக்க வேண்டாமா?

ம்ஹூம், அவளை வருந்த செய்யும் எந்தச் செயலையும் அவனால் செய்ய முடியாது. இதோ அவளுக்குப் பதிலாக அவன் தாலியை கழற்றியது கூட அவளுக்காக மட்டுமே... பிற்காலத்தில் அவளது தாத்தா முன் அவள் இந்தச் செயலுக்காகத் தலைகுனிந்து நிற்க கூடாது என்பதற்காகத் தான் அவன் பழியைத் தன் மீது போட்டுக் கொண்டான். தவறு முழுவதும் தன் மீதே இருக்கட்டும் என்று அவன் நினைத்தான். அவளைத் தவறு செய்வதில் இருந்து தப்புவிக்க நினைத்தான்.

சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தவன் பிறகு முகத்தை அழுந்த துடைத்துவிட்டு எழுந்தவன் தாலி மற்றும் சான்றிதழை அங்கிருந்த அலமாரியில் வைத்து பூட்டிவிட்டு அறையை விட்டு வெளியில் வந்தான். அப்போது தான் அவளிடம் தான் கோபமாய்ப் பேசியது அவனது ஞாபகத்திற்கு வந்தது. நிசப்தமாய் இருந்த வரவேற்பறை காலியாக இருந்ததைக் கண்டு அவனுக்கு உள்ளுக்குள் பக்கென்று இருந்தது. ஒருவேளை அபிஷரிகா கோபித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விட்டாளோ? அவனது விழிகள் அவளைத் தேடி நாலாப்புறமும் சுழன்றது. எங்கும் அவளைக் காணவில்லை. அவனுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. வயது வந்த பெண், அழகான பெண், அதுவும் ஊரறிந்த புகழ் பெற்ற நடிகை இந்த ராத்திரி நேரத்தில்

தனியே வீட்டை விட்டு சென்றால் என்னவாகும்? அதன் விளைவுகள் அவன் கண்முன் வலம் வந்ததில் அவனது உடலும், உள்ளமும் பயத்தில் நடுங்கியது. இதை எல்லாம் விடப் பொன்னம்பலம் அவனது மனக்கண்ணில் வலம் வந்து,

'உன்னை நம்பி என் பேத்தியை அனுப்பியதற்கு நல்ல கைம்மாறு செய்துவிட்டாய்' என்று அவனைப் பார்த்துக் கோபமாய்க் குற்றம்சாற்றினார்.

அவன் வீட்டினுள் தேடாது வேகமாய் வெளியில் ஓடிவந்தான். அங்கிருந்த காவலாளி அவனைக் கேள்வியாய் பார்த்தார். அவரது பார்வையைக் கூட உணராது அவன் வெளிக்கதவை திறந்து கொண்டு தெருவில் ஓடினான். அவனது விழிகள் தெரு இருமங்கிலும் அவளைத் தேடி அலைபாய்ந்தது. எங்கும் அவளைக் காணவில்லை. தெருமுனையில் வந்து நின்றவன் மூச்சிரைத்தபடி இங்கும் அங்கும் பார்த்தான். எங்குச் சென்றாள்? என்று அவனுக்குத் தெரியவில்லை. அவனுக்குக் கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போலிருந்தது. அவன் தனக்கு வலப்பக்கம் இருந்த சாலையில் செல்ல எண்ணி அங்குத் திரும்ப எத்தனித்த போது,

"சார்..." என்றபடி வீட்டின் காவலாளி அவன் முன் வந்து நின்றான்.

"யாரை தேடுறீங்க சார்?" என்று அவன் பவ்யமாய்க் கேட்க...

"சின்னம்மா... மேம் வெளியில் போனாங்களா?" என்று சிவகுமரன் படபடப்புடன் கேட்டான்...

"இல்லைங்களே.... வீட்டுக்குள் தான் இருப்பாங்க..." காவலாளி கூறியதை கேட்க சிவகுமரன் அங்கு இல்லை. அவன் ஒரே ஓட்டமாக வீட்டை நோக்கி ஓடியிருந்தான்.

வீட்டிற்குள் நுழைந்தவன் நேரே அபிஷரிகா அறைக்குச் சென்று பார்த்தான். அவளது அறையில் மின்விளக்கு

எரிந்து கொண்டிருந்தது. ஆங்கிலப் பாடல் ஒன்று சத்தமாக ஒலித்துக் கொண்டிருந்தது. அவன் இதை எப்படிக் கவனிக்காது போனான்? ஒருவேளை அவள் இப்போது தான் பாடலை போட்டிருக்க வேண்டும். அவன் அறை கதவின் குமிழ் மீது கை வைத்து திறக்க... அது தானாகத் திறந்து கொண்டது. அங்கு அவள் இருந்த நிலையைக் கண்டு அவனில் கோபம் முளைத்தது. அவன் எரிச்சலுடன் அறை கதவை சாற்றிவிட்டு இரு கைகளைக் கட்டியபடி அதன் மீது சாய்ந்து நின்றான்.

அவளோ அவனைக் கவனிக்காது ஆங்கிலப் பாடலுக்கு ஏற்றபடி துள்ளி குதித்து, சுழன்று சுழன்று நடனமாடி கொண்டிருந்தாள். அத்தனை பெரிய அறையில் அவன் வந்து நின்றதை அவளால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இடையில் இறுக்கி பிடித்த டைட்சும், மேலே தொள தொளவென்று இருந்த சட்டையும் அணிந்து ஆடியவளை கண்டு அவனது விழிகள் கோபத்தை மறந்து இமைக்க மறந்தது. அவள் அழகு தான் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால் அவள் நடனம் ஆடும் போது சேர்ந்தாடிய இடையின் நளினம், இளமையின் அழகு எல்லாம் அவள் எத்தனை அழகு என்பதை அவனுக்கு நன்கு பறைச்சாற்றியது. இத்தனை நாளாய் அவள் அவனுக்கு யாரோ தான்? ஆனால் இன்று முதல் அவன் வேறு, அவள் வேறில்லையே...! அதனால் அவனது விழிகள் அவளின் அழகை தாராளமாய் அள்ளி பருகியது. சுழன்று சுழன்று ஆடியவள் இறுதியில் அவன் மீதே மோதி நின்றாள். நிலைத்தடுமாறி கீழே விழ போனவளை அவனது கைகள் அன்னிச்சையாய் வளைத்து தன்னோடு இறுக்கி பிடித்துக் கொண்டது.

எதிர்பாராது அவனை அங்குக் கண்டதும் முதலில் ஆச்சரியத்தில் அகன்ற அவளது விழிகள் அடுத்த நொடி கோபத்தினைப் பிரதிபலித்தது.

"நீ எப்படி என் ரூமில்...? முதலில் வெளியில் போ..." என்று ஆங்காரமாய்க் கேட்டவள் அவனை அடிப்பதற்குக் கையை ஓங்கினாள். அவளது கையை வளைத்து பிடித்தவன்,

"யார் வீட்டை விட்டு யார் போகச் சொல்வது?" என்று கோபத்தோடு கேட்டவன் அவளது முகம் நோக்கி குனிந்தான். அவளோ பயப்படாது அவனைப் பார்த்து,

"இது உன்னுடைய வீடு மட்டுமல்ல... என்னுடைய வீடும் தான்." என்று முறுக்கி கொள்ள... அவன் அவளைக் கண்டு கேள்வியாய் புருவம் உயர்த்தினான்.

"நீ தானே சொன்ன நான் உன் மனைவி... இந்தப் பந்தத்தைப் பிரிக்க முடியாது, உடைக்க முடியாதுன்னு... உன் மனைவியாகிய எனக்கு இந்த வீட்டில் உரிமை இருக்கிறது தானே?" அவள் அவனிடம் அனுமதி எல்லாம் கேட்கவில்லை. தானாக உரிமை எடுத்துக் கொண்டு கேட்டாள். அதைக் கேட்டு அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது.

"ம், ரொம்பச் சரி..." என்றான் அவன் சிறு சிரிப்புடன்...

"வீடு உன்னதாகவே இருக்கட்டும். ஆனால் இந்த ரூம் என்னுடையது. என் பெர்மிசன் இல்லாமல் நீ இங்கே வர கூடாது. முதலில் வெளியில் போ..." என்று அவள் அவனுக்கு உத்தரவிட...

"நான் உன் அடிமை இல்லை. முதலில் இப்படி உத்தரவு போடுவதை நிறுத்து. நான் உன் கணவன்... மனைவிங்கிற உரிமை உனக்கு இருக்கும் போது கணவன் என்கிற உரிமை எனக்கும் இருக்கிறது அல்லவா... அதனால்...?" என்றவனது பார்வை அவனது இதழ்களை இமைக்காது பார்த்தது.

"அதனால்...???" அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்.

அவளது அச்சம் கண்டு அவன் என்ன நினைத்தானோ! அவன் உடனே அவளை விட்டு விலகி நின்றான். அவள் சட்டென்று அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டாள். அவளது சட்டையின் பின்புற இறக்கத்தில் தெரிந்த அவளது வெற்று முதுகில் அன்று அவனது கைவிரல்கள் வரைந்த மருதாணி கோலம் செக்கச்செவேலென்று அழகாய் பதிந்து

இருந்தது. அன்று அவன் அவளுக்குக் கொடுத்த இதழ் முத்தம் அவனது நினைவில் நின்று அவனைத் தாபமாய் வருத்தியது. அவன் தனது வலக்கை ஆள்காட்டி விரலை நீட்டி அவளது முதுகில் இருந்த மருதாணி சிவப்பை மெல்ல வருடி விட்டான். அவனது தொடுகையில் அவள் உடல் விறைக்க அசையாது நின்றிருந்தாள். அதை உணர்ந்தவனாய் அவன் சட்டென்று தனது கையை விலக்கி கொண்டவன் தனது தலையை அழுந்த கோதி கொண்டு அவளது அறையை விட்டு வெளியில் சென்றான். கதவு மூடும் சத்தத்தில் திரும்பி பார்த்தவள் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தாள்.

வெளியில் வந்தவனிடத்தில் தாபம் மறைந்து சிரிப்புப் பொங்கியது. அவன் சொன்னதற்காகக் கோபம் கொண்டு வெளியேறாது, அவனிடம் எதிர்த்து நின்று போராடும் அவளது போராட்ட குணம் அவனுக்கு நிரம்பப் பிடித்திருந்தது. அடுத்த நொடி அவளது இந்தப் போராட்ட குணத்தை நினைத்து அவனிடத்தில் பெருமூச்சு ஒன்று கிளம்பியது. இந்தக் குணம் தானே அவளை அனைத்திலும் ஏறுக்குமாறாய் நடக்க வைக்கின்றது. அவளை எப்படி மாற்றுவது? என்று அவனுக்குச் சத்தியமாய்த் தெரியவில்லை. கட்டினவனுக்கும் மதிப்பில்லை... அவன் கட்டிய தாலிக்கும் மதிப்பில்லை. இந்த லட்சணத்தில் அவள் உரிமை பற்றிப் பேசுகின்றாள். பேசாமல் அவளை அம்மாவாக்கி குடும்பஸ்திரி ஆக்கிவிடுவோமா? என்று கூட அவன் குறுக்கு வழியில் யோசித்தான்.

'ச்சே, இது என்ன முட்டாள்த்தனமான எண்ணம்?' என்று அவன் தன்னைத் தானே கடிந்து கொண்டான்.

மறுநாள் காலையில் சிவகுமரன் அலுவலகத்திற்குக் கிளம்பி கீழே வந்தான். அப்போது உணவு மேசையில் அமர்ந்து பழச்சாறு அருந்தி கொண்டிருந்த அபிஷரிகா அவனைப் பார்த்தாள். அடர் நீல நிற கோட், சூட், வெள்ளை முழுக்கை சட்டை மற்றும் சிவப்பு நிற டை அணிந்து அவன் கம்பீரமாகப் படிகளில் விரைந்து இறங்கிய காட்சி அத்தனை அழகாய் இருந்தது.

'பார்டா, பட்டிக்காட்டானுக்கு வந்த வாழ்க்கையை...' அவளது நெஞ்சம் பொறாமையில் பொறுமியது. யார் வீட்டு சொத்தை யார் அனுபவிப்பது? என்று அவளுள் கோபம் முளைத்தது.

அப்போது தான் சிவகுமரன் மனைவி உணவு மேசையின் முன் அமர்ந்திருப்பதைப் பார்த்தான். அவன் முகம் கொள்ளா புன்னகையுடன்,

"ஹாய் பொண்டாட்டி, குட்மார்னிங்..." என்க...

"பொண்டாட்டின்னு கூப்பிடற வேலை எல்லாம் இங்கே வச்சுக்காதே." அவள் ஒற்றை விரல் நீட்டி அவனை எச்சரித்தாள்.

"இதேதுடா வம்பா போச்சு... பொண்டாட்டியை பொண்டாட்டின்னு தானே கூப்பிட முடியும்?" அவன் கேலியாய் உரைத்தபடி அவள் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

அவள் உண்ட உணவு பதார்த்தங்களைப் பார்த்தான். முட்டையின் வெள்ளைக்கரு மட்டும் கொண்டு செய்த ஆம்லெட், கேப்பையைக் கொண்டு செய்த ரொட்டி துண்டுகள் இரண்டு, பழங்கள், பழச்சாறு மட்டுமே அவளது காலை உணவாக இருந்தது. அவனோ நாக்குக்கு வஞ்சனை இல்லாது நன்கு சுவையாய் சாப்பிட்டு பழகியவன்... அதனால் அவனுக்கு இதை எல்லாம் கண்டதும் கோபம் வந்தது. கைத்தட்டி சமையல் செய்யும் பணிப்பெண்ணை அழைத்தான்.

"மதியத்தில் இருந்து நான் சொல்லும் மெனுவை தான் சமைக்கணும்." என்று கறார் குரலில் சொன்னவன் மதிய சமையலுக்கு என்னென்ன செய்ய வேண்டும் என்று கூறினான். அவர் சரியென்று தலையாட்டி விட்டு சென்றார்.

"நீ சமைக்கச் சொன்னதை எல்லாம் நான் இரண்டு நாள் சாப்பிட்டால் போதும்... என் உடம்பு புசுபுசுன்னு ஊதிரும்."

அவர் சென்றதும் அபிஷரிகா அவனிடம் படபடவெனப் பொரிந்தாள்.

அவளது பேச்சில் அவளை மேலிருந்து கீழாக அளவிடுவது போல் பார்த்தவன், "நீ குண்டானாலும் எனக்கு ஒண்ணும் கஷ்டமில்லை." என்று கூறியவனின் விழிகளில் விசமம் வழிந்தது. அவனது பேசினதற்கு அர்த்தம் புரியாது அவள் விழிக்க... அதைக் கண்டவன் பெருங்குரலெடுத்துச் சிரித்தான்.

"இப்போ எதுக்குடா சிரிக்கிற?" அவள் அங்கிருந்த முள்கரண்டியை எடுத்து அவன் முகத்துக்கு நேரே நீட்டி அவனை மிரட்டினாள். சிரித்தபடி அதை விலக்கியவன்,

"நீ இவ்வளவு அப்பாவியான்னு நினைச்சேன், சிரிச்சேன். நீ ஆள் பார்க்க தான் டெரர் பீஸ்... ஆனா நீ சரியான காமெடி பீஸ்... உனக்குப் பில்டிங் ஸ்ட்ராங்... பேஸ்மென்ட் வீக்." என்றவனுக்குச் சிரிப்பு அடங்க மறுத்தது.

"நீ ரொம்ப அடப்பாவியோ... நீ என்னை விட ஜஸ்ட் நாலு வயசு தான் அதிகம்... அதனால் ரொம்பப் பேசாதே." அவன் பேசியது லேசாகப் புரிந்ததில் அவள் முறுக்கி கொண்டாள்.

"ஆனால் எனக்கு அனுபவம் அதிகம்மா..." என்று கூறியவனின் வார்த்தைகளில் இருந்த அர்த்தம் புரிந்தவள் விழி விரிய அவனைப் பார்த்திருந்தாள்.

"சும்மா தானே சொல்ற...?" என்றவளுக்கு வார்த்தைகள் திக்கியது. அவனோ அவளது முகபாவத்தைக் கவனிக்கவில்லை...

"நிசமாத்தான் சொல்றேன்." என்றான் அவளைப் போன்றே திக்கியபடி நக்கலாய்... அவள் சட்டென்று தனது கையிலிருந்த முள்கரண்டியை எடுத்து அவனது இடக்கை உள்ளங்கையில் நறுக்கென்று குத்தி விட்டாள்.

"ஏய் ராட்சசி, என்னடி பண்ற?" என்றவன் வலியில் அலறினான். அவன் சுதாரித்துக் கொண்டு கையை விலக்குவதற்குள் அவள் ஆழமாய்க் குத்தியிருந்தாள்.

"பாருடி, எப்படி ரத்தம் வருதுன்னு? ராட்சசி, ராட்சசி..." என்று அவன் அவளைத் திட்டியபடி அவள் கையிலிருந்த கரண்டியை பிடுங்கி தூர எறிந்தான். அதில் திடுமென ஸ்மரணை அடைந்தவள் அவனது கையைப் பார்த்து,

"ஐயோ இரத்தம்..." என்று பயத்தில் அலற...

"அடிச்சேன்னா பல்லு எல்லாம் கொட்டிரும். செய்றதை எல்லாம் செஞ்சிட்டு கத்துறியா?" என்று அவன் அவளை வெட்டவா? குத்தவா? என்பது போல் முறைத்துப் பார்த்தான். அவனது கோபத்தைக் கவனத்தில் கொள்ளாது அவள் ஓடி போய் முதலுதவி பெட்டியை எடுத்து வந்தாள்.

"சாரி, சாரி, ஐயம் ரியலி சாரி..." என்றவளது விழிகளில் கண்ணீர் நிரம்பிவிட்டது. அவளது கைகள் தானாக அவனுக்கு முதலுதவி செய்ய ஆரம்பித்தது.

அவளது உதவியை மறுக்க நினைத்து வாய் திறக்க போனவன் அவளது விழிகளில் கரை கட்டியிருந்த கண்ணீரை கண்டு அமைதியாகி போனான். இதில் எது அவளது உண்மையான முகம்? என்று தெரியாது அவன் முழித்தான். அவளால் ஏற்படும் கோபத்தை அவளே ஆற்றும் விந்தையை என்னவென்று அறியாதவனாய் அவன் அமர்ந்திருந்தான். ஆனாலும் அவன் மனதில் இருந்த கோபம் மறையவில்லை.

"உன் மன்னிப்பை தூக்கி குப்பையில் போடு..." என்று கோபத்தோடு கூறியவன் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டான். அவன் உண்ணாமல் செல்வதைப் பார்த்திருந்தவள் தானும் உண்ணாது எழுந்தாள்.

உள்ளங்கையில் போடப்பட்டு இருந்த பிளாஸ்திரியை பார்த்தபடி வரவேற்பறைக்கு வந்தவன் அங்கு அமர்ந்திருந்த பெண்ணைக் கண்டு யார்? என்பது போல் பார்த்தான். அந்தப் பெண் ரஞ்சனி ஏற்கெனவே அவனை இங்குப் பார்த்திருந்தால் எழுந்து நின்று,

"நான் மேம்மோட மேக்கப் வுமன்." என்று கூற... தனது கோபத்தினை முயன்று மறைத்துக் கொண்டு,

"உட்காருங்க... மேம் வருவாங்க..." என்று புன்னகையுடன் கூறியவன் வெளியில் சென்றான். அவன் செல்வதைப் பார்த்தபடி வந்த அபிஷரிகா ரஞ்சனியிடம்,

"சார் என்ன சொல்லிட்டு போறார்?" என்று கேட்க...

"நீங்க வருவீங்கன்னு சொன்னார்."

"அப்படியா சொன்னார்? இல்லையே, ஏதோ உன் கிட்ட சிரிச்சு பேசின மாதிரி இருந்துச்சே?" அவள் கேள்வியாக ரஞ்சனியை பார்த்தாள்.

"வேறு எதுவும் பேசலை மேம்." என்ற ரஞ்சனியை பார்த்தவள் மேலே ஒன்றும் கூறவில்லை.

****************************

"மேம்..." என்று அலறிய ரஞ்சனியின் குரலில் தான் விளையாடி கொண்டிருந்த 'வீடியோ கேம்'மை பாதியில் நிறுத்திவிட்டு அறையை விட்டு வெளியில் வந்த அபிஷரிகா,

"எதுக்கு இப்படிக் கூப்பாடு போடுற?" என்று எரிச்சலுடன் கேட்க...

"ரூமில் இருக்கிற டீவியைப் போடுங்க மேம்." என்றவள் குறிப்பிட்ட அலைவரிசையைப் போட சொன்னாள்.

ரஞ்சனி சொன்னபடி தொலைக்காட்சியை உயிர்ப்பித்த அபிஷரிகா திரையில் தெரிந்த சிவகுமரனை கண்டு வியப்பாய் பார்த்தாள். ஆனால் அவன் கூறிக் கொண்டிருந்த விசயம் கேட்டு அவளது இரத்தம் கொதிநிலைக்குச் சென்றது. அவன் நிறுவனத்தில் செய்ய வேண்டிய அபிவிருத்தியை பற்றிப் பேசியவன், அடுத்து அபிஷரிகாவை பற்றிப் பேசினான். பெற்றோர் மறைந்த துக்கத்தில் இருக்கும் அபிஷரிகா தற்காலிகமாக

நடிப்பதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறாள் என்று கூறிக் கொண்டிருந்தான்.

"டாமிட்... இடியட்..." அபிஷரிகா கத்தியபடி தனது கையிலிருந்த ரிமோட்டை எடுத்து தொலைக்காட்சியின் மீது தூக்கி வீசினாள். ரஞ்சனி பயத்துடன் அவளைப் பார்த்திருந்தாள்.

அபிஷரிகா உடனே தனது அலைப்பேசியில் இருந்து சிவகுமரனுக்கு அழைத்தாள். பேட்டி கொடுத்து கொண்டிருந்தவனோ அவளது அழைப்பை எடுக்கவில்லை.

"உன்னை..." என்று கோபத்தில் பல்லை கடித்தவள் கைப்பையை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். ஆனால் வாயிலில் இருந்த காவலாளி அவளை வெளியில் செல்ல அனுமதிக்கவில்லை.

"நான் உனக்குச் சம்பளம் கொடுக்கிறேனா? இல்லை அவன் கொடுக்கிறானா?" அவள் கோபத்தில் உறும...

"இந்த மாசத்தில் இருந்து அவர் தான் சம்பளம் கொடுக்கப் போறேன்னு சொல்லிட்டார் மேம்." என்று கூறியபடி அவன் பணிவுடன் சென்றுவிட்டான்.

"ரஞ்சு, நீ வீட்டுக்கு போ..." என்றவள் கோபத்தோடு தனது அறையை நோக்கி சென்றாள்.

மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்த சிவகுமரனை அங்கு வேலை செய்யும் பணிப்பெண் எதிர்கொண்டாள்.

"மேம், இன்னும் சாப்பிட வரலை." என்று அவள் கூற...

"எங்கே இருக்காங்க?" அடுத்தவர் முன் அபிஷரிகாவை மரியாதையாக விளித்தான். தன்னால் அவளது மரியாதை கெட கூடாது என்பதில் அவன் மிகவும் கவனமாக இருந்தான்.

"அவங்க ரூமில்..." என்று சொல்லிவிட்டு அவள் சென்றுவிட்டாள்.

நேரே அவளது அறைக்குச் சென்றவன் அறை கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான். 'கதவை தாழ் போடும் பழக்கம் இல்லை போலும்' என்று அவன் அவளை மனதில் கடிந்து கொண்டான். அறையின் நடுவே இருந்த திரைச்சீலையை விலக்கி விட்டு அவன் உள்ளே செல்ல... அங்கிருந்த கட்டிலில் அபிஷரிகா படுத்து உறங்கி கொண்டிருந்தாள். கை, கால்களைக் குறுக்கி கொண்டு அருகில் இருந்த தலையணையை இறுக்கி கட்டிப்பிடித்தபடி படுத்திருந்தவள் பார்ப்பதற்குச் சிறு சிறுமியாகத் தெரிந்தாள். இப்படிக் கை, கால்களைக் குறுக்கி கொண்டு படுப்பவர்கள் மனதில் ஒருவித பாதுகாப்பின்மை இருந்து கொண்டே இருக்கும் என்று எங்கோ படித்த ஞாபகம் அவனுள்... ஆனால் அவளுக்கும், பாதுகாப்பின்மைக்கும் சிறிதும் சம்பந்தம் இருப்பதாய் அவனுக்குத் தெரியவில்லை.

'ம்ஹூம், இவளால் தான் அடுத்தவங்க உயிருக்குப் பாதுகாப்பு இல்லை.' என்று முணுமுணுத்து கொண்டவன் தனது இடக்கை உள்ளங்கை காயத்தைப் பார்த்தான். பின்பு அவளை எப்படி எழுப்புவது? என்று பார்த்தவனுக்கு ஒரே யோசனையாக இருந்தது. அவள் அவனது மனைவியான பின்பும் அவளது பெயரை சொல்லி அழைக்க அவனால் முடியவில்லை.

"சின்னம்மா... சின்னம்மா..." என்று அவன் அவளது தோள் தொட்டு அழைக்க... அவளோ,

"ம், ம்..." என்றபடி திரும்பி படுத்தவள் அவனது கையை இறுக்கி பிடித்துக் கொண்டு உறக்கத்தைத் தொடர்ந்தாள்.

அவளது செய்கையில் செய்வதறியாது திகைத்தவன் அப்படியே அவள் அருகில் அமர்ந்தான். இவள் சிறு குழந்தையா? அல்லது அடாவடி குமரியா? இவளை எந்த ரகத்தில் சேர்ப்பது? என்று அவனுக்குக் குழப்பமாக இருந்தது. அவள் எழுவதற்காக அவன் அப்படியே ஒரு மணி நேரம் அமர்ந்திருந்தான். தனக்கு இத்தனை பொறுமை இருக்கிறது என்பதே இன்று தான் அவனுக்குத் தெரிந்தது.

ஒருவழியாக அபிஷேரிகா உறக்கம் தெளிந்து எழுந்தாள். சிவகுமரன் தனது படுக்கையில், தன்னருகில் அமர்ந்து இருப்பதைக் கண்டு அவள் துள்ளி குதித்துக் கொண்டு எழுந்தமர்ந்தாள்.

"ஏய், நீ எப்படி இங்கே?"

"காலையில் எப்படி வந்தேனோ அப்படித்தான் உள்ளே வந்தேன்." என்று நக்கலாய் கூறியவன்,

"முதலில் கையை விடு..." என்றான்... அவனது கையைத் தான் பிடித்திருப்பதை அப்போது தான் அவள் கவனித்தாள். அவள் சட்டென்று அவனது கையை உதறி தள்ளினாள்.

"ஒரு மணி நேரமா இப்படியே வச்சிருந்து கை எல்லாம் மரத்து போச்சு." என்றவன் தனது கைவிரலில் சொடக்கு எடுத்துக் கொண்டான்.

அவளோ மானசீகமாகத் தன்னைத் தானே காறி துப்பிக் கொண்டவள் வெளியில் அவனை முறைத்து பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

"வா, சாப்பிட போகலாம்." என்று அவன் வெகுசாதாரணமாக அவளை அழைக்க... அவளோ அவனை ஆத்திரத்துடன் உறுத்து விழித்தாள்.

"என்னை நடிக்க வேண்டாம்ன்னு சொல்றதுக்கு நீ யாருடா?" என்று அவள் கோபத்தில் எகிற...

"அடடா, இதுக்குத் தான் கழுத்தில் தாலி போட்டு இருக்கணும்ன்னு சொல்றது. நீ தான் அதை வேண்டாம்ன்னு கழட்டி வச்சிட்டியே." என்று அவன் போலியாக அங்கலாய்க்க...

"நான் கழட்டலை... நீ தான் கழட்டின..." அவள் விறைப்பாகப் பதில் கூற...

"நீ தொடங்கின... நான் முடிச்சு வச்சேன்." என்றான் அவன் அசால்ட்டாக...

"உனக்குக் கொழுப்புடா..."

"அது இருக்கு நிறைய..." என்றவன் அங்கிருந்து அகல போக...

"என் கேள்விக்குப் பதில் சொல்லிட்டு போடா..." அவள் எழுந்து வந்து வழிமறித்தார் போன்று அவன் முன் வந்து நின்றாள்.

"அதுக்கான பதிலை சொல்லத்தான் என் ரூமில் இருக்கும் மேரேஜ் ரெஜிஸ்ட்ரேசன் சர்ட்டிபிகேட்டை எடுக்கப் போறேன்."

"டேய் சிவூஊஊஊஊஊஊ..." அவள் ஆத்திரத்தில் பல்லை கடித்தாள். தனது பெயரை அவள் உச்சரித்த விதத்தில் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவள் அருகே வந்து அவளது முகத்தோடு தன் முகத்தைப் பதித்து,

"குடிகாரி, நீ என் பெயரை இப்படிக் கூப்பிடறது கூடத் தனிக் கிக்கா தான் இருக்கு..." என்று அவன் அவளுடன் இழைந்தபடி கூற... சட்டென்று அவனைத் தள்ளி விட்டவள்,

"பேச்சை மாத்தாதேடா..." என்று கோபத்துடன் சீறினாள்.

"சரி, உனக்கு என்ன பதில் வேணும்?" அவன் விளையாட்டுத்தனத்தைக் கைவிட்டவனாய் அவளைப் பார்த்து கேட்டான்.

"எதுக்கு என்னை நடிக்க வேண்டாம்ன்னு சொன்ன...?"

"ஹேய், நானெங்கே அப்படிச் சொன்னேன்...?"

"பொய் சொல்லாதேடா ப்ராடு..." அவள் கோபத்தில் எகிறினாள்.

"நான் என்ன சொன்னேன்னு நல்லா யோசிச்சு பாரு..." அப்போதும் அவள் யோசிக்காது அவனை முறைத்திருந்தாள்.

"அது சரி நீ நல்லா யோசித்து, ஞாபகம் வைத்துப் படித்திருந்தால் இப்படியா இருந்திருப்ப... மக்கு மண்ணாந்தை, மடச்சாம்பிராணி." என்று அவன் அவளைக் கலாய்க்க...

"என்னைக் கிண்டல் பண்ற வேலை எல்லாம் வேண்டாம்." அவள் ஒற்றை விரல் நீட்டி அவனை எச்சரிக்க...

"அப்பா, அம்மாவை இழந்த பொண்ணு துக்கத்தில் இருப்பாளா? இல்லை நடிக்கப் போவாளா?" அவன் கேட்டதும் அவளுக்கு எதுவோ புரிந்தது.

"தற்காலிகமாகத் தான் சொல்லியிருக்கேன். நிரந்தரமா இல்லை."

"ஓஹோ, அப்படி ஒரு நினைப்பிருக்கா?"

'அப்படி ஒரு நினைப்பில் தான் நான் இப்படிச் சொன்னது... இடைப்பட்ட காலத்தில் நீ மாறிவிடுவாய் என்று நம்புகின்றேன். நீ எனக்கு நல்ல மனைவியாக மாறுகின்றாயோ இல்லையோ, ஐயாவுக்கு நல்ல பேத்தியாய் மாற வேண்டும்.' என்று நினைத்தவன் அவளிடம் தனது கோபத்தைச் சற்று குறைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி கொண்டான். அவளை மாற்ற வந்து விட்டு அவன் கோபத்தில் தன்னிலை மாறி போவது நல்லதில்லையே. அது தவறு என்று அவனுக்குப் புரிந்தது.

"இப்போதைக்கு நல்லா ரெஸ்ட் எடு... சந்தோசமா இரு. பிறகு நடிப்பை பத்தி பார்த்துக்கலாம்." என்று தன்மையாகக் கூறியவனைக் கண்டு அவள் சிறிது சமாதானமானாள்.

"இப்போ சாப்பிட போகலாமா?" என்று அவன் கேட்க...

"ம்..." என்றவள் முன்னால் நடந்தாள்.

"இனி நீ என்னோட பெர்மிசன் இல்லாம என் ரூமுக்கு வர கூடாது." என்று அவள் திட்டவட்டமாகக் கூற...

"முக்கியமான விசயமாக இருந்தால்...?" அவன் விசமத்துடன் கேட்க...

"தலை போகிற விசயமா இருந்தாலும் உள்ளே வரவே வராதே..." என்று சிடுசிடுத்தவள் விரைவாக முன்னே நடந்தாள். அவனோ சிரித்தபடி அவளைப் பின்தொடர்ந்தான்.

அதே நேரம் தீபன் தனது ஆட்களிடம் தொலைக்காட்சி திரையில் தெரிந்த சிவகுமரனை காட்டி, "யாருடா இது? பார்க்க ஹீரோ மாதிரி இருக்கான். ஆனா என் வாழ்க்கையில் வில்லனா வந்திருக்கிறானே. இவன் எதுக்கு டார்லிங் விசயத்தில் தலையிடுறான்?" என்று குழப்பத்துடன் கேட்டான். அவனுக்குச் சிவகுமரன் மீது பெருத்தச் சந்தேகமாக இருந்தது.

"தெரியலை அண்ணாத்த... அண்ணியோட கம்பெனிக்கு எல்லாம் அவன் தான் பொறுப்பேத்து இருக்கான். இப்போ அண்ணி விசயத்திலும் தலையிடுறான்."

சிறிது நேரம் யோசித்த தீபன் பின்பு வில்லன் சிரிப்பு சிரித்தபடி, "அது எப்படிடா ஆடுன காலும், பாடிய வாயும் சும்மா இருக்கும். நாம விரிக்கிற விதத்தில் வலையை விரித்தால் மீன் தானாய் வந்து வலையில் சிக்கிக்கப் போகுது." என்று கூறியவன் அதற்கான திட்டத்தைப் பற்றி இப்போதே யோசிக்க ஆரம்பித்தான்.

***************************

இரவு வேலை முடிந்து களைத்து வந்த சிவகுமரன் கழுத்தில் இருந்த டையைத் தளர்த்தியபடி சோபாவில் அமர்ந்தான். யாராவது சூடாகக் காபி கொண்டு வந்து தர மாட்டார்களா?, இதமாகத் தலையைப் பிடித்துவிட மாட்டார்களா? என்று அவனது மனம் ஏங்கியது.

'உன்னைப் பார்த்துக்க, உனக்கு ஆறுதல் சொல்ல, உன் மனம் நோகாம நடக்கத்தான் மனைவி வேண்டுவது. ஆனால் இங்கே...??? நீ சின்னம்மாவை கல்யாணம்

பண்ணிக்கிட்டால்... நீ தான் அவங்களுக்கு இதை எல்லாம் செய்யணும்.' இப்போது அன்னை கூறியது அவனுக்கு நினைவு வந்தது.

"நீங்க ஒரு தீர்க்கதரிசிம்மா." அவனது உதடுகள் முணுமுணுத்துக் கொண்டது.

"சார்..." பணிப்பெண் அழைப்பில் அவன் அவளை ஏறிட்டான்.

"மேம்மை காணோம் சார்..."

"வாட்...?" அவன் பதறியபடி தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தான். இரவு மணி பதினொன்று ஆகியிருந்தது.

"முதல்லேயே சொல்றதுக்கு என்ன?" அவன் அடக்கப்பட்ட கோபத்துடன் சீறினான்.

"இப்போ தான் மேம்க்கு பால் எடுத்துட்டு போனேன். ரூமில் அவங்களைக் காணோம்."

"எல்லா இடத்திலேயும் தேடினீங்களா?" என்று கேட்டபடி அவன் பதட்டத்துடன் சோபாவில் இருந்து எழுந்தான்.

"தேடியாச்சு..." என்று கூறிய அந்தப் பெண்மணி தலைகுனிந்து நின்றாள்.

சிவகுமரன் ஒன்றும் பேசாது வெளியில் வந்தவன் காரை புயல் வேகத்தில் கிளப்பிக் கொண்டு சென்றான். அவனது மனம் மனைவிக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது என்று தனக்குள் வேண்டி கொண்டிருந்தது. அவனுக்குப் பதட்டத்தில் வியர்த்து வழிந்தது. அவனது இதயம் பயத்தில் வேகமாகத் துடிப்பது அவனுக்குச் சத்தமாகக் கேட்டது. அவனால் சாலையில் கவனத்தைப் பதிக்க முடியவில்லை. அவனது கைகளில் கார் தடுமாறியது. சாலை தெரியாதபடி அவனது விழிகளை ஏதோ ஒன்று மங்கலாக மறைத்தது.

'ச்சூ, என்னதிது?' என்று அவன் தனது விழிகளைத் துடைத்துக் கொண்ட போது அவனது கையில் மெல்லிய நீர்ப்படலம்... அது அவனது கண்ணீரின் தடம்...!

மஞ்சள் கயிறு மாயம் அவனுள்ளும் மாயாஜாலம் நிகழ்த்தி இருந்தது. மங்கையவள் அவனது மனதினை மயக்கி மாயம் செய்திருந்தாள். அவனது குணத்தை மீறி, அவனது இயல்பை மீறி அவனது மனம் அவள்பால் மெல்ல சாய்ந்திருந்தது...

"இம்மையும் நீயே மறுமையும் நீயே என்னுயிர் காதல் நீயே,
நீயின்றி ஊரும் உறவும் இல்லை உறவாட நீ வேண்டுமே,
உயிரின்றி உடலும் உணர்வும் இல்லை உயிர் மூச்சாய் நீ வேண்டுமே,
உனக்காகப் பிறந்தேனே உன்னுடன் வாழவே பிரியாமல் இருப்பேனே உன்னுடன் வாழவே
நீயே நீயே என் காதல் நீதானே நீயே நீயே என் வாழ்வும் நீதானே"

தொடரும்...!!!

# அத்தியாயம் : 8

சிவகுமரன் தனது மனதின் படபடப்பை குறைக்க வேண்டி காரை சாலையின் ஓரமாக நிறுத்திவிட்டு ஸ்டியரீங் வீலில் தலைகவிழ்ந்தான். சென்னை அவனுக்குமே புதிது. அபிஷரிகாவை எங்கே போய்த் தேடுவது? என்று அவனுக்குப் பெரும் குழப்பமாக இருந்தது. சற்றுத் தன்னை நிதானப்படுத்திக் கொண்டவன் அவளது அலைப்பேசிக்கு அழைத்தான்... அவள் மறுபுறம் எடுக்கவே இல்லை. அடுத்து அவளது மேலாளருக்கு அழைத்து விபரம் கேட்டான். அவனுக்கும் எந்த விபரமும் தெரியவில்லை. பின்னர் ரஞ்சனிக்கு அழைத்துப் பேசினான். அவளும் மதியத்திற்கு மேல் அபிஷரிகாவை தான் பார்க்கவில்லை என்று கூற... அவன் தான் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

இறுதியில் அவன் ஆகாஷிற்கு அழைக்க... அவனும் அலைப்பேசியை எடுக்கவில்லை. ஒருவேளை தூங்கி விட்டானோ? என்று யோசித்தவன் காரை கிளப்பினான். அவள் எப்போதும் செல்லும் பாரின் முகவரியை அவளது ஓட்டுநரிடம் இருந்து விசாரித்து அங்கேயும் சென்று பார்த்தான். அங்கும் அவள் இல்லை. தனியொருவனாக அவன் சென்னையின் எல்லா இடங்களிலும் அவளைத் தேடினான். பின்பு கடற்கரை சாலையில் அவளைத் தேடி அலைந்தான். நீண்ட தூரம் கடற்கரை சாலையில் வந்தவன் தன் முன்னால் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை முந்தி கொண்டு சென்றான். அவன் அவசரம் அவனுக்கு... அந்த வாகனமோ அடுத்த நொடி அவனை முந்தி கொண்டு செல்ல... அவனுக்கு ஆத்திரம் வந்தது அவன் மீண்டும் அதை முந்தி கொண்டு சென்றவன்,

"எப்படி வேகமா போறான்னு பாரு? எங்கேயாவது முட்டிக்கிட்டு சாகப் போறான்." என்று திட்டியபடி பக்கவாட்டுக் கண்ணாடியில் பார்த்தவன் அப்படியே அதிர்ந்து போனான். ஏனெனில் அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி கொண்டிருந்து அபிஷாரிகா... அவளின் பின்னே அந்த அரைவேக்காடு ஆகாஷ் அமர்ந்திருந்தான்.

"இவளை..." என்று கோபத்தோடு முணுமுணுத்தபடி காரை சாலையின் குறுக்கே நிறுத்திவிட்டு சிவகுமரன் காரிலிருந்து இறங்கினான்.

அபிஷரிகா வந்த வேகத்திற்குச் சிவகுமரன் திடுமெனக் காரை நிறுத்தியதில் சற்று தடுமாறி காரின் மீது இருசக்கர வாகனத்தை டொம்மென்று பெரும் சத்தத்துடன் மோதி நின்றாள். அதுவே அவளுக்கு அதிர்ச்சி என்றால்... எதிர்பாராது சிவகுமரனை அங்குக் கண்டதும் அவள் திகைத்து போய் அவனை விழி விரிய பார்த்தபடி அப்படியே அசையாது அமர்ந்திருந்தாள். அவளுக்குப் பின்னால் அமர்ந்திருந்த ஆகாஷ் மட்டும் பயத்துடன் வண்டியில் இருந்து இறங்கி நின்றான்.

நேரே அவர்களை நோக்கி வந்த சிவகுமரன் வந்த வேகத்தில் ஆகாஷின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை விட்டான். ஆகாஷ் கன்னத்தில் கை வைத்தபடி திருதிருத்தான். அதில் பயம் கலைந்தவள் வண்டியை விட்டு இறங்கி வந்து,

"வண்டி ஓட்டியது நான்... நீ எதுக்கு அக்கியை அடிக்கிற?" அவள் வரிந்து கட்டி கொண்டு அவனிடம் சண்டைக்குப் போனாள்.

"வாயை திறந்த கொன்னுருவேன்டி..." அவளைக் காணாது தவித்த அவனது மனதின் தவிப்புக் கோபமாக வெளிவந்தது.

"எங்கே கொல்லுடா பார்க்கலாம்?" என்று அவள் அவனை நெருங்கி வர...

"உன்னைக் கொன்னுட்டு நான் உயிரோட சாகறதுக்கா...?" என்று தனக்குள் முணுமுணுத்தபடி அவளை முறைத்தவன் பின்பு ஆகாஷ் புறம் திரும்பி,

"ரெண்டு பேரும் எங்கே போயிக்கிட்டு இருக்கீங்க...?" என்று உறுமலாகக் கேட்க...

"சும்மா ஒரு ஜாலி ட்ரிப்..."

"அடுத்தவங்களைப் பதற வைக்கிறதுக்குப் பெயரு ஜாலி ட்ரிப்பா?" அவன் கோபத்தில் மீண்டும் தனது கையை ஓங்க... அவள் அவனது கையைப் பிடித்துக் கொண்டாள்.

"நான் தான் அக்கியை கூப்பிட்டேன். வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறது போர் அடிச்சது அதான்."

'மனுசன் பதறியடிச்சிட்டு, உயிரை கையில் பிடிச்சிட்டு உன்னைத் தேடிட்டு இருக்கேன்... உனக்கு ஜாலி ட்ரிப் கேட்குதா? உன்னை எல்லாம்...' என்று மனதில் நினைத்தவன் ஆகாஷிடம் திரும்பி,

"கொஞ்சம் திரும்பி நில்லு..." என்று கர்ஜனை குரலில் உத்தரவிட... ஆகாஷ் பயத்துடன் மறுபக்கம் திரும்பி கொண்டான்.

சிவகுமரன் தனது கையைப் பிடித்திருந்த அபிஷரிகாவின் கையை உதறியவன் அடுத்த நொடி அவளது தாடையில் வலக்கையைப் பதித்து அவளது முகத்தைத் தன் அருகில் இழுத்தான். அவனது முரட்டுப் பிடியில் அவளுக்கு மிகவும் வலித்தது. அவள் கத்த வாய் திறப்பதற்குள் அவன் அவளது இதழ்களைத் தனது இதழ்களால் சிறை செய்திருந்தான். அவன் தனது மனதின் தவிப்பை ஒற்றை இதழொற்றலில் மறக்க நினைத்தான். எங்கே மறந்தால் தானே?

'இன்னொரு தடவை இப்படி என்னைத் தவிக்க விட்டு போவியா ராட்சசி?' என்று அவன் மனதிற்குள் மீண்டும் மீண்டும் கேட்டபடி திரும்பத் திரும்ப அவளது இதழில் புதைந்தான். புதைந்த பின்பு தான் தெரிந்தது அவளது இதழ்கள் மீளவே முடியாத புதைகுழி என்பது... அதிலும் சுற்றிலும் நிலவிய ஏகாந்த சூழ்நிலை வேறு அவனை இன்னமும் மயக்கி இருந்தது. ஆகாஷ் இருப்பதால் வேறுவழியின்றி இதழொற்றலை முடிவுக்குக் கொண்டு வந்தவன் அவளை விட்டு விலகினான்.

"நீ என்ன தப்பு பண்ணினாலும் என்னுடைய தண்டனை இது தான்." அவன் தனது மனதின் தடுமாற்றத்தை மறைக்க எண்ணி வெளியில் கெத்தாகவே கூறினான்.

அபிஷரிகா கணவனது முத்தத்தில் திகைத்துப் பின் அவனைக் கோபத்துடன் முறைத்து பார்த்தவள், "பொறுக்கி, பொறுக்கி..." என்றபடி அவனை அடிக்கத் துவங்கினாள். அவளது செயலில் சிவகுமரனின் கோபம் எல்லாம் வடிந்து அவன் இயல்பு நிலைக்குத் திரும்பினான்.

"வலிக்குதுடி ராட்சசி... விடுடி..." என்று சிரித்தபடி கூறியவன் அவளது கைகளைப் பிடித்துத் தடுத்தான்.

"சார், நான் திரும்பலாமா?" ஆகாஷ் பரிதாபத்துடன் கேட்டான்.

இருவரும் தங்களது சண்டையில் அவனை மறந்து போயிருந்தனர். அபிஷரிகா நண்பன் அருகில் வந்தவள்,

"அவன் திரும்பி நிக்கச் சொன்னா உனக்கு எங்கேடா புத்தி போச்சு? லூசு, லூசு..." என்று திட்டியபடி அவனது தலையில் நங்கென்று கொட்டினாள்.

"பேபிம்மா..." ஆகாஷ் அவளைப் பரிதாபமாகப் பார்த்தான்.

"டேய், நீ எதுக்குடா அவளைப் பேபிம்மான்னு கூப்பிடற?" சிவகுமரன் நாக்கை துருத்தியபடி கோபத்துடன் ஆகாஷை நோக்கி வந்தான். அவனைக் கண்டு பயந்த ஆகாஷ் அபிஷரிகாவின் பின்னே ஒளிந்து கொண்டான்.

"அக்கியும், நானும் சின்ன வயசில் இருந்து பிரெண்ட்ஸ்... அப்போ இருந்து இப்போ வரை அவன் என்னை அப்படித்தான் கூப்பிடுவான்."

"அதனால் தான்டி அவனைச் சும்மா விடறேன்." என்று மனைவியை முறைத்த சிவகுமரனை ஆகாஷ் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"பேபிம்மா, சார் உன் கிட்ட உரிமையா பேசுறாரு... யாரு இவரு?"

"ஏன்டா அரைவேக்காடு... நடு ரோட்டில் உன் பேபிம்மாவுக்கு நச்சுன்னு முத்தம் கொடுக்கும் போதே தெரிய வேண்டாம்,

நான் யாருன்னு...?" தனது முழுக்கை சட்டையை மடக்கி விட்டபடி கேட்ட சிவகுமரனை ஆகாஷ் புரியாது பார்த்தான்.

"அவன்... மிஸ்டர். சிவகுமரன், ஹஸ்பெண்ட் ஆஃப் மிஸஸ். அபிஷரிகா சிவகுமரன்..." என்று சிறிதும் அலட்டி கொள்ளாது நக்கலாய் கூறினாள் அபிஷரிகா.

"உனக்குக் கல்யாணமாகிருச்சா?"

"கல்யாணம் ஆனதால் தான்டா அவன் எனக்குப் புருசன்... என்ன புரிஞ்சதா?" என்று மீண்டும் அவனது தலையில் கொட்டினாள் அபிஷரிகா.

"ம்... ஏதோ புரிஞ்சது..." என்ற ஆகாஷை பார்த்து சிவகுமரன்,

"நீ காரை எடுத்துட்டு உன் வீட்டுக்கு போ... நான் பைக்கில் அபியை கூட்டிட்டு போறேன்." என்க... ஆகாஷ் சரியென்று விட்டு அபிஷரிகாவிடம் விடைபெற்று காரை நோக்கி நடந்தான்.

"நீ என்ன அவனைப் பராக்கு பார்த்துட்டு இருக்க... வந்து வண்டியில் ஏறு..." என்ற சிவகுமரன் ஸ்டைலாக வண்டியில் ஏறியமர்ந்தான்.

அபிஷரிகா கோபத்துடன் எதையோ முணுமுணுத்தபடி வண்டியின் பின்பக்கம் வந்து ஏறியமர்ந்தாள். சிவகுமரன் எடுத்தவுடன் வண்டியின் வேகத்தை அதிகரிக்க... அவள் பயத்துடன் அவனது இடுப்பை வளைத்துப் பிடித்துக் கொண்டு அவனது முதுகில் முகம் புதைத்து கொண்டாள். அவளது செயலில் அவனது முகத்தில் விரிந்த புன்னகை தோன்றியது. சிறிது நேரம் கழித்து,

"ஏய் தூங்குமூஞ்சி, தூங்கிட்டியா?" காற்றைக் கிழித்துக் கொண்டு கேட்ட அவனது பேச்சுச் சத்தத்தில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள். அவளைப் பக்கவாட்டுக் கண்ணாடியில் பார்த்தவன்,

"அதிகாலை ஒரு மணி, கடற்கரை சாலை, ஏகாந்த சூழ்நிலை... ரசிச்சு அனுபவிக்கணும்... அதை விட்டுட்டு தூங்கிட்டு வர்ற... தூங்கு மூஞ்சி..." என்று அவளை உசுப்பேத்த...

"நான் ஒண்ணும் தூங்கலை..." என்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பதிலளித்தவள் அவன் சொன்னது போல் சுற்றுப்புறத்தை அப்போது தான் கவனித்துப் பார்த்தாள். இருள் சூழ்ந்த அந்த ஏகாந்த வேளை அவளது மனதினை மயக்கியது.

"யாஹூ..." என்று அவள் இருகரங்களையும் விரித்துச் சந்தோசத்தில் கத்தினாள். அவளது உற்சாகம் அவனையும் தொற்றிக் கொண்டது.

"ஓய்... என்னைக் கொஞ்சம் கெட்டியா பிடிச்சுக்கோ..." என்று அவன் கூற...

"முடியாது... போடா..." அவள் இருகரங்களையும் கட்டி கொண்டு மறுத்தாள்.

"அப்போ சரி... உனக்கு வேண்டாம்ன்னா எனக்கு வேண்டாம்."

"என்னதுடா வேண்டாம்?"

"வீலிங் செஞ்சு காட்டலாம்ன்னு பார்த்தேன். உனக்குத் தான் பிடிக்கலையே." என்று அவன் சோகமாகச் சொல்ல...

"சிவூ, சிவூ... ப்ளீஸ்டா..." அவள் கெஞ்சவும்... போனால் போகிறது என்று அவன் சம்மதித்தான்.

"அப்போ பக்கத்தில் வந்து என்னைக் கட்டிப்பிடிச்சுக்கோ..."

"ம், ம்..." என்றவள் ஆர்வத்தோடு அவனை இறுக அணைத்துக் கொண்டு அவனது தோள்பட்டையில் நாடியை பதித்து,

"நான் ரெடி சிவூ..." என்று உற்சாகமாகக் கூற...

அவளது நெருக்கம் ஆண்மகன் அவனை மயக்கத்தில் ஆழ்த்த... அடுத்த நொடி அவன் பைக்கை ரேஸ் செய்து வண்டியின் முன் சக்கரத்தை மேலே தூக்கி இருந்தான். பின் சக்கரத்தை ஆதாரமாகக் கொண்டு வண்டி சீறலுடன் சாலையில் வேகமாக முன்னே செல்ல... சட்டென்று தலைகீழாக உலகம் மாறியதை கண்டு சற்று அதிர்ந்து பின்பு,

"வாவ்..." என்று கூச்சலிட்டபடி அவள் அவனை அணைத்து கொண்டாள். அவன் சிரித்தபடி சிறிது தூரம் அப்படியே ஓட்டி சென்று பின்பு வண்டியை சாதாரணமாக ஓட்டினான்.

"இன்னொரு தடவை சிவூ..." அவள் கெஞ்ச...

"இன்னைக்கு இது போதும்..." அவன் கறாராய் கூற...

"போடா, ஸ்ட்ரிக்ட் ஆபிசர்..." என்றவள் அவனைக் கண்டு பழிப்பு காட்டியபடி தள்ளியமர்ந்து கொண்டாள்.

"சரி, எங்கே போக ரெண்டு பேரும் இப்படி அர்த்த ராத்திரியில் கிளம்பினீங்க?"

"சும்மா தான்..." அவள் கூறியதற்கு அவன் ஒன்றும் பேசாது சாலையின் ஓரமாய் வண்டியை நிறுத்தினான்.

"இங்கே எதுக்குடா?"

"கடல் அலையில் விளையாட விருப்பமா?"

"இதென்ன கேள்வி விருப்பம் இல்லாமல் இருக்குமா?" என்றவள் அவனுக்கு முன்னரே வண்டியை விட்டு இறங்கி கடலை நோக்கி செல்ல ஆரம்பித்திருந்தாள். அவன் சிரித்தபடி அவளைப் பின்தொடர்ந்தான்.

அலை கடலில் தண்ணீரை இறைத்து விளையாடி கொண்டிருந்தவளை புன்னகை முகத்துடன் பார்த்தபடி சிவகுமரன் மணலில் அமர்ந்தான். சிறு குழந்தையெனத் துள்ளி குதித்து விளையாடி கொண்டிருந்தவளின் முகத்தில் தோன்றிய வர்ணஜாலத்தை ரசித்துப் பார்த்திருந்தான் கணவனவன்... அவளது சந்தோசத்திற்காக எதையும்

செய்யலாம், எதையும் விட்டுக் கொடுக்கலாம் என்றே அவனுக்குத் தோன்றியது.

திடுமென அவன் மீது மழை பொழிந்ததில் அவன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவன் மனையாள் தான் கைகளில் நீரை ஏந்தி கொண்டு வந்து அவன் மீது ஊற்றி விளையாடி கொண்டிருந்தாள்.

"ஏய்..." என்றபடி எழுந்தவன்,

"என் மேலா தண்ணீரை ஊற்றுகிற... உன்னை..." என்றபடி தனது பேண்ட்டின் கால் பகுதியை மேலேற்றி விட்டு கொண்டவன் அவளை நோக்கி முன்னேறினான்.

"வேண்டாம் சிவூ... சொன்னால் கேளு..." என்று கூறியபடி அவள் பின்னால் நகர...

"கேட்க மாட்டேன் போடி..." என்றவன் அவளைப் பார்த்தபடி முன்னால் நகர்ந்தான்.

பின்னால் நகர்ந்து கொண்டே வந்தவள் கடல் அலையில் தடுமாறி கடலில் விழுந்தாள். அடுத்தக் கணம் கடலலை அவளை அபிசேகம் செய்தது. அதைக் கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"நல்லா வேணும் உனக்கு..." என்று சிரித்தவனின் கையைப் பிடித்து அவள் இழுக்க... அவன் நிலைதடுமாறி அவள் மீது விழுந்தான். இப்போது அவனும் முழுதாய் நனைந்திருந்தான். அவளைக் கண்டு கோபப்பட்டு முறைக்க முயன்றவன் பின் முடியாது வாய்விட்டுச் சிரித்தான். அவனது சிரிப்பை கண்டவள் தானும் வாய்விட்டு சிரித்தாள்.

"போகலாம் வா..." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வந்தான். வீட்டிற்குப் போகும் வழியில் அவளுக்குச் சூடாக டீ வாங்கிக் கொடுத்து அழைத்து வந்தான். ஈர உடையில் குளிரில் நடுங்கி கொண்டிருந்தவளுக்கு அது இதமாக இருந்தது. அந்த இதம் வீடு வந்து சேரும் வரை தொடர்ந்தது.

"ரொம்பத் தேங்க்ஸ் சிவூ..."

"தேங்க்ஸ் எல்லாம் எதுக்கு...? நான் என் கடமையைச் செய்தேன்." என்றான் அவன் இலகுவாக... கணவனான அவனுக்கு மனைவியைச் சந்தோசமாக வைத்திருக்கும் கடமை இருக்கிறது அல்லவா!

அவனது பதிலில் அவளது அத்தனை நேர இதம் மறைந்தது. அவன் அருகில் வந்து அவனது சட்டை காலரை பற்றி அவனைக் கோபத்துடன் அவள் பார்க்க... அவனோ ஆர்வத்துடன் அவளைப் பார்த்தான்.

"ஐ ஹேட் யூ..." என்று வார்த்தைகளைக் கோபத்துடன் கடித்துத் துப்பியவள் அங்கிருந்து விறுவிறுவென்று சென்றுவிட்டாள். அவனோ புரியாது அவளைப் பார்த்திருந்தான். அவளைப் புரிந்து கொள்ள அவனுக்கு இந்த ஒரு ஜென்மம் போதாது போலும்...!

********************************

மறுநாள் காலையில் அபிஷரிகாவை பார்ப்பதற்குத் தீபன் வந்திருந்தான். அவனைப் பற்றி அவளுக்கு நன்கு தெரியும். ஆனாலும் அவனைப் பகைத்துக் கொள்ள அவள் விரும்பியது இல்லை. அவள் இருக்கும் துறையில் யாரையும் பகைத்துக் கொள்ள முடியாது. பகைத்து கொள்ளவும் கூடாது. அதனால் அவள் எப்போதும் போல் உதட்டில் செயற்கையாய் படரவிட்ட புன்னகையுடன் அவனை வரவேற்றாள்.

"வாங்க தீபன் சார்..." என்றவளை கண்டு...

"அபி டார்லிங், நான் உனக்குச் சாரா?" என்று அவன் அசடு வழிந்தான்...

"அதானே அபி டார்லிங்... அவர் என்ன உனக்குச் சாரா? அவருக்கு உன் சித்தப்பா வயசு இருக்கும். அதனால் நீ அவரைச் சித்தப்பான்னு கூப்பிடு." என்றபடி அங்கு வந்தமர்ந்தான் சிவகுமரன். சிவகுமரனை கண்டதும் தீபனின் முகம் ஒரு மாதிரியாய் மாறிப் போனது.

"சார் யார்?"

"அது வந்து...?" அவள் சொல்ல முடியாது திணற...

"அவங்களோட வெல்விஷர்... அவங்களோட கேர் டேக்கர்... இப்படி நிறையச் சொல்லலாம். அது எதுக்கு உங்களுக்கு...? நீங்க வந்த விசயத்தைச் சொல்லுங்க?" சிவகுமரன் கால் மேல் கால் போட்டபடி தீபனின் கதையைக் கேட்க தயாரானான்.

"அபியோட அப்பா, அம்மா இறந்த துக்கத்தைக் கேட்க வந்தேன். அவங்க இறந்த சமயம் நான் ஃபாரின்ல இருந்தேன். அதான் வர முடியாம போச்சு."

"ரொம்ப நல்லதா போச்சு." என்ற சிவகுமரனை கண்டு,

"எது?" என்று சற்று கோபத்துடன் கேட்டான் தீபன்.

"நீங்க இப்போ வந்ததைச் சொன்னேன்." என்ற சிவகுமரன் அவனை மேலே பேசுமாறு கையசைத்தான்.

"தற்காலிகமா நடிக்க மாட்டேன்னு வேற சொல்லி இருக்கியாம்... ஏன் டார்லிங்?"

"விளக்கமாறு பிஞ்சிரும்." சிவகுமரன் திடுமெனக் கூற...

"என்ன சொன்னீங்க?" தீபன் புரியாது கேட்டான்...

"தோட்டத்தில் வேலைக்காரி பெருக்கிட்டு இருந்ததைச் சொன்னேன்."

"ஆமாம் தீபன்... அதுக்கு என்ன இப்போ?" அபிஷரிகா அவசரமாக இடையில் தலையிட்டாள்.

"அது கூட நீ சொல்லலையே. சார் தான் அறிவிப்பு கொடுத்தார் போலிருக்கு."

"ஆமா, அவர் தான் என்னோட கேர் டேக்கர்ன்னு சொன்னாரே."

"அதான் மேடமே சொல்லிட்டாங்களே. கிளம்பு, கிளம்பு... இடத்தைக் காலி பண்ணு." என்று சிவகுமரன் தீபனை விரட்டினான். தீபன் அவனைக் கண்டு கொள்ளாது அபிஷரிகாவிடம்,

"இன்னும் மூன்று மாதத்தில் சிங்கப்பூரில் ஸ்டார் நைட் புரோக்கிராம் ஒண்ணு ஏற்பாடு பண்ணியிருக்கேன். அதில் நீ கட்டாயம் கலந்துக்கணும் அபி. நீ கலந்துக்கிட்டால் தான் புரோக்கிராம் களை கட்டும். கூட்டம் சும்மா பிய்ச்சுக்கும்." என்று கூற...

"நானா?" என்று அவள் தயங்கினாள்...

"அபி கட்டாயம் கலந்து கொள்வாள்." என்று சிவகுமரன் தீபனுக்கு உறுதி அளித்தான். அபிஷரிகா அவனைக் கண்டு முறைக்க... அவனோ அவளைக் கண்டு கண்சிமிட்டி சிரித்தான். இதைப் பார்த்த தீபனுக்கு எரிச்சலாக வந்தது.

"சரி, நான் கிளம்பறேன் அபி..." என்ற தீபன் கிளம்ப...

"அப்புறம் தீபன், உங்க மனைவி, பொண்ணு எல்லோரும் நலம் தானே?" சிவகுமரன் கேட்டதும் தீபனின் முகம் ஒரு மாதிரியாய் மாறிவிட்டது.

"ஏன்னா, அவங்க உங்களை விட்டுப் பிரிஞ்சிட்டதா கேள்விப்பட்டேன். அதான் கேட்டேன்." சிவகுமரனுக்குப் பதில் சொல்லாது தீபன் அவனை முறைத்தபடி அங்கிருந்து சென்றுவிட்டான்.

"சிவூ, நீ பேசுறது கொஞ்சமும் சரியில்லை... அவரோட பெர்சனல் விசயத்தில் நீ எப்படித் தலையிடலாம்?" அபிஷரிகா கோபத்துடன் கத்தினாள்.

"என் பெர்சனலில் அவன் தலையிட்டால்... நானும் அவனோட பெர்சனலில் தலையிடுவேன்." அசால்ட்டாகக் கூறிய சிவகுமரன் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டான். அபிஷரிகா தலையைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக அமர்ந்திருந்தாள்.

*****************************

அடுத்து வந்த நாட்கள் அமைதியாகக் கழிந்தது. அன்று ஞாயிறு விடுமுறை தினம் மற்றும் வாரயிறுதி நாளும் கூட... அதனால் சிவகுமரன் தனது ஊருக்கு கிளம்பி சென்றான். ஆனால் அதை மனைவியிடம் சொல்ல வேண்டும் என்பதை அவன் மறந்து போனான். ஊருக்கு சென்று இறங்கியவனுக்கு அப்படியொரு வரவேற்பு கிடைத்தது. அம்ரிதா அவனை விட்டு கீழே இறங்கவில்லை. அவனது தோளில் தொற்றிக் கொண்டு சுற்றினாள்.

"குமரா, சந்தோசமா இருக்கியாப்பா?" என்று கேட்டபடி அவன் அருகில் வந்து அமர்ந்தார் வேணி.

"என்னைப் பார்த்தால் எப்படித் தெரியுது?"

"கொஞ்சம் மெலிஞ்சு போன மாதிரியிருக்கே."

"வேலை அதிகம்மா... மத்தபடி வேறு எந்தப் பிரச்சனையும் இல்லை."

"சின்னம்மா... உன் கிட்ட..." எப்படிக் கேட்பது என்று தெரியாது அவர் நிறுத்த...

"அம்மா, நீங்க என்ன கேட்க வர்றீங்கன்னு எனக்குப் புரியுது. சின்னம்மா சின்னக் குழந்தை மாதிரி... நம்ம கங்காவை விடச் சின்னப் பொண்ணு அவங்க... எங்க காலம் இன்னும் நீண்டு கிடக்கு. நீங்க பயப்பட வேண்டாம்."

"உங்க ரெண்டு பேருக்கும் இடையில் எல்லாம் ஒத்து வருதா? அவங்க உயரம் வேறு... நம்ம நிலை வேறு..."

"இப்போ வரை என்னை வீட்டை விட்டு துரத்தாம வீட்டில் தானே வச்சியிருக்கிறாள். எல்லாம் சரியா வரும்மா." என்றவன் அன்னையின் கலக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டான்.

அதே சந்தேகத்தைக் கேட்ட பொன்னம்பலம், காவேரியிடமும் அதே பதிலை கூறி சமாதானப்படுத்தியவன் சென்னை வந்து சேர்ந்த போது

இரவு பனிரெண்டு மணியாகி இருந்தது. வீட்டிற்கு வந்தவன் நேரே தனது அறைக்குச் செல்லும் முன் மனைவியின் அறைக்குச் சென்று பார்த்தான். ஆனால் படுக்கையில் அவள் இல்லை. அவனுள் பதற்றம் தொற்றிக் கொண்டது. அவன் உடனே காவலாளிக்கு அழைத்து விவரம் கேட்டான். ஒரு மணி நேரத்திற்கு முன் தான் அபிஷரிகா தனது காரில் வெளியில் சென்றதாகக் காவலாளி கூற... அவன் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டான். பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளைத் தேடி முதலில் நட்சத்திர விடுதியின் பாருக்குச் சென்றான். அவன் நினைத்தபடி அவள் அங்கே தான் இருந்தாள்.

"இங்கே என்ன பண்றடி?" என்றவன் அவளது கையைப் பிடித்திழுக்க...

"டேய், யார்டா நீ?" அவள் போதையில் குழறியபடி அவனைப் பார்த்தாள்.

"ம், உன் புருசன்..." என்றான் அவன் பல்லை கடித்தபடி...

"எனக்குக் கல்யாணமாகிருச்சா? எப்போ?" என்று அவள் யோசிக்க ஆரம்பிக்க... பேசுமளவிற்கு அவள் நிதானத்தில் இல்லை என்பதை உணர்ந்தவனாய் அவன் அவளைத் தனது கைகளில் தூக்கி கொண்டான்.

"விடுடா..." என்று அவள் கூறினாலும் திமிறாது அவனது கரங்களில் பாந்தமாய் அடங்கி, அவனது நெஞ்சில் சுகமாய் முகம் புதைத்து கொண்டாள். அவளது செயலில் அவனது நடை ஒரு நொடி தயங்கி நின்றது. அடுத்த நொடி அவளைத் தன்னுடன் சேர்த்து இறுக்கி கொண்டவன் விறுவிறுவெனக் காரை நோக்கி நடந்தான்.

காரில் அவளை இருக்கையில் அமர்த்தி மறுபக்கம் வந்து காரை எடுத்தவன் புயல் வேகத்தில் வீடு வந்து சேர்ந்தான். வீடு வந்ததும் அவளது அறைக்கு அவளைத் தூக்கி வந்து படுக்கையில் படுக்க வைத்தான்.

"சிவூ..."

"இப்போ மட்டும் நான் சிவூன்னு எப்படித் தெரியுது?" அவன் நக்கலாய் கேட்க...

"அது அப்படித்தான்..." என்றவள்,

"நான் தப்புப் பண்ணினால் நீ தண்டனை கொடுப்ப அப்படித்தானே...?" என்க... அவளை முறைத்து பார்த்த சிவகுமரன்,

"போதையில் மட்டையானாலும் ரொம்பத் தெளிவு தான்..." என்று எரிச்சலுடன் கூறினான்.

"நான் ரொம்பத் தெளிவு... அது உனக்குத் தெரியுமா?" என்றவள் அவனது கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்து அவனது முகத்தைத் தன் முகம் நோக்கி இழுத்தாள். அவளது செயலில் அவன் தான் திகைத்து விழித்தான்.

"ம், சிவூ... கிஸ் மீ... தண்டனை கொடு." என்று தனது இதழ்களைக் குவித்துக் காட்டியவளை கண்டு அவன் தலையில் அடித்துக் கொண்டான்.

"நாளைக்குப் போதை தெளிஞ்ச பிறகு தண்டனை கொடுக்கிறேன்." என்றவன் அவளது கரங்களைப் பிரித்தெடுத்து அவளை ஒழுங்காகப் படுக்க வைத்தான். பின்பு அவளுக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு அவன் விலக எண்ணிய போது அவளது வலக்கை அவனது கரத்தினைப் பற்றியது.

"ஏன்டா, என்னைத் தனியா விட்டுட்டு போன...?" அவளது வார்த்தைகளில் அவன் பெரும் அதிர்வுடன் அவளைத் திரும்பி பார்த்தான். தன்னை மனைவி தேடினாளா? அதுவே அவனுக்கு மிகப் பெரிய ஆச்சரியமாக இருந்தது.

"இன்னொரு முறை என்னைத் தனியா விட்டுட்டுப் போய்ப் பார்... இது மாதிரி எல்லாம் குடிச்சிட்டு இருக்க மாட்டேன். திரும்பி வர முடியாத உலகத்துக்குப் போயிருவேன். நான்

செய்ய மாட்டேன்னு மட்டும் நினைக்காதே... நிச்சயம் செய்வேன்." என்று போதையில் உளறியவளை கண்டு அவள் அருகில் அமர்ந்து அவளது தலையைக் கோதி கொடுத்தவன்,

"ஏய் லூசு... ஏன்டி இப்படி எல்லாம் பேசுற?" என்று கேட்டவனது விழிகளில் விழிநீர் கரை கட்டியது.

"அப்போ போக மாட்டேன்னு சொல்லு..." விழி திறவாது பேசி கொண்டிருந்தவளின் முகம் நோக்கி குனிந்தவன்,

"இனி உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்டி. நீயா சொல்ற வரை நான் உன்னை விட்டு போக மாட்டேன்." என்றவன் சிறிதும் தயக்கமின்றி அவளது இதழ்களை வேகமாய்ச் சிறையெடுத்து இருந்தான்.

அவன் எப்போதும் விளையாட்டாய் தான் அவளது இதழ்களில் முத்தமிடுவான். ஆனால் இப்போது அவன் தன்னை உணர்ந்தவனாய், அவளை உணர்ந்தவனாய் எல்லாம் உணர்ந்து, அறிந்து முத்தமிட்டான். அவன் தனது ஒட்டுமொத்த காதலையும் ஒற்றை இதழொற்றலில் காட்டிட நினைத்தான். அவனது இதழொற்றலின் வேகத்திற்கு ஈடு கொடுப்பது போல் அவனது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவளோ அவனது காதலை அறியாது, அவனது மனதினை அறியாது அவனது இதழொற்றலில் சமாதானம் அடைந்து மெல்ல உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

"அம்முலு, ஐ லவ்யூடி..." என்றவனது காதலில் அத்தனை கண்ணீர் தடம்...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 9

"ச்சே, வெயில் காலத்தில் கூடக் கோட், சூட் போட்டுக்கிட்டு... கொடுமைடா சாமி..." என்று முணுமுணுத்துக் கொண்டே

சட்டையில் கையை நுழைத்துக் கொண்டிருந்தான் சிவகுமரன்.

அவன் மெத்த படித்தவன் தான்... ஆனால் இந்த உயர்மட்ட வாழ்க்கை அவனுக்கு அத்தனை பிடித்தமானதாய் இல்லை. எல்லாவற்றையும் உதறி தள்ளிவிட்டு மறுபடியும் கிராமத்துக்குச் சென்றுவிடுவோமா? என்று கூட அவன் யோசித்து இருக்கிறான். ஆனால் எடுத்த கடமையை முடிக்காது அவன் செல்ல முடியாதே. முன்பாவது ஐயாவிற்காக அவன் செய்தான். ஆனால் இப்போது மனம் முழுவதும் நேசத்தைச் சுமந்து கொண்டு தனது மனைவியின் நலனுக்காக எதையும் தாங்கி கொள்ள அவன் தயாராக இருந்தான்...

"சிவூ..." என்று அழைத்தபடி அபிஷரிகா அவனது அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

"ஐயோ, இந்த உலகத்தில் தனியே இருக்கும், அதுவும் சொந்த வீட்டில் இருக்கும் ஆண்மகனுக்குப் பாதுகாப்பு இல்லையா...?" என்று அலறியபடி அவன் வேகமாய்த் தனது சட்டையை அணிந்து கொண்டான்.

அவள் கோபத்துடன் அவன் முன் வந்தவள் நிலைக்கண்ணாடி மேசையிலிருந்த சீப்பை கையில் எடுத்துக் கொண்டு,

"ஏன்டா, இது உனக்கே ஓவரா தெரியலை?" என்று கடுப்புடன் கேட்க...

"இது கம்மி தான்... உன்னைப் பார்த்தால் எனக்கு ரொம்பப் பயமாயிருக்குடி." அவளைக் கண்டாலே பேயாட்டம் போடும் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியாது அவன் இப்படிக் கூறினான்.

அன்று அவள் தனிமையாய் உணர்வதாய்க் கூறியதில் இருந்து அவன் அவளை விட்டு எங்கும் செல்வது இல்லை. அவன் தினசரி வேலை முடிந்ததும் நேரே வீடு வந்துவிடுவான். இருவரும் பெரிதாக இணக்கமாய்ப்

பேசவில்லை என்றாலும் சண்டை, சச்சரவு என்பது கிடையாது. ஏனோ அவள் அமைதியாக இருந்தாள். அதனால் அவனும் அமைதியை கடைப்பிடித்தான். அவன் மறந்தும் அவள் போதையில் உளறியதை இன்னமும் அவளிடம் சொல்லவில்லை.

"உன்னை..." என்றவள் கையிலிருந்த சீப்பை ஓங்கி கொண்டே அவனை நோக்கி வர... அவளது கையை மடக்கி பின்னால் வளைத்து பிடித்தவன் அப்படியே அவளைத் தன்னருகில் இழுத்து அவளது மற்றொரு கையையும் பின்னால் மடக்கி பிடித்தான். இப்போது அவளது கைகள் இரண்டும் பின்பக்கமாய் வளைக்கப்பட்டு அவனது இரு கரங்களில் சிறைப்பட்டு இருந்தது.

"என்னை விடுடா..." என்று திமிறியவளின் மேனி அவனது உடலில் சுகமாய்த் தீண்ட... அவனது மனம் மூங்கில் காடாய் பற்றியெரிய ஆரம்பித்தது. ஆனாலும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"சொல்லு... என்ன விசயமா வந்த?" என்று சாதாரணமாகக் கேட்க...

"முதலில் கையை விடுடா..." அவள் எரிச்சலுடன் சிணுங்கியபடி கூற...

"விடறேன்... ஆனா கையை வச்சிக்கிட்டு சும்மா இருக்கணும்."

"ம், ம்..." வேறுவழியில்லாது அவள் சம்மதித்தாள். உடனே அவளது கைகளை விட்டவன் அவளது தோள் மீது கை வைத்து அவளைத் தள்ளி நகர்த்திவிட்டு கண்ணாடியை பார்த்தபடி கழுத்தில் டை கட்ட ஆரம்பித்தான். அவனை முறைத்தபடி நிலைக்கண்ணாடி மேசை மீது ஏறியமர்ந்தவள்,

"இன்னைக்கு எனக்கு ஸ்டார் நைட் புரோக்கிராம் டான்ஸ் ரிகர்சல் இருக்கு..." என்றவளை அவன் வியப்புடன் பார்த்தான்.

"இதை எதுக்கு என் கிட்ட சொல்ற...?"

"நீ தானே என்னை வீட்டை விட்டு வெளியில் போகக் கூடாதுன்னு சொன்ன..."

"சரி, இப்போ நான் என்ன செய்யணும்?" அவனது முகமும், குரலும் மென்மையைத் தத்தெடுத்து இருந்தது.

"நான் பிராக்டிஸ்க்குப் போகப் போறேன்..." இரு கைகளையும் கட்டி கொண்டு, முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு பிடிவாதம் பிடிக்கும் சின்னப்பிள்ளை போன்று கூறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

"போ..." என்று ஒற்றைச் சொல்லில் பதிலளித்தவன் நாற்காலியில் இருந்த பழுப்பு நிற கோட்டை கையில் எடுத்துக் கொண்டு நகர்ந்தான்.

"உண்மையாவா சொல்ற சிவூ...?" மேசையை விட்டு குதித்து இறங்கியவள் அவனுடன் இணைந்து நடந்தபடி கேட்டாள்.

"உன் கிட்ட நான் பொய் சொல்ல மாட்டேன்." என்றவன் அறை கதவை திறந்துவிட்டு வெளியேறி விட்டான். அவள் அவன் செல்வதைப் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தாள்.

இரவு பதினொரு மணிக்கு நடன பயிற்சி முடிந்து களைப்புடன் தனது பையைத் தூக்கி கொண்டு வெளியில் வந்தாள் அபிஷரிகா. எல்லோரும் கிளம்பி கொண்டிருந்தனர். சிலர் தனியே... சிலர் துணையுடன்... ஆனால் எல்லோர் முகத்திலும் களைப்பையும் மீறி புன்னகை இருந்தது... மகிழ்ச்சி இருந்தது. ஏனோ அபிஷரிகாவிற்கு மட்டும் துக்கமாக இருந்தது. யாருமில்லாத ஒருவித தனிமை அவளைப் பெரிதும் அச்சுறுத்தியது. ஏனோ முன்பிருந்த தைரியம் இப்போது அவளிடம் இல்லை. பெற்றோர் இறந்தபின் ஏதோ ஒரு பாதுகாப்பின்மை உணர்வு அவளுள்... அவள் வெறுமையான மனநிலையுடன் வந்தவள் அங்குக் காரில் சாய்ந்தபடி நின்றிருந்த சிவகுமரனை கண்டதும் சந்தோசம் கொண்டாள். அந்தக் கணம் அவள் மனதிலிருந்த தனிமை

உணர்வு தூர போனது. அவள் முகம் மலர அவனை நோக்கி அடி எடுத்து வைத்தவள் அப்படியே தேங்கி நின்றாள்.

ஆம், சிவகுமரன் மட்டும் தனியே இல்லை. அவனிடம் வேறொரு நடிகை ஒருத்தி சிரித்துச் சிரித்துப் பேசி கொண்டிருந்தாள். அதைக் கண்டதும் அபிஷரிகாவின் முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது. கணவனை நோக்கி செல்ல மனமற்று அவள் தனது காரை நோக்கி நடந்தாள். அப்போது ஏதேச்சையாகத் திரும்பி பார்த்த குமரன் மனைவியைக் கண்டு கொண்டான். அவள் தன்னைக் கவனிக்கவில்லை என்றெண்ணி பேசி கொண்டிருந்த நடிகையிடம் விடைபெற்றுக் கொண்டு மனைவியை நோக்கி ஓடிவந்தான்.

"அபி..." என்றழைத்தபடி அவன் அவள் முன் வந்து நின்றான். அவள் அவனைப் பார்க்காது வேறெங்கோ பார்த்தபடி நின்றாள்.

"வா, போகலாம்..." என்று அவன் அவளை அழைக்க...

"என்னோட கார் இருக்கு. நீ போகலாம்..." அவள் முறைத்துக் கொண்டு கூற... அவளது கோபத்தை அவன் கண்டு கொள்ளவில்லை. அதைப் பற்றி அவன் ஆராயவும் இல்லை. அவளது கோபம் தான் பிரசித்தி பெற்றதே...

"அதைக் காலையில் எடுத்துக்கலாம். இப்போ நீ என் கூட வா..."

"வேண்டாம்... நான் தனியா போய்க்கிறேன்."

"நீ தனியா போகக் கூடாதுன்னு தானே நான் இந்த நேரத்துக்கு வந்தது." அவனது குரலில் என்ன உணர்ந்தாளோ... அவள் அமைதியாகத் திரும்பி நடக்க... அவன் சந்தோசமாக அவளுடன் இணைந்து நடந்தான்.

காரில் வரும் போது அபிஷரிகா அமைதியாக வந்தாள். ஒன்றும் பேசவில்லை. அவன் திரும்பி திரும்பி அவளைப் பார்த்தாலும் அவனும் அவளிடம் பேச முயற்சிக்கவில்லை. வீடு வந்ததும் அவன் காரை நிறுத்தியதும் அவள் முதலில்

இறங்கி விறுவிறுவென உள்ளே சென்றுவிட... அவன் காரை உரிய இடத்தில் நிறுத்திவிட்டு வீட்டிற்குள் நுழைந்தான்.

"அவள் கூட மட்டும் பல்லை காட்டிக்கிட்டு இளிச்சிட்டு பேச தெரியுது. என் கிட்ட மட்டும் பேச முடியலையா?" என்று கத்தியபடி அப்போது தான் வீட்டிற்குள் நுழைந்த சிவகுமரன் மீது பூச்சாடியை எடுத்து வீசினாள் அபிஷரிகா.

சிவகுமரன் மனைவியின் கோபமான இந்தச் செயலை சற்றும் எதிர்பார்க்கவில்லை. அப்படியே திகைப்புடன் நின்றிருந்தவன் நெற்றியின் மீது அந்தக் கைக்கு அடக்கமான பித்தளை பூச்சாடி நங்கென்று மோதி கீழே விழுந்தது. அதில் அவனது நெற்றியில் சிறு கீறல் விழுந்து இரத்தம் பீறிட்டது. அவனது நெற்றியில் இருந்து வழிந்த இரத்தத்தைக் கண்டு அவளது மனம் பதறினாலும் வெளியில் அவள் இறுக்கமாய்க் காட்டி கொண்டாள்.

சிவகுமரனோ வழியும் இரத்தத்தைக் கூடத் துடைக்காது அவளை நோக்கி வந்தான். அவனது செயல் அவளுக்கு அச்சத்தைக் கொடுத்தது.

"நீ எதுக்கு அவள் கிட்ட கொஞ்சி கொஞ்சி பேசிட்டு இருந்த... அதான் நான் இப்படிச் செஞ்சேன்." அவள் தனது செயலுக்கு நியாயம் கற்பித்தாள்.

"கொஞ்சி, கொஞ்சி... அதுவும் நான்...???" அவன் கேள்வி கேட்டபடி அவள் அருகே வந்துவிட்டான்.

"நீ தான்டா பேசின... அவள் ஏதோ உன்னைப் பார்த்து சொன்னாள். அதுக்கு நீ முப்பத்திரெண்டு பல்லையும் காட்டி சிரிச்சிக்கிட்டு இருந்த... அவள் உன்னை இங்கே தொட்டாள். நீ ஒண்ணுமே சொல்லலை." என்று அவனது நெஞ்சின் மீது கை வைத்து அவள் கூறினாள். அவன் பதில் பேசாது குனிந்து அவளது கையைப் பார்த்தான்.

"அவள் என்ன சொன்னாள்? பதிலுக்கு நீ என்ன சொன்ன? சொல்லுடா? சொல்லுடா?" என்று ஆங்காரத்துடன்

கத்தியவள் அவனது நெஞ்சில் மாறி மாறி அடித்தாள். அவளது அத்தனை அடிகளையும் அவன் தாங்கி கொண்டு அசராது நின்றிருந்தான்.

ஒரு கட்டத்தில் ஓய்ந்து போனவளாய் அவள் அடிப்பதை நிறுத்திவிட்டு அவனை ஏறிட்டு பார்த்தாள். அவளது விழிகளில் கோபத்தை மீறி தெரிந்த தவிப்பில், ஏக்கத்தில் அவன் அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கி கொண்டான். இரு கைகளின் கட்டை விரலால் அவளது கன்னத்தை அவன் மிருதுவாக வருட... அதில் அவள் திகைப்புற்று அவனைப் பார்த்தாள்.

"கோபம் தீர்ந்ததா?" என்று அவன் கேட்க...

"அவள் கிட்ட என்ன சொன்ன? அவளை லவ் பண்றேன்னா?" அவளது விடாது கேட்ட கேள்விகளில் அவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"நான் லவ் பண்ண என்னுடைய மனைவி நீ இருக்கும் போது... நான் எதுக்கு அடுத்தவளை போய் லவ் பண்ணணும்? ம்..." நெற்றியில் இருந்து இரத்தம் ஒழுக, இரு புருவங்களைத் தூக்கியபடி கேட்ட கணவனைக் கண்டு நம்புவதா? வேண்டாமா? என்று பாவை நெஞ்சம் ஒற்றையா? இரட்டையா? போட்டது.

"நம்பக் கஷ்டமாயிருக்கா?" என்றவன் அடுத்த நொடி அவளது இதழ் நோக்கி குனிந்திருந்தான்.

அவளது செயல், பேச்சு அவனைக் காயப்படுத்தியிருந்த போதும் அவன் அவளை ஒரு குழந்தையைக் கையாள்வது போல் மென்மையாகக் கையாண்டான். அவன் தனது மனதிலிருந்த ஒட்டுமொத்த காதலையும் ஒற்றை இதழொற்றலில் அவளிடத்தில் காட்டிட எண்ணினான். கணவனது இதழொற்றலில் அவளது மனதிலிருந்த வெம்மை கொஞ்சம் கொஞ்சமாய் அகன்றது. முதலில் திமிறியவள் பிறகு அவனது செயலுக்கு இசைந்து கொடுத்தாள். அவனது நெற்றியில் இருந்து வழிந்த இரத்தம் அவளது நெற்றியில் ஆரம்பித்து அவளது முகம்

முழுவதும் பரவிருந்தது. அந்த இரத்தம் சொல்லாது சொல்லியது அவனது காதலை...

மெல்ல மனைவியின் இதழ்களை விடுவித்தவன் அவளது முகத்தை ஏந்தியிருந்த தனது கைகளை மட்டும் விலக்கி கொள்ளவில்லை. தனது இரத்தம் அவளது உச்சி வகிட்டில் இருந்து வழிய இருந்தவளின் அழகு ஆணவனைப் பெரிதும் சலனப்படுத்தியது. அவன் தனது இரத்தத்தால் அவளைத் தனது மனைவியாய் அங்கீகரித்து விட்டானே... இதை விடவா வெறும் தாலி அவளுக்கான அங்கீகாரத்தைக் கொடுத்து விடப் போகிறது. 'இவள் என்னவள்!' என்கிற கர்வம் அவனுள் முளைத்தது.

"இப்போ நம்புறியா?" என்றவனைக் கண்டு அவள் தூக்கத்தில் இருந்து விழிப்பவள் போல் திருதிருவென முழித்தாள்.

"என்ன...?" என்று திணறலாய் பேசியவளை கண்டு,

"எனக்குப் பல்லு முப்பத்திரெண்டு இல்லை... முப்பத்தொண்ணு தான்னு... ஒரு பூச்சி பல்லை பிடுங்கி ரொம்ப நாளாச்சு..." என்று அவன் நமட்டு சிரிப்புடன் கூற... அவன் கூறியதன் அர்த்தம் புரிந்து அவள் கோபத்துடன் அவனைத் தள்ளிவிட்டு விட்டு அங்கிருந்த சோபாவில் சென்று அமர்ந்தாள். அவன் அவள் முன் கீழே மண்டியிட்டு அமர்ந்து அவளது கரங்களை மென்மையாக பற்றிக் கொண்டான். அவள் தனது கரங்களை விலக்காது அவனைப் பார்த்திருந்தாள். அவனும் சளைக்காது அவளது பார்வையைத் தாங்கி நின்றான்.

"என்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ பெண்களைக் கடந்து வந்திருக்கேன். ஆனா யாரை பார்த்தும் நான் என் காதலை சொன்னது இல்லை. நான் காதலை உணர்ந்தது, சொல்வது எல்லாம் உன் கிட்ட மட்டும் தான்..." என்றவன்,

"ஐ லவ் யூ அம்மு..." என்க...

அவன் தன் காதலை சொன்ன அடுத்த நொடி அவள் அவனது உதட்டின் மீது தனது இதழ்களை அழுத்தமாய்ப் பதித்திருந்தாள். முதலில் திகைத்தவன் பின்பு மெல்ல மெல்ல அவளது செயலை தன்வசமாக்கி கொண்டான். இதழ் யுத்தம் எத்தனை நேரம் நீண்டதோ? அவர்களைத் தொந்திரவு செய்ய அங்கு யாருமில்லை. சிறு சத்தம் கூட இல்லாது அந்த இடம் அப்படியொரு அமைதியினை அவர்களுக்கு அளித்திருந்தது. சிறிது நேரத்தில் மூச்சு வாங்கி இருவரும் பிரிந்தனர். அவள் சோபாவில் கண்மூடி சாய... அவன் அவளது மடியில் முகம் புதைத்து அப்படியே இருந்தான். உடல் கூடாத கூடலை அந்தச் சிறு இதழொற்றல் அவனுக்கு அளித்திருந்தது. அத்தனை சந்தோசம் அவனுக்கு...

"சிவூ, நீ என்னைக் காதலிக்கிறியா?"

மனைவியின் கேள்விக்கு அவளை ஏறிட்டு பார்க்காது முகம் புதைந்த நிலையில் அவன் ஆமென்று தலையசைத்தான்.

"நீயும், நானும் ஒண்ணு தானே?" அதற்கும் அவன் ஆமென்று தலையசைத்தான்.

"நானும் உன்னைக் காதலிக்கணும்ன்னு உனக்கு ஆசையா இருக்கா?" அதற்கும் அவனது பதில் ஆமென்பதே...!

"நீ என்னைக் காதலிப்பது உண்மையாக இருந்தால்...? நான் உன்னைக் காதலிக்க வேண்டும் என்றால்...? உன் பெயரில் இருக்கும் சொத்துக்களை என் பெயருக்கு மாற்றிக் கொடு சிவூ..." என்று அவள் கேட்க...

மனைவியின் வார்த்தைகளில் ஒரு நொடி திகைத்து விழித்த சிவகுமரன் மறுநொடி தன்னைச் சுதாரித்துக் கொண்டு அவளை 'அடேங்கப்பா' என்பது போல் பார்த்தவன்,

"இவ்வளவு காஸ்ட்லியான லவ் எனக்குத் தேவையில்லைப்பா..." என்று அசால்ட்டாகத் தோள்களைக் குலுக்கியபடி அபிஷரிகாவை விட்டு விலகி அவள் அருகில்

தரையில் அமர்ந்தான். சற்று முன் உடலில் கண்டபடி துள்ளாட்டம் போட்ட அவனது காதல் ஹார்மோன்கள் அப்படியே அடங்கிப் போய்விட்டது.

"சிவூஊஊஊ..." என்று கத்தியவளின் இதழ் மீது தனது வலக்கை ஆள்காட்டி விரலை வைத்து அழுத்தி,

"ஷ், சிவூன்னு நீ கூப்பிடறது கேட்க ரொம்ப நல்லாயிருக்கு. அதுக்காக நீ இப்படிக் கோபமா கத்தி கூப்பிடறது கேட்க சகிக்கலை." என்றவன் இடக்கை சுண்டு விரலை காதிற்குள் விட்டு ஆட்டியபடி அவளைக் கிண்டலடித்தான்.

"நான் கேட்டதுக்குப் பதில் சொல்லு..." என்று ஆங்காரமாய்க் கத்தியவளை கண்டு நிதானம் இழக்காதவனாய் அவன்,

"நம்ம வாழ்க்கை முழுமைக்கும் இந்த ஏழையோட காதல் மட்டும் போதும்ன்னு நான் முடிவு பண்ணிட்டேன். அதனால் நீ உன்னுடைய காஸ்ட்லி காதலை வேஸ்ட் பண்ணாம உன் கிட்டேயே வச்சுக்கோ. அதுக்குன்னு வேற யாராவது இளிச்சவாயன் வராமலா போயிருவான்?" நக்கலாய் கூறியவன் எழுந்து அறைக்குச் செல்ல போனான்.

"யூ... யூ... யூ..." என்று அவள் பதில் பேச முடியாது கோபமாய் அவனை உறுத்து விழிக்க...

"ஐ... ஐ... ஐயம் சிவகுமரன், ஹஸ்பெண்ட் ஆஃப் மிஸஸ். அபிஷ்ரிகா சிவகுமரன்..." என்று கண்சிமிட்டியபடி சொல்லியவன் சிரித்தபடி செல்ல... அவளோ பெரும் ஏமாற்றத்துடன் கோபத்தில் புசுபுசுவென்று மூச்சு விட்டபடி அமர்ந்திருந்தாள்.

பின்பு எழுந்து தனது அறைக்குச் சென்றவள் நேரே குளியறைக்குள் புகுந்து கொண்டாள். குளியலறை கண்ணாடியில் தனது முகத்தினைப் பார்த்தவள் அதிர்ந்தாள். சிவகுமரனின் இரத்தம் அவளது உச்சி வகிட்டில் அழகாய் சிவப்பு நிறத்தில் திலகமிட்டு இருந்தது. அது அவளைப் புதிதாய் திருமணமான பெண்ணைப்

போன்று மங்களகரமாய் அடையாளம் காட்டியது. கை நடுங்க அந்த இரத்தத்தைத் தொட்டு பார்த்தவளின் மனம் அதிர்ந்து குலுங்கியது. அவளது விழிகளில் கண்ணீர் கரை கட்டி நின்றது. எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ?

"அபி..." குளியலறை கதவு வேகமாகத் தட்டப்பட்டது. கணவனின் குரலில் சுயவுணர்வு பெற்றவள்,

"ம்..." என்று மெல்லமாய் முனங்கினாள். அவளது குரலை கேட்டதும் பதற்றம் தணிந்தவன்,

"குளிக்கப் போய் எவ்வளவு நேரமாச்சு... சீக்கிரம் வா..." என்க...

"ம்..." என்று மட்டுமே அவளிடம் இருந்து பதில் வந்தது. அடுத்த ஐந்து நிமிடத்தில் அவள் குளித்துவிட்டு வெளியில் வந்தாள்.

"சாப்பிடாம வந்துட்ட..." என்றவன் அங்கிருந்த சோபாவில் அவளை அமர வைத்து அவளுக்கு உணவு பரிமாறினான். அவள் அவனையே பார்த்து கொண்டிருந்தாள். அவனது நெற்றியில் இருந்த காயத்தை அவன் குளிக்கும் போது கழுவி இருந்தான் போலும். இப்போது இரத்தக்கறை இல்லை. ஆனால் காயத்தின் தடமிருந்தது.

"சாப்பிடு..." என்றான் அவன் அக்கறையோடு...

"நீ...?"

"நானும் தான்..." என்றவன் இன்னொரு தட்டில் உணவை எடுத்து வைத்தான். அவள் உண்ணாது எழுந்து செல்ல...

"ம்ப்ச், எங்கே போற?" அவன் சலிப்புடன் அவளைப் பார்க்க... நொடியில் திரும்பி வந்தவள் அவனது காயத்தின் மீது பிளாஸ்திரி ஒட்டி விட்டாள். அவளது அக்கறையில் அவனது மனம் காதலாய் தடம் புரண்டது.

"இப்போ சாப்பிடலாம்..." என்றவள் உண்ண ஆரம்பிக்க... சிறிது நேரம் அங்கு மௌனம் மட்டுமே ஆட்சி செய்தது.

உண்டு முடித்ததும் பாத்திரங்களை ஒதுங்க வைத்துவிட்டு வந்தவன்,

"இந்த மாதிரி சின்னச் சின்ன அக்கறைக்குக் காதல், அன்பு தான் வேண்டும். சொத்து இல்லை... என்ன புரிந்ததா?" என்று கூற...

"அதைத் தானே நானும் கேட்கிறேன். என்னுடைய காதல் உனக்கு வேண்டும் என்றால்... சொத்துக்களை என் பெயருக்கு எழுதி கொடு."

"நமக்கு இடையில் சொத்துக்களை ஏன் இழுக்கிற...? அது வேறு... இது வேறு..." அவன் விடாப்பிடியாய் கூற...

"எனக்கு இரண்டும் ஒன்று தான்..." என்று வெடுக்கென்று கூறியவள் அவனை அறையை விட்டு தள்ளி கதவை சாற்றிக் கொண்டாள்.

அவளது செயலில் அவன் சிரித்தபடி அங்கிருந்து அகன்றான். அவளோ மனம் கனக்க, விழிகளில் இருந்து கண்ணீர் வழிய படுக்கையில் சாய்ந்தாள்.

அந்த வார இறுதியில் சிவகுமரன் ஊருக்குக் கிளம்பினான். இந்த முறை ஞாபகமாய் மனைவியிடம் கூறினான்.

"நீயும் தனியே இங்கிருந்து என்ன போற? என் கூட வர்றியா?" அவன் கேட்டதும் ஆர்வமாய் அவனது முகத்தைப் பார்த்தவள் பின்பு வேண்டாம் என்று மறுத்தாள்.

"ஏன்...?"

"நீ பாட்டுக்கு தாலியை கழட்டிட்ட... தாத்தா, பாட்டி தாலி பத்தி கேட்டால் நான் என்ன சொல்றது?"

"அய்யயோ குடிகாரி இப்படி அநியாயமா என் மேல் பழி போடுறியே. நானாடி கழட்டினேன். நீ கழட்ட போன... அதான் நானே கழட்டி விட்டேன். அந்தப் பாவத்தைக் கூட நான் உன்னைச் செய்ய விடலைம்மா. ஐயா அந்தளவுக்கு நல்லவன்..." உண்மை பாதி, பொய் பாதி அவன் உரைத்தான்.

"போ, நான் ஒண்ணும் வரலை..." அவள் கோபமாய்த் தனது அறைக்குச் செல்ல முற்பட...

அவளது கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தியவன் அவளைத் தன் பக்கமாய்த் திரும்பி நிற்க செய்தான். அவள் புரியாது அவனைப் பார்க்க... அவன் சட்டென்று தனது கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை கழற்றி அவளது கழுத்தில் அணிவித்து விட்டான். அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள். அவனோ அவளது நெற்றியில் முத்தமிட்டு அவளைப் பார்த்து கண்சிமிட்டி சிரித்தவன்,

"இது தான் உன்னுடைய தாலி சங்கிலி. உள்ள போட்டுக்கோ... யாரும் கேள்வி கேட்க மாட்டாங்க." என்க... அவளது தலை அவளது சம்மதம் இல்லாது சரியென்று ஆடியது.

"தேவையான டிரெசை எடுத்து வச்சிட்டு கிளம்பு..." அவன் கூறியதும் அவள் சந்தோசமாகச் சம்மதித்தாள்.

இருவரும் வெளியில் வந்த போது அவர்களுக்காகக் காத்திருந்த காரை கண்டதும் அவளது முகம் சுருங்கி போனது. அவளது முகமாறுதலை கண்டு கொண்டவன்,

"ஏன்? என்னாச்சு?" என்று கேட்க...

"பஸ்சில் ஊருக்கு போகலாமே?" அவள் ஆசையுடன் கேட்க...

"உன்னைக் கூட்டிட்டு பஸ்சிலா? ரிஸ்க் எடுக்க நான் விரும்பலை..." என்று அவன் விடாப்பிடியாய் மறுத்துவிட்டான். அவள் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அவனுடன் பயணித்தாள்.

ஊர் வந்து சேர்ந்ததும் எல்லோரும் இருவரையும் ஆர்ப்பாட்டமாய் வரவேற்றனர். தாத்தா, பாட்டியின் பாசத்தில் அபிஷரிகா சற்று இயல்பானாள்.

"ஐயா, என்னதிது? ஒரு வாரத்தில் இப்படி ஆகிட்டீங்களே?" அவன் பொன்னம்பலத்தைக் கண்டு திகைத்தான்.

"நல்லா தானே இருக்கேன். எனக்கு என்ன குறை?" பொன்னம்பலம் புரியாது அவனைப் பார்த்தார்.

"பாருங்க டை அடிக்காம நரை முடி தெரியுது." அவன் அவரது காதோரம் மற்றும் மீசையில் நரையோடியிருந்த முடிகளைச் சுட்டிக்காட்டினான்.

"ஆமா, உங்க ஐயாவுக்கு இளமை திரும்புது பாரு..." காவேரி நொடித்துக் கொண்டார்.

"எங்கய்யா என்றும் பதினாறு தான்... நீங்க வாங்கய்யா... ஆல் லேடிஸ்க்கு ஹஸ்பன்ட்டை கண்டு பொறாமை..." என்றவனது பார்வை மனைவியிடம் நிலைத்தது. அவளோ அவனைக் கண்டு நாக்கை துருத்தி பழிப்பு காட்டினாள். அவன் சிரித்தபடி அவரது முடிகளில் கருப்புச் சாயம் அடித்துவிட்டான்.

எல்லோரும் இருவரையும் சிரிப்புடன் பார்த்து கொண்டிருந்தனர். அபிஷரிகா பாட்டியின் தோளில் சாய்ந்தபடி கணவனைப் பார்த்திருந்தாள். பொன்னம்பலமும், அவனும் அலைப்பேசியில் 'செல்ஃபி' எடுத்து கொண்டனர்.

"அண்ணய்யா..." என்றபடி அம்ரிதா அவன் முன் வந்து நின்றாள்.

"எனக்குச் சடை பின்னி விடு அண்ணய்யா... கங்கா சடை பின்னும் போது தலையில் கொட்டுறாள்." அக்காவை பற்றி அண்ணனிடம் புகார் கொடுத்தாள் சின்னவள்.

"அவ்வளவு தானே... வா நம்ம வீட்டுக்கு போகலாம்..." என்று அவன் சின்னவளை தூக்கி கொண்டு சென்றான். அவனுடைய அன்னை, தங்கைகள் அவனைப் பின்தொடர்ந்து சென்றுவிட்டனர்.

"நீயும் போம்மா..." காவேரி பேத்தியிடம் கூற...

"இல்லை பாட்டி... எனக்கு டயர்டா இருக்கு..." என்றவள் தனது அறைக்குச் சென்றுவிட்டாள். காவேரி கணவரை

பார்த்தார்.

"உடனே எல்லாம் சரியாகாது. கொஞ்சம் கொஞ்சமா தான் சரியாகும்." பொன்னம்பலம் கூற... காவேரியும் அதை ஆமோதித்தார்.

அறைக்குச் சென்ற அபிஷரிகா ஓய்வு எடுக்காது ஜன்னலில் அமர்ந்து சிவகுமரனின் வீட்டை பார்த்து கொண்டிருந்தாள். அவன் அம்ரிதாவிற்குச் சடை பின்னி விட்டுக் கொண்டிருந்தான். அவன் நேர்த்தியுடன் சடை பின்னி விடுவதை இமைக்காது பார்த்தபடி அவள் அமர்ந்திருந்தாள். அப்போது பத்மா அங்கு வந்து சேர்ந்தாள். அவளைக் கண்டதும் அபிஷரிகாவிற்கு டென்சனாகி போனது. அவள் டென்சனில் நகத்தைக் கடித்துத் துப்பியபடி அவர்களைப் பார்த்திருந்தாள்.

"பாவா, எப்போ வந்தீங்க?" என்று பத்மா இயல்பாய் கேட்டபடி திண்ணையில் அமர்ந்தாள்.

"இப்போ தான் கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி..." சிரித்தபடி கூறியவன் தனது வேலையில் கவனமாய் இருந்தான். அவன் அம்ரிதா கூந்தலில் தாழம்பூ வைத்து அழகாய் பின்னி கொண்டிருந்தான். அதன் நறுமணம் அந்தப் பகுதி முழுவதும் கமகமத்தது.

"பாவா, பட்டணம் போய் ரொம்ப அழகாயிட்டீங்க..." என்று பத்மா கூற...

அவள் கூறியதிலும் உண்மை இருந்தது. சிவகுமரன் இங்கு இருந்திருந்தால் வெயிலில் வயலில் இறங்கி வேலை செய்து கருத்து போயிருப்பான். ஆனால் சென்னையில் ஏசி அறையில் அமர்ந்து பணி செய்வதாலோ என்னமோ... அவன் நிறம் அதிகரித்து அழகாய் காணப்பட்டான்.

"அப்படியா சொல்ற? எனக்கு ஒண்ணும் தெரியலையே..." என்று அவன் தன்னைக் குனிந்து பார்த்துக் கொண்டான்.

"உங்களுக்கு ஒண்ணும் தெரியாது. பார்க்கிறவங்களுக்குத் தான் தெரியும்..." என்ற பத்மா அங்கிருந்த மண்ணை

எடுத்து அவனுக்குத் திருஷ்டி சுற்றி கழித்து அதை எடுத்துக் கொண்டு,

"இதை முச்சந்தியில் வீசிவிட்டு அப்படியே நான் என்னுடைய வீட்டுக்கு போறேன்..." என்றவள் விடைபெற்று சென்றுவிட்டாள்.

தங்கைக்குச் சடை பின்னி முடித்து நிமிர்ந்த சிவகுமரன் அங்கு அறை ஜன்னலில் அமர்ந்து தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்தான். அப்போது தான் அவனுக்குத் தனது தவறு உறைத்தது. அவளைத் தங்களது வீட்டிற்கு அவன் அழைக்காது அவன் மட்டும் தனது குடும்பத்தினருடன் வந்துவிட்டான். பெரும் தவறு செய்தவன் போல் உணர்ந்தவன் அன்னையிடம் கூறிவிட்டு ஐயா வீடு நோக்கி வந்தான். அவன் தன்னைத் தேடி வருவது தெரிந்தும் அவள் அசையாது அமர்ந்திருந்தாள்.

அவளது அறைக்குள் நுழைந்தவன் அவள் அருகில் வந்து அமர்ந்தான். அவளோ அவனைப் பார்க்காது வெளியில் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். அவளது கைகளை மென்மையாகப் பற்றியவன்,

"சாரி..." என்றான்... அதற்கும் அவள் எதற்கு? என்று கேட்கவில்லை.

"எங்க... சாரி, சாரி... நம்ம வீட்டுக்கு உன்னையும் கூட்டிட்டு போயிருக்கணும்... ஆனா நீ அங்கே எல்லாம் வருவியோன்னு சந்தேகத்தில் தான்..." அவன் தயங்கியபடி கூற...

"அவள் எதுக்கு உன்னைப் பார்க்க வந்தாள்?"

"பத்மாவையா கேட்கிற?" அவள் அமைதியாக இருப்பதைக் கண்டு அவனுக்கே தனது கேள்வி அபத்தம் என்று புரிந்தது.

"சும்மா என்னைப் பார்க்க வந்தாளாம்." என்றான் அவன் சமாளிப்பாக...

"காதலனை பிரிஞ்சு அவளால் இருக்க முடியலையாக்கும்." அவள் சுள்ளென்று கேட்டதில் அவனுக்குச் சிறிது வலிக்கத்தான் செய்தது. ஆனாலும் அவன் கோபப்படாது,

"இப்போ நீ சரின்னு சொல்லு... நம்ம கல்யாணத்தை எல்லோருக்கும் முறையா அறிவிச்சிரலாம். அதுக்குப் பிறகு யாரும் என்னைச் சொந்தம் கொண்டாடிட்டு வர மாட்டாங்க." என்று கூற...

அவன் கூறியதை கேட்டு அவள் அவனைத் திரும்பி பார்த்தாள். பின்பு அவனை இறுக அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள். அவனும் அவளை ஒரு கையால் அணைத்துக் கொண்டு மறுகையால் அவளது தலையை வருடி கொடுத்தான்.

"நீ பொறாமைப்படும் அளவுக்கு நான் வொர்த் இல்லை. உன்னை ஒப்பிடும் போது நான் ரொம்பவே சாதாரணமானவன் தான்." என்று அவன் ஆறுதல் கூறினான். அதற்கு அவள் பதில் கூறாது,

"உன் கிட்ட இருந்து ஏதோ ஸ்மெல் வருதே. என்னது அது?" மூக்கை சுருக்கியபடி மோப்பம் பிடித்துக் கொண்டே தன்னை ஏறிட்டு பார்த்தவளின் அழகில் அவன் சொக்கித்தான் போனான்.

"தாழம்பூ..." அவன் அவளது நாசியோடு தனது நாசியை உரசியபடி கூறினான். அவள் தனது முகம் அருகில் இருந்த அவனது விழிகளைப் பார்த்தபடி,

"எதுக்கு யூஸ் பண்ணுவாங்க...?" என்று அவள் அறியாமையுடன் கேட்க...

"பெண்கள் தங்களோட சடையில் வைத்து கட்டிக்குவாங்க... முடி ரொம்ப வாசமா இருக்கும். நேச்சுரல் ஃப்ரக்ரன்ஸ்... டிரெஸ் இருக்கும் அலமாரியில் வச்சுக்கலாம். நல்லா வாசமா இருக்கும். அம்ருவுக்குத் தாழம்பூ வச்சுச் சடை பின்னி விட்டேன்னா... அந்த வாசம் தான் இது..."

"ஓ..." என்றவளின் இதழ்களை மெல்ல வருடியபடி,

"உனக்கும் தாழம்பூ வச்சு பின்னி விடவா..." என்று அவன் கேட்க...

"எனக்கா...? நீயா...?" அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள்.

"செய்யலாம்... தப்பில்லை." என்று அவன் ரகசியம் பேசினான்.

"ம்... ம்..." என்றவள் அமைதியாக இருக்க...

"போகலாமா?"

"எங்கே?"

"நம்ம வீட்டுக்கு..." அவனது விழிகள் ஜன்னல் வழியே தெரிந்த அவனது வீட்டை சுட்டிக்காட்டியது.

"நீ தான் என்னைக் கூப்பிடலையே..." என்று அவள் வீம்பாய் முறுக்கி கொள்ள...

"நீ சரிப்பட்டு வர மாட்ட..." என்றவன் அவளை அப்படியே அலேக்காகத் தூக்கி கொண்டான்.

"விடு சிவூ..." அவள் சிணுங்க, சிணுங்க அவன் அவளைத் தூக்கி கொண்டு செல்ல... அதைக் கண்டு பொன்னம்பலம், காவேரி நிறைவாய் சிரித்தனர்.

இரவு வரை கணவனது வீட்டில் இருந்தாள் அபிஷரிகா. இரவு உணவின் போது எல்லோரும் பொன்னம்பலத்தின் வீட்டிற்கு வந்துவிட்டனர். அரட்டையும், கச்சேரியுமாய் உணவு உண்டு முடித்ததும் அவரவர் கிளம்பி சென்றுவிட... சிவகுமரன் மட்டும் அபிஷரிகாவை தொடர்ந்து அவளது அறைக்கு வந்தான். அவளுக்கு ஏசி போட்டுவிட்டு அவள் படுத்ததும் போர்வையைப் போர்த்திவிட்டு அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"குட் நைட்..." என்க... அவள் படபடக்கும் இதயத்துடன் அவனைப் பார்த்தாள்.

"நான் அங்கே போய்ப் படுக்கப் போறேன்." அவன் கூறியதும் அவள் ஒன்றும் பேசாது அவனைப் பார்த்தாள்.

அவளது பார்வைக்கான பொருள் அவனுக்கு விளங்கவில்லை. அதே சமயம் அவன் அவளுடன் ஒரே அறையில் இருக்கவும் முடியாது. அதனால் அவன் தனது வீட்டிற்குக் கிளம்பிவிட்டான். அவளது அறையை விட்டு வெளியில் வந்தவன் பெரியவர்களின் அறையைப் பார்த்தான். அது மூடியிருந்தது. அவன் நிம்மதி பெருமூச்சு விட்டவனாய் தனது வீட்டை நோக்கி நடந்தான்.

அவனுக்காக அவனது தங்கைகள் காத்திருந்தனர். எல்லோரிடமும் அவன் அரட்டை அடித்துப் படுக்க நெடும் நேரமானது. அவனது மடியில் இரு தங்கைகள் உறங்கியிருக்க... அவனது தோள்களில் இரு தங்கைகள் சாய்ந்து உறங்கி கொண்டிருந்தனர்.

"இன்னும் சின்னப் பிள்ளைங்க மாதிரி உன்னைப் போட்டு படுத்துறாங்க..." என்ற வேணி மகள்களை எழுப்பித் தனியாகப் படுக்கச் செய்தார். அம்ரிதா மட்டும் அவன் அருகில் படுத்து கொண்டாள். மற்றவர்கள் எல்லோரும் அவளுக்கு அடுத்து படுத்திருந்தனர்.

“நீ சின்னம்மா ரூமுக்கு போப்பா...” வேணி மகனிடம் கூற...

“ஒருநாள் தங்கைகள் கூடப் படுகிறேன்ம்மா...” என்றவன்,

"கல்யாண வேலைகள் எல்லாம் எப்படிப் போகுதும்மா...? நான் இப்படியே இங்கேயே இருக்கலாம்ன்னு நினைக்கிறேன்." என்க...

"ரொம்பச் சந்தோசம் குமரா... கல்யாணத்துக்கு இன்னும் ரெண்டு வாரம் தான் இருக்கு... ஓரளவு எல்லா வேலையும் முடிஞ்சது. இருந்தாலும் நீ இருந்தால் எனக்குக் கொஞ்சம் உதவியா இருக்கும்."

"சரிம்மா..." என்றவன் உறங்க துவங்கினான்.

நடு இரவில் யாரோ தனது முதுகில் பாரத்தை வைத்து அழுத்துவது போலிருக்க... அவன் கண்விழித்துத் திரும்பி பார்த்தான். அபிஷரிகா தான் அவனுக்கு மறுபக்கம் இருந்த சிறு இடத்தில் படுத்துக் கொண்டு அவனது முதுகில் முகம் புதைத்து அவனை இறுக்கி அணைத்து படுத்திருந்தாள். மனைவியை அங்குக் கண்டதும் அவனது முகம் சந்தோசத்தில் மலர்ந்தது. எழுந்து அமர்ந்தவன் அவளை நன்றாகப் படுக்க வைத்துவிட்டு அவன் அவள் புறமாய் ஒருக்களித்துப் படுத்தான். அவளது கூந்தலில் இருந்து வந்த தாழம்பூ நறுமணம், அவளது அருகாமை ஆணவனின் மனதினை விரும்பியே மயக்கியது. இரவெல்லாம் அவன் உறங்காது அவளைப் பார்த்தபடி விழித்திருந்தான்.

மறுநாள் திருமணத்திற்குச் சமைக்கத் தேவையான பாத்திரங்களை எடுப்பதற்காகப் பழைய பொருட்கள் போட்டு வைத்திருக்கும் அறையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான் சிவகுமரன். அவர்களது ஊரில் அவர்களே திருமணத்திற்குச் சமைத்து விடுவர்... ஊரே கூடி நின்று திருமண வீட்டாருக்கு உதவுவர். இது தான் கிராமத்து மக்களின் சிறப்பம்சம். அண்டா, குண்டா என்று அனைத்தையும் ஒவ்வொன்றாய் எடுத்து வைத்துக் கொண்டே வந்தவன் அங்குத் திருப்பி வைக்கப்பட்டு இருந்த ஒரு பெரிய புகைப்படச் சட்டத்தைக் கண்டு யோசித்தபடி அதைத் திருப்பிப் பார்த்தான். அதிலிருந்த பிம்பத்தைக் கண்டு அவன் அதிர்ந்து போய் அப்படியே நின்றிருந்தான்.

ஏனெனில் அபிஷரிகாவை போன்ற உருவமைப்பு உடைய பெண் ஒருவள் அதிலிருந்தாள். புகைப்படம் எடுக்கப்பட்ட காலக் கட்டம் மட்டுமே வேறு. இல்லை என்றால் இது அபிஷரிகா தான் என்று அடித்துக் கூறிவிடலாம். அந்தளவிற்கு இருவருக்கும் அத்தனை ஒற்றுமை இருந்தது...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 10

சிவகுமரன் அதிர்ந்து விழித்தது சில கணங்கள் தான்... சட்டென்று தன்னைச் சுதாரித்துக் கொண்டவன் அந்தப் புகைப்படச் சட்டத்தை அதே இடத்தில் வைத்துவிட்டு தான் வந்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்தான். மனைவியின் வாழ்க்கையில் நிறைய மர்மம் இருக்கிறது என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. அபிஷரிகாவிற்குத் தெரியாது பொன்னம்பலத்திடம் இது பற்றி விசாரிக்க வேண்டும் என்று அவன் தனக்குள் நினைத்துக் கொண்டான்.

சமையலுக்கு வேண்டிய பெரிய, பெரிய பாத்திரங்களை எடுத்து வெளியில் வைத்தவன் பிறகு ஞாபகமாய் அந்த அறையைப் பூட்டி சாவியைக் கையில் எடுத்துக் கொண்டான். நேரே அன்னையிடம் வந்தவன்,

"பாத்திரங்களை எல்லாம் எடுத்து வச்சிட்டேன். அதை எல்லாம் நீங்க கழுவ வேண்டாம். எல்லா வேலைக்கும் ஆட்களை ஏற்பாடு இருக்கேன். நீங்க மேற்பார்வை மட்டும் பார்த்தால் போதும்." என்று கூற...

"எதுக்குக் குமரா? இதுக்கு எல்லாம் நிறையச் செலவாகுமே..." வேணி மகனை நினைத்து வருத்தப்பட்டார்.

"இப்போ எனக்கு டபுள் சம்பளம் கிடைக்குதும்மா. ஒண்ணு ஐயா கொடுக்கிறாங்க... இன்னொண்ணு என் பொண்டாட்டி கொடுக்கிறாள்." என்று விரிந்த புன்னகையுடன் கூறியவனை வேணி யோசனையாய் பார்த்தார்.

"சின்னம்மா எதுக்கு உனக்குச் சம்பளம் கொடுக்கணும் குமரா?"

"அவங்க கம்பெனியை நிர்வாகம் பண்றேன் இல்லையா? அதுக்கு..." அன்னையின் எண்ணம் புரிந்து பதில் கூறியவன் அவரது மனதினை மாற்ற வேண்டி,

"உங்க மருமக எழுந்தருச்சிட்டாளா? இல்லை, இன்னமும் தூங்கிட்டு தான் இருக்காளா?" என்று கேட்டான்.

அதாவது அபிஷரிகா அவர்களது வீட்டில், அவனுடனும், தங்கைகளுடனும் உறங்கியதை அவன் தனது அன்னைக்குச் சுட்டிக்காட்டினான். அதனால் தங்களுக்கு இடையில் எந்தப் பிரச்சனையும் இல்லை என்று அவன் அவருக்கு நிரூபிக்க முயன்றான். அவன் நினைத்தது போல் வேணியின் முகம் மலர்ந்தது.

"இன்னும் தூங்கிட்டு தான் இருக்காங்க... பாவம், அசந்து தூங்குறாங்கன்னு எழுப்பலை. எவ்வளவு வசதியான வீட்டு பொண்ணு... நம்ம வீட்டுத் திண்ணையில், கொசுக்கடியில் வந்து படுத்துக்கிறதை நினைச்சால் மனசுக்கு கஷ்டமாயிருக்கு."

"அபி உங்க மருமகளா, என் மனைவியா மாறிக்கிட்டு இருக்கிறாள்ன்னு அர்த்தம்." என்றவனைக் கண்டு அவருக்கு அத்தனை நிறைவாக இருந்தது.

"சரிம்மா, நான் போய் அவளை எழுப்பறேன்." என்றவன் அவரிடம் விடைபெற்று வீட்டின் முன்வாயிலுக்கு வந்தான்.

"குமரா, அபி எங்கே காணோம்?" அங்கு அமர்ந்திருந்த பொன்னம்பலம் அவனிடம் கேட்டார்.

"அங்கே... எங்க வீட்டில் தூங்குறாங்க ஐயா..." என்று அவன் தலையைச் சொறிந்தபடி அசடு வழிந்தான்.

"ஓ..." என்றவர் மனைவியைக் கண்டு அர்த்தம் பொதிந்த பார்வையைப் பார்த்தார். அதை உணர்ந்த காவேரியின் முகம் திருப்தியை காட்டியது.

"நான் வர்றேன் ஐயா..." என்றவன் அங்கிருந்து நைசாக நழுவி விட்டான். இதற்கு மேல் அங்கிருந்தால் பொன்னம்பலத்திடம் அவன் அந்தப் புகைப்படத்தைப் பற்றிக் கேள்வி கேட்டு விடுவான். காவேரி முன்பு அந்தக் கேள்வியைக் கேட்பது நல்லதா? என்று அவனுக்குத்

தெரியவில்லை. அதனால் அவன் அங்கிருந்து ஓடி வந்துவிட்டான்.

தனது வீட்டிற்கு வந்தவனின் முகம் அங்குத் திண்ணையில் படுத்திருந்த அபிஷரிகாவை கண்டதும் மென்மையைத் தத்தெடுத்தது. அவள் தனது அருகில் படித்திருந்த அம்ரிதாவை கட்டிப்பிடித்துக் கொண்டு உறங்கி கொண்டிருந்தாள். அம்ரிதாவும் தனது அண்ணன் அருகில் படுத்திருப்பதாய் எண்ணி கொண்டு அபிஷரிகா மீது காலை போட்டுக் கொண்டு சுகமாய் உறங்கி கொண்டிருந்தாள். மெல்ல மனைவியின் அருகில் வந்தவன்,

"அம்முலு, எழுந்திரு... நேரமாச்சு பாரு..." என்க... நம் கும்பகர்ணி அதற்கு எல்லாம் அசைந்தால் தானே... ஆனால் அவனது குரல் கேட்டு அம்ரிதா எழுந்து விட்டாள்.

"அண்ணய்யா, குட்மார்னிங்..." என்றவள் அண்ணனிடம் தாவி கொண்டாள். அவளைத் தூக்கி கொண்டவன்,

"வதினன எழுப்புவோமோ?" என்று சின்னவளிடம் ரகசியமாய்க் கேட்க... அவள் சந்தோசமாய்த் தலையை ஆட்டினாள்.

"போய்த் தண்ணி எடுத்துட்டு வா..." அவன் சொன்னதைக் கேட்ட சின்னச் சிட்டு அவனிடம் இருந்து இறங்கி ஓடியவள் அடுத்த நிமிடம் சின்ன வாளியில் தண்ணீருடன் அவன் முன் வந்து நின்றாள். விரிந்த புன்னகையுடன் வாளியை வாங்கியவன் அதிலிருந்த நீரை அபிஷரிகாவின் மீது கொட்டினான்.

"ஹேய்..." என்று அலறியபடி எழுந்த அபிஷரிகா அங்கு நின்றிருந்த சிவகுமரனை கண்டு அவனைக் கோபமாய் முறைத்து பார்த்தாள்.

"தூங்கு மூஞ்சி, சோம்பேறி... சூரியன் உச்சிக்கு வந்து நேரமாச்சு. இன்னும் தூங்கிட்டு இருக்க... எங்க அம்ரு குட்டி

கூட எழுந்துவிட்டாள் பாரு." என்று அவன் மனைவியைக் கிண்டலடித்தான்.

கோபத்துடன் எழுந்த அபிஷரிகா, "உன்னை..." என்றபடி அவன் அருகே வந்து அவனை அணைத்து தனது உடையில் இருந்த ஈரத்தை அவனது உடைக்குக் கடத்தினாள்.

"என்னையவா வம்பு பண்ற... ஜாக்கிரதை." என்று ஒற்றை விரல் நீட்டி அவனை எச்சரித்தவள் அங்கிருந்து ஓடிவிட்டாள். அதற்கு மேல் நின்றால் தான் இங்கு வந்து உறங்கியதை சுட்டிக்காட்டி அவன் தன்னை ஓட்டி விடுவான் என்றெண்ணி அங்கிருந்து ஓடி வந்துவிட்டாள்.

"அண்ணய்யாவும் நனைஞ்சிட்டாங்க..." என்று கை கொட்டி சிரித்த அம்ரிதாவின் சிரிப்பில் அவன் தன்னுணர்வு அடைந்தான். மனைவி குளுகுளுவென்று அணைக்கையில் எந்தக் கணவனுக்குத் தான் குளிராது. அப்படியொரு குளுகுளு மனநிலையில் அவன் இருந்தான்.

சிறிது நேரம் கழித்துச் சிவகுமரன் குளிப்பதற்காக உடைகளை எடுத்துக் கொண்டு கிணற்றை நோக்கி சென்றான். அவன் செல்வதைப் பார்த்துவிட்டு அபிஷரிகாவும் அவனின் பின்னேயே சென்றாள். தன் பின்னால் ஆள் நடந்து வரும் சத்தம் கேட்டு திரும்பி பார்த்தவன் அங்கு மனைவியைக் கண்டதும்,

"நீ எதுக்கு இங்கே எல்லாம் வர்ற?" என்று அவளைக் கடிய...

"அதான் துணைக்கு நீ இருக்கியே..." என்றவள் அவனுடன் இணைந்து நடந்தாள்.

கிணற்றடி வந்ததும் அதிலிருந்த குட்டை சுவரில் அமர்ந்தவன் அவளையும் அமர சொன்னான். அவளோ அமராது அவனது நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட... அவன் பிடிமானம் ஏதுமின்றி அப்படியே மல்லாக்க கிணற்றினுள் விழுந்தான்.

"ஏய்..." என்று கத்தியபடி கிணற்றுக்குள் விழுந்தவனை அவள் மேலிருந்து பார்த்து ரசித்தாள்.

சிவகுமரன் விழுந்த வேகத்தில் கிணற்றுக்குள் சென்று பின்பு அதே வேகத்தில் மேலெழும்பினான். முகத்தில் வழிந்த நீரை துடைத்துக் கொண்டே மனைவியை ஏறிட்டு பார்த்தவன்,

"பழிக்கு பழியா?" என்று கத்தி கேட்க...

"அப்படியும் வச்சுக்கலாம்." என்று உதட்டை சுழித்துக் கொண்டு கூறியவளை ரசித்துப் பார்த்தவன்,

"இதுவும் நல்லா தான் இருக்கு. நமக்கு இடையில் கொடுக்கல், வாங்கலில் பேலன்ஸ் இல்லாது இருப்பது நல்லது தான்." என்றவன் கிணற்றில் நீச்சலடிக்க ஆரம்பித்தான்.

"சிவூ, மேலே பார்..." என்றவள் அடுத்த நொடி கிணற்றுக்குள் குதித்திருந்தாள். அதைக் கண்ட சிவகுமரனின் இதயம் ஒரு நொடி நின்று துடித்தது.

"ஏய்..." என்று பதறியவனின் அருகே அவள் தொப்பென்று விழுந்தாள். அவள் உயரத்தில் இருந்து விழுந்ததில் கிணற்றில் இருந்த நீர் ஓரடி மேலெழும்பி அவன் மீது நீரை வாரியிறைத்தது.

"ம்ப்ச், என்ன பண்ற? உனக்குத் தான் இருட்டுன்னா பயமே?" சொல்லும் போதே அன்றைய ஞாபகத்தில் அவனது குரல் நடுங்கியது.

"அதான் நீ இருக்கியே. இப்போ பயம் இல்லை." என்றவள் தனது வாயிலிருந்த நீரை அவனது முகத்தின் மீது பீய்ச்சியடித்தாள்.

"ஏய் லூசு... உன்னை என்ன செய்றேன்னு பாரு..." என்றவன் முகத்தில் வழிந்த நீரை துடைத்துவிட்டு அடுத்த நொடி கிணற்றில் மூழ்கி எழுந்தவன் அவளை நோக்கி வந்தான். அவள் புன்னகையுடன் அவனைப் பார்த்திருந்தாள். அவள் அருகில் வந்தவன் அவளது முகத்தைப் பற்றி இழுத்து அவளது முகம் நோக்கி குனிந்தான். அடுத்த அவன் என்ன செய்வான்? என்பதை

ஊகித்தவளாய் அவள் விழிகளை மெல்ல மூடினாள். அவளது நிலையை ரசித்துப் பார்த்தவன்,

"திருட்டு பூனை..." என்று கேலி செய்தபடி தனது வாயிலிருந்த நீரை அவளது முகத்தில் பீய்ச்சியடிக்க... அதில் மோனநிலை கலைந்தவள்,

"சிவூ..." என்று சிணுங்கியபடி அவனிடம் இருந்து விலகினாள்.

"நீ மட்டும் செய்யலாம். நான் செய்யக் கூடாதா?" என்று கூறியவன் அங்கிருந்த படியில் அமர்ந்தான். அவனைத் தொடர்ந்து அவளும் படியில் வந்து அமர்ந்தாள்.

"உன் கிட்ட கொஞ்சம் பேசணும்." சிவகுமரன் சீரியசாகச் சொல்ல...

"சொல்லு..." அவள் விளையாட்டாய் பாதங்களை நீரில் அடித்தபடி அவனைப் பார்த்தாள்.

"கங்கா கல்யாணத்துக்கு இன்னும் இரண்டு வாரம் தான் இருக்கு. அதனால் நான் இங்கேயே இருக்கலாம்ன்னு இருக்கேன். நீ மட்டும் ஊருக்கு போ." அவன் இப்படிச் சொன்னதும் அவளது முகத்தில் இத்தனை நேரம் இருந்த சந்தோசம் காணாமல் போனது.

"நானும் இங்கே இருக்கேனே." மெல்ல கூறியவளை பார்த்தவன் பெருமூச்சு விட்டபடி,

"வேண்டாம்..." என்றான் உறுதியான குரலில்...

"உனக்கு நான்னா கேவலம் தான். அதான் இப்படிச் சொல்ற? என்னை உன் மனைவியா நீ நினைக்கலை." என்றவளுக்குக் கண்ணீர் துளிர்த்தது. ஆனால் அவளது முகத்தில் நீர்த்திவளைகள் இருந்ததால் அவளது கண்ணீர் தனித்துத் தெரியவில்லை.

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லை. நீ கங்காவுக்கு அண்ணியா கல்யாணத்தில் கலந்துக்கப் போறியா? இல்லை ஒரு நடிகையா இதில் கலந்துக்கப் போறியா?

முதலில் இதுக்குப் பதில் சொல்லு?" என்று அவன் கேட்க... அதற்கு அவள் பதில் கூற முடியாது பேந்த பேந்த விழித்தாள். அதைக் கண்டு அவனது முகம் மிருதுவானது.

"என் மனைவியா என் தங்கை கல்யாணத்தில் நீ தாராளமா கலந்துக்கலாம். ஆனா அதுக்கு உனக்கு விருப்பம் இல்லை. சரி, ஒரு நடிகையா நீ கலந்துக்கலாம் என்றால்...???" என்று நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தவன்,

"நீ இங்கே இருப்பது யாருக்கும் தெரியாது. அப்படியே தெரிந்தாலும் நம்ம ஊர் மக்கள் வெளியில் சொல்ல மாட்டாங்க. அந்தளவுக்கு ஐயா மீது பெரும் மதிப்பு இருக்கு அவங்களுக்கு... ஆனா கல்யாணத்துக்கு வெளியூரில் இருந்து ஆட்கள் வருவாங்க. இது உனக்குத் தான் பிரச்சனையைக் கொடுக்கும். மீடியாக்காரங்க ஆர்வக்கோளாறுல உன்னோட குடும்பப் பின்னணியை மோப்பம் பிடிப்பாங்க. தேவையில்லாம உன் பிரைவசி போகும். அதனால் தான் அன்னைக்குக் கங்காவை பொண்ணு பார்க்கும் நிகழ்ச்சிக்கு உன்னை வர வேண்டாம்ன்னு சொன்னேன்." அவளுக்குப் புரியும்படி அவன் எடுத்துக் கூறினான்.

அவள் ஒன்றும் பேசாது எழுந்து செல்ல... அவனும் எழுந்து அவள் பின்னேயே சென்றவன், "ஏதாவது பதில் சொல்லு..." என்று கேட்க...

"ஊருக்கு போறேன்." அவனைத் திரும்பி பார்க்காது உரைத்தவள் விறுவிறுவென மேலே ஏற... அவனும் அவளைப் பின்தொடர்ந்தான். மேலே வந்ததும்,

"இன்னைக்கு நைட் போகலாம். நான் கொண்டு வந்து விடறேன்." அவன் தன்மையாகச் சொன்னான்...

"இல்லை... இப்பவே போகணும்." என்று அவள் பிடிவாதமாய்க் கூற...

"ரொம்பப் பிடிவாதம் பிடிக்கிற..." அவன் கோபத்தை அடக்கி கொண்டு பேசினான்...

"பிடிக்கலைன்னா டிவோர்ஸ் பண்ணிடு. சிம்பிள்..." தோளை குலுக்கியபடி வெகுசாதாரணமாகக் கூறியவளை கண்டு அவன் கோபத்தில் கையை ஓங்கி விட்டான். பின்பு முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் கையைக் கீழே இறக்கிவிட்டு,

"டிவோர்ஸ் பண்ணத்தான் கல்யாணம் பண்ணினேன்னா...? இதுக்கு எதுக்கு நான் உன்னைக் கல்யாணம் பண்ணனும்?" என்று அவன் சீற்றத்துடன் கேட்டான்.

"வேற எதுக்குச் சொத்துக்காகத் தான்..." என்று சொன்னவள் அவனை உற்று நோக்கினாள்.

இவளிடம் பேசி பிரயோஜனம் இல்லை என்பதை உணர்ந்தவன், "ஆமாம்டி சொத்துக்காகத் தான் உன்னை மாதிரியான ஆளை எல்லாம் சகிச்சுக்கிட்டு இருக்கேன்." என்று காட்டமாய்க் கத்தினான்...

"இது தான் நீ... அதனால் நீ என் கிட்ட ரொம்ப ஸ்மார்ட்டா ஆக்ட் பண்ண வேண்டாம்." என்றவள் வீட்டை நோக்கி சென்றாள்...

"கொஞ்ச நேரத்துக்கு முன்னே நல்லா தானே இருந்தாள். அதுக்குள்ள என்னாச்சு? இவளை புரிஞ்சு நடந்துக்கிறதுக்குள்ள எனக்கு நாக்கு தள்ளிரும் போலிருக்கே." அவன் தனக்குள் முணுமுணுத்தபடி குளிக்கச் சென்றான்.

சிவகுமரன் குளித்துவிட்டு வருவதற்குள் அபிஷரிகா சென்னைக்குச் செல்வதற்காகக் கிளம்பி தயாராக இருந்தாள். அதைக் கண்டதும் அவனுக்குக் கோபம் வந்தது. ஆனால் பெரியவர்கள் முன்னிலையில் ஒன்றும் பேசாது அமைதி காத்தவன் அவளை விடுவதற்காகத் தானும் கிளம்பினான்.

"சாப்பிடாமல் போறியே குமரா?" வேணி கவலையாகக் கேட்க...

"போற வழியில் பார்த்துக்கிறேன்ம்மா..." என்றவன் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டு மனைவியை அழைத்துக் கொண்டு காரிலேறினான். சிறிது தூரம் சென்றதும் அபிஷரிகா அவனிடம்,

"நல்ல ஹோட்டலா பார்த்து நிறுத்து சிவூ... சாப்பிட்டுட்டு போகலாம்." என்க...

"நீ சாப்பிட்டியா?" என்றவன் தனது பார்வையைச் சாலையில் வைத்திருந்தான்.

"ம்..." என்றவளிடம் பதில் ஏதும் கூறாது காரின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

அவனது கோபம் புரிந்து அவளும் அமைதியாக வந்தாள். சென்னை வந்ததும் அவளை வீட்டில் இறக்கிவிட்டு விட்டு அவன் வெளியில் கிளம்பிவிட்டான். அவள் மட்டுமே தனியே வீட்டில் இருந்தாள்.

'இதுக்குத் தாத்தா, பாட்டி வீட்டில் இருந்திருக்கலாம்.' அவள் சலிப்பாக எண்ணி கொண்டாள்.

இரவு வந்த சிவகுமரன் அவளிடம் எதுவும் பேசவில்லை. அவன் சாப்பிட்டு விட்டு உறங்க சென்று விட்டான். அவனது பாராமுகம் முதன்முறையாக அவளை வருத்தியது. அவனை எப்படிச் சமாதானம் செய்வது? என்று தெரியாது அவள் விழித்தாள்.

மறுநாள் காலையில் கிளம்பி வந்த சிவகுமரன் வரவேற்பறையில் இருந்தவளிடம், "நான் ஊருக்கு போறேன்." என்று அவளது முகம் பாராது கூறிவிட்டு சென்றுவிட்டான். அவள் கோபமும், அழுகையுமாய் அவன் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

ஊருக்கு வந்தவனை அன்று முழுவதும் திருமண வேலைகள் ஆக்கிரமித்துக் கொண்டது. இருள் சூழ்ந்த பிறகு வீட்டிற்கு வந்தவன் அங்குத் திண்ணையில் பொன்னம்பலம் மட்டும் தனியே அமர்ந்திருப்பதைக் கண்டு அங்கு வந்தான்.

"எல்லோரும் எங்கே ஐயா?"

"கங்காவுக்கு ரவிக்கை தைக்கக் கொடுத்திருந்ததை வாங்க போயிருக்காங்க. காவேரியும் வாக்கிங் போனால் நல்லதுன்னு கூடப் போயிருக்கிறாள். நீ சாப்பிட்டியா குமரா?" அவரது அக்கறையில் அவனது விழிகள் பனித்தது.

"வெளியில் சாப்பிட்டுட்டேன்." என்றவன் அப்படியே அமைதி காத்தான்.

"என் கிட்ட எதுவும் கேட்கணுமா குமரா?" அவனது அமைதியை கண்டு அவராகக் கேட்டார்.

"ஆமாங்க ஐயா... ஆனா அதை எப்படிக் கேட்கிறதுன்னு சங்கடமாக இருக்கு?"

"சங்கடப்படாம கேளு..." என்று ஊக்குவித்தவரை கண்டு,

"ஸ்டோர் ரூமில் சின்னம்மா மாதிரியே ஒருத்தங்க ஃபோட்டோ இருக்கே... அவங்க யாரு?" என்றவனைக் கண்டு அதிராது அவர் சோகத்துடன் வானத்தைப் பார்த்தார்.

"சொல்ல முடியாத விசயம்ன்னா வேண்டாம்ய்யா..."

"உன் கிட்ட சொல்றதுக்கு என்ன குமரா... அவள் தான் அபியோட அம்மா." என்றவரை அவன் திகைப்புடன் பார்த்தான்.

"நாங்க என் பையனுக்கு ஆசை, ஆசையா பார்த்து வச்ச பொண்ணு தான் அவள்... பெயரு, கீர்த்தனா. ரொம்ப நல்ல பொண்ணு. வசதின்னு பெருசா ஏதுமில்லை. பெற்றோரும் கிடையாது. தாய்மாமா வீட்டில் வளர்ந்த பொண்ணு. ஓரளவு படிச்சிருந்தாள். பார்க்க அழகாவும் இருந்தாள். அதனால் சீனி(வாசன்)க்கு அவளை மணம் முடிச்சு வச்சோம். அப்போ பிசினஸ் எல்லாம் சீனி கையில் கொடுத்துட்டு நானும், காவேரியும் இந்தக் கிராமத்தில் செட்டிலாகி இருந்த நேரம். அப்போ இந்தக் கிராமம் ரொம்ப வறண்டு போயிருந்தது. என்னுடைய அயராத உழைப்பில் இந்தக் கிராமத்தை

வறட்சியில் இருந்து மீட்டேன். அதான் இப்பவும் இந்தக் கிராமத்து மக்களுக்கு நான் தெய்வமா தெரியறேன்." என்றவர்,

"ஆங், எங்கே நிறுத்தினேன் குமரா?" என்று அவனிடம் கேட்க...

"கல்யாணம் முடிச்சு வச்சீங்க... அப்புறம்..."

"கல்யாணமான கொஞ்ச நாளில் கீர்த்தனா குழந்தை உண்டாகிட்டாள். காவேரி அவளை நல்லா கவனிச்சிக்கிட்டதால் கீர்த்தனாவுக்குச் சென்னைக்குப் போக இஷ்டம் இல்லை. சீனியும் அவள் இஷ்டத்துக்கு விட்டுட்டான். சீனி சென்னையில்... கீர்த்தனா இங்கே... இப்படிப் பிரிஞ்சிருந்த சமயத்தில் தான் நடிகை தனுஜா சீனியை ஒரு பார்ட்டியில் வச்சு சந்திச்சு இருக்காள். சீனி அவள் அழகில் மயங்கி..." என்றவருக்குத் துக்கம் தொண்டையை அடைக்க மேலே பேச முடியாது போனது...

"எதுவும் சொல்ல வேண்டாம்ய்யா..." என்று அவன் அவருக்கு ஆறுதல் அளித்தான். என்ன நடந்திருக்கக் கூடும்? என்பதை அவனால் ஊகிக்க முடிந்தது.

"நீ கட்டாயம் தெரிஞ்சுக்கணும் குமரா. அவங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணாமலேயே குடித்தனம் பண்ணியிருக்காங்க. எங்க யாருக்கும் எந்தவித சந்தேகமும் வரலை. அந்தளவுக்குச் சீனி கச்சிதமா எங்க கிட்ட நடிச்சிருக்கான். அப்போ தான் அபி பிறந்தாள். கீர்த்தனா தான் அவளுக்கு இந்தப் பெயரை வைத்தது. அதன் பிறகு சீனியோட வருகை கொஞ்சம் கொஞ்சமா குறைந்து போனது. ஒருநாள் அவன் தனுஜாவோட வந்து நின்னான். இனி கீர்த்தனா கூட வாழ விருப்பம் இல்லை. தனுஜா தான் அவனோட பொண்டாட்டி... திருப்பதியில் கல்யாணம் பண்ணிக்கிட்டோம்ன்னு சொன்னான். முதலில் எல்லோரும் நம்ப மறுத்தோம். அப்புறம் அவன் மீடியாவில் வந்த செய்தியை காட்டியதும் எங்க எல்லோருக்கும் உயிரே போயிச்சு. சீனி சென்னைக்குப் போன ராத்திரி கீர்த்தனா தற்கொலை பண்ணிக்கிட்டாள். சீனி தொட்ட உடம்பு

தனக்கு வேண்டாம்ன்னு அவள் தனக்குத் தானே கொள்ளி வச்சிக்கிட்டாள். சாகும் தறுவாயில் இதை அவளே எங்க கிட்ட சொன்னது." என்றவரது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. இரத்த சொந்தம் இல்லாத மருமகள் இறப்பிற்குக் கண்ணீர் வடித்தார் அந்தப் பாசமிகு மாமனார்.

"ஐயா..." சிவகுமரன் அவரது கண்ணீரை துடைத்து விட்டு ஆறுதலாய் அவரது தோளில் கை வைத்தான். அதைப் பற்றியபடி அவர் மேலே தொடர்ந்தார்.

"கீர்த்தனா காரியத்துக்குக் கூடச் சீனி வரலை. மூணு மாசம் கழிச்சு அவன் திரும்ப வந்தான். அவனைப் பார்த்து திகைச்சுப் போயிட்டேன். ஏன்னா அவன் அரை உயிராய் இருந்தான். கண்களில் உயிர்ப்பு இல்லை. அபியை அவனிடம் கொடுக்கச் சொல்லி கெஞ்சினான். நான் முடியாதுன்னு மறுத்தேன். அப்போ அவன் சொன்னான்... 'கீர்த்தனாவுக்கு நான் செஞ்ச பாவத்துக்குத் தனுவுக்குக் குழந்தை பிறக்காதுன்னு டாக்டர் சொல்லிட்டாங்க. எனக்கு இருக்கும் ஒரே வாரிசு அபி மட்டும் தான். ப்ளீஸ், அவளை எனக்குக் கொடுத்துருங்க'ன்னு என் காலில் விழுந்து கெஞ்சினான். அப்பவும் அபியோட எதிர்காலத்தைக் கருதி நான் அவளைக் கொடுக்க மறுத்தேன். ஆனால் சீனி அவனோட அம்மாவிடமும் கெஞ்சி கூத்தாடி அபியை தன்னோடு தூக்கிட்டு போயிட்டான். அதுக்குப் பிறகு நாங்க அடிக்கடி சென்னை போய் அபியை பார்த்துட்டு வருவோம். அவளும் இங்கே வருவாள். வயசு ஏற, ஏற அபி இங்கு வருவது குறைஞ்சு போனது. ஆனா நாங்க மட்டும் போய் அவளைப் பார்த்துட்டு வருவோம். அபிக்கு பதினாறு வயசாகும் போது அவள் நடிக்கப் போனாள். அதைக் கேள்விப்பட்டு நான் போய்ச் சீனி கிட்ட சண்டை போட்டேன். அதுக்குச் சீனியால் எதுவும் பேச முடியலை. ஆனால் அதுக்குத் தனு தான் பதில் பேசினாள். 'அபி டென்த்தில் ஃபெயிலாகிட்டாள். மேலே படிக்க மாட்டேன்னுட்டு சினி ஃபீல்ட்டை செலக்ட் பண்ணி இருக்கிறாள்'ன்னு... அதெல்லாம் விட அபி எங்க கிட்ட ரொம்ப அலட்சியமா பேசிட்டாள். இது அவள் விருப்பப்படி தான் நடக்குது.

அவளுக்குத் திரைத்துறை பிடிச்சியிருக்குன்னு சொல்லிட்டாள். அவளே அப்படிச் சொன்னதுக்குப் பிறகு நாங்க உடனே அங்கிருந்து கிளம்பி வந்துட்டோம். அதுக்குப் பிறகு நாங்க அங்கே போகவே இல்லை." என்றவர் நிறுத்திவிட்டு சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தார்.

"ஐயா..." அவன் அவரை உலுக்கவும்,

"கடைசியில் அந்தத் தனுஜா என் பேத்தி வாழ்க்கையை நாசப்படுத்தி விட்டாள். நீ தான் அபியை நல்வழிப்படுத்தணும்." என்றார் அவர் கலங்கி குரலில்...

"நடிப்பு ஒண்ணும் கேவலமான தொழில் இல்லை ஐயா... சின்னம்மா நடிக்கட்டும். அவங்களைப் பத்திரமா பார்த்துக்க வேண்டியது என் கடமை." அவனது வார்த்தையில் அவர் நிம்மதி அடைந்தார்.

அதற்குள் வெளியில் சென்றிருந்தவர்கள் திரும்பி வந்து விட்டிருந்தனர். சிவகுமரன் இரவு உணவை முடித்துக் கொண்டு சென்னை கிளம்பினான்.

"இந்த நேரத்தில் எதுக்குக் கிளம்புற குமரா? காலையில் போ..." என்று எல்லோரும் கூறினர்.

"காலையில் திரும்ப இங்கே வந்துவிடுவேன். அங்கே சின்னம்மாவை தனியே விட முடியாது." என்றவன் கிளம்பி சென்றுவிட்டான்.

சிவகுமரன் சென்னை வரும் போது நள்ளிரவாகி இருந்தது. அபிஷரிகாவை காணவில்லை. அவள் வீட்டை விட்டு வெளியில் போகவில்லை என்பது அவனுக்கு நன்கு தெரியும். ஒருவேளை அவளது அறையில் இருப்பாள் என்று நினைத்து அவன் அவளது அறையை நோக்கி சென்றான். எப்போதும் போல் இன்றும் அவளது அறை கதவு தாழ் போடவில்லை. அவன் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றான். படுக்கையில் அவள் இல்லை... அதைக் கண்டு அவன் சிறிது பயந்து தான் போனான். குளியலறையில் இருக்கிறாளோ? என்று அவன் குளியலறை கதவை திறந்து

பார்த்தான். அங்கும் அவள் இல்லை. அடுத்து அவன் பால்கனி சென்று பார்க்க... அவள் அங்குத் தான் தரையில் அமர்ந்திருந்தாள். அவளைக் கண்டதும் அவனால் நிம்மதி கொள்ள முடியவில்லை. இருளை கண்டு பயப்படும் அவள் இப்படி இருளில் அமர்ந்திருப்பது கண்டு அவனது நெஞ்சில் உதிரம் வழிந்தது.

"அம்முலு..." என்று அழைத்தபடி அவன் அவள் முன் தரையில் மண்டியிட்டு அமர்ந்தான்.

அவனது குரலில் விலுக்கென்று திரும்பி பார்த்தவளின் விழிகளில் என்ன இருந்தது??? அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"நான் கோபப்பட்டுப் பேசினால் நீ என்னை விட்டு போயிருவியாடா?" அவள் கோபத்துடன் அவனது சட்டையைப் பிடித்து உலுக்கினாள். அவளது கோபத்தின் பின் இருந்த தனக்கான தேடலை உணர்ந்தவன் முகம் மகிழ்ச்சியில் விகசித்தது.

"உன்னை விட்டு போறவனா இருந்தா... இப்படி அர்த்த ராத்திரியில் கிளம்பி வந்திருக்க மாட்டேன்டி." அவன் புன்னகையுடன் விளையாட்டாய் அவளது நெற்றியில் முட்டினான். அடுத்தக் கணம் அவள் அவனது முகத்தைத் தனது கரங்களில் ஏந்தியவள் அவனது முகம் முழுவதும் ஆவேசமாய் முத்தமிட்டாள்... அவளது ஒவ்வொரு முத்தத்திலும் அவனுக்கான அவளது தேடல், தவிப்புத் தெரிந்தது.

'ஏன் என்னைத் தனியா விட்டுட்டு போன?' என்கிற கேள்வியே அவளது ஒவ்வொரு முத்தத்திலும் அடங்கியிருந்தது.

'உன்னை விட்டு போக மாட்டேன்.' என்பது போல் அவனது கரங்கள் அவளை இறுக அணைத்துக் கொண்டது.

அவளது தவிப்புக் குறைந்ததும் அவள் அவனை விட்டு விலக... அவன் சட்டென்று அவளைத் தூக்கி கொண்டான்.

"என்னை விடுடா..." என்று திமிறியவளை இறுக அணைத்து கொண்டவன்,

"எத்தனை நேரம் இப்படியே உட்கார்ந்து இருக்கப் போற...?" என்றவன் அறைக்குள் நுழைந்து அவளைக் கட்டிலில் கிடத்தினான். பின்பு அவளுக்குப் போர்வையைப் போர்த்திவிட்டு அங்கிருந்த நாற்காலியை எடுத்து அவளுக்கு அருகில் போட்டவன் அதில் அமர்ந்து கொண்டான். தன்னையே பார்த்துக் கொண்டு இருந்தவளின் விழிகளை மூடியவன்,

"எதையும் யோசிக்காம தூங்கு..." என்க... அவன் சொன்னதைக் கேட்டவள் மெல்ல உறக்கத்தைத் தழுவினாள். அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தவன் தனது கால்களைக் கட்டிலின் மீது நீட்டி வைத்தவன் உட்கார்ந்த வாக்கில் அப்படியே உறங்கி விட்டான்.

மறுநாள் காலையில் அவள் எழுந்து அறையை விட்டு வெளியில் வரும் போது சிவகுமரன் வெளியில் செல்வதற்காகக் கிளம்பி இருந்தான். இவளை கண்டதும் புன்னகைத்தவன்,

"நான் ஊருக்கு கிளம்பறேன். நீ உன் டான்ஸ் பிராக்டிஸ்க்கு போ... டிரைவரை வர சொல்லியிருக்கேன். ஏதாவது அவசரம்ன்னா எனக்கு ஃகால் பண்ணு." என்றவன்,

"எந்த ராத்திரியா இருந்தாலும் நான் கிளம்பி வந்திருவேன். அதனால் கவலைப்படாம இரு." என்று அவளுக்குத் தைரியம் அளித்தான். அவள் பதில் பேசாது தலையை மட்டும் உருட்டினாள்.

நேற்று பொன்னம்பலம் அவளது பிறப்பு, வளர்ப்பு பற்றிக் கூறியது அவனது காதில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருந்தது. அவளை நினைத்து அவனுக்குப் பாவமாக இருந்தது. அவனுக்கு அவளைப் பார்க்கும் போது தங்க கூண்டில் அடைப்பட்டு இருக்கும் கிள்ளை மொழி கொஞ்சும் கிளி ஞாபகம் தான் வந்தது. அதற்கு மேல்

அவனாலும் அவளிடம் நின்று பேச நேரமில்லை. உடனே ஊருக்கு கிளம்பிவிட்டான்.

கங்காவின் திருமண நாள் நெருங்க, நெருங்க அபிஷரிகா டென்சனோடு இருந்தாள். யாருக்குமே தான் வேண்டாதவளாய் போய்விட்டோமே என்று அவளுக்குத் தன் மீதே கோபம் கோபமாய் வந்தது. திருமணத்திற்கு முதல் நாள் இரவு எப்போதும் வரும் சிவகுமரனையும் காணாது அவளது கோபம் அதிகரித்துக் கொண்டே போனது.

சிவகுமரன் எப்போதும் போல் நள்ளிரவில் வீடு வந்து சேர்ந்தான். அவனைப் பார்க்கும் போதே அவனது களைப்பு நன்கு தெரிந்தது. ஆனாலும் அபிஷரிகா தனது கோபத்தினைக் கைவிடவில்லை.

"எதுக்கு வந்த? கல்யாண வீட்டில் வேலையிருக்குமே... போ, போய் அதைப் பாரு... என்னைப் பத்தி நீ ஒண்ணும் கவலைப்பட வேண்டாம்."

"ம்ப்ச், நான் சண்டை போடும் மூடில் இல்லை." என்றவன் அவள் அருகில் வந்து அவளது கையைப் பிடித்து அதில் திருமண அழைப்பிதழை வைத்தான்.

"நாளைக்குக் கல்யாணத்துக்கு இன்னைக்கு அழைப்பிதழ்... ரொம்ப நல்லாயிருக்கு..." இகழ்ச்சியாய் கூறியவள் அதைப் பிரித்துக் கூடப் பார்க்கவில்லை.

"பிரிச்சு பாருடி..."

"மாட்டேன்..." என்று பிடிவாதம் பிடித்தவளிடம்,

"எனக்காக ப்ளீஸ்..." என்று அவன் கெஞ்ச... அவனது கெஞ்சல் அவளை ஏதோ செய்ய... அவள் அழைப்பிதழை பிரித்துப் பார்த்தாள். உள்ளே இருந்ததைப் படித்ததும் அவளது விழிகள் வியப்பில் விரிந்தது.

"சிவூ..." என்றவளுக்கு மகிழ்ச்சியில் வார்த்தை வரவில்லை.

"உன்னுடைய சிவூ தான்டி... அதெப்படி உன்னை நான் மறப்பேன்னு நீ நினைச்ச?" ஆதங்கத்துடன் கேட்டவனை அவள் அணைத்து கொண்டாள்.

"நடிகை மேடம், நாளைக்கு உங்க ரசிகையோட கல்யாணத்துக்கு வந்திருங்க." அவன் அவளது காதோரம் குனிந்து கிசுகிசுப்பாய் கூற... அவள் எல்லையில்லா நிம்மதியுடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்தாள்.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 11

சிவகுமரன் தனது தங்கையின் திருமணத்திற்கு நடிகை என்கிற முறையில் அபிஷரிகாவை சிறப்பு விருந்தினராக அழைத்திருந்தான். கங்காவின் வருங்காலக் கணவன் அபிஷரிகாவின் பரம ரசிகன்... அதனால் சிவகுமரன் விசயத்தைச் சொன்னதும் அவன் சந்தோசமாக ஒப்புக் கொண்டான். அவள் சிவகுமரனின் மனைவி என்பது கங்காவின் கணவன் மற்றும் அவனது குடும்பத்தாருக்குத் தெரியாது. அப்படிக் கூறுவதை அபிஷரிகா விரும்ப மாட்டாள் என்பதால் சிவகுமரனும் அவளைப் பற்றி எதுவும் கூறவில்லை.

அதை நினைத்து பார்த்தவனுக்கு இப்போதும் மனதின் ஓரமாய் வலித்தது. வெளி உலகிற்குத் தனது மனைவி என்று அவள் அடையாளப்படுத்தாமல் இருப்பதற்குக் காரணம் அவள் இருக்கும் திரைத்துறையே என்று அவன் நினைத்தான். திருமணமானது வெளியில் தெரிந்தால் அவளுக்கு நடிக்கும் வாய்ப்பு பறி போய்விடும் என்பதால் இப்படி மறைக்கிறாளோ? என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது. தன்னை விட அவள் நடிப்பை நேசிப்பது ஒரு கணவனாய் அவனுக்கு மிகவும் வலித்தது. அந்த வலியை அவளிடம் காட்டும் அளவிற்கு அவர்களது உறவு சுமூகமாக இல்லையே!

"சிவூ, நாம எப்போ கல்யாணத்துக்குப் போறோம்?" மனைவியின் ஆர்வ குரலில் தனது சிந்தனையைக் கலைந்தவன் அவளது முகத்தினைப் பார்த்தான். அவளது முகத்தில் இருந்த சந்தோசம் அவனைச் சிறிது சமாதானப்படுத்தியது.

"இப்பவே கிளம்பறோம்..." என்றவன் அவள் முன் விமானப் பயணச்சீட்டை காண்பித்தான்.

"அப்போ நான் போய்க் கிளம்பறேன்." என்றவள் அவனது பதிலை எதிர்பாராது தனது அறையை நோக்கி உற்சாகமாய் ஓட... அவன் புன்னகையுடன் அங்கிருந்த சோபாவில் கண்மூடி அமர்ந்தான். நாளை திருமணம் முடிந்து மனைவியை நல்லபடியாகத் திருப்பி அனுப்பி வைக்க வேண்டும் என்கிற எண்ணமே அவன் மனம் முழுவதும் வியாபித்திருந்தது.

சிறிது நேரத்தில், "நான் ரெடி..." என்று வந்தவளை கண்டு விழி திறந்தவன், "ம்..." என்றபடி எழுந்தான்.

சென்னையில் இருந்து திருப்பதிக்கு விமானம் மூலம் வந்தவர்கள் அங்கிருந்து ஊருக்குக் காரில் கிளம்பினர். ஓட்டுநரை தவிர்த்துவிட்டு சிவகுமரனே காரை ஓட்டினான்.

"கல்யாண வேலையை வச்சிட்டு என்னைக் கூட்டிட்டு போக வந்திருக்கியே. உன்னை யாரும் எதுவும் சொல்லலையா?" என்றவளை திரும்பி பார்த்து புன்னகைத்தவன்,

"என் மனைவியை அழைச்சிட்டு போறதுக்கு யார் என்ன சொல்ல முடியும்?" என்று அவன் ஒற்றைப் புருவத்தை ஏற்றியிறக்க... அவள் அமைதியாக அவனைப் பார்த்தாள்.

"எல்லா வேலையும் முடிஞ்சது. இப்போ ரெஸ்ட் எடுக்கிற நேரம் தான்..." என்று அவன் கூற... அவள் அவனது இடக்கையைப் பிடித்துக் கொண்டு தனது தலையை அவனது கை மீது சாய்த்து கொண்டாள். அவளது செயலில் அவனது முகத்தில் புன்னகை விரிந்தது. சந்தோசத்தில் கார் காற்றாய் வேகமாய்ப் பறந்தது.

இருவரும் வீட்டிற்கு வரும் போது அனைவரும் உறங்க சென்றிருந்தனர். சிவகுமரன் தன்னிடம் இருந்த சாவியைக் கொண்டு வீட்டை திறந்தவன் அவளைச் சத்தமில்லாது உள்ளே அழைத்துச் சென்றான். திண்ணையில் படுத்திருந்த பொன்னம்பலம் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார். அவளது அறைக்குள் நுழைந்து அவளது பையைக் கட்டிலில் வைத்தவன் அவளிடம்,

"ஒரு நிமிசம்..." என்றவன் வெளியில் சென்றான். சொன்னபடி ஒரு நிமிடத்தில் திரும்பி வந்தவன் அவள் முன் வந்து நின்றான். அவனது கையில் அட்டை பெட்டி ஒன்று இருந்தது.

"கங்கா கல்யாணத்துக்காக உனக்கு எடுத்த புடவை..." என்று அவன் அவளது கையில் அந்த அட்டை பெட்டியை வைத்தான். அவள் வியப்பில் விழிகளை விரித்தபடி அவனைப் பார்த்தாள்.

"பிடிச்சியிருக்கான்னு பாரு..." அவனது கிசுகிசுப்பான குரலில் அவளது கைகள் தானாக அதைப் பிரித்துப் பார்த்தது. இரத்த சிவப்பில் தங்க சரிகை கரையிட்டிருந்த பட்டுப்புடவை அத்தனை அழகாய் இருந்தது. அதை மென்மையாக வருடி கொடுத்தவள்,

"ம், பிடிச்சியிருக்கு..." என்றாள் மனமார, மனம் நெகிழ...

"அப்போ சரி, காலையில் ரெடியா இரு... நான் வந்து கூட்டிட்டு போறேன்." என்றவன் அறையை விட்டு வெளியில் வந்தான். அவளும் அவன் பின்னோடு வந்து அறை வாயிலில் தேங்கி நின்றாள். சட்டென்று திரும்பியவன் அவளை இறுக அணைத்து அவளது உச்சிவகிட்டில் தனது அழுத்தமான முத்திரையைப் பதித்துவிட்டு வேகமாய் அங்கிருந்து சென்றுவிட்டான்.

கணவனது செயலில் திகைத்திருந்தவள் பின்பு அறை கதவை சாற்றிவிட்டுக் கையிலிருந்த புடவையை அணைத்தபடி கதவின் மீது சாய்ந்தாள். அவளது விழியோரம் நீர்த்துளிகள் உருண்டோடியது.

மறுநாள் காலையில் வீடே திருமணக்கோலம் பூண்டிருந்தது. அதிகாலையில் எழுந்தவர்கள் திருமணத்திற்கு ஒவ்வொருவராகத் தயாராகிக் கிளம்பி வந்தனர். எல்லோரையும் திருமணம் நடக்கும் இடத்தில் இறக்கி விட்டு விட்டு அங்கே சிறிது நேரம் திருமண வேலைகளைச் செய்து கொண்டிருந்த சிவகுமரன் சரியாக முகூர்த்த நேரத்திற்கு அபிஷரிகாவை அழைக்க வீட்டிற்குக் கிளம்பி வந்தான்.

"அபியை எழுப்பி விடு குமரா... அவளைப் பார்த்துட்டு போகிறோம்." பொன்னம்பலம் கேட்டதற்குக் கூட அவன்,

"லேட்டா தான் தூங்கினாள். ரெஸ்ட் எடுக்கட்டும். தாலி கட்டும் போது வந்தால் போதும்..." என்று கூறிவிட்டான்.

"உன் மனைவி, என் மகள்களுக்கு அண்ணியா, இந்த வீட்டு மருமகளா எல்லா வேலைகளையும் இழுத்து போட்டுக்கிட்டு செய்வாள் என்று பார்த்தால்...???" வேணிக்கு சற்று மனத்தாங்கலாக இருந்தது.

"ம்மா, அபி சின்னப் பொண்ணும்மா... நிச்சயம் நம்ம யமுனா கல்யாணத்துக்கு அவள் முன்னே நின்னு எல்லா வேலைகளையும் பார்ப்பாள். எனக்கு நம்பிக்கை இருக்கு." என்றான் அவன் நம்பிக்கை தளராது... மகனது வாழ்க்கை அவருக்குச் சிறிது அச்சத்தைத் தரத்தான் செய்தது. ஆனால் அவர் அதை மகனிடம் சொல்லாது அமைதியாகி விட்டார்.

வீட்டின் முன் காரை நிறுத்தியவன் மனைவியைத் தேடி உள்ளே சென்றான். இன்னமும் அவள் அறையில் தான் இருக்கிறாள் போலும்...

"அபி, கிளம்பிட்டியா?" என்று அவன் அறை கதவை தட்டினான்.

"சிவூ..." அவளது மெல்லிய குரல் மட்டுமே கேட்டது. அறை கதவு திறக்கவில்லை.

"என்ன சொல்லு? முகூர்த்தத்துக்கு நேரமாச்சு." அவன் அவளை அவசரப்படுத்தினான்.

"லேடீஸ் யாராவது இருந்தால் வர சொல்லு சிவூ..."

"எதுக்கு...?" அவன் புரியாது கேட்டான்.

"எனக்கு... எனக்கு..."

"உனக்கு...?"

"புடவை கட்ட தெரியாது." அவள் கூறியதை கேட்டு அவன் தலையில் கை வைத்தான்.

"முதலில் கதவை திற..."

அவனது குரலுக்கு அடிபணிந்து அவள் கதவை திறந்தாள். அவள் நின்ற கோலம் கண்டு அவன் தான் அரண்டு போனான். அவள் இரவிக்கை, பாவாடை மட்டுமே அணிந்து புடவையைக் கையில் வைத்துக் கொண்டு நின்றிருந்தாள். புடவையை வைத்துத் தன்னை மறைக்க வேண்டும் என்று கூட அவளுக்குத் தோன்றவில்லை. தன்னைப் பரிதாபமாகப் பார்த்தபடி நின்றிருந்தவளின் பார்வையைக் கண்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"கொஞ்சமும் வெட்கம் என்பதே கிடையாதா?" என்று கேட்க... அவள் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள். அவனது முகத்தில் கோபம் இல்லை. ஆனால் வேறு எதுவோ இருந்தது. அது அவளுக்குப் புரியவில்லை.

"கோபமா இருக்கியா சிவூ?"

"இல்லை..." என்று அவளிடம் பதில் கூறியவன், 'தாபமாய் இருக்கிறேன் பெண்ணே!' என்று மனதிற்குள் கூறிக் கொண்டான்.

"பின்னே எதுக்கு இப்படிச் சொல்ற?"

"இப்படிப் பப்பரப்பான்னு நின்னா இப்படித்தான் சொல்வாங்க."

"எப்படி நிற்கணும்?" அவள் புரியாது விழித்தாள். அவளது கையிலிருந்த புடவையை எடுத்து அவள் மீது

போர்த்திவிட்டவன்,

"இப்படி இருக்கணும்..." என்றான்...

"நீ என் கணவன் தானே சிவூ... கணவன், மனைவிக்குள் இது ஒண்ணும் தப்பில்லை." அவள் கூறியதை கேட்டு அவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை.

"தப்பில்லை தான்... வா, நான் புடவை கட்டி விடறேன்." என்றவன் மளமளவென்று செயலில் இறங்கினான்.

அவன் புத்தர் போன்ற முகத்துடன் சாதாரணமாக அவளுக்குப் புடவையைக் கட்டிவிட... அவனது கைகள் அவளது மேனியில் ஆங்காங்கே உரசி சென்றதில் அவள் தான் தீப்பிழம்பாய் மாறியிருந்தாள். இறுதியாக அவன் புடவை கொசுவத்தைச் சொருக முயன்ற போது தடுத்தவள்,

"நானே செய்துக்கிறேன்." என்றவள் அதை வாங்கித் தானே சொருகி கொண்டாள்.

அவன் அதிசயமாய் அவளை ஏறிட்டு பார்க்க... அவளது செயலுக்கு விடையாக, அவளது சிவந்த முகமே அவனுக்குக் காட்சி அளித்தது. அதைக் கண்டு அவனுள் உல்லாசம் பிறந்தது. அதே மனநிலையில் அவன் அவளுக்குச் சடை பின்னிவிட்டு, அதில் பூ வைத்துவிட்டான். ஏற்கெனவே எடுத்து வைத்திருந்த அவளது அன்னையின் நகைகளை அவளே அணிந்து கொண்டாள்.

"இதெல்லாம் நீ வாங்கினியா சிவூ?" அவளது கேள்விக்குப் பதில் அளிக்க முடியாது திணறியவன் அவள் அருகில் வந்து சிவப்பு நிற ஒட்டுப் பொட்டை எடுத்து அவளது நெற்றியில் ஒட்டியவன்,

"இப்பத்தான் அழகாயிருக்க..." என்று கூசாது அவளுக்கு ஐஸ் வைக்க... அவன் நினைத்தது போல் அவள் தான் கேட்ட கேள்வியை மறந்து அவனைப் புன்னகையுடன் பார்த்தாள்.

இருவரும் கிளம்பி திருமணத்திற்கு வந்தனர். ஒரு நடிகை திருமண வீட்டிற்கு வந்தால் எத்தனை சலசலப்பு, பரபரப்பு இருக்குமோ அத்தனையும் அங்கேயும் நிகழ்ந்தது. அவளைப் பாதுகாப்பாய் மண்டபத்திற்குள் அழைத்துச் செல்வதற்குள் அவன் ஒருவழி ஆகிவிட்டான். மணமேடைக்கு முன்னிருந்த நாற்காலியில் அவளை அமர வைத்த பின்பே அவன் நிம்மதி மூச்சு விட்டான். அடுத்தக் கணம் அவன் யாரோ என்பது போல் அவளை விட்டு விலகி சென்றான். ஆம், அங்கே அவள் மீதான அவனது உரிமையை அவன் காட்ட கூடாதே… முதலில் அவள் இதை உணரவில்லை. தாத்தா, பாட்டி கூடத் தன்னை நெருங்கி பேசாததை அவள் கண்டு கொள்ளவில்லை. அவள் மகிழ்ச்சியாய் திருமண நிகழ்ச்சியைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அப்போது அந்தப் பக்கமாய்ச் சென்ற சிவகுமரனை கண்டு அவள்,

"சிவூ…" என்றழைக்க…

"கூப்பிட்டீங்களா சின்னம்மா?" என்றபடி வந்தவனைக் கண்டு அவள் மனதளவில் பெருத்த அடிவாங்கினாள். அவளது விழிகள் கலங்கி போனது.

"ஒண்ணுமில்லை…" என்றவள் அவனை ஏறிட்டு பார்க்கவில்லை. அவன் அவளைப் பார்த்தபடி அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் சென்றதும் அவளது பார்வை அவனையே சுற்றி சுற்றி வந்தது. பத்மா முதற்கொண்டு திருமண வயதிலிருந்த அனைத்து பெண்களும் அவனிடம் வெகுசாதாரணமாகச் சிரித்து உரையாடி கொண்டிருந்தனர். அதைக் கண்டு அவளுக்குத் தான் இரத்த அழுத்தம் எகிறியது. தன்னிடம் உரிமையாய் பேசாது மற்றவர்களிடம் சிரித்துச் சிரித்துப் பேசும் கணவனைக் கண்டு அவள் கோபமாய் முறைத்து கொண்டிருந்தாள். சிவகுமரன் எங்கிருந்தாலும் மனைவியை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டு தான் இருந்தான். அவளது கோபமுகம் கண்டு அவன் திகைத்தான்.

'அச்சோ, இன்னைக்கு எதைக் கொண்டு என் தலையை உடைக்கப் போறாளோ தெரியலையே?' அவனது மனதில் திகில் எழுந்தது.

அபிஷரிகா திருமணம் நடந்து முடியும் வரை அமைதியாக இருந்தாள். பிறகு மணமக்களோடு புகைப்படம் எடுத்துக் கொள்ள அவளை அழைக்க வந்தான் சிவகுமரன். அவள் ஒன்றும் பேசாது எழுந்தவள் அவனின் முன்னே நடந்தாள். அவனுடன் இணைந்து நடக்க அவளுக்கு விருப்பம் இல்லை. அத்தனை கோபம் அவன் மீது. அவளது அழகிய தோற்றம், கம்பீர நடையைக் கண்டு சிவகுமரனே சிறிது அசந்து போனான். இப்போது அவனுக்குப் புரிந்தது, இந்தச் சின்ன வயதில் ஆணாதிக்கத் திரைத்துறையில் அவள் எப்படி இந்தளவிற்குப் புகழ் பெற்று விளங்குகிறாள் என்று... மனைவியின் இந்தக் கம்பீரத்தை ஆணவன் ரசித்தாலும், வீட்டில் தன்னைப் பரிதாபமாகப் பார்த்த அந்த அப்பாவி அபிஷரிகாவை கணவனாய் அவனது மனம் தேடியது.

மணமேடையில் அளவாய் புன்னகைத்தவள் மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்து விட்டு, அவர்களுடன் இணைந்து புகைப்படத்திற்கு நின்றாள். அப்போது அவள் அருகில் செல்லலாமா? வேண்டாமா? என்று யோசித்துக் கொண்டிருந்த சிவகுமரனின் கையை யாருக்கும் தெரியாது பற்றி அவனைத் தன்னருகே இழுத்து நிறுத்தியவள் புகைப்படக் கருவியை நோக்கி புன்னகைத்தாள். புகைப்படக் கருவி இருவரையும் ஜோடியாய் தன்னுள் உள்வாங்கிக் கொண்டது... அவளது செயலில் அவன் தான் திகைத்து நின்றிருந்தான்.

மீண்டும் அபிஷரிகாவை வீட்டில் கொண்டு விடுவதற்காகச் சிவகுமரன் வந்தான். காரிலிருந்து இறங்கியவளிடம்,

"மதிய சாப்பாட்டை அனுப்பி வைக்கிறேன். நீ ரெஸ்ட் எடு..." என்று அவன் கூற...

"வீட்டுக்குள் வா..." வலக்கை ஆட்காட்டி விரலை அசைத்துக் கம்பீரமாக அவனை அழைத்தவள் வீட்டை நோக்கி

நடந்தாள். அவன் எதற்கு என்று புரியாது அவளைப் பின்தொடர்ந்தான். அவளைத் தொடர்ந்து அவளது அறைக்குள் அவனும் நுழைய... அவள் சட்டென்று அறை கதவை சாற்றிவிட்டு அதன் மீது அவனைச் சாய்த்தவள் அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றியபடி,

"உனக்கு மனசில் என்ன பெரிய கண்ணன்னு நினைப்பா? எப்போதும் கோபியர்கள் சூழத்தான் கண்ணன் இருப்பாரோ?" என்று கோபமாய்க் கேட்டவளை கண்டு அவன் புரியாது திகைத்து விழித்தான்.

"இந்த ஊரில் உன்னைத் தவிர வேறு எவனும் ஆம்பிளை இல்லையா? எல்லாவளும் உன் பின்னாடியே சுத்திக்கிட்டு இருக்காளுங்க? நீயும் பல்லை காட்டி இளிச்சிக்கிட்டு இருக்க..."

அவள் கூறியதன் அர்த்தம் புரிந்து அவனது திகைப்பு விலகி அவனுள் உல்லாசம் பொங்கியது. அவளது இடையில் கை கொடுத்துத் தன்னருகில் இழுத்தவன்,

"நான் ஒரு லூசு பொண்ணு பின்னாடி லூசா சுத்திக்கிட்டு இருக்கேன். அது அந்தப் பொண்ணுக்கு தெரியலை. அதை எப்படி அந்தப் பொண்ணு கிட்ட சொல்றது?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்க...

"உண்மையா?"

"உண்மையா தான்... சொந்த பொண்டாட்டி கிட்டயே சொந்தம் கொண்டாட முடியலை. இதில் எங்கே ஊரில் இருக்கும் பொண்ணுங்களை எல்லாம் சொந்தம் கொண்டாடுவது?"

"உன் வாய் தான் அப்படிச் சொல்லுது. ஆனா உன் கண்ணு ரெண்டும் அலைபாயுது..." அவள் நொடித்துக் கொண்டாள்.

"இந்த விசயத்தில் நான் ராமன்டி... உன்னைத் தவிர வேறு யாரும் என் மனசில் இல்லை..." என்றவனை அவள் இமைக்க மறந்து பார்க்க...

"அதுக்காக அழகான பொண்ணுங்களைப் பார்த்தால் சைட் அடிக்காம இருக்க முடியாது. அழகை ஆராதிப்பது ஆண்களோட கடமை. அழகை ரசிப்பது ஆண்களோட ஏகபோக உரிமை." என்றவனைக் கண்டு,

"உன்னை..." என்றவள் அவனை அடிக்கக் கையை ஓங்க... அவன் சிரித்தபடி அவளது கையை மடக்கி பிடித்தான்.

"கையைப் பிடிச்சா ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நினைக்கிறியா?" என்றவள் தன் பற்கள் கொண்டு அவனைக் கடிக்க முயல... அடுத்த நொடி அவன் அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான்.

மனைவியின் ஐந்து நிமிட ஒதுக்கம், அவளது கம்பீரமான அழகு எல்லாம் அவனுள் சிறிது தாழ்வு மனப்பான்மையைத் தூண்டிவிட்டு இருந்தது. அது அவளைச் சொந்தம் கொண்டாட துடித்தது. அவன் முதன்முறையாகத் தனது கணவன் உரிமையை அவளது இதழில் மட்டுமல்லாது அவளது மேனியிலும் உணர்த்தினான். அவளுக்குமே அவனது பாராமுகம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. தான் அவனது மனைவி என்பதை அவனது இதழொற்றலுக்கு இசைந்து கொடுத்தும், அவனது கைகளின் அத்துமீறலுக்கு இழைந்து கொடுத்தும் நிரூபித்துக் கொண்டிருந்தாள்.

வெளியில் யாரோ பாத்திரத்தை உருட்டும் சத்தம் கேட்டு இருவரும் வேகமாய் விலகினர். அவள் அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டாள். அவன் தாபம் தீராது அவளைப் பின்னோடு இருந்து அணைத்து கொண்டவன்,

"நைட் ஃப்ளைட்க்கு கிளம்பணும். ரெஸ்ட் எடுத்துட்டு ரெடியா இரு." அவளது காதோரமாய் ரகசியம் போல் கூறியவன் அடுத்த நொடி அறையை விட்டு வெளியேறி விட்டான். அவள் தான் ஏமாற்றத்துடன் அவன் சென்ற திசையைப் பார்த்து கொண்டிருந்தாள்.

மணமக்களை மறுவீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டு விட்டு சிவகுமரன் இரவே ஊர் திரும்பி விட்டான். வந்த

உடனேயே அபிஷேரிகாவை கிளம்பச் சொல்லி அவசரப்படுத்தியவன் அவளை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான். போகும் வழியில் அவள் அவனிடம்,

"பசிக்குது சிவூ..." என்க...

"இன்னும் சாப்பிடலையா?"

"ம்ஹூம், இல்லை..."

அவள் கூறியதும் வழியில் இருந்த உணவு விடுதியில் காரை நிறுத்தியவன், "நீ காரிலேயே இரு... நான் போய்ச் சாப்பாடு வாங்கிட்டு வர்றேன்." என்றவன் இறங்கி சென்றான். அவள் அவன் செல்வதைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். சிறிது நேரத்தில் உணவு பொட்டலத்துடன் காரிலேறி அமர்ந்தவன் அவளிடம் அதைக் கொடுத்து,

"சாப்பிடு..." என்க... அவளோ அதை அவனது கையில் திருப்பி வைத்தவள்,

"நீ சாப்பிடு..." என்க... அவன் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"நான் சாப்பிடலைன்னு உனக்கு எப்படித் தெரியும்?"

"அது உன் முகத்தைப் பார்த்தாலே தெரியுது." அவள் புன்னகையுடன் கூற... அவளது வார்த்தையில் அவன் என்ன மாதிரியாக உணர்ந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை. அவன் மனம் நெகிழ உணவு பொட்டலத்தைப் பிரித்து உணவை எடுத்து அவள் புறம் நீட்டி,

"நீயும் சாப்பிடு..." என்க... அவள் ஆர்வமும், ஆசையுமாய் அதை வாங்கிக் கொண்டாள்.

இருவரும் உண்டு முடித்ததும் அவன் காரை கிளப்பினான். அவள் அவனைப் பார்ப்பதும் பின்பு யோசிப்பதுமாய் வருவதைக் கண்டு அவன் தான் முதலில் வாய்த் திறந்தான்.

"என்ன அபி...?"

"நான் ஒண்ணு கேட்கவா...?"

"கேளு..."

"இன்னைக்குக் கங்காவுக்கு... ராத்திரி..." எப்படிச் சொல்வது என்று அவள் தயங்கி நிறுத்த... அவன் விசயம் புரிந்தவனாய் அவளைப் பார்த்தவன்,

"ஆமா, அதுக்கு என்ன இப்போ?" என்று சாதாரணமாகக் கேட்டான்.

"உனக்கு அந்த மாதிரியான ஆசைகள் எதுவும் கிடையாதா சிவூ...?" அவள் கேட்டதில் திகைத்து காரை அப்படியே நடுச் சாலையில் நிறுத்தியவன் பின்பு சுதாரித்துக் கொண்டு காரை கிளப்பியபடி,

"ஆசைகள் இருக்கு... ஆனா அதுக்கான வயசு உனக்கும் இல்லை... எனக்கும் இல்லை. இப்போ எதுக்கு அது பத்தி தேவையில்லாத ஆராய்ச்சி..." அவன் சொன்ன பதில் கேட்டுக் காலையில் இருந்து ஊசலாடி கொண்டிருந்த அவளது மனம் சிறிது சமன்பட்டது.

"நான் உன் வொய்ப் தானே சிவூ..."

"ஆமாம்டி, பொண்டாட்டி..." அவள் புறம் திரும்பி பார்த்தவன் கண்சிமிட்டி சிரித்தான்.

"என்னைய பிடிக்குமா?" என்றவளின் கையை எடுத்து அதில் முத்தமொன்று பதித்தவன்,

"இதென்ன லூசு மாதிரி கேள்வி... உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்கும்." என்று அவன் சொல்ல...

"அப்போ ஏன் நான் கொடுத்த பத்து லட்சத்தை நீ கல்யாண செலவுக்கு எடுக்கலை." என்றவளை கண்டு உள்ளுக்குள் திடுக்கிட்டவன் பின்பு சமாளித்துக் கொண்டு,

"தேவைப்படலை... அதான் எடுக்கலை. இருக்கிறதை வச்சு சமாளிச்சிட்டேன்." என்று அவன் சமாளித்தான்.

"ஓ..." என்றவள் அமைதியாகி போனாள். அவளது அமைதி அவனை ஏதோ செய்தது.

"எனக்கு ஒரு பிரச்சனைன்னு தெரிஞ்சதும் பணம் கொடுத்து உதவியது நீ தான்... அந்த நன்றிக்கடன் என் மனசு முழுசும் இருக்கு. அத்தோடு நீயும் என் மனசு பூராவும் நிறைஞ்சு இருக்க. எதையாவது நினைச்சு மனசை போட்டு உழட்டிக்காதே." அவனது ஆறுதல் மொழிக்கு அவள் மெல்ல தலையசைத்தாள்.

விமான நிலையத்தில் காரை நிறுத்தியவன் அங்குத் தயாராக நின்றிருந்த ஓட்டுநரிடம் கார் சாவியைக் கொடுத்துவிட்டு தங்களது உடமைகளை எடுத்துக் கொண்டு அபிஷரிகாவையும் அழைத்துக் கொண்டு விமான நிலையத்திற்குள் சென்றான். அவர்கள் சென்னை வந்து சேர்வதற்கு நள்ளிரவை தாண்டியிருந்தது. இருவருக்குமே அசதியாக இருந்ததால் உறங்க சென்றுவிட்டனர்.

மறுநாள் காலையில் வந்த செய்தித்தாளை பிரித்துப் பார்த்த சிவகுமரன் வாய்விட்டுச் சிரித்தான். அதைக் கண்ட அபிஷரிகா தன் அருகிலிருந்த குட்டி தலையணையை எடுத்து அவன் மீது வீசியவள்,

"சொல்லிட்டு சிரிடா..." என்க...

"இங்கே வா..." என்று அவன் சிரிப்புடனூடே அவளை அழைக்க.... அவள் புரியாது எழுந்து சென்று அவன் அருகில் வந்தமர்ந்தாள். அவன் செய்தித்தாளை அவளிடம் காட்டினான். அதைப் படித்துப் பார்த்தவளுக்கு லேசாகச் சிரிப்பு வந்தது.

"தொழிலதிபர் சிவகுமரனுக்கும், நடிகை அபிஷரிகாவுக்கும் இடையில் காதல்... விரைவில் இவர்களது திருமணம் எதிர்பார்க்கப்படுகிறது." என்று சத்தமாய் வாசித்தவன்,

"நாம எத்தனை தடவை கல்யாணம் பண்ணிக்கிறது?" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தான்.

"கீழே என்ன போட்டு இருக்குன்னு படிச்சு பார்த்தியா?"

"என்ன எழுதி இருக்கான்...?" என்றவன் செய்தியை முழுவதும் படித்துவிட்டு,

"ரெண்டு பேரும் ஒரே வீட்டில் வசிக்கிறோம்ன்னு எழுதி இருக்கான்." என்றவன் அவளைப் புரியாது பார்த்தான்.

"நீ என்னை வச்சியிருக்கன்னு எழுதி இருக்கான்." அவள் உணர்வில்லாத குரலில் கூற...

"இதுவும் நல்லா தான் இருக்கு... கட்டிக்கிறதை விட... வச்சிக்கிறது." அவன் கேலியாய் கண்சிமிட்டி சிரிக்க... அவனது வார்த்தையில் பெண்ணவள் மனம் பெரிதாக அடிப்பட்டுப் போனது.

"நான் குளிக்கப் போறேன்..." என்று தெளிவில்லாது முணுமுணுத்து விட்டு அவள் எழுந்து சென்றுவிட... அவன் தோள்களைக் குலுக்கியபடி செய்தியில் மூழ்கி போனான்.

அறைக்குள் வந்து குளியலறைக்குள் புகுந்தவள் ஷவரை திறந்துவிட்டு அதன் அடியில் நின்றாள். அவளது மனதிலிருந்த வெம்மையை அந்தக் குளிர்ந்த நீரால் கூடப் போக்க முடியவில்லை. யார் கூட எல்லாமோ அவளை இணைத்து வைத்துப் பேசிய போது கூட அவள் இந்தளவிற்கு வருத்தபடவில்லை. ஆனால் முதன்முறையாகக் கணவனோடு தன்னை இணைத்து வைத்து பேசியதற்கு அவள் மிகவும் வருத்தப்பட்டாள்.

"நீ சொன்ன மாதிரி உனக்கும் நான் வி........ரியாகப் போய்ட்டேனே சிவூ..." என்றவளது விழிகளில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. அன்று கணவன் சொன்ன அந்தச் சொல் அவளை மிகவும் பாதித்து இருந்தது.

**********************

அடுத்து வந்த நாட்கள் இருவருக்கும் இடையில் எப்போதும் போல் ஊடலும், சிறு தீண்டலுமாய்ச் சென்றது. அவள் நட்சத்திர திருவிழாவிற்காகச் சிங்கப்பூர் செல்லும் நாளும் வந்தது. அது பற்றி அவள் அவனிடம் கூற...

"நான் சொல்லும் போது போகலாம்..." என்று அவன் முடித்து விட்டான்...

அவள் சரியென்று விட்டு அதை அப்படியே தீபனிடம் கூறிவிட்டாள். அவளை எப்படி அடைவது? என்று தீபன் பெரும் குழப்பத்தில் இருந்தான். நட்சத்திர திருவிழாவிற்குத் தனியே சிங்கப்பூர் வரும் அபிஷரிகாவை சரிகட்டி அவளைத் தன்வசப்படுத்த நினைத்திருந்தான் அவன். அவனது நினைப்பில் பெரிய பாறாங்கல்லை தூக்கி போட்டு விட்டான் சிவகுமரன்.

சொன்னது போல் சிவகுமரன் நட்சத்திர திருவிழாவிற்குப் பத்து நாட்களுக்கு முன்பு அபிஷரிகாவை சிங்கப்பூர் அழைத்துச் சென்றான். விமானத்தில் ஏறியமர்ந்ததும் அபிஷரிகா அவனிடம்,

"நான் ஸ்டார் நைட் புரோக்ராம்க்கு போறேன். ஆனா நீ எதுக்குச் சிங்கப்பூர் வர்ற?" என்று சந்தேகமாய்க் கேட்க...

"நான் பிசினஸ் விசயமா வர்றேன்."

"அடேங்கப்பா... பெரிய பிசினஸ் மேக்னெட் தான்..." என்றவள் வேறு ஒன்றும் துருவி கேட்கவில்லை.

சிவகுமரனுக்குப் போர் அடிக்கவும் தன் முன்னிருந்த சின்னக் கணினி திரையில் படங்களைப் போட்டுப் பார்த்தான். அதில் அபிஷரிகா நடித்த படங்களும் இருந்தது.

"ஏய், இங்கே பார்... நீ நடிச்ச படங்களும் இருக்கு..." என்றவனை அவள் முறைத்து பார்த்தாள். அவன் அவளைக் கண்டு கொள்ளாது வேறு ஒரு படத்தை எடுத்து போட்டான்.

"ஏன் என் படத்தைப் பார்த்தால் என்ன?" அவள் அவனிடம் சண்டைக்கு வந்தாள்.

"எனக்கு ரீல் வேண்டாம்... ரியலே போதும்." என்றவனைக் கண்டு கோபத்துடன் இரு கைகளைத் தூக்கி கொண்டு பிராண்டுவது போல் அவன் அருகே வந்தவள்,

"போடா..." என்றுவிட்டுக் காதில் ஹெட்ஃபோனை மாட்டி கொண்டு பாடல்களைக் கேட்க ஆரம்பித்தாள். அவன் சிரித்தபடி படம் பார்க்க ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் அபிஷரிகா அவனது தோளில் தூங்கி வழிந்தாள். அவன் அவளை அணைத்துக் கொண்டு விழிகளை மூடி இருக்கையில் சாய்ந்தான்.

அவர்கள் சிங்கப்பூர் வந்து நட்சத்திர விடுதிக்கு வந்து சேர்ந்த போது அதிகாலை பனிரெண்டு மணியாகி இருந்தது. அவளிடம் அறை கதவை திறக்கும் 'ஸ்மார்ட் கார்ட்'டை கொடுத்தவன்,

"ம், கதவை திற..." என்றவன் உடமைகளைக் கையில் எடுத்தான்.

அபிஷரிகா அறை கதவை திறந்து உள்ளே நுழைந்தவள் அங்கிருந்த போர்டில் ஸ்மார்ட் கார்ட்டை சொருகியதும் அறை முழுவதும் மின்விளக்குகளால் ஒளிர்ந்தது. கூடவே வண்ண வண்ண பலூன்களும் பறந்தது.

"ஹேப்பிப் பேர்த்டே மை டியர் அம்முலு..." அறையில் ஒலித்த பிறந்தநாள் வாழ்த்து பாடலுடன் சிவகுமரனும் சேர்ந்து பாட...

"சிவூ..." அபிஷரிகா சந்தோசத்தில் கூச்சலிட்டபடி ஓடிவந்து சிவகுமரனை அணைத்து கொண்டாள்.

அவளது அதிரடியில் திகைத்தவன் அப்படியே அங்கிருந்த சோபாவில் மல்லாக்க விழுந்தான். அவனை அணைந்திருந்த அபிஷரிகாவும் அவனைத் தொடர்ந்து அவன் மீது பூப்பந்தாய் விழுந்தாள். தானாக வந்தவளை அவன் வேண்டாமென்றா சொல்வான். அவனது கரங்கள் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டது. அவளும்

பதிலுக்கு அவனை இறுக்கி அணைத்துக் கொள்ள... அவன் தான் உணர்வுகளின் பிடியில் தத்தளித்தான்.

"ஹேய் ரௌடி பேபி, நாம சிங்கப்பூர் வந்திருக்கிறது ஸ்டார் நைட்டுக்கு... ஹனிமூன் கொண்டாடுவதற்கு இல்லை..." அவன் அவளது காதோரம் மெல்ல கிசுகிசுத்தான்.

கணவனது வார்த்தைகளில் அவளது முகம் நாணத்தில் அந்திவானமாய்ச் சிவந்தது. அவள் வெட்கத்துடன் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள். அந்தோ பரிதாபம்! அவனால் அவளது வெட்கத்தினைப் பார்த்து ரசிக்க முடியவில்லை.

"ஹேப்பிப் பேர்த்டே அம்முலு." அவன் குனிந்து அவளது காதோரம் மீண்டும் பிறந்த நாள் வாழ்த்தை கிசுகிசுப்பாய் கூற... அதைக் கேட்டு அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"இத்தனை வருசத்தில் நான் ஒரு பிறந்தநாளில் கூட இவ்வளவு சந்தோசமாய் இருந்தது இல்லை சிவூ... ஆனா இன்னைக்கு நான் ரொம்ப ரொம்பச் சந்தோசமாய் இருக்கேன். இதுக்குக் காரணம் நீ தான்." என்றவளது விழிகளில் கண்ணீர் கரை கட்டியது.

"ஏதோ சம்திங் அபியோட வாழ்க்கையில் இருக்கு... மேம்போக்கா பார்த்தால் எல்லாம் சரியா இருக்கிற மாதிரி தான் தெரியும். ஆனால் எதுவோ சரியில்லை." ஆகாஷின் தந்தை நந்தகுமார் கூறியது சிவகுமரனின் காதுகளில் இப்போதும் ஒலித்துக் கொண்டிருந்தது. அடுத்த நொடி அவனது கைகள் மனைவியைப் பாதுகாப்பாய் இறுக்கி அணைத்துக் கொண்டது.

தொடரும்...!!!

## அத்தியாயம் - 12

"என்னுடைய ரௌடி பொண்டாட்டிக்கு என்னுடைய சின்னப் பரிசு..." மனைவியின் காதோரம் கிசுகிசுத்த சிவகுமரன் தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து சின்ன நகைப்பெட்டி ஒன்றை வெளியில் எடுத்தான். அபிஷரிகா அதைக் கவனிக்காது அவனது முகத்தை ஆர்வத்துடன் பார்த்தபடி,

"என்ன பரிசு...?" என்று கேட்க...

அவன் நகைப்பெட்டியை திறந்து அதிலிருந்து மோதிரம் ஒன்றை எடுத்தான். சின்ன ஒற்றைக் கல் வைரத்துடன் அந்த மோதிரம் மிகவும் அழகாயிருந்தது. அதை அவளது இடக்கை மோதிர விரலில் மென்மையாக அணிவித்தவன்,

"பிடிச்சிருக்கா...?" என்று அவளிடம் கேட்டான்.

"ம், ரொம்ப..." என்றவள் கணவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

"உனக்கு நிறையச் செய்யணும்ன்னு எனக்கு ஆசை இருக்கு... இப்போதைக்கு அந்தளவுக்கு வருமானம் எனக்கு இல்லை. என்னுடைய வருமானத்தில் சின்னதா வாங்கியிருக்கேன்." என்று கூறியவனின் வார்த்தைகள் எதுவும் அவளது காதில் விழவில்லை. அவள் தனியொரு உலகத்தில் மகிழ்வாய், இனிமையாய் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

அவள் தள்ளிவிட்டது போல் அப்படியே இருவரும் சோபாவில் படுத்திருந்தனர். அவனுக்கும் அவளை விலக்கி விட்டு எழ மனதில்லை. அவளுக்கும் அப்படியே போலும். இருவரும் அந்தக் கணத்தை அமைதியாக அனுபவித்தபடி இருந்தனர்.

"கேக் வெட்டலாமா?" மீண்டும் ரகசியம் பேசியவனை ஏறிட்டு பார்த்தவள் ஆமென்பது போல் சந்தோசமாகத் தலையசைத்தாள்.

"அதுக்கு முதலில் நாம எழுந்துக்கணும் அம்முலு..." அவன் நமட்டு சிரிப்புடன் கூற...

"முடிந்தால்... என்னை விலக்கிட்டு நீ எழுந்துக்கோ..." அவள் அவனிடம் சவால் விட்டாள்...

"அது முடியாதே... நானாகவும் உன்னை விலக்க மாட்டேன். நீயாக விலகி போகவும் விட மாட்டேன்." அவளது நாசியோடு நாசி உரசியபடி காதலோடு சொன்னவனின் வார்த்தைகளின் அர்த்தம் அவளுக்கு எந்தளவிற்குப் புரிந்தது என்று தெரியவில்லை.

"அப்போ எப்படி எழுந்துக்கிறது?" என்று குறும்புடன் தன்னைப் பார்த்தவளை கண்டு,

"இப்படி..." என்றவன் மனைவியை அணைத்தபடி எழுந்தமர்ந்தான். இப்போது அவள் அவனது மடியில் அமர்ந்திருந்தாள்.

அவனது கழுத்தில் கரங்களைக் கோர்த்திருந்தவள் அவனை விட்டு விலகவில்லை. அவன் சிரித்தபடி அவளைச் சோபாவில் அமர்த்திவிட்டு எழுந்தவன் அங்கிருந்த சிறு தள்ளு வண்டியை (ட்ராலி) தள்ளி கொண்டு வந்து அவள் முன் நிறுத்தினான். அதிலிருந்த கேக்கை கண்டு அவளது விழிகள் வியப்பில் விரிந்தது. இதய வடிவில், இரத்த சிவப்பில் கண்ணாடி போன்று பளபளத்த கேக் அவளது மனதினை மிகவும் கவர்ந்தது. அவளிடம் சிறு கத்தியை கொடுத்துக் கேக்கை வெட்ட செய்தவன்,

"நீண்ட நீண்ட காலம் நீ நீடு வாழ வேண்டும்.
வானம் தீண்டும் தூரம் நீ வளர்ந்து வாழ வேண்டும்...
பண்பு வேண்டும் பரிவு வேண்டும்...
எட்டுத்திக்கும் புகழ வேண்டும்,
எடுத்துக்காட்டு ஆக வேண்டும்...
உலகம் பார்க்க உனது பெயரை
நிலவு தாளில் எழுத வேண்டும்...
சர்க்கரை தமிழைத் தாலாட்டு நாள் சொல்லி
வாழ்த்துகிறோம்...

பிறந்த நாள் வாழ்த்துகள்...
இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்" என்று பிறந்தநாள் வாழ்த்து பாடலை அவன் அழகாகத் தமிழில் பாடினான்.

அந்தப் பாடலின் வார்த்தைகளின் அர்த்தத்தை உணர்ந்த அபிஷரிகா விழிகள் கலங்க அவனைப் பார்த்தாள். அவளது பார்வையை உணர்ந்த சிவகுமரன் அவளை 'என்ன?' என்பது போல் நோக்கினான். அவள் ஒன்றுமில்லை என்று தலையசைத்தவள் கேக் துண்டை எடுத்து அவனுக்கு ஊட்ட வந்தாள். அவன் விழிகள் மின்ன ஆர்வத்துடன் கேக்கை வாங்க வரும் போது அவள் பெரும் சிரிப்புடன் கேக்கை அவனது முகத்தில் பூசி விட்டாள்.

"ஹேய், என்ன பண்றேடி?" என்றவன் தானும் கேக்கை அள்ளி எடுத்து அவளது முகத்தில் பூசிவிட்டான். இருவரும் மாறி மாறி கேக்கை பூசி கொண்டதில் அந்த இடமே இனிமையான போர்க்களமாய் மாறியிருந்தது.

"உன்னை என்ன பண்ணுகிறேன் பார்..." என்றவன் அவளைத் தனது கைகளுக்குள் கொண்டு வந்து அவளது முகம் நோக்கி குனிந்தான். அவளோ எதிர்பார்ப்போடு விழிகளை மூடி நின்றாள். அவளது செய்கையில் அவனுள் ஆணாய் கர்வம் முளைத்த போதும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"திருட்டுப்பூனை..." என்றபடி அவளது நெற்றியில் விளையாட்டாய் முட்டினான்.

அதில் கண் விழித்தவள் அவனைப் பார்த்து மந்தகாச புன்னகையை உதிர்க்க... அவளது புன்னகையில் அவன் தன்வசம் இழந்தவனாய் அவள் இதழ்கள் நோக்கி குனிந்தவன் பின்பு தனது மனதினை மாற்றிக் கொண்டு அவளது முகத்தைத் திருப்பி அவளது கன்னத்தில் அழுத்தமாய்த் தனது அச்சாரத்தைப் பதித்தான். அவள் விழி விரித்து அவனைப் பார்க்க...

"இன்று இது போதும்..." என்றவனின் நாக்கு வெளியில் நீண்டு தனது உதடுகளில் ஒட்டியிருந்த அவளது

கன்னத்துக் கேக்கினை ருசி பார்த்தது. அவள் விழிகளில் மயக்கத்தைத் தேக்கி அவனைப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

சிவகுமரன் மனைவியைப் பார்த்து கண்சிமிட்டியபடி குளியலறைக்குள் புகுந்து கொண்டான். குளிக்கும் போது அவனது மனதில் மனைவியின் நினைவுகளே... அவளது ஏக்கம், தவிப்பு எல்லாம் அவன் கண்முன்னே வந்து போனது.

"உனக்கு நானிருக்கிறேன் அம்முலு... என் இறுதிமூச்சு இருக்கும் வரை நான் உன் நிழலாய் உன்னைப் பின்தொடர்வேன்." என்று அவன் முணுமுணுத்துக் கொண்டான்.

குளித்து விட்டு வெளியில் வந்தவன் மனைவியைக் குளிக்க அனுப்பிவிட்டுப் பால்கனியில் வந்து அமர்ந்தான். சிங்கப்பூர் நகரம் மின்விளக்கு ஒளியில் ஜெகஜோதியாய் ஜொலித்தது. அதைப் பார்த்தபடி அவன் அமர்ந்திருந்தான். சிறிது நேரத்தில் மனைவியின் வருகையை உணர்ந்து அவன் திரும்பி பார்த்தான். பால்கனி கதவினை பிடித்தபடி தன்னைப் பார்த்திருந்த மனைவியைக் கண்டு அவன் தனது இரு கைகளையும் விரித்தபடி அருகில் அழைக்க... அவள் ஓடி வந்து அவனது கைகளில் சரண் புகுந்தாள். அவளைத் தனது மடியில் தாங்கி கொண்டு இறுக்கி அணைத்து கொண்டவன் அவளது காதோரம் சரிந்து,

"உனக்கு என்னவெல்லாம் பிடிக்கும் அம்முலு?" என்று கேட்க... அவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிகள் விழிநீரில் பளபளத்தது. அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு விருப்பம் மாறும்... இது தான் பிடித்தம்ன்னு உறுதியா எதையும் சொல்ல முடியாது." என்று கூறியவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"அது உன் பிரெண்ட் அந்த அரைவேக்காடை பார்த்தாலே தெரியுது."

"அக்கியை சொன்னால் எனக்குக் கோபம் வரும்." என்று அவள் போலி கோபம் கொள்ள...

"அப்போ உன்னைப் பத்தி சொல்லவா?" அவன் அவளோடு ரகசியம் பேசினான்.

"ம், சொல்லு... சொல்லு..."

"நீ ஒரு புரியாத புதிர்..." என்றவனை இமைக்க மறந்து பார்த்தவள் ஒன்றும் பேசாது அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்.

"ஏன்டி புருசனை பத்தி கொஞ்சமாவது தெரிந்து கொள்வோம்ன்னு நினைப்பிருக்கா?" அவனது கேள்வியில் அவனது நெஞ்சில் இன்னமும் ஆழமாய் முகம் புதைத்தவள்,

"நான் ரெடி... நீ ரெடியா சிவூ...?" என்று அவள் கிறக்க குரலில் கேட்க... அவளது குரலில் அவன் தான் விதிர்த்து போய்விட்டான்.

"ம்ஹூம், ரெடியில்லை." என்று அவன் உறுதியாய் மறுத்தான்.

"ஏன்...?" அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"இப்போ அதுக்கான வயது உனக்கும் இல்லை, எனக்கும் இல்லை..." என்றவனைக் கண்டு,

"அப்படியா? இதுக்கும் மட்டும் வயது வந்துவிட்டதா?" இருவருக்கும் இடையில் இருக்கும் நெருக்கத்தைச் சுட்டிக்காட்டி அவள் கேட்க...

"கணவன், மனைவியா இருந்துட்டு இப்படிக் கூட இருக்கலைன்னா தான் தப்பு..." என்று அவன் கண்சிமிட்ட...

"போ சிவூ... எனக்குத் தூக்கம் வருது... நான் தூங்க போறேன்..." என்றவள் எழுந்து உள்ளே சென்றுவிட... அவனும் சிரித்தபடி அவளைப் பின்தொடர்ந்தான். அவளைக் கட்டிலில் படுக்கச் செய்தவன் கீழே தனியே இருந்த படுக்கையில் அவன் படுத்துக் கொண்டான்.

"எல்லாம் முன்னேற்பாடா தான் செய்திருக்க..."

"எதையும் பிளான் பண்ணி பண்ணணும் அம்முலு..." அவனது பாவனையில் அவளுக்குச் சிரிப்பு வந்தது. அதே சிரிப்புடன் அவள் நிம்மதியாய் உறக்கம் கொள்ள... அவன் தான் அவளைப் பார்த்தபடி உறக்கம் இல்லாது தவித்து இருந்தான். நாளை என்ன மாதிரியான விளைவுகள் ஏற்படும்? என்று அவன் தனக்குள் குழம்பியபடி படுத்திருந்தான்.

மறுநாள் காலையில் அபிஷரிகா எழும் முன் சிவகுமரன் எழுந்து குளித்துத் தயாராக இருந்தான். அவள் எழுந்ததும் அவளை எதுவும் பேச விடாது குளியலறைக்குள் தள்ளிவிட்டான். அவள் குளித்து முடித்து வந்ததும் உணவு உண்ண அழைத்துச் சென்றவன் மீண்டும் அறைக்குள் வந்து முடங்கிக் கொண்டான்.

"சிவூ, சிங்கப்பூர் வந்துட்டு வெளியில் போகாமல் ரூமில் அடைந்து கிடந்தால் எப்படி? வெளியில் போகலாம், வா..." என்று அவள் அவனை அழைக்க... அவனோ மிக முக்கிய வேலையாகத் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"சைனீஷ் பாசையில் உனக்கு என்ன புரிகிறது?" அவள் தொலைக்காட்சியை மறைத்தபடி அவன் முன் வந்து நிற்க... அவன் அவளை இழுத்து தன் மடியில் அமர்த்திக் கொண்டவன்,

"எல்லாமே சூப்பர் பிகர்டி... ரசனையோடு பாரு..." என்று கேலி சிரிப்புடன் கூற...

"உன்னை..." என்றவள் அவனது கழுத்தில் தனது இரு கைகளை வைத்து நெறிக்க முயன்ற போது அழைப்பு மணி ஒலித்தது.

"யார் சிவூ...?"

"யார்ன்னு நீ போய்ப் பாரு... என்னைத் தொந்தரவு செய்யாதே." என்றவன் தொலைக்காட்சியில் தனது

பார்வையைப் பதித்தான்.

"என்னையவே வேலை வாங்கிற..." என்று அவள் தரையில் காலை உதைத்தபடி சிணுங்கி கொண்டே கதவை திறக்க செல்ல... அவன் நமட்டு சிரிப்புடன் அவளைப் பார்த்திருந்தான்.

அபிஷரிகா அறை கதவை திறந்ததும் அங்கு நின்றிருந்தவரை கண்டு அதிர்ச்சியில் பேச மறந்தவளாய் விழி விரிய சிலையாய் நின்றுவிட்டாள்.

"அபிம்மா..." என்ற குரலில் தன்னுணர்வு பெற்றவள் அடுத்த நொடி,

"நானி..." என்று உரக்க கூவியபடி வந்தவரை அணைத்து கொண்டாள்.

ஆம், அவர் அவளைச் சிறு குழந்தையில் இருந்து அவளது ஐந்து வயது வரை வளர்த்த பணிப்பெண். பெயர் ராஜம்... அவளுக்கு அன்னை போன்றவர். கைக்குழந்தையான அபிஷரிகாவை வளர்க்க சிரமப்பட்ட தனுஜாவிற்காகச் சீனிவாசன் ஏற்பாடு செய்து கொடுத்த பெண்மணி தான் ராஜம்.

"நல்லா இருக்கியாடா அபிம்மா?" பெரியவளின் குரல் தழுதழுத்தது.

"ஏன் என்னை விட்டு போன நானி...? நீயில்லாமல் நான் எப்படிப் பயந்து போனேன் தெரியுமா? நீ வருவேன்னு ஒவ்வொரு நாளும் எதிர்பார்ப்போடு காத்திருப்பேன். ஆனா நீ வரவே இல்லை." என்று அவள் அழுகையோடு செல்லமாய்க் கோபித்துக் கொள்ள... அவளைச் சமாதானம் செய்ய வார்த்தைகள் இல்லாது பெரியவள் தவித்தார்.

"அதான் இப்போ வந்துட்டாங்களே..." என்றபடி அங்கே வந்த சிவகுமரன்,

"இப்படியே வாசலில் வைத்து பேசி அவங்களைத் திருப்பி அனுப்பி விடப் போகிறாயா?" என்று மனைவியைக்

கடிந்தான்.

"அப்படி எல்லாம் இல்லை... நானி உள்ளே வா..." என்றவள் பெரியவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

அதன் பிறகு அபிஷரிகா சிவகுமரன் என்கிற மனிதன் அங்கே இல்லாதது போல் ராஜமுடன் தனி உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள். இப்போது அவள் ஐந்து வயது சிறுமியாக மாறியிருந்தாள். அவளைப் பார்த்த சிவகுமரனின் விழிகள் கலங்கியது. தனது கலக்கத்தை மறைக்க எண்ணி அவன் பால்கனியில் வந்து நின்று கொண்டான். மனைவியைப் பற்றி அவன் இதுவரை கேள்விப்பட்ட விசயங்கள் அனைத்தும் அவனுள் எழுந்தது. அவன் அறிந்த வரை அவள் ஒரு குமரி குழந்தை... அன்பிற்கு ஏங்கும் மாடி வீட்டு ஏழை... அவளுக்காக அன்பை வாரி வழங்க அவன் சித்தமாக இருந்தான்.

"சிவூ..." மனைவியின் அழைப்பில் அவன் திரும்பி பார்த்தான்.

"நானி கிளம்பணும்ன்னு சொல்றாங்க... அவங்க நம்ம கூடவே இருக்கட்டுமே..." இறைஞ்சுதலாய் கெஞ்சிய மனைவியை இதயம் கசிய பார்த்தவன் அவள் அருகில் வந்து அவளை அணைத்துக் கொண்டு,

"அவங்க இங்கே ஒரு வீட்டுக்கு பிறந்த குழந்தையை வளர்க்க வேலைக்கு வந்திருக்காங்க. அவங்க வேலையைப் பாதியில் விட்டுட்டு நம்ம கூட வர சொல்ல முடியுமா? அது தப்பு இல்லையா?"

"ம், ம்..." அரைகுறை மனநிலையுடன் சம்மதித்தவளை கண்டு,

"உனக்காகத் தான் நானிருக்கேனே..." என்று அவன் ஆறுதல்படுத்த... அவள் புன்னகையுடன் ராஜத்துக்கு விடை கொடுத்தாள்.

"நீ இங்கேயே இரு... நான் போய் நானியை விட்டுட்டு வர்றேன்." என்றவன் ராஜத்துடன் விடுதியின்

வரவேற்பறைக்கு வந்தான்.

"ரொம்பச் சந்தோசம் தம்பி... அபிம்மாவை திரும்பப் பார்க்க முடியுமான்னு ரொம்பத் தவிச்சுப் போயிருந்தேன். என் ஆசையை நிறைவேத்திட்டீங்க. ரொம்ப நன்றி தம்பி..." என்று ராஜம் நன்றி பொங்க கை கூப்பினார்.

"நன்றி எல்லாம் வேண்டாம்மா..." என்றவன் அவரது கைகளைக் கீழிறக்கினான்.

"நீங்க ஏன் வேலையில் இருந்து நின்னீங்க?" அவர் வேலையை விட்டு நின்றது அவனுக்குப் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தி இருந்தது.

"ஒருநாள் பார்ட்டியில் இருந்து வரும் போது அபிம்மா கிட்டயிருந்து விஸ்கி வாடை வந்தது. அந்தப் பார்ட்டிக்கு மேடமும், அபிம்மாவும் மட்டும் தான் போயிருந்தாங்க. சார் அவங்க கூடப் போகலை. ஐஞ்சு வயசு பொண்ணு குடிக்குமான்னு எனக்குப் பெருத்த சந்தேகம். அபிம்மாவை தனியே அழைச்சிட்டு போய் விசாரிச்சேன். மேடம் தான் விஸ்கியை ஜூஸ்ன்னு சொல்லி அபிம்மா கிட்ட குடிக்கக் கொடுத்திருக்காங்க. அபிம்மாவுக்கு அது கசப்பா இருந்தது பிடிக்காததால் அதைக் குடிக்காம சட்டையில் ஊத்தி இருக்காள்... ஏன்னா மிச்சம் வைச்சா மேடம் திட்டுவாங்களே. அபிம்மா சட்டையில் ஊத்தியதுக்கும் திட்டியிருக்காங்க. இதை எல்லாம் அழுதுகிட்டே வந்து என் கிட்ட சொன்னாள் அபிம்மா. இதை நான் சார் கிட்ட சொல்லும் முன்னேயே எனக்கு விசயம் தெரிந்திருச்சுன்னு புரிஞ்சிக்கிட்டு அவங்க என்னை நகையைத் திருடியதா சொல்லி வேலையை விட்டு நிறுத்திட்டாங்க... நான் நிரபராதின்னு என்னால் நிரூபிக்க முடியலை. ஏன்னா அவங்களோட நெக்லஸ் என்னோட பெட்டியில் இருந்தது. என்னைக் கையும் களவுமா பிடிச்சது போல் சார் கிட்ட சொல்லிட்டாங்க. அவரும் அதை நம்பி என்னை வேலையை விட்டு துரத்திட்டார். அதுக்குப் பிறகு நான் நியாயம் கேட்டு கூட அங்கே போகலை. அபிம்மாவை நினைச்சு மனசு ஓரமா ஒரு வலி இருந்துக்கிட்டே இருக்கும். ஆனா

என்னுடைய பொருளாதாரத் தேடலுக்கான ஓட்டத்தில் அது கூடப் பின்னுக்குப் போயிருச்சு." என்ற ராஜத்தின் விழிகளில் கண்ணீர் நிறைந்திருந்தது.

சிவகுமரன் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்திருந்தான். அவன் அறியாத பல ரகசியங்கள் மனைவியின் வாழ்வில் இருக்கிறது என்பது அவனுக்கு நன்கு புலப்பட்டது. அதேசமயம் தனுஜாவை நினைத்து மனம் அருவருத்துப் போனது. இப்படியும் ஒரு பெண் இருப்பாளா? என்று... அந்த ராட்சசியிடம் அபிஷரிகா என்ன மாதிரியான அவஸ்தை எல்லாம் அடைந்தாளோ? என்று அவனுக்குப் பெருத்த கவலையாக இருந்தது. ஆனால் அதற்குத் தடையாக அன்னை மீதான அபிஷரிகாவின் பாசம் தடுத்தது. மொத்ததில் அவன் குழம்பி நின்றது தான் மிச்சம்.

"இனி அபி பத்தி கவலைப்பாடதீங்கம்மா. நான் அவளை நன்றாகப் பார்த்துக்குவேன்." என்று அவன் அவரிடம் உறுதி கூறி அவரை வழியனுப்பி வைத்தான்.

மீண்டும் அறைக்கு வந்தவன் மனைவி மேலே சிந்திக்காதபடி அவளை அழைத்துக் கொண்டு ஊரை சுற்றி பார்க்க சென்றுவிட்டான். அடுத்து வந்த ஏழு நாட்களும் இப்படியே ஊரை சுற்றுவதில் கழிந்தது. அபிஷரிகா கருப்பு கண்ணாடியும், பெரிய தொப்பியும் அணிந்து இருந்ததால் அவளை யாரும் எளிதில் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

"பார்த்தியா... மேக்கப் இல்லாமல் உன்னை ஒருத்தனுக்கும் அடையாளம் தெரியலை..." என்று அதற்கும் சிவகுமரன் அவளைக் கேலி செய்தான். அதைக் கேட்டுக் கோபத்தில் புசுபுசுவென்று மூச்சு விட்டபடி தன்னை முறைக்கும் மனைவியைச் சீண்டி பார்ப்பது அவனுக்கு விருப்பமான ஒன்றாக இருந்தது.

இறுதியாக விழாவிற்கு மூன்று நாட்கள் இருந்த போது அபிஷரிகா மற்ற நடிகர், நடிகைகளுடன் தங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஏனெனில் மேடையில் ஒத்திகை பார்க்க வேண்டி இருந்ததால்...

"சிவூ, பிராக்ட்டீஸ் முடிஞ்சு நான் இங்கேயே, உன் கூடவே இருக்கேனே..." அவள் மனமே இல்லாது இழுக்க...

"அப்போ இப்பவே நமக்குக் கல்யாணமான விசயத்தை ஊரை கூட்டி சொல்லிருவோமா?" அவளைத் தனது கை வளைவில் வைத்துக் கொண்டு அவன் கேட்க...

"போ சிவூ... உனக்கு வேறு வேலை இல்லை..." என்றவள் கிளம்பி சென்றுவிட்டாள். அவள் செல்வதை மனதில் எழுந்த வலியுடன் அவன் பார்த்திருந்தான்.

"எப்போது உனக்கும் எனக்குமான பந்தத்தை ஊரறிய சொல்ல போகிறாய் அம்முலு?" அவனது கேள்விக்கு அவளிடத்தில் பதிலில்லை. அவனிடத்திலும் அதற்கான பதிலில்லை.

***********************

நட்சத்திர விழா பெரிய அரங்கில் இனிதாக அரங்கேறியது. மக்கள் கூட்டம் கூட்டமாகத் தங்களது அபிமான நட்சத்திரங்களைக் காண அலைமோதினர். ஒவ்வொரு நிகழ்ச்சியாக நடந்து முடிந்து இறுதியில் அபிஷரிகாவின் நடனம் முடிந்ததும் சிறு இடைவெளிக்கு பிறகு சிவகுமரன் மேடையேறினான். அவளும் தனது ஒப்பனைகளைக் கலைத்துவிட்டு வேறு உடைக்கு மாறி எல்லோருடனும் சேர்ந்து அமர்ந்திருந்தாள். கணவன் மேடை ஏறுவதைக் கண்டு அவள் ஆச்சரியத்துடன் பார்த்திருந்தாள். அவளது முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாய்த் தெரிந்தது.

"ஹாய் சிங்கப்பூர்..." என்று அவன் மேடையில் மைக்கை பிடித்தபடி பேச... அங்கே ஆரவாரமான கைத்தட்டல் அரங்கேறியது.

"நீங்க இவ்வளவு ஆர்ப்பாட்டமாய் வரவேற்கும் அளவுக்கு நான் பெரிய செலிப்ரேட்டி எல்லாம் இல்லைங்க..." கன்னக்குழி விழ சிரித்தபடி மேலே பேசியவனைக் கண்டு அபிஷரிகா இமைக்க மறந்து பார்த்திருந்தாள்.

அவன் எதனால் சிங்கப்பூர் வந்திருக்கிறான்? என்பதை அறிந்து கொண்டவளுக்கு மகிழ்ச்சி தான் தோன்றியது. அதில் சிறிதும் பொறாமை, கோபம் இல்லை... ஆம், அவர்களது நிறுவனம் தான் இந்த நட்சத்திர விழாவிற்கு 'ஸ்பான்சர்ஷிப்' பண்ணி இருக்கிறது. அவன் அதை அவளிடம் சொல்லாது மறைத்திருக்கிறான். அப்போது சிவகுமரன் அபிஷரிகா பக்கம் திரும்பி பார்த்தவன் 'சர்ப்ரைஸ்' என்று வாயசைத்தான். அவன் வாயசைத்தது அவளுக்கு நன்கு புரிந்தது. அவளது கன்னங்கள் இரண்டும் வெட்கத்தில் சிவக்க, தேன் சிந்தும் இதழ்கள் மோகன புன்னகை பூக்க, அவள் மகிழ்வுடன் அவனைப் பார்த்திருந்தாள்.

"இப்போ நான் உங்க கிட்ட ஒரு சந்தோசமான விசயத்தைச் சொல்ல போகிறேன். அது என்னன்னா...???" என்றவனின் பார்வை மீண்டும் மனைவியின் மீது பதிந்தது. அவள் அவனை ஆர்வமாய் நோக்கினாள்.

"நம் அபிமான நடிகை அபிஷரிகா மீண்டும் படத்தில் நடிக்கவிருக்காங்க..." என்க... அவள் திகைப்பும், சந்தோசமும் விழிகள் விரிய அவனைப் பார்த்திருந்தாள்.

"அவங்களோட இந்தப் படத்தைத் தயாரிக்கப் போறது எங்க கம்பெனி தான்... ஆம், நாங்க முதன்முறையாகப் புரொடக்சன்ஸ் ஃபீல்டில் கால் பதிக்க இருக்கிறோம் என்பதை இங்குச் சந்தோசமாகக் கூறி கொள்கிறேன்."

அவன் சொல்லி முடித்ததும் தான் தாமதம் அபிஷரிகா வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் சந்தோசத்துடன் மேடை ஏறியவள் ஓடி வந்து அவனை அணைத்து கொண்டாள். அத்தனை பெரிய அரங்கில் அவ்வளவு பேர் கூடியிருப்பதைக் கூட அவள் பொருட்படுத்தவில்லை. தனது எண்ணத்திற்கு வண்ணம் சேர்த்த கணவனது வார்த்தைகளே அவளது மனதில் நிறைந்திருந்தது. தனது பிறந்தநாளின் போது அவன் பாடிய வாழ்த்து பாடலின் வரிகள் அவளது மனதில் ஓடியது.

"எட்டுத்திக்கும் புகழ வேண்டும்,

எடுத்துக்காட்டு ஆக வேண்டும்...
உலகம் பார்க்க உனது பெயரை
நிலவு தாளில் எழுத வேண்டும்..." அதைத் தனது செயல் மூலம் மெய்ப்பித்த கணவனிடம் பித்தாகி போனது அவளது பிஞ்சு மனம்...

"சிவூ..." என்று விழிகளில் விழிநீர் மின்ன அவனைப் பார்த்தவள் அடுத்த நொடி அவனது உதடுகளில் தனது இதழ்களை அழுத்தமாய்ப் பதித்து இருந்தாள். மனைவியின் செயலில் முதலில் திகைத்த சிவகுமரன் பின்பு மகிழ்ச்சியோடு அவளை அணைத்து கொண்டவன் மெல்ல அவளிடம் இருந்து தனது உதடுகளை விலக்கியவன்,

"இது நம்ம ரூம் இல்லை அம்முலு... பப்ளிக் பிளேஸ்டி." என்று அவளது காதில் மெல்ல கிசுகிசுத்தான்.

அவர்களது இணக்கமான நிலையை அந்தப் பிரபலமான தமிழ் தொலைக்காட்சி உலகம் முழுவதும் நேரடி ஒளிபரப்பு செய்தது. சிவகுமரன், அபிஷரிகா நெருக்கமான நிலை அங்கிருந்த இளம் நடிகைகள் மனதில் பொறாமை கனலை விசிறி விட... தீபனோ மனதில் எரிமலையாய் கனன்று கொண்டிருந்தான். கைப்பொருளை இழந்த ஆத்திரம் அவனுள் பெரும் கோபத்தினை உண்டு பண்ணி இருந்தது.

"ஏன்டா என் கிட்ட முன்னமே சொல்லலை...?" என்று அபிஷரிகா சிவகுமரனின் நெஞ்சில் செல்லமாய் அடிக்க... அவன் சிரித்தபடி அவளது கைகளைப் பிடித்தவன்,

"சர்ப்ரைஸ்..." என்று கூறிவிட்டு வாய்விட்டுச் சிரித்தான். அப்போது நிகழ்ச்சியைத் தொகுத்து அளிப்பவர் இருவரையும் பார்த்து,

"எப்போது கல்யாணம்?" என்று குறும்பு குரலில் கேட்க...

"கல்யாணமா? நாங்களா?" இருவருமே ஒருசேர தோளை குலுக்கியபடி மறுப்பாய் தலையசைத்தனர். அதிலும்

ஒற்றுமையாய்ச் செயல்பட்ட தங்களை ஒருவருக்கு ஒருவர் பார்த்து கொண்டவர்களுக்குச் சிரிப்பு பீறிட்டது.

****************************

அலுவலகத்தில் சிவகுமரன் தனது அலுவலக ஊழியர்களுடன் முக்கியமான கூட்டத்தில் பேசி கொண்டிருந்தான். அப்போது அந்த அறையின் கதவு பட்டென்று திறந்தது. அவன் யாரென்று கோபத்துடன் திரும்பி பார்த்தான். அங்கே அபிஷரிகா நின்று கொண்டிருந்தாள். நேரே அவனிடம் வந்தவள் அவனது கையைப் பிடித்துக் கொண்டு,

"என்னோடு வா..." என்றழைக்க... அவன் சங்கடமாய் ஊழியர்களைப் பார்த்தவன்,

"நாளைக்கு மீட்டிங்கை வச்சுக்கலாம்..." என்றுரைத்து விட்டு அவளை அழைத்துக் கொண்டு வெளியில் வந்தவன் நேரே தனது அறைக்கு அழைத்துச் சென்று,

"இப்படியா கையைப் பிடிச்சிழுப்ப...? அவங்க எல்லாம் என்ன நினைச்சிருப்பாங்க?" அவன் சற்று கோபத்தோடு கேட்க...

"அதான் சிங்கப்பூர் ஸ்டார் நைட்டில் எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டதே. இன்னும் மறைக்க என்ன இருக்கிறது?" அவள் பதிலுக்குக் கோபத்தோடு கத்தினாள்... அதைக் கேட்டவனிடத்தில் இருந்து கோபம் விடைபெற்று சென்று அந்த இடத்தை உல்லாசம் ஆக்கிரமித்துக் கொண்டது.

மனைவி கூறியது போல் சிங்கப்பூர் நிகழ்விற்குப் பின் இருவருக்கும் இடையில் உறுதியாக உறவு இருப்பது போல் எல்லாப் பத்திரிக்கைகளும், தொலைக்காட்சிகளும் சித்தரித்துக் கூற... இருவருமே அதை ஆமோதிக்கவும் இல்லை, மறுக்கவும் இல்லை. அந்த நிகழ்வு நடந்து ஒரு மாத காலமான பின்பும் கூட இன்றும் இவர்கள் தான் திரைத்துறையில் 'ஹாட் டாப்பிக்'ஆக இருந்தனர்.

"சோ, உனக்குப் பயமில்லை. அப்படித்தானே..." என்றபடி மனைவி அருகில் வந்தவன் அவளது இடையைப் பிடித்திழுத்து அவளது முகம் நோக்கி குனிந்தான். அவளோ அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள். எப்போதும் தனக்கு அழைப்பு விடுக்கும் மனைவி இன்று கோபமாய்ப் பார்ப்பதை உணர்ந்து அவன் கேள்வியாய் புருவங்களை உயர்த்தினான்.

"எத்தனை நாளா திட்டம் போட்டிருந்த...?" அவள் அடக்கப்பட்ட கோபத்துடன் சீறினாள்.

"என்ன உளர்ற?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"சினி பீல்டில் என் இமேஜை டேமேஜ் பண்ணணும்ன்னு எத்தனை நாளாய் காத்திருந்த...?" அவளது சீற்றத்தில் அவன் வாயடைத்து போய் நின்றிருந்தான். அப்போதும் அவளது கேள்விக்கான அர்த்தம் அவனுக்குப் புரியவில்லை.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 13

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

தன் மகனை நற்பண்பு நிறைந்தவன் எனப் பிறர் சொல்லக் கேள்வியுற்ற தாய், தான் அவனைப் பெற்ற காலத்து உற்ற மகிழ்ச்சியை விடப் பெரிதும் மகிழ்வாளாம்... அது போன்றதொரு மகிழ்ச்சியில் சிவகுமரன் திளைத்திருந்தான். ஆம், அவனது ஐந்து வயது மகன் ப்ரஷன்ஜித் சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான தேசிய விருதை நாட்டின் முதல் குடிமகன், உயர்திரு குடியரசு தலைவர் கையால் வாங்கிக் கொண்டிருந்தான். பெருமை வாய்ந்த இந்தக் கணத்தைச் சிவகுமரனால் என்றுமே மறக்க முடியாது. அதே நேரம் மனைவியின் நினைவுகள் எழுவதையும் அவனால் தடுக்க முடியவில்லை. அவள் மீது அத்தனை வெறுப்பு இருந்த போதும் இன்னமும் அதே அளவு காதலும் அவள் மீது இருந்தது. ஆனாலும் வெறுப்பு அந்தக் காதலை மூடி மறைத்திருந்தது.

குடியரசு தலைவர் ப்ரஷன்ஜித்திற்கு விருது வழங்கி அவனது கன்னத்தில் முத்தமிட்ட போது சிவகுமரனின் விழிகள் கலங்கி போனது.

"குமரா, ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." பொன்னம்பலம் அவனது கையைப் பிடித்துக் கொண்டு நெகிழ்ந்து போனார். அவரது விழிகளும் கலங்கி போயிருந்தது.

"ஐயா, என்னதிது? இது சந்தோப்பட வேண்டிய தருணம்... கண் கலங்க கூடாது." அவரது விழிகளைத் துடைத்து விட்டவன் தனது விழிநீரை அவருக்குத் தெரியாது மறைத்துக் கொண்டான்.

"இது ஆனந்த கண்ணீர் குமரா..." என்றவரை கண்டு அவனது மனம் நெகிழ்ந்து போனது.

விருது வாங்கிக் கொண்டு வந்த மகனை சிவகுமரன் வாரியணைத்து தூக்கி கொண்டான். சின்னவனும்

தந்தையை இறுக அணைத்துக் கொண்டு அவனது கன்னத்தில் முத்தமிட்டான். மகனை இறுக அணைத்துக் கொண்ட சிவகுமரன் மனதில் மனைவியின் ஞாபகமும், அவள் அவனுக்கு முத்தமிட்ட தருணங்களும் இனிமையாய்... 'பழையதை நினையாதே மனமே!' என்று அவன் தனது மனதிற்குக் கடிவாளமிட்டவன் மகனது கன்னத்தில் உதடுகளை அழுந்த பதித்து,

"வாழ்த்துகள் கண்ணா..." என்றவனது விழியோரம் இரு துளி விழிநீர் எட்டிப்பார்த்தது.

"தேங்க்ஸ்ப்பா..." என்ற சின்னவன் தந்தையின் விழிகளில் தேங்கியிருந்த கண்ணீரை கண்டு விட்டான்.

"ப்பா, அழக்கூடாது..." தந்தை தனக்குக் கூறும் ஆறுதல் வார்த்தைகளைக் கூறி கண்ணீரை துடைத்து விட்டவன் தந்தையை அணைத்துக் கொண்டு அவனது தோளில் முகம் புதைத்துக் கொண்டான்.

எல்லோருக்கும் ஆறுதல் அளிக்கும் சிவகுமரனுக்கு ஆறுதல் அளித்தான் அந்தத் தகப்பன்சாமி... மகனது வார்த்தையில் மனம் நெகிழ்ந்து போனவன் அவனை இறுக அணைத்துக் கொண்டான். இருவரையும் கண்ட பொன்னம்பலத்தின் மனம் மிகவும் வேதனையுற்றது. தன்னால் இந்தச் சின்ன வயதில் வாழ்க்கை இழந்து நிற்கும் சிவகுமரனின் வாழ்க்கையை மீண்டும் மலர செய்ய வேண்டும் என்கிற எண்ணமே அவருள் ஓங்கியிருந்தது. இந்த ஐந்து வயது பாலகன் என்ன பாவம் பண்ணினான் தாயில்லாமல் வளர்வதற்கு? அவர் தான் எடுத்த முடிவில் உறுதியாக இருந்தார்.

மூவரும் அன்றே விமானத்தில் சென்னைக்குக் கிளம்பி வந்தனர். வீட்டிற்கு வந்திறங்கிய பேரனுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்றார் வேணி. இந்தச் சின்ன வயதில் சுட்டி குழந்தையாக இருக்கும் பேரனை நினைத்து அவருக்கு அத்தனை பெருமை.

"வா ராஜா..." என்று அவர் மகிழ்வோடு பேரனை தூக்கி கொள்ள... காவேரியும் கண்கள் பனிக்கச் சின்னவனைப் பார்த்திருந்தார். பேத்தியை போன்று இருக்கும் கொள்ளு பேரனை கண்டு அவருக்குச் சந்தோசம் இருந்த அதே அளவு துக்கமும் இருந்தது.

'பாவி, இப்படி ஒரு அன்பான குடும்பத்தை இழந்து எங்கே இருக்கேடி? எல்லாத்தையும் இழந்து அப்படி என்ன சந்தோசத்தை அடைஞ்சிட்ட?' அவரது மனம் கோபமாகப் பேத்தி அபிஷரிகாவை நினைத்து வருந்தியது. அவரது மனதிற்குள் அத்தனை ஆதங்கம் இருந்த போதும் சிவகுமரன் முன் தனது பேத்தியை பற்றி ஒரு வார்த்தை பேச மாட்டார். அது அவனுக்கு எத்தகைய துன்பத்தைத் தரும் என்பது அவருக்குத் தெரியும்.

தாத்தா, பாட்டி, அத்தைகள் யமுனா, சரஸ்வதி, அம்ரிதா சூழ உணவு மேசையில் அமர்ந்து கொண்டு சிரிப்பும், கும்மாளமுமாய் உணவு அருந்தி கொண்டிருந்த மகனை பூரிப்புடன் பார்த்திருந்தான் சிவகுமரன். ப்ரஷன்ஜித்தின் தோற்றம், பழக்கவழக்கங்கள் அனைத்தும் அவனது அன்னையைக் கொண்டிருந்தது. அதனால் தான் என்னவோ சிவகுமரன் மகனது வளர்ப்பில் மிகவும் கவனமாக இருந்தான். அவனுக்கு எத்தனை வேலையிருந்த போதும் மகனுக்கு என்று அவன் தனி நேரம் ஒதுக்கினான். அவன் மகனை நல்ல பண்புகளுடன், நல்ல பழக்கவழக்கங்களுடன் வளர்த்து வருகிறான். ப்ரஷன்ஜித்தும் தந்தை சொல் கேட்டு மிகவும் நல்ல பையனாக வளருகிறான். அவனுக்குத் தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

"ஐயா, தூங்க போறீங்களா?" என்று சிவகுமரன் கேட்டதும்...

"இல்லை குமரா... என்ன சொல்?" பொன்னம்பலம் கேட்க...

"அப்போ கணக்கு பார்த்து முடிச்சிடலாமா?" அன்றிருந்த சிவகுமரன் இப்போதும் இருப்பதைக் கண்டு மனம் நெகிழ அவனை வாத்சல்யத்துடன் பார்த்தவர்,

"நீ பார்த்தால் போதும் குமரா..." என்று அவர் கூற...

"இல்லை ஐயா... நீங்களும் பார்த்தால் தான் எனக்குத் திருப்தி..." என்றவன் அவரை அழைத்துக் கொண்டு அலுவலக அறைக்கு வந்தான்.

அவரைச் சாய்வாக நாற்காலியில் அமர வைத்தவன் அவர் முன்னிருந்த சிறிய மேசையில் மடிகணினியை வைத்துவிட்டு தான் கீழே தரையில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டு அவருக்குக் கணக்குகளைப் பற்றி விவரிக்க ஆரம்பித்தான். இப்போது சிவகுமரன் சாதாரண ஆள் கிடையாது. சுமார் ஐநூறு பேர் வேலை செய்யும் கணினி நிறுவனம் வைத்திருக்கும் முதலாளி அவன். அவனது ஐந்தாண்டு கால அயராத உழைப்பின் பலன் தான் இந்த அசுர வளர்ச்சி. அவனுக்குத் தெரிந்தது எல்லாம் கணினி மட்டும் தானே. அதுவே அவனது உயர்விற்கு வழிவகுத்தது. அதற்குக் கடன் அளித்து உதவியது பொன்னம்பலம் தான்...

இப்போது அவன் அவரிடம் கணக்கு காட்டி கொண்டிருப்பது அவரது பரம்பரை தொழில்களின் கணக்கு வழக்குகள். ஆம், சிவகுமரனிடம் இருந்து சொத்துக்களை எழுதி வாங்கிக் கொண்ட அபிஷரிகா அதைச் சரியாகப் பராமரிக்காது விட்டு விட்டதில் மூன்றே மாதத்தில் அவளது நிறுவனங்கள் அனைத்தும் கடன் சுமையில் தள்ளாடியது. இதை ஆகாஷின் தந்தை மூலம் அறிந்து கொண்ட சிவகுமரன் உடனே இந்தச் செய்தியை பொன்னம்பலத்தின் காதிற்குக் கொண்டு சென்றான். அதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற பொன்னம்பலம் உடனே கிராமத்தில் இருந்த நிலங்கள், பங்கு சந்தையில் முதலீடு செய்த பங்குகள் மற்றும் வங்கியிலிருந்த சேமிப்புகள் என்று அனைத்தையும் ஒன்று திரட்டி கடனை அடைத்து பரம்பரை தொழில் மற்றும் சொத்துக்களை மீட்டெடுத்தார்.

"என்னிடம் பணம் இருந்திருந்தால் நானே எல்லாவற்றையும் சரி செய்து இருப்பேன்." நிலங்களை விற்கும் போது சிவகுமரனுக்கு மனசே சரியில்லை. ஏனெனில் அப்போது தான் அவன் கணினி நிறுவனம்

ஆரம்பித்து இருந்தான். அதனால் அவனாலும் அவருக்கு உதவ முடியாது போனது.

இவை அனைத்தும் செயல்படுத்தும் போதும் அபிஷரிகா இவர்களை நேரில் சந்திக்கவில்லை. அவர்கள் கேட்ட பத்திரங்களில் கையெழுத்து போட்டு கொடுத்தாள் அவ்வளவே... அதைக் கண்டு சிவகுமரன் மனம் வெம்பி போனான். இந்தச் சொத்துக்களுக்காகத் தான் எத்தனை ஆர்ப்பாட்டம்...? இப்போது அனைத்தையும் இழந்து அவள் எதைச் சாதித்து இருக்கிறாள்? அது அவனுக்கே தெரியவில்லை.

அப்படியிருந்தும் யாரும் அவளை இந்த வீட்டை விட்டுப் போகச் சொல்லவில்லை. ஆனால் சொத்துக்க்கள் கைமாறிய அன்றிரவே அபிஷரிகா அங்கிருந்து காணாமல் போனாள். அவளது நெருங்கிய நண்பன் ஆகாஷிற்குக் கூட அவள் சென்ற இடம் தெரியவில்லை. கையில் ஒற்றைப் பைசா இல்லாது அவள் எங்கே சென்றாள்? என்று யாருக்கும் தெரியவில்லை. அப்போதிருந்த மனநிலையில் சிவகுமரனும் அவளே தேடி போகவில்லை. அதே மனநிலையில் தான் பொன்னம்பலமும் இருந்தார். பேத்தியின் செயலில் அவர் மனம் வெறுத்துப் போயிருந்தார். காவேரியால் எதுவும் செய்ய முடியாத நிலை.

இந்த ஐந்து வருடங்களில் அனைவரது அடிமனதில் அபிஷரிகா எங்கே சென்றிருப்பாள்? என்கிற கேள்வி இருந்த போதும்... யாருக்குமே அவளைத் தேட வேண்டும் என்கிற எண்ணம் எழவே இல்லை. அது அவள் மீதான வெறுப்பினால் விளைந்தது என்றால் மிகையில்லை.

"எல்லாம் சரியாக இருக்கிறதா ஐயா?" அவனது பணிவு கண்டு மனதிற்குள் நெகிழ்ந்தவர் அவனது தோளில் தட்டி கொடுத்து,

"எல்லாம் சரியா இருக்கு... நீ போய்த் தூங்கு..." என்க... அவன் மடிகணினியை அணைத்து விட்டு அவரை அழைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியில்

வந்தான். அவரை அவரது அறையில் விட்டு விட்டு தனது அன்னையைத் தேடி வந்தான். அங்கே படித்துக் கொண்டிருந்த யமுனாவின் மடி மீது தலை வைத்தபடி உறங்கியிருந்தான் சின்னக் கண்ணன்.

"அதுக்குள்ள தூங்கிட்டானா?" என்றபடி சிவகுமரன் மகனை தூக்கி கொண்டான்.

"அண்ணய்யா, ப்ரஷன் இங்கேயே தூங்கட்டுமே..." யமுனா கூறியதற்கு,

"எனக்குத் துணை ப்ரஷன் மட்டும் தான்..." என்றவன் அவளது பதிலை எதிர்பார்க்காது மகனை தூக்கி கொண்டு அங்கிருந்து சென்று விட்டான்.

"யமுனா, குமரனை பத்தி தான் தெரியுமே." வேணி மகளுக்கு ஆறுதல் கூறினார்.

"அண்ணய்யாவை பார்க்க பாவமா இருக்கும்மா." யமுனா மிகுந்த வருத்தத்தோடு கூற...

"ம்ஹூம், எனக்கும் என்ன செய்யன்னு தெரியலை." வேணிக்கு மகனது வாழ்வு சிறக்க என்ன செய்ய வேண்டும்? என்று தெரியவில்லை.

மகனை தூக்கி கொண்டு வந்த சிவகுமரன் அவனைப் படுக்கையில் படுக்க வைத்துவிட்டு தானும் மகனுக்கு அருகில் படுத்தான். ப்ரஷன்ஜித் எப்போதும் போல் தன்னிச்சையாய் தந்தையின் பக்கம் திரும்பி படுத்து அவனது நெஞ்சில் முகம் புதைத்து அணைத்துக் கொண்டான். அன்றொரு நாள் ப்ரஷன்ஜித் பிறந்த குழந்தையாய் இருந்த போது பாலுக்காகத் தனது நெஞ்சில் முகம் புதைத்து அழுத காட்சி அவன் கண்முன் வலம் வந்து அவனை வலி கொள்ளச் செய்தது. கையில் பசியில் அழும் பிறந்த குழந்தையோடு, வாழ்க்கையில் தோற்று போய் அவன் நின்ற கோலம் மீண்டும் மீண்டும் அவனது மனதில் தோன்றி அவனைத் தனக்குள் இறுக செய்தது. அதே நேரம் மனைவி மீது அவனுக்கு அத்தனை கோபம் வந்தது.

'கணவன், மகனை விட உனக்கு அப்படி என்னடி சொத்துக்கள் முக்கியமாய்ப் போயிற்று? நாங்களும் இல்லாது, சொத்துக்களும் இல்லாது இப்போ என்னடி பண்ணிக்கிட்டு இருக்க?' அவன் மனதிற்குள் கோபமாய்க் கத்தினான்.

**************************

அதே நேரம் நன்கு உறக்கத்தில் இருந்த அபிஷரிகா திடுமெனப் புரையேறியதில் எழுந்தமர்ந்து கொண்டு விடாது இருமினாள். பாவம், அவளுக்கு ஆறுதலாய் தலையைத் தட்டி தண்ணீர் தர கூட அங்கு யாருமில்லை. அவளே எழுந்து சென்று அறையின் ஓரமிருந்த பானையில் இருந்து தண்ணீரை எடுத்து பருகியவள் திரும்ப வந்து படுத்து கொண்டாள். மீண்டும் உறக்கம் வருவேனா என்று அடம்பிடித்தது. அந்தச் சிறிய அறையை அவளது விழிகள் வலம் வந்தது. அந்தச் சிறிய அறை தான் அவளுக்குச் சமையலறை, உணவறை, உடை மாற்றும் அறை, வரவேற்பறை, படுக்கையறை எல்லாமே. இதுவே மாதம் ஐநூறு ரூபாய் வாடகை...

அவளது மனதில் ஏதேதோ எண்ணங்கள் வலம் வந்தது. ஆனால் எதையும் ஆராயப் பிடிக்காதவளாய் அவள் விழிகளை மூடி கொண்டாள்.

"அம்முலு..." கணவன் அழைக்கும் குரலில் அவள் திடுக்கிட்டவளாய் விழிகளைத் திறந்தாள். அதற்கு மேல் படுக்கப் பிடிக்காது எழுந்தமர்ந்தவள் அங்கிருந்த சுவற்றில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

"நானாகவும் உன்னை விலக்க மாட்டேன். நீயாக விலகி போகவும் விட மாட்டேன்." மீண்டும் கணவனது குரல் காதில் ஒலித்தது. அப்படிச் சொன்ன கணவன் இப்போது அவளுடன் இல்லை.

"உன் காலை பிடித்துக் கெஞ்சி கேட்கிறேன் அம்முலு... எனக்கு... எனக்கு என் குழந்தை வேணும்." என்று தனது காலில் சாஷ்டாங்கமாய் விழுந்து கெஞ்சிய கணவனின்

கண்ணீர் முகம் இப்போதும் அவளது மனக்கண்ணில் எழுந்து அவளைப் பெரிதும் இம்சித்தது.

"அவன் உன் குழந்தை என்றால்...? அவனுக்கு நான் யார்?" மெல்ல முணுமுணுத்து கொண்டவளின் வார்த்தையில் கோபமில்லை. மாறாக வலியே மிகுந்திருந்தது. தான் புறக்கணிக்கப்பட்ட வலியே அதில் நிறைந்திருந்தது. தனிமை, புறக்கணிப்பு ஒன்றும் அவளுக்குப் புதிது இல்லையே... ஆனாலும் இன்று அது அவளுக்கு மிகுந்த வலி தருவதாய்...!!!

எத்தனை நேரம் யோசித்துக் கொண்டிருந்தாளோ! பொழுது புலர்ந்ததற்கு அறிகுறியாய் பறவைகளின் கீச்கீசென்ற சத்தம் கேட்டது. அதில் தன்னினைவை கலைந்தவள் தனது அன்றாடப் பணிகளைச் செய்வதற்காக எழுந்தாள். வீட்டில் உள்ள அனைத்து வேலைகளையும் முடித்துக் கொண்டு அவசர அவசரமாகக் குளித்து உடை மாற்றியவள் அங்கிருந்த சிறிய கண்ணாடியில் முகம் பார்த்து ஒப்பனை செய்யும் போது அவளுக்கே அவளை அடையாளம் தெரியவில்லை.

சிக்கென்ற இடையுடன் சின்னப் பெண் போன்றிருந்த அபிஷரிகா இவளில்லை. இப்போது அவளது சிற்றிடை பெருத்து, முகம் எல்லாம் ஊதி போய்க் காற்றடைத்த டயர் போலிருந்தாள். பிள்ளை பெற்ற உடம்பை கவனிக்காது விட்டதன் விளைவு இது... அதற்காக அவள் கவலைப்படவில்லை. இந்தத் தோற்றமும் நல்லதே என்று தான் அவள் எண்ணி கொண்டாள். புடவை கட்டி பழகாத அபிஷரிகா இப்போது எல்லாம் புடவை தான் கட்டி கொள்கிறாள். அன்று கணவன் புடவை கட்டி காட்டியதை இன்றும் அவள் கனக்கச்சிதமாக பற்றிக் கொண்டு அப்படியே புடவை கட்டி கொள்கிறாள்.

ஒப்பனை முடிந்து வீட்டை விட்டு வெளியில் வந்தவள் அறை கதவை மூடி அதில் பூட்டு போட்டு பூட்டியவள் தெருவில் இறங்கி நடந்தாள். பத்து நிமிட நடையில் அவள் தான் வேலை செய்யும் இடத்திற்கு வந்துவிட்டாள். அவள் வேலை

செய்வது, அந்த ஊரில் இருக்கும் கோவிலில் தான். கோவிலை கூட்டி பெருக்கி சுத்தம் செய்வது தான் அவளது வேலை... இது தான் என்று இல்லாமல் அர்ச்சகர் எந்த வேலை கொடுத்தாலும் அவள் முகம் சுணங்காது செய்வாள். அதனாலேயே அர்ச்சகர் சுவாமிநாதனுக்கு அவள் மீது மிகுந்த பாசம் உண்டு... உடலளவில் பெரிய பெண்ணாக அவள் இருந்த போதும் அவளது பால் வடியும், கள்ளமில்லா முகத்தைப் பார்க்கும் போது அவளது வயது மிகக் குறைவே என்று அவருக்குத் தோன்றும். ஆனால் அவர் அதைப் பற்றி அவளிடம் எதுவும் கேட்டது கிடையாது.

முதன்முதலில் அவள் இந்த ஊருக்கு வந்த போது அவர் தான் இரக்கப்பட்டுக் கோவிலில் தங்க இடம் கொடுத்து உணவும் கொடுத்தார். பிறகு அதுவே பழக்கப்பட்டுப் போக... அவர் அவளுக்கு இங்கேயே வேலை வாங்கிக் கொடுத்தார். அவள் அவருக்கு மகள் போல்...

"வந்துட்டியா குழந்தே... முதல்ல அபிசேகத்துக்கு நீரை சேந்தி கொடுத்துட்டு மத்த வேலையைப் பார்..." அவர் கூறியதை கேட்டு,

"சரிங்க சாமி..." என்றவள் அவர் கூறியதை செய்யத் துவங்கினாள்.

"பகவானே! இந்தக் குழந்தையோட துன்பத்தை நீயாவது காது கொடுத்து கேட்டு அதைப் போக்குவதற்கு உண்டான வழியைக் காட்டு..." அவர் எப்போதும் போல் இன்றும் கடவுளிடம் வேண்டி கொண்டார்.

அபிஷரிகா கிணற்றில் நீரை இறைக்கும் போது மீண்டும் கணவனது ஞாபகம்... 'ச்சே... இது என்ன விவஸ்தை கெட்ட எண்ணம்?' என்று தனது எண்ணத்திற்குக் கடிவாளம் போட்டவள் வேலையைப் பார்க்கலானாள்.

************************

"ஹாய் மை டியர் பாய் ப்ரஷன்... கங்கிராட்ஸ்..." ஒரு கையில் பூங்கொத்து, மறு கையில் சிறுவனுக்கான பரிசு

பொருட்கள் அடங்கிய பைகளோடு வந்த ஆகாஷ் அப்படியே ப்ரஷன்ஜித்தை அணைத்து தூக்கி கொண்டான். சின்னவன் விருது வாங்கி ஒரு வாரம் கழித்த பின்னரே அவனைக் காண வந்திருந்தான் ஆகாஷ்.

"தேங்க்ஸ் அங்கிள்..." என்று ப்ரஷன்ஜித் ஆகாஷின் கன்னத்தில் முத்தமிட்டான்.

"இந்தா எல்லாம் உனக்குத் தான்..." என்ற ஆகாஷ் கையிலிருந்த பரிசு பொருட்களைச் சின்னவளிடம் நீட்டினான்.

"நீங்க ஏன் ஃபங்கசனுக்கு வரலை அங்கிள்...?" என்று கேட்டபடி சின்னவன் சாக்லேட் பெட்டியை திறந்து கொண்டிருந்தான்.

"பிசினஸ் விசயமா யுஎஸ் போயிருந்தேன் ப்ரஷன்..." ஆகாஷ் பதில் அளித்துக் கொண்டிருக்கும் போதே அங்கு யமுனா வந்தாள்.

"ப்ரஷன், சாப்பிட்டுட்டுச் சாக்லேட் சாப்பிடு." என்று அவள் கண்டிப்புடன் கூற... அவளது குரல் கேட்டதும் ஆகாஷ் முகம் மலர அவளைத் திரும்பி பார்த்தான்.

யமுனா இப்போது கல்லூரியின் மூன்றாம் ஆண்டுப் படித்துக் கொண்டிருந்தாள். அந்த வயதிற்கே உரிய அழகு அவளிடம் கொட்டி கிடந்தது. ஆகாஷ் அவளைக் கண்ட கணம் முதல் இதோ இந்த நொடி வரை அவள் மீது எல்லையில்லா காதலை வைத்திருக்க... அவளோ அவனைக் கல்லையும், மண்ணையும் பார்ப்பது போல் பார்த்துவிட்டு சென்றுவிடுவாள்.

"யம்ஸ் எப்படியிருக்க...?" என்று ஆகாஷ் அவளிடம் வழிய...

"அண்ணய்யா..." என்று அவள் உள்பக்கம் திரும்பி அழைத்ததும் ஆகாஷ் சட்டென்று வாயை மூடி கொண்டான்.

"ப்ரஷன் ஸ்கூலுக்கு டைமாச்சு... போய்க் கிளம்பு..." என்றவள் ப்ரஷன்ஜித்தை உள்ளே அனுப்பி வைத்துவிட்டு

ஆகாஷ் வாங்கி வந்திருந்த பொருட்களை அடுக்கி வைத்து கொண்டிருந்தாள். அவள் சிறிதும் ஆகாஷை கண்டு கொள்ளவில்லை.

"யம்ஸ், என் மனசு உனக்குப் புரியலையா? இல்லை புரியாத மாதிரி நடிக்கிறியா?" அவளது செயலில் மனமுடைந்த ஆகாஷின் வார்த்தைகள் கோபத்துடனும், ஆதங்கத்துடனும் வெளிவந்தது.

யமுனா தீர்க்கத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "உங்களை நம்பி என் வாழ்க்கையை அடகு வைக்க என்னால் முடியாது." என்று தீர்மானமாய்க் கூற...

"ஏன்? எனக்கு என்ன குறைச்சல்? நான் அழகாயில்லையா? தொழில் பண்ணலையா? பணம் சம்பாதிக்கலையா? என் கிட்ட என்ன குறையைக் கண்ட?" அவனுக்குக் கோபம் வந்ததில் அவன் படபடத்தான்.

"நீங்க பணக்காரங்க... அது ஒண்ணு போதும்."

"என்ன உளர்ற?" அவன் அடக்கப்பட்ட கோபத்தில் சீறினான்.

"நான் ஒண்ணும் உளரலை. உங்க பிரெண்ட்டை நம்பி எங்க அண்ணய்யா வாழ்க்கையை அடகு வச்சது போதும். அது போல் என்னோட வாழ்க்கையும் மாற வேண்டாம்." என்றவளது வார்த்தைகளில் அத்தனை வேதனை...!!!

"அவளைப் பத்தி பேசாதே... நானும் அவளை வெறுத்து ஐந்து வருடங்களாகிறது." ஆகாஷ் வெறுப்புடன் கூறினான். பெற்ற மகனை விடச் சொத்துக்கள் பெரிது என்று நினைத்த தோழியை மன்னிக்க அவன் தயாராக இல்லை.

"அவங்களோட பிரெண்ட் தானே நீங்க... நீங்களும் அப்படித்தான் இருப்பீங்க... எனக்குப் பணக்கார கணவன் வேண்டாம். என்னை அன்பா பார்த்துக்கிற கணவன் கிடைத்தால் போதும்."

"ம்ப்ச், என்னைக் காதலிக்காமல், என்னைப் பத்தி தெரியாமல் நீயே இப்படிச் சொன்னால் எப்படி? ஒருமுறை என்னைக் காதலித்துத் தான் பாரேன் யம்ஸ்."

"காதலித்து...???" அவள் தனது இரு கைகளையும் கட்டி கொண்டு அவனிடம் அமர்த்தலாய் கேள்வி கேட்க...

"பிடிச்சிருந்தால் கல்யாணம் பண்ணிக்கலாம்." அவன் ஆர்வத்துடன் அவளைப் பார்த்தான்.

"பிடிக்கலைன்னா...?" அவளது கேள்வியில் அவன் சற்றுத் தடுமாறிப் போனான்.

"அப்படி எல்லாம் ஆகாது யம்ஸ்..." அவனது குரல் இறங்கி போய் ஒலித்தது.

"பிடிக்கலைன்னா... பிரிஞ்சிரலாமா?"

"வேறுவழி..." அவனது குரலில் ஜீவனில்லை.

"அதுக்கு எதுக்குக் காதலிக்கணும்? என் ஒட்டுமொத்த காதலை எனக்கு வர போகிற கணவனுக்காகச் சேமித்து வைத்திருந்து கல்யாணத்துக்குப் பிறகு நான் அவரைக் காதலித்து விட்டுப் போகிறேன். நீங்க வழியை விட்டு தள்ளி நில்லுங்க." அவளது வார்த்தையில் அவன் திகைத்து விழித்தான்.

"வழியை விடறீங்களா?" மீண்டும் அவள் கேட்கவும் தான் அவளது வழியை மறித்துக் கொண்டு தான் நிற்பது புரிய... அவன் சட்டென்று விலகி நின்றான். அவள் உள்ளே செல்ல... அவன் சக்தி எல்லாம் இழந்தார் போன்று சோபாவில் அமர்ந்தான்.

சிறிது நேரத்தில் அவன் முன் ஆவி பறக்கும் காபி நீட்டப்பட்டது. யமுனா தான் காபி கோப்பையை நீட்டியபடி நின்றிருந்தாள். அவன் நன்றியோடு காபியை வாங்கிப் பருகியவன் கூடவே தன்னவளின் அழகையும் நிதானமாய்ப் பருகினான்.

"அண்ணய்யா வர்றாங்க..." என்ற யமுனா அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அங்கு வந்த சிவகுமரனை கண்ட ஆகாஷ் எழுந்து நின்றான். ஆகாஷை கண்டதும் சிவகுமரன் புன்னகையுடன் அவனது தோளை தட்டியபடி,

"என்னடா அரைவேக்காடு இந்தப் பக்கம் காத்து அடிக்குது." என்று கேலி செய்ய...

"அரைவேக்காடு முழுவேக்காடாகி நாளாச்சு சார்..." ஆகாஷும் சளைக்காது பதில் பேச...

"அது என்னவோ உண்மை தான். நீ உன் பிரெண்ட்டை போல் இல்லாமல் புத்திசாலித்தனமா பொழைச்சுக்கிட்டியே." என்று கூறிய சிவகுமரனின் புன்னகை மாறவில்லை.

"அதை விடுங்க சார்... அப்பா பிசினஸ் விசயமா பேசிட்டு வர சொன்னார்." என்றவன் தந்தை கூறிய தொழில் விசயத்தைப் பற்றிச் சிவகுமரனிடம் பேச துவங்கினான்.

இருவரும் பேசி முடிக்கும் போது ப்ரஷன்ஜித் பள்ளிக்கு கிளம்பி தயாராக வந்தான். சிவகுமரன் ஆகாஷிடம் விடைபெற்றுக் கொண்டு மகன், தங்கைகளை அழைத்துக் கொண்டு காரிலேறினான். சரஸ்வதி, அம்ரிதா, ப்ரஷன்ஜித் மூவரையும் பள்ளியில் இறக்கி விட்டவன் கடைசியாக யமுனாவை கல்லூரியில் இறக்கிவிட்டு தனது அலுவகத்திற்குச் சென்றான்.

அன்றிரவு எல்லோரும் உணவு உண்ணும் போது பொன்னம்பலம் மெதுவே அந்தப் பேச்சை எடுத்தார்.

"குமரா, எத்தனை நாளைக்கு இப்படியே இருக்கப் போற?"

"ஏன்? எனக்கு என்ன?" அவன் புரியாது அவரைப் பார்த்தான்.

"உன் வாழ்க்கையை நான் பாழாக்கிட்டேனோன்னு எனக்கு ஒரே குற்றவுணர்ச்சியா இருக்கு. உனக்கு வாழ வேண்டிய

இளவயசு குமரா. இந்த வயசில் நீ சாமியார் மாதிரி வாழ்றதை பார்க்கும் போது எங்களுக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு." அவர் கூறியதை கேட்டு அவன் அமைதியாக இருந்தான்.

"ஆமா குமரா..." வேணியும், காவேரியும் பொன்னம்பலம் கருத்தை ஆமோதித்தனர்.

"ஆமா அண்ணய்யா, எங்களுக்கு வதின வேணும்." என்று அவனது மூன்று தங்கைகளும் ஒருசேர ஒருமித்த குரலில் கூற...

அவனுக்கு என்ன பதில் கூறுவது? என்று தெரியவில்லை. அவன் மெல்ல திரும்பி அருகில் அமர்ந்திருந்த மகனை பார்த்தான். ப்ரஷன்ஜித்தோ உணவில் கவனமாக இருந்தான். இதுநாள் வரை அவன் தனது அம்மாவை பற்றி ஒரு வார்த்தை கேட்டது இல்லை. கேட்கும் அளவிற்குச் சிவகுமரன் வைத்தது கிடையாது. அவனே மகனுக்குத் தாயுமானவனாய் இருந்தான்.

"ப்ரஷன், நீ என்ன நினைக்கிற?" அவன் மகனது அபிப்ராயத்தை அறிய விரும்பினான்.

"என்ன கேட்கிறீங்க?"

"உனக்கு... உனக்கு..." சிவகுமரனால் சட்டென்று அந்த வார்த்தையைக் கூற முடியவில்லை.

"உனக்கு அம்மா வேணும் போலிருக்கா?"

தந்தையின் கேள்வியில் அவனை ஏறிட்டு பார்த்த ப்ரஷன்ஜித், "எனக்கு அம்மா வேண்டாம்ப்பா. ஏன்னா எனக்குப் பாட்டி, அத்தைங்க இருக்காங்க... ஆனா உங்களுக்கு...?" என்று கேள்வியாய் சின்னவன் நிறுத்த... சிவகுமரன் புரியாது மகனை பார்த்தான்.

"அன்னைக்குக் காய்ச்சல் வந்தப்போ நடு ராத்திரியில் உங்களைக் கவனிக்க யாருமே இல்லாம நீங்க ரொம்பக் கஷ்டப்பட்டீங்க... அதே மாதிரி உங்களுக்குத் தலைவலி

வந்தப்போ யார் கிட்டேயும் சொல்லாம நீங்களே தலைவலி தைலம் தேய்ச்சுக்கிட்டீங்க... என்னோட பிரெண்ட்ஸ் வீட்டில் இதெல்லாம் அவங்க அம்மா தான் செய்வாங்களாம். என் பிரெண்ட்ஸ் சொன்னாங்க. எனக்கு அம்மா வேணும்ங்கிறதை விட உங்களுக்கு வொய்ப் வேணும்ப்பா. உங்களுக்காக நீங்க இன்னொரு கல்யாணம் பண்ணிக்கோங்க." மகனது பக்குவமான வார்த்தைகளைக் கேட்டு சிவகுமரனின் கண்கள் கலங்கி போனது.

"எனக்கு யாரும் வேண்டாம் கண்ணா... நீ மட்டும் போதும்." என்றவன் விழிகள் கலங்க மகனை அணைத்துக் கொண்டான்.

"நோப்பா... உங்களுக்கு வொய்ப் வேணும்." என்றவன் பொன்னம்பலம் புறம் திரும்பி,

"தாத்தா, அப்பாவுக்குப் பொண்ணு பாருங்க... எனக்கு அம்மாவை விட எங்கப்பாவுக்கு நல்ல வொய்ப் வேணும்." என்று தீர்க்கமாகக் கூறிய சின்னவன் எல்லோர் கண்களுக்கும் தெய்வமாகத் தெரிந்தான்.

"என்ன குமரா சொல்ற?" பொன்னம்பலம் அவனிடம் கேட்க...

"ம், சம்மதம்..." என்ற சிவகுமரன் அதற்கு மேல் ஒன்றும் பேசவில்லை.

தொடரும்...!!!

# அத்தியாயம் : 14

தனது கையிலிருந்த செய்தித்தாளில் இருந்த செய்தியை நம்ப முடியாது பார்த்தாள் அபிஷரிகா. அதில் சிவகுமரனின் பேட்டியை பிரசுரித்து இருந்தார்கள். ப்ரஷன்ஜித் தேசிய விருது வாங்கியது பற்றித் தந்தையான அவனிடம் கேள்வி கேட்டிருந்தார்கள். அதில் தான் சிவகுமரன் தனது சொந்த வாழ்க்கை பற்றியும் சொல்லியிருந்தான்.

"மகனை தொடர்ந்து சினிமாவில் நடிக்க வைப்பீர்களா?"

"இல்லை... இந்தப் படத்தோட தயாரிப்பாளர் எனது நண்பர். அவர் வற்புறுத்தியதால் இந்தப் படத்தில் ப்ரஷன்ஜித்தை நடிக்க வைத்தேன். இப்போது எனது மகன் படிப்பில் கவனம் செலுத்துவது தான் நல்லது. அவர் வளர்ந்த பின்பு அவர் என்னவாக வர வேண்டும் என்பதை அவரே முடிவு பண்ணுவார்."

"சார், உங்க சொந்த வாழ்க்கை பற்றி..."

"நானே சொல்ல வேண்டுமென்று நினைத்திருந்தேன். நான் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவிருக்கிறேன். அதுவும் எனது மகனது விருப்பதிற்காக... ஆம், என் மகன் அவனுக்குத் தாய் வர வேண்டும் என்பதை விட எனக்கு ஒரு நல்ல மனைவி வர வேண்டும் என்று விரும்புகின்றான். எனது மகனது விருப்பத்தை நிறைவேற்றுவது ஒரு தந்தையான எனது கடமை. விரைவில் எனது திருமணச் செய்தி வரும். வந்து வாழ்த்திவிட்டு போங்கள்." அத்துடன் அந்தப் பேட்டி முடிவடைந்திருந்தது.

அதைப் படித்துவிட்டு தான் அபிஷரிகா திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள். இறுதியில் தான் அவர்களுக்கு ஒன்றுமே இல்லாதவளாகி போனதில் அவளது மனம் பாரமாய்க் கனத்தது. கணவன் இரண்டாவது திருமணத்திற்குச் சம்மதம் கூறியிருப்பது அவளது இதயத்தினை வாள் கொண்டு இரண்டாகப் பிளந்தது போல் அவளுக்கு வலித்தது. அதே சமயம்

கணவன் மீது கோபமும் எழுந்தது. அவனுக்குத் தான் ஒன்றுமே இல்லையா? என்கிற கழிவிரக்கம் அவளது மனதினை குத்தி கொன்றது. அவனது காதல் பொய் தானோ? 'ஐ லவ் யூ அம்முலு' என்று கூறிக் கொண்டு அவன் தன்னைச் சுற்றி சுற்றி வந்தது எல்லாம் பொய் தானோ? அவள் நினைத்து போல் சொத்துக்களுக்காகத் தானோ? சொத்துக்கள் கைக்கு வந்ததும் இந்த ஏழை அவனுக்குத் தேவையில்லாது போய்விட்டேனோ? இதில் தான் பெற்ற மகனே தனக்கு எதிராகச் சதி செய்யும் கொடுமையை எங்கே போய்ச் சொல்வது?

"அப்படியே அப்பன் புத்தி..." அவள் கோபமாய் முணுமுணுத்தபடி கையிலிருந்த செய்தித்தாளை சுக்குநூறாய் கிழித்துப் போட்டாள். அவ்வளவு ஆத்திரம் அவளுக்கு...

இப்போது அவளிடம் அழுவதற்குக் கூடக் கண்ணீர் இல்லாது வற்றி போயிற்று. அவள் அப்படியே சிறிது நேரம் சிலையாய் அமர்ந்திருந்தாள். பிறகு தன்னைத் தேற்றி கொண்டவள் தனது அன்றாட வேலைகளைப் பார்க்க சென்றாள். அவள் கவலையில் உழன்று கொண்டிருந்தால் அவளது அடுத்த வேளை சோற்றுக்கு யார் சம்பாதித்துக் கொடுப்பார்கள்???

மூன்று நாட்கள் சென்ற பிறகு ஒரு நாள் காலை பொழுதில் எப்போதும் போல் அபிஷரிகா கோவிலை சுத்தம் செய்து கொண்டிருந்தாள். அந்தக் கோவில் மிகவும் பிரச்சித்தி பெற்ற கோவில் இல்லை என்றாலும்... ஜாதகத்தில் தோச நிவர்த்தி வேண்டுவோர் அடிக்கடி வந்து செல்லும் ஸ்தலமாக அது விளங்கியது. அவள் கோவிலை கூட்டி, பெருக்கி குப்பைகளை அள்ளி எடுத்துக் கொண்டு வந்து வெளியில் கொட்டும் சமயம் ஒரு குரல் அவளைத் தடுத்து நிறுத்தியது.

"நீ... நீ... அபி தானே...?" தனக்குப் பரிச்சயமான குரலில் அவள் திரும்பி பார்த்தாள். அங்கு நின்று கொண்டிருந்த தீபனை கண்டு அவளது மனதில் எரிச்சல் மூண்டது. பின்பு

அவள் முகத்தை இளக்காரமாக வைத்துக் கொண்டு அவனை ஏறயிறங்க பார்த்தாள்.

"பரவாயில்லையே, ஞாபகம் வச்சிருக்க..." என்றவள் தனது கையில் இருந்த குப்பையைக் கொட்டியபடி அவனைக் கேலியாய் பார்த்தாள். அதைக் கண்டு தீபனின் முகம் சிறுத்துப் போனது.

"எல்லாத்தையும் இழந்து வந்தும் உன் திமிர் குறைவதாய் இல்லை." அவனது வார்த்தைகள் கோபத்துடன் வந்தது.

"அது என் கூடப் பிறந்தது. இல்லை என்றால் உன்னை மாதிரியான ஆட்களைச் சமாளித்துச் சினி ஃபீல்டில் ஐஞ்சு வருசம் குப்பை கொட்டியிருக்க முடியுமா?" அப்போதும் அவளது திமிர் சற்றும் குறையவில்லை.

"என்னைப் பகைச்சிக்கிட்டு பெருசா என்னத்தைக் கண்ட? அவன் கூடவாவது ஒழுங்கா வாழ்ந்தியா அதுவும் இல்லை. அவன் உன்னோட எல்லாச் சொத்துக்களையும் பிடுங்கிட்டு உன்னை நடுத்தெருவில் நிறுத்திட்டான். என்னை அவமானப்படுத்திய உனக்கு நல்லா வேணும். இதேது என் கூட நீ வந்திருந்தால் நான் உன்னை ராணி மாதிரி வாழ வச்சிருப்பேன்." கோவில் வாயிலில் நின்று கொண்டு தீபன் பேசிய பேச்சுக்கள் அவளுக்கு அருவருப்பை அளித்தது.

"த்தூ..." என்று காறி உமிழ நினைத்தவள் தான் நின்று கொண்டிருப்பது கோவில் என்று தெரிந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தீபனது முகத்தைப் பார்த்தாள். அவளது பார்வையைக் கண்டவன் சட்டென்று பயந்து இரண்டடி பின்னால் நகர்ந்தான். அவள் அவனது முகத்தில் துப்பிவிட்டால்...? அவள் இளக்கார பார்வையோடு தள்ளி சென்று துப்பிவிட்டு வந்தவள்,

"அன்னைக்கு அத்தனை அவமானப்பட்டும் நீ அடங்க மாட்டேங்கிற... உன்னை அடக்க என்ன பண்ணலாம்?" என்றவளது கை தனது இடுப்பில் சொருகியிருந்த அலைப்பேசியை எடுத்தது. அதைக் கண்டதும் அவனுக்குப் பயத்தில் வியர்வை வழிந்தது.

"அபி..." என்று அவளை அழைக்கும் போதே அவனது குரல் அப்படியே குழைந்தது.

"இப்போ எதுக்கு ஃபோனை எல்லாம் எடுக்கிற...? நீயும், நானும் அப்படியா பழகியிருக்கோம்?" என்று அவன் வழிய...

"பின்ன எப்படிப் பழகியிருக்கோம்? எனக்கு ஞாபகம் இல்லை." மிதப்பாய் பதில் அளித்தவளை கண்டு அவன் அயர்ந்து போய் நின்றான். அப்போது அவனது மனைவி அங்கு வந்து சேர்ந்தாள். அவளது கைகளில் அர்ச்சனை பொருட்கள் அடங்கிய கூடை இருந்தது. அதை வாங்கத்தான் அவள் சென்றிருந்தாள் போலும்...

"யாருங்க இது?" என்று கணவனிடம் கேட்டபடி அபிஷரிகாவை உற்று நோக்கியவள் சற்று அதிர்ந்து போனாள். தோச நிவர்த்திக்காக இங்கு வந்தால் இன்னொரு தோசம் தன்னைத் தொற்றிக் கொள்ளும் அபாயம் இருப்பதை உணர்ந்தவளுக்கு அச்சம் எழுந்தது. ஏனெனில் இந்த அபிஷரிகாவிற்காக அவளது கணவன் அவளுடன் வாழாது அவளைத் தள்ளி வைத்திருந்தான். இப்போது அதை நினைத்தவளுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"கண்ட சிறுக்கி கூட எல்லாம் உங்களுக்கு என்ன பேச்சு?" என்று கணவனது கையைப் பிடித்து இழுத்தவள்,

"மேனாமினுக்கி... வந்துட்டா மினுக்கிக்கிட்டு..." என்று முணுமுணுத்தபடி அவள் அங்கிருந்து அகல முயல...

"ஹலோ, யாரு மேனாமினுக்கி... நானா...? இதைப் பாரு... யாரு மேனாமினுக்கின்னு உனக்குத் தெரியும்..." என்ற அபிஷரிகா தனது அலைப்பேசியை எடுத்து அதிலிருந்து ஒரு காணொளியை எடுத்து அவளிடம் போட்டு காட்டினாள். அதில் தீபன் ஒட்டுத்துணி இல்லாது முழு நிர்வாணமாய் நின்று கொண்டிருந்தான். அதைப் பார்த்த தீபனின் மனைவி அதிர்வுடன் அபிஷரிகாவை பார்த்தாள்.

"ச்சேச்சே... இந்தக் கர்மத்தை எல்லாம் நான் பார்க்க மாட்டேன். நீ தான் அவன் பொண்டாட்டி... அவனை இப்படி எல்லாம் பார்க்க வேண்டியது உன் தலையெழுத்து... எனக்கு அந்தத் தலையெழுத்து இல்லை." என்றபடி அவள் காணொளியை அணைத்தாள்.

"இப்போ யாரு மேனாமினுக்கி... சாரி, சாரி... மேனாமினுக்கன்னு புரியுதா? உன் புருசன் தான் என்னை மயக்க பார்த்தான். ஆனா நான் மயங்கலைப்பா. ஏன்னா இவனை விட என் புருசன் பயங்கர ஸ்மார்ட். யூ நோ...?" என்று நக்கலாய் கேட்டவளின் முகத்தில் அத்தனை கோபம் இருந்தது. தீபனின் மனைவிக்குப் பேச வார்த்தைகள் இல்லை. அவளது முகத்தில் ஈயாடவில்லை.

"என்ன வாயடைச்சு போய் நிக்கிற? தப்பு உன் புருசன் மேலன்னு தெரிஞ்சதும் அமைதியாகிட்ட. இதே இது என் மேலிருந்தால் என்னைக் கேவலா திட்டியிருப்ப... அப்படித்தானே? நடிகைங்கன்னா உனக்கு அத்தனை கேவலமா போயிட்டாங்களா? எங்களுக்குக் கொடுக்கப்படும் கதாபாத்திரத்தை நாங்க நடிக்கிறோம். அவ்வளவு தான்... மற்ற தொழில் மாதிரி தான் நடிப்பும்... அதை ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்கிறீங்க? உடம்பை காட்டி நடிச்சவுடனே அடுத்தவனுக்கு உடம்பை காட்டி பாய் விரிக்கணும்ன்னு எந்தச் சட்டமும் இல்லை. உன் புருசனை மாதிரியான ஆளுங்களால் தான் என்னை மாதிரியான நடிகைங்க இந்த ஃபீல்டில் சீரழிஞ்சிக்கிட்டு இருக்காங்க. இனியும் உன் புருசனும், நீயும் இது மாதிரி பேசிக்கிட்டு இருந்தீங்க... இப்போ நீங்க பார்த்த வீடியோ நாளைக்கு உலகமே பார்க்கும். மைன்ட் இட்." என்று இருவரையும் விரல் நீட்டி எச்சரித்தவள் பின்பு தீபனிடம் திரும்பி,

"இப்போ புரியுதா? இந்தச் சினி ஃபீல்டில் பதினைஞ்சு வயசில் இருந்து இருக்கேன். எந்த ஆம்பளையும் என் சுண்டு விரலை கூடத் தொட்டது இல்லை. தொடவும் முடியாது. ஏன்னா நான் நெருப்பு மாதிரி... பொண்ணுங்கன்னா கோழைங்கன்னு நினைச்சியா? அழுதுக்கிட்டு இருப்பாங்கன்னு நினைச்சியா? இப்படி

என்னை மாதிரியும் இருப்பாங்க..." என்று தன்னைச் சுட்டிக்காட்டியவள் வீர நடை போட்டு அங்கிருந்து அகன்றாள்.

தீபனின் மனைவி அவனைக் கேவலமாய்ப் பார்த்தபடி காரை நோக்கி நடந்தாள். அவள் பின்னேயே சென்ற தீபன்,

"கோவிலுக்குப் போகலையா?" என்று கேட்க...

"நீ கேட்ட கேட்டுக்கு தோச நிவர்த்தி ஒண்ணு தான் குறைச்சல்..." என்று கத்தியவள் காரிலேறி கதவை ஓங்கி சாற்ற... அவனும் அமைதியாகக் காரிலேறி அமர்ந்தான். அவனது தலையெழுத்து அபிஷரிகா கையில் இருப்பதை உணர்ந்து அவன் அமைதியாகி போனான். கடந்த ஆறு வருடங்களாக அவன் அப்படித்தானே இருக்கிறான்...

***************************

அடுத்த இரு நாட்களில் அபிஷரிகாவின் வீடு தேடி ஒருவன் வந்தான். அவனைக் கண்டதும் அவள் அடையாளம் தெரியாது விழித்தாள்.

"மேம், என்னை அடையாளம் தெரியலையா?" அவன் கேட்டதும் அவள் தனக்குள் யோசித்தபடி நின்றிருந்தாள்.

"ஆறு வருசத்துக்கு முந்தி உங்க கிட்ட கதை சொல்ல வந்தேனே... என்னை ஞாபகம் இல்லையா?" அவன் கூறியதும் தான் அவளுக்கு ஞாபகம் வந்தது.

"ஓ... அந்தப் பைத்தியக்கார கதையைச் சொன்னவனா நீ?" அவள் கூறியதை கேட்டு,

"மேம், பைத்தியக்காரின்னு சொல்லாதீங்க... ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பொண்ணைப் பத்தின கதை இது. அப்போ மட்டும் நீங்க சரின்னு சொல்லியிருந்தீங்கன்னா அந்த வருசம் தேசிய விருது உங்களுக்குத் தான் கிடைச்சிருக்கும். நீங்க வேற லெவலுக்குப் போயிருப்பீங்க..." அவன் சற்று ஆதங்கத்துடன் கூற... தேசிய விருது என்றதும் அவளுள்

அவளது மகனின் ஞாபகம் சொல்லாமல் எழுந்தது. முயன்று அதை ஒதுக்கி தள்ளியவள்,

"உன் பெயர் என்ன?" என்று அவனைப் பார்த்து கேட்க...

"ரவி மேம்..." அவன் பணிவோடு சொல்ல... அங்கிருந்த பிளாஸ்டிக் நாற்காலியில் அவனை அமர சொன்னவள் சுவற்றில் சாய்ந்தபடி நின்று கொண்டு அவனைப் பார்த்தாள்.

"சரி, இப்போ எதுக்கு இங்கே வந்திருக்க ரவி...?"

"மேம், அந்த ப்ராஜெக்ட் அப்படியே தான் இருக்கு... இப்பவும் நீங்க விருப்பப்பட்டால்...?" அவன் தயங்கியபடி இழுத்தான்.

"நான் இருக்கும் இடம் உனக்கு எப்படித் தெரியும்?" அதற்கு அவன் பதில் சொல்ல யோசித்த நொடிகளில் அவளே அவனிடம்,

"தீபன் எதுவும் சொன்னானா...?" என்று கேட்க... அவன் 'ஆமாம்' என்றபடி பெரிதாகத் தலையை ஆட்டினான்.

"நான் நடிப்பை விட்டு ரொம்ப நாளாச்சு ரவி... இப்போ எனக்கு நடிப்பு வருமான்னு கேட்டால்... என்னிடம் பதில் இல்லை."

"நடிப்பு உங்க ரத்தத்தில் ஊறியிருக்கு மேம்... நிச்சயம் உங்களால் முடியும். உங்களால் மட்டும் தான் இந்தக் கதாபாத்திரத்தை சிறப்பாக நடித்துக் கொடுக்க முடியும்." அவன் கண்கள் மின்ன ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும் பேசினான்.

"எனக்கு யோசிக்கக் கொஞ்சம் டைம் கொடு..." என்றவள் மறுத்து எதுவும் பேசவில்லை.

"எனக்குப் பாசிட்டிவ் பதில் தான் வேண்டும் மேம்..." என்றவன் கிளம்ப எத்தனித்தான்.

"ஒரு நிமிசம் ரவி... நீ இன்னும் ஒரு படம் கூட டைரக்ட் பண்ணலையா?"

"இது எனக்குப் பத்தாவது படம் மேம்..."

"ஓ... அப்போ நீ பெத்த டைரக்ட்டருன்னு சொல்லு..."

"உங்க முன்னாடி நான் சின்னவன் தான் மேம்." என்றவன் அவளிடம் இருந்து விடைபெற்றுச் சென்றான்.

அன்று முழுவதும் அபிஷரிகா யோசித்துப் பார்த்தாள். எதற்காகத் தான் இந்தத் தலைமறைவு வாழ்வு வாழவேண்டும்? யாருக்காக இப்படித் தவ வாழ்க்கை வாழ வேண்டும்? அந்தக் கணம் அவளுக்கு எல்லாமே வெறுத்துப் போனது. கணவனது இரண்டாவது திருமணப் பற்றிய செய்தி கேட்டதில் இருந்து அவளுள் ஒருவித வீம்பு எழுந்தது. தன்னை ஒரு பொருட்டாக மதிக்காதவன் முன்னிலையில் தான் வாழ்ந்து காட்ட வேண்டும் என்கிற வெறி எழுந்தது. அன்று குற்றவுணர்ச்சியோடு வாழ்க்கையை இழந்து எதிலிருந்தோ தப்பிப்பது போல் ஓடி வந்த கோழை இப்போது இல்லை.

மாறாகக் கணவன், மகன் மற்றும் தாத்தா, பாட்டி முன் தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்ட வேண்டும் என்கிற வெறி அவளுள் எழுந்தது. 'நீங்க புறக்கணித்ததால் நான் ஒன்றும் செத்து போய்விடவில்லை. மாறாகப் பேரும், புகழுடன் வாழ்கிறேன்.' என்று அவர்களிடத்தில் உரக்க உரைக்க வேண்டுமானால் அவளுக்கு இந்த வாய்ப்பு மிகவும் அவசியம். அதை அவள் உணர்ந்தே இருந்தாள். அவள் அடிப்பட்ட பெண் புலியாய் சீறி பாயத் தயாரானாள்.

மறுநாள் அவள் ரவிக்கு அழைத்து அவனது படத்தில் நடிக்கத் தனக்குச் சம்மதம் என்று உரைத்துவிட்டாள். அதைக் கேட்டு அவன் மிகவும் சந்தோசப்பட்டான்.

"நாளை நான் அக்ரிமென்ட் பேப்பருடன் வருகிறேன் மேம்." என்றவன் சொன்னது போல் மறுநாள் காலையில் ஒப்பந்த பத்திரத்துடன் அவள் வீட்டு வாயிலில் வந்து நின்றான்.

அபிஷரிகா தன்னுடன் அர்ச்சகர் சுவாமிநாதனையும், அவரது மனைவி பட்டுவையும் துணைக்கு

அழைத்திருந்தாள். அப்போது தான் அவர்களுக்குமே அவள் ஒரு நடிகை என்கிற விசயமே தெரியும். அதற்கு மேல் அவளைப் பற்றி அவர்கள் தூண்டி, துருவி விசாரிக்க எண்ணவில்லை. சுவாமிநாதன் நல்ல நேரம் பார்த்து கொடுக்க... அந்தச் சுப நேரத்தில் அபிஷரிகா ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்து போட்டாள்.

படச் சம்பந்தமான வேலைகள் இருப்பதாகக் கூறி ரவி அன்றே அவளைச் சென்னைக்கு அழைத்தான். அவளைத் தனியே அனுப்ப மறுத்த சுவாமிநாதன் தானும், மனைவியுமாய் அவளுடன் கிளம்பினார்.

"இந்தக் காலத்தில் யாரையும் நம்ப முடியாது குழந்தே..." என்று அவர் அவளுக்கு அறிவுரை வேறு கூறினார். அவருக்கு அவளைப் பற்றித் தெரியாது அல்லவா...!

சென்னையில் அபிஷரிகா தங்குவதற்கு வீடு மற்றும் எல்லா வசதிகளையும் ரவியே செய்து கொடுத்தான். அதற்கான பணத்தை அவளது சம்பளத்தில் கழித்துக் கொள்வதாகக் கூறிவிட்டான்.

"எல்லாம் சரி தான் ரவி... நான்..." எப்படி அவனிடம் கூறுவது என்று தெரியாது விழித்தவள் மெல்ல,

"நடிப்பதற்கு ஏற்றவாறு பிட்னஸாக நானில்லை..." என்று தயங்கியபடி கூற...

"நோ மேம்... நீங்க இப்படி இருப்பது தான் இன்னொசென்ட்டா, நேச்சுரலா இருக்கு. இப்படியே இருங்க... அது தான் இந்தக் கதாபாத்திரத்துக்கு நல்லது." ரவி கூறியதும் தான் அவள் நிம்மதியுற்றாள்.

நீண்ட, நெடிய ஆறு வருடங்களுக்குப் பிறகு அவள் வெள்ளித்திரையில் தோன்ற போகிறாள். அவளது மனதிற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது. நமக்கு விருப்பமான ஒன்றை நாம் செய்யும் போது ஒருவித ஆத்ம திருப்தி ஏற்படுமே அது போன்றதொரு மனநிலையில் அவள் இருந்தாள். அத்தனை உற்சாகமாய் வீட்டினில் வலம்

வந்தாள். அவளுக்கு எல்லாம் பொருந்தி வரும் வரை துணைக்குப் பட்டு மாமி உடனிருந்தார்.

அதோ, இதோ என்றிருந்த திரைப்படத்தின் துவக்க விழா நெருங்கி வந்தது. அதற்காக அபிஷரிகா எளிமையான பட்டுப்புடவை மற்றும் செயற்கை அணிகலன்களை வாங்கிக் கொண்டாள். துவக்க விழா அன்று அவள் கர்ம சிரத்தையுடன் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். அவளது தேகம் சற்று குண்டாகி இருந்தாலும் அவளது அழகு இன்னமும் குறையவில்லை. பால் போன்ற மாசுமருவில்லாத, கள்ளங்கபடமற்ற அவளது முகம் அவளுக்கு அத்தனை அழகினை வாரியிறைத்தது. வாடகை காரில் விழா நடக்கும் இடத்திற்குச் சென்று இறங்கியவளை ரவி வாயிலில் வந்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றான். எல்லோரும் அவளை அதிசயமாகப் பார்த்திருந்தனர். அவள் இந்தப் படத்தில் நடிப்பது தெரிந்து அவளது ரசிகர்கள் அனைவரும் அங்குக் கூடியிருந்தனர்.

"அபிம்மா... உனக்காக நாங்க இருக்கோம். வி லவ் யூ..." என்று கூட்டம் அவளைக் கண்டு உரக்க கத்தி ஆர்ப்பரித்தது. ரசிகர்களின் உற்சாகக் குரலை விட ஒரு நடிகைக்கு வேறென்ன வேண்டும்... திருமணமாகி ஒரு குழந்தைக்குத் தாயான பின்பும் தனக்கான புகழ் குறையவில்லை என்பதை அறிந்த அவளது மனம் மகிழ்ச்சியில் ததும்பியது. அதே சந்தோசத்தோடு அவள் எல்லோரையும் கண்டு புன்னகையுடன் கையசைத்தாள்.

மேடையில் ஏறியவள் அப்போது தான் கவனித்தாள், அங்கு அமர்ந்திருந்த நடிகர்கள், இசையமைப்பாளர் என்று எல்லோருமே புதுமுகங்களாக இருப்பதை... அதில் பெருத்த நிம்மதி அடைந்தவள் மேடையில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள். சுமார் அரை மணி நேரம் சென்று கூட்டத்தில் சிறிது சலசலப்பு கேட்டது. மேடையில் அமர்ந்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்றனர். அதைக் கண்டு அவளும் புரியாதவளாய் எழுந்து நின்றாள். அப்போது வேக நடையுடன் மேடையேறியவனை நம்ப முடியாது பார்த்தாள் அபிஷரிகா...

இவன் எங்கே இங்கே? என்ற கேள்வி அவளது தலையை வண்டாய்க் குடைந்தது. ஆம், சிவகுமரன் தான் மேடையேறி வந்து கொண்டிருந்தான். அன்று அவனிடத்தில் இருந்த அழகும், கம்பீரமும் கொஞ்சமும் குறையாது இப்போதும் அவனிடத்தில் அப்படியே இருந்தது. அவனது முகத்தில் வசீகரப் புன்னகை குடியிருக்க, நறுவிசாகக் கத்தரிக்கப்பட்ட குறுந்தாடியுடன், கண்ணாடி அணிந்து அவன் கம்பீர நடையுடன் மேடையேறியது அத்தனை அழகாய் இருந்தது. அவளது நேசம் கொண்ட மனம் கணவனது அழகில் சொக்கித்தான் போனது. அந்த மயக்கம் அவளது விழிகளில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

"வெல்கம் மிஸ்டர். சிவகுமரன்..." அருகில் ஒலித்த குரலில் தன்னை மீட்டு கொண்டவள் முகத்தை இறுக்கமாய் வைத்து கொண்டாள். அவன் மீதான கோபம் மீண்டும் மீண்டது அவளிடத்தில்...

தன்னை வரவேற்றவரிடம் வரவேற்பாய் புன்னகை சிந்திய சிவகுமரன் அபிஷரிகாவின் அருகில் வந்து நின்றான்... அவன் தனது அருகில் வந்து நிற்பான் என்று அவளுமே எதிர்பார்க்கவில்லை. அதில் அவள் சற்று விதிர்த்து தான் போனாள். அவனது அண்மையும், அவனது வாசமும் அவளுள் பழைய நினைவுகளைத் தட்டி எழுப்பிவிட்டது. முன்பு கணவனைக் கண்ட போது எல்லாம் அவனைக் கட்டியணைத்துக் கொண்டு, முத்தமிட்டுக் கொண்டு பைத்தியக்காரத்தனமாய்த் தான் சுற்றி திரிந்த காட்சி அவளுள் எழுந்து அவளை நிலைகுலைய செய்தது. ஆனாலும் அவள் எதையும் வெளிக்காட்டி கொள்ளாது அமைதியாக நின்றிருந்தாள்.

"என்னங்க மேடம்... எப்படியிருக்கீங்க?" என்று தனது அழகிய பல்வரிசை தெரிய வசீகரமாய்ப் புன்னகைத்தவனைக் கண்டு,

"பார்த்தால் எப்படித் தெரியுது?" என்று அவள் சற்றும் மிடுக்கு குறையாது கேட்டாள்... அவன் அவளை மேலிருந்து கீழாக அளவிடுவது போல் பார்த்தவன்,

"எனக்கு உரிமை இல்லாததை நான் பார்க்க மாட்டேன் மேடம்." என்று கூறி மீண்டும் புன்னகைக்க... அதில் அத்தனை நக்கல் இருந்ததோ...!!!

"அப்போ உங்க கேள்வியே அநாவசியம் மிஸ்டர்..." என்று முணுமுணுத்தவளின் பார்வை முன்பக்கமிருந்த கூட்டத்தைப் பார்த்தபடி இருந்தது.

"இவ்வளவு நாள் தலைமறைவா இருந்தவங்க இப்போ வந்திருக்கீங்கன்னா?" என்று யோசனையுடன் அவளைப் பார்த்தவன்,

"அது எனக்குத் தேவையில்லாத ஒன்று... எனக்கு வேண்டிய ஒன்றை உங்க கிட்ட கேட்கத்தான் இப்போ நான் வந்திருக்கேன்." என்க...

"உங்களுக்குக் கொடுக்கும் அளவுக்கு என்னிடம் எதுவும் இல்லை." அவளது பதில் விட்டேற்றியாய் வந்தது.

"கொடுப்பதற்கு மனம் தான் வேண்டும். அளவு தேவையில்லை." என்று கூறியவனைக் கண்டு அவள் பல்லை கடித்தாள்.

"என்ன விசயம்ன்னு சொன்னால் தேவலை..." அவளது வார்த்தைகள் சீற்றத்துடன் வந்தது.

"நான் வேண்டாம்ன்னு உறவை முறிச்சிட்டு போனவங்க நீங்க... அதுக்கான உரிமையையும் முறிச்சிட்டுப் போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும்." என்றவனைக் கண்டு அவளது விழிகள் இடுங்கியது.

"டிவோர்ஸ்க்குச் சம்மதம் சொல்லிவிட்டுப் போயிருந்தால் நன்றாக இருந்திருக்கும்." என்று விளக்கம் கொடுத்தவன் புறம் திரும்பியவள் அவனை உற்று பார்த்தபடி,

"வேண்டாம் என்று முடிவு செய்த பிறகு விவாகரத்து ஒன்றும் பெரிய விசயமல்ல..." என்க...

"ம், அப்படியா ரொம்ப நல்லது. விரைவில் விவாகரத்து நோட்டீஸ் வரும். கையெழுத்து போட்டு அனுப்புங்க மேடம்."

"நிச்சயமாய்..." புன்னகையுடன் கூறியவள் மீண்டும் தனது பார்வையைக் கூட்டத்தின் பக்கம் திருப்பிக் கொண்டாள். அவளது பதிலில் அவனது முகத்தில் புன்னகை விரிந்தது. அவனது புன்னகையை அவள் காணவில்லை. அவள் கண்டிருந்தால் பார்வையால் அவனைப் பஸ்பமாக்கி இருப்பாள்.

விழா ஆரம்பித்ததும் எடுத்தவுடன் சிவகுமரனை பேச அழைத்தனர். அவனும் சிறிதும் பந்தா ஏதுமின்றி மைக்கை பிடித்தபடி கூட்டத்தைப் பார்த்தான். பின்பு திரும்பி மனைவியைப் பார்த்தான். அப்போது அவனது உதடுகளில் ஒரு கேலி புன்னகை தோன்றி மறைந்தது.

"சுமார் ஆறு வருடங்களுக்கு முன்பு சிங்கப்பூர் ஸ்டார் நைட்டில் நான் ஒரு அறிவிப்புக் கொடுத்தேன். உங்களுக்கு எல்லாம் அது ஞாபகம் இருக்கிறதா?" கூட்டத்தைப் பார்த்து கேட்டவனின் பார்வை மனைவி மீதிருந்தது. அன்றைய மேடை நிகழ்வுகள் அனைத்தும் அவளுக்கு நினைவுக்கு வந்ததில் அவளது முகம் செத்துப் போய்விட்டது. ஆனாலும் தன்னைத் தேற்றிக் கொண்டு அவள் தைரியமாக நின்றிருந்தாள்.

"நினைவு இருக்கு..." என்று கத்திய கூட்டத்தினைப் பார்த்து கையமர்த்தி அமைதியாக இருக்கச் சொன்னவன்,

"சிலருக்கு ஞாபகம் இருக்காது... அதனால் நான் அதைப் பற்றி மீண்டும் சொல்கிறேன். எங்களது நிறுவனம் புரொடக்சன் ஃபீல்டில் முதல் முறையாக இந்தப் படத்தின் மூலம் காலடி எடுத்து வைக்கிறது. அதே ப்ராஜெக்ட், அதே நடிகை வைத்துப் படம் எடுக்கவிருக்கிறோம். அந்தப் படத்தின் துவக்க விழா தான் இது... ஆறு வருடங்களுக்குப் பின் எனது கனவு நனவாகி இருக்கிறது. எனது கனவை நனவாக்க என்னுடன் கை கோர்த்த மிஸ்..." என்று இழுத்தபடி அவளைப் பார்த்தவன் பின்பு நமட்டு சிரிப்புடன்,

"மிஸ். அபிஷரிகா அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்." என்றவன் படத்தில்

பணிபுரிய போகும் அனைவரின் பெயர்களையும் தனித்தனியே கூறி நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தான்.

இப்போது அபிஷரிகாவிற்கு எல்லாம் புரிந்து போனது. தனது ஏழ்மையை, வாய்ப்பின்மையைப் பயன்படுத்திக் கொண்டு சிவகுமரன் தனக்கு விரித்த வலையில் தானே வலிய வந்து மாட்டி கொண்டோம் என்று... முன் வைத்த காலை இப்போது பின் வைத்தால் அது மிகவும் அசிங்கம். அதே சமயம் அவளது திரை பிரவேசத்திற்கு இந்தத் திரைப்படம் எந்தளவிற்குக் கை கொடுக்கும் என்று இப்போது அவளுக்குச் சந்தேகமாக இருந்தது. சிவகுமரன் தன்னைப் பழிவாங்கவே இப்படிச் செய்கிறான் என்றே அவள் நினைத்தாள்.

அவள் அவனது முகத்தில் கரி பூச நினைக்க... அவனோ முந்தி கொண்டு அவளது முகத்தில் கரியை பூசிவிட்டான். அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் அமையாமலா போகும்? அப்போது பார்த்துக் கொள்வோம் என்று அவள் கோபத்துடன் அமைதி காத்தாள்.

இருவருமே தங்கள் விருப்பம் போல் மற்றவரை கைப்பாவையாய் ஆட்டி வைக்கத் தீர்மானித்து விட்டனர். இறுதியில் யார் வெல்ல போவது? சிவகுமரனா...? அபிஷரிகாவா...? இல்லை அவர்களது காதலா...???

தொடரும்...!!!

அத்தியாயம் : 15

"ஷிவாரிகா ஃபிலிம்ஸ் பெருமையுடன் வழங்கும் 'ஷிவாரிகா'... ஆம், படத்தின் பெயரே ஷிவாரிகா தான்." என்று மேலே பேசி கொண்டு சென்ற சிவகுமரனை கண்ட அபிஷரிகா தன்னினைவு கலைந்து பெரும் அதிர்வுடன் கணவனை நோக்கினாள். அவனது பெயரும், அவளது பெயரும் இணைந்து உருவானது தான் இந்த 'ஷிவாரிகா'. அதை அவன் வாயால் கூற அவள் கேட்டிருக்கிறாளே. அந்த நாள் ஞாபகம் அவளது நெஞ்சினில் வந்து போனதை அவனும் உணர்ந்தானோ என்னவோ...! இப்போது அவனும் அவளைத் திரும்பி பார்த்தான்.

இருவரது மனதிலும் கடந்த காலம் கண்முன் எழுந்து ஏங்க செய்ததோ...!!!

அபிஷரிகா கருவுற்று இருப்பதை அறிந்து அவளைக் காண ஓடி வந்த சிவகுமரன் அடுத்த நொடி அவளைத் தனது கைகளில் தூக்கி சுற்றியிருந்தான்.

"ரொம்பச் சந்தோசமா இருக்கு அம்முலு..." என்றவன் அவளைத் தூக்கி பிடித்திருந்த கைகளைச் சிறிது தளர்த்தினான்...

அவளது முகம் அவனது முகம் அருகில் வந்ததும் அவன் தனது கைகளை அவளது மேனியோடு இறுக்கி கொண்டவன் அவளது விழிகளோடு தனது விழிகளைக் கலந்தான். எப்போதும் போல் அவனது விழிகள் காதலை சிந்தியது... அவளது விழிகளோ அவனை வெறுமையாய்ப் பார்த்தது. அவனுக்கு இருந்த சந்தோசத்தில் அவளது உணர்வுகளை அவன் கவனிக்கவில்லை.

"தேங்க்ஸ்டி அம்முலு..." என்றவன் அடுத்த நொடி தாமதியாது அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான். வன்மையாக அல்லாது மிகவும் மென்மையாய்...

பூவுக்குள் தேனெடுக்கும் வண்டின் லாவகம் அவனது முத்தத்தில்... முதலில் முரண்டு பிடிக்க நினைத்தவள் பின்பு

மெல்ல மெல்ல அவனோடு இசைந்தாள். இதழொற்றலை நீண்ட நேரம் நீட்டிக்காது சட்டென்று முடிவிற்குக் கொண்டு வந்தவனை அவள் ஏக்கத்துடன் பார்க்க... அவனோ அதை உணராதவனாய் அவளைக் கட்டில் மீது அமர வைத்து அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் அவளது வயிற்றின் மீது மென்மையாய் முத்தமிட்டு,

"உன்னைப் போல் ஒரு பெண் குழந்தை வேணும் அம்முலு... அதுக்குப் பெயர் கூட யோசிச்சிட்டேன்." என்றவனைப் பார்த்து அவள் எந்தவித எதிர்வினையும் ஆற்றாது அமைதியாக இருந்தாள்.

"இப்போ தான்... ஜஸ்ட் நௌ... ஷிவாரிகா... நம்ம ரெண்டு பேர் பெயரையும் சேர்த்து... நல்லாயிருக்கா...?" என்று கேட்டவனது விழிகளில் அத்தனை ஆர்வம் வழிந்தது. ஏனோ இல்லையென்று கூறி அவனது சந்தோசத்தினைக் கெடுக்க விரும்பாது அவள் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்.

"அம்முலு, இப்போ நான் ரொம்பச் சந்தோசமா இருக்கேன். உனக்கு என்ன வேணும்ன்னாலும் கேளு..." என்று புன்னகையுடன் சந்தோசமாய்க் கேட்டவனைக் கண்டு அவள் விலுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள்.

"ம், கேளும்மா..." என்று அவன் அவளை ஊக்குவிக்க...

"என் பெயருக்குச் சொத்துக்களை எழுதி கொடு."

அன்று கூறிய மனைவியின் சுடும் வார்த்தைகள் இப்போதும் சிவகுமரனின் காதுகளில் ஒலித்து அவனை உயிரோடு சுட்டெரித்தது... தீச்சுட்டார் போன்று அவன் தனது தலையைக் குலுக்கி கொண்டு நிகழ்காலத்திற்கு வந்தவன் தனக்குள் இறுகி போனான். அவளும் அதை நினைத்து பார்த்தவளாய் தனக்குள் விதிர்த்து போய் அமர்ந்திருந்தாள். பிறகு மெல்ல கணவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிகளில் கண்ணீர் படலம்...

"கண்ணில் மழை

நெஞ்சில் இடி
மின்னல் எழ
அங்கும் இங்கும் நம்
நினைவுகள் வந்தாடுதே
கண்ணாடி மேல்
கல் வீசினோம் காலை
கீறும் ஓர் துகள் அது நம்
காதல் என்றானதே
என்னானதோ"

அபிஷரிகாவின் மனம் ஊமையாக அழுதது. சிறிது நேரத்திற்கு முன் அவளிடம் இருந்த கோபம் இப்போது சுத்தமாய் இல்லை. அவன் தன்னைப் பழிவாங்க துடிப்பதாய் எண்ணியிருந்த எண்ணம் இப்போது இல்லவே இல்லை. மாறாக வேறு ஏதோ ஒன்று அவளது மனதினை பாரமாய் அழுத்தியது. தவறு எங்கு நேர்ந்தது? என்று தெரியவில்லை. ஆனால் நேர்ந்துவிட்டது... அது மட்டும் அவளுக்கு நன்றாகப் புரிந்தது. ஏனோ அவளுக்கு வாய்விட்டு ஓவென்று கதறியழ வேண்டும் போலிருந்தது. ஆனால் அவள் இருக்கும் சூழல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. கணவனை ஏறிட்டு பார்க்க முடியாது ஏதோ ஒரு உணர்வு மனதினை அழுத்த... அவள் அழுகையை அடக்கி கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தாள். அவன் மேலே பேசியது எதுவும் அவளது காதில் விழவில்லை.

"இப்போது இந்தப் படத்தின் நாயகி மிஸ். அபிஷரிகா பேசுவார்கள்..." என்று கூறிய சிவகுமரன் திரும்பி மனைவியைப் பார்த்தான். அவளோ அவனது முகம் பார்க்காது வேறு எங்கோ வெறித்தபடி அமர்ந்திருந்தாள். அவளது அருகில் அமர்ந்திருந்த ரவி,

"மேம், சார் உங்களைத் தான் பேச கூப்பிடுகிறார்." என்று அவளிடம் கூற... அவள் தனது எண்ணங்களை ஒதுக்கி வைத்துவிட்டு மெல்ல எழுந்தாள்.

அவள் மைக்கை நோக்கி செல்லும் போது சிவகுமரன் அவளைத் தாண்டி சென்றான். இருவரது தோள்களும் பட்டும் படாமலும், உரசியும் உரசாமலும், தொட்டும் தொடாமலும் ஸ்பரிசித்து விலகி சென்றது. இருவருமே தங்களது இணையின் அருகாமையில் சற்று தடுமாறி தான் போனார்கள். அவன் மீதான அவளது கோபம், அவள் மீதான அவனது வெறுப்பு எல்லாம் அந்த நொடி காணாமல் போனது.

"அபி... அபி... அபி..." என்று கத்தியபடி கைத்தட்டிய ரசிகர்களின் உற்சாகக் குரலில் தன்னுணர்வு பெற்றவள் கணவனைத் தாண்டி மைக்கை நோக்கி நகர்ந்தாள்.

அவனும் பெருமூச்சுடன் தனக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த நாற்காலியில் வந்தமர்ந்தான். நாற்காலியில் தனது வலக்கை முட்டியை வைத்துக் கை விரல்களால் தாடையைத் தாங்கியபடி அவன் மனைவி ஆராய்ச்சியாய் பார்த்தான். புடவை கட்ட தெரியாதவள் இப்போது புடவை கட்டியிருந்தாள். முன்பிருந்ததை விட இப்போது அவள் சற்று குண்டாகி இருந்தாள். அது கூட அவனுக்குப் பெரிய குறையாகத் தெரியவில்லை. குண்டாக இருந்தாலும் கொழுக்மொழுக் என்று ஒரு அழகான குழந்தை போன்று அவள் இருந்தது மட்டுமே அவனது கண்களுக்குத் தெரிந்தது. அப்போது அவனது நினைவில் ஆகாஷின் தந்தை நந்தகுமாருடன் பேசியது ஞாபகத்திற்கு வந்தது.

சிவகுமரன் நந்தகுமாரை தேடி சென்ற போது அவர் அவனை எதிர்பார்த்தது போல் வரவேற்றது குறித்து அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

"நீங்க வருவீங்கன்னு எனக்குத் தெரியும் மிஸ்டர். சிவகுமரன்..." என்றவரை கண்டு அவன் சற்று வியப்புடன் ஏறிட்டான்.

"வீட்டில் உங்களுக்கு இரண்டாவது திருமணத்துக்கு ஏற்பாடு பண்றாங்க போலிருக்கு..." அவர் கேட்டதும் அவன் பெருமூச்சு ஒன்றை இழுத்து விட்டபடி,

"ஆமாங்க சார்... என் மகனே அப்படிச் சொல்லும் போது என்னால் மறுக்க முடியவில்லை." என்று மெல்ல கூறினான்.

"உங்களுக்கு இதில் விருப்பமா?" அவரது பார்வை அவனைத் துளைத்தெடுத்தது.

"தெரியலை... வாழ்க்கை போகிற வழியில் பயணிக்க நான் விரும்பறேன். என் சந்தோசத்தை விட மத்தவங்க சந்தோசத்துக்காக வாழ்றதுன்னு முடிவு பண்ணிட்டேன். அப்பவும் ஐயாவுக்காகத் தான் கல்யாணத்துக்குச் சம்மதிச்சேன். இப்பவும் ஐயாவுக்காகத் தான் கல்யாணத்துக்குச் சம்மதித்து இருக்கிறேன்."

"அப்போ இரண்டாவது திருமணத்துக்குத் தயாராகிட்டீங்க... அப்படித்தானே? ஓகே, லீவ் இட்..." என்றவர்,

"இப்போ எதுக்கு என்னைத் தேடி வந்திருக்கீங்க...?" என்று கேட்டவரது பார்வை மீண்டும் அவனைத் துளைத்தெடுத்தது.

"அது வந்து... அபி..." என்றவனுக்கு மேலே பேச முடியாது தொண்டை சதிராடியது.

"சொல்லுங்க... அபிக்கு என்ன?"

"அப்போ அபியை பத்தி நீங்க என்னவோ சொல்ல வந்தீங்க. அன்னைக்கு இருந்த மனநிலையில் நான் அதைக் காது கொடுத்து கேட்கலை. இப்போ அவள் எப்படி இருக்கிறாள்ன்னு எனக்குத் தெரிஞ்சாகணும்."

"எதுக்கு?"

"அவள் சந்தோசமா இருந்தால்... நானும் என் வாழ்க்கையைச் சந்தோசமா பார்த்து கொள்வேன். அதான்..."

"ம்... இது தான் காரணமா? அவள் சந்தோசமா இருக்கிறாளான்னு எனக்குத் தெரியலை. ஆனா நிம்மதியாக இருக்கிறாள்." அவர் கூறியதை கேட்டு

அவனது முகத்தில் வேதனை படர்ந்தது. அவனது விழிகளில் சொல்லொண்ணா வலி தெரிந்தது.

"என்னை விட்டு பிரிந்து இருப்பதில் அவளுக்கு அத்தனை நிம்மதி போலும்." அவன் இதைச் சொல்லும் போதே அவனது இதயம் முழுவதும் தாங்கொண்ணா வலி பரவியது. பின்பு எதையோ நினைத்தவனாய் அவனது முகத்தில் சட்டென்று ஒளி பரவியது.

"அப்போ உங்களுக்கு அபி இருக்கும் இடம் தெரியும். அப்படித்தானே...?" அவன் பரபரப்புடன் கேட்டதற்கு அவர் புன்னகையுடன் ஆமென்று தலையாட்டினார்.

"ம், தெரியும் சிவகுமரன்... அபி ஒரு கிராமத்தில் இருக்கும் கோவிலை சுத்தப்படுத்திக்கிட்டு நிம்மதியா வாழ்ந்துக்கிட்டு இருக்கிறாள்."

"என்னது...?" விசயம் கேள்விப்பட்டதும் அவன் அதிர்ந்து போனான்.

மலர் போன்று மென்மையாய் இருக்கும் மனைவியின் கரங்கள் விளக்குமாற்றைப் பிடிக்கின்றதா? ஊருக்கே வேலை கொடுத்தவரின் பேத்தி கோவிலை பெருக்கி சுத்தம் செய்கிறாளா? அவனுக்கு மிகவும் அதிர்ச்சியாக இருந்தது. அதே சமயம் சொல்ல முடியாத வலி ஒன்று அவனைத் தாக்கியதில் அவனது விழிகள் கலங்கி போனது.

"எங்கு இருந்தாலும் அவள் நன்றாக இருக்க வேண்டுமென்று தானே நினைத்தேன். இப்படியாகும்ன்னு நான் நினைக்கலையே." என்று அவன் விரக்தியாய்க் கூறினான்.

"வருத்தம் வேண்டாம் சிவகுமரன்... ஒரு கணவனாய் அபிக்கான கடமையை நீங்க செய்துக்கிட்டு தான் இருக்கீங்க." நந்தகுமார் அவனைத் தேற்றினார்.

"யார்...? நானா...? இல்லை மிஸ்டர். நந்தகுமார்... அவளுக்கு என்னைப் பிடிக்காதுன்னு எனக்கு நல்லா தெரியும்.

இருந்தாலும் திருமணப் பந்தத்தை நிலைத்திருக்க வைக்க வேண்டி நான் அவளை ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன். ஒரு வேலைக்காரனை அவளால் கணவனாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இதை நான் உணராது போனது என்னோட தூரதிர்ஷ்டம். அதனால் வந்த பிரிவு தான் இது. அவள் சொன்ன போதே பிரிந்திருந்தால் அவள் இத்தனை கஷ்டப்பட்டிருக்க வேண்டியது இல்லை. அவள் இப்படித் துன்பப்படுவதற்குக் காரணம் நான் தான்... நான் மட்டும் தான். இந்த லட்சணத்தில் நான் அவளுக்குக் கணவனாய் என்ன கடமை செய்தேன்?" அவனது இத்தனை நாள் வேதனை வார்த்தைகளாய் வெளிப்பட்டது. அதை உணர்ந்தவராய் நந்தகுமார் அமைதி காத்தார். பிறகு அவரே வாய்த் திறந்தார்.

"உங்களுக்கும், எனக்கும் தொழில் ஒப்பந்தம் நிறைய இருப்பது உங்களுக்கே தெரியும்." அவன் மௌனமாய்த் தலையசைத்து அதை ஆமோதித்தான்.

"அது போல் நமக்குள் நிறைய வரவு செலவுகள் இருக்கிறது." அதையும் அவன் ஆமோதித்தான்.

"அதில் ஒன்று தான் உங்களது கணவனது கடமை..." என்றவரை அவன் புரியாது பார்த்தான்.

"ஆம் மிஸ்டர். சிவகுமரன்... அபிக்கு மாதா மாதம் யார் சம்பளம் கொடுப்பது...? சாட்சாத் அவளது கணவன் நீங்கள் தான்." அதைக் கேட்டு சிவகுமரன் இனிய அதிர்வுடன் அவரைப் பார்த்தான்.

"சார்..."

"முன்பின் தெரியாதவங்களுக்குத் திடீர்ன்னு கோவிலில் எப்படி வேலை கிடைக்கும்? இதன் பின்னாடி இருந்தது நான்... அதைச் செயலாற்ற உதவியது உங்களது பணம்."

"ரொம்ப நன்றி சார்... இனி நான் பார்த்து கொள்வேன்." என்றவனது மனதில் எழுந்த நிம்மதிக்கு அளவே இல்லை. இத்தனை வருடங்களாய் அவனது மனதில் அழுத்தி

கொண்டிருந்த பாரம் இப்போது விடுபட்டது போன்று ஒரு உணர்வு... அவன் அவரிடம் விடைபெற்று எழும் போது அவர்,

"அன்று சொன்னதைத் தான் இப்போதும் சொல்கிறேன். அபி ஒரு புரியாத புதிர். அந்தப் புதிரை விடுவிக்க வேண்டியது உங்களது பொறுப்பு." என்க... அதைக் கேட்டு விரக்தியாய் சிரித்துக் கொண்டவன்,

"அதுக்கான தகுதி எனக்கு இல்லை சார். ஆனால் அபியை கொண்டாடும் உயரத்தில் வைக்க வேண்டியது எனது பொறுப்பு. அதை நான் நிச்சயம் செய்வேன்." என்றவன் அவரிடம் இருந்து விடைபெற்று வெளியில் வந்தான். அந்த நொடியில் இருந்து அவளது நலன் பற்றி மட்டுமே யோசித்து இதோ இப்போது அவளை அவளது கூட்டில் இருந்து வெளிக்கொண்டு வந்துவிட்டான். இனி அவளைப் பறக்க வைப்பது மட்டுமே மிச்சம்... நிச்சயம் ஒருநாள் அவன் அதையும் செய்வான். அந்த நம்பிக்கை அவனுக்கு வானளவு இருந்தது.

"உங்கள் அனைவரது அன்பிற்கு எனது நன்றிகள் பல... லவ் யூ ஆல்..." என்று அபிஷரிகா கூறியதற்குக் கூட்டமும்,

"லவ் யூ டூ..." என்று ஆர்ப்பரித்தது.

அந்தச் சத்தத்தில் சிவகுமரன் சுயவுணர்வுற்று நிகழ்காலத்திற்கு வந்தான். அதற்கு மேல் அவனுக்கு அங்கிருக்க முடியவில்லை. அதனால் இயக்குநர் ரவியிடம் மட்டும் கூறிவிட்டு விடைபெற்று கிளம்பிவிட்டான். அவன் மறந்தும் அபிஷரிகாவை திரும்பி பார்க்கவில்லை. அவனது குற்றவுணர்வு அவனைப் புறமுதுகிட்டு ஓட செய்தது.

அதைக் கண்டு அவள் தான் மனமும், விழிகளும் கலங்கினாள். விழா முடிந்து வீட்டிற்கு வந்தவளுக்கு இருப்பு கொள்ளவில்லை. அனைத்தும் வேண்டாம் என்று ஓட சொல்லி அவளது மனம் அவளுக்குக் கட்டளையிட்டது. அன்று முழுவதும் யோசித்தவள் இரவு வேளையில் அதைச்

செயல்படுத்த எண்ணி உடனே கணவனுக்கு அழைத்தாள். இத்தனை வருடங்களில் அவனது அலைப்பேசி எண் மாறியிருக்கக் கூடுமோ? என்கிற சந்தேகம் கூட அவளுக்கு இல்லை. நல்லவேளை அவன் தனது அலைப்பேசி எண்ணை மாற்றி இருக்கவில்லை. மறுமுனையில் அவன் எடுத்ததும் அவள் பேசாது மௌனம் காத்தாள்.

"என்ன விசயம் சொல்லு அபி?" தனது அலைப்பேசி எண் அவனுக்கு எப்படித் தெரியும்? என்று அவள் யோசிக்க மறந்தாள். ஏனெனில் அவள் ஊரை விட்டு கிளம்பும் போது பழைய அலைப்பேசி சிம் கார்டை உடைத்து போட்டுவிட்டு தான் போனாள். அங்கே போன பிறகு சுவாமிநாதன் பெயரில் புதுச் சிம் கார்டு ஒன்றை வாங்கிக் கொண்டாள்.

"இந்தப் படத்தில் நடிக்க எனக்கு விருப்பம் இல்லை..." அவள் கூறியதும் தான் தாமதம் மறுபக்கம் அவன் தாம்தூமென்று குதிக்க ஆரம்பித்து விட்டான்.

"பணம் என்ன மரத்திலா காய்க்கிறது? உன்னை இங்கே வரவழைத்தது முதல் இதோ இப்போது நீ குடியிருக்கும் வீடு, உனக்குத் தேவையானது அனைத்தும் செய்தது என் பணத்தில்... முதலில் அதை ஞாபகத்தில் வைத்து கொள்." அவன் மிரட்டலாய் கூறியதும் மறுபக்கம் இருந்தவளுக்கு இயலாமையில் கண்ணீர் வந்துவிட்டது.

தயாரிப்பு நிறுவனம் சிவகுமரனுடையது என்று தெரியாது, தெரிந்து கொள்ளும் ஆர்வம் இல்லாது ரவியின் கதையை மட்டும் நம்பி ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டது எவ்வளவு பெரிய பிழை என்பதை இப்போது அவள் உணர்ந்தாள். சுவாமிநாதன் படித்துப் பார்த்து விட்டு தான் அவளிடம் கொடுத்தார். அந்த நம்பிக்கையில் தான் அவளும் கையெழுத்திட்டது. பாவம் அவருக்கு என்ன தெரியும், தயாரிப்பு நிறுவனம் சிவகுமரனுடையது என்று...

"ஒண்ணு, எனக்கான பணத்தைச் செட்டில் பண்ணிட்டு இந்தப் படத்தில் இருந்து விலகிக்கோ. இல்லை, படத்தில் நடிச்சு கொடுத்துட்டு விலகி போ." என்று மீண்டும் தன்னிடத்தில் காய்ந்தவனைக் கண்டு,

'உனக்குப் பணம் தான் முக்கியமா போயிற்றா சிவு? நானில்லையா?' என்று தனக்குள் கேள்வி கேட்டு கொண்டவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"இந்தப் படத்தைப் பொறுத்தவரை நான் வைத்தது தான் சட்டம். மைன்ட் இட்..." என்று அவளை எச்சரித்தவன்,

"இன்னும் இரண்டு நாளில் ஷூட்டிங் இருப்பது ஞாபகம் இருக்கும்ன்னு நினைக்கிறேன். முரண்டு பிடிக்காம தயாராகு." என்றவன் அவளது பதிலை கூட எதிர்பாராது அலைப்பேசியை வைத்துவிட்டான்.

அபிஷரிகா திகைப்புடன் அலைப்பேசியைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். இரவு வேளை என்பதால் நன்கு இருட்டியிருந்தது. ஒரு காலத்தில் இருட்டு என்றால் பயந்து நடுங்கிய அபிஷரிகா இப்போது இருட்டில் அமர்ந்திருப்பதைக் கூட உணராது தன்னினைவு இல்லாது இருந்தாள்.

தோட்டத்தில் நின்று கொண்டிருந்த சிவகுமரனோ மனதின் கொதிப்பை அடக்க முடியாது கைகளைக் கட்டி கொண்டு இருண்ட வானை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் படத்தில் நடிக்க மாட்டேன் என்று கூறியது கேட்டு அவனுக்குக் கோபம் வந்தது என்றால்... தான் பெற்ற மகனை கூட விசாரிக்காது தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்கும் மனைவியைக் கண்டு அவனுக்கு ஆத்திரம் அதிகரித்தது.

அவனது ஒரு மனது அவள் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்தது. இன்னொரு மனதோ 'ப்ரஷன் பிறந்த உடனேயே வேண்டாம் என்று தூக்கி போட்டவள் அவள்... அவள் எப்படி அவனுடைய நலத்தைப் பற்றி விசாரிப்பாள்? நீயாய் மனக்கோட்டை கட்டி கொள்ளாதே.' என்று அவனை எச்சரித்தது.

"குமரா... இந்த நேரத்தில் இங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க?" பொன்னம்பலம் குரலில் அவன் திரும்பி பார்த்தான்.

"நீங்க தூங்கலைங்களா ஐயா?"

"இல்லைப்பா... கொஞ்ச நேரம் தோட்டத்தில் நடக்கலாம்ன்னு வந்தேன். அது இருக்கட்டும்... நான் உன் கிட்ட பேசணும் குமரா..."

"சொல்லுங்கய்யா..."

"நீ எதுக்கு அபிக்கு உதவி பண்ற?" அவருக்கும் விசயம் தெரிந்திருந்தது. அதற்கு அவன் பதில் பேசாது தலைகுனிந்தபடி அமைதியாக இருந்தான்.

"அவள் என் பேத்தி தான்... அதுக்காக அவள் செய்த தவறுகள் எல்லாம் சரியாகி விடாது. அவளது குணம் தெரிஞ்சும் நான் உன் வாழ்க்கையைப் பாழாக்கியதை நினைச்சு வருந்தாத நாள் கிடையாது. அப்படிப்பட்டவளுக்கு நீ ஏன் உதவி பண்ற? இது எனக்குச் சுத்தமா பிடிக்கலை." அவர் தனது எண்ணத்தை அவனிடம் அப்படியே கூறினார். அதற்கும் அவன் பதில் பேசவில்லை.

"ஒருவேளை உன்னால் அபியை மறக்க முடியவில்லையா குமரா?" அவரது குரல் சற்று அதிர்வுடன் ஒலித்தது. அதைவிட அதிர்வுடன் அவன் அவரை ஏறிட்டுப் பார்த்தான்.

அவள் அவனைக் காதலித்தாளா? இல்லையா? என்பது அவனுக்குத் தெரியாது. ஆனால் அவனது காதல் உண்மையே... அவனது ஆழ்மனதில் அதன் இனிமையான சுவடுகள் இன்னமும் எச்சமாய் மிச்சம் இருக்கிறதே! அவன் அவளுடன் வாழ்ந்த காலங்கள் நிச்சயம் இனிமை நிறைந்து இருக்கவில்லை தான்... ஆனால் அவன் அதையே பொக்கிசமாய் எண்ணி பாதுகாக்கின்றானே! நெஞ்சிற்குள் ஏதோ ஒரு இம்சை எழுந்து அவனை உயிரோடு கசக்கி பிழிந்தது. அவன் வலக்கையால் தனது நெஞ்சினை நீவி விட்டுக் கொண்டான்.

எல்லாவற்றிற்கும் மௌனத்தைப் பதிலாகக் கொடுத்த சிவகுமரனை வேதனையுடன் பார்த்த பொன்னம்பலம், "உன் நல்ல மனசுக்கு நல்லதே நடக்கும்." என்றவர்,

"உனக்கு ஏத்த மாதிரி ஒரு வரன் வந்திருக்கு. பொண்ணு டாக்டர்... இதுநாள் வரை கல்யாணத்தில் விருப்பம் இல்லாம இருந்தாளாம். உன் ஃபோட்டோவை பார்த்ததும் உடனே சரின்னு சொல்லிட்டாளாம். நாளைக்கே பொண்ணு பார்க்க போகலாமா?"

அவரது வார்த்தைகளில் அவன் அதிர்ச்சியுற்றவனாய் அவரைப் பார்த்தவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு, "இந்தப் படம் நல்லபடியா எடுத்து முடிஞ்சதும் கல்யாணத்தைப் பத்தி யோசிக்கலாம் ஐயா." என்று உறுதியான குரலில் கூறியவன் வீட்டை நோக்கி நடந்தான்.

பொன்னம்பலம் வருத்தத்துடன் அவனைப் பார்த்திருந்தார். அதைவிட வேதனை தனது பேத்தியை நினைத்ததும் எழுந்தது. அவளது தலைமறைவு வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொண்டவர் உள்ளுக்குள் நொறுங்கி போனார்.

'ஏன் அபி இப்படிப் பண்ணின? உனக்கு என்ன குறை? குமரன் மாதிரி கணவன் கிடைக்க நீ கொடுத்து வச்சியிருக்கணும். அதை விட ப்ரஷன் மாதிரி ஒரு மகன் கிடைக்க நீ தவம் பண்ணியிருக்கணும். எல்லாத்தையும் இழந்துட்டு நீ என்ன சாதிச்ச?' அவர் மானசீகமாகப் பேத்தியுடன் சண்டையிட்டார்.

பேத்தி மீது பாசம் இருந்த போதும்... தனது வார்த்தைக்காக வாழ்க்கையை இழந்து தவிக்கும் சிவகுமரன் அவருக்குப் பெரிதாகத் தெரிந்தான். இப்போதைக்கு அவனது நலன் மட்டுமே அவருக்குப் பெரிதாக இருந்தது.

வீட்டிற்குள் நுழைந்த சிவகுமரனை கண்டு அவன் முன் வந்த காவேரி தனது இரு கரங்களால் அவனைக் கும்பிட்டார். அவரது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"அம்மா, என்னம்மா இது?" அவன் பதற்றதுடன் அவரது கைகளைக் கீழே இறக்கினான்.

"நீ செய்திருக்கும் உதவியை என் உயிர் இருக்கும் வரை மறக்க மாட்டேன் குமரா."

"அம்மா..." அவன் பேச வார்த்தை இல்லாது நின்றிருந்தான்.

"அபி உனக்கு நல்ல மனைவியா, ப்ரஷனுக்கு நல்ல அம்மாவா இல்லாது இருக்கலாம். ஆனா அவள் என்னோட உயிர்ப்பா... தப்பே செய்திருந்தாலும் அவள் என்னுடைய பேத்தி... அவளை எப்படி நான் விட்டு கொடுக்க முடியும்? யாருமே இல்லாத அநாதையா கோவிலை சுத்தம் பண்ணிட்டு இருந்திருக்கிறாள் என் பேத்தி. இதைப் பார்க்கவா நான் உயிரோடு இருக்கேன்?" அவர் புடவை தலைப்பால் முகத்தை மூடி கொண்டு அழுதார்.

"அம்மா, என்னை மன்னிச்சிருங்கம்மா... எல்லாம் என் தவறு தான்... நான் தான் தப்புப் பண்ணிட்டேன். இனி நானே இதைச் சரி பண்றேன்." அவன் கூறியதை கேட்டு அவர் நம்பிக்கையுடன் அவனை நிமிர்ந்து பார்த்தார். அவர் நினைத்ததோ ஒன்று... அவன் நினைத்ததோ வேறொன்று...!

"அபி பத்தின கவலையை விடுங்க. நான் பார்த்துக்கிறேன்." அவன் உறுதி அளிக்கவும் அவர் நிம்மதியுடன் அங்கிருந்து அகன்றார்.

சிவகுமரன் தனக்குள் யோசித்தபடி தனது அறையை நோக்கி நடந்தான். அவன் அறைக்குள் நுழைந்த போது ப்ரஷன்ஜித் எதையோ எழுதி கொண்டிருந்தான்.

"இன்னும் தூங்கலையா ப்ரஷன்...?"

"உங்களுக்காகத் தான் வெயிட்டிங்ப்பா..." என்ற ப்ரஷன்ஜித் தனது கையிருந்த புத்தகத்தை அருகில் இருந்த மேசை மீது வைத்தான். மகனை வாரியணைத்துக் கொண்டு படுக்கையில் படுத்த சிவகுமரன் நெஞ்சில் சாய்ந்திருந்த மகனின் தலையை வருடி விட்டவாறே,

"உனக்கு அம்மாவை பார்க்கணும் போலிருக்கா...?" என்று கேட்க... சின்னவன் அண்ணாந்து தந்தையின் முகத்தைப்

பார்த்தான். தந்தையின் முகம் என்றும் இருப்பது போல் மலர்ச்சியுடன் இல்லாது சற்று சோகத்துடன் இருப்பதை உணர்ந்து,

"இல்லப்பா..." என்றான் தனது மனதினை மறைத்துக் கொண்டு...

அவனுக்குத் தாயின் புகைப்படத்தையாவது பார்க்க வேண்டும் என்கிற ஆவல் நிரம்ப உண்டு. ஆனால் தன்னுடைய ஆவல் தந்தையைக் கஷ்டப்படுத்தும் என்றுணர்ந்து அவன் அதைப் பற்றித் தந்தையிடத்தில் கேட்காது இருக்கின்றான். தனக்கு எந்தளவிற்குத் தாய் முக்கியமோ... அதே அளவு தந்தைக்கு மனைவி அவசியம் என்பதை அந்த இளம் வயதில் அவன் உணர்ந்திருந்தான். அதனால் தான் தந்தையின் இரண்டாவது திருமணத்திற்கு அவன் சம்மதம் சொன்னது. ஆனால் இரண்டுமே ஒன்று தான் என்பதினை அறியும் வயது அவனுக்கு இல்லை.

மகனது பதிலில் நிம்மதியுற்ற சிவகுமரன் அவனை இறுக அணைத்துக் கொண்டான். சின்னவனும் தந்தையின் அரவணைப்பில் நிம்மதியாக உறங்கினான். அங்கே சிவகுமரனின் இன்னொரு சேயோ தூக்கத்தைத் தொலைத்துவிட்டு நிர்கதியாய் தனியே துக்கத்துடன் அமர்ந்திருந்தது.

*************************

படப்பிடிப்பிற்காக அபிஷரிகா சென்ற இடம் அவளது சொந்த கிராமமே... ரவியிடம் அவள் எவ்வளவோ கேட்டு பார்த்து விட்டாள். அங்கே எதற்கு? என்று...

"மேம், இந்தப் படத்துக்குத் தேவையான லொகேசன் அங்கே தான் இருக்கு. சிவகுமரன் சார் தான் அந்தக் கிராமத்தை ரெக்கமெண்ட் பண்ணினார். நம்ம படப்பிடிப்புக்கு எந்தத் தொந்தரவும் இருக்காதுன்னு சொன்னார். புரொடியூசர் அவர் பேச்சை நான் தட்ட முடியாது மேம்." ரவி கூறியதை கேட்டு அவள் தான் பல்லை கடிக்க வேண்டியதாய் போயிற்று.

கிராமத்திற்கு அவள் பயணிக்கும் போது சிவகுமரனுடன் தான் சென்ற கார் பயணங்கள் அவளுக்கு ஞாபகத்திற்கு வந்தது. விழிகள் கரித்துக் கொண்டு வர... அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அமைதியாக வந்தாள். பட்டு மாமி ஊருக்கு கிளம்பி சென்றுவிட்டார். இப்போது அவளுடன் அவளது மேலாளர், அவளது ஒப்பனை கலைஞர் ரஞ்சனி இருவரும் வந்தனர். ரஞ்சனி இப்போது அழகு நிலையம் வைத்து நடத்தி கொண்டிருக்கிறாள். அபிஷரிகா மீண்டும் நடிக்க வந்ததை அறிந்து கொண்டு அவள் மீண்டும் அபிஷரிகாவிடம் வேலைக்குச் சேர்ந்துவிட்டாள். மேலாளரும் அப்படியே...

முதல் நாள் படப்பிடிப்பு இன்று நடைபெறவிருக்கிறது... அந்த நேரம் பார்த்து சிவகுமரன் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் அபிஷரிகாவின் விழிகள் வியப்பில் விரிந்தது. ஆனால் அவள் எதையும் வெளிக்காட்டி கொள்ளவில்லை. அவனும் அவளைக் கண்டு கொண்டது போல் தெரியவில்லை. நேரே வந்தவன் ரவியிடம் ஏதோ பேசினான். பின்பு நாற்காலியில் அமர்ந்து படப்பிடிப்பு வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தான்.

இந்தத் திரைப்படத்தில் அபிஷரிகா ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பெண்... ஆனால் கிராமத்தில் இருக்கும் மக்களுக்கு அவளது நிலை பற்றி முழுமையாகத் தெரியவில்லை. அந்தளவிற்கு விழிப்புணர்வு அவர்களுக்கு இல்லை. அதனால் அவளைப் பைத்தியம் என்றே குறிப்பிட்டனர். அவளுக்குத் திருமண வயது வந்ததும் அவளுக்குத் திருமணம் செய்தால் பைத்தியம் தெளிந்துவிடும் என்றெண்ணி அவளுக்குத் திருமணம் செய்துவிக்க நினைக்கின்றனர் அவளது வீட்டினர். வேறு யாரும் அவளைத் திருமணம் செய்ய முன் வராததால் அவளை அவளுடைய சொந்த தாய்மாமனுக்கே திருமணம் செய்து வைக்கின்றனர்.

இப்போது முதலிரவு காட்சியை எடுப்பதற்காக எல்லோரும் தயாராக இருந்தனர். அபிஷரிகா பட்டுப்புடவை உடுத்தி மணப்பெண் போன்று இருந்தாள். அவள் தனது விழிகளில்

மிரட்சியையும், அவளது உடல்மொழியில் அச்சத்தையும் கொண்டு வந்து அச்சு அசல் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட பெண்ணாய் அவள் உருமாறி கேமிரா முன் நின்றிருந்தாள். அவளுக்குக் கணவனாக நடிக்கிறவன் அவளது பயத்தைப் பொருட்படுத்தாது தனது உடல் பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டி அவளை அணைக்க முயல... அவளோ பயத்தில் அலறியடித்துக் கொண்டு கூக்குரலிட்டு கத்தியபடி அந்த அறையைச் சுற்றி சுற்றி வந்தாள். அவர்களது நடிப்பை அழகாக அந்தக் கேமிரா உள்வாங்கிக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அந்த நடிகன் அவளது இரவிக்கையைப் பற்ற முயல... அவள் அவனிடம் இருந்து தப்பிக்க முயன்ற போது இரவிக்கையின் பின்பக்க சிறு துண்டு ஒன்று அப்படியே கிழிந்து அவனது கையோடு வந்தது.

அவ்வளவு தான் சிவகுமரன் கோபமாய் எழுந்தவன் தான் அமர்ந்திருந்த நாற்காலியை ஆத்திரத்துடன் எட்டி உதைத்தவன் நேரே அந்த நடிகர் முன் வந்து அவனது சட்டையைப் பிடித்தான்.

"உன்னை நடிக்கத் தானே சொன்னது..." என்று ஆக்ரோசமாய்க் கூறியபடி அவனது கன்னத்தில் பளாரென்று ஓங்கி ஒரு அறை விட்டான். பின்பு தனது சட்டையைக் கழற்றி அபிஷரிகாவிடம் கொடுத்தவன் பெரும் கோபத்துடன்,

"ஒரு நொடி நீ இங்கே இருக்கக் கூடாது. போ இங்கிருந்து..." என்று அங்கிருந்த வாயிலை நோக்கி தனது கையைக் காட்டினான்.

அபிஷரிகாவோ கணவன் கொடுத்த சட்டையைப் பற்றிக் கொண்டு அவனைத் திகைப்புடன் பார்த்திருந்தாள். இத்தனை நாள் அவளிடத்தில் இருந்த பாதுகாப்பின்மை உணர்வு அந்த நொடி அவளை விட்டு அகன்றது. போர்த்திருந்த கணவனது சட்டை அவனது வலிமையான அணைப்பை ஞாபகப்படுத்தியது. சட்டை காலரை இறுக பற்றிக் கொண்டவள் அதை நாசியில் வைத்து ஆழமாகச் சுவாசித்தாள். கணவனது வாசம் மட்டுமா நாசியில்

ஏறியது... அவனது காதலும் சேர்ந்தல்லவா அவளது மனதில் ஏறியது...!!!

தொடரும்...!!!

# அத்தியாயம் : 16

"இன்னும் என்ன வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க... போ..." மீண்டும் கத்திய சிவகுமரனின் கூச்சலில் அபிஷரிகா தனது மோனநிலையில் இருந்து வெளிவந்தவள் அவசரமாக அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

"ரவி..." சிவகுமரன் அலறியதில் இயக்குநர் ரவி அங்கே ஓடி வந்தான்.

"என் கிட்ட என்ன கதை சொன்ன? இப்போ என்ன பண்ணிக்கிட்டு இருக்க...?" அவனது ஆக்ரோசம் தாங்காது ரவி விழித்தான்.

"சார்... இந்தச் சீன் கதைக்குத் தேவை. அப்போ தான் மேடமோட கரெக்டர் மேல் மக்களுக்குப் பரிதாபம் வரும். அவங்க கரெக்டர் இன்னும் அழுத்தமா மக்கள் மனசில் பதியும். அதனால் தான்..."

ரவி மென்று விழுங்கி கொண்டே விளக்கம் சொல்லவும் சிவகுமரனின் கோபம் சற்று கட்டுக்குள் வந்தது. அவன் இயலாமையுடன் தனது தலை கேசத்தைக் கோதி கோபத்தை அடக்கி கொண்டவன் பின்பு திரும்பி தான் அடித்த அந்த நடிகரை பார்த்தான். புது நடிகர்... அதனால் தான் அவன் இவன் கொடுத்த அறையை வாங்கிக் கொண்டு அமைதியாக நின்றான். இந்த இடத்தில் வேறு ஒருவர் இருந்திருந்தால் நடப்பதே வேறு. அவனுக்கு வாழ்க்கையில் முன்னேற வேண்டும்... அதனால் அவனுக்கு இந்த அறை எல்லாம் பெரிதாகத் தெரியவில்லை. மாறாக இந்தப் படத்தில் இருந்து தன்னைத் தூக்கி விடுவார்களோ? என்கிற பயத்தில் அவன் நின்றிருந்தான். சிவகுமரன் அவனைத் தனது அருகில் வரும்படி சைகை செய்தான்.

"சார்..." அவன் பவ்யத்துடன் அழைத்தபடி பணிவாக வந்து நின்றான்.

"ஏதோ டென்சனில் தெரியாம..." சிவகுமரனுக்கு என்ன சொல்வது? என்று தெரியவில்லை.

"என் மேலும் தப்பு தான் சார்... முதல் படம் என்பதால் சீன் நல்லா வரணும்ன்னு கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு நடிச்சிட்டேன்." என்றவனது முதுகில் தட்டி கொடுத்த சிவகுமரன்,

"இட்ஸ் ஓகே... இனிமேல் பார்த்து கவனமாயிரு... என்னோட படத்தில் பெண்களை இழிவுப்படுத்தும் செயலை நான் அனுமதிக்க மாட்டேன்." என்றவன் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

அந்தச் சூழ்நிலையிலும் சிவகுமரன் அவனிடம் மன்னிப்பு கேட்கவில்லை. கேட்கவும் விரும்பவில்லை. அது தான் உண்மை. ஏனெனில் அந்த நடிகர் செய்தது தவறு... அதை ஊக்குவிக்க அவன் விரும்பவில்லை. கால் போன போக்கில் நடந்தவன் சற்றுத் தள்ளியிருந்த மரத்தின் அடியில் வந்து நின்றான். என்ன முயன்றும் அவனது மனம் சமாதானம் அடைய மறுத்தது. அவன் கண் முன்னே அவன் மனைவியை... அது நடிப்பே என்றாலும் அவனால் ஜீரணிக்க முடியவில்லை. அவன் இயலாமையுடன் கை முஷ்டியை இறுக்கி வேகமாய்த் தனது தொடையில் அடித்துக் கொண்டான்.

அபிஷரிகா தனது உடையை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தவளின் கைகளில் சிவகுமரனின் சட்டை இருந்தது. அவள் அவனைத் தேடிய போது அவன் மரத்தடியில் நின்றிருப்பது தெரிந்து அவள் அங்கே சென்றாள். அவன் உள்பனியனோடு கைகள் இரண்டையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி கற்சிலையாய் நின்றிருந்தவிதம் அவளது மனதினை தடுமாறச் செய்தது. அவனது பரந்து விரிந்த முதுகில் முகம் புதைத்து அப்படியே காலம் முழுவதும் இருக்க வேண்டும் என்கிற எண்ணம் பெரும் ஆவலாக உருமாறத் துவங்கியது. தனது எண்ணம் போகும் திசையறிந்து அவள் திடுக்கிட்டு போனாள்.

'என்னயிருந்தாலும் சிவூ என் கணவன் தானே. எனது எண்ணத்தில் என்ன தவறு இருக்கிறது?' அவளது மனம் அவளிடம் சப்பைக்கட்டுக் கட்டியது. முயன்று மனதிற்குக் கடிவாளமிட்டவள் அவன் அருகில் சென்று,

"ம்க்கும்..." என்று தொண்டையைக் கனைத்தாள். அவளது சத்தத்தில் அவன் திரும்பி பார்த்தான். அவள் உடையை மாற்றியிருப்பதைக் கண்டு அவனது விழிகளில் மெச்சுதல் வந்து போனது. பின்பு அவளைப் பார்த்து,

"என்ன?" என்று முகத்தை இறுக்கமாய் வைத்துக் கொண்டு கேட்டான்.

"உங்க சட்டை..." என்று அவள் அவனது சட்டையை அவனிடம் நீட்ட... அவன் ஒன்றும் பேசாது அதை வாங்கிக் கொண்டான். திரும்பி போக எத்தனித்தவள் பின்பு நின்று,

"இது வெறும் சாதாரண நடிப்பு தான். இதுக்காக இவ்வளவு உணர்ச்சிவசப்படத் தேவையில்லை." என்று கூற...

"நடிப்பு என்றாலும் ஒரு வரைமுறை இருக்கு..." அவன் சட்டென்று கோபமாய்க் கூறினான். அவனது கோபம் கூட அவளுள் சாரல் மழையாய் இதமாய் இறங்கியது. அவனது ஒவ்வொரு செயலிலும், சொல்லிலும் தனக்கான அக்கறை இருப்பதை அவள் மெல்ல புரிந்து கொண்டாள். இதை உணராது அவள் செய்த பிழை தான் எவ்வளவு...! அவளுக்கே தன் மீது வெறுப்பாய் வந்தது.

"இருக்கலாம்... ஆனால் திரைத்துறை ஆண்களின் உலகம். இதைவிட மோசமாய் நான் நடித்து இருக்கிறேன். இங்கு யாரையும் மாற்ற முடியாது. ஆண்கள் தங்களின் பார்வையை மாற்றிக் கொண்டால் மட்டுமே மாற்றம் நிகழும்..." என்றவள் அங்கிருந்து சென்றுவிட்டாள்.

அவளது வார்த்தைகள் அவனுள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவள் செல்வதைப் பார்த்தபடி தனது கையிலிருந்த சட்டையை அவன் அணிந்து கொண்டான். அப்போது தான் அந்த வித்தியாசமான நறுமணத்தை

அவன் உணர்ந்தான். மனைவியின் இயற்கை நறுமணமும், அவள் தலையில் சூடியிருந்த மல்லிகைப்பூவின் நறுமணமும் கலந்த ஒருவித இனிமையான, சுகந்தமான வாசனை அவனது நாசியில் ஏறியது. வெகுநாட்களுக்குப் பிறகு மனைவியின் அருகாமையை ஞாபகப்படுத்திய நறுமணத்தை அவனால் வெறுக்க முடியவில்லை. அவன் அவளது வாசத்தை ஆழ்ந்து சுவாசித்துத் தன்னவளை தன்னுள் நிரப்பிக் கொண்டான்.

மீண்டும் படப்பிடிப்பு நடக்கும் சத்தம் கேட்டு சிவகுமரன் அங்குச் சென்றான். மீண்டும் அதே காட்சி... இப்போது சற்று கண்ணியத்துடன்... ஆனாலும் பெண்ணவளின் அந்த நேர வேதனையை அபிஷரிகா தத்ரூபமாய் நடிக்க... அந்தக் காட்சியைக் காமிரா கவனத்துடன் தன்னுள் பதிந்து கொண்டது. அதைக் கண்டு கொண்டிருந்த சிவகுமரனின் மனதில் அவளும், தானும் ஓருயிராய் கலந்த தாம்பத்தியம் நினைவில் எழுந்தது. அன்று அவளது விழியோரம் வழிந்த கண்ணீர் இப்போது அவனை உயிரோடு சுட்டது. அதற்கு மேல் அங்கிருக்க முடியாது எழுந்தவன் தனது இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டான்.

அபிஷரிகா சிவகுமரனை பற்றி எண்ண முடியாத அளவிற்கு அவளது வேலைப்பளு இருந்தது. தொடர்ந்து அவள் நடித்துக் கொண்டிருந்தாள். இரவு மட்டுமே அவள் கொஞ்சம் ஓய்வாக இருந்தாள். அப்போது சிவகுமரனின் ஞாபகம் வந்தது. அவனைப் பற்றி யோசித்தபடி படுத்தவள் அப்படியே உறங்கி போனாள். மறுநாள் அவள் எழுந்து படப்பிடிப்பிற்குத் தயாராக வந்தாள். அங்குச் சிவகுமரன் இல்லாததை உணர்ந்தவள் அமைதியாகத் தனது காட்சிகளை நடிக்கத் துவங்கினாள். அவளது காட்சி முடிந்து அவளுக்குச் சிறிது நேரம் ஓய்வு அளிக்கப்பட்டது. அப்போது ரவி அங்கிருந்த ஒருவனிடம்,

"சிவகுமரன் சாருக்கு சாப்பாடு கொடுத்துட்டு மாத்திரையைப் போட சொல்லிவிட்டு வா..." என்று அனுப்பி வைத்தான். அதைக் கேட்டு அபிஷரிகாவால் அமைதியாக இருக்க முடியவில்லை.

"சாருக்கு என்ன ரவி?" என்று ரவியிடம் கேட்டே விட்டாள்.

"என்னன்னு தெரியலை மேம்... காய்ச்சலா இருக்கு..." என்று அவன் பதில் கூறிவிட்டு தனது வேலையைப் பார்க்க துவங்க... உணவு கொடுக்கச் சென்றவன் திரும்பி வந்ததும் அவள் மனம் தாங்காது கணவனைத் தேடி சென்றாள்.

ஆம், சிவகுமரன் நேற்று நடந்த சம்பவத்தையும், அவனது வாழ்க்கையையும் ஒப்பிட்டு பார்த்து மனதை போட்டு உழட்டி கொண்டதில் அவனுக்குக் கடும் காய்ச்சல் வந்துவிட்டது.

அவளது தாத்தா வீட்டில் அவளுடைய அறையைத் தான் அவளுக்குக் கொடுத்திருந்தான் சிவகுமரன். இதிலும் அவன் அவள் மேல் தனி அக்கறை செலுத்தினான். கிராமத்துச் சொத்துக்களை விற்று தான் அவள் ஏற்படுத்தியிருந்த கடனை எல்லாம் அடைத்தனர் என்பது அவளுக்குத் தெரியும். ஆனால் இதை எல்லாம் எப்படி மீண்டும் வாங்கினான்? என்பது அவளுக்குத் தெரியாது. அதை நினைத்தவளுக்குத் தன் மீதே கோபம் வந்தது. தன்னால் எத்தனை பேருக்குக் கஷ்டம் என்று...

சிவகுமரன் தங்கியிருந்த அறை கதவை தள்ளி பார்த்தாள்... அது தானாகத் திறந்து கொண்டது. உள்ளே நுழைந்தவளின் இதயம் பயத்தில் எகிறி துடிக்க ஆரம்பித்தது. முன்பிருந்த அபிஷரிகா என்றால் உரிமை பிரச்சனையைக் கிளப்பி அவனை அலற வைத்திருப்பாள். ஆனால் இவள் வேறு... அவள் மெல்ல நடந்து அவன் அருகில் வந்து நின்று அவனைப் பார்த்தாள். போர்வையைப் போர்த்தியபடி படுத்திருந்தவனின் முகம் மட்டுமே தெரிந்தது. மூக்கு நுனியும், உதடுகளும் சிவந்து போய் இருந்தவனைப் பார்த்த மாத்திரமே அவளுக்குப் புரிந்து போனது... அவனுக்கு அதிகப்படியான காய்ச்சல் இருப்பதை. அவள் அவனது நெற்றியில் கை வைத்து பார்த்தாள். அவனது உடல் அப்படிக் கொதித்தது. அதைக் கண்டு அவள் மனம் பதைத்து போனாள்.

அப்போது சிவகுமரன் மனைவியின் ஸ்பரிசத்தை உணர்ந்தவனாய், "அம்முலு..." என்று மெல்லமாய்

முனங்கினான். அதைக் கேட்டு திகைத்தவள் சட்டென்று தனது கையை எடுத்து கொண்டாள். சுயநினைவு இல்லாத நிலையிலும் அவன் தன்னை உணர்கிறான் என்றால்...??? ஏனோ அவளுக்கு வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது. கேவலாய் வெடிக்கப் பார்த்த பெரும் அழுகையை வாய் பொத்தி அடக்கி கொண்டவள் அந்த அறையை விட்டு வெளியில் ஓடி வந்து நேரே தனது அறைக்குச் சென்றவள் முகத்தை மூடி கொண்டு வாய்விட்டு கதறியழ ஆரம்பித்தாள். இத்தனை நாள் அவள் இழந்த இழப்பின் வலியை தனது கண்ணீரில் கரைத்தாள்.

அவள் இழந்த இழப்புத் துரோகமாக இருந்திருந்தால் இந்தக் கண்ணீருக்கு அவசியமில்லை. ஆனால் அது காதலாக அல்லவா இருக்கிறது. எந்தக் காதலை அவனது வாய்மொழியாகக் கேட்க ஆசைப்பட்டாளோ... அதை அவன் செயல்மொழியாய் செய்ததை உணராத பேதையாய் அவள் இத்தனை நாள் இருந்திருக்கிறாளே. தவறு தன்னிடம் தானோ??? அவளுக்கு யோசிக்க யோசிக்க அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது.

மனைவியின் ஸ்பரிசத்தை உணர்ந்த சிவகுமரன் திடுக்கிட்டு விழிகளைத் திறந்தான். அந்தோ பரிதாபம்....! யாருமில்லாத வெற்று அறையைக் கண்டு அவன் விரக்தியுடன் மீண்டும் விழிகளை மூடி கொண்டான். அக்கறைக்கும், அவனது மனைவிக்கும் காத தூரம் என்பதனை அவனது அறிவு எடுத்து கூறிய போதும், அவனது ஆசை கொண்ட மனதோ அவளது அருகாமையை மிகவும் எதிர்பார்த்தது. மீண்டும் அவளது ஸ்பரிசத்தை நினைவுக்குக் கொண்டு வந்தவன் அப்படியே படுத்திருந்தான். சில சமயங்களில் கற்பனை கூடச் சுகமானது தான் போலும்...!!!

நிழலும், நிஜமும் அவனைச் சுட்டெரித்ததில் அவன் வாரி சுருட்டி கொண்டு எழுந்தமர்ந்தான். கானல் நீர் என்று தெரிந்திருந்தும் அவளை நினைத்து ஏங்குவது முட்டாள்த்தனம் என்று தன்னைத் தானே கடிந்தவன் ஊருக்கு கிளம்ப ஆயத்தமானான். இன்னும் இங்கே

இருந்தால் அவன் தனக்குள் போராடி போராடி அவளிடமே சரணாகதி அடைந்து விடுவான். மீண்டும் அவளது உதாசீனத்தைத் தாங்கும் சக்தி அவனுக்கு இல்லை.

'உன்னை யார் அவளை நினைக்கச் சொன்னது? அவளை மேலே ஏற்றிவிட நினைத்தாய்... அந்த வேலையை மட்டும் பார். தேவையில்லாத எண்ணங்களுக்கு இடம் கொடாதே!' அவனது மனசாட்சி அவனை எச்சரித்தது. அது தான் நல்லது என்று நினைத்தவன் தனது உடமைகளை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து காரிலேறினான்.

கார் கதவு திறக்கும் சத்தத்தில் நிமிர்ந்த அபிஷரிகா ஜன்னலின் ஊடே வெளியில் பார்த்தாள். அங்குச் சிவகுமரன் காரிலேறுவதைக் கண்டு மனம் பதைத்து போனவளாய் வெளியில் ஓடி வந்தாள். அவள் வருவதற்குள் அவன் காரை கிளப்பிச் செல்ல... காய்ச்சலை வைத்துக் கொண்டு எங்கே செல்கின்றான்? என்று அவள் மனம் பதறியவளாய் காரின் பின்னேயே ஓடினாள்.

தனக்குள் உழன்றபடி காரை ஓட்டி கொண்டு சென்றவன் தன்னிச்சையாக முன்னிருந்த கண்ணாடி வழியே பார்க்க... அப்போது தான் அவனது காரை பின்தொடர்ந்து ஓடி வந்து கொண்டிருந்த அபிஷிரகாவை கண்டான். நல்லவேளையாக அவனுக்கு இருந்த களைப்பில் அவன் மெதுவே தான் காரை செலுத்தி கொண்டிருந்தான். சட்டென்று காரை நிறுத்தியவன் காரிலிருந்து இறங்கி கதவை பிடித்தபடி நின்றவனின் பார்வை மனைவியையே பார்த்திருந்தது. அவனது மனதில் அவனையும் கேட்காது இளையராஜா சிம்பொனி வாசித்தார்.

சிவகுமரன் காரை நிறுத்திவிட்டு இறங்கி நின்றதை கண்டு மகிழ்வுற்ற அபிஷரிகா அவனை நோக்கி வேகமாய் ஓடி வந்தாள். அவளுக்கு யாரை பற்றியும் கவலையில்லை. கணவனது உடல்நிலை மட்டுமே அவளது கருத்தில் நின்றது. அவன் அருகே வந்து நின்றவள் ஓடி வந்ததில் மூச்சு வாங்க இடுப்பில் கை வைத்தபடி அவனைப் பார்த்தாள். அவளது நிலையைக் கண்டு அவன் காருக்குள்

குனிந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து அவளிடம் நீட்டினான். அவள் நன்றியோடு அதை வாங்கிப் பருகியவள்,

"தேங்க்ஸ்..." என்றபடி பாட்டிலை அவனிடம் நீட்டினாள். அதை வாங்கியபடி அவன்,

"எதுக்கு இவ்வளவு தூரம் ஓடி வந்த...?" என்று கேட்க...

"அது வந்து..." ஏதோ ஒரு வேகத்தில் அவனின் பின்னேயே ஓடிவந்து விட்டாள். ஆனால் அதை எப்படிச் சொல்வது என்று தெரியாது அவள் விழித்தாள்.

"ஒண்ணுமில்லையா? அப்போ சரி..." என்றவன் காரிலேற போனான்.

"இல்லை... இல்லை..." அவள் அவசரமாகக் கூறவும்... அவன் நின்று திரும்பி அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தான்.

"பீவரோட கார் ஓட்டிட்டுப் போறீங்களே... ரெஸ்ட் எடுத்துட்டு போகலாமே..." ஒருவாறு தான் நினைத்ததை அவனிடம் கூறியவள் அவன் முகம் பார்க்க லஜ்ஜையுற்று வேறு எங்கோ பார்த்தாள்.

மனைவியின் அக்கறை அவனது நெஞ்சில் சில்லென்று ஊடுருவி அவனைச் சிலிர்க்க வைத்தது. ஆனால் இந்த அக்கறை அவனுக்கு நல்லதா? என்கிற எண்ணம் எழுந்ததும் அவனது சிலிர்ப்பு அப்படியே அடங்கிப் போனது. அவளை உற்று கவனித்தவனுக்கு அப்போது தான் அவளது அழுத தோற்றம் கண்ணில் பட்டது. அது வேறு அவனுள் வேறு பல சிந்தனைகளைத் தோற்றுவித்தது. அவளைத் தானும் உடன் சேர்ந்து கஷ்டப்படுத்துகிறோமோ? என்கிற எண்ணம் எழுந்து அவனைத் தாக்க துவங்கியது. இனி அவளது நடிப்புத் தொழிலில் தான் தலையிட கூடாது என்று அவன் தனக்குள் உறுதி எடுத்துக் கொண்டான்.

"எனக்கு இது பழக்கம் தான்... நீ உன் வேலையைப் பார்..." என்று முகத்தில் அடித்தார் போன்று கூறியவன் காரிலேறி அதை விருட்டென்று கிளப்பிக் கொண்டு வேகமாய்ச் சென்றுவிட்டான்.

அபிஷரிகா விழிகள் கலங்க கார் சென்ற திசையைப் பார்த்திருந்தாள். கணவனது மனதும் புரிந்தது… அதிலிருந்த காதலும் புரிந்தது. அதேசமயம் அவனது ரணமும் புரிந்தது. அவன் தனக்கு இல்லை என்கிற நிதர்சனம் அவளைச் சுட்டதில் அவளது விழிகளில் இருந்து விடாது கண்ணீர் வழிந்தது. இந்த வலி தனக்குத் தேவையான ஒன்று என்பதை அவள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டாள்.

மீண்டும் திரும்பி வந்தவளை நடிப்பு உள்வாங்கிக் கொண்டது. இரவின் தனிமையில் தான் அவளுக்குச் சற்று ஓய்வு கிடைத்தது. அதுவும் நான்கு மணி நேர ஓய்வு தான்… அடுத்து அவள் சம்பந்தப்பட்ட படப்பிடிப்பு நடக்கவிருக்கிறது. இடைப்பட்ட ஓய்வு நேரத்தில் அவள் சிவகுமரனுக்குக் குறுஞ்செய்தி ஒன்று அனுப்பினாள்.

'ஆர் யூ ஓகே…?' என்று மனைவியின் குறுஞ்செய்தி வந்த அலைப்பேசி திரையைச் சிவகுமரனின் விழிகள் கோபமாய் உற்று நோக்க… அவனது கைவிரலோ அந்தக் குறுஞ்செய்தியை மென்மையாய் வருடி கொடுத்தது. அவன் இருவேறு மனநிலையில் தவித்தான். அதேசமயம் அவளது அக்கறை அவனுள் தித்திப்பாய் சொட்டு சொட்டாய் இறங்கியது.

******************************

தனது அலுவலக அறையில் வேலை செய்து கொண்டிருந்த நந்தகுமாருக்கு முக்கியமான கோப்பு ஒன்று தேவைப்பட்டது. அதற்காக அவர் தனது மகனை அழைக்க அவன் எடுக்கவில்லை. அதனால் அவர் நேரே அவனது அறையை நோக்கி சென்றார். அவனில்லாது காலி நாற்காலி அவரை வரவேற்றது. 'எங்கே சென்றான்?' என்று யோசித்தபடி அவர் உள்ளே நுழைய… அப்போது அவரது அலைப்பேசி அழைத்தது. அவரது மகன் தான் அழைத்திருந்தது.

"ஆகாஷ், பிசியான நேரத்தில் எங்கே போன?" அவர் அலைப்பேசியை எடுத்து மகனை காய்ச்சி எடுத்துவிட்டார்.

"டாட், நம்ம சைட்ல திடீர்ன்னு லேபர்ஸ் ப்ராப்ளம் பண்றாங்களாம். அதான் அங்கே போய்க்கிட்டு இருக்கேன். ஏதும் ப்ராப்ளமா டாட்?" என்று அவன் கவலையுடன் கேட்க... மகனது பொறுப்பு நினைத்துச் சந்தோசப்பட்ட நந்தகுமார்,

"ப்ராப்ளம் எதுவும் இல்லை மை சன்... எனக்கு முக்கியமான ஃபைல் ஒண்ணு வேணும்." என்று அதைப் பற்றி அவனிடம் கூற... கோப்பு இருக்கும் இடத்தைக் கூறிவிட்டு ஆகாஷ் அழைப்பை துண்டித்துவிட்டான்.

நந்தகுமார் தனக்கு வேண்டிய கோப்பை எடுத்துக் கொண்டு மேசை இழுப்பறையை மூட நினைத்தவர் அதில் குப்புற கிடந்த புகைப்படச் சட்டத்தைக் கண்டு அதிர்ந்து போனார். ஏனெனில் அதில் 'மை லவ்' என்று எழுதியிருந்தது. வேகமாய் அதை எடுத்து பார்த்தவர் அதிலிருந்த யமுனாவின் புகைப்படத்தைக் கண்டு திகைத்துப் போனார். மகனின் மனதில் காதல் இருக்கக்கூடும் என்று அவர் நினைத்து கூடப் பார்க்கவில்லை. அவனது தோழி அபிஷரிகா காணாமல் போனதில் இருந்து அவனிடம் நிறைய மாற்றங்கள் வந்தது. பொறுப்பற்று சுற்றி கொண்டிருந்தவன் திடீரெனப் பொறுப்புள்ளவனாக மாறிப் போனான். ஆனால் தந்தையிடம் கூட அபிஷரிகாவை பற்றிக் கேட்டது இல்லை. அப்படிக் கேட்டிருந்தால் அவர் அவளைப் பற்றி எல்லாம் கூறியிருப்பார். அவன் அவளை வெறுத்தது அவருக்குத் தெரியாது.

அப்படிப்பட்டவன் சிவகுமரனின் தங்கை யமுனாவை காதலிக்கிறானா? அவர் யோசனையுடன் அப்படியே நாற்காலியில் அமர்ந்திருந்தார். யமுனா மிகவும் நல்ல பெண் தான். அவரது மருமகளாக வருவதற்கு எல்லாத் தகுதியும் அவளுக்கு இருக்கிறது. ஆனால் ஆகாஷ்...??? அவனது முந்தைய குணம் அவரைத் தடுத்தது. வெகுநேரம் யோசித்தவர் பின்பு தனது மகனுக்காகச் சிவகுமரனிடம் பேச துணிந்தார். அதற்கு மேல் அவர் ஒரு நொடி கூடச் சிந்திக்கவில்லை. தவறு செய்தவன் திருந்தக்கூடாதா? என்பதே அவரது எண்ணம். நேரே சிவகுமரனை தேடி அவனது அலுவகத்திற்குச் சென்றார்.

என்றும் இல்லாத வண்ணமாய் நந்தகுமார் தன்னைத் தேடி வந்திருப்பதைக் கண்டு சிவகுமரன் உற்சாகமாய் அவரை வரவேற்றான்.

"சொல்லுங்க சார்... என்ன விசயமா என்னைத் தேடி வந்திருக்கீங்க?"

"ஆகாஷை பத்தி என்ன நினைக்கிறீங்க சிவகுமரன்?" அவர் நேரிடையாகக் கேட்டார்.

"ஆகாஷுக்கு என்ன... ரொம்ப நல்லவன். இப்போ கேட்கவே வேண்டாம். வளர்ந்து வரும் இளம் தொழிலதிபன்." என்றவனது முகத்தில் பெருமிதமே இருந்தது.

"அப்போ உங்க தங்கை யமுனாவை ஆகாஷுக்கு மணம் முடிக்கச் சம்மதமா?" அவர் கேட்டது கண்டு அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"சார்..."

"ஆம், யமுனாவை எங்க வீட்டு மருமகளாக்க ஆசைப்படுறேன்." என்றவரின் கைகளைப் பிடித்துக் கொண்ட சிவகுமரனின் விழிகள் கலங்கி போனது.

"சார், நீங்க பரம்பரை பணக்காரங்க... உங்க ஸ்டேட்டஸுக்கு நாங்க சமம் இல்லை. எதுக்கும் ஆகாஷ் கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கோங்க." அப்போதும் அவன் ஆகாஷின் சம்மதத்தை அறிய துடித்தான்.

"என் மகன் விருப்பம் இல்லாது நான் சம்பந்தம் பேச வருவேனா?" என்று சிரித்தவரின் மகிழ்ச்சியே சொல்லாது சொல்லியது ஆகாஷின் விருப்பத்தை...

"ரொம்பச் சந்தோசம் சார்... இதில் எனக்கு விருப்பம் தான். எதுக்கும் ஐயா, அம்மா கிட்ட வந்து பேசினீங்கன்னா நல்லாயிருக்கும்."

"கட்டாயம் வர்றேன். அதுக்கு முன்னாடி யமுனா கிட்ட சம்மதம் கேட்டு வைங்க..." என்றவரை கண்டு,

"நிச்சயமாய்ச் சார்..." என்று அவன் நிம்மதியுடன் சிரித்தான்.

மதிய பொழுதில் அலுவலகத்திற்கு வந்த ஆகாஷை தன்னைப் பார்க்க வர சொன்னார் நந்தகுமார். அவன் வந்ததும் அமர சொன்னவர்,

"எனக்குத் தெரியாம நிறைய விசயங்கள் பண்ற போல..." என்று கடுமையுடன் கேட்டார்.

"டாட்... நானா?" அவன் அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தான்.

"ஆமா, நீயே தான்..." என்றவர் யமுனா புகைப்படத்தை அவன் முன் தூக்கி போட... அதைப் பார்த்தவன் முதலில் அதிர்ந்து பின்பு விரக்தியாய் அவரைப் பார்த்தான்.

"இதுக்கு என்ன அர்த்தம்?" அவர் தனது குரலில் கோபத்தை ஏற்றிக் கொண்டு கேட்க...

"நான் யமுனாவை காதலிக்கிறேன்." என்றான் அவன் தனது நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு... மகனது தைரியம் கண்டு அவர் மெச்சுதலாய் அவனைப் பார்த்தார்.

"இதை ஏன் என் கிட்ட சொல்லலை...?"

"யமுனா இன்னும் சம்மதம் சொல்லலை டாட்." என்றவனது குரலில் அத்தனை விரக்தி தெரிந்தது. யமுனா விசயத்தில் அவருக்குச் சிறிது சந்தேகம் இருந்தது. அதனால் தான் சிவகுமரனிடம் யமுனாவின் சம்மதத்தைக் கேட்க சொன்னார். ஏனெனில் அவர் அறிந்த வரை யமுனா பெரியவர்கள் பேச்சை தட்டாது கேட்டு நடக்கும் அருமையான பெண்... அவள் தனது மகனை காதலித்து இருப்பாள் என்று அவருக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. இதோ அவரது நம்பிக்கை பொய்க்கவில்லை என்று அவரது மகனே கூறுகின்றான்.

"யமுனாவிடம் உன் காதலை சொன்னாயா?" அவன் ஆமென்று தலையாட்டினான். அதைக் கேட்டு அவர்

திடுக்கிட்டார். அவள் தனது மகனின் காதலுக்குச் சம்மதம் தெரிவிக்காதது அவருக்குத் திகைப்பாய் இருந்தது.

"ஏன்...?"

"வீட்டில் பார்க்கும் மாப்பிள்ளையைத் தான் கல்யாணம் பண்ணுவாளாம்."

"ஓ..." என்றவர்,

"இனி வேறுவழியில்லை... அவள் உனக்குச் சம்மதித்துத் தானாக வேண்டும்." என்று நமட்டு சிரிப்புடன் கூற...

"டாட், என்ன சொல்றீங்க?" அவன் முதலில் புரியாது திகைத்து பின்பு புரிந்ததும் வேகமாய் எழுந்து வந்து ஆனந்தத்தோடு தந்தையை அணைத்துக் கொண்டான்.

"டாட், உண்மையாவா?"

"எஸ், மை சன்... உன்னோட காதலை பற்றித் தெரிஞ்சதும் நேரே சிவகுமரனை சந்திச்சுப் பேசிட்டேன். உன்னைப் பொறுத்தவரை இது காதல் கல்யாணம். யமுனாவை பொறுத்தவரை இது பெரியவர்களால் நிச்சயிக்கப்பட்ட கல்யாணம். இப்போ சந்தோசம் தானே?"

"எஸ் டாட்... ரொம்ப ரொம்பச் சந்தோசம்." என்றவனுக்குச் சந்தோசத்தில் விழிகள் கலங்கி போனது. அவனது கலங்கிய கண்களைப் பார்த்த நந்தகுமாருக்கு மகனது காதலின் ஆழம் புரிந்தது.

"உன் சந்தோசம் தான் எனது சந்தோசம்..." என்றவர் மகனை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டார்.

அன்றிரவு வேலை முடிந்து வீட்டிற்கு வந்த சிவகுமரன் பொன்னம்பலம், காவேரி மற்றும் தனது அன்னை வேணியிடம் ஆகாஷ் பற்றிப் பேசினான். விசயத்தைக் கேள்விப்பட்டதும் காவேரிக்கு மிகுந்த சந்தோசமாக இருந்தது. அரைவேக்காடு என்று எப்போதும் ஆகாஷை திட்டும் பொன்னம்பலம் கூட இந்த விசயம் கேள்விப்பட்டதும் சிறிதும் யோசிக்காது உடனடியாகச்

சந்தோசமாகச் சம்மதித்தார். வேணி மட்டும் மகனை யோசனையுடன் பார்த்தார். அதை அவன் உணரவில்லை.

"எதுக்கும் யமுனா கிட்ட ஒரு வார்த்தை கேட்டு விடுவோம்." என்றவன் தங்கையின் அறைக்குச் செல்ல... மற்றவர்களும் அவனைப் பின்தொடர்ந்தனர்.

சின்னவர்கள் எல்லோரும் அங்குத் தான் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தனர். யமுனாவிற்குத் திருமணம் கூடி வந்திருக்கிறது என்றதும் சரஸ்வதி, அம்ரிதா, ப்ரஷன்ஜித் மூவரும் சந்தோசத்தில் ஆர்ப்பரித்தனர். யமுனாவோ கலக்கத்துடன் அண்ணனை பார்த்தாள்.

"என்னடா? உன் விருப்பம் இல்லாது எதுவும் நடக்காது. நீ உன் விருப்பத்தைச் சொல்." என்று சிவகுமரன் வாஞ்சையுடன் கேட்டபடி தங்கை அருகில் அமர்ந்தான். அந்தக் கணம் சொத்துக்காகத் தன்னைத் திருமணம் செய்த அபிஷரிகா அவனது கண்முன் வந்து போனாள். தனது வேதனையை விழுங்கி கொண்டு அவன் தங்கையைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"நான் உங்களுக்குப் பாரமா இருக்கேனா அண்ணய்யா...?" யமுனா வருத்தத்துடன் கேட்க...

"ச்சே, ச்சே அப்படி எல்லாம் இல்லைடா... நல்ல வரன் வந்திருக்கு." என்றவன் நந்தகுமார் வந்து பேசியதை கூறினான். சிறிது நேரம் அமைதியாக இருந்தவள்,

"உங்க விருப்பம் தான் என் விருப்பம் அண்ணய்யா..." என்றவளை பெருமிதத்தோடு பார்த்தான் அந்தச் சகோதரன்.

"ஆனா ரெண்டு கன்டிசன்..."

"என்ன சொல்லும்மா?"

"ஒண்ணு என் படிப்பு முடிஞ்ச பிறகு தான் கல்யாணம். அடுத்து..." என்றவள் அனைவரையும் ஒருமுறை சுற்றி பார்த்தாள்... பின்பு மெதுவே,

"நீங்க அண்ணியோடு சேர்ந்து நின்னு பெற்றோர் ஸ்தானத்தில் இருந்து என்னோட கல்யாணத்தை நடத்தி வைக்கணும்." என்றவளை அவன் திகைப்புடன் பார்த்திருந்தான். பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு,

"நிச்சயமாய்..." என்று புன்னகைத்தவனின் மனம் ஊமையாக அழுதது.

மனதில் ஒருத்தியை வைத்துக் கொண்டு இன்னொருத்தி கழுத்தில் தாலி கட்ட அவனால் முடியாது. அதேசமயம் தான் விரும்பியவள் எப்போதுமே அவனது கை சேர போவதில்லை. அனலிலிட்ட புழுவாய் அவன் துடித்துப் போய் அமர்ந்திருந்தான்.

"யமுனா சொல்வதைத் தான் நானும் சொல்றேன் குமரா... நீ தான் தந்தை ஸ்தானத்தில் இருந்து யமுனாவை தாரைவார்த்து கொடுக்கணும். உன் மனைவி அம்மா ஸ்தானத்தில் இருந்து யமுனா கல்யாணத்தை முன்நின்று நடத்தணும்." என்று கூறிய வேணியின் வார்த்தைகள் ஆணித்தரமாய், அழுத்தமாய் வந்து விழுந்தது.

தங்கையிடம் மழுப்பலாய் பதில் கூறியவனால் தாயிடம் மழுப்பலாய் பதில் கூற இயலாது அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டான். பொன்னம்பலம், காவேரி இருவரும் பேச வார்த்தைகளற்று தலையைத் தொங்க போட்டுக் கொண்டு அகன்றனர். மகனுக்கு மறுதிருமணம் செய்து வைக்க வேண்டும் என்கிற வேணியின் எண்ணம் அந்த நொடியில் இருந்து மிகவும் வலு பெற துவங்கியது.

****************************

தொடர்ச்சியாகப் படப்படிப்பு நடந்து கொண்டிருந்தது. மொத்தமாக நாற்பது நாட்களில் படத்தை முடித்துத் தர வேண்டும் என்று சிவகுமரன் இயக்குநர் ரவிக்குக் கட்டளையிட்டு இருந்தான். அதன் விளைவு இரவு, பகல் என்று பாராது ஓயாது படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. எல்லோருமே படம் நன்றாக வர வேண்டும் என்று உழைத்து கொண்டிருந்தனர்.

அன்றைய படப்பிடிப்பில் அபிஷரிகாவிற்குப் பிரசவம் நடக்கும் காட்சி எடுக்கப்பட்டது. அவள் பிரசவ வலியில் கத்தி கதறியழுவது போல் நடிக்க... வழக்கம் போல் காமிரா அந்தக் காட்சியைப் பதிவு செய்து கொண்டிருந்தது. அப்போது சிவகுமரன் திடீரென அங்குப் பிரசன்னமானான். வெகுநாட்களுக்குப் பின் கணவனைக் கண்டதும் அபிஷரிகாவின் மனம் சந்தோசத்தில் குதியாட்டம் போட்டது. ஆனால் அவனது பார்வையோ அவளைத் துளைத்து எடுத்தது. என்னவென்று அவள் யோசிக்கும் போது தான் இருக்கும் நிலைமை அவளுக்கு ஞாபகத்தில் உறைத்தது. அடுத்த நொடி அவள் தானாகவே கதறியழுது துடித்தாள்.

எல்லோரும் அவளது நடிப்பை கண்டு கண்கலங்கி சிலாகித்துப் பாராட்ட... அவளுக்கு மட்டுமே தெரியும், அவளது கதறல், கண்ணீர் எல்லாம் உண்மை என்று...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் - 17

'எல்லாம் வேசம்...' அபிஷரிகாவின் அழுகையைக் கண்ட சிவகுமரன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். உண்மையில் எல்லோரையும் பொறுத்தவரை அவளது அழுகை நடிப்பு தான்... அதை அவன் உணராது போனானோ...!

அன்று அவள் பிரசவத்தின் போது நடந்து கொண்ட முறை அவனது கண்ணில் வலம் வந்ததோ!!! அதை நினைத்த நொடி அவனது முகம் உணர்வுகளைத் தொலைத்து இறுகி போனது. கணவனது இறுக்கத்தை மனைவியும் உணர்ந்தாள். அன்று அவள் செய்தது பிழையோ??? இப்போது கூட அவளுக்குப் பிழையாய் தெரியவில்லையே. ஏனோ ஒரு வீம்பு, தான் நினைத்ததை அவன் செயலாற்ற வேண்டும் என்கிற பிடிவாதம் எல்லாம் சேர்ந்து அவளது வாழ்க்கையைப் படுகுழியில் தள்ளிவிட்டு விட்டது. இதில் யாரை நொந்து என்ன பயன்? அவள் தன்னைத் தானே நொந்து கொண்டாள்.

அடுத்தக் காட்சியில் அவள் பிறந்த குழந்தையைக் கண்டு மகிழ வேண்டும். ஆட்டிசத்தில் பாதிக்கப்பட்ட பெண் குழந்தையைக் கண்டு குதூகலிப்பது போல் அவள் இயல்பாய் நடிக்க வேண்டும். இத்தனை நேரம் தன்னை வலியில் துடிக்கச் செய்து பிறந்த குழந்தையிது என்பதை மறந்து அவள் குழந்தையைக் கண்டு சிரிக்க வேண்டும். அந்த மகிழ்ச்சியை அவள் இயல்பாய் அழகாய் வெளிப்படுத்தினாள். அதே நேரம் தான் பத்து மாதங்கள் சுமந்து பெற்ற தனது குழந்தையைத் தூக்கி கொஞ்ச கூடச் செய்யாது தள்ளி வைத்த தனது மடமையை எண்ணி அவள் மனதிற்குள் ஊமையாய் அழுதாள். அந்த நேரம் பெற்ற பிள்ளையின் பாசத்தை விட அவளை ஆட்டிப்படைத்த எண்ணம் தான் என்ன??? விடையாக அவளது மன்னவன்... ஆனால் அவன் இன்னும் அதற்கு விடை அளிக்கவில்லையே... அவள் முயன்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு தனக்குக் கொடுக்கப்பட்ட காட்சியைச் சிறப்பாக நடித்து முடித்தாள்.

அடுத்துப் படப்பிடிப்பு துவங்கும் முன் சிறிது இடைவெளி விடப்பட்டது. சிவகுமரன் இருக்கும் இடத்தில் இருப்பதற்கு அவளுக்கு மூச்சு முட்டி கொண்டு வருவது போல் தோன்ற... அவள் வெளியில் வந்தாள். அங்கே சற்றுமுன் நடித்த கைக்குழந்தை வீறிட்டு அழுது கொண்டிருந்தது. அதன் அன்னை அதைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தாள். அதுவோ விடாது அழுது கொண்டிருந்தது. அந்தப் பெண்ணோ துணை நடிகை. அடுத்தக் காட்சியில் அவள் நடிக்கப் போக வேண்டியிருந்தது. அதனால் குழந்தையைத் தூங்க வைத்துவிட்டு செல்ல வேண்டும் என்கிற முனைப்போடு அவள் குழந்தையை அதட்டி, உருட்டி, மிரட்ட... குழந்தையோ பயத்தில் இன்னும் கத்தி அழுதது. வேறுவழியின்றி அந்தப் பெண் குழந்தையை அடிக்கப் போக...

"என்ன காரியம் பண்ற நீ...?" என்று அவளைத் தடுத்த அபிஷரிகா,

"என்னிடம் குழந்தையைக் கொடுத்துட்டு நீ போ..." என்று கூற...

"நீங்க எப்படி மேம்?" அவள் தயங்கினாள்.

"மூச்..." என்ற அபிஷரிகா குழந்தையைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டாள். அந்தப் பெண் நன்றி கூறிவிட்டு நிம்மதியுடன் உள்ளே சென்றாள்.

அபிஷரிகா குழந்தையைத் தூக்கி கொண்டு அங்கிருந்த திண்ணையே நோக்கி நடந்தாள். திண்ணையில் சம்மணமிட்டு அமர்ந்து கொண்டு குழந்தையை மடியில் படுக்க வைத்து அவள் அதற்கு விளையாட்டு காட்ட... என்னே ஆச்சரியம்! குழந்தை அழுகையை மறந்து அவளது முகத்தைப் பார்த்துச் சிரித்தது.

"அட, போக்கிரி பயலே..." என்றவளுக்கும் சிரிப்பு வந்தது.

அவள் மெய்மறந்து சுற்றுப்புறம் மறந்து குழந்தையுடன் ஐக்கியமாகி போனாள். சிறிது நேரம் விளையாடி

கொண்டிருந்த குழந்தை பின்பு களைப்புற்று அவளது மடியிலேயே உறங்கி விட்டது. குழந்தையின் தலையை வருடி கொடுத்தவளுக்குத் தனது மகனின் ஞாபகம்... ஏதேதோ எண்ணங்கள் அவளது மனதினை அழுத்தியது. அவளது விழிகளில் மெல்லிய நீர்ப்படலம் படர்ந்தது. அந்நேரம் அவள் முன் நிழலாடவும் அவள் நிமிர்ந்து பார்த்தாள். சிவகுமரன் தான் தனது இருகைகளைக் கட்டி கொண்டு அவளை உறுத்து பார்த்துக் கொண்டிருந்தான். அவளோ எந்தவித உணர்வையும் பிரதிபலிக்காது அவனை வெறுமையாய் பார்த்தாள்.

"சபாஷ், ஊரான் வீட்டு பிள்ளையை ஊட்டி வளர்த்தா தன் பிள்ளை தானே வளருமாம். அப்படியா?" அவனது குரலில் அத்தனை எகத்தாளம் நிறைந்து வழிந்தது.

'என் மகன் ஏன் தானே வளரணும்? அவனுக்குத் தான் நீ இருக்கியே.' அவள் மனதினுள் முணுமுணுத்து கொண்டாள்.

"இப்பக்கூட மகனை பத்தி கேட்கணும்ன்னு உனக்குத் தோணலை இல்லையா? கல்நெஞ்சுக்காரி. எப்படிடி உன்னால் இப்படி இருக்க முடியுது?" அவனது வார்த்தைகளில் அவளது உடல் விறைத்தது.

"எதுக்குக் கேட்கணும்?" என்றாள் அவள் விட்டேற்றி குரலில்...

"அதானே... எதுக்குக் கேட்கணும்? பிறந்தவுடன் அவனைத் தலை முழுகியவள் தானே நீ..." அவனது வார்த்தைகள் பெரும் சீற்றத்துடன் வந்தது.

"அதுக்கு என்ன இப்போ? அம்மா எங்கேன்னு அப்பா கிட்ட கேட்காம... அப்பாவுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வச்சு இன்னொரு அம்மாவை கூட்டிட்டு வர ப்ளான் பண்ணுகிறவனை நான் எதுக்குத் தேடணும்? அப்படிப்பட்ட மகன் எனக்குத் தேவையில்லை." என்று கோபமாய்க் கூறியவளின் வார்த்தைகளின் பின்னே இருந்த ஏமாற்றத்தை, வலியை அவன் உணரவில்லை.

"ப்ரஷனை நீ தான் வேண்டாம்ன்னு தூக்கி போட்டுட்டு போன... அவனில்லை. பின்னே எப்படி அவன் உன்னைத் தேடி வருவான்? நெவர்... ஒருபோதும் வர மாட்டான்."

"வர வேண்டாம்... இத்தனை நாள் தனியே இருந்தவளுக்கு இனியும் தனியே இருக்கத் தெரியும். நீங்க ஒண்ணும் உபதேசம் பண்ண தேவையில்லை. போங்க, உங்க வேலையைப் பார்த்துட்டு..." அன்று அவன் கோபப்பட்டுப் பேசியதற்கு இன்று அவள் இப்படிப் பேசி அதைச் சமன் செய்தாள்.

"நீயெல்லாம் என்ன மனுசியோ?" வார்த்தைகளைக் கடித்துத் துப்பியவன் அங்கிருந்து வேகமாய்ச் சென்றுவிட்டான்.

அவன் சென்ற பிறகே அவள் நிம்மதி பெருமூச்சு விட்டாள். மகனின் நினைவு அவளை வருத்தியது தான். இல்லையென்று சொல்லிவிட முடியாது. விலகி வந்த பின் தானாகத் தேடி செல்ல அவளால் முடியவில்லை. ஈகோ தடுத்தது என்பதை விட அச்சம் அவளைத் தடுத்தது. அவள் செய்த தவறு அவள் கண் முன்னே பூதாகரமாய் நிற்கிறதே.

'அன்று ஏன் அப்படிப் புத்திக்கெட்டு போய் நடந்து கொண்டேன்?' அவள் லட்சம் தடவையாகத் தனக்குள் கேட்டு கொண்டாள்.

சிவகுமரன் கோபத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தான். இன்னமும் வாய் திறந்து மகனை பற்றிக் கேட்காத மனைவியைக் கண்டு அவனது உள்ளம் உடைந்தது. 'பாவி, பாவி' என்று அவன் மனதிற்குள் கோபமாய் அரற்றினான்.

தொடர்ந்து வந்த நாட்களில் இருவரும் முறைத்து கொண்டிருந்தனர். காதலில் தவித்துக் கரைந்து கொண்டிருப்பதற்கு இந்தக் கோபம் பரவாயில்லை என்றே இருவருக்கும் தோன்றியது. இருவரும் தங்களது காதலை கோபத்தின் பின் மறைத்து கொண்டனர்.

அன்று சிவகுமரனை தேடி பத்மா வந்திருந்தாள்... அவனும் அவளுடன் சாதாரணமாகப் பேசி கொண்டிருந்தான்.

"நீங்க போன தடவை வந்தப்போ பார்க்க முடியாம போயிருச்சு பாவா. அதான் இந்தத் தடவை நீங்க வந்திருப்பதைக் கேள்விப்பட்டதும் உடனே உங்களைப் பார்க்க ஓடி வந்துட்டேன்." என்று வெகுளியாகக் கூறிய பத்மாவை கண்டு சிரித்தவன்,

"இப்போ குழந்தைகளுக்கு லீவா? உன் புருசன் எப்படி இருக்கான்?" என்று அவளது குடும்பம் பற்றி விசாரித்தான்.

"ஆமா பாவா, இப்போ லீவு தான். அதான் அம்மா வீட்டுக்கு வந்தேன். உங்க புண்ணியத்தில் என் வண்டி நல்லா ஓடுது பாவா. நீங்க எடுத்து கொடுத்த கடையை வச்சு தான் எங்க பிழைப்பு ஓடுது. அவரு உங்களுக்கு நன்றி சொல்ல சொன்னாரு."

"எதுக்கும்மா நன்றி எல்லாம்..." என்றவன் அவளிடம் மேலே பேசி கொண்டிருந்தான்.

அவன் சிரித்துச் சிரித்துப் பத்மாவிடம் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அபிஷரிகாவிற்கு மனதிற்குள் பொறாமை வெடித்தது. தன்னிடம் ஒரு புன்னகைக்குப் பஞ்சமாகி போனது. ஆனால் அவளிடம் மட்டும் எப்படிப் பல்லை இளித்துக் கொண்டு பேசுகிறான் என்று கணவன் மீது அவளுக்குக் கோபம் வந்தது. ஆனால் அதை அவனிடம் நேரிடையாகக் காட்ட முடியாதபடி அவளது நிலை இருந்தது. மனம் கனக்க, விழிகள் கலங்க அவள் இயலாமையுடன் அவனைப் பார்த்திருந்தாள். உரிமையுடன் சண்டை போடவும் தகுதி வேண்டும் என்பதை உணர்ந்தவளுக்குத் துக்கம் பொங்கியது.

***********************************

ஆகாஷ் ப்ரஷன்ஜித்தை தேடி சிவகுமரனின் வீட்டிற்குச் சென்றான். அவன் சென்ற போது வேணி மட்டும் அங்கிருந்தார்.

"ப்ரஷன் சாரை பார்க்க போகணும்ன்னு சொன்னான். அதான் அவனை அழைச்சிட்டு போக வந்தேன்."

"ஆமாம்ப்பா சொன்னான். நீங்க உட்காருங்க. நான் போய் அவனைக் கூட்டிட்டு வர்றேன்." என்றவர் உள்ளே சென்றுவிட்டார்.

அப்போது வெளியில் இருந்த வீட்டினுள் வந்தாள் யமுனா. வரவேற்பறையில் அமர்ந்திருந்த ஆகாஷை கண்டதும் திகைத்து நின்றவள் பின்பு மெதுவே அவனை நோக்கி சென்றாள். அவனோ அவள் வந்ததை அறியாது கையிலிருந்த நாளிதழில் ஆழ்ந்திருந்தான்.

"வாங்க..." என்ற குரலில் நிமிர்ந்து பார்த்தவன் அங்கு யமுனாவை கண்டதும் அவனது மனம் மகிழ்ச்சியில் துள்ளியது. ஆனால் கவனமாகத் தனது உணர்வுகளை மறைத்து கொண்டவன், 'என் கிட்டயா சொன்ன?' என்பது போல் சைகையில் கேட்டான். அவள் ஆமென்று தலையாட்ட... அவனும் ஆமோதிப்பது போல் தலையாட்டியவன் மீண்டும் தலையைக் குனிந்து நாளிதழை புரட்டினான். அவள் ஏமாற்றத்துடன் அவனைப் பார்த்தபடி அகன்றாள். அவளது கால்களின் தயக்கத்தினை ஓரக்கண்ணால் பார்த்தவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

"அங்கிள்..." என்று கூவியபடி ப்ரஷன்ஜித் ஓடிவந்து அவனை அணைத்துக் கொண்டான்.

"ஹலோ மை டியர் பாய்..." என்று ஆகாஷும் அவனை வாரியணைத்துக் கொண்டான்.

"போகலாமா?" என்று கேட்டவன் எழுந்து கொண்டான்.

"ஓ, எஸ் போகலாம்." என்ற சின்னவன் அவனுடன் இணைந்து நடந்தான்.

"நாங்க வர்றோம் அத்தை." என்று வேணியிடம் விடைபெற்ற ஆகாஷ் மறந்தும் அங்கு நின்ற யமுனாவை திரும்பி பார்க்கவில்லை.

காரிலேறி காரை கிளப்பியவன் முன்னால் இருந்த கண்ணாடி வழியே அவளைப் பார்த்தான். அவளது ஏமாற்றம் கவிழ்ந்த முகம் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'என்னைய எப்படி எல்லாம் அலைய வச்ச... இப்போ என்னுடைய டர்ன்.' என்று நினைத்து கொண்டவன் மனதில் சந்தோசம் மட்டுமே...

வரும் வழியெல்லாம் ப்ரஷன்ஜித் வளவளத்துக் கொண்டே வர... ஆகாஷும் சளைக்காது பதில் அளித்துக் கொண்டே வந்தான். சில மணி நேரங்களில் இருவரும் கிராமத்தை வந்தடைந்தனர்.

"அங்கிள், நீங்க உங்கம்மாவுக்கு மதர்ஸ் டே விஷ் பண்ணினீங்களா?" என்று சின்னவன் அவனிடம் கேட்க...

"வருசம் முழுவதும் படுத்தி எடுத்திட்டு ஒரு நாள் மட்டும் நான் விஷ் பண்ணினேன்னு வையி... எங்காத்தா கம்பு எடுத்து அடிக்க வந்திரும்." என்றவன் வாய்விட்டுச் சிரித்தான். உடன் சேர்ந்து சின்னவனும் சிரித்தான்.

இருவரும் இணைந்து காரிலிருந்து இறங்கி சிவகுமரனை தேடி வந்தனர். அவன் வீட்டில் இல்லை. ஒருவேளை படப்பிடிப்பில் இருப்பானோ என்றெண்ணி அங்குச் சென்றனர்... அங்கு அபிஷரிகாவை கண்டதும் ஆகாஷ் முகத்தைத் திருப்பிக் கொண்டான். அவன் அவளை எதிர்பார்த்தே தான் வந்தான். அதனால் அவன் எளிதாக முகத்தைத் திருப்பிக் கொண்டான். ஆனால் அவனைக் கண்டதும் அபிஷரிகா இனிய அதிர்ச்சியில் அப்படியே சிலையாய் நின்றாள்.

"ஆகாஷ் சார், நீங்க எங்கே இங்கே?" ரவி அவனை ஆர்ப்பாட்டமாய் வரவேற்றான். பின்பு ப்ரஷன்ஜித்தை பார்ததவன்,

"குட்டி சாரும் வந்திருக்காரா? வாங்க உட்காருங்க." என்று கூறிய ரவி இருவருக்கும் நாற்காலி எடுத்து போட

சொன்னான்.

"இருக்கட்டும் ரவி... சார் எங்கே?" என்று ஆகாஷ் கேட்க...

"இவ்வளவு நேரம் இங்கே தான் இருந்தார். இப்போ தான் ரைஸ் மில் வரை போயிட்டு வர்றேன்னு போனார்."

"ஓ... அப்போ ப்ரஷன் இங்கேயே இருக்கட்டும். நான் போய் அவரைக் கூப்பிட்டுட்டு வர்றேன்." என்றவன் ப்ரஷன்ஜித்திடம் திரும்பி,

"இங்கே இருந்துக்குவியா?" என்று கேட்க...

"ஓகே அங்கிள்." என்றவன் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு படப்பிடிப்பை வேடிக்கை பார்க்கலானான். ஆகாஷ் சிறு நிம்மதியுடன் அங்கிருந்து அகன்றான். மறந்தும் தோழியை ஏறிட்டு பார்க்கவில்லை.

அதைக் கண்ட அபிஷரிகாவுக்குத் தான் மனம் தாங்கவில்லை. அவள் நிற்க முடியாது அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள். அப்போது தான் தனக்கு அருகில் அமர்ந்திருந்த மகனை கண்டாள். அவனைக் கண்டதும் பொங்கிய தாய்மை உணர்வு அவளுள் பெரும் அதிர்வினை ஏற்படுத்தியது. அவள் விழிகள் கலங்க மகனை பார்த்திருந்தாள்.

"ஹாய் ஆன்ட்டி, ஹவ் ஆர் யூ?"

தனது உதிரத்தில் உதித்த, தனது உயிரை கொடுத்து பெற்ற மகன் தன்னைக் கண்டு 'ஆன்ட்டி' என்று அழைப்பது கேட்டு அபிஷரிகாவின் மனம் மிகவும் உடைந்து போனது. அதற்குக் காரணம் அவள் அல்லவா...! அதனால் கடப்பாரையை விழுங்கிவிட்டுக் கசாயம் குடிப்பது போல் அந்தச் சொல்லை கசப்பாய் விழுங்கிவிட்டு மகனை பார்த்து புன்னகைத்தவள்,

"ஃபைன்... நீ எப்படியிருக்க...?" என்று கேட்க...

"நானும் ஃபைன் ஆன்ட்டி." என்ற ப்ரஷன்ஜித்தை அவளது பார்வை மேலிருந்து கீழாகப் பாசத்துடன் வருடி சென்றது.

இத்தனை நாளாய் அவன் இங்கு வந்தது இல்லை. இன்று அவன் இங்கு வந்திருப்பது அவளுக்குப் புதினமாக இருந்தது. அதை அவள் அவனிடம் வாய்விட்டு கேட்டுவிட்டாள்.

"இன்னைக்கு மதர்ஸ் டே. அதான் அப்பாவுக்கு விஷ் பண்ண வந்திருக்கேன்." என்ற மகனை கண்டு அவளுக்குக் கண்கள் கரித்தது. உணர்வுகளை முயன்று அடக்கி கொண்டவள்,

"மதர்ஸ் டேக்கு அம்மாவுக்குத் தானே விஷ் பண்ணுவாங்க... நீ ஏன் அப்பாவுக்கு விஷ் பண்ற?" என்று கேட்டாள். சிறுவனிடம் கேட்க கூடாத கேள்வி தான். ஆனாலும் இதற்கான பதிலை தெரிந்து கொள்வதற்காக அவளது மனம் தவியாய்த் தவித்தது.

"எனக்கு அப்பா, அம்மா எல்லாம் அப்பா தான்." என்றான் சின்னவன் தீர்க்கமான குரலில்...

"ஓ, சாரி... உனக்கு அம்மா இல்லையா?" அவளது குரலில் அத்தனை வலியிருந்தது.

"அம்மா இருக்காங்க ஆன்ட்டி. ஆனா எங்க கூடயில்லை." என்றான் அவன் வருத்தத்துடன்...

"ஐயம் சாரி..." என்றவளுக்குத் தன் மீது அத்தனை கோபம் வந்தது.

"அச்சோ, நீங்க சாரி எல்லாம் சொல்ல வேண்டாம். எங்கம்மா கூட இல்லைன்னா என்ன... நான் தினமும் எங்கம்மா கூடப் பேசுவேனே." என்றான் அவன் முகம் மலர... அதைக் கேட்டவளது முகமும் மலர்ந்தது.

"எப்படி...?"

"டெய்லி நைட்டானதும் பால்கனியில் வந்து நின்னு வானத்தில் இருக்கும் நிலா கூடப் பேசுவேன்."

"என்னது நிலா கூடவா?" அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"ஆமா... அந்த நிலா மாதிரி எங்கம்மாவும் அழகா இருப்பாங்கன்னு எங்கப்பா சொல்லியிருக்கார். நிலா கிட்ட சொன்னா அது எங்கம்மா கிட்ட போய்ச் சொல்லும்ன்னு சொல்லுவார்."

"ஓ..." என்றவளுக்கு அழுகையை அடக்க முடியவில்லை. உதட்டை கடித்து அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"ம், நேத்து நைட் கூட நிலா கிட்ட மதர்ஸ் டே விஷ் சொல்லி அம்மா கிட்ட சொல்ல சொன்னேன். அது அம்மா கிட்ட என் விஷ்ஷை சொல்லியிருக்கும்." என்றவனது முகத்தில் மகிழ்ச்சியின் சாயலே...! அதைக் கண்டு அவளுக்குத் தான் மிகுந்த வேதனையாக இருந்தது.

"உனக்கு உன் அம்மாவை பிடிக்குமா?"

"ம், ம்..." அவன் உற்சாகமாகத் தலையாட்டினான்.

"அப்போ நீ ஏன் உங்கப்பாவை இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கச் சொன்ன? இது உங்கம்மாவுக்கு நீ பண்ணும் துரோகம் இல்லையா?" இத்தனை நாளாய் மனதை அரித்துக் கொண்டிருந்த கேள்வியை அவள் மகனிடம் கேட்டே விட்டாள்.

"அப்பாவுக்குத் தான் வொய்ப்பை கூட்டிட்டு வர சொன்னேன். எனக்கு அம்மாவை இல்லை. என்னோட அம்மாவோட இடத்தை யாரும் ஃபில் பண்ண முடியாது. பிகாஸ் ஐ லவ் மை மாம்... ஐ லவ் ஹர் சோ மச்."

தந்தைக்கு மனைவி தான் வர முடியும். தனக்கு அன்னையாகத் தனது அன்னையைத் தவிர வேறு யாரும் வர முடியாது என்று இந்தச் சின்ன வயதில் எத்தகைய தெளிவான சிந்தனை அவனுக்கு...!!! ப்ரஷன்ஜித் தனது மனதிலிருந்ததை அவளிடம் பகிர்ந்து கொண்டான். இதுவரை தந்தையிடம் கூட இது பற்றி அவன் கூறியது இல்லை. முதன்முறையாக அவளிடம் தான்

கூறியிருக்கின்றான். இது தான் தாய்க்கும், மகனுக்கும் இடையில் இருக்கும் தொப்புள்கொடி பந்தமோ...!

மகனது பேச்சை கேட்ட அபிஷேரிகா அப்படியே ஸ்தம்பித்துப் போனாள். இது தெரியாது அவள் சிறுபிள்ளை போன்று மகன் மீது கோபம் கொண்டிருந்தாளே...!

"ஐயம் சாரி..." என்றவளை அவன் புரியாது பார்த்தான்.

"நீங்க எதுக்குச் சாரி கேட்கிறீங்க ஆன்ட்டி?" மகன் கேட்டதும் அவளுக்குச் சூழ்நிலை மனதில் உறைக்க... புன்னகையுடன் அவனைப் பார்த்தவள்,

"உன்னைப் பத்தி தெரியாம கேள்வி கேட்டேன் இல்லையா? அதுக்கு..." என்று கூற...

"இட்ஸ் ஒகே..." பெரிய மனிதன் போன்று கூறிய மகனை அவள் விழிகள் விரிய பார்த்து ரசித்தாள்.

அதற்குள் சிவகுமரன் மகனை தேடி அங்கு வந்துவிட்டான். அம்மாவும், மகனும் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவனது விழிகள் இடுங்கியது. தந்தையைக் கண்டதும் மகன் துள்ளி குதித்து அவனை நோக்கி ஓடியவன்,

"ஹேப்பி மதர்ஸ் டே." என்று தந்தைக்கு வாழ்த்துக் கூறினான்.

"தேங்க்ஸ் ப்ரஷன்... இதுக்காகவா சென்னையில் இருந்து இங்கே வந்த?"

"நீங்க இல்லாம அங்கே ஒரே போர். அதான் ஆகாஷ் அங்கிளோட கிளம்பி வந்துட்டேன்."

"சரி, நம்ம வீட்டுக்கு போகலாம்." என்றவன் மகனை அழைத்துக் கொண்டு செல்ல...

" பை ஆன்ட்டி..." ப்ரஷன்ஜித் அன்னையிடம் விடைபெற... சிவகுமரன் திகைப்புடன் மனைவியைப் பார்த்தான். அவளோ முகத்தில் எதையும் காட்டாது மகனை பார்த்து புன்னகையுடன்,

"பை..." என்றாள்... சிவகுமரன் அவளை உறுத்து விழித்து விட்டு மகனை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டான்.

ஆகாஷ் கோபத்துடன் தனது தோழியைப் பார்த்தபடி நின்றிருந்தான். அவளும் அப்போதும் தான் அவனைப் பார்த்தாள்.

"அக்கி..." என்று அவள் ஏதோ பேச முயல...

"இங்கே வேண்டாம்..." என்ற ஆகாஷ் விறுவிறுவென நடந்தான். அவளும் அமைதியாய் அவனைப் பின்தொடர்ந்தாள்.

சற்று தள்ளி வந்ததும் நின்ற ஆகாஷ் தோழியைத் திரும்பி பார்த்து, "லூசர்..." என்று கோபமாய்க் கத்தினான். உண்மையும் அது தானே... அதனால் அவள் அமைதியாக நின்றிருந்தாள்.

"உனக்கும், சாருக்கும் ஆயிரம் பிரச்சனை இருந்துட்டு போகட்டும். ஆனா ப்ரஷன் என்ன பாவம் பண்ணினான்? எதுக்கு அவனை விட்டு போன? எப்படி உன்னால் அதைச் செய்ய முடிஞ்சது? பெண் இனத்துக்கே நீ கேவலம்." என்று அவன் படபடவெனப் பொரிந்து கொண்டே போனான்.

"ப்ளீஸ் அக்கி... வலிக்குது." என்று கண்ணீர் குரலில் கெஞ்சிய தோழியைக் கண்டு திகைப்புடன் பார்ததவன்,

"வலிக்குதுல்ல... அப்படித் தான் எல்லோருக்கும் வலிச்சிருக்கும். இந்தச் சின்ன வயசில் அம்மா இல்லாம வளரணும்ன்னு அவனுக்கு என்ன தலையெழுத்து? அவன் கூடப் படிக்கிற பிள்ளைங்க எல்லாம் அம்மா கூட வர்றப்போ அவன் மனம் என்ன பாடு பட்டிருக்கும்? நீ செஞ்சதுக்கு உனக்கு எத்தனை நியாயமான காரணம் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனா நீ பண்ணியது பச்சை துரோகம். அதுவும் சின்னஞ்சிறு பாலகனுக்குச் செய்த பச்சை துரோகம்."

"ஆமா அக்கி... என் துரோகத்தைச் சகிக்க முடியாம தான் நான் ஓடி போனேன். எந்த உரிமையில் நான் என் மகனிடம்

உறவு கொண்டாடுறது அக்கி...? அதுக்கான தகுதி எனக்கு இருக்கா? நான் ரொம்ப ரொம்பக் கெட்டவள் அக்கி. நீங்க எல்லோருமே நல்லவங்க. நான் மட்டும் தான் கெட்டவள், கெட்டவள்..." என்று அவள் தலையில் அடித்துக் கொண்டு அழ... அதைத் தாங்க முடியாத அந்தத் தோழன் அவளது கைகளைப் பிடித்துக் கொண்டான்.

"என்னதிது பேப்?" அவனது குரலில் அத்தனை வேதனை இருந்தது.

"எதுக்கு இப்படித் தனிச்சு இருக்கப் பேப்? எதுவாக இருந்தாலும் நீ சார் கிட்ட வந்து மன்னிப்பு கேளு. அவர் உன்னை ஏத்துக்குவார். இனியாவது சந்தோசமா வாழுங்க." என்று அவன் கூற...

"இல்லை அக்கி... நான் சிவூக்கு வேண்டாம். நான் இப்படியே இருந்துட்டு போகிறேன்." என்றவளது அழுகை இன்னும் அதிகமானது.

"ப்ச், எதுக்கு இந்தப் பிடிவாதம் பேப்?"

"பிடிவாதம் இல்லை. செய்த தவறுக்குத் தண்டனை... என்னை இப்படியே விட்டு விடு அக்கி." என்றவளை அவன் ஆற்றாமையுடன் பார்த்தான்.

"இதுக்கு என்ன தான் முடிவு?"

"என் மகன் அவனது அப்பாவுக்கு இரண்டாவது திருமணம் பண்ணி வைக்க நினைக்கிறானே. வழக்கம் போல் சுப முடிவு தான்." என்று புன்னகைத்தவளின் புன்னகை விழிகளை எட்டவில்லை.

"அப்போ நீ...?"

"எனக்கு என்ன...? நான் நல்லா தான் இருந்தேன். இருக்கேன்... இனியும் நல்லா இருப்பேன்." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவளின் பேச்சில் அத்தனை உறுதி தெரிந்தது.

"என்னமோ போ... உன் பேச்சே சரியில்லை."

"அதெல்லாம் விடு... என்னை உன் தோழியா ஏத்துக்குவியா அக்கி...?" அவள் ஆவலுடன் அவனது முகத்தைப் பார்த்தாள். ஆகாஷ் விழிகள் கலங்க ஆமென்று தலையசைத்தவன் தனது இருகைகளையும் விரிக்க... மறுகணம் அவள் அதில் சரண் புகுந்தாள்.

"எந்த நிலையிலும் என் நண்பன் அக்கி எனக்காக இருக்கிறான் என்கிற நினைப்பு ஒன்று எனக்குப் போதும்." என்றவளின் குரலில் அத்தனை சந்தோசம்...

"நான் தப்புப் பண்ணிட்டேன் பேப். அப்பவே நான் உன்னைத் தேடி வந்திருக்கணும். உன் மேல் கோபப்பட்டு வராமல் இருந்தது என்னுடைய தப்பு தான்." என்று ஆகாஷ் புலம்பினான்.

"அதான் இப்போ வந்துட்டியேடா." என்றவள் அவனை அண்ணாந்து பார்த்து,

"அக்கி, சரக்கு அடிச்சு ரொம்ப நாளாச்சு... இன்னைக்கு அடிக்கலாமா?" என்று கண்சிமிட்டி குறும்பாய் கேட்க...

"ஐயோ, இந்த ஆட்டத்துக்கு நான் வரலை..." என்று அலறியவனைக் கண்டு விலகியவள் இடுப்பில் இரு கைகளை வைத்துக் கொண்டு அவனைப் போலியாக முறைத்தபடி,

"யாருடா அது? எனக்குத் தெரியாம என் நண்பன் மனசை கொள்ளையடிச்சது...?" என்று கோபமாய்க் கேட்க...

"அவ்வளவு அப்பட்டமாவா தெரியுது?" என்றவனது முகத்தில் வெட்கத்தில் சாயல் அப்பட்டமாய்த் தெரிந்தது.

"ஆமாம்..." என்றவளுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

"நீ காணாமல் போனதுக்குப் பிறகு நான் ரொம்பவே திருந்திட்டேன் பேப்."

"நான் காணாமல் போனதுக்கும், நீ திருத்துவதற்கும் என்னடா சம்பந்தம்?"

"உன் வாழ்க்கையைப் பார்த்து எனக்கு ஒரு பயம். நானும் இப்படி எதையாவது ஏடாகூடமா பண்ணிட்டு வாழ்க்கையை இழந்து விடுவேனோன்னு ஒரு பயம். அதனால் தான் டாட் சொன்ன பேச்சு கேட்டு நல்ல பிள்ளையா மாறிட்டேன்." ஆகாஷ் கூறியதை கேட்டு அவள் பெருமூச்சு விட்டாள்.

"உண்மை தான் அக்கி... அடிப்பட்ட பிறகு தான் எல்லாமே புரியுது." என்று அவள் அவனது கூற்றை ஆமோதித்தாள். ஆகாஷ் அவளுடைய பழைய நண்பனாக மீண்டும் அவளுக்குக் கிடைத்து விட்டான்.

ஆகாஷிடம் பேசிவிட்டு வந்த அபிஷரிகாவை சிவகுமரன் வழிமறித்தான். அவள் மௌனமாய் அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"இப்போ கூட நீ உன்னை அடையாளம் காட்டிக்க விரும்பலை. அப்படித்தானே...?" அதற்கு அவள் பதில் அளிக்கவில்லை.

"நீ பெத்த மகன் உன்னைப் பார்த்து ஆன்ட்டின்னு கூப்பிடுகிறான். அதைக் கேட்டு உன் மனசு பதறலையா?"

'எதிர்பார்ப்பு இருந்தால் தானே ஏமாற்றம் வரும்.' என்று நினைத்தவள் அவனுக்குப் பதில் எதுவும் கூறவில்லை.

"நீயே உன்னை அடையாளம் காட்டிக்க விரும்பாத போது... நானும் உன்னை அடையாளம் காட்ட மாட்டேன்." என்றவனை நக்கலாய் பார்த்தவள்,

"இத்தனை வருசம் அடையாளம் காட்டாதவர் இனி தான் அடையாளம் காட்ட போறீங்களா? சும்மா விளையாடாதீங்க சார். ப்ரஷன்ஜித்தை பொறுத்தவரை காணாமல் போன அவன் அம்மா காணாமல் போனதாகவே இருக்கட்டும். அது தான் எல்லோருக்கும் நல்லது." என்று இறுகிய குரலில் கூறியவள் பின்பு அவனைப் பார்த்து,

"முக்கியமா உங்களுக்கு..." என்றவளது குரலில் அத்தனை நக்கல் இருந்தது.

"என்ன சொல்ற...?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"அப்போ தானே இன்னொரு கல்யாணம் கட்டிக்க முடியும். இன்னொரு பெண்ணை மனைவியாக்கி அவள் கூடச் சுகமா வாழ முடியும்." அவன் இரண்டாவது திருமணத்திற்குச் சம்மதித்தது, அவன் பத்மாவுடன் சிரித்துப் பேசியது என்று அவன் மீதிருந்த அத்தனை கோபத்தையும் இப்போது அவள் அவனிடம் காட்டினாள்.

"பிள்ளையைச் சாக்கு வச்சு இரண்டாவது கல்யாணத்துக்குத் தயாராகிட்டு... இப்போ நீங்க என்னைக் குறை சொல்றீங்களா?" அவள் கடுமையுடன் கேட்டாள்.

"போதும் நிறுத்து..." அவனது கர்ஜனை குரலில் அவளது வார்த்தைகள் அப்படியே நின்றது.

"ஆமாம்... அதுக்கு என்ன இப்போ...? இரண்டாவது கல்யாணம் பண்றது ஒண்ணும் தெய்வ குற்றம் இல்லை. நான் இரண்டாவது கல்யாணம் பண்ணத்தான் போறேன். முதல் அழைப்பிதழ் உனக்குத் தான்." என்று தீக்கங்குகளாய் வார்த்தையைக் கொட்டியவன்,

"அதற்கு முன் நீ விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து போட்டு கொடு." என்று அவளிடம் வெடித்தவன் அவளைத் திரும்பியும் பாராது நடந்தான்.

மனம் நிறையக் காதல் இருந்த போதும் அவளிடம் பணிந்து செல்ல அவனது ஈகோ இடம் கொடுக்கவில்லை. மனம் நிறையக் காதல் இருந்த போதும் அவளது தவறு அவனிடம் சென்று மன்னிப்பு கேட்க விடாது அவளைத் தடுத்தது.

"நிச்சயம் விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து போட்டுக் கொடுப்பேன் சிவூ. இதுவரை என்னால் உன் வாழ்க்கை அழிந்தது போதும். இனியாவது நீ நன்றாக இருக்க வேண்டும்." என்று கூறியவளுக்கு முதலில் அவனிடத்தில் இருந்த கோபம் இப்பொழுது இல்லை.

ஒருவேளை அவனது மனதினை அறிந்ததால் இருக்குமோ...! அதில் தனக்காகத் தனி இடம் இருப்பதை

அவள் உணர்ந்தே இருந்தாள். ஆனால் அதற்கான தகுதி அவளுக்கு இருக்கிறதா??? அதுவே அவளது இந்த விலகலுக்குக் காரணம்...!!!

தொடரும்...!!!

அத்தியாயம் : 18

திரைப்படத் துறை மற்றும் சில அரசியல் முக்கியப் பிரமுகர்களுக்காக 'ஷிவாரிகா' திரைப்படம் வெளிவரும் முன்னர்ச் சிறப்புக் காட்சியாகச் சென்னையின் பிரபல திரையரங்கில் திரையிடப்பட்டது. அதற்கு ஆகாஷ் தனது தந்தை நந்தகுமார் மற்றும் அன்னை மீராவுடன் வந்திருந்தான். சிவகுமரனும் அபிஷரிகா மீதான தனது மனஸ்தாபத்தை ஒதுக்கி வைத்துவிட்டு இதில் சந்தோசமாகக் கலந்து கொண்டான். இந்தத் திரைப்படம் அபிஷரிகாவின் திரைப்பட வாழ்வில் மிக முக்கியத் திரைப்படமாக அமையும் என்பதில் அவனுக்கு எள்ளவும் சந்தேகம் இல்லை. விருந்தினர்கள் ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தனர். ஆனால் நாயகி மட்டும் இன்னும் வரவில்லை.

"ரவி, இன்னும் அபி வரவில்லையா?" சிவகுமரன் அந்தப் பரபரப்பான நேரத்திலும் அவளைப் பற்றி விசாரிக்கத் தவறவில்லை.

"டாக்சி அரேன்ஜ் பண்ணவான்னு கேட்டதுக்கு மேடம் வேண்டாம்ன்னு சொல்லிட்டாங்க. அவங்களே கிளம்பி வர்றதா சொன்னாங்க."

"ப்ச், என் கிட்ட முன்னமே சொல்லியிருக்கலாமே ரவி. நான் காரை அனுப்பிக் கூப்பிட்டு இருப்பேனே." என்றவனது குரலில் உண்மையான வருத்தம் தெரிந்தது.

"அதோ மேடம் வந்துட்டாங்க." ரவியின் குரலில் திரும்பி பார்த்த சிவகுமரன் அங்கு வேகமாய் நடந்து வந்து கொண்டிருந்த அபிஷரிகாவை கண்டு கண்ணிமைக்க மறந்தான். அவளது அழகு அவனது கருத்தை கவர்ந்து மனதை நிறைத்தது. அவனது காதல் மனம் அவளது பிம்பத்தை அணு அணுவாய் ரசித்து உள்வாங்கிக் கொண்டது.

அருகில் வந்துவிட்ட அபிஷரிகா மரியாதை நிமித்தம் சிவகுமரனை கண்டு, "ஹாய்..." என்க... அதைக் கேட்டவன்

ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவளைக் கேள்வியாய் பார்த்தான். அவள் பதிலுக்கு அப்படிப் பார்க்க முடியாது சங்கடமான புன்னகையை உதிர்த்தாள். ஏனெனில் அவர்களைச் சுற்றி நிறைய ஊடகங்கள் இருந்தது. அதை உணர்ந்தவன் நமட்டு சிரிப்புடன்,

"வாங்க..." என்று அவளை வரவேற்றவன் உள்ளே சென்று அவளை அமர வைத்தான்.

தீபனும் திரைப்படத்தைப் பார்ப்பதற்கு வந்திருந்தான். வராது முறுக்கி கொள்ள முடியாது. ஏனெனில் திரைத்துறையில் முக்கியப் பொறுப்பில் இருப்பவன் என்று அவன் தன்னைக் காட்டி கொள்ளவே இந்த மாதிரியான இடங்களுக்கு வருவது வழக்கம். அவன் மறந்தும் அபிஷரிகாவை திரும்பி பார்க்கவில்லை. சிவகுமரனை கண்டும் காணாதது போல் கடந்து சென்றுவிட்டான். தீபனை கண்டதும் அன்றைய நாளின் நினைவில் சிவகுமரனுக்குச் சிரிப்பு பீறிட்டுக் கொண்டு வந்தது.

"ஹாய் அபி, ஹவ் ஆர் யூ?" அரசியல்வாதி ஒருவர் அபிஷரிகாவிடம் வழிந்து கொண்டே அவள் அருகே அமர முற்பட...

"சார், இங்கே இருந்து பார்த்தால் திரை தெளிவாகத் தெரியாது. விஐபிக்களுக்கு என்று தனியே அங்கே இடம் ஒதுக்கி இருக்கிறேன்." என்றவன் அவரை அழைத்துக் கொண்டு சென்று வேறு இடத்தில் அமர வைத்துவிட்டு வந்தான்.

மீண்டும் அபிஷரிகாவிடம் திரும்பி வந்தவன் மற்றவர் கவனத்தைக் கவராத வகையில் தானே அவள் அருகில் அமர்ந்து கொண்டான். அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள். அதைக் கண்டவன் அவள் புறம் சற்று குனிந்து,

"என் முகத்தில் படம் ஓடவில்லை. திரையைப் பார்." என்று கூறிவிட்டு அவன் திரையில் கவனத்தைப் பதித்தான். அவனது வார்த்தைகளில் அவள் அவசரமாய்த் திரையின் பக்கம் விழிகளைச் செலுத்தினாள்.

'ஷிவாரிகா' திரைப்படம் அழகான காட்சிகளாய் திரையில் மலர்ந்தது. தனக்குப் பிறந்த மழலையுடன் மழலையாய் புதிதாய் பிறந்த ஷிவாரிகாவுக்கு உலகமே வண்ணமயமாய் மாறிப் போனது. அவளது மகன் ஐந்து வயது சிறுவனாக இருக்கும் போது தாயிடம் தவறாக அணுகும் தந்தையையும், அதற்குப் பயந்து அழுது கூச்சலிடும் தாயையும் கண்டவன் சமையலறையில் இருந்து அருவாள்மனையை எடுத்துக் கொண்டு வந்து தந்தையை வெட்ட வருகிறான். சிறுவனின் தீர்க்கத்தில் பின்வாங்கும் தந்தை அதன் பிறகு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு சென்றுவிடுகிறான். அவனைப் பொறுத்தவரை மனைவி என்பவள் கட்டிலுக்கு மட்டுமே... அதைப் பற்றிக் கவலைப்படாத அந்த இரு அன்பு உள்ளங்களும் தங்களது தனி உலகில் சந்தோசமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றனர். அவளது மகன் அவளுக்கு அன்னையாகி போனான். அவன் இளைஞனாகி படித்து முடித்து வேலை பெற்றதும் தனது அன்னையைத் தன்னுடன் அழைத்துச் சென்றுவிடுகிறான். ஒருநாள் அவனது மடியில் படுத்து உறங்க விரும்பிய ஷிவாரிகா மகனிடம் தனது தலையை வருடி விடச் சொல்ல... அவனும் வருடி விட்டுக் கொண்டே அமர்ந்த நிலையில் உறங்கி போய்விடுகின்றான். மறுநாள் காலையில் அவன் எழுந்து அம்மாவை எழுப்பும் போது ஷிவாரிகா இறந்து போயிருப்பாள். அவனது 'அம்மா' என்கிற அலறலுடன் அந்தத் திரைப்படம் முடிகிறது.

அதைக் கண்ட கணம் அபிஷரிகா மனதில் தோன்றிய ஒரே ஆசை 'ப்ரஷன்ஜித் மடியில் உயிரை விட வேண்டும்' என்பது மட்டுமே. அவள் இதுவரை ஒரு மனைவியாய் தான் சிந்தித்து வந்திருக்கிறாள். ஆனால் இப்போது முதன்முறையாக ஒரு தாயாய் சிந்தித்தாள்.

திரையில் ஆழ்ந்த நிரந்தர நித்திரையில் இருக்கும் அவளது முகத்தை ஒரு பக்கம் காட்டியபடி மறுபக்கம் திரைப்படத்தின் உழைப்பில் பங்கு பெற்ற அத்தனை ஊழியர்களின் பெயர்களும் வரிசையாக ஓடி கொண்டிருந்தது. தான்

தானா இது? என்று அபிஷரிகாவிற்கு மிகுந்த பிரமிப்பாக இருந்தது. இது அவளது கணவனால் மட்டுமே சாத்தியமாயிற்று என்று நினைத்தவள் அவன் புறம் திரும்ப... அப்போது திரையைப் பார்த்தவாறு அவனும்,

"பார்ன் ஃபார் ஆக்ட்டிங் என்பதை மீண்டும் நீ நிரூபிச்சிட்ட... ரொம்பச் சந்தோசமாயிருக்கு." என்க... கணவனது பாராட்டைக் கேட்டு அவளுக்கு வானத்தில் பறப்பது போன்று சந்தோசமாக இருந்தது. உணர்ச்சி வேகத்தில் அவனது கையைப் பற்றியவள்,

"இதெல்லாம் உன்னால் தான் சாத்தியமாச்சு சிவூ..." என்றவளது தலை நெகிழ்வுடன் அவனது தோளில் சாய்ந்து கொண்டது. இன்பமோ, துன்பமோ பகிர்ந்து கொள்ள அவனைத் தவிர உற்றுத் துணை அவளுக்கு வேறு யார் இருக்கிறார்கள்? அதனால் தான் அவளது எல்லையற்ற மகிழ்ச்சியை அவனிடம் பகிர்ந்து கொண்டாள். அவனும் பதிலுக்கு அவளது கரத்தின் மீது தனது கரத்தினை வைத்து ஆறுதலாய் தட்டி கொடுத்தான். அவனது ஆறுதலில் அவள் அவனை ஏறிட்டு பார்க்க... அவனும் குனிந்து அவளைத் தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது கண்ணில் வழிந்த எல்லையற்ற காதலில் அவள் பேச்சற்று போனாள்.

திடுமென விளக்குகள் பளீரிட்டதும் இருவருக்கும் நடப்பு புரிய சட்டென்று விலகி அமர்ந்தனர். அவள் அவனது முகத்தைப் பார்க்க முடியாது சங்கடத்துடன் அமர்ந்திருந்தாள். அதை உணர்ந்தவனாய் அவன் எழுந்து சென்றுவிட்டான்.

அடுத்தக் கணம் அனைவரும் அவளைச் சூழ்ந்து கொண்டனர். எல்லோரும் அவளது நடிப்பை புகழ்ந்து பாராட்டினர். வெகு வருடங்கள் கழித்து அவள் மீண்டும் திரைத்துறைக்கு வந்தாலும் அவளது நடிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது என்று கூறினர். சிலர் ஒரு படி மேலே போய் இந்தப் படத்திற்கு அவளுக்கு தேசிய விருது கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்று கூற... அதைக் கேட்டதும் அவளது விழிகள் கணவனைத் தேடியது. அவன் சற்று

தள்ளி நின்று கொண்டு அவளைப் புன்னகையுடன் பார்த்திருந்தான்.

இந்தச் சிவகுமரன் அவளது கணவன் இல்லை. கணவன் சிவகுமரனின் மனதில் தான் கோபமும், ஆதங்கமும் இருந்தது. ஆனால் இவனுக்கு அபிஷரிகாவின் நலன் மட்டுமே முக்கியமாகப் பட்டது. அவளை மேலே ஏற்றிவிட்டு கீழே இருந்து பிரமிப்புடன் பார்க்கும் வேலைக்காரன் சிவகுமரன் இவன்...

ஊடகங்களுக்குச் சிவகுமரன், அபிஷரிகா, ரவி மூவரும் பேட்டி கொடுத்துவிட்டு வந்தனர். அபிஷரிகா தனியே வந்ததும் ஆகாஷ் தனது பெற்றோருடன் அவளைக் காண வந்தான். வந்ததும் அவன் தனது தோழியை ஆரத்தழுவி கொண்டான். இதைச் சிவகுமரன் புன்னகையுடன் பார்த்திருந்தான்.

"நீ ஜெயிச்சிட்ட பேப்... உன்னை நினைச்சு பெருமையா இருக்கு." என்று கூறியவனின் விழிகள் கலங்கியது.

"உன்னை இப்படிப் பார்க்க ரொம்பச் சந்தோசமாயிருக்கு அபி." நந்தகுமாரும் அவளைப் பாரட்டினார். மீராவும் தனது பங்கிற்குப் பராட்டினார். பிறகு மூவரும் கிளம்பி சென்றுவிட... அபிஷரிகா தனது அலைப்பேசியை எடுத்து வாடகை காருக்கு அழைக்கப் போக... அதை வேண்டாம் என்று தடுத்த சிவகுமரன்,

"நானே கொண்டு போய் விடறேன்." என்றவனது பேச்சை அவளால் அனைவரின் முன்னிலையில் தட்ட முடியவில்லை. சில நொடிகளில் அவன் காரை எடுத்துக் கொண்டு வந்து அவள் அருகில் நிறுத்தினான். அவள் ஏறியதும் அவன் காரை கிளப்பினான். இருவரும் சிறிது தூரம் மௌனமாக வந்தனர்.

"நான் உங்க கிட்ட கொஞ்சம் பேசணும் மிஸ்டர். சிவகுமரன்..." சிவூ, சிவகுமரன் ஆனதை கண்டு அவன் உள்ளுக்குள் வியந்தாலும் அதை வெளியில் காட்டி கொள்ளாது,

"சொல்லு..." என்க... அவள் தனது கைப்பையைத் திறந்து அதில் இருந்து காசோலை ஒன்றை எடுத்தாள்.

"இந்தாங்க..." என்று அவன் புறம் அவள் நீட்ட...

"என்னது?" அவன் புரியாது அவளைப் பார்த்தான்.

"படத்துக்கு நீங்க கொடுத்த சம்பளம்..."

"அதை எதுக்கு என் கிட்ட கொடுக்கிற...?"

"ஏதாவது ஆசிரமத்துக்குக் கொடுத்துருங்க..."

"கொடுத்துட்டு... நீ என்ன பண்ண போற?" அவனது வார்த்தைகள் கோபத்துடன் வெளிவந்தது.

"நான் திரும்ப ஊருக்கு போகலாம்ன்னு இருக்கேன்." அவளது வார்த்தைகளின் தாக்கத்தில் அவனது கைகளில் கார் தடுமாறியது. சட்டென்று சுதாரித்துக் கொண்டு காரை நிதானமாகச் செலுத்தியவன்,

"உனக்கு என்ன பைத்தியமா பிடிச்சிருக்கு...? இப்போ எதுக்கு அங்கே போகணும்ன்னு நினைக்கிற?" அடக்கப்பட்ட கோபத்தில் சீறினான்.

'இங்கே இருந்தா தான் எனக்குப் பைத்தியம் பிடிச்சிரும்.' என்று மனதிற்குள் நினைத்தவள் வெளியில் அவனிடம், "நீங்க என்ன சொன்னீங்க...? படத்தை முடிச்சு கொடுத்துட்டுப் போகச் சொன்னீங்க. அதைத் தான் நான் செய்கிறேன்." என்று பட்டென்று கூற...

"இங்கே பார் அபி... நீ என்னை விட்டு போனதால் நீ கஷ்டப்படணும்ன்னோ, இல்லை நாசமா போகணும்ன்னோ நான் சாபம் விட்டது இல்லை. எங்கே இருந்தாலும் நீ நல்லா இருக்கணும்ன்னு தான் நான் நினைச்சேன்." என்று குரல் கமற கூறியவனைக் கண்டு அவள் ஆச்சரியமாய்த் திரும்பி பார்த்தாள். அந்தக் கணம் அவனது முகத்தில் இருந்த வேதனை, விழிகளில் இருந்த வலி அனைத்தும் அவன் கூறுவது உண்மை என்றே கூறியது. அதைக் கண்டு அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

"உன் தாத்தா போட்ட உப்பில் வளர்ந்தவன் நான்... அவர் போட்ட பிச்சை தான் என் உடம்பில் ரத்தமா ஓடுது. அப்படிப்பட்டவரோட பேத்தி நீ கஷ்டப்படுவதை என்னால் எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்?"

'சிவூ...' அவனது அன்பில் அவளது மனம் ஊமையாக அழுதது.

"நீ உங்க தாத்தாவுக்கு இளவரசி... எங்களுக்கு மகாராணி. நீ போய்..." என்றவனுக்கு மேலே பேச வார்த்தைகள் வரவில்லை. சிறிது இடைவெளி விட்டு அவனே மீண்டும் தொடர்ந்தான்.

"என்னை உன் கணவனா பார்க்காதே. ஒரு வேலைக்காரனா என்னைப் பார். ஒரு வேலைக்காரனா உன்னை உயர்த்திப் பார்க்க ஆசைப்படுகிறேன். இதை மட்டும் எனக்காகச் செய். ப்ளீஸ்..." என்று இறைஞ்சும் குரலில் அவன் கெஞ்சினான். இந்தக் கணம் அவனது கோபம் எல்லாம் எங்கோ பறந்து சென்றிருந்தது. அவளது நலன் மட்டுமே அவனது மனதில் இருந்தது.

"இந்தப் படம் நல்லா போனால்... இல்லையில்லை, நிச்சயம் நல்லா போகும். அதுக்குப் பிறகு உனக்கு நிறையப் பட வாய்ப்புகள் வரும். நீ நினைச்ச மாதிரி சினி ஃபீல்டில் நம்பர் ஒன் ஸ்டாரா வலம் வரலாம். எனக்கு நம்பிக்கை இருக்கு. உனக்கே தெரியும்... சினி ஃபீல்டில் எத்தனை பெண்களுக்குப் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இருக்குன்னு. இதுக்கு எல்லாம் நீ ஒரு முடிவு கட்ட வேண்டாமா? நீ எப்படி இதை எல்லாம் தைரியமா ஃபேஸ் பண்ணினியோ அதை எல்லாம் அவங்களுக்குச் சொல்லி கொடுக்க வேண்டாமா? உன்னோட அந்தத் தைரியம் எங்கே போனது? உலகத்தில் வாழ்வது ஒரு முறை. அந்த வாழ்க்கையில் ஏதாவது சாதிக்க வேண்டாமா?" என்று நீளமாக அறிவுரை கூறியவனை விழியகல பார்த்தாள் அவள்...

கொஞ்ச நாட்களுக்கு முன் இரண்டாம் திருமணம் செய்யப் போகிறேன், விவாகரத்து கொடு என்று கேட்டவனா

இவன்...??? அப்படி விலகி போக நினைப்பவன் மனதில் அவளைப் பற்றிய அக்கறை ஏன்??? அந்த அக்கறையின் பின்னால் இருந்த கணவனது காதல் அவளுக்குப் புரிந்தது. அதை உணர்ந்தவளுள் எல்லையில்லா உவகைப் பெருகியது. அவனுக்குப் பதில் கூறாது அவள் வெளியில் வேடிக்கை பார்த்தபடி வந்தாள். அவனும் அதன் பிறகு அவளிடம் எதுவும் பேசாது வந்தான். அவளது இருப்பிடம் வந்ததும் அவள் இறங்க தயாரானாள்...

"ஒரு நிமிசம்..." என்றவன், "என்ன முடிவு பண்ணியிருக்க?" என்று கேட்க...

"சாதிக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்." என்று புன்னகையுடன் கூறியவள் கார் கதவை திறந்து கொண்டு இறங்க... அவன் முகம் கொள்ளா புன்னகையுடன் அவளைப் பார்த்தான்.

"அபி..." என்றழைத்தவனைத் திரும்பி பார்த்தவள் 'என்ன' என்று விழிகளால் வினவ...

"தேங்க்ஸ்..." என்றவன் உற்சாகத்துடன் காரை கிளப்பிக் கொண்டு சென்றான்.

மனைவிக்கு நன்மை செய்துவிட்ட திருப்தியில் கணவனது மனம் சந்தோசத்தில் திளைத்திருந்தது. அவளுமே கணவனது அக்கறையில் மனம் பூரித்துப் போயிருந்தாள்.

கதவை திறந்து வீட்டிற்குள் நுழைந்தவள் நேரே கண்ணாடி முன் போய் நின்றாள். தனது தோற்றத்தை கண்ணாடியில் பார்த்தவளின் முகம் அதிருப்தியை பிரதிபலித்தது. சற்று குண்டாகி இருந்த உடம்பு அவளுக்கு அத்தனை சோபையைத் தரவில்லை. பழைய அழகு அவளிடத்தில் காணாமல் போயிருந்தது. அப்படியிருந்தும் சிவகுமரனின் விழிகளில் வழிந்த காதல் பொய்யில்லையே. அவள் எப்படியிருந்தாலும் காதலிக்கும் அவனது மனதின் அழகு கண்டு அவளது காதலும் அதிகரித்தது. காதல் விழி சார்ந்தது அல்ல... அது மனம் சார்ந்தது என்பதை அவளுக்கு

நன்கு உணர்த்தியிருந்தான் சிவகுமரன்... மனம் சார்ந்த காதலுக்கு அழிவுண்டோ...!!!

அடுத்து வந்த நாட்கள் இறக்கை கட்டி கொண்டு பறந்தது. முழுதாக மூன்று மாதங்கள் கடந்து சென்றிருந்தது. அபிஷரிகா தியானம், உடற்பயிற்சி என்று தனது மனதையும், உடலையும் கட்டுப்படுத்தும் பயிற்சிகளை மேற்கொண்டாள். இத்தோடு அவள் மனநல மருத்துவரிடம் சிகிச்சையும் பெற்று வந்தாள். அவளுக்குத் தன்னிடம் ஏதோ ஒரு குறை இருப்பது போல் தோன்றியது. சராசரி பெண்ணாய்த் தன்னால் குடும்ப வாழ்க்கையை எதிர்கொள்ள முடியாது போனது குறித்து அவளக்கு உள்ளுக்குள் ஒரு பயம் இருந்து கொண்டே இருந்தது. அதனால் தான் அவள் சிகிச்சைக்குச் சென்றது. இது யாருக்கும் தெரியாது. அவ்வப்போது ஆகாஷ் வந்து அவளைப் பார்த்துவிட்டு செல்வான். சிவகுமரனை இடையில் ஒரு தடவை பார்த்தது அதற்குப் பிறகு அவள் அவனைப் பார்க்கவில்லை.

ஆகாஷுடன் ப்ரஷன்ஜித் அடிக்கடி அவளைச் சந்திக்க வருவான். ஆகாஷ் தோழியின் மனதை புரிந்தவனாய் தான் வரும் போது எல்லாம் சின்னவனை உடன் அழைத்து வருவான். அவனால் முடிந்தது அவ்வளவே... முடிவு எடுக்க வேண்டியது அபிஷரிகாவும், சிவகுமரனும் அல்லவா...! அதைக் கேள்விப்பட்ட சிவகுமரன் அபிஷரிகாவை அழைத்துக் கண்டித்தான்.

"ப்ரஷன் உன்னுடன் பழகுவது எனக்குப் பிடிக்கவில்லை. நீ அவனை விட்டு விலகியிருப்பது அவனுக்கு நல்லது." என்று அவன் கோபத்துடன் சீறினான்.

"நானாக அவனைப் பார்க்க போகவில்லை. இதற்கு நான் உத்திரவாதம் அளிக்கிறேன். அதேசமயம் அவனாக என்னைப் பார்க்க வந்தால்...???" என்று நிறுத்தியவள்,

"அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது." என்று சிறிது நக்கல் கலந்து கூறியவளை கண்டு அவன் கோபத்தில் பல்லை கடித்தான்.

"அம்மா என்று அடையாளம் காட்ட முடியாது. ஆனால் மகனை மட்டும் கொஞ்சுவாயா...? இது எந்த ஊர் நியாயம்?" என்று கடுப்புடன் கேட்டவன் அழைப்பை துண்டித்துவிட்டான். அதன் பிறகு அவன் அவளுக்கு அழைக்கவில்லை.

தன் போக்கில் நினைத்துக் கொண்டிருந்த அபிஷரிகாவின் அலைப்பேசி அழைத்து அவளை நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது. யாரென்று எடுத்து பார்த்தவளின் முகம் மலர்ந்து போனது. அவளது அருமை கணவன் தான் அவளை அழைத்திருந்தான். முகம் கொள்ளா புன்னகையுடன் அழைப்பை ஏற்றவளிடம் அவனும் உற்சாகத்துடன்,

"வரும் வெள்ளியன்று 'ஷிவாரிகா' படம் வெளிவந்து நூறு நாட்களாகப் போகிறது. இந்த வெற்றியை கொண்டாட வெள்ளியன்று பெரியளவில் ஃபங்கசனுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கேன். இதில் நீ கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்." என்று சந்தோசமாய்க் கூறினான்.

"நிச்சயம் வருகிறேன்." என்றவளுக்கும் உற்சாகம் தொற்றிக் கொண்டது. அவளும் அறிவாளே! இந்தத் திரைப்படம் தமிழ் திரைத்துறை வரலாற்றில் தனது காலடியை அழுத்தமாய்ப் பதித்திருப்பதை... அதற்கு அவள் தனது கணவனுக்கு மானசீகமாக நன்றி தெரிவித்துக் கொண்டாள்.

அன்றிலிருந்து அபிஷரிகா விழாவை ஆவலுடன் எதிர்பார்த்தாள்... அவள் ஆவலுடன் எதிர்பார்த்த நாளும் வந்தது. 'ஷிவாரிகா' தயாரிப்பு நிறுவனம் இயங்கும் கட்டிடத்தில் தான் விழாவினை வைத்திருந்தான் சிவகுமரன். அவள் காரிலிருந்து இறங்கியதில் இருந்து உள்ளே செல்லும் வரை ஊடகங்களின் அத்தனை புகைப்படக் கருவிகளும் அவளையே பின்தொடர்ந்தது. பழைய அபிஷரிகாவாக அவள் சிக்கென்று சின்ன இடையோடு, கொடி போன்ற மேனியுடன் அத்தனை அழகாய் இருந்தாள். சிவகுமரன் இமைக்க மறந்து

அவளைப் பார்த்திருந்தான். அவள் எப்படி இருந்தாலும் அவனுக்குப் பிடிக்கும்... இப்படி மயக்கும் பேரழகுடன் அவள் இருந்தால் அவனுக்குப் பிடிக்காது போகுமா...!!! கணவனது பார்வையில் அவளது மனதில் கர்வம் முளைத்தது. லட்சக்கணக்கான ரசிகர்கள் அவளை ஆர்வத்துடன், வியப்புடன் பார்த்த போது வந்த கர்வம் வேறு... இப்போது எழும் இந்தக் கர்வம் வேறு...!

கேக் வெட்டி பெரியளவில் இந்த வெற்றியை கொண்டாடி மகிழ்ந்தனர் படக்குழுவினர். அந்த இடத்திலேயே அபிஷரிகாவிற்கு மேலும் பல பட வாய்ப்புகள் வந்தது. அது அனைத்திற்கும் காரணம் சிவகுமரன் அல்லவா...!

"இது உனக்குச் செகண்ட் இன்னிங்ஸ்... வாய்ப்புகளை ஏற்றுக் கொள்." என்று அவன் அவளை ஊக்குவிக்க... அவளும் தனக்கு வந்த வாய்ப்புகளை மனமுவந்து மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள்.

சேய் விசயத்தில் தீயாய் காய்பவன் இப்போது அவளுக்குத் தாயாய் மாறி தாங்குவது ஏனோ...! அவனும் யாரும் புரிந்து கொள்ளாத புதிர் தானோ...!!!

விழா முடிந்ததும் அபிஷரிகாவை தனியே அழைத்த சிவகுமரன் அவளது கையைப் பிடித்தான். அவள் மனம் அதிர ஒருவித எதிர்பார்ப்புடன் அவனைப் பார்த்தாள். அவனோ அவளது பார்வையைக் கவனிக்காது தனது கையிலிருந்த சாவி கொத்தை எடுத்து அவளது கையில் வைத்தான். அவள் திகைத்து போய் அவனைப் பார்த்து,

"என்ன இது?" என்று கேட்க...

"இது உனக்குச் சேர வேண்டியது." என்றவனை அவள் புரியாது பார்க்க...

"இனி ஷிவாரிகா புரொடக்ஷனை நீ தான் பார்த்துக் கொள்ள வேண்டும். உனக்காக, உனக்காவே உருவாக்கப்பட்டது இந்த நிறுவனம். இது உனக்குச் சேர

வேண்டியது. உன்னிடம் சேர்ப்பித்து விட்டேன்." என்றவனை அவள் பிரமிப்புடன் பார்த்திருந்தாள்.

"இந்த நிறுவனத்தின் சாவியோடு, உனக்கு என்று வாங்கிய வீட்டின் சாவியும் இருக்கிறது. எல்லாவற்றையும் நிர்வாகம் பண்ண ஆளிருக்கிறது. நீ மேற்பார்வை மட்டும் பார்த்தால் போதும். நானும் அவ்வப்போது பார்த்து கொள்கிறேன்." முன்பு தனியாளாய் தொழிலை நடத்தி நஷ்டத்தைச் சந்தித்தது போல் இப்போது நஷ்டம் அடைய தேவையில்லை. அவன் உடன் இருப்பதாய் உறுதி அளித்தான்.

"இல்லை, எனக்கு எதுவும் வேண்டாம். நான் தான் படத்தில் நடிக்கப் போகிறேனே. என்னால் சம்பாதிக்க முடியும். என்னை நான் பார்த்து கொள்வேன்."

"இல்லையென்று நான் சொல்லவில்லையே. ஆனால் செய்ய வேண்டியது என் கடமை." என்றவனை அவள் ஆழ்ந்து பார்க்க...

"கணவனாய் இல்லை... உன் வீட்டு உப்பை தின்ற ஒரு வேலைக்காரனாய்... உன்னைக் கஷ்டப்பட விட்டுட்டு என்னால் நிம்மதியா சொகுசா வாழ முடியவில்லை." என்றவன் அதற்கு மேல் ஒன்றும் பேசாது கிளம்பிவிட்டான்.

அவளது மனம் போல் கையிலிருந்த சாவி கொத்தும் கனத்தது. அன்று அவனைப் புரிந்து கொள்ளாது சொத்துக்களுக்காக அவள் அவனைப் படுத்திய பாடு தான் எத்தனை... அப்படியிருந்தும் அவன் அவளுக்காக ஒவ்வொன்றாய் பார்த்து பார்த்துச் செய்வது கண்டு அவளுக்கு அழுகை வரும் போலிருந்தது.

"இதுக்கு நீ என்னைக் கொன்று இருக்கலாம் சிவா... இருப்பதிலேயே மன்னிப்பு தான் மிகப் பெரிய தண்டனை தெரியுமா? அந்த மன்னிப்பை மீண்டும் மீண்டும் எனக்கு வழங்கி நீ என்னைத் தண்டிக்கிறாய் சிவா. உனக்குத் துரோகம் செய்த எனக்குக் கூட நல்லது நினைக்கும் உன் மனசு யாருக்கும் வராது. இதைப் புரிந்து கொள்ள எனக்கு

இத்தனை நாட்களாகி இருக்கிறது. நான் ரொம்பவே லேட் சிவூ." என்று முணுமுணுத்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் ஆறாக வழிந்தோடியது.

*******************************

அபிஷரிகா தன்னைப் பார்த்து பார்த்து அலங்கரித்துக் கொண்டாள். அடர் நீல நிறத்தில் சிவப்பு கரையிட்ட பட்டுப்புடவையும், அதே சிவப்பு நிற இரவிக்கையில் கை மட்டும் அடர் நீல நிற பட்டுத்துணி கொண்டு தைக்கப்பட்டு இருந்த இரவிக்கையை அவள் அணிந்திருந்தாள். அதற்கு ஏற்றார் போன்று அணிகலன்கள் அணிந்து, சிகை அலங்காரம் செய்திருந்தாள். எளிமையான அலங்காரத்திலும் அவள் தேவதையைப் போல் ஜொலித்தாள். மீண்டும் ஒரு முறை கண்ணாடியில் தன்னைச் சரிபார்த்து கொண்டவள் தனது காரை கிளப்பிக் கொண்டு சென்றாள். ஆம், சிவகுமரன் இந்தக் காரை அவளுக்குப் பரிசளித்து இருந்தான். படம் நன்றாக ஓடியதால் பரிசு கொடுக்கிறேன் என்கிற சப்பைக்கட்டு வேறு... அதை நினைத்து அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'உன் அக்கறை தான்டா என்னை உன் மேல் பைத்தியமாக்குகிறது.' என்று அவள் தனக்குள் முணுமுணுத்து கொண்டாள். எப்போதும் அவள் மீது அக்கறையாக இருப்பவன், மகன் என்று வந்துவிட்டால் மட்டும் அப்படியொரு கோபம் கொள்வான். இப்போது எல்லாம் அதையும் அவள் தாங்கி கொள்ளப் பழகியிருந்தாள்.

நட்சத்திர விடுதியின் வாயிலில் காரை நிறுத்தியவள் கார் சாவியை அங்கிருந்தவரிடம் கொடுத்துவிட்டு உள்ளே சென்றாள். அங்கு வைத்து தான் இன்று ஆகாஷ், யமுனா நிச்சயதார்த்தம் நடக்கவிருக்கிறது. அதற்குத் தான் ஆகாஷ் அவளுக்கு அழைப்பு விடுத்திருந்தான். அவள் எவ்வளவோ மறுத்து பார்த்தும் அவன் கேட்கவில்லை. அவள் கட்டாயம் வந்தே ஆகவேண்டும் என்று கட்டளையிட்டு விட்டான்.

அவன் பேச்சை தட்ட முடியாது அவள் வந்திருக்கிறாள். இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ??? அவளுக்கு உள்ளுக்குள் சற்று உதறல் எடுத்தது.

அவள் மனதிற்குள் பயந்தது போலவே அவள் முதலில் மாட்டி கொண்டது வேணியிடத்தில்... அவள் உள்ளே வந்ததை அவர் தான் முதலில் கவனித்தார். அவளைக் கண்டதும் அவரது ஆத்திரம் அதிகரிக்க விறுவிறுவென அவள் முன் வந்து நின்றார். திடுமென அவர் தன் முன் வந்து நின்றதும் அவளும் திகைப்புற்றவளாய் அவரைப் பார்த்திருந்தாள்.

"எதுக்கு இங்கே வந்த...?" என்று அவர் தனது குரலை சற்று உயர்த்திக் கேட்க... இவளோ மொழி மறந்து போன மழலையாய் விழித்தாள்.

"என் மகனை மயக்க வந்தியா? இன்னும் என் மகனை என்னவெல்லாம் செய்யப் போற? அதான் வீடு, கார், சொத்துன்னு அவன் கிட்டயிருந்து எல்லாத்தையும் பிடுங்கிட்டியே... இன்னும் என்ன வேணும் உனக்கு...? அவன் நிம்மதியா? இல்லை அவனது வாழ்க்கையா? இன்னும் என்ன மிச்சம் இருக்குன்னு அவனை உயிரோடு கொல்ல வந்திருக்க...?" அவர் ஆக்ரோசமாய் அவளைப் பார்த்து கேட்க... அவரது அநாகரீகமான வார்த்தையில் பாவையவளுக்கு மெல்ல உணர்வு வந்தது.

"இனிமேலும் உங்க மகனை மயக்க வேறு செய்யணுமா?" அவளது வார்த்தைகளில் அத்தனை கர்வம் நிரம்பி வழிந்தது. எல்லாம் கணவனது காதல் கொடுத்த தைரியம் தான்...!

"ஏய் என்னடி சொல்ற...?" அவரால் தனது காதுகளை நம்ப முடியவில்லை.

"ஏற்கெனவே உங்க மகன் என் கிட்ட மயங்கி தான் இருக்கான். நான் ஒண்ணும் மெனக்கெட்டு போய் அவனை மயக்கணும்ன்னு எந்த அவசியமும் இல்லை." என்றவளை கண்டு அவர் திகைத்துப் போனார்.

"நான் மூணு வார்த்தை சொன்னால் போதும்... அடுத்த நொடி உங்க மகன் உண்மையில் மயங்கி கீழே விழுந்து விடுவான். அது என்னன்னா...?" என்றவள் அந்த மூன்று வார்த்தைகளை நிறுத்தி நிதானமாய் அதேசமயம் அழுத்தமாய் உச்சரித்தாள்.

"ஐ லவ் யூ..."

தொடரும்...!!!

# அத்தியாயம் : 19

தனது வார்த்தைகளில் அதிர்ந்து நின்ற வேணியை கண்ட அபிஷரிகாவிற்கு சிரிப்பு பொத்து கொண்டு வந்தது. முயன்று கஷ்டப்பட்டு தன்னை அடக்கி கொண்டவள் அவரை பார்த்து,

"ஹலோ மாமியாரே, நான் உங்களை பார்த்து 'ஐ லவ் யூ' சொல்லலை. நான் சொன்னது உங்க மகனுக்கு... உங்களுக்கு இல்லை." என்று நமட்டு சிரிப்புடன் நக்கலுடன் கூற... அதை கேட்டு அவளை முறைத்து பார்த்த வேணி,

"யாருக்கு யாருடி மாமியார்...? நான் உனக்கு மாமியாரா?" என்று கடும்கோபத்துடன் சீறினார்.

"உங்க மகன் எனக்கு புருசன்னா நீங்க எனக்கு மாமியார் தானே..." அவள் ஒற்றை புருவத்தை கேள்வியாய் ஏற்றியிறக்கினாள்.

"ஓஹோ, அப்படியொரு நினைப்பிருக்கா உனக்கு...? அப்படியொரு நினைப்பு இருந்தால் இப்பவே அதை அழிச்சிரு..."

"என்ன சவுண்ட் ரொம்ப ஓவராயிருக்கு..." என்று வலக்கை சுண்டுவிரல் கொண்டு காதை குடைந்தவள்,

"சட்டப்படி நாங்க ரெண்டு பேரும் பிரியலை. அதை நல்லா ஞாபகம் வச்சுக்கோங்க." என்றவளது குரல் அழுத்தம் திருத்தமாய் வெளிவந்தது. அவளது முகமோ உணர்வுகளை தொலைத்து இறுகி போயிருந்தது.

அபிஷரிகாவின் வார்த்தைகளில் இப்போது வேணி உண்மையில் அதிர்ந்து போனார். இதை பற்றி அவர் சற்றும் யோசிக்கவில்லையே. இப்போது மகனது வாழ்க்கை பற்றிய கவலை அவரை ஆக்கிரமித்து கொண்டது. எல்லாம் இருந்தும் இந்த சின்ன வயதில் வாழ்க்கையை இழந்து தவிக்கும் மகனை கண்டு அவருக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அவன் நன்றாக இருக்க வேண்டுமானால் அபிஷரிகா அவனது வாழ்க்கையில் இருக்க கூடாது.

அவளை அகற்ற வேண்டும் என்கிற எண்ணமே அவரது மனதில் ஓங்கி இருந்தது. அதனால் அவர் அந்த விபரீத முடிவை எடுத்தார். அந்த முடிவு எடுத்ததும் அவரது மனதில் நிம்மதி எழுந்தது. அதை அவரது முகம் நன்கு பிரதிபலித்தது. அதை கண்ட அபிஷரிகாவின் விழிகள் சற்று யோசனையாய் இடுங்கியது.

"என் மகனோட வாழ்க்கையை எப்படி சீரமைக்கிறதுன்னு எனக்கு தெரியும்." என்று உறுதியான குரலில் சொன்னவர்,

"உன்னால் என்ன செய்ய முடியுமோ செஞ்சுக்கோ." என்று எள்ளலாய் கூறியவர் அவளை அற்பமாய் பார்த்தபடி விலகி நடந்தார்.

என்ன தான் அவரிடத்தில் தைரியமாக காட்டி கொண்டாலும் அபிஷரிகா மனதளவில் மிகவும் சோர்ந்து போனாள். அடுத்து தாத்தா, பாட்டியை வேறு சமாளிக்க வேண்டுமே என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது. ஏன் தான் தான் இங்கு வந்தோமோ? என்று அவள் தன்னை தானே நொந்து கொண்டாள். நேரே நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்கு வந்தவள் கண்ணில் நல்லவேளையாக யாரும் விழவில்லை. அவள் நிம்மதி பெருமூச்சு விட்டபடி அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். சொந்த நாத்தனார் நிச்சயதார்த்த விழாவில் மூன்றாம் மனுசி போல் தான் அமர்ந்திருப்பது கண்டு அவளுக்கே சற்று ஒரு மாதிரியாக இருந்தது.

"ஹாய் ஆன்ட்டி..." திடுமென ஒலித்த ப்ரஷன்ஜித்தின் குரலில் அவள் திரும்பி பார்த்தாள். அங்கு ப்ரஷன்ஜித் வேட்டி, சட்டை உடுத்தி அழகாக நின்றிருந்தான்.

"வாவ், குட்டி பையா ரொம்ப அழகாயிருக்கியே..." மகனை கண்டு சந்தோசம் கொண்டவள் அவனை மடியில் அமர்த்தி அணைத்து கொண்டாள்.

"தேங்க்ஸ் ஆன்ட்டி..." என்றவன் கன்னத்தில் அவள் அழுந்த முத்தமிட்டாள்.

"இருங்க ஆன்ட்டி... உங்களுக்கு கூல் ட்ரிங்க்ஸ் கொண்டு வர்றேன்."

"வேண்டாம் ப்ரஷூ..." அவள் சொல்லும் முன் அவன் சிட்டாக பறந்திருந்தான். வேணியின் வார்த்தையில் காயப்பட்டு இருந்தவள் இப்போது மகனின் அன்பில் மகிழ்ச்சியில் கண்கள் கரிக்க அமர்ந்திருந்தாள்.

"இந்தாங்க ஆன்ட்டி..." சில நிமிடங்களில் அங்கு வந்த ப்ரஷன்ஜித் அவளிடம் குளிர்பானத்தை நீட்டினான்.

"முதலில் நீ குடிச்சிட்டு கொடு." என்றவள் பாட்டிலை மகனிடம் நீட்டினாள். அவனும் பிகு பண்ணாமல் அவள் அருகில் அமர்ந்து குடித்தான். இருவரும் பேசி கொண்டு இருக்கும் போது எங்கிருந்தோ ஓடி வந்த ஒரு சின்ன வாண்டு ப்ரஷன்ஜித்தின் கையிலிருந்த குளிர்பானத்தை தட்டிவிட்டு சென்றுவிட... அவனது அழகான உடை குளிர்பானத்தால் அபிஷேகமானது. அதன் கறை அவனது வெள்ளை வேட்டியில் அசிங்கமாக தெரிந்தது.

"அச்சச்சோ..." ப்ரஷன்ஜித் தலையில் கை வைத்தான். அவளுக்குமே அவனை கண்டு பாவமாக இருந்தது.

"டோன்ட் வொர்ரி... வேற ட்ரெஸ் மாத்திக்கலாம்..." என்று கூறியபடி அவள் தனது கைக்குட்டையால் அவனது உடையில் கொட்டியிருந்த குளிர்பானத்தை துடைத்து விட்டாள்.

"நான் போய் டிரெஸ் மாத்திட்டு வர்றேன் ஆன்ட்டி..." என்றபடி சின்னவன் எழுந்தான்.

"நானும் கூட வரவா?" தனியே அமர்ந்திருக்க அவளுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"ஓகே ஆன்ட்டி..." அவன் மகிழ்ச்சியுடன் தலையாட்டினான். இருவரும் இணைந்து அந்த ஹாலை விட்டு வெளியில் வந்தனர்.

"ஆன்ட்டி, ஃபர்ஸ்ட் ஃப்ளோர் தான்... படியில் போகலாம்." ப்ரஷன்ஜித் அவளை அழைத்து கொண்டு படியை நோக்கி சென்றான். இருவரும் பேசியபடி படியில் ஏற துவங்கினர்.

ஏதோ உள்ளுணர்வு தூண்ட அபிஷரிகா நிமிர்ந்து பார்த்தாள். மேலே படியின் ஆரம்பத்தில் சிவகுமரன் இறங்கி வந்து கொண்டிருந்தான். அவனும் மகனை போன்று அதே நிறத்தில் வேட்டி, சட்டை அணிந்திருந்தான். வேட்டி, சட்டையில் கம்பீரமாக இருந்தவனின் அழகு அவளுள் சொட்டு சொட்டாக இறங்கியது. அவள் கணவனை இமைக்காது பார்த்தபடி படி ஏறி கொண்டிருக்க... சிவகுமரனும் எதிர்பாராது அங்கு மனைவியை கண்டதும் முதலில் திகைத்தவன் பின்பு அவனது காதல் மனம் அவளது அழகினை ரசனையுடன் ரசித்து பார்த்தது. ஒருவேளை அவளது சந்திப்பினை அவன் எதிர்பார்த்து இருந்தால் அவன் தனது மனதினை கட்டுப்படுத்தும் வித்தையை கற்றிருப்பான். எதிர்பாராத சந்திப்பு அவனை முற்றிலும் காதலாய் மனைவியிடம் வீழ்த்தியிருந்தது. மனைவியை கண்ணிமைக்காது பார்த்தபடி அவன் படியில் இருந்து கீழே இறங்கி கொண்டிருந்தான்.

இருவரும் அருகருகில் வந்த போது அப்படியே தேங்கி நின்றனர். இருவரது பார்வையும் ஒன்றை ஒன்று ஈர்த்து அவர்களை ஸ்தம்பிக்க செய்திருந்தது. அவனது விழிகளில் வழிந்த நேசத்தை அவள் உணர்ந்திருந்தாள். அவளது விழிகளில் வழிந்த காதலை அவன் உணரவில்லை. அவ்வளவே வித்தியாசம்... பெண்ணவள் புற அழகை தாண்டி ஆணவனின் மனதின் அழகை ரசித்து பார்த்தது போல் ஆண்வன் பெண்ணவளின் மனதினை ஆராயவில்லையோ...! ஆணின் கண்களுக்கு பெண்ணின் புற அழகு மட்டுமே கண்ணில் பட்டு கருத்தை கவர்ந்ததோ...!!!

"ப்பா..." மகனது அழைப்பில் தன்னுணர்வு அடைந்தவன் மனைவியை கண்டு அசடு வழிந்தபடி தனது தலையை கோதி கொண்டான். அவனது நிலையை கண்டவளுக்கும்

சிரிப்பு வந்தது. அவள் வேறு பக்கம் திரும்பி பார்த்தபடி சிரிப்பை அடக்கி கொண்டாள்.

சிவகுமரன் அப்போது தான் மகனது உடையில் இருந்த கறையை பார்த்தான். உடனே அவனை கண்டு, "என்னாச்சு ப்ரஷன்...?" என்று கேட்க... மகன் தந்தையிடம் விலாவாரியாக குளிர்பானம் உடையில் கொட்டிய கதையை கூறினான். இருவரையும் புன்னகையுடன் பார்த்திருந்த அபிஷரிகாவின் உள்ளத்தில் வலி தோன்றியதை அவளால் தடுக்க இயலவில்லை.

"ஓகே, வா... நான் டிரெஸ் மாத்தி விடறேன்." என்றவன் மகனை அழைத்து கொண்டு செல்ல முயல...

"ப்ரஷூக்கு நான் டிரெஸ் மாத்தி விடறேன். உங்களுக்கு வேலை இருக்கும். நீங்க போங்க..." என்ற அபிஷரிகாவை அவன் வியப்புடன் பார்த்தான்.

"உனக்கு எதுக்கு வீண் சிரமம்?" அவன் தயங்க...

"ப்பா, நீங்க போங்க... நான் ஆன்ட்டி கூட போய் டிரெஸ் மாத்திக்கிறேன்." மகன் தந்தையை சமாதானப்படுத்தினான். ஆனால் மகனது வார்த்தைகள் தந்தையை சமாதானப்படுத்துவதற்கு பதிலாக அவனது கோபத்தை விசிறி கொண்டு விசிறி விட்டது. அவன் மனைவியை பார்த்து முறைத்தான். அவளோ அவனை கண்டு கொள்ளாது,

"ப்ரஷூ, வா போகலாம்..." என்று மகனை அழைக்க...

"ப்பா, ரூம் கீ..." என்ற சின்னவன் தந்தையின் கையிலிருந்த 'ஸ்மார்ட் கார்டு'ஐ வாங்கி கொண்டான். அம்மாவும், மகனும் படியேறி மேலே செல்ல...

மகனது வார்த்தையில் சிவகுமரன் தான் வெதும்பிய மனநிலையில் இருந்தான். அவன் மெதுவே மேலே படியேறி கொண்டிருந்த மனைவியை பார்த்தான். அவளோ இவனை திரும்பி பாராது படியேறி கொண்டிருந்தாள். அவனது வெறித்த பார்வை அவளை பின்தொடர்ந்தது.

முழுவதும் மேலே ஏறியதும் அறைக்கு செல்லும் வழியில் திரும்பும் முன் அவள் அவனை திரும்பி பார்த்தாள். கணவனது விழிகளில் பிரதிபலித்த வேதனையை கண்டு அவளது மனதினோரம் வலி எழுந்தது. மீண்டும் அவனது பார்வையை சந்திக்க இயலாது அவள் அவனை திரும்பி பார்க்காது வேகமாய் நடந்தாள். அப்போது எதிரில் அவளது தாத்தா பொன்னம்பலமும், பாட்டி காவேரியும் வந்து கொண்டிருந்தனர்.

'போச்சுடா... இவங்க என்ன சொல்ல போறாங்களோ?' என்று அவள் மனதில் முனங்கி கொண்டே மெல்ல நடந்தாள்.

பேத்தியை கண்டதும் காவேரியின் விழிகளில் பாசத்தில் கண்ணீர் தேங்கியது. அவர் முகம் மலர பேத்தியை நோக்கி நடக்க... பொன்னம்பலமோ பேத்தியை முறைத்தபடி அங்கு வந்தார். பேத்தி அருகில் வந்ததும் காவேரி கணவனிடம்,

"நான் அபி கூட பேசிட்டு வர்றேனே?" என்று அனுமதி கேட்க... அதை கேட்ட அபிஷரிகா மனதிற்குள் பெருத்த அடிவாங்கினாள். ஆனாலும் அவள் எதையும் வெளிக்காட்டி கொள்ளாது அமைதியாக இருந்தாள்.

"ம்..." என்று உறுமிய பொன்னம்பலம் பேத்தியை ஒரு பார்வை பார்த்தபடி செல்ல... காவேரி மட்டும் தேங்கி நின்றார்.

"அபி..." காவேரி நா தழுதழுக்க பேத்தியை அழைக்க...

"ப்ரஷூ, நீ போய் டிரெஸ் மாத்திட்டு வா... நான் இங்கேயே இருக்கேன்." என்று அபிஷரிகா சின்னவன் அங்கிருப்பதை பாட்டிக்கு சுட்டிக்காட்டினாள். மேற்கொண்டு எதுவும் பேசாது காவேரி அமைதியானார்.

"ஓகே ஆன்ட்டி..." ப்ரஷன்ஜித் அடுத்தார் போன்றிருந்த தங்களது அறைக்கு செல்ல... பாட்டியும், பேத்தியும் மட்டுமே தேங்கினர்.

"நீ பெத்த புள்ள... உன்னை பார்த்து ஆன்ட்டின்னு சொல்றான். இதை கேட்டுட்டு நீயும் கல்லு மாதிரியிருக்கியே. உன் மனசுல என்னத்தான்டி நினைச்சிக்கிட்டு இருக்க...?"

பாட்டியின் கேள்விக்கு அவளால் பதில் பேச முடியவில்லை. அன்று அவள் நியாயம் என்று கருதி செய்த செயல்கள் எல்லாம் இப்போது நியாயமற்றதாய் அவளுக்கு தோன்றியது. அவளது அமைதியை கண்ட காவேரியின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவளது இந்த அமைதி கூட அவருக்கு வேதனையை கொடுத்தது. முன்பு மாதிரி அவள் படபடவென பேச மாட்டாளா? என்று அவர் ஏங்கினார்.

"எப்படியிருக்க அபி...?" என்று அவர் குரல் தடுமாற கேட்டார்.

அவரது அக்கறையான வார்த்தையில் அவள் அப்படியே உடைந்து போனாள். அடுத்த கணம் அவள் சட்டென்று அவரை அணைத்து கொண்டாள். அவளது விழிகளில் இருந்து விழிநீர் கீழே விழவா? வேண்டாமா? என்று தேங்கி நின்றது. ஆழ மூச்சு எடுத்து தன்னை கட்டுப்படுத்தி கொண்டவள் கண்ணீரையும் கட்டுப்படுத்தி கொண்டாள். மெல்ல அவரை விட்டு விலகியவள்,

"நீங்க எப்படி இருக்கீங்க பாட்டி?" என்று கேட்டாள். அவரது கேள்விக்கு அவளால் உண்மையான பதிலை கூற முடியாது. அதனால் அவள் அதற்கு பதில் சொல்லவில்லை.

"ஏதோ வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். உன்னை பத்தின கவலை தான் என் மனசை போட்டு அரிக்குது. நீ குமரனோடு சேர்ந்து வாழ்ந்தால் முதலில் சந்தோசப்படுவது நானாக தான் இருப்பேன். கொஞ்சம் யோசிச்சு பாரு அபி..." பேத்தியின் தாடையை பற்றி அந்த மூதாட்டி கெஞ்சினார். அவள் பதில் கூறும் முன் ப்ரஷன்ஜித் வந்துவிட்டான்.

ஜீன்ஸ் பேண்ட்டில் கலக்கலாய் இருந்த மகனை கண்ட அபிஷரிகா அவனை தூக்கி வைத்து கொண்டு, "ரொம்ப அழகாயிருக்க..." என்று அவனது கன்னத்தில் முத்தமிட...

காவேரி அந்த காட்சியை கண்கள் கலங்க, மனம் நிறைய பார்த்து கொண்டிருந்தார்.

"போகலாமா பாட்டி...?" அபிஷரிகா அவரை அழைக்க... கடவுள் விட்ட வழி என்று அவர் தன்னை தேற்றி கொண்டு அவளுடன் இணைந்து நடந்தார்.

*******************************

யமுனா தனது அறையில் படபடப்புடன் அமர்ந்திருந்தாள். ஆகாஷின் மனநிலை என்னவென்று அறியாது அவளால் திருமண நிச்சய விழாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அன்னை, தங்கைகள் கீழே நிச்சயம் நடக்கும் இடத்திற்கு சென்றிருக்க... அவள் மட்டும் அந்த அறையில் தனித்து இருந்தாள். தன்னவனுடன் பேச வேண்டுமென்று நினைத்தவள் அவனது அலைப்பேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பிவிட்டு படபடக்கும் உள்ளத்துடன் அவனது வருகைக்காக காத்திருந்தாள்.

ஆகாஷ் அவனது அறையில் தயாராகி கொண்டிருந்தான். அவனது நண்பர்கள் குழு அங்கு அமர்ந்து அரட்டை அடித்து கொண்டிருந்தது. அப்போது அவனது அலைப்பேசியில் குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்டது. யாரென்று எடுத்து பார்த்தவன் முகத்தில் மந்தகாச புன்னகை தோன்றியது. தன்னவளின் அழைப்பை அவன் எதிர்பார்த்தே இருந்தான்.

'இப்பவாவது என் கிட்ட பேசணும்ன்னு தோணுச்சே...' என்று நினைத்தவனின் உதடுகளில் புன்னகை தோன்றியது. அடுத்த நொடி நண்பர்களிடம் முக்கியமான அழைப்பு என்று கூறிவிட்டு வெளியில் வந்தவன் நேரே தன்னவளின் அறையை நோக்கி சென்றான். அறையின் பக்கவாட்டில் இருந்த அழைப்பு மணியை அழுத்திவிட்டு அவன் காத்திருந்தான். யமுனா வந்து கதவை திறந்தவள் ஆகாஷை கண்டதும் தலையை குனிந்து கொண்டு அவனுக்கு வழி விட்டாள். அவன் உள்ளே வந்தும் அவள் கதவை பிடித்தபடி அங்கேயே நின்றிருப்பதை கண்டவன் அவள் கை மீது தனது கையை வைத்து கதவை

அடைத்தான். அவனது செயலில் விதிர்த்து போனவள் திகைப்புடன் அவனை ஏறிட்டு பார்த்தாள். அவனோ ஒன்றும் நடவாதவன் போல் அறைக்குள் சென்று அங்கிருந்த கட்டிலில் அமர்ந்தவன் அவளை கண்டு,

"எதுக்கு வர சொன்ன...?" என்று அசால்ட்டாய் கேட்க... அவள் தான் மொழி தெரியா மழலையாய் அவனை பார்த்து விழித்தாள். அவளது நிலையை கண்டவன் என்ன நினைத்தானோ...!

"இங்கே வா..." என்று அவளை அழைத்தான். அவள் பதுமை போல் அவன் சொன்னதை செய்தாள். தன் முன் வந்து நின்றவளை அவன் மேலிருந்து கீழாக பார்த்து ரசித்தான். மணப்பெண் கோலத்தில் அத்தனை அழகாய் இருந்தவளை அவனது விழிகள் தாபத்துடன் விழுங்கி கொண்டது.

"ம், பதில் சொல்லு..." என்றவனின் விழிகள் அங்கும் இங்கும் அவளை விட்டு அசையவில்லை.

"அது வந்து..." என்று தலைகுனிந்தபடி திக்கி திணறியவளை அவன் சுவாரசியமாய் பார்த்தான்.

"வந்து...?" அவன் கேள்வியாய் அவளை பார்க்க... அதில் அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"உங்களுக்கு என் மேல் கோபம் ஒண்ணும் இல்லையே..." பரிதவிப்புடன் கேட்க...

"கோபமா? எதுக்கு?" அவன் புரியாமல் கேள்வியாய் புருவத்தை உயர்த்தினான்.

"நான் உங்க..." மேலே பேச முடியாது திணறியவளை கண்டவனின் விழிகள் கூர்மையடைந்தது.

"உங்க...???"

"உங்க காதலுக்கு சம்மதிக்கவில்லைன்னு..." எப்படி கேட்பது என்று தெரியாது அவள் பயத்தில் எச்சிலை விழுங்கினாள். அவளது பயத்தை கண்டவன் எழுந்து அவள் அருகில் வந்து இரு கைகளை கட்டி கொண்டு,

"எதுவாக இருந்தாலும் தைரியமா சொல்லு..." என்க...

"உங்க காதலுக்கு நான் சம்மதிக்காததால்... உங்களை என் பின்னால் அலைய விட்டதுக்காக... இதுக்கு எல்லாம் பழிவாங்க நீங்க என்னை கல்யாணம் பண்ணிக்கலையே." எப்படியோ தனது மனதில் இருந்ததை அவனிடம் அவள் கேட்டே விட்டாள்.

"என்னை பார்த்தால் உனக்கு எப்படி தெரியுது?" அவனது அழுத்தமான வார்த்தைகளில் அவள் திடுக்கிட்டு போய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"வில்லன் போல் பழிவாங்கிறவன் மாதிரியா இருக்கு...?" என்றவனை அவள் திகைப்புடன் பார்க்க...

"ஏய், என் கண்ணை பாருடி... லுக் அட் மை ஐஸ்..." என்று அடிக்குரலில் உறுமியவனை கண்டு அவளது தேகம் நடுங்கியது. ஆனால் அதற்கு நேர்மாறாய் அவளது மனமோ சாரல் மழையில் சுகமாய் நனைந்தது. ஆம், ஆகாஷின் விழிகளில் வழிந்த காதல் அவளை சுனாமியாய் சுருட்டி சென்றது.

"நான் உன்னை முதன் முதலாய் பார்த்தப்போ உனக்கு பதினாறு வயசு... ஆமாம், ப்ரஷன் பிறந்த வீட்டில் தான் நான் உன்னை பார்த்தது. எல்லோரும் அவங்கவங்க கவலையில் மூழ்கியிருந்த போது நீ மட்டும் தான் அவனை அன்னை மாதிரி அன்பா பார்த்துக்கிட்ட... ஒரு பதினாறு வயசு பொண்ணு கிட்டயிருந்து இப்படியொரு பக்குவமான மனநிலையை நான் சத்தியமா எதிர்பார்க்கலை. ஏன்னா என்னோட பிரெண்ட்ஸ் சர்க்கிளில் யாரும் உன்னை மாதிரி கிடையாது. அப்போ, அந்த கணம் என் மனசில் தோன்றிய எண்ணம் ஒண்ணே ஒண்ணு தான்... ப்ரஷனா நானிருக்க கூடாதான்னு... அந்த நொடி நீ இங்கே நுழைஞ்சிட்ட..." என்றவனது வலக்கை அவனது இடது பக்க நெஞ்சை சுட்டிக்காட்டியது.

"அப்போ தான் நான் கொஞ்சம் கொஞ்சமாய் மாற ஆரம்பிச்சேன். அபி பண்ணிய காரியம், உன்னோட

பக்குவம் எல்லாம் தான் என்னை மாத்திச்சு. உன் மனசை பார்த்து தான் நான் உன்னை காதலிக்க ஆரம்பிச்சேன். எத்தனையோ அழகான பெண்களை நான் கடந்து வந்திருக்கிறேன். ஆனா என் மனசு அன்பான பெண்ணுக்கு தான் ஏங்கியது. அந்த அன்பு உன்னிடத்தில் இருப்பதை கண்டு நான் மொத்தமா உன் கிட்ட சரணடைந்து விட்டேன்." ஆகாஷ் அவன் மனதை சொல்ல சொல்ல... யமுனாவின் முகம் பிரகாசம் அடைந்தது.

"சொல்லு... எதனால் இப்படியொரு எண்ணம் உனக்கு வந்தது?" அவன் கேட்டதும் அவள் தயக்கத்துடன் தலையை குனிய...

"சொல்லு யம்ஸ்..." என்றவனின் குரல் காதலில் குழைந்தது.

"கொஞ்ச நாளா நீங்க என்னை கண்டுக்கவே இல்லை. நான் இருந்தால் கூட என்னை கவனிக்காத மாதிரி போயிருவீங்க... அதான் என்னை வெறுத்துட்டீங்களோன்னு..." அவள் தன்னை கவனித்திருக்கிறாள், தனது காதலை தேடி தவித்திருக்கிறாள் என்கிற உண்மை தெரிந்ததும் அவனது முகம் மலர்ந்தது. அவளது மலர் முகத்தை தனது இரு கரங்களால் பற்றி தன்னை நோக்கி இழுத்தவன் குனிந்து அவளை பார்த்தபடி,

"வேறென்னடி பண்ண சொல்ற...? பின்னாடி வராதே... காதலிக்காதேன்னு சொன்னா நானும் என்ன தான் செய்றது? அதான் ஒதுங்கி போக ஆரம்பிச்சேன். நீ என்னை இவ்வளவு தேடியிருக்கிறன்னு தெரிந்திருந்தால்...???" என்றவன் தனது காதலை அவளுக்கு உணர்த்த நினைத்து அவளது முகம் நோக்கி குனிந்த போது அழைப்பு மணி ஒலித்தது.

"ஐய்யயோ..." என்றவள் பயத்துடன் அவனை பார்க்க... அவனோ சிறிதும் பயப்படாது அவள் புறம் குனிந்து நொடி நேரத்தில் அவளது இதழில் தனது முதல் அச்சாரத்தை அழுத்தமாய் பதிந்துவிட்டு நிதானமாய் நிமிர்ந்தான்.

"நீ என் மனைவி... யார் என்ன சொல்லிர முடியும்?" என்றவன் தைரியமாக அவளது கையை பிடித்து கொண்டு கதவை நோக்கி நடந்தான்.

ஆகாஷ் கதவை திறந்ததும் அவனது அன்னை தான் வெளியில் நின்றிருந்தார். மணமகள் அறையில் மகனுக்கு என்ன வேலை...? என்பது போல் அவர் திகைப்புடன் மகனை பார்த்தார்.

"டேய் ஆகாஷ், இங்கே என்னடா பண்ற?"

"எங்க வருங்காலத்தை பத்தி பேசிட்டு இருந்தோம் மாம்..." கொஞ்சமும் வெட்கம் இல்லாது அன்னைக்கு பதில் கொடுத்தான் மகன். யமுனாவோ அவனின் முதுகின் பின் மறைந்து கொண்டாள்.

"நல்லா பேசிட்டு இருந்த... போ, உன்னோட ரூமுக்கு போடா..." மகனை பிடித்து வெளியில் தள்ளியவர் மருமகளை அழைத்து கொண்டு சென்றார். யமுனாவை பார்த்தபடி தன்னிலை மறந்து அவளின் பின்னால் வந்த ஆகாஷை திரும்பி பார்த்து,

"உன்னை கூப்பிடும் போது வந்தால் போதும்..." என்று அவர் மகனை கண்டு ஒற்றை விரல் நீட்டி எச்சரித்து விட்டு சென்றார். அவன் சிரித்தபடி தனது அறையை நோக்கி நடந்தான்.

அங்கிருந்த சிறிய மணமேடையில் மணமக்கள் இருவரும் அருகே அருகே நின்றிருக்க... விழா ஆரம்பமானது. அப்போது வேணி,

"நான் கொஞ்சம் பேசலாமா?" என்று கேட்க...

"சொல்லும்மா..." பொன்னம்பலம் அவரை ஊக்குவிக்க... எல்லோரும் அவரை ஆர்வத்துடன் பார்த்திருக்க... சிவகுமரன் அன்னையை புன்னகையுடன் பார்த்திருந்தான்.

"என் மகன் சிவகுமரனுக்கும், டாக்டர் நந்தனாவுக்கும் இன்னைக்கு நிச்சயம் பண்ணலாம்ன்னு இருக்கேன்." என்று வேணி தீர்மானமாய், உறுதியுடன் கூற... எல்லோரும் திகைப்புடன் அவரை பார்த்தனர். சிவகுமரன் நிலை சொல்லவும் வேண்டாம். அவன் பெரும் அதிர்வுடன் அன்னையை பார்த்தான்.

வேணி மகனின் நிச்சயம் பற்றி கூறியபடி அபிஷரிகாவை தான் பார்த்து கொண்டிருந்தார். அவளோ பதிலுக்கு புன்னகை மாறா முகத்துடன் அவரையே பார்த்திருந்தாள். அதை கண்டு வேணியின் மனம் தான் துணுக்குற்று போனது.

ஆசையிருந்தால் தானே நிராசையாவதற்கு...!!!

தொடரும்...!!!

## அத்தியாயம் : 20

"ம்மா, என்ன பேசுறீங்க...? இப்போ எனக்கு எதுக்கு நிச்சயம்? இது நம்ம யமுனா நிச்சயதார்த்தம். அது நல்லபடியா முடியட்டும்." சிவகுமரன் அடிக்குரலில் அன்னையைக் கடிந்தான்.

"குமரா, நீ இரண்டாவது திருமணத்துக்குச் சம்மதித்தது உண்மை தானே?" வேணியின் கடுமையான குரலில் அவனது தலை தானாக ஆமென்பது போல் அசைந்தது.

"அப்போ நீ இதில் தலையிடாம இங்கு நடப்பதை மட்டும் வேடிக்கை பார். எல்லாம் உன் நல்லதுக்குத் தான் சொல்கிறேன்."

"ம்மா..." அவன் மேலே பேசும் முன் கையமர்த்தி அவனைத் தடுத்த வேணி,

"யமுனா நிச்சயம் நல்லபடியா நடக்கணும்ன்னா நீ வாயை மூடிட்டு இரு. இல்லை, இப்பவே யமுனா நிச்சயத்தை நிறுத்திட்டு நாம கிளம்பலாம்." என்றும் இல்லாத திருநாளாய் இன்று அடம் பிடிக்கும் அன்னையைக் கண்டு அவனுக்கு வினோதமாக இருந்த அதேசமயம் எரிச்சலாக வந்தது.

"என்ன பேசுறீங்கன்னு புரிஞ்சு தான் பேசுறீங்களா?" அவனுக்கு இன்னமும் எரிச்சல் குறையவில்லை.

"வேணி சொல்வதில் என்ன தப்பு இருக்கு? நீ உன் வாழ்க்கையைப் பார்க்க வேண்டாமா குமரா? இப்படியே எத்தனை நாளைக்கு இருக்கப் போகிற? இந்த விழாவுக்குக் கீர்த்தனா அப்பா, அம்மா ரெண்டு பேரும் வந்திருக்காங்க. யமுனா நிச்சயத்தோடு உனக்கும் திருமண நிச்சயத்தை உறுதி பண்ணிரலாம். பிறகு விழாவை பெருசா வச்சுக்கலாம்." பெரியவரின் வார்த்தைகள் சிவகுமரனுக்குத் தான் என்றாலும் அவரது பார்வை பேத்தியை துளைத்து எடுத்தது.

அபிஷ்ரிகாவோ எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்து கொண்டிருந்தாள். ப்ரஷன்ஜித் அவளது கையைப் பிடித்தபடி அவள் அருகே நின்றிருந்தான்.

"எனக்கு இப்போ கல்யாணம் வேண்டாம்." தனது உயிரை விட மேலாய் மதிக்கும் ஐயாவை தனது காதலுக்காக அவன் எதிர்க்க துணிந்தான்.

"குமரா, என் மீது ஆணையா நீ எதுவும் பேச கூடாது." பொன்னம்பலம் முடிவாய் கூற... அவன் அதிர்வுடன் அவரைப் பார்த்தான். என்றுமே அவரது பேச்சை அவனால் மீற முடியாது. இப்போது என்ன செய்வது? என்று அவன் தவிப்புடன் அவரைப் பார்த்திருந்தான்.

சிவகுமரன் முள் மேல் நின்றிருப்பது போல் அவஸ்தையுடன் நின்றிருந்தான். தங்கையின் நிச்சய விழாவில் அவனால் தடங்கல் ஏற்படுவதை அவன் விரும்பவில்லை. வாயிருந்தும் ஊமையான நிலை அவனது நிலை... அவனையும் அறியாது அவனது விழிகள் தன்னவளை தேடியது. அவள் புன்னகையுடன் நின்றிருப்பதைக் கண்டு அவனது காதல் மனம் பெருத்த அடி வாங்கியது. மனைவிக்குத் தன் மீது காதல் இல்லையா? என்று அவன் தனக்குள் குமைந்து போனான். அவள் என்றுமே தன்னைக் காதலிக்கப் போவதில்லை என்கிற நிதர்சனம் அவனைச் சுட்டதில் அவன் மிகவும் துவண்டு போனான். அவனது காதல் மனம் அடிப்பட்ட குழந்தையாய் கதறியழுது துடித்தது. முதன்முறையாகத் தகுதி இல்லாது தன்னைப் படைத்த கடவுள் மீது அவனுக்குக் கோபம் வந்தது. அதேசமயம் தகுதி இல்லாத தான் தனது தகுதி மீறி அவளைத் திருமணம் செய்தது குறித்து அவனுக்குத் தன் மீதே கோபம் வந்தது.

'உனக்கு எல்லாம் எதுக்குடா காதல்? அதுவும் உன் தகுதிக்கு மீறிய காதல்... இப்போது பார், உன் வாழ்க்கை மட்டும் அல்லாது அவளது வாழ்க்கையையும் சேர்த்து நீ அழித்து விட்டாய்.' அவனது மனசாட்சி அவனை இடித்துரைத்தது. மனசாட்சி அவனை இடித்துரைத்த போதும் அவனது

விழிகள் மனைவியைச் சிறு எதிர்பார்ப்புடன் நோக்கியது. ஆனால் அவளோ மௌனமாய் நின்று அவனது எதிர்பார்ப்பினை ஏமாற்றமாக்கினாள். அவளைத் திருமணம் முடித்த நாளில் இருந்து அவனது நெஞ்சம் இப்படித்தான் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாந்து போகின்றது. இப்போதும் ஊரறிய தன்னை அவளது கணவன் என்று ஏற்றுக் கொள்ளாத மனைவியைக் கண்டு அவனது உள்ளம் இரண்டாகப் பிளந்தது போல் வலித்தது. வலி அவனுக்குப் பழக்கமான ஒன்று தான் என்ற போதும் இந்த வலி அவனது உயிரோடு கசக்கி பிழிந்தது.

ஆகாஷோ பெரும் கோபத்துடன் தனது தோழியைப் பார்த்தான். இவ்வளவு நடத்தும் அசையாது இருக்கும் தோழியைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது. அவளைப் பிடித்து உலுக்கி நாக்கை பிடிங்கி கொள்ளும்படி நாலு கேள்வி கேட்க வேண்டும் என்று அவனது மனம் துடித்தது. ஆனால் இத்தனை பெரிய சபையில் அதைச் செய்ய முடியாதபடி அவனது நிலை இருந்தது. அவனது நிலை என்பதை விட அபிஷரிகாவின் அந்தஸ்து அப்படிப்பட்டதாய் இருந்தது. நட்சத்திர வானில் ஜொலிப்பவளின் கௌரவத்தைக் கீழிறக்க அவன் விரும்பவில்லை. அவன் தோழியை முறைத்து பார்க்க... அவள் அவனைச் சமாதானப்படுத்தும் விதமாக விழி மூடி திறந்து அவனைப் பார்த்து புன்னகைத்தாள். அதைக் கண்டு அவனது முறைப்பு இன்னமும் அதிகமானது.

"நல்ல நேரம் முடிய போறது. சீக்கிரமா லக்ன பத்திரிக்கையை வாசிக்கலாமோ?" அய்யர் குரல் கொடுக்க... வேறுவழியின்றி எல்லோரின் கவனமும் அங்கே சென்றது.

"அப்படியே இதையும் சேர்த்து படிச்சிருங்க..." வேணி தனது கையிலிருந்த காகிதத்தை அய்யர் கையில் கொடுத்தார். இதற்கு மேலும் பேசாது இருந்தால் நஷ்டம் தனக்குத் தான் என்பதை உணர்ந்த சிவகுமரன் நந்தனா என்ற பெண்ணின் தந்தையைப் பார்த்து,

"நான் இதைச் சொல்வதற்கு என்னை மன்னிக்கணும். எனக்கு இன்னமும் முதல் மனைவியிடம் இருந்து விவாகரத்து கிடைக்கவில்லை. கிடைத்த பிறகு இதை எல்லாம் பார்த்து கொள்ளலாம்." என்று தனது இரு கரங்களையும் கூப்பி அவரிடம் மன்னிப்பு கேட்கும் குரலில் கூறினான்.

"எங்களுக்கு எல்லாம் தெரியும். இருந்தாலும் உங்க வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கிறேன்." என்று அவர் பெருந்தன்மையாகக் கூற... சிவகுமரன் நிம்மதி பெருமூச்சு விட்டான். வேணி மகனை எரித்து விடுவது போல் பார்த்தார். பொன்னம்பலம் இரக்கமாய் அவனைப் பார்த்தார். அவன் யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை.

"ஆகாஷ், யமுனா நிச்சயத்தை நடத்துங்க சார்..." என்று நந்தகுமாரிடம் கூறியவன் அமைதியாகத் தள்ளி நின்று கொண்டான். அன்னையின் செயலில் அவனது மனம் ரணமாய் வலித்தது. அவனால் எதிலும் ஒட்ட முடியவில்லை.

நிச்சய விழா முடிந்ததும் அபிஷரிகா யாரிடமும் சொல்லாது மகனிடம் மட்டும் விடைபெற்றுக் கொண்டு அங்கிருந்து வெளியேறி விட்டாள்.

அடுத்து வந்த தினங்கள் கனத்த அமைதியுடன் கழிந்தது. சிவகுமரன் பெயருக்கு வீட்டில் இருந்தான். யாரிடமும் எதுவும் பேசவில்லை. மகனிடம் மட்டும் எப்போதும் போல் சிரித்துப் பேசினான். அவனது மௌனம் கண்டு எல்லோருக்கும் பயம் வந்தது. வேணிக்கு அபிஷரிகா கூறிய வார்த்தைகள் தான் மீண்டும் மீண்டும் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. அவள் கூறுவது போல் மகனின் மனதில் மனைவி மீதான காதல் இருக்கிறதோ! தான் தான் புரிந்து கொள்ளாது தவறு செய்துவிட்டோமோ! அவருக்குக் குழப்பமாக இருந்தது.

மகனுக்கு அபிஷரிகா மீது காதல் இருந்து என்ன பிரயோஜனம்? அவள் அல்லவா அவனுடன் சேர்ந்து வாழ வேண்டும். வேணிக்கு அபிஷரிகாவை நினைத்துக் கோபம்

வந்தது. அதேசமயம் மகனை பகைத்துக் கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை.

அன்று காலையில் சிவகுமரன் அலுவலகத்திற்குக் கிளம்பி கொண்டிருந்தான். அப்போது அவனது அலைப்பேசி அழைத்தது. எடுத்து பார்த்தவன் அதில் ஒளிர்ந்த மனைவியின் எண்ணை கண்டு இனிமையாய் அதிர்ந்தான். மறுகணம் அவனிடம் கோபம் வந்து ஒட்டி கொண்டது. அழைப்பை ஏற்றுக் காதில் வைத்தவன் ஒன்றும் பேசாது அமைதியாக இருந்தான்.

"சிவூ..." பெண்ணவளின் ஒற்றை அழைப்பில் ஆணவனின் ஒட்டுமொத்த தேகமும் சிலிர்த்தது. அவன் மனைவியின் விளிப்பை ரசித்தபடி விழி மூடி அப்படியே அருகில் இருந்த சுவற்றில் சாய்ந்தான். அவனது உணர்வுகளைத் தூண்ட அவளது ஒற்றை அழைப்புப் போதுமானதாக இருந்தது.

"சிவூ..." அவள் மீண்டும் சற்று அழுத்தி அழைக்கவும் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டவன்,

"சொல்லு..." என்றான்...

"நான் மெசேஜ் பண்ற அட்ரசுக்கு வந்திரு..."

"எதுக்கு...?" அவனுக்குக் குழப்பமாக இருந்தது.

"வந்து பார்த்தால் தெரிய போகிறது." என்றவள் அழைப்பை துண்டித்து விட்டாள். அவன் யோசனையுடன் அலைப்பேசியைப் பார்த்தபடி அப்படியே நின்றிருந்தான்.

அடுத்த அரைமணி நேரத்தில் சிவகுமரன் அபிஷரிகா அனுப்பியிருந்த முகவரிக்கு வந்து சேர்ந்தான். அந்த வீட்டின் முகப்பில் இருந்த பெயர் பலகையைப் பார்த்ததுமே அவனுக்குப் புரிந்து போனது அது யார் வீடு? என்று... ஆம், அது ஒரு வழக்கறிஞரின் வீடு... எதற்கு இங்கே வர சொல்லியிருக்கிறாள்? என்பதைப் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு அவன் ஒன்றும் சிறுவன் இல்லையே. அன்று அவன் அவளிடம் கேட்டது தான்... இன்று அவளே அவனுக்குக் கொடுப்பது கண்டு அவனுக்கு மிகவும்

வலித்தது. இறுதியில் தான் அவளுக்கு ஒன்றுமே இல்லையா? அவளோடு வாழ்ந்த காலத்தில் ஒரு சதவீதம் கூட அவன் அவளை ஈர்க்கவில்லையா? அவன் மனம் வலிக்க அப்படியே சிலையாய் நின்றிருந்தான்.

"சிவூ, அதுக்குள்ள வந்துட்டியா?" அவனை விட்டு பிரிந்து செல்ல போகிறோம் என்று அவளது மனதிற்குத் தெரிந்ததோ என்னமோ? அவளையும் அறியாது அவனது பெயர் சரளமாய் அவளது வாயில் வந்தது.

"ம்..." என்று தலையாட்டியவனுக்குப் பேச வார்த்தைகள் வரவில்லை.

"நீ கேட்ட மாதிரி டிவோர்ஸ் கொடுக்கலாம்ன்னு இருக்கேன் சிவூ... மியூச்சுவல் அன்டர்ஸ்டாண்டிங்கில் நாம பிரிஞ்சிரலாம். யாருக்கும் எதுவும் தெரிய வேண்டாம். சொல்லவும் வேண்டாம். யாருக்கும் தெரியாமல் நடந்த கல்யாணம்... யாருக்கும் தெரியாமல் முடிந்து போகட்டும்."

யாருக்கும் தெரியாமல் நடந்த திருமணமாக இருந்த போதும் அது நிலைத்திருக்க வேண்டி தானே அவன் அதைச் சட்டப்படி பதிவு செய்தது. சாஸ்திரமும், சட்டமும் அவனைக் கண்டு இகழ்ச்சியாய்ச் சிரித்தது.

"ஏன்? தெரிந்தால் அது உன் கேரியரை பாதிக்குமோ?" என்ன முயன்றும் அவனால் தனது உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதன் விளைவு அவன் சுள்ளென்று அவளிடம் எரிந்து விழுந்தான். அவனது வார்த்தைகளைக் கேட்டு அவள் ஒரு நொடி அவனை ஆழ்ந்து பார்த்தவள்,

"அதுவும் உண்மை தானே சிவூ... கல்யாணமாகி, ஐஞ்சு வயசு பையனுக்கு அம்மாவான எனக்கு யார் சான்ஸ் தருவாங்க? அழகு, இளமையோடு, திருமணம் ஆகாமல் இருப்பது மிகவும் முக்கியம்..." என்று இமைச்சிமிட்டியவளை அவன் எரித்துவிடுவது போல் பார்த்தான்.

"உள்ளே போகலாமா?" அவனது பார்வையைக் கண்டு கொள்ளாது அவள் அவனை உள்ளே அழைத்தாள்.

இருவரும் அந்தப் பெண் வழக்கறிஞரின் முன் சென்று அமர்ந்தனர். இருவரின் கூற்றையும் கவனமாய்க் கேட்டவர்,

"ஐந்து வயதில் பையன் இருக்கும் போது இந்த விவாகரத்து அவசியம் தானா?" என்று கேட்க...

"அவங்க விருப்பப்படுறாங்க... அதையே செய்ங்க..." சிவகுமரன் விட்டேற்றியாய் பதில் கூறினான்.

"அப்போ உங்களுக்குச் சம்மதம் இல்லையா?" அவரது கேள்வி கூர்மையுடன் வந்தது. அதற்கு அவன் பதில் கூறும் முன் அவள் முந்தி கொண்டாள்.

"ரெண்டு பேரும் சம்மதிச்சு தான் வந்திருக்கிறோம்." அவளது வார்த்தைகள் ஈட்டியாய் அவனது இதயத்தில் வலிக்க வலிக்கச் சொருகியது. விழிகளை மூடி தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு,

"ஆமா மேம்..." என்று அவனும் கூற...

"எதுக்கும் யோசிச்சு முடிவு பண்ணுங்க..." அவர் மீண்டும் அவர்களை வலியுறுத்த...

"இல்லை மேம்... எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் எங்களுக்கு விவாகரத்து வாங்கிக் கொடுங்க... உங்களால் முடியலைன்னா நாங்க வேற லாயர் கிட்ட போகிறோம்." என்று அபிஷரிகா கூற... அவர் தானே விவாகரத்து வாங்கித் தருவதாகச் சம்மதித்தார். அவள் அவருக்கு நன்றி கூறிவிட்டு எழ... அவனோ எதுவும் சொல்ல தோன்றாது அமைதியாக எழுந்து வெளியில் வந்தான்.

"ஓகே சிவூ... நான் கிளம்பறேன்..." என்று புன்னகை முகத்துடன் விடைபெற்றவளை திமிற திமிற அணைத்து அவளது இதழில் கவி பாடி தனது காதலை அவளுக்கு உணர்த்த துடித்தது அவனது காதல் மனம்... அவன் தனது

மனதினை கட்டுப்படுத்தும் வழியறியாது இரு கைகளையும் பேண்ட் பாக்கெட்டில் விட்டபடி அழுத்தமாய் நின்றிருந்தவன்,

"அபி, ஒரு நிமிசம்..." என்று அவளை அழைக்க...

"என்ன...?" என்றபடி தன்னை ஏறிட்டவளை கண்டு,

"உங்க அந்தஸ்த்துக்கு ஏற்றவனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நீங்க சந்தோசமா இருக்கணும். இது எனது கட்டளை இல்லை... எனது தாழ்மையான வேண்டுகோள்..." என்று சொன்னவனின் மனதில் சிறு எதிர்பார்ப்பு எழத்தான் செய்தது.

"நிச்சயம் சிவூ... நீங்களும் வேறு கல்யாணம் பண்ணிக்கோங்க... ஆங், உங்கம்மா சொன்ன அந்த நந்தனாவையே கல்யாணம் பண்ணிக்கோங்க. ஆல் த பெஸ்ட்..." என்று அவளும் அவனுக்குச் சளைக்காது பதில் கூறினாள்.

அதைக் கேட்டவனது மனதில் ஏமாற்றம் கவிழ்ந்தது. அவனது ஏமாற்றம் கழிவிரக்கமாக மாறி அவனை வாட்டி வதைத்தது. அன்று அவனைப் பிடிக்காமல் தானே அவள் அவனை விட்டு விலகி சென்றாள். அவளைப் பற்றித் தெரிந்திருந்தும் மீண்டும் மீண்டும் அவமானப்படுவதே அவனுக்கு வேலையாய் போயிற்று. அவனுக்குத் தன் மீதே வெறுப்பு வந்தது.

"நான் என்ன பண்ணணும்ன்னு நீ எனக்குச் சொல்லாதே..." வெறுப்புடன் கூறியவன் அவளது பதிலை எதிர்பாராது அங்கிருந்து விறுவிறுவெனச் சென்றவன் அதே வேகத்துடன் காரை கிளப்பிக் கொண்டு சென்றுவிட்டான்.

"சிவூ..." என்று முணுமுணுத்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. மெல்ல நடந்து வந்து காரிலேறி அதைக் கிளப்பியவள் மனதில் அவளது 'சிவூ' மட்டுமே மையம் கொண்டிருந்தான்.

அவளது கைகள் அது பாட்டிற்குக் காரை ஓட்டி கொண்டிருக்க... அவளது மனமோ சிவகுமரன் பெயரை ஜெபம் போல் ஜெபித்துக் கொண்டிருந்தது. அவனைக் கண்ட நாள் முதல் இதோ சற்று நேரத்திற்கு முன் அவனைப் பார்த்தது வரை எல்லாம் அவளது மனத்திரையில் படமாக ஓடியது.

"உன்னைப் பிரிஞ்சிருக்கிறது எவ்வளவு கொடுமையானது தெரியுமா சிவூ? எந்த முகத்தை வச்சிக்கிட்டு நான் உன்னைத் தேடி வருவேன்? நான் என்ன உன்னைக் கொஞ்சமாகவா படுத்தி எடுத்தேன்? உன்னை எவ்வளவு அவமானப்படுத்தணுமோ அவ்வளவு அவமானப்படுத்தி விட்டேன். தப்பு மேல் தப்புப் பண்ணிட்டேன் சிவூ... உன்னைப் புரிஞ்சிக்காம ரொம்பப் பெரிய தப்புப் பண்ணிட்டேன். நான் உனக்கு வேண்டாம் சிவூ... நீ நந்தனாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு நிம்மதியா வாழு... என் கூட வாழ்ந்தால் உன் நிம்மதி போயிரும். நான் உனக்கு வேண்டாம்." என்று வாய்விட்டு கூறியவளின் மனமோ இழப்பின் வலியை தாங்க முடியாது துடித்தது.

'ஆனா உன்னைப் பிரிஞ்சு நான் எப்படி வாழ போறேன் சிவூ? மீண்டும் அதே தனிமை வாழ்க்கை... எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு சிவூ.' என்று அவள் மனதிற்குள் கதறியழுதாள்.

யாராவது ஒரு பெண் கணவனைப் பார்த்தாலோ அல்லது பேசினாலோ அப்படிக் கோபம் கொண்டு அவனிடம் சண்டையிடுபவள் இப்போது அவனை மொத்தமாய் வேறு ஒருத்திக்கு தாரைவார்த்துக் கொடுக்கத் தயாராகி விட்டாள். இனி அவளது கணவன் சிவகுமரன் அவளுக்கு இல்லை... அவளது சிவூ அவளுக்கு இல்லை. நிதர்சனம் அவளைக் கடுமையாகத் தாக்கியதில் அவளது கைகளில் கார் தடுமாறியது. அவளது விழிகளில் வழிந்த விழிநீர் செல்லும் வழியினை மறைத்தது. அவள் விழிகளைத் துடைக்கத் துடைக்க மீண்டும் மீண்டும் கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அப்போது எதிரில் ஒரு லாரி வேகமாக வந்து கொண்டிருந்தது. அவள் நினைத்து இருந்தால் காரை

ஒடித்து உயிர் தப்பியிருக்கலாம். ஆனால் அவளுள் வாழும் ஆசை அறவே அற்றுப் போனது. அவளது உயிரே அவளிடம் இருந்து பிரிய போகின்றது. அதன்பிறகு அவள் வாழ்ந்தால் என்ன? செத்தால் என்ன??? அவள் மனம் மரத்த நிலையில் காரை நேரே லாரியின் முன் விட்டு விட்டாள். அவளது கார் பலத்த சத்தத்துடன் லாரியின் மீது மோதியது. காரின் முன்பகுதி லாரியின் அடிப்பகுதியில் புகுந்திருந்தது.

அதில் அபிஷரிகாவிற்கு நன்கு அடிபட்டு இருந்தது. நல்லவேளை அவள் ஆசனப்பட்டியினை அணிந்திருந்தாள். அப்படியிருந்தும் அவளது தலையில் பலத்த அடி... மற்றும் அவளது வலதுகால் காருக்குள் சிக்கி கொண்டது. அவள் மயக்க நிலைக்குச் சென்று கொண்டிருந்தாள். ஆனால் முழுவதுமாய் மயக்க நிலைக்குச் செல்லவில்லை... சில மணித்துளிகளில் லாரியின் அடியிலிருந்த காருக்குள் இருந்து அவளை மீட்டெடுத்தனர்.

"உயிர் இருக்கான்னு பாருங்கப்பா..." ஒருத்தர் குரல் கொடுக்க...

"ஐயோ, இது நடிகை அபியாச்சே..." ஒரு இளைஞன் உரக்க கத்தினான்.

"குடிச்சிட்டு வண்டி ஓட்டியிருப்பாளா இருக்கும்." நடிகை என்றதும் ஒருவரின் வார்த்தைகள் அத்தனை அலட்சியமாய் வந்தது.

"எங்க தலைவியைப் பார்த்து எப்படிடா இப்படிச் சொல்லலாம்." அங்கிருந்த அவளது ரசிகன் ஒருவன் எகிறினான்.

எத்தனையோ கூக்குரல்களுக்கு மத்தியில் அவளது காதுகள் கணவனது குரலை எதிர்பார்த்துக் காத்திருந்தது. அவள் மெல்ல விழி திறந்து கூட்டத்தினுள் கணவனது முகத்தினைத் தேடினாள். தேடி தேடி தோற்று போனவள் தனது விழிகளை ஆயாசமாக மூடி கொண்டாள். அதற்குள் ஆம்புலன்ஸ் அங்கு வந்து சேர... அடுத்தப் பத்து நிமிடங்களில் அவள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள்.

நடிகை என்றதும் எல்லாத் தொலைக்காட்சியிலும் இந்த விபத்து 'ஃப்ளாஸ் நியூஸ்'ஆக ஒளிபரப்பப்பட்டது.

அலுவலகத்தில் வெறுமையான மனநிலையில் அமர்ந்திருந்தான் சிவகுமரன். மனைவியின் முடிவினை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. தனக்குள் உழன்று கொண்டிருந்தவனிடம் அவனது செயலாளர் அபிஷரிகாவிற்கு விபத்து என்று கூறினார். அவர் அவளது தந்தைக்குச் செயலாளராக இருந்தவர்... அதனால் அவருக்கு இவர்களது உறவு எல்லாம் தெரியும். விசயம் கேள்விப்பட்டதும் சிவகுமரன் சிறிதும் தாமதியாது அடுத்த நொடி அவளைக் காண மருத்துவமனைக்குக் கிளம்பியிருந்தான். அவனது மனம் மனைவிக்காகப் பிரார்த்தித்தது. அவள் மீதிருந்த அவனது கோபம் கூடப் பின்னுக்குச் சென்றுவிட்டது.

மருத்துவமனையின் ஐசியூவிற்கு வந்தவன் அங்கிருந்த மருத்துவர்களிடம் மனைவியைப் பார்க்க வேண்டும் என்று கூறினான். அப்போது தான் அவளைச் சிகிச்சைக்குத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர். அவன் சமுதாயத்தில் அந்தஸ்து மிக்க மனிதன் என்பதால் அவனது வேண்டுகோள் உடனே ஏற்கப்பட்டது. அவன் அந்த அறைக்குள் நுழைந்த போது தலையில் இருந்து, காலில் இருந்து இரத்தம் வழிய அபிஷரிகா படுத்திருந்தாள். அவளது நிலையைக் கண்டவன் அப்படியே உடைந்து போனான்.

"அம்முலு..." என்று அவன் அலறியபடி அவள் அருகே விரைந்தான். அவனது 'அம்முலு' என்கிற வார்த்தைக்குத் தான் எத்தனை சக்தி...! கணவனுக்காக உயிரை கையில் பிடித்துக் கொண்டு காத்திருந்தவள் போல் அவள் மெல்ல விழி திறந்தாள். அவளது சிவூ அவளுக்காகக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதைக் கண்டவளின் இதழ்களில் புன்னகை தோன்றியது. அவனது துன்பத்தில் அவள் இன்பம் காண்கிறாளே... அவள் என்ன மாதிரியான பெண்! அவளுக்குத் தன்னைக் குறித்துக் கோபம் எழுந்தது.

"சிவூ..." அவனை நோக்கி இரத்தம் தோய்ந்த தனது கையை நீட்டினாள். அவன் வேகமாய் வந்து அவளது கையைப் பற்றிக் கொண்டான். அதீத துக்கத்தில் அவனால் பேச இயலவில்லை... அவனது விழிகளில் இருந்து கண்ணீர் மட்டும் வடிந்து கொண்டிருந்தது. அவனது அன்பை அவன் வார்த்தைகளால் சொல்லவிட்டால் என்ன? அவளது கையைப் பிடித்திருந்த அவனது கையின் அழுத்தமான பிடியில் தெரிந்தது அவனது காதல்... அதை அவளும் உணர்ந்தாளோ???

"சிவூ..." 'அருகில் வா' என்பது போல் அவள் சைகை செய்ய...

"அம்முலு..." என்று தேம்பியபடி அவன் அவள் அருகே குனிந்தான். அவள் மீதான அவனது கோபம் எல்லாம் மறைந்து போயிருந்தது. இப்போது அவனது மனதில் இருந்தது எல்லாம் அவள் மீதான காதல் மட்டுமே...

அவளது ஒரு கை அவனது பிடியில் இருக்க... அவள் தனது மற்றொரு கையால் அவனது தாடையைப் பற்றி அவனது முகத்தைத் தனது முகம் நோக்கி இழுத்தாள். விபத்திற்குள்ளான பெண்ணிற்குள் இத்தனை பலமா! அப்படியொரு அழுத்தமாய் இருந்தது அவளது பிடி... அருகில் வந்த கணவனது முகத்தை உற்று நோக்கியவள் அடுத்த நொடி அவனது இதழ்களைச் சிறை செய்திருந்தாள். அவளது குருதியுடன், அவளது உமிழ்நீரும் கலந்து அவள் கொடுத்த முத்தமானது அவனது உயிர் வரை சென்று அவனை உருக செய்தது. அன்றொரு நாள் இதே போல் அவன் இரத்தம் வழிய வழிய அவளுக்கு முத்தமிட்டான். அன்று அவள் அடித்தது அவனது உடலில்... ஆனால் இன்று அவளது செய்கையோ பலமாய் அடித்தது அவனது உள்ளத்தில்...

அவன் செயலிழந்து போனவனாய் அவளது செய்கையில் திகைத்து போய் நின்றிருந்தான். அந்தக் கணம் அவன் அவளது கையில் ஆறுதல் தேடும் சேயாய் மாறிப் போனான். நிமிடத்திற்குள் முத்தமிட்டு விலகியவள்

அவனது கையைப் பிடித்திருந்த பிடியை மட்டும் விடவே இல்லை.

"சிவூ... இருட்டாயிருக்கு... ரொம்பப் பயமாயிருக்குடா..." அவளது திணறலான வார்த்தையில் சிவகுமரன் என்ற சிலைக்கு உயிர் வந்தது.

"அம்முலு..." என்று அவன் அழைக்கும் போதே அவனையே பார்த்தபடி அவளது விழிகள் மெல்ல சொருகியது.

"அம்முலு..." என்று அலறியவனின் அலறலில் அந்த மருத்துவமனையே கிடுகிடுத்தது.

அபிஷரிகாவின் நிலையை உணர்ந்து அவளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவர்கள் சிவகுமரனை அப்புறப்படுத்த முயல... அவர்களால் அது முடியவில்லை. ஆம், அபிஷரிகா தனது இறுகிய கைப்பிடியை சிறிதும் தளர்த்தவில்லை. மிகவும் சிரமப்பட்டு எல்லோரும் சேர்ந்து இருவரது கைகளையும் பிரித்து எடுத்தனர். அபிஷரிகா சிகிச்சைக்கு அழைத்துச் செல்லப்பட... சிவகுமரன் வெளியில் வந்தமர்ந்தான்.

மனைவியின் இரத்தம் தோய்ந்த தனது கையைக் கொண்டு அவன் தனது முகத்தை மூடியபடி அழ துவங்கினான். அதிலும் அவளது வார்த்தைகள் அவனை முற்றிலும் நிலைகுலைய செய்திருந்தது.

"குமரா..." பொன்னம்பலம் அழைப்பில் அவன் நிமிர்ந்து பார்த்தான். ப்ரஷன்ஜித் உட்படக் குடும்ப உறுப்பினர்கள் எல்லோரும் அங்கு நின்றிருந்தனர்.

"அபிக்கு எப்படிப்பா இருக்கு...?" பொன்னம்பலமும் தொலைக்காட்சி மூலம் விசயத்தைக் கேள்விப்பட்டு ஓடி வந்துவிட்டார். என்னயிருந்தாலும் பேத்தி அல்லவா...!

"எதுக்கு வந்தீங்க...?" சிவகுமரன் அடக்கப்பட்ட கோபத்துடன் அவர்களைப் பார்த்து கேட்டான்.

"குமரா..." வேணி மகனை சத்தம் போட்டார். பொன்னம்பலம் திகைப்புடன் அவனைப் பார்த்தார்.

"பேசாதீங்கம்மா... எல்லாம் உங்களால் தான்... அபியோட இந்த நிலைமைக்குக் காரணம் நீங்க தான். நாங்க பிரிஞ்சு இருந்தப்போ கூட அவள் உயிரோடு தான் இருந்தாள். ஆனா இப்போ...?" அவனுக்குப் பேச முடியாது அழுகை வந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு விழிகள் சிவக்க அன்னையைப் பார்த்தவன்,

"அவள் உயிரை மொத்தமா எடுத்துட்டீங்களே..." என்று கோபத்துடன் கத்தினான். வேணி விக்கித்துப் போய் மகனை பார்த்திருந்தார்.

"எனக்கு நீங்க யாரும் வேண்டாம். அவள் மட்டும் போதும்... அவள் என்னை அடித்தாலும் சரி, என்னை அவமானப்படுத்தினாலும் சரி... நான் அவளை விட்டு வர போறதில்லை. எனக்கு அவள் வேண்டும். நான் காதலிக்க அவள் உயிரோடு வேண்டும். என்னைத் திட்டுறதுக்காகவாவது அவள் உயிரோடு வேண்டும். எனக்கு அவள் மட்டும் போதும். தயவுசெய்து இனிமேல் நீங்க யாரும் எங்க வாழ்க்கையில் குறுக்கே வராதீங்க. போங்க, இங்கிருந்து போயிருங்க..." என்று அவன் இருகரம் கூப்பி வேண்டினான்.

எல்லோரும் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தனர். அபிஷரிகா மீதான அவனது காதலை அப்போது தான் எல்லோரும் உணர்ந்தனர். அவனது காதல் கண்டு அவர்களுக்குப் பிரமிப்பாக இருந்தது. எந்த மாதிரியான சூழ்நிலையில் அவள் அவனை விட்டு சென்றாள் என்பதை எல்லோரும் அறிவர். அப்படியிருந்தும் அவனது காதல் சிறிதும் குறையவில்லையே.

"ப்பா, உங்களுக்கு நானும் வேண்டாமா?" ப்ரஷன்ஜித் தந்தையின் காலை கட்டி கொண்டு அவனை அண்ணாந்து பார்த்தபடி பரிதாபமாய்க் கேட்டான். அவனது கவலையில் அவன் மகனை எப்படி மறந்தான்...???

"ப்ரஷன்..." சிவகுமரன் விழிகள் கலங்கியபடி மகனை தூக்கி அணைத்துக் கொண்டான்.

"அழாதீங்கப்பா..." என்றபடி ப்ரஷன்ஜித் தந்தையின் கலங்கிய விழிகளைத் துடைத்துவிட்டான்.

"அழலை..." என்றவன் மகனை கண்டு புன்னகைக்க முயன்று தோற்றுப் போனான். அவனது விழிகளில் இருந்து மீண்டும் மீண்டும் கண்ணீர் பெருகி கொண்டே இருந்தது.

தொடரும்...!!!

அத்தியாயம் : 21

ஆறு வருடங்களுக்கு முன்பு...

அபிஷரிகா வாய்க்குள் ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்தபடி வீட்டிற்குள் நுழைந்தவள் அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த சிவகுமரனை கண்டும் காணாதபடி தனது அறையை நோக்கி நகர்ந்தாள். அன்று அவள் அவனிடம் 'சினி பீல்டில் என் இமேஜை டேமேஜ் பண்ணணும்ன்னு எத்தனை நாளாய் காத்திருந்த...?' என்று கேட்டு பெரிய சண்டை போட்டுவிட்டாள். அதற்கு பின் அவன் எத்தனை சமாதானம் செய்த போதும் அவளது கோபம் அடங்கவில்லை. அன்றிலிருந்து அவளது கோபம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

"நில்லு..." என்ற அவனது அதட்டலான குரலுக்கு அடங்கி விடுபவளா அவனது மனைவி... அவனை லட்சியம் செய்யாது அவள் தன் போக்கில் செல்ல... அவன் சோபாவில் இருந்து எழுந்து வந்து அவளது வழியை மறித்தார் போன்று நின்றான்.

"எங்கே போயிட்டு வர்ற?" அவனது இந்த கேள்வி அவளை வெகுண்டு எழ செய்ய போதுமானதாய் இருந்தது.

"நான் எங்கே போயிட்டு வந்தால் உனக்கு என்னடா? கழுத்தில் தாலி கட்டிட்டா என்ன வேணும்ன்னாலும் கேட்கலாமா? கணவன் என்கிற கெத்து...?" என்று அவனை கோபமாய் உறுத்து விழித்தவளின் வார்த்தைகளை கேட்டு அவனது விழிகள் பதிலுக்கு அவளது கழுத்தினை உறுத்து விழித்தது. அவள் கழுத்தில் தாலி இல்லாததை அவன் விழிகளால் சுட்டிக்காட்டுகின்றானாம். 'அடப்போடா' என்பது போல் அவள் அவனை பார்த்து வைத்தாள்.

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லும் வழக்கம் இல்லை..." அவனது வார்த்தைகள் சிறு எரிச்சலுடன் வெளிவந்தது.

'இல்லை' என்பது போல் அவள் இரு கைகளை கட்டி கொண்டு திமிராய் நின்றிருந்தாள். அவளது பாவனை

கண்டு அவனது கோபம் மறைந்து அவனுக்கு சிரிப்பு வந்தது. ஆனால் அடக்கி கொண்டான்.

"சரி நானே விசயத்துக்கு வர்றேன். நீ தீபன் படத்தில் நடிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டுவிட்டு வந்திருக்கியா?" கணவனுக்கு விசயம் தெரிந்து விட்டது என்று உணர்ந்து கொண்டவள் அவனை கண்டு அலட்சியமாக புன்னகைத்தாள்.

"ஆமாம், அதுக்கு என்ன இப்போ...?" என்று கேட்டவளின் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை அறையலாமா? என்று அவனுக்கு தோன்றியது. ஆனால் அவன் அதை செய்யாது அவளது தோள்களை உலுக்கி,

"அவன் ஒரு பொம்பளை பொறுக்கி... அவனுக்கு உன் மேல் ஒரு கண்ணு இருக்குன்னு சினி ஃபீல்டில் உள்ள எல்லோருக்கும் தெரியும். உனக்கு மட்டும் அது ஏன் தெரியாம போச்சு?" என்று அவன் படபடக்க...

"என்னுடைய ஃபீல்டில் அவனை போல் அதிகம் பேர் உண்டு. அவனுக்காக பயந்துக்கிட்டு நான் வீட்டில் முடங்கி கிடக்க முடியாது."

அவளது கூற்றும் சரி தான். அவளுக்கு பயம் இல்லாது இருக்கலாம். ஆனால் அவனுக்கு நிரம்ப பயம் இருக்கிறதே. தனது மனைவியை காணும் போதெல்லாம் தீபனின் விழிகளில் எழும் வெறியை அவனுமே பார்த்து இருக்கிறானே. அதனால் விளைந்த பயம் தானே அவனது... அப்படிப்பட்ட பொறுக்கியின் படத்தில் நடிக்க வேண்டிய அவசியம் தான் என்ன? அவனுக்கு மனைவி மீது எரிச்சல் வந்தது.

"சரி, நீ நடிக்க போ... நான் ஒண்ணும் சொல்லலை." என்றவனை அற்பம் போல் பார்த்தாள் அவள்...

"நான் உன் கிட்ட பெர்மிசன் கேட்கலையே?" அத்தனை அலட்சியம் அவளது வார்த்தைகளில்... அதை கேட்டு அவனது முகம் ஒரு மாதிரியாய் மாறியது.

"நீ வரம்பு மீறி போற அபி... நானும் ஒரு நேரம் மாதிரி ஒரு நேரம் இருக்க மாட்டேன். நீ நடிக்க போகிறதை பத்தி நான் எதுவும் சொல்லலை. நீ நடிக்க வேண்டும் என்பது தான் என் விருப்பமும் கூட... ஆனால் தீபன் படத்தில் நீ நடிப்பதை நான் விரும்பலை." தன் மனதில் இருப்பதை அவன் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்தான்.

"அப்போ உன் படத்தில் நான் நடிக்கணுமோ?" என்று கேட்டவளின் குரலில் கேலியும், கோபமும் சரிவிகிதமாய் கலந்திருந்தது. அவன் ஒன்றும் பேசாது அவளையே பார்த்திருந்தான்.

"என்னை பைத்தியக்காரியா நடிக்க வச்சு இந்த சினி ஃபீல்ட்டை விட்டு ஒரேடியா துரத்திவிட்டு உண்மையில் என்னை பைத்தியக்காரியா மாத்துறது தானே உன்னோட ப்ளான்." என்று கோபத்துடன் உறுத்து விழித்தவளை கண்டு அவனுக்கு அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை. நல்லது எது? கெட்டது எது? என்று தெரியாது விழிக்கும் குழந்தையாக தான் அவள் அவனது விழிகளுக்கு தெரிந்தாள்.

"அந்த கரெக்டர் வெயிட் தெரியாம நீ பேசுற அபி..."

"அதில் நடிச்சா என்னோட கரெக்டர் தான் ஸ்பாயில் ஆகிரும்." என்று அவனுக்கு பதில் அளித்தவள்,

"இனி என் விசயத்தில் தலையிடாதே." என்று எச்சரித்து விட்டு செல்ல... அவன் ஆயாசமாய் சோபாவில் அமர்ந்தான்.

ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் பிறப்பு முதல் இறப்பு வரை அவளது வாழ்க்கையை பதிவு செய்யும் படத்தை தான் அவன் தயாரிப்பதாக இருந்தது. புதுமுக இயக்குநர் ரவி கதை சொன்ன விதத்திலேயே அவனுக்கு கதை மிகவும் பிடித்து போனது. நிச்சயம் இந்த கதை 'சூப்பர் ஹிட்' என்றே அவனுக்கு தோன்றியது. ஆனால் அந்த கதாபாத்திரத்தில் நடிக்க அபிஷரிகாவுக்கு விரும்பவில்லை. ஆட்டிசத்தை பற்றி புரிந்து கொள்ளாமல் அவள் அதை பைத்தியம் என்றாள். நடிக்க முடியாது என்று

அவனிடம் மறுத்தாள். சண்டை போட்டாள். அதற்கு மேல் அவனும் அவளை வற்புறுத்தவில்லை. படம் தயாரிக்கும் எண்ணத்தை கைவிட்டான். அவளுக்காக தான் பொன்னம்பலத்தின் எதிர்ப்பை மீறி அவன் இந்த காரியத்தை செய்தது. அவருக்கு திரைத்துறை என்பதே பிடிக்கவில்லை. அதில் பணத்தை முடக்குவது அவருக்கு அறவே பிடிக்கவில்லை. அவனுக்காக தான் அவர் சரியென்று சொன்னது. இப்போது அபிஷரிகாவால் எல்லாம் முடங்கி போனது. அவனால் செய்ய முடிந்தது ஒன்றே ஒன்று தான். ரவியிடம் இருந்து அந்த கதையை மட்டும் வாங்கிவிட்டான்.

"இந்த கதையை நான் அபிக்காக வாங்கியிருந்தாலும் இதை நீ தான் டைரக்ட் பண்ணணும் ரவி." என்று கூறியே தான் கதையை வாங்கியிருந்தான். இப்போது அது கிடப்பில் கிடந்தது.

அடுத்து வந்த நாட்கள் அமைதியாக கழிந்தது. அவள் அவன் ஒருவன் அங்கிருப்பதை சிறிதும் கண்டு கொள்ளவில்லை. அவனும் அவளிடம் எதுவும் பேசவில்லை. அவளை சமாதானப்படுத்துவதை விட அவளே சமாதானமானால் தான் நல்லது என்பதை இத்தனை நாட்களில் அவன் அறிந்து வைத்திருந்தான். ஆனாலும் அவள் மீதான அவனது அக்கறை மட்டும் சிறிதும் மாறவில்லை. நேரத்திற்கு உண்டாளா? வீட்டிற்கு வந்தாளா? பாதுகாப்பாக இருக்கிறாளா? என்று அவளது ஒவ்வொரு அசைவிலும் அவன் அக்கறை எடுத்து கொண்டான். அப்படியிருந்தும் அவனது கண்களில் மண்ணை தூவி விட்டு அவள் காணாமல் போனாள். அதற்காக அவன் முன்பு மாதிரி சோர்ந்து போய் அமர்ந்து விடவில்லை. அவளை பற்றி அவனுக்கு நன்கு தெரிந்திருந்ததால் அவளை கண்காணிக்க ஆள் ஏற்பாடு செய்திருந்தான். அவர்கள் மூலம் அவள் எங்கே சென்றிருக்கிறாள் என்கிற விவரம் அவனுக்கு தெரிய வந்தது. அன்றே அவனும் அவளை பின்தொடர்ந்து சென்றான். ஆம், அவள் தீபனின் படத்தின்

பாடல் காட்சி படப்பிடிப்பிற்காக குலுமணாலி சென்றிருந்தாள்.

புந்தார் விமானநிலையத்தில் வந்திறங்கிய சிவகுமரன் மனைவியை தேடி குலுமணாலிக்கு பயணமானான். அவளை கண்காணிக்க ஆளிருந்த போதும் அவனால் சென்னையில் நிம்மதியாக இருக்க முடியவில்லை. அவள் குலுமணாலி சென்ற நொடியில் இருந்து ஏனோ அவனது மனம் காரணம் தெரியாது படபடத்து கொண்டிருந்தது. அந்த அவஸ்தையை தாங்க முடியாது தான் அவன் அவளை தேடி வந்தது. நிச்சயம் மனைவி அவனது வருகையை கண்டு கோபம் கொள்வாள் தான்... அதை நினைத்தவனுக்கு அவனையும் அறியாது புன்னகை தோன்றியது.

'உன் கோபத்தை அடக்கும் வித்தையை நான் அறிவேன் அம்முலு.' என்று நினைத்தவனின் முகத்தில் மந்தகாச புன்னகை தோன்றியது. தனது அணைப்பில் பாந்தமாய் அடங்கும் மனைவியின் அருகாமைக்காக அவனது மனம் மிகவும் ஏங்கியது. அங்கு நிலவிய குளுமையான சீதோஷ்ணநிலை வேறு அதற்கு தூபம் போட்டது.

குலுமணாலி வந்து சேர்ந்தவன் நேரே மனைவி தங்கியிருந்த நட்சத்திர விடுதிக்கு சென்றான். அந்த நட்சத்திர விடுதி சின்ன சின்ன குடில் போன்ற அமைப்புடையது. ஒவ்வொரு குடிலுக்கும் நிறைய இடைவெளி வேறு இருந்தது. அவள் இருந்த குடிலின் பெயர் அவனுக்கு தெரியும்... ஆதலால் அவன் யாரிடமும் விசாரிக்காது நேரே அங்கே சென்றான். அவன் சென்ற நேரம் மாலை மயங்கி இரவு மலர்ந்து கொண்டிருந்த அழகான பொழுது... அவன் குடிலின் முன்னிருந்த அழைப்பு மணியை அழுத்தியதும் அபிஷரிகா வந்து கதவை திறந்தாள். எதிர்பாராது கணவனை அங்கு கண்டதும் அவள் விழி விரிய திகைத்து நின்றாள். அவளது திகைப்பினை பயன்படுத்தி கொண்ட சிவகுமரன் அவளை தள்ளி கொண்டு உள்ளே நுழைந்தான். அதில் தன்னுணர்வு பெற்றவள்,

"ஏய், நீ எதுக்கு இங்கே வந்த? என்னை வேவு பார்க்க வந்தியா?" அவள் குரலை உயர்த்தி கத்த துவங்கினாள்.

மனைவியை ஒரு நொடி ஆழ்ந்து பார்த்தவன் அடுத்த நொடி அவளது இதழ்களை சிறை செய்திருந்தான். அவள் திமிறிய போதும் அவன் விடவில்லை. சில நொடிகள் கழித்து அவளை விடுவித்தவன்,

"இதுக்கு தான் வந்தேன்... உன்னை வேவு பார்க்க வரலை." என்றவனை கண்டு அவளது முகம் இரத்த நிறத்தை தத்தெடுத்தது. அது கோபத்தினாலா? அல்லது வெட்கத்தினாலா? என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

"ச்சீ, போ..." அவள் அவனது நெஞ்சில் கை வைத்து தள்ளிவிட... அவளது கைகளை ஒருசேர பிடித்திழுத்து அவளை தன்னோடு சேர்த்து அணைத்தவன்,

"போறதுக்கா இவ்வளவு தூரம் ட்ராவல் பண்ணி இங்கே வந்திருக்கிறேன்." என்று அவளது காதுகளில் ரகசியம் பேச... அவள் திகைப்புடன் அவனை ஏறிட்டாள்.

"என் பொண்டாட்டி கூட... அவள் இருக்கிற ரூமில் ஒண்ணா..." என்று ஒவ்வொரு வார்த்தையையும் நிறுத்தி நிதானமாய் சொன்னவன்,

"சேர்ந்து இருக்கலாம்ன்னு வந்திருக்கிறேன்." என்று கண்ணை சிமிட்டியபடி குறும்பாய் புன்னகைத்தான்.

முன்பு அவன் இப்படி பேசியிருந்தால் நடந்திருக்கும் கதையே வேறு... ஆனால் இப்போது கோபத்தில் இருக்கும் அவளுக்கு அவன் என்ன பேசினாலும் கோபம் வந்தது. என்ன செய்தாலும் ஆத்திரம் வந்தது. அவன் அவளது கேரியரை பாதிக்கும் படத்தில் நடிக்க சொன்னதால் வந்த கோபம், ஆத்திரம் இது...

"அது ஒரு போதும் நடக்காது. நீ வெளியில் போ..." என்று அவள் கதவை நோக்கி கையை நீட்டினாள்.

"நீ சொன்னால் நான் கேட்பேன்னு நீ எப்படி நினைக்கலாம்?" என்றுரைத்தவன் சட்டமாக கட்டிலில் அமர்ந்து கொண்டான். அவனை அழுத்தமாய் ஒரு பார்வை பார்த்தவள் அறை கதவை திறந்து கொண்டு வெளியில் சென்று நின்று கொண்டாள்.

சிவகுமரன் அவளது செயலை பார்த்தபடி கட்டிலில் அமர்ந்திருந்தவன் சிறிதும் அசையவில்லை. நேரம் செல்ல செல்ல சிலையாய் நின்றிருந்த அபிஷரிகாவின் நிலையில் எந்தவித மாற்றமும் இல்லை என்பதை உணர்ந்து கொண்ட அவனுக்கு தான் பதற்றமாக இருந்தது. ஏனெனில் திறந்திருந்த அறை கதவு வழியே வந்த குளிரை அவனாலேயே தாங்கி கொள்ள முடியவில்லை. அப்படி இருக்கும் போது வெளியில் நின்றிருக்கும் அபிஷரிகாவின் நிலையை சொல்லவும் வேண்டுமோ? இரு கைகளையும் கட்டி கொண்டு அழுத்தமாய் நின்றிருந்த மனைவியின் நிலையை எண்ணி அவன் தான் பரிதவித்து போனான். எழுந்து வெளியில் வந்தவன்,

"அம்முலு, உள்ளே வா..." என்று கெஞ்சும் குரலில் அவளை அழைக்க...

"நீ வெளியில் வந்தால் தான் நான் உள்ளே வருவேன்..." என்று அவள் திடமான குரலில் உறுதியாய் உரைக்க... அவன் தான் செய்வதறியாது திகைத்து போனான்.

குளிரில் மேனி நடுங்க, முகம் வெளுக்க, இதழ்கள் துடிக்க நின்றிருந்த மனைவியை கண்டு அவனுள் இரக்கம் சுரந்தது. அடுத்த கணம் அவன் சிறிதும் யோசிக்காது,

"சரி, நான் வெளியில் இருக்கிறேன். நீ உள்ளே போ..." என்றான்... அவள் ஒரு நொடி அவனை வியப்பாய் பார்த்துவிட்டு அறைக்குள் சென்றவள், அடுத்த நொடி வெளியில் வந்து அவனது பையை அவன் முன் தூக்கி எறிந்துவிட்டு கதவை மூட எத்தனித்த போது அவனது குரல் அவளை தடுத்தது.

"நீ என்னை ரூமில் இருந்து தான் வெளியே அனுப்ப முடியும். இங்கிருந்து அல்ல... எவ்வளவு நேரமானாலும் சரி... உன் மனசு மாறும் வரை நான் இங்கேயே தான் இருப்பேன்." என்று அவன் கூற... அவனது கூற்றை காதில் வாங்காதவளாய் அவள் கதவை அறைந்து சாற்றி கொண்டாள்.

சிவகுமரன் தான் நின்றிருந்த இடத்தை சுற்றி பார்த்தான். குடிலின் முன்னிருந்த மரத்தினாலான வராந்தா அது... அது முழுவதும் திறந்த அமைப்புடையதாய் இருந்தது. வாசல் அருகே பனி கொட்டி கிடந்தது. அவன் அணிந்திருந்த ஸ்வெட்டரை மீறி குளிர் அவனுள் ஊசியாய் ஊடுருவி சென்றது. உட்கார்வதற்கு ஒரு நாற்காலியோ, மேசையோ இல்லை. அவன் கீழே அமர்ந்து கைகளை கட்டி கொண்டான். கடுங்குளிர் அவனை வாட்டி வதைத்தது. நேரம் செல்ல செல்ல அவனுக்கு பயண களைப்பில் உறக்கம் வந்தது. அவன் கை, கால்களை குறுக்கி கொண்டு அப்படியே கீழே சரிந்துவிட்டான். மிதமிஞ்சிய குளிரில் அவனால் எதுவும் செய்ய முடியவில்லை. அவனது உடல் குளிரில் கொஞ்சம் கொஞ்சமாக மரத்து போக ஆரம்பித்தது.

உள்ளே சென்று கதவை அடைத்து கொண்ட அபிஷரிகாவிற்கு மனசு கேட்கவில்லை. வெளியில் சிறிது நேரம் நின்றதற்கே அவளால் குளிர் தாங்க முடியவில்லை. கணவன் எப்படி குளிர் தாங்குவான்? என்று அவளுக்கு கவலையாக இருந்தது. ஆனாலும் அவளது ஈகோ அவளை அவனிடத்தில் இறங்கி போக செய்யாது தடுத்தது. கொஞ்சம் நேரம் யோசித்து கொண்டு இருந்தவள் பின்பு மனம் பொறுக்காது கதவை திறந்து கொண்டு தலையை மட்டும் வெளியில் நீட்டி எட்டிப்பார்த்தாள். அங்கு சிவகுமரன் உடலை குறுக்கி கொண்டு படுத்திருந்தது கண்டு அவள் பதறி போய் அவனை நோக்கி சென்றாள்.

"சிவூ... எழுந்திரு..." அவள் அவனை உலுக்கி எழுப்ப... அவன் மெல்ல விழிகளை திறந்து அவளை பார்த்தான்.

"எழுந்திரு..."

"நீ அறைக்குள் கூப்பிடறதா இருந்தால் எழுந்து வர்றேன்..." குளிரில் தந்தியடித்த பற்களை கடித்து கட்டுப்படுத்தி கொண்டு கூறியவன் எழாது வீம்பு பிடித்தான். அவள் அவனை ஒரு கணம் ஆழ்ந்து பார்த்தவள்,

"சரி, உள்ளே வா சிவூ..." என்று அவனை அழைக்க... அடுத்த நொடி அவன் துள்ளி கொண்டு எழுந்தமர்ந்தான். அவன் எழுந்தமர்ந்த வேகத்தில் அவள் ஓரடி பின்னால் சாய்ந்தவள்,

"ஏய், நடிச்சியா?" என்று கோபத்துடன் கேட்க...

"ச்சேச்சே... இல்லைடி... இங்கே பார் கை எல்லாம் குளிரில் விறைச்சு போச்சு..." என்று கையை நீட்டியபடி பேசியவனை அவள் நம்பாது பார்த்தாள்.

"சத்தியமா அம்முலு..." என்றவன் அடுத்த நொடி அவளை இறுக அணைத்திருந்தான். அவனது குளிர்ந்த தேகத்தினை அவளது வெம்மையான மேனி உணர்ந்தது.

"இந்த குளிருக்கு இதமா, கதகதப்பா நீ இருக்க அம்முலு..." என்று ரகசியமாய் கிசுகிசுத்தவனை தள்ளிவிட்டு முறைத்தவள் எழுந்து நின்றாள்.

"உள்ளே வர்றதுன்னா வா... இல்லைன்னா இப்படியே இரு." என்றவள் அறைக்குள் செல்ல...

"ஐய்யயோ, கன்னிப்பையனை தனியா விட்டுட்டு போயிடாதே..." என்று அலறியபடி அவன் அறையினுள் வேகமாய் பாய்ந்தான்.

அபிஷரிகா அறை கதவை தாழிட்டு வரும் முன் சிவகுமரன் கம்பளி போர்வையை எடுத்து இழுத்து மூடி கொண்டு கட்டிலில் படுத்து கொண்டான்.

"சிவூ..." என்று அவள் கண்டிப்புடன் அழைக்க... அவன் போர்வையை விலக்காமலேயே,

"நான் உன்னை ஒண்ணும் பண்ண மாட்டேன். என்னை நம்பி படு..." என்க...

அவனை கண்டு அவளுக்கு சிரிப்பு வந்தது. ஆனாலும் கோபத்தை இழுத்து பிடித்து கொண்டவள் மறுபக்கம் வந்து படுத்து கொண்டாள். சிறிது நேரத்தில் அவள் உறங்கிவிட... அவன் தனது போர்வையை விலக்கி அவளை திரும்பி பார்த்தான். அவள் ஆழ்ந்து உறங்கி கொண்டிருப்பதை கண்டு அவள் புறம் திரும்பி படுத்தவன்,

"உன்னுடைய இந்த சின்ன அக்கறை சொல்லாமல் சொல்லுது உனக்கு என்னை பிடிக்கும் என்று... ஆனால் உனக்கு வெளியில் ஒத்து கொள்ள முடியலை. நீ இப்படியே இரு. நான் உன்னை காதலித்து கொண்டே இருக்கிறேன்." என்று கூறியவனுக்கு தெரியவில்லை, அவனுடைய காதலை அவள் உயிரோடு வலிக்க வலிக்க கொன்று புதைக்க போகிறாள் என்று...

மறுநாள் எழுந்த அபிஷரிகா கணவனை கண்டு கொள்ளாது படப்பிடிப்பிற்கு செல்ல தயாரானாள். தான் என்ன சொன்னாலும் அவள் கேட்க போவதில்லை என்று தெரிந்திருந்த காரணத்தால் அவனும் அவளை எந்தவொரு கேள்வியும் கேட்கவில்லை. அவனும் மௌனமாக கிளம்பி தயாரானான். அவள் படப்பிடிப்பிற்கு செல்ல... அவனும் அதே காரிலேற... அவள் அவனை முறைத்து பார்த்தாள்.

"அதான் சிங்கப்பூர் ஸ்டார் நைட்டில் எல்லாம் வெட்ட வெளிச்சமாகி விட்டதே. இன்னும் மறைக்க என்ன இருக்கிறது?" அன்று அவள் கூறியதை போலவே அவன் சொல்லி காட்ட... அதை கேட்டு அவளது முறைப்பு இன்னமும் அதிகரித்தது.

அன்று முதல் சிவகுமரன் மனைவியுடன் படப்பிடிப்பிற்கு உடன் செல்வது வழக்கமாகி போனது. இவனது வருகையை தீபன் ரசிக்கவில்லை. அவன் இவனை முறைத்து கொண்டே திரிந்தான். சிவகுமரனும் அவனிடம் நேரடியாக மோதாமல் அமைதியாக மனைவியை

பாதுகாத்தான். அவளுக்கு அது புரிந்தாலும் கீழே இறங்கி வர அவளது ஈகோ ஒத்து கொள்ளவில்லை.

அன்று அப்படித்தான் பாடல் காட்சி ஒன்றிற்காக பனிமலை குன்றின் மீது அவளும், நாயகனும் ஆடி பாடி கொண்டிருக்க... சிவகுமரன் தள்ளி நின்று கொண்டு அதை எரிச்சலுடன் பார்த்திருந்தான். தன்னோடு டூயட் பாட மறுக்கும் மனைவி மீது அவனுக்கு அத்தனை கோபம் வந்தது. அதில் எள்ளவும் பொறாமை இல்லை. அப்போது அபிஷரிகா கால் தவறி கீழே விழ... அது சரிவு பகுதி என்பதால் அவள் பனியில் அப்படியே உருண்டோடினாள். உடன் நடித்த நாயகனோ ஸ்தம்பித்து போய் நின்றான். படக்குழுவினரும் திகைத்து போய் நின்றனர். சிவகுமரன் மட்டுமே 'அம்முலு' என்று கத்தியபடி அவளை நோக்கி ஓடினான்.

'அம்முலு' என்று மனதிற்குள் அரற்றியபடி பனிச்சரிவில் இறங்கியவன் பனியில் நடந்து பழக்கம் இல்லாததால் அவனும் கீழே விழுந்து உருண்டு புரண்டு தன்னவளை நோக்கி சென்றான். எப்படியோ ஒருவழியாய் அவளை எட்டிப்பிடித்தவன் அப்போது தான் உணர்ந்தான், அவள் சுயநினைவு இழந்திருப்பதை...

"அம்முலு..." என்றபடி அவன் கண்ணீர் மல்க அவளது கன்னத்தை தட்டி எழுப்பினான். அதீத குளிரில் அவளது உடல் விறைத்திருந்தது. அவள் உடுத்தியிருந்த மெல்லிய புடவை முழுவதும் பனியில் நனைந்திருந்தது.

"ச்சே..." அதை கண்டு அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

அதற்குள் படக்குழுவினர் அவர்களை நோக்கி ஓடி வந்தனர். அடுத்த சில நிமிடங்களில் அவளை அங்கிருந்த மருத்துவமனையில் சேர்த்தனர். உடன் சிவகுமரன் இருந்தான். வேறு யாரையும் அருகில் செல்ல அவன் அனுமதிக்கவில்லை. சில மணி நேரங்களில் அவள் கண் விழித்ததும் அவள் நன்றாக இருப்பதாக கூறி அவளை அனுப்பி வைத்தார் மருத்துவர். அறைக்கு வரும் வரை இருவரும் ஒன்றும் பேசவில்லை. அவளை கைத்தாங்கலாக

அழைத்து வந்தவன் அவளை கட்டிலில் படுக்க வைத்து போர்வையை போர்த்தி விட்டு,

"ரெஸ்ட் எடு..." என்க... அவள் அவனது கையை பிடித்து தடுத்தாள்.

"என்னம்மா...?" என்றபடி அவன் அவள் அருகே அமர... அடுத்த கணம் அவள் அவனது மடியில் முகம் புதைத்து படுத்து கொண்டாள். அவன் சிரித்தபடி அவளது தலையை மென்மையாக வருடி ஆறுதல் அளித்தான்.

சில நிமிடங்களில் சாவின் விளிம்பில் இருந்து மீண்டு எழுந்தவளுக்கு கணவனது அருகாமை மிகவும் தேவைப்பட்டது. கணவனுடன் வாழாமல் தான் இறந்து போய்விடுவோமோ? என்று உள்ளுக்குள் பதறி தவித்தது அவளுக்கு மட்டும் தானே தெரியும். அதை அவள் அவனிடத்தில் வாய்விட்டு கூறியிருக்க வேண்டுமோ? சொல்லாத காதல் செல்லாது என்பதை அந்த பேதை உணரவில்லையோ!

"என்ன அம்முலு?" என்ற கணவனை ஏறிட்டு பார்த்து தனது மனதினை அவனுக்கு உணர்த்திட அவளால் முடியவில்லை.

அச்சம் வந்து தடுத்ததோ! இல்லை பெண்ணவளை வெட்கம் வந்து ஆட்கொண்டதோ! அவள் தனது முகத்தினை நிமிர்த்தாது அவனது மடியில் இன்னமும் ஆழாய் முகத்தை புதைத்து கொண்டாள். அவன் சிரித்தபடி அவளை சிறு குழந்தையாய் மடி தாங்கி கொண்டான். அப்படியே படுத்திருந்தவள் மருந்தின் வீரியத்தில் நன்கு உறங்கி விட்டாள். அவள் உறங்கி விட்டதை அறிந்தவன் அவளை நேராக படுக்க வைத்துவிட்டு போர்வையை போர்த்திவிட்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்தபடி அவளை பார்த்திருந்தவன் தானும் உறங்கி போனான். சிறிது நேரம் கழித்து எழுந்தவன் மனைவி எழுவதற்காக காத்திருந்தான். அவள் விழித்ததும்,

"நாம ஊருக்கு கிளம்பலாம்..." என்க...

"அது முடியாது." என்று அவள் மறுத்தாள். அவன் அவளுக்கு முக்கியம் தான்... அதைவிட அவளுக்கு அவளது தொழில் முக்கியம்... அந்தளவிற்கு அவள் நடிப்பை நேசித்தாள்.

"அபி, என் பொறுமைக்கும் ஒரு அளவு தான் இருக்கு..." அவன் கோபத்தை கட்டுப்படுத்தி கொண்டு கூற... அவள் அதை லட்சியப்படுத்தவில்லை.

"எனக்கு என்னோட கேரியர் முக்கியம்... ஒரு படத்தில் ஒப்பந்தமாகிட்டு அதிலிருந்து விலகி செல்ல என்னால் முடியாது. அப்புறம் மீடியா இந்த விசயத்தை கண், காது வச்சு பெரிது படுத்துவாங்க..."

"நீ கிளம்புற... அவ்வளவு தான்..." என்று முடித்து கொண்டவன் வெளியில் சென்றுவிட்டான். அதற்கு மேல் அவன் அங்கிருந்தால் தேவையில்லாத வாக்குவாதம் எழும். அது அவளது உடல்நலத்திற்கு நல்லதல்ல... அதனால் தான் அவன் விலகி வந்துவிட்டான்.

சிவகுமரன் சென்ற சிறிது நேரத்தில் அழைப்பு மணி ஒலித்தது. அபிஷரிகா சலிப்புடன், "கதவு திறந்து தான் இருக்கு சிவூ..." என்று கத்தினாள். ஆனால் கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தது சிவகுமரன் இல்லை, தீபன்... அவனை கண்டதும் அவளது விழிகள் யோசனையாய் இடுங்கியது, அவ்வளவே... மற்றபடி அவள் தைரியமாக அவனை பார்த்தாள்.

"என்ன விசயம் புரொடியூசர் சார்...? என்னை தேடி என்னோட ரூமுக்கே வந்திருக்கீங்க..." என்று அவள் கட்டிலில் அமர்ந்து கொண்டு கால் மேல் கால் போட்டபடி அவனை பார்த்தாள்.

"என்ன...? அவன் கூட இருக்கான்ங்கிற தைரியமா?" தீபனின் குரல் நக்கலாய் ஒலித்தது.

"நீங்க சொல்றது எனக்கு புரியலை... எவனை சொல்றீங்க?"

"அதான் அந்த சிவகுமரன்..."

"ஆமா, அவருக்கு என்ன?"

"அவன் கூட மட்டும் கூத்தடிக்க தெரியுது. அப்போ என் கூடவும் ஒரு நாள் டைம் ஸ்பெண்ட் பண்ணலாம்... தப்பே இல்லை." என்றவன் அவளை நெருங்கி வந்தான். அப்போதும் அவள் அசையவில்லை. அவள் தைரியமாக அமர்ந்திருப்பதை கண்டு அவன் தான் சற்று திகைத்து நிற்க வேண்டியதாய் போயிற்று.

"உனக்கு பயமாயில்லை...?" அவளது நடவடிக்கை அவனுக்கு புதிராக இருந்தது.

"எதுக்கு பயப்படும்? நீங்க என்ன சிங்கமா? புலியா? ஆப்டர்ஆல் மனுசன் தானே..." அவளது நக்கலை அவன் உணரவில்லை.

"இதுக்கு என்ன அர்த்தம்?" அவன் புரியாது குழம்பினான்.

"எல்லாத்துக்கும் தயார் என்று அர்த்தம்..." என்றவளின் புன்னகை கண்டு அவன் கள் குடித்த மந்தி போல் மதி கெட்டு போனான்.

"வாவ், செல்லம்... சூப்பர். இது தான் எனக்கு வேண்டும்." என்றவன் மீண்டும் அவள் அருகில் வர முயல...

"இப்படியே வந்தால் எப்படி...? லவ் மேக்கிங்க்கு எப்படி வரணுமோ... அப்படி வாங்க..." என்றவளது விழிகளில் தெரிந்த அப்பட்டமான அழைப்பில் அவன் முற்றிலும் தலை சுற்றி போனான். பெண்ணாசையில் அவன் தனது மானத்தை இழக்க துணிந்தான்.

தீபன் தனது உடை ஒவ்வொன்றையும் களைந்து நிர்வாணமான போது அவள் குனிந்து தனது அலைப்பேசியை நோண்டி கொண்டிருந்தாள். அப்போது அவனது அலைப்பேசி எண்ணிற்கு ஒரு குறுஞ்செய்தி வந்ததற்கான ஒலி கேட்டது. அதை அவன் பொருட்படுத்தாது அவளை நோக்கி வர... அப்போது அவளது குரல் அவனை தடுத்து நிறுத்தியது.

"உன் ஃபோனை எடுத்து பார்த்துட்டு வாடா..." அவளது மரியாதை இல்லாத விளிப்பை கேட்டவனுக்கு கோபம் வந்தது.

"ஏய், என்னடி பேச்சு எல்லாம் ஒரு மாதிரியா இருக்கு...?"

"ஏய், முண்டம்..." அவளது விளிப்பில் சுயவுணர்வு பெற்றவன் தனது நிலையை உணர்ந்தவனாய் அவசரமாய் தனது உடையை எடுத்து அணிய துவங்க...

"சாரி... நீ ரொம்பவே லேட்..." என்றவள் மீண்டும் நிமிர்ந்த போது அவன் தனது உடையை முழுவதும் அணிந்திருந்தான்.

"உன்னை..." என்று தன் மேல் பாய முயன்றவனை கையமர்த்தி தடுத்தவள்,

"முதலில் உன் ஃபோனை எடுத்து பார்த்துட்டு அப்புறம் பேசு." என்று கடுமையான குரலில் உத்தரவிட... அவன் குழப்பத்துடன் அலைப்பேசியை எடுத்து பார்த்தான். அதில் அவன் உடைகளை களையும் காணொளி அவனை கண்டு கேலியாய் சிரித்தது. அவன் அதிர்ச்சியுடன் அவளை பார்க்க... அவள் அருவருப்பாய் அவனை பார்த்தாள்.

"இனியொரு தடவை நீ இப்படி நடந்துக்கிட்ட உன் மானத்தை சந்தி சிரிக்க வச்சிருவேன். இனி நான் இல்லை... வேறு எந்த பெண்ணையும் நீ கெட்ட கண்ணோட்டத்தோடு பார்க்க கூடாது. அப்படி பார்த்தேன்னு தெரிஞ்சது... அடுத்த நொடி இந்த வீடியோ உலகம் முழுவதும் பரவி விடும்." என்று மிரட்டலாய் கூறியவளை எரித்து விடுவது போல் பார்த்தவன் கோபமாய் அவளை நோக்கி வந்தான்.

"கிட்டே வந்த... ஒரே அழுத்து தான்... அடுத்த நொடி இந்த வீடியோ உன் பொண்டாட்டி ஃபோனுக்கு ஃபார்வேர்ட் ஆகிரும்... அதுக்கு அப்புறம் உனக்கு நான் சொல்ல தேவையில்லை." என்றவளை கண்டு அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

"ஏன்டா பொண்ணுங்கன்னா படுக்கைக்கு தான் லாயக்குன்னு உனக்கு யாருடா சொன்னது...? உன்னை மாதிரியான ஆட்களை எல்லாம் நடு ரோட்டில் வச்சு சுடணும்." என்று காட்டத்துடன் உரைத்தவள் காலில் கிடந்த செருப்பை எடுத்து அவனை அடிக்க துவங்க... அதில் தன்னுணர்வு பெற்றவன் அங்கிருந்து தலை தெறிக்க ஓட துவங்கினான். அவளும் அவனை அடித்தபடி அவன் பின்னாலேயே துரத்தி கொண்டு ஓடினாள்.

சிவகுமரன் அப்போது தான் வெளியில் சென்றுவிட்டு உள்ளே வந்து கொண்டிருந்தான். மனைவி தீபனை செருப்பால் அடித்தபடி ஓடி வருவதை கண்டவன் முதலில் திகைத்து பின்பு வாய்விட்டு சிரித்தான். 'இவனுக்கு நன்றாக வேண்டும்' என்று அவன் மனதிற்குள் கறுவியபடி அவளை நோக்கி விரைந்தான்.

"ஏய், அம்முலு... விடுடி..." என்று அவன் அவளை பிடித்து தடுக்க... இவ்வளவு நேரம் ஓடி வந்ததில் களைத்து போன தீபன் சற்று ஆசுவாசப்படுத்தி கொள்ள வேண்டி மூச்சுவாங்க அப்படியே நின்றான்.

"இந்த ப்ராடு என்ன பண்ணினான்னு தெரியுமா?" அவள் ஆத்திரத்தில் முகம் சிவக்க கத்தினாள்.

"சொன்னால் தானே தெரியும்." அவன் தீபனை முறைத்து கொண்டே கேட்க... அவள் அனைத்தையும் கூற... அவ்வளவு தான் சிவகுமரன் தீபனை புரட்டி புரட்டி அடிப்பின்னி எடுத்துவிட்டான். அவனது அடி தாங்காது தீபன் தப்பித்து ஓடிவிட்டான்.

"இவனை..." என்று அவன் பின்னால் செல்ல போன சிவகுமரனை தடுத்த அபிஷரிகா,

"இனி அவன் என் கிட்ட மட்டுமில்லை... வேறு யார் கிட்டேயும் வாலாட்ட மாட்டான்." என்க...

"அப்படி என்னடி செஞ்ச...?" சிவகுமரன் விழிவிரிய வியப்புடன் கேட்க... அவள் நடந்ததை கூற... அவனது

ஆச்சரியம் அதிகரித்தது.

"வாவ்... இது மாதிரி எல்லா பெண்களும் தைரியமா இருந்தால் பெண்களுக்கான பிரச்சனை தீர்ந்துவிடும். எப்படி வீடியோ எடுத்த?" என்றவனை கண்டு முறைத்தவள்,

"என் இரண்டு கண்களால் அவனது அழகை ரசித்தபடி என் ஃபோனில் வீடியோ எடுத்தேன் போதுமா?" என்று கூற...

"இது நம்பும்படி இல்லையே..." அவன் தலையை ஆட்டி சிரிக்க...

"சிவூ..." என்றபடி அவள் அவனது தோள் சாய்ந்து கொண்டாள்.

"என் செயினில் கோர்த்திருக்கும் டாலரில் கேமிரா பிக்ஸ் பண்ணியிருக்கேன். அதில் இருந்து எடுத்தது." என்று அவள் உண்மையை கூற...

"வெரி ஸ்மார்ட் பொண்டாட்டிடி நீ..." என்றவன் சந்தோசத்துடன் தனது வீர மங்கையை அணைத்து கொண்டான்.

தங்களது குடில் வாயில் வரை வந்த சிவகுமரன் அவளை உள்ளே போக சொன்னவன் தான் மட்டும் தேங்கினான். அவள் உள்ளே சென்று கதவை அடைத்த அடுத்த நொடி அவன் அவளை கண்காணிக்க வைத்திருந்த பாதுகாவலர்களுக்கு அழைத்து கண்டபடி திட்டி தீர்த்துவிட்டான்.

"அபியோட பாதுகாப்புக்காக தான் உங்களை நியமித்தது. ஆனால் நீங்க பண்ணியிருக்கும் வேலைக்கு..." என்றவனுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. மனைவி தைரியமான பெண் என்பதால் சரியாய் போயிற்று. இல்லை என்றால்...??? அவனால் கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. அவர்களை கடுமையாக எச்சரித்தவன் அறைக்குள் நுழைந்தான்.

அபிஷரிகா ஏதோ நினைப்பில் அமர்ந்திருந்தாள்... அவளை தொந்தரவு செய்யாது இரவு உணவை தருவித்தவன் அவளை உணவு அருந்த செய்துவிட்டு தானும் உணவு உட்கொண்டுவிட்டு எல்லாவற்றையும் அப்புறப்படுத்திவிட்டு அறை கதவை தாழிட்டு விட்டு வந்தவன், ஏதோ யோசனையில் அமர்ந்திருந்த மனைவியை கண்டு அவளது மனநிலையை மாற்ற எண்ணி,

"ஆனாலும் உனக்கு இருக்கும் தைரியத்துக்கு..." நடந்த சம்பவத்தை நினைத்து வாய்விட்டுச் சிரித்தான். மீண்டும் மீண்டும் அதையே நினைத்து அவன் சிரித்துக் கொண்டே இருந்தான். அவனுக்கும் தனது மனநிலையை மாற்ற வேண்டியிருந்தது. அப்போது ஏதோ ஒன்று உறைக்க அவன் சட்டென்று அபிஷரிகாவை பார்த்தான்.

அவளோ உடன் சேர்ந்து சிரிக்காது அவனையே பார்த்திருந்தாள். அவளது விழிகளில் தெரிந்த ஏக்கம், தவிப்பு கண்டு அவன் தான் மிகவும் தவித்துப் போனான். அவள் என்ன தான் கோபம் கொண்டு அவனிடம் பேசாது முறுக்கி கொண்டு இருந்தாலும் அவன் தன் காதலை விடாது அவள் பின்னே தானே சுற்றிக் கொண்டிருக்கிறான். இப்போது அவனது காதல் மனது அவளது விழியின் தவிப்பில் அவளது மனதின் தவிப்பை உணர்ந்தது.

"அம்முலு..." என்று அவன் தனது ஒட்டுமொத்த காதலையும் ஒற்றை வார்த்தையில் ஊற்றி அவளை அழைத்தான்.

அவளோ பதில் சொல்லாது அவன் அருகில் நெருங்கி வந்து அவனது சட்டையை இரு கைகளால் பிடித்துக் கொண்டு விழிகள் அலைப்புற அவனைப் பார்த்தாள். தண்ணீரில்லாது தவிக்கும் மீன் போன்று தத்தளிக்கும் அவளது கருவிழிகளைக் கண்டவனின் மனம் பாகாய் உருகித்தான் போனது. அவளது முகத்தைத் தனது இரு கரங்களில் தாங்கியவன் அவளது விழிகளுக்குள் உற்று நோக்கினான். அடுத்த நொடி அபிஷரிகா,

"சிவூ..." என்றபடி அவனது உதடுகளில் தனது இதழ்களைப் பதித்தாள். அவனுமே இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. ஆரம்பம் மட்டுமே அவளாக இருந்தாள்... ஆனால் அதைத் தொடர்வது அவனது முறையாயிற்று.

இருவருமே இளம்வயது... தனக்கு நேர்ந்த ஆபத்தை எண்ணி அவள் தவித்திருக்க... தன்னவளுக்கு நிகழ இருந்த ஆபத்து அகன்றாலும் அதை எண்ணி எண்ணி அவன் தவித்திருக்க... இருவரும் இத்தனை நேரம் தவித்திருந்த தங்களது மனதின் தவிப்பை அந்த ஒற்றை இதழொற்றலில் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். தவிப்பு, எப்போது தாபமாக மாறியதோ...! தாபம், எப்போது மோகமாக மாறியதோ...! மோகம் வந்தால் முற்றும் துறந்த முனிவனும் தடுமாறி தான் போய்விடுவான். இவர்களைக் கேட்கவும் வேண்டுமோ...!

சிவகுமரன் முத்தமிட்டவாறே மனைவியைக் கட்டில் நோக்கி நகர்த்திச் சென்றவன் அதில் அவளோடு சேர்ந்து தானும் வீழ்ந்து தொடர்ந்து விடாது இதழ் யுத்தத்தை நடத்தி கொண்டிருந்தான். அவளும் சளைக்காது கணவனுக்குப் பதில் கொடுத்து கொண்டிருந்தாள். இத்தனை நாள் அவளது வீம்பு கணவனது முத்தத்தில் கொஞ்சம் கொஞ்சமாய்க் கரைந்து கொண்டிருந்தது. அவளது பிரமாதமான ஒத்துழைப்பில் அவன் திளைத்திருந்த மாயவலை அறுந்து விழ... அவன் அவளிடம் இருந்து விலக முற்பட்டான். அவளோ விடாது அவனை அணைத்து பிடித்திருந்தாள். சற்று எக்கி அவளது முகத்தைக் குனிந்து பார்த்தவன்,

"அம்முலு..." என்றழைக்க... அவனது அழைப்பிற்கு அவள் பதில் கூறாது விழி மூடி படுத்திருந்தாள்.

"இப்போ வேண்டாமே அம்முலு..." அப்போதும் அவன் தன்னைப் பற்றிச் சிந்திக்காது அவளது இளவயதை பற்றித் தான் சிந்தித்தான்.

அவனது வார்த்தைகளில் அவள் பட்டென்று விழிகளைத் திறந்தாள். அவளது விழிகளில் அப்பட்டமாய் அவனுக்கான

தேடல் இருந்தது. அவனுக்கான அவளது தேடல் ஆணாய் அவனுள் கர்வத்தை உண்டு பண்ணியது. தனது வலக்கையைக் கொண்டு அவளது காதோரம் கைவிட்டு பின்னங்கழுத்தோடு அவளது தலையை உயர்த்திப் பிடித்தவன் தனது கட்டை விரல் கொண்டு அவளது கன்னத்தை மென்மையாய் வருடியபடி,

"சம்மதமா...?" என்று கேட்க... அவன் இதைக் கேட்ட நொடி அவளது விழிகளில் தெரிந்த சந்தோச மின்னலை கண்டு அவனது முகம் மகிழ்ச்சியைப் பூசி கொண்டது.

"அம்முலு..." என்றவனை கையுயர்த்தி தடுத்தவள் தனது கழுத்தில் இருந்த சங்கிலியை கழட்டி அதை தலையணை அடியில் மறைத்து வைத்தாள்.

"நம்மளோட காதலுக்கு ஞாபகார்த்தமா இந்த வீடியோ இருக்கட்டுமே." என்று குறும்பாய் கண்சிமிட்டியவனை கண்டு முறைக்க முயன்றவள் அது முடியாது போக... அவனை இழுத்து அணைத்து கொண்டாள். அவளுள் புதைந்தவன் அதன் பின்பு அவளை விட்டு விலகவே இல்லை. விலகவும் முடியவில்லை.

அந்த வயதிற்கே உரிய உணர்வுகள் அவர்களது தாம்பத்தியத்திலும் வெளிப்பட்டது. சீராய் பூ மலர்வது போல் மலர வேண்டிய தாம்பத்தியம் இங்கு அதிரடியாய் நடந்தேறியது. ஆணவனுக்குப் பெண்ணவள் சிறிதும் சளைத்தவளல்ல என்பதை அவள் ஒவ்வொரு கணமும் நிரூபித்தாள். கணவன் மொத்தமாய் அவளைக் கொள்ளையிட்ட போது அவளது விழிகளின் ஓரம் கண்ணீர் துளிகள் வழிந்தோடியது.

'என்னை உணர்கிறாயா சிவூ...?' என்று நினைத்தவளின் மனம் சந்தோசத்தில் பூரித்துப் போனது.

பதினைந்து வயதில் இருந்து தனக்கு வர போகிற கணவனுக்காக அவள் பொத்தி பொத்தி பாதுகாத்து வந்த கற்பை தனது காதல் கணவனுக்கு அவள் காணிக்கையாக்கி இருந்தாள். அவளது எண்ணம்

பைத்தியக்காரத்தனமாகத் தோன்றினாலும் அந்தச் சிறு பெண்ணிற்குக் கற்பு தான் உயிர்மூச்சு என்பதை யாரறிவார்...!!!

அபிஷரிகா புதிரான தேவதை...! அவளைப் புரிந்து கொள்ள இன்னொரு பிறப்பு வேண்டும்!!!

தொடரும்...!!!

அத்தியாயம் : 22

சிவகுமரன் சற்று முன் நடந்து முடிந்த நிகழ்வை எண்ணி இன்னமும் நம்ப முடியாது பிரமிப்பும், வியப்பும் கலந்த கலவையான மனநிலையில் இருந்தான். அவன் மனைவி, அதுவும் அவனது காதல் மனைவி அவனுக்காக அவளையே அர்ப்பணித்ததை அவனால் இன்னமும் நம்ப முடியவில்லை. அவன் தலை குனிந்து மனைவியைப் பார்த்தான். அபிஷரிகா இன்னமும் விழிகள் மூடி படுத்திருந்தாள்.

"தேங்க்ஸ்டி பொண்டாட்டி... ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்றவன் மகிழ்ச்சியான மனநிலையில் அவளது நெற்றியில் முத்தமிட்டான். பின்பு அவனது உதடுகள் மெல்ல கீழிறங்கி அவளது விழிகளில் மென்மையாக முத்தமிட்டது. அப்போது தான் அவன் அவளது விழிகளின் ஈரத்தை உணர்ந்தான். அவளது கண்ணீர் அவனுள் பயத்தைக் கிளப்பியது. தான் அவளைத் துன்புறுத்தி விட்டோமோ? என்று அவன் பெரும் கவலை கொண்டான்.

"சாரி அம்முலு... ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேனோ?" என்று அவன் கவலை தோய்ந்த குரலில் அவளிடம் மன்னிப்பு கேட்டான். அவனது வார்த்தைகள் கேட்டு விழிகளைத் திறந்தவள் அவனையே பார்த்திருந்தாள்.

"சாரிடி..." என்று மீண்டும் மன்னிப்பு கேட்ட கணவனை இமைக்காது பார்த்தவள்,

"நான் வி.......ரி இல்லைன்னு இப்பவாவது ஒத்துக்கிறியா சிவூ?" என்று ஏக்கம் தொனித்த குரலில் கேட்க... அவன் அதிர்ச்சியுடன் அவளைப் பார்த்தான். அவள் கூறியதன் அர்த்தம் அவனுக்கு மெல்ல புரிய ஆரம்பித்தது. அடுத்த நொடி அவன்,

"அம்முலு..." என்று கதறியபடி அவளை அணைத்துக் கொண்டான். அவனது மனம் எல்லாம் ரணமாய் வலித்தது. அன்று அவளைப் பற்றிப் புரியாது, தெரியாது தான் கூறிய வார்த்தைகள் அவளை இந்தளவிற்குப் பாதித்திருக்கும்

என்று அவன் அறிந்திருக்கவில்லையே. இப்போது அவன் தன்னுடைய வலியை உணரும் போது தான் அவளுடைய வலியையும் சேர்ந்து உணர்ந்தான்.

"சாரிடி..." என்று மன்னிப்பு வேண்டியவனின் விழிகளில் இருந்து வழிந்த கண்ணீர் அவளது உச்சந்தலையில் சொட்டியது.

அவள் அண்ணாந்து அவனை ஏறிட்டு பார்த்தாள். மனதிற்குப் பிடித்தவன் மன்னிப்புக் கேட்டாலும் மனம் வலிக்கத்தான் செய்கின்றது. அன்று அவன் பேசிய வார்த்தைகள் அவளுக்கு வலித்ததை விட இன்று அவன் கேட்கும் மன்னிப்பு, அவன் விடும் கண்ணீர் எல்லாம் சேர்ந்து அவளை உயிரோடு இரண்டாகப் பிளப்பது போல் அதீத வலியை கொடுக்கின்றதே...! அவள் தனது வலியை மீறி தன்னவனின் வலியை போக்க விழைந்தாள். அப்போதும் அவள் தன்னுடைய மனதின் எண்ணங்களை அவனிடத்தில் வாய் வார்த்தையாய் கூறவில்லை.

"சிவூ..." என்றழைத்தவள் எம்பி அவனது உதடுகளைச் சிறை செய்திருந்தாள். அவளது செயலில் அவனது விழிகள் பிரமிப்புடன் அகன்றது. தான் என்ன பேசிய போதும் அவள் தன்னை மன்னிப்பதை உணர்ந்தவனுக்கு அவள் மீது காதல் பெருக்கெடுத்தது. அவன் அவளிடம் இருந்து விலகி அவளது விழிகளைக் காதல் கசிய பார்த்து,

"ஐ லவ் யூ அம்முலு..." என்று கூறினான்... அவன் தனது காதலை செயலால் உணர்த்தாது சொல்லால் கூறினான்...

கணவனை ஒரு நொடி ஆழ்ந்து பார்த்தவள் மறுநொடி மீண்டும் அவனது உதடுகளில் தனது இதழ்களை அழுத்தமாய்ப் பதித்திருந்தாள். அவள் தனது காதலை சொல்லால் உணர்த்தாது செயலால் உணர்த்தினாள். அதன் பிறகு அங்குப் பேச்சிற்கு இடமில்லாது போனது. இருவருமே தங்களது மனதின் மௌன காதலின் பரிபாஷைகளைத் தங்களின் அணைப்பு, முத்தத்தின் மூலம் தங்களது இணைக்கு வெளிப்படுத்திக்

கொண்டிருந்தனர். இருவரின் மனதில் காதலை தவிர வேறில்லை.

கூடல் முடிந்து ஆழ்ந்து உறங்கும் கணவனை உறங்காது, இமைக்காது பார்த்தபடி படுத்திருந்தாள் அபிஷரிகா... அவனது முகத்திலிருந்த மகிழ்ச்சி, அவனது உதடுகளில் உறைந்திருந்த புன்னகை எல்லாமே அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்த போதும் வேறு ஏதோ ஒன்றை அவளது மனம் அவனிடம் இருந்து எதிர்பார்த்தது.

"சிவூ, உனக்கு என்னை ரொம்பப் பிடிக்குமா?" என்று ஏக்கமாய்க் கேட்டவளின் கேள்வி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தவனது காதில் விழவில்லை. அவன் விழித்திருந்தால் அவளது ஏக்கம் புரிந்திருக்கும். அதற்கு ஏற்றார் போன்று அவன் பதில் கூறியிருப்பான்.

சிறிது நேரம் அவனையே பார்த்திருந்தவள் பின்பு அவன் அருகில் சென்று அவனது கைவளைவில் படுத்துக் கொள்ள... அந்த உறக்கத்திலும் அவனது கரம் இயல்பு போல் அவளை அணைத்துக் கொண்டது. அதில் சந்தோசம் அடைந்தவள் அவனை அணைத்துக் கொண்டு உறங்கி போனாள். அவள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் போது,

"அம்முலு எழுந்திருடா..." என்று கணவனது மென்மையான அழைப்பு கேட்டது.

"போ சிவூ, உடம்பு எல்லாம் வலிக்குது..." என்று செல்லமாய்ச் சிணுங்கியவள் புரண்டு படுத்தாள். அவளது சிணுங்கலில் அவனுக்குச் சிரிப்பு வந்தது. அவனது விழிகளில் அவள் மீதான மயக்கம் அப்பட்டமாய்த் தெரிந்தது.

"ஹேய் அம்முலு..." என்று அவள் அருகில் வந்து அவளை அணைத்தவன் தனது அழுத்தமான முத்திரைகளால் அவளை அர்ச்சித்தான். அதில் உறக்கம் கலைந்தவள் அவனுக்கு விருப்பமாய் இசைந்து கொடுத்தாள். அவளது நோக்கம் புரிந்து அவன் சிறு சிரிப்புடன் விலகி,

"ஃப்ளைட்டுக்கு நேரமாச்சு... கிளம்பு..." என்க... அதில் அவளது தூக்க கலக்கம் காணாமல் போனது.

"ஊருக்கு போறோமா?" என்று அவள் கேட்க...

"ஆமா அம்முலு... இனியும் உன்னை இங்கு விட்டு செல்ல எனக்கு மனம் இல்லை." என்றவனது குரலில் இருந்த கவலை, பயம் அவளுக்குப் புரியத்தான் செய்தது.

"ம், ம்..." என்றவள் உடனே அவனுடன் கிளம்பினாள்.

விமானத்தில் வரும் போது அபிஷரிகா பெருத்த யோசனையுடன் சிவகுமரனின் கையைக் கோர்த்துக் கொண்டு வந்தாள். அவள் விழி மூடியிருந்ததால் உறங்குகிறாள் என்றெண்ணி அவனும் அவளைத் தொந்தரவு செய்யவில்லை. வீடு வந்ததும் அவளை இறக்கிவிட்டு விட்டு அவன் அலுவலகத்திற்குக் கிளம்பிவிட்டான்.

"நிறைய வேலைகள் பெண்டிங்கில் இருக்கு அம்முலு... முடிந்தளவு இரவு சீக்கிரம் வர பார்க்கிறேன்." என்றுரைத்துவிட்டு அவன் கிளம்பி சென்றுவிட்டான். அவள் மௌனமாய் அவன் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

சிவகுமரன் என்ன முயற்சித்தும் இரவு சீக்கிரம் வர முடியவில்லை. வேலைப்பளு அவனை ஆக்கிரமித்துக் கொண்டது. இரவு அவன் வீடு வந்த போது அபிஷரிகா அவளது அறையில் இருந்தாள். அவன் உற்சாகத்துடன் அவளது அறையை நோக்கி சென்றான். இத்தனை நாட்கள் இந்த வீட்டிலிருந்த போதும் அவன் அவளது அறைக்கு அநாவசியமாகச் சென்றது இல்லை. இப்போது முதன்முறையாக அவன் கணவன் என்கிற உறவோடு உரிமையாய் மனைவியின் அறைக்குச் செல்கின்றான். அவளது அறை கதவை திறந்து கொண்டு அவன் உள்ளே சென்ற போது அவள் கட்டிலில் அமர்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள்.

"அம்முலு..." கணவனது குரலில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள். அடுத்த நொடி அவளது விழிகளில் மகிழ்ச்சி தோன்றியது.

"எப்போடா வீடு வந்து சேருவோம்ன்னு இருந்தது. அந்தளவுக்கு நீ என்னைப் படுத்துற..." என்றவன் கழுத்தில் இருந்த டையைக் கழற்றி வீசியெறிந்தவன் சட்டையை முழுங்கை வரை மடித்து விட்டபடி அவள் அருகே வந்தான். அவள் இமைக்காது அவனைப் பார்த்திருக்க... அவன் அவளது மடியில் படுத்து அவளது முகத்தைப் பற்றித் தனது முகம் நோக்கி இழுத்தான். இருவரது இதழ்களும் ஒன்றை ஒன்று உரசி கொண்டது. இருவரது பார்வைகளும் ஒன்றை ஒன்று ஈர்த்துக் கிறங்கியது. அவன் மோகம் தலைக்கேற அவளது இதழ்களைத் தனது இதழ்கள் கொண்டு அணைக்க முற்பட்ட வேளையில் அவள் அந்த வார்த்தைகளைக் கூறினாள்.

"உனக்காக நான் என் பெண்மையை அர்ப்பணித்து இருக்கிறேன். அதுக்காக நீ எனக்கு என்ன தர போற சிவூ?" என்றவளை கண்டு திகைத்தவன் பின்பு பெரும் சிரிப்புடன்,

"என்ன வேணும்ன்னாலும் கேளு... உனக்காக என் உயிரை கூடத் தருவேன்." என்று அவன் காதலோடு கூற...

"அப்போ என் சொத்துக்களை எனக்குத் திருப்பிக் கொடு சிவூ..." என்க... அவளது வார்த்தைகளில் அவன் சற்று தடுமாறி தான் போனான். அடுத்தக் கணம் அவனது உணர்வுகள் எல்லாம் வடிய... அவன் அவளது மடியில் இருந்து எழுந்தமர்ந்தான்.

"நான் கேட்டதைக் கொடுப்பியா சிவூ...?" அவனுக்கு இருந்த மனநிலையில் அவளது குரலில் இருந்த எதிர்பார்ப்பினை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

"அது வந்து..." அவன் சற்றுத் தடுமாறினான்.

முதலில் இருந்த சிவகுமரனாக அவன் இருந்திருந்தால் 'முடியாது' என்று ஒரே வார்த்தையில் ஒரேடியாய் மறுத்து

இருப்பான். இப்போது அவன் அவளுடன் ஈருடல், ஓருயிராய் வாழ்ந்துவிட்டு அவளது சொத்துக்களை அவளிடம் கொடுக்க மறுப்பதற்கு அவனுக்கே ஒரு மாதிரியாக இருந்தது. அதேசமயம் பொன்னம்பலத்தின் வாக்கினை அவனால் மீற முடியவில்லை. இந்தச் சொத்துக்கள் அனைத்தும் அபிஷரிகாவின் வாரிசுகளுக்குப் போய்ச் சேர வேண்டியது. தலைமுறை தலைமுறையாக அவளது வாரிசுகளுக்குப் போக வேண்டியது. அப்போதும் அவன் அவளது வாரிசு என்றே தான் நினைத்தான். மறந்தும் அவளது வாரிசுகள் அவனுடைய வாரிசுகளும் கூட என்பது அவனது நினைவில் இல்லை. அவனது நினைவில் அவன் தன்னை ஒரு வேலைக்காரன் என்றே அழுத்தமாய்ப் பதிவு செய்திருந்தான். அவனுக்கு மனைவி முக்கியம் தான்... அதற்காகப் பெரியவரை ஏமாற்றவும் மனமில்லை.

"சொல்லு சிவூ..." என்றவளை ஏறிட்டு பார்த்தவனின் விழிகளில் வழிந்த நேசம் அவளது மனவுறுதியை அசைக்கப் போதுமானதாய் இருந்தது. ஆனாலும் அவள் சற்றும் இளகாது அவனைப் பார்த்திருந்தாள்.

"உனக்கு நான் முக்கியமா? இல்லை உன்னுடைய சொத்துக்கள் முக்கியமா?" அவனது கேள்விக்கு அவளால் பதில் கூற முடியவில்லை. அவளது மனதிலிருந்த காதல் கணவனது கேள்விக்குப் பதில் கூற இயலாது தவித்தது. அதே காதல் தான் அவனிடம் இருந்து பதிலையும் எதிர்பார்த்துத் துடித்தது. என்னவொரு விந்தையான மனநிலை...!!!

அவளது அமைதியான நிலை அவனது மனதினை வாள் கொண்டு அறுத்தது. அவளைப் பற்றித் தான் அவனுக்கு நன்கு தெரியுமே... அவளது காதல் இல்லையென்றால் என்ன??? அவள் மீதான அவனது காதல் அவர்களது வாழ்க்கை முழுமைக்கும் போதுமே!!!

"நான் தான் ஏற்கெனவே சொல்லியிருக்கேனே... உன்னுடைய காஸ்ட்லி காதல் நமக்கு வேண்டாம். என்னுடைய ஏழ்மையான காதல் நமக்குப் போதும்ன்னு...

உனக்காக நானிருக்கிறேன். இதைவிட உனக்கு வேறென்ன வேண்டும்." என்றவன் அவளது பதிலை எதிர்பாராது அவளது இதழ்களைச் சிறை செய்ய... அவள் ஏதோ கூற வந்தவளாய் அவனிடம் இருந்து திமிற துவங்கினாள்.

"ஷ்... அம்முலு, இங்கே பார்... நம்மிடையே சொத்துக்களை இழுக்காதே. நான் உன் கணவன்... அதை மட்டும் மனதில் நிறுத்து..." என்றவன் ருசி கண்ட பூனையாய் அவளைத் தனது கட்டுபாட்டில் கொண்டு வந்தான். அவனது அருகாமையில் அவள் தன்னையும் மறந்தாள். சொத்துக்களையும் மறந்தாள்.

கூடல் முடிந்து விலகியவனைக் கண்டு அவள், "யூ சீட்டர்..." என்று கோபத்துடன் பொரிய...

"நானா? நீ தான்... பொய் மேல் பொய் சொல்லி உன்னை நீ ஏமாத்திக்கிற..." என்றவன் சிரித்தபடி எழுந்தான்.

"உனக்கு நான் முக்கியமில்லை... என் சொத்துக்கள் தான் முக்கியம், இல்லையா?" கோபத்துடன் கத்தியவளை கண்டு,

"உன்னை எல்லாம் திருத்த முடியாது... அதே நேரம் உன் உளறலுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது." என்று அவன் சிறு சிரிப்புடன் கூற...

"போ, போ... நீ எனக்கு வேண்டாம்... சொத்துக்காக நீ என்னுடன் வாழ வேண்டாம்." என்று ஆக்ரோசமாய்க் கத்தியவளை ஒரு பார்வை பார்த்தவன்,

"போகத் தான் போகிறேன். குளிக்கப் போகிறேன்..." என்றுரைத்து விட்டு அவளது பதிலை எதிர்பாராது வெளியேறி விட்டான்.

'போடா போ... உனக்கு என்னை விட என்னுடைய சொத்துக்கள் தான் பெரிதாகப் போயிற்றா? அப்போ நான் உனக்கு முக்கியமில்லை. அப்படித்தானே?' அவள் மனம் வலிக்கப் புலம்பியபடி தலையணையில் முகம் பதித்தாள். அவளது மனதின் எதிர்பார்ப்பினை அவள் மட்டுமே

அறிவாள். ஒருவேளை அவள் அவனிடம் தனது எதிர்பார்ப்பினை பற்றிக் கூறியிருந்தால் அவன் அவளுக்கு ஏற்றார் போன்று பதில் கூறியிருப்பானோ?

அடுத்து வந்த நாட்கள் அவள் இதே போல் சண்டை போட... அவன் தனது அணைப்பால் அவளது கோபத்தினை ஒன்றும் இல்லாததாய் செய்தான். சிறந்த கணவன் என்கிற விருது சிவகுமரனுக்குத் தான் கொடுக்க வேண்டும். அந்த அளவிற்கு அவன் திறமையாய் தனது மனைவியின் கோபத்தினைச் சமாளிக்கப் பழகியிருந்தான். சாண் ஏறினால் முழம் சறுக்கல் என்பது போல் தான் அவர்களது வாழ்க்கை ஊடலும், கூடலுமாகச் சென்றது. அவன் இந்த வாழ்க்கையிலும் மகிழ்ச்சியாக இருந்தான். காதல் மனைவி அவனது கைகளில்... அதுவே அவனுக்குப் போதுமானதாக இருந்தது. அவளோ எந்நேரமும் ஏதோ ஒரு பதற்ற மனநிலையிலேயே இருந்தாள். காதலை காலடியில் கொட்டும் கணவன் கைக்கு அருகில் இருந்தும் அவளது மனதில் ஏதோ ஒரு வெறுமை... அவளது அந்த வெறுமை அவனை உயிரோடு குத்தி கிழிக்கப் போதுமானதாய் இருந்தது. ஆனால் அவன் அதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. சின்னக் குழந்தையின் செல்ல கோபம் என்றே ஒதுக்கி தள்ளினான்.

அன்று சிவகுமரன் வீட்டிற்கு வரும் போது வீடு நிசப்தமாய் இருந்தது. அந்தப் பெரும் அமைதி அவனுக்கு எதையோ உணர்த்துவது போலிருந்தது. அவன் பெருத்த யோசனையுடன் தங்களது அறைக்குள் நுழைந்தான். இப்போது அவன் தனது ஜாகையை மனைவியின் அறைக்கு மாற்றியிருந்தான். என்ன சண்டை போட்ட போதும் அவள் அவனை அறையை விட்டு வெளியில் போகச் சொல்லவில்லை. அதை நினைத்தபடி அறைக்குள் நுழைந்தவன் அங்குக் கட்டிலில் முழங்காலை கட்டி கொண்டு அமர்ந்திருந்த மனைவியைக் கண்டு முகம் மலர்ந்தவனாய் அவளை நோக்கி சென்றான்.

"நீ விளம்பரத்தில் நடிச்சதை பத்தி என் கிட்ட ஏன் ஒரு வார்த்தை சொல்லலை?" அவளது கேள்வியில் அவன்

அப்படியே நின்றான். பின்பு சமாளித்துக் கொண்டு,

"அதுவா...? அது அவ்வளவு பெரிய மேட்டர் இல்லை அம்முலு..." அவனது பதிலில் அவள் அவனை முறைத்து பார்த்தாள்.

"எனக்கு அது பெரிய விசயம் தான். பதில் சொல்லு..." அவள் கண்டிப்புடன் கேட்டாள்.

"அது நம்ம கம்பெனி விளம்பரம் தான்..." என்றவன் அவள் அருகே அமர்ந்தான். அவள் அமைதியாகக் கைகளைக் கட்டி கொண்டு அவனைப் பார்த்திருந்தாள்.

"அதில் நடிக்க வேண்டிய ஆள் வரலை. அதான் நானே நடிக்க வேண்டியதாய் போயிற்று. ஐயா வேற செம ஸ்மார்ட்டா, ஹேண்ட்சம்மா இருக்கேனா... என்னையவே நடிக்கச் சொல்லிட்டாங்க..." அவன் குறும்புடன் பதில் அளிக்க... அடுத்த நொடி அபிஷரிகா அங்குப் பக்கவாட்டு மேசையில் பழம் வெட்ட வைத்திருந்த கத்தியை எடுத்து அவனது நெஞ்சில் ஆழ கீறிவிட்டாள். அவனது நெஞ்சில் இருந்து குபீரென்று இரத்தம் கொப்பளித்தது.

"ஏய், ராட்சசி... என்னடி பண்ற? வலிக்குதுடி..." என்று அவன் இரத்தத்தைக் கண்டு நெஞ்சை பிடித்தபடி அலறினான்.

"அந்த மாடலிங் நடாஷா உன் நெஞ்சில் சாய்ஞ்சிக்கிட்டு இருந்ததைப் பார்த்த போது எனக்கு இதைவிட அதிகமா வலிச்சதுடா..." என்று பெருங்குரலெடுத்து கத்தியவளை அவன் திகைப்புடன் பார்த்தான். நடிப்புத் துறையில் இருப்பவளிடம் இருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு அவன் அதிர்ந்து போனான்.

"மாடலிங் மட்டும் தானா? இல்லை அவள் கூட..." என்று மேலே பேச போனவளை,

"நிறுத்துடி..." என்று அவன் குரலை உயர்த்திக் கத்தினான். அவனது உரத்த குரலில் அவள் அமைதியாகி சற்று நிதானத்திற்கு வந்தாள். அப்போது தான் அவனது

நெஞ்சிலிருந்து வழிந்த இரத்தம் அவளது கண்களில் விழுந்தது.

"ஐயோ, ரத்தம்..." என்று அவள் அவன் அருகே வர முயல... அவளைக் கையமர்த்தித் தடுத்தவன்,

"கத்தி இன்னும் கொஞ்சம் ஆழமா போயிருந்தால் என்னோட உயிர் போயிருக்கும்..." என்றவனைக் கலவரமாகப் பார்த்தவள்,

"சிவூ..." என்று கண்களில் கண்ணீர் மல்க அழைக்க... அதை உணராதவனாய் அவன் பேசி கொண்டே போனான்.

"உனக்கு அது தானே வேணும்... குத்துடி நல்லா குத்து..." என்றவன் தனது சட்டையை இரண்டாக விரித்து நெஞ்சினை காட்ட... அவன் வேகமாய் இழுத்ததில் சட்டையின் பொத்தான்கள் பட்டென்று அறுந்து கீழே விழுந்தது. அவனது நெஞ்சில் காயம்பட்ட இடத்தில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அதைக் கண்டவளின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"நம்ம கல்யாணத்துக்கு முன்னாடி நான் உன்னைத் தப்பா சொன்னேன் தான். இல்லைங்கல்ல... அப்போ எனக்கு உன்னைப் பற்றி முழுசா தெரியாது. என்னைக்கு உன் கழுத்தில் தாலி கட்டினேனோ அன்னையில் இருந்து இப்பவரை உன்னை நிறை, குறைகளோடு ஏத்துக்கிட்டேன். ஆனா நீ...?" என்று சுட்டுவிரல் நீட்டி அவளைச் சுட்டிக்காட்டியவனின் முகத்தில் விரக்தி படர்ந்தது.

"ஆனா நீ பார்க்கிற பெண்களோடு எல்லாம் என்னை இணைத்து பேசி என்னை ஆண் வி......ரி ஆகிட்ட... ரொம்ப வலிக்குதுடி..." என்று அவன் தனது நெஞ்சின் மீது கை வைத்து வேதனையுடன் கூற... அவளோ காயம் தான் வலிக்கிறது என்றெண்ணி,

"சிவூ, ஹாஸ்பிட்டலுக்குப் போகலாம்..." என்று பதற்றத்துடன் கூற...

"ஹாஸ்பிட்டல் போனால் முதலில் உன்னைத் தான் பிடித்து ஜெயிலில் போடுவாங்க... அத்தோடு உனக்கும், எனக்குமான நம் உறவு வெளியில் தெரிய வரும்... பரவாயில்லையா?" அதைக் கேட்டு அவள் பேந்த பேந்த விழித்தாள்.

அவன் ஒன்றும் பேசாது தனக்குத் தெரிந்த மருத்துவரை வீட்டிற்கு அழைத்தான். மருத்துவர் வந்து மருந்து போட்டுவிட்டுச் செல்லும் வரை இருவரும் எதுவும் பேசி கொள்ளவில்லை. அவர் சென்றதும் அவன் உடை மாற்றிக் கொண்டு படுக்க ஆயத்தமானான்.

"நான் உன்னைத் தவிர வேறு எந்தப் பொண்ணையும் நேசிச்சதும் இல்லை... தொட்டதும் இல்லை." என்று அவளிடம் கூறியவன் அவளுக்கு முதுகு காட்டி படுத்துவிட்டான்.

கணவன் கூறியது அவளது காதுகளில் விழுந்து அவளது மனதினை போட்டு ஏதோ செய்தது. அவளால் அவனிடம் மன்னிப்பும் கேட்க முடியவில்லை... அவனை விட்டு விலகி செல்லவும் முடியவில்லை. தன்னால் அவன் காயமுற்றது அவளுக்கு வருத்தம் தான்... ஆனால் அவன் விளம்பர படத்தில் அந்த மாடலிங் பெண்ணுடன் நெருங்கி நடித்தது அவளுக்குப் பிடிக்கவில்லை. இப்போதும் அந்தக் கோபம் அவளுள் நெருப்பாய்க் கனன்றது. அவளுடைய 'சிவூ'வை அவளைத் தவிர வேறு யாரும் நெருங்க கூடாது. அவன் அவளுக்கு மட்டுமே சொந்தமானவன்...

'சாரி சிவூ...' கணவனிடம் மனதிற்குள் மன்னிப்பு கேட்டவள் அமைதியாக மறுபக்கம் வந்து படுத்து கொண்டாள்.

மறுநாள் காலையில் சிவகுமரன் அமைதியாக அலுவகத்திற்குக் கிளம்பினான். அவன் மனைவியிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. அவன் அவள் மீது கோபமாய் இருந்தான். அதை உணர்ந்தவளாய் அவளும் பதிலுக்கு முகத்தைத் தூக்கி வைத்து கொண்டாள். அதிலும் அவள் சிறு குழந்தை போன்று தான் நடந்து கொண்டாள். 'நீ பேசவில்லை என்றால் போ... பதிலுக்கு நானும் பேச

மாட்டேன்.' என்கிற சிறுபிள்ளை வீம்பு தான் அவளிடத்தில் இருந்தது. அதை உணர்ந்தவனாய் அவன் அவளைச் சமாதானப்படுத்த எண்ணினாலும், அவளது சந்தேகக் குணத்தை ஊக்குவிக்க அவன் விரும்பவில்லை. அதனால் அவன் அமைதியாகி போனான்.

நாட்கள் செல்ல செல்ல கணவனது அமைதி அபிஷரிகாவை மேலும் கோபமடையச் செய்தது. அதனால் அவளும் கோபத்துடன் வளைய வந்தாள். அன்று அவள் காலையில் எழும் போதே அவளுக்குத் தலைச்சுற்றிக் கொண்டு, உமட்டி கொண்டு வந்தது. பணிப்பெண் கொடுத்த காபியை குடித்த அவள் அதை அப்படியே ஓங்கரிக்க... அந்தப் பெண் பயந்து போய் அங்கு வேலை செய்யும் வயதான பெண்மணியை அழைத்து வந்தாள். அவர் அபிஷரிகாவின் நாடித்துடிப்பை பரிசோதித்து விட்டு முகம் மலர்ந்தார்.

"நம்ம சின்னம்மாவுக்குப் பாப்பா வர போகுது..." என்று அவர் கூறிவிட்டு சென்றுவிட... அபிஷரிகா சந்தோசத்தில் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அமர்ந்துவிட்டாள்.

அவளும், அவனும் இணைந்து படைத்த அற்புதமான படைப்பு அல்லவா அவர்களது குழந்தை...! அவர்களது குழந்தை எப்படியிருக்கும்? கணவனைப் போலவா? அல்லது தன்னைப் போலவா? அவளுள் ஆயிரம் ஆயிரம் சிந்தனைகள் எழுந்து இறக்கை கட்டி கொண்டு பறந்தது. கணவனுக்கு அழைத்துச் சொல்ல முடியாது வெட்கம் வந்து அவளைத் தடுத்தது. அதனால் அவள் அவனது வருகைக்காகக் காத்திருந்தாள்.

பணிப்பெண் மூலம் அபிஷரிகா கருவுற்று இருப்பதை அறிந்து கொண்ட சிவகுமரன் அவளைக் காண ஓடி வந்தான். அவன் அறைக்குள் நுழைந்த அடுத்த நொடி அவளைத் தனது கைகளில் தூக்கி சுற்றியிருந்தான்.

"ரொம்பச் சந்தோசமா இருக்கு அம்முலு..." என்றவன் அவளைத் தூக்கி பிடித்திருந்த கைகளைச் சிறிது தளர்த்தினான்...

அவளது முகம் அவனது முகம் அருகில் வந்ததும் அவன் தனது கைகளை அவளது மேனியோடு இறுக்கி கொண்டவன் அவளது விழிகளோடு தனது விழிகளைக் கலந்தான். எப்போதும் போல் அவனது விழிகள் காதலை சிந்தியது... அவனது அதிகப்படியான சந்தோசம் கண்டு அவள் தனக்குள் யோசிக்க ஆரம்பித்தாள். அவனுக்குத் தன்னைவிட இந்தக் குழந்தை அவ்வளவு முக்கியமானதாய் போயிற்றா? என்கிற கேள்வி அவளுள் முளைத்து அவளது பொசசிவ் குணத்தை அதிகரித்தது. அவன் தனக்கு மட்டுமே சொந்தம்... தங்களது குழந்தையாக இருந்தாலும் தனக்குப் பிறகு தான் அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றே அவள் நினைத்தாள். அடுத்தக் கணம் அவளது விழிகள் அவனை வெறுமையாய்ப் பார்த்தது. அவனுக்கு இருந்த சந்தோசத்தில் அவளது உணர்வுகளை அவன் சரியாகக் கவனிக்கவில்லை.

"தேங்க்ஸ்டி அம்முலு..." என்றவன் அடுத்த நொடி தாமதியாது அவளது இதழ்களைச் சிறை செய்திருந்தான். வன்மையாக அல்லாது மிகவும் மென்மையாய்...

பூவுக்குள் தேனெடுக்கும் வண்டின் லாவகம் அவனது முத்தத்தில்... முதலில் முரண்டு பிடிக்க நினைத்தவள் பின்பு மெல்ல மெல்ல அவனோடு இசைந்தாள். இதழொற்றலை நீண்ட நேரம் நீட்டிக்காது சட்டென்று முடிவிற்குக் கொண்டு வந்தவனை அவள் ஏக்கத்துடன் பார்க்க... அவனோ அதை உணராதவனாய் அவளைக் கட்டில் மீது அமர வைத்து அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் அவளது வயிற்றின் மீது மென்மையாய் முத்தமிட்டு,

"உன்னைப் போல் ஒரு பெண் குழந்தை வேணும் அம்முலு... அதுக்குப் பெயர் கூட யோசிச்சிட்டேன்." என்றவனைப் பார்த்து அவள் எந்தவித எதிர்வினையும் ஆற்றாது அமைதியாக இருந்தாள்.

"இப்போ தான்... ஜஸ்ட் நௌ... ஷிவாரிகா... நம்ம ரெண்டு பேர் பெயரையும் சேர்த்து... நல்லாயிருக்கா...?" என்று கேட்டவனது விழிகளில் அத்தனை ஆர்வம் வழிந்தது.

ஏனோ இல்லையென்று கூறி அவனது சந்தோசத்தினைக் கெடுக்க விரும்பாது அவள் தனது விழிகளைத் தாழ்த்தி கொண்டாள்.

"அம்முலு, இப்போ நான் ரொம்பச் சந்தோசமா இருக்கேன். உனக்கு என்ன வேணும்ன்னாலும் கேளு..." என்று புன்னகையுடன் சந்தோசமாய்க் கேட்டவனைக் கண்டு அவள் விலுக்கென்று நிமிர்ந்து பார்த்தாள்.

"ம், கேளும்மா..." என்று அவன் அவளை ஊக்குவிக்க...

"என் பெயருக்குச் சொத்துக்களை மாற்றிக் கொடு." அவள் கேட்டது கண்டு அவன் முகம் மாறாது புன்னகையுடன்,

"எதுக்கும் எதுக்கும் முடிச்சு போடுற அம்முலு..." என்றபடி எழுந்தவன் அவள் அருகில் அமர்ந்து கொண்டான்.

"உனக்கு இந்தக் குழந்தை வேணும்ன்னா என் சொத்துக்களைத் திருப்பிக் கொடு..." அவள் பிடிவாதமாய் அதிலேயே நின்றாள்.

"ப்ச், ஏன் இப்படி எல்லாம் பேசுற அம்முலு?" என்றபடி அவளது முகத்தைத் தாங்க வந்த அவனது கையைப் பட்டென்று தட்டிவிட்டவள்,

"உனக்கு உன் குழந்தை... எனக்கு என் சொத்துக்கள்... டீலா? நோ டீலா?" என்றவளை கண்டு அவன் அதிர்ந்து தான் போனான்...

"அபி, உனக்கு என்னாச்சு...? அது எனக்கு மட்டும் குழந்தை இல்லை... உனக்கும் சேர்த்து தான்..."

"இல்லை, இது என் குழந்தை இல்லை... உன் குழந்தை... நான் சொன்னதை நீ செய்யலைன்னா..." என்று நிறுத்திவிட்டு அவனை ஏறிட்டு பார்த்தவள்,

"இந்தக் குழந்தையை அழிப்பதற்கும் நான் தயங்க மாட்டேன்." என்று கத்தியவளை கண்டு அவன் தான் அரண்டு போனான்.

"அம்முலு..." என்றழைத்தவனின் விழிகள் கலங்கி போனது.

"நான் சொன்னதைச் செய்யப் போறியா? இல்லையா?" என்றவள் அருகில் இருந்த கண்ணாடி குவளையை எடுத்து உடைத்து அதன் துண்டை தனது வயிற்றை நோக்கி கொண்டு போனாள். நொடியில் சுதாரித்த சிவகுமரன் அவளிடம் இருந்து கண்ணாடி துண்டை பிடுங்கி தூர எறிந்தவன் அடுத்த நொடி சிறிதும் தாமதியாது அவளின் காலில் விழுந்து கெஞ்சினான்.

"உன் காலை பிடித்துக் கெஞ்சி கேட்கிறேன் அம்முலு... எனக்கு... எனக்கு என் குழந்தை வேணும். என் குழந்தையை நீ நல்லபடியாகப் பெற்று கொடு... நீ கேட்ட சொத்துக்களை உன் பெயருக்கு மாற்றி எழுதி வைத்துவிடுகிறேன்." என்று அவன் கண்ணீர் விட்டுக் கெஞ்சினான்.

அவனது கண்ணீர் அவளது கால்களை நனைத்தது. அதில் அவளது வெம்மையுற்ற மனது சிறிது சமனுற்றதோ! அவளது விழிகளிலும் விழிநீர் கோர்த்துக் கொண்டது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 23

'ஏன் சிவூ, குழந்தை, சொத்துக்களை விட நான் தான் முக்கியம்ன்னு நீ சொல்ல மாட்டேங்கிற? சொத்துக்காகத் தான் நீ என்னுடன் வாழ்கிறாயா? இல்லை குழந்தையை வைத்துச் சொத்துக்களைத் தக்க வைத்துக் கொள்ள முயல்கிறாயா? இது தெரியாது எனக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது. நீ எனக்கு மட்டுமே சொந்தம்... இந்தச் சொத்துக்கள், குழந்தை எதுவும் எனக்கு வேண்டாம். நீ மட்டும் போதும் சிவூ... அது போல் உனக்கு நான் மட்டும் போதுமா?' என்று கண்ணீர் மல்க தனக்குள் கேட்டு கொண்டவளுக்குப் பதில் தான் கிடைக்கவில்லை.

மனைவியிடம் இருந்து பதில் வராததில் தலையை நிமிர்த்திப் பார்த்தவன், "என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள்... குழந்தை என்ன பாவம் பண்ணுச்சு? அதை ஒண்ணும் பண்ணிடாதே. ப்ளீஸ்..." என்று அவன் மீண்டும் கெஞ்ச... இத்தனை நேரம் கழிவிரக்கத்தில் தனக்குள் கரைந்து கொண்டிருந்தவள் இப்போது கோபமாய்த் தனக்குள் கனன்றாள்.

'குழந்தையாம் குழந்தை... என்னைவிட உனக்குக் குழந்தை தான் முக்கியமா போயிற்றா? நான் தான் முக்கியம்ன்னு நீயா வந்து சொல்கிற வரை நான் உன்னை விட மாட்டேன்.' என்று மனதிற்குள் சூளுரைத்து கொண்டவள் அவனைக் கண்டு,

"முதலில் சொத்துக்களை மாற்றி எழுது..." என்று கட்டளையிட... அதைக் கேட்டு எழுந்து நின்றவன்,

"நிச்சயம் மாற்றுவேன்... நீ என் குழந்தையை என் கையில் கொடுக்கும் போது..." என்று கூறியவனின் வார்த்தைகள் பலிக்கப் போவதை அந்நேரம் அவனே அறிந்திருக்கவில்லை.

குழந்தை பிறந்தால் அதன் மீது இயல்பாய் எழும் தாய்மை உணர்வில் மனைவியின் இந்த மனநிலை மாறும் என்று சிவகுமரன் தப்புக்கணக்கு போட்டுவிட்டான். எந்த

நிலையிலும் அவளது மனநிலை மாறப் போவதில்லை என்பதை அவன் உணரவே இல்லை.

அவளோ வேறு விதமாய்ச் சிந்தித்தாள். அவள் குழந்தை உண்டாகி இருப்பது குறித்து அவளுக்கு மகிழ்ச்சி தான்... தாய்மை என்பது பெண்களுக்கே உரிய வரப்பிரசாதம் அல்லவா? ஆனால் அவள் அதையும் மீறி அவளது கணவனை உயிருக்கு உயிராய் நேசித்தாள். அவன் மட்டுமே அவளது உலகமாய் இருந்தான். அதே போல் அவனது உலகத்தில் அவள் மட்டுமே இருக்க வேண்டுமென்று அவள் சுயநலமாய் நினைத்தாள். அதுவே அவளுள் மேலும் மேலும் பிடிவாதத்தை வளர்த்தது. அவன் எந்தவித தன்னலமும் இல்லாது தன்னைக் காதலிக்க வேண்டுமென்று அவள் ஆசை கொண்டாள். ஆசை என்பதைவிட வெறி என்றே சொல்லலாம். அதுவே பின்னாளில் ஏற்படக் கூடிய பல பிரச்சனைகளுக்குக் காரணமாகி போனது.

மறுநாள் சிவகுமரன் செய்த முதல் வேலை மனைவியை அழைத்துக் கொண்டு மருத்துவரிடம் சென்றது தான். அதற்கும் 'நான் வர மாட்டேன். வெளியில் தெரிந்தால் என்னுடைய கேரியர் பாதிக்கப்படும்.' என்று மறுத்தவளை அவன் சமாதானம் செய்து மருத்துவமனையில் விஐபிக்களுக்கு என்றிருக்கும் தனி வழி வழியே அவளை அழைத்துச் சென்றான். மருத்துவர் அவளைப் பரிசோதித்து விட்டு தாயும், சேயும் நலம் என்று உரைத்தவர் மருந்துகளை எழுதி கொடுத்தார். அவளை வீட்டிற்கு அழைத்து வந்தவன் அவள் உண்பதற்காக உணவை எடுத்து வந்தான். பருப்பு, கீரை, காய்கறிகள் என்று சத்தான உணவாக அது இருந்ததைக் கண்டு அவள் அவனைக் குரோதத்துடன் ஏறிட்டாள்.

"இதெல்லாம் சாப்பிட்டால் நான் குண்டாகிருவேன். எனக்கு வேண்டாம்." என்று அவள் அடம்பிடிக்க... அவள் அருகில் அமர்ந்தவன்,

"உனக்கு இல்லை... இது எல்லாம் குழந்தைக்கு... அதனால் நீ குண்டாக மாட்ட..." என்று அவன் அவளைச் சமாதானம் செய்தான். அதைக் கேட்டு அவளது மனம் சுணங்கியது. எல்லாம் குழந்தைக்காகத் தானா? தனக்காக இல்லையா? என்று அவள் மனதிற்குள் கோபமாய் முறுக்கி கொண்டாள். அதை அறியாத சிவகுமரன் அவளைத் தன் நெஞ்சில் சாய்த்துக் கொண்டு,

"எதையும் வேண்டாம்ன்னு சொல்லாம சாப்பிடணும்." என்று தட்டிலிருந்த உணவை அவளுக்கு ஊட்டிவிட... அவனது அணைப்பில், அருகாமையில் அவள் தனது கோபத்தினை மறந்தவளாய் அவனை இமைக்காது பார்த்தபடி குருவி போல் வாயை திறந்தாள். அவன் புன்னகையுடன் அவளுக்கு ஊட்டிவிட... அந்தக் கணம் அவனது அணைப்பில் மகிழ்ச்சியாய் செத்துவிடத் தோன்றியது அவளுக்கு...

"என்ன?" அவளது மனநிலை புரிந்தார் போன்று அவன் கேட்க... அவள் 'ஒன்றுமில்லை' என்பது போல் தலையாட்டினாள். அவன் ஒன்றும் பேசாது ஊட்டிவிட... அவளும் அமைதியாக உண்டாள். அவனிடம் தான் சண்டை போட்டதைக் கூட அவள் மறந்து போனாள்.

*******************************

"அம்முலு, ப்ளீஸ்டி... இந்த ஜூஸை மட்டுமாவது குடி..." பழச்சாறு அடங்கிய தம்பளரை கையில் வைத்துக் கொண்டு சிவகுமரன் கெஞ்சி கொண்டிருந்தான்.

"வேண்டாம் சிவூ... எது குடிச்சாலும் வாமிட் வருது..." என்று அபிஷரிகா தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அடம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

"வாமிட் வந்தாலும் பரவாயில்லை... நீ ஜூஸ் குடிச்சே ஆகணும்." என்று கண்டிப்புடன் கூறியவன் அவள் அருகே அமர்ந்து அவளை எழுப்பினான். அவனது பிடிவாதத்தைத் தொடர்ந்து தனது பிடிவாதத்தைக் கைவிட்டவள் எழுந்தமர்ந்து அவன் கொடுத்த பழச்சாறை பருகினாள்.

அடுத்த நொடி அவளுக்கு வாந்தி வருவது போலிருந்தது. அவள் நினைத்திருந்தால் எழுந்து சென்றிருக்கலாம். ஆனால் அவள் வேண்டுமென்றே அவன் மீது வாந்தி எடுத்தாள்.

"சாரி... சாரி..." என்று பதற்றத்துடன் கூறியவளின் மனதில் எந்தவித பதற்றமும் இல்லை... அவள் அவனது முகத்தையே ஆராய்ச்சியாய் பார்த்து கொண்டிருந்தாள். அவனோ கூலாகத் தனது சட்டையைக் கழற்றியபடி,

"ஒரு தம்பளர் ஜூஸில் கால்வாசியாவது உன் வயிற்றில் போயிருக்கும். அது போதும் எனக்கு..." என்று கூறியவன் குளியலறைக்குச் சென்றான்.

'டேய் சிவூ, உன் சட்டையில் வாமிட் பண்ணியதுக்குப் பதிலா உன் முகத்தில் பண்ணியிருக்கணும்.' என்று அவள் கோபத்துடன் முணுமுணுத்து கொண்டாள்.

"இப்ப ஓகேவா அம்முலு?" என்று கேட்ட கணவனை ஏறிட்டு பார்த்தாள் அபிஷரிகா... வெற்று நெஞ்சுடன் கம்பீரமாய் இருந்த கணவனது அழகு அவளது உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவனது நெஞ்சில் முகம் புதைத்து தூங்க ஆசை கொண்டது அவளது காதல் மனம்...

"கொஞ்சம் தலை சுத்துது சிவூ..." என்று சோர்வுடன் கூறியவளை அவன் அள்ளியெடுத்து தனது நெஞ்சில் சாய்த்துக் கொண்டான். அவளும் சுகமாய் அவனது நெஞ்சில் முகம் புதைத்து படுத்து கொண்டாள்.

நாட்கள் மளமளவென்று பறந்து சென்றது... அபிஷரிகா வயிற்றில் சுமக்கும் குழந்தையை நினைத்துக் கனவினை வளர்ப்பதை விட... அவள் நெஞ்சில் சுமக்கும் கணவனை நினைத்து ஏங்கியது தான் அதிகம். அந்தளவிற்கு அவன் அவளுள் நீக்கமற நிறைந்திருந்தான். நாட்கள் செல்ல செல்ல அவள் மசக்கையால் மிகவும் பாதிக்கப்பட்டாள். அப்போது எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டது அவன் தான்... அவளுக்குக் கால் வீக்கம் எடுத்தால் அதற்கு ஒத்தடம் கொடுக்க அவன் வேண்டும். அவனும் தனது களைப்பு

பாராது அவளுக்கு ஒத்தடம் கொடுப்பான். அவள் தூக்கம் வராது அவஸ்தைப்பட்டால்... அவனும் உறங்காது அவளுக்காக விழித்திருக்க வேண்டும். அந்தளவிற்கு அவள் குழந்தையைக் காரணம் காட்டி அவனைப் படுத்தி எடுத்தாள்.

தாய்மை பூரிப்பில் பூசினார் போன்று அழகாய் இருந்த தனது தோற்றம் அவளுக்கு அத்தனை உவப்பானதாக இல்லை போலும். அதற்கும் அவள் அவனைத் தான் குற்றம் சாட்டினாள்.

"பாரு, எப்படிக் குண்டாகிட்டேன்னு... நான் நடிக்கக் கூடாதுன்னு தான் நீ என்னை இந்தக் குழந்தையைச் சுமக்க வைக்கிற... நீ என்னைப் பழிவாங்கிட்ட..." என்று அவள் எப்போதும் அவனைக் கடித்துக் குதறினாள்.

"ப்ச், குழந்தை பிறந்ததும் முறையா உடற்பயிற்சி செய்தால்... மூணே மாசத்தில் பழைய அபியா மாறிடலாம். இதெல்லாம் ஒரு விசயமா?" என்று அவன் தான் அவளைச் சமாதானப்படுத்துவான். அந்த நேரம் அவன் அவளுக்கு அளிக்கும் அணைப்பு, முத்தம் அவளைச் சிறிது சமாதானப்படுத்தும்.

அப்படித்தான் ஒருநாள் நடு இரவில் அவன் நன்கு தூங்கி கொண்டிருக்கும் போது அவள் அவனை எழுப்பினாள். அவன் பதற்றத்துடன் எழுந்து,

"என்னம்மா, வலிக்குதா?" என்று கேட்டான்... இப்போது அவளுக்கு நிறைமாதம் நடந்து கொண்டிருந்தது.

"இல்லை சிவூ... சொறி எடுக்குது..." என்றாள் அவள் தனது பானை வயிற்றினைக் காட்டி... அதற்கு அவன் எரிச்சல் படாது அவளது வயிற்றை மென்மையாக வருடி விட்டபடி,

"சொறி எடுக்குதுன்னா நம்ம பேபிக்கு முடி நிறைய இருக்குதுன்னு அர்த்தம்..." என்று கூறியவன் கற்பனையில் ஆழ்ந்தான். அவளோ அவனது சுணக்கம் இல்லாத புன்னகை முகத்தைப் பார்த்தபடி கண்ணயர்ந்தாள். அவள்

உறங்கிவிட்டதை உணர்ந்தவன் அவளை அணைத்துக் கொண்டு படுத்தான்.

"எதுக்குடி இத்தனை அடம்பிடிக்கிற...? எனக்கு உன் சொத்துக்களா முக்கியம்? நீ தான் முக்கியம்..." என்றவன் அவளது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்.

இதோ அதோ என்றிருந்த அபிஷரிகாவின் பிரசவ நேரம் நெருங்கியிருந்தது. அதற்கு ஊரிலிருந்து எல்லோரும் வந்திருந்தனர். அதற்கும் அவள் கணவனிடம் ஆட்சேபித்தாள். யாரும் வர கூடாது என்று அவள் அவனிடம் சண்டை போட்டாள். வெளியில் எல்லோருக்கும் தெரிந்துவிடும் என்பதற்காக வளைகாப்பு கூட வைக்கக் கூடாது என்று அவள் பிடிவாதம் பிடித்தாள். வீட்டை விட்டு வெளியில் எங்கேயும் வர மறுத்தாள். வெளி உலகிற்கு அவள் வெளிநாட்டில் ஓய்வெடுப்பதாகக் கூறப்பட்டிருந்தது.

அபிஷரிகாவிற்குப் பிரசவ வலி வந்ததைத் தொடர்ந்து சிவகுமரன் அவளை மருத்துவமனையில் கொண்டு வந்து சேர்த்தான். அவள் வலியில் அரற்றிய போது அவன் உடனிருக்க முனைந்த போது,

"வேண்டாம் போ..." என்று அவள் அவனை விரட்டி அடித்தாள்.

பிரசவ வலியினால் அவளது மனம் மிகவும் பலவீனமுற்று இருந்தது. இதுவரை அவள் எந்தச் சூழ்நிலையிலும் தனது மனபலகீனத்தை யாரிடமும் வெளிப்படுத்தியது இல்லை. கணவனாக இருந்தாலும் அவளுக்கு அது உவப்பானதாய் இருக்கவில்லை... அதனால் அவள் அவனைத் தவிர்க்க நினைத்தாள். எல்லா உறவுகளை விடவும் கணவன் என்கிற உறவு வேறு என்பதை அவள் அந்தக் கணம் உணரவில்லை. மனைவியின் உதாசீனத்தைத் தாங்கிய சிவகுமரன் மனம் கனக்க வெளியில் வந்தமர்ந்தான். உள்ளே இருந்து ஒலித்த அவளது அலறலை கேட்டு அவனது இதயம் இரத்த கண்ணீர் வடித்ததை அவன் மட்டுமே அறிவான்.

"இந்த மாதிரி சமயத்தில் கடவுள் பெண்களுக்குத் தனிப் பலத்தைக் கொடுப்பார் குமரா... இதுக்காக நீ கலங்காதே." என்று ஆறுதல் கூறிய பொன்னம்பலத்தைக் கண்டு சிரிக்க முயன்று தோற்று போனவனின் விழிகள் கலங்கி போனது.

அடுத்து வந்த மணித்துளிகள் சிவகுமரனுக்குத் துன்பமாய்க் கடந்தது. அப்போது வீலென்ற ஒலித்த மழலையின் ஒலி அனைவரின் காதுகளிலும் விழுந்து எல்லோரையும் மகிழ்ச்சியுற செய்தது. ஆனால் உச்சபட்ச வலியில் அலறிய மனைவியின் கதறலே சிவகுமரனின் காதுகளை நிறைத்து அவனது மனதினை நிலைகுலைய செய்தது.

"ஆண் குழந்தை... வாழ்த்துகள் அபி..." மருத்துவர் அவளுக்கு வாழ்த்து கூறி குழந்தையை அவளிடம் காட்டினார்.

அபிஷரிகா குழந்தையைப் பார்த்தாள்... அது அவளையே உரித்து வைத்துப் பிறந்திருந்தது. ஒருவேளை குழந்தை கணவனைப் போன்று பிறந்திருந்தால் அவள் தூக்கி கொஞ்சி மகிழ்ந்திருப்பாளோ என்னமோ? இப்போது அவளுக்குக் குழந்தையைக் கண்டு தாய்மை உணர்வு மேலோங்கவில்லை. மாறாகத் தனது கணவனின் அன்பை பங்கு போட வந்த பகைவனாகவே மகன் அவளது கண்களுக்குத் தெரிந்தான்.

"எனக்கு... சிவூவை பார்க்கணும்." என்றாள் மெல்லமாய்...

"பார்க்கலாம் அபி... முதலில் பேபிக்கு ஃபீட் பண்ணு." என்று மருத்துவர் கூற...

"இல்லை... முதலில் சிவூவை பார்க்கணும்." அவள் பிடிவாதம் பிடித்தாள்.

மருத்துவர் வேறுவழியில்லாது வெளியில் வந்து சிவகுமரனை அழைத்தார். அவனும் பதற்றத்துடன் அவர் அருகில் வந்து,

"அம்... அபி எப்படியிருக்கிறாள் டாக்டர்?" என்று கேட்க...

"அவங்களுக்கு ஒண்ணும் இல்லை... ஷி இஸ் ஆல்ரைட். அப்புறம் வாழ்த்துகள்... உங்களுக்கு மகன் பிறந்திருக்கிறான்." என்று அவர் கூற... அவனது முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் எட்டிப்பார்த்தது.

"நான் அபியை பார்க்கலாமா?" அவன் கேட்க...

"அதுக்குத் தான் வந்தேன். வாங்க..." என்றவர் அவனை உள்ளே அழைத்துச் சென்றார்.

சிவகுமரன் மனைவியைப் பார்க்கத்தான் அங்கு ஆர்வமாகச் சென்றது. ஆனால் அங்கே பசியில் அழுத மகன் அவனது கவனத்தைத் திசைதிருப்பி விட்டான். மகனது அழுகை அவனது மனதினை போட்டு பிசைய...

"சிஸ்டர், அவனைக் கொடுங்க..." என்றவன் செவிலிப்பெண்ணிடம் இருந்து மகனை தனது கைகளில் வாங்கிக் கொண்டான். தகப்பனது கைகளுக்கு வந்ததும் குழந்தை அழுகையை நிறுத்தியது.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அபிஷரிகாவின் மனதில் ஏமாற்றம் கவிழ்ந்தது. கணவனுக்குத் தன்னைவிட மகன் தான் முக்கியமாகப் போய்விட்டான் என்பதை அறிந்து அவளுள் இனம் புரியாத ஒரு வலி எழுந்தது. ஏதோவொரு தனிமை உணர்வு அவளை ஆக்கிரமித்து உயிரோடு கொன்றது. அந்தத் தனிமை உணர்வு கழிவிரக்கமாக மாறியது... கழிவிரக்கம் கோபமாக மாறி கணவனிடத்தில் வெடிக்கத் தயாராக இருந்தது.

"தேங்க்ஸ் அபி..." சுற்றிலும் அத்தனை பேர் இருந்ததால் அவன் அவளை 'அபி' என்றே அழைத்தான். அவளோ அவனது பிரத்யேக அழைப்பான 'அம்முலு'வுக்காக ஏங்கி தவித்தாள்.

"நம் மகன் உன்னை மாதிரியே இருக்கிறான் பார்..." அவன் மகனை அவளிடம் காட்டினான். அவளோ மகனை பார்க்காது,

"எப்போ என் பெயருக்குச் சொத்துக்களை மாற்றிக் கொடுக்கப் போகிற?" என்று சட்டமாய்க் கேட்க... அதில் அவன் திகைத்து விழித்தான்.

"இப்போ... எதற்கு... இந்தப் பேச்சு...?" அவனால் வார்த்தைகளைக் கோர்வையாய் பேச முடியவில்லை. திக்கி திணறினான்.

"கேட்டதுக்குப் பதில்..." பிரசவமான அயர்ச்சியிலும் அவளது வார்த்தைகள் அத்தனை தெளிவாக வந்தது. அதற்குள் அவர்களது மகன் மீண்டும் பசியில் அழ துவங்கினான்.

"முதலில் மகனுக்குப் பசியாற்று அபி..." சிவகுமரன் தன் கைகளிலிருந்த மகனை அவள் அருகில் படுக்க வைத்தான்.

"முடியாது... நீ எனக்குச் சொத்துக்களை மாற்றிக் கொடுக்காது... நான் இவனுக்குப் பசியாற்ற மாட்டேன்." என்று பிடிவாதம் பிடித்தவளின் பிடிவாதம் சிறு குழந்தையின் அடம் என்று அவனுக்குப் புரியாது போனது தான் அந்தோ பரிதாபம். தன்னுடைய பொருளை தக்க வைத்துக் கொள்ளப் போராடும் சின்னக் குழந்தையின் பிடிவாதம் அது... கணவனின் காதல், அன்பு தனக்கு மட்டுமேயானது என்று நிராயுதபாணியாகப் போராடும் அபிஷரிகாவும் குமரி குழந்தையே...

"ப்ளீஸ் அபி... நம்ம சண்டையில் சின்னக் குழந்தை என்ன பாவம் பண்ணியது?" அவனது விழிகளில் கண்ணீர் கரை கட்டி நின்றது.

"முதலில் நான் சொன்னதைச் செய்." என்றவள் சோர்வுடன் விழிகளை மூடி கொண்டாள். குழந்தையின் அழுகை சத்தம் அவளது காதுகளில் ஒலித்தது. அது அவளது மனதினை வருத்திய போதும் ஏதோ ஒன்று அவளது மனதினை இளகாது இறுக செய்திருந்தது.

"இதென்ன பிடிவாதம் அபி?" மருத்துவர் கூட அவளைக் கடிந்தார்.

"ப்ளீஸ் டாக்டர், அவளை ஒண்ணும் சொல்லாதீங்க..." அப்போதும் சிவகுமரன் மனைவி மீது கோபம் கொள்ளவில்லை.

"குழந்தைக்குப் பவுடர் பால் கரைத்து கொடுங்க..." என்று மருத்துவரிடம் கூறியவன் மனைவியிடம் திரும்பினான்.

"அபி..." அவன் அவளது தலையை வருடி விட்ட போதும் அவள் விழிகள் திறக்கவில்லை.

"நீ கேட்டதை நான் கொடுக்கிறேன். அதுக்குக் கொஞ்சம் டைம் வேணும்." என்று கூற...

"எவ்வளவு நேரமானாலும் பரவாயில்லை." விழிகள் திறவாமல் கூறியவளை விழிகள் கசிய பார்த்திருந்தவன் அடுத்தக் கணம் அந்த அறையை விட்டு வெளியேறினான்.

வெளியில் வந்தவன் யாரிடமும் எதையும் கூறவில்லை. இது கணவன், மனைவி இரகசியம் என்றே அவன் நினைத்தான். அலுவலகம் கிளம்பியவனைப் பொன்னம்பலம் தடுத்து நிறுத்தினார்.

"இப்போ எங்கே போகிற?"

"முக்கியமான மீட்டிங் இருக்கு ஐயா..." என்று கூறிவிட்டு கிளம்ப ஆயத்தமானவன் பின்பு நின்று,

"இப்போது அபியை பார்க்க முடியாது. அறைக்கு மாற்ற குறைந்தது மூன்று மணி நேரமாவது ஆகும். நீங்க வேணா வீட்டுக்கு போயிட்டு வாங்க..." என்க... அவர்களும் குழந்தையை மட்டும் பார்த்துவிட்டு வீட்டிற்குச் சென்றனர்.

அலுவலகம் சென்றவன் புயல் வேகத்தில் எல்லாச் சொத்துக்களையும் மனைவியின் பெயருக்கு மாற்றி எழுதினான். பொன்னம்பலம் அவனது பெயருக்கு எல்லாச் சொத்துக்களையும் மாற்றி எழுதியிருந்தது இப்போது வசதியாகி போயிற்று. அவன் பத்திரங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு மனைவியைக் காண

மருத்துவமனைக்கு வந்தான். அப்போது தான் அவளை அறைக்கு மாற்றியிருந்தனர்.

தன் முன்னால் கையில் காகித கட்டுடன் நின்றிருந்த கணவனைக் கண்டு அபிஷரிகாவின் விழிகள் பளபளத்தது. அவள் ஆர்வத்துடன் அவனது முகத்தினைப் பார்த்திருந்தாள். இத்தனை நாளாய்த் தவித்திருந்த அவளது மனம் இப்போது சமாதானமாகப் போகின்றது. அவளது இத்தனை நாள் மனதின் தவிப்பிற்கு அவளது அருமை கணவன் இன்று முற்றுப்புள்ளி வைக்கப் போகின்றான். அவள் சந்தோசமாக அவனை நோக்கினாள்.

"எழுந்தமர முடியுமா?" அவன் கேட்டதும் அவள் மெல்ல எழுந்து அமர்ந்தாள். சொத்துக்கள் அடங்கிய பத்திரங்களை அவளது கைகளில் கொடுத்தவன்,

"இப்போது சந்தோசமா?" என்று கேட்க... அவளோ பிரமிப்பு மாறாது பத்திரங்களைப் பார்த்திருந்தாள். சொத்துக்களை விட அவள் தான் முக்கியம் என்று கணவன் நிரூபித்து விட்டானே. அவளுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது.

"இப்போதாவது நீ குழந்தைக்குப் பால் கொடுக்கலாமே... அவன் மிகவும் தவித்துப் போயிருப்பான்." என்ற சிவகுமரனின் வார்த்தைகள் மிகவும் தவிப்புடன் வந்தது.

அதைக் கேட்ட அபிஷரிகாவின் கரங்கள் பத்திரங்களை இறுக பற்றிக் கொண்டது. இறுதியில் எல்லாமே மகனுக்காகத் தானா? அவளுக்காக இல்லையா? தான் கேட்ட போதெல்லாம் சொத்துக்களைத் தராது மறுத்தவன் இப்போது மகனுக்காகக் கொடுக்கிறான் என்றால்... தான் அவனுக்கு மகனை விட முக்கியம் இல்லை என்பது அவளுக்கு உறைத்ததில் அவளது விழிகள் கலங்கி போனது. அவள் செயலற்று போனவளாய் திக்பிரம்மை பிடித்தார் போன்று அமர்ந்திருந்தாள். அவள் என்ன கேட்டாள், கணவனது காதலுக்கான அத்தாட்சி தானே? அது தவறா...? எல்லாம் முடிந்தது, எல்லாம் முடிந்து போனது என்று அவளது மனம் விடாது அரற்றியது.

அப்போது அவர்களது மகன் பசியில் அழ துவங்கினான். அதைக் கண்ட சிவகுமரன் பதறி போய் அவனைத் தனது கைகளில் தூக்கி கொண்டு மனைவியிடம் வந்தான்.

"அம்முலு, இங்கே பார்... மகன் பசியில் அழறான்..." என்று கூற... அவள் அடக்கப்பட்ட அழுகையில் விழிகள் சிவக்க அவனை ஏறிட்டு பார்த்தாள்.

"இதை எதுக்கு என் கிட்ட சொல்ற?" என்றவளை அவன் புரியாது பார்த்தான்.

"சொத்துக்களைக் கொடுத்ததோடு உன்னுடைய வேலை முடிஞ்சது."

"அபி..." அவன் அதிர்வுடன் அவளைப் பார்த்தான். அவளோ அசையாது அமர்ந்திருந்தாள்.

"நம் மகன்..." என்று அவன் அவள் முன் மகனை நீட்டினான்.

"உன் மகன்..." என்றாள் அவள் தெள்ளத்தெளிவாக...

"இல்லை அபி... இப்படி எல்லாம் சொல்லாதே. இவன் நம் மகன்..."

'அதான் சொத்துக்களைக் கொடுத்து என்னை அந்நியமாக்கிட்ட இல்ல... அப்புறம் எங்கே இருந்து நம் மகன் வந்தான்? அவன் எனக்கு வேண்டாம்... அவன் உன் மகன்... அவனை எடுத்துக் கொண்டு போ... எனக்கு யாரும் வேண்டாம்... யாரும் வேண்டாம்...' என்று அவள் மனதிற்குள் பைத்தியம் பிடித்தவள் போல் அரற்றினாள்... அவள் மீண்டும் தனிமை சிறையில் அகப்பட்டுக் கொண்டாள். அது அவளுக்கு மிகவும் வலித்தது. ஆனால் இந்த வலிக்கு அவசியமே இல்லை என்பதை அவள் உணரவில்லை.

சொத்துக்கள் எதுவும் வேண்டாம், அவளும், மகனும் தான் வேண்டும் என்று அன்புக்காக ஏங்கி நிற்கும் கணவனின் அன்பு அவளுக்குப் புரியவில்லை. கணவன் சொத்துக்களைத் திருப்பிக் கொடுத்து அவனது காதலை நிரூபிக்க வேண்டும் என்று அவள் தான் நினைத்தாள்.

அவளது எண்ணப்படி அவனும் செய்தான். ஆனால் அது அவளுக்காக அல்லாது மகனுக்காக என்றதும் அவள் வேதனை கொண்டாள். அவனுக்கு அவள் முக்கியம் இல்லையா? என்று... அவனுக்கு அவள் முக்கியம் என்பதால் தான் அவள் சொல்வதற்கு எல்லாம் அவன் ஆடுகின்றான் என்பதை அவள் உணரவே இல்லை.

"உனக்கும் எனக்குமான உறவு முடிந்தது... போ..." குழந்தையின் அழுகை அவளை ஏதோ செய்ததில் அந்தக் கோபத்தையும் அவள் அவனிடம் தான் காட்டினாள்.

"யோசித்துப் பேசு அபி..." அவனது குரல் கெஞ்சியது.

"நான் யோசித்துத் தான் பேசுகின்றேன். நீயும், உன்னுடைய மகனும் எனக்குத் தேவையில்லை. போ, இங்கிருந்து... நீ போகவில்லை என்றால் நான் என் உயிரை மாய்த்து கொள்வேன்." என்றவள் தனது கைகளில் ஏறிக் கொண்டிருந்த குளுக்கோஸ் ட்ரிப்சை கழற்றி அந்தப் பாட்டிலை கையில் எடுத்தவள் அதை உடைக்கத் தயாராக... அவளது செயலில் அவன் தான் அரண்டு போனான்.

"ஏய், என்ன பண்ற? ப்ளீஸ், கையில் இருக்கிறதை கீழே போடு..." அவன் கெஞ்சினான்.

"நான் உயிரோடு இருக்கணும்ன்னா நீ என்னை விட்டு போயிரு..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறியவளை கண்டு அவன் ஸ்தம்பித்துப் போனான்.

"போன்னு சொல்றேன்ல..." என்று ஆங்காரத்துடன் கத்தியவளை இதயத்தில் நேசம் கசிய, விழிகளில் விழிநீர் கசிய பார்த்தவன்,

"போறேன் அம்முலு போறேன்..." என்றவன் மனம் கனக்க அந்த அறையை விட்டு வெளியேறினான்.

கணவன் செல்வதைக் கண்டவள் மனம் 'சிவூ' என்று காதலாய் அரற்றியது. அவளது ஒரே நம்பிக்கையான கணவன் பொய்த்துப் போனதில் அவள் மனம் வெறுத்த, உணர்வுகள் மரத்த நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

அவள் மனைவி என்கிற நிலையில் இருந்து மாறவில்லை. மனைவி என்கிற நிலையைத் தாண்டி தாய் என்கிற ஸ்தானத்திற்கு அவள் செல்ல நினைக்கவில்லை. நினைக்கவில்லை என்பதைவிட அவள் விரும்பவில்லை என்பதே சரியாக இருக்கும். தன் வயிற்றில் சுமந்த மகனை விட அவளது இதயத்தில் சுமக்கும் மன்னவனுக்கே அவள் அதிக முக்கியத்துவம் கொடுத்தாள்.

மொத்தத்தில் அபிஷரிகா ஒரு காதல் கிறுக்கு என்றால் மிகையில்லை...!!!

குழந்தையை அணைத்தபடி வெளியில் வந்த சிவகுமரன் அங்கு நின்றிருந்த குடும்பத்தினரை கண்டு திகைத்துப் போனான். அவர்களது முகத்தில் இருந்த உணர்வுகளே சொல்லாமல் சொல்லியது அவர்கள் எல்லாவற்றையும் கேட்டு விட்டார்கள் என்று... அவன் அவர்களுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கும் போது, அவனது கையிலிருந்த குழந்தை பசியில் அழுதபடி பாலுக்காக ஏங்கி அவனது நெஞ்சை சட்டையோடு சப்பியது. தாயுமானவனான அந்தத் தந்தை தாய்மை பேற்றினை அடையவில்லையே! அப்படி அடைந்திருந்தால் அவன் மகனது பசியை ஆற்றியிருப்பானே! அந்த நொடி அவன் தனது நிலையை எண்ணி உடைந்து போனான்.

"குமரா..." என்று பொன்னம்பலம் அவனது தோளில் ஆறுதலாய் கை வைக்க...

"நான் வாழ்க்கையிலும் தோற்றுப் போய்விட்டேன். உங்களுக்குக் கொடுத்த வாக்கினை காப்பாற்ற முடியாதும் தோற்றுப் போய்விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் ஐயா..." என்று அவன் கதறியது கண்டு எல்லோரின் கண்களிலும் கண்ணீர் மழை... வேணி மகனது அநாதரவான நிலையைக் கண்டு கதறிவிட்டார். காவேரி மௌனமாய் அழுதார். பேத்தியின் தவறு அவரது வாயை கட்டி போட்டு விட்டது.

"அவளை..." என்றபடி அறைக்குள் கோபமாய்ச் செல்ல முயன்ற பொன்னம்பலத்தை அவன் தடுத்து நிறுத்திவிட்டான்.

"வேண்டாம் ஐயா... அவள் எங்கிருந்தாலும் உயிரோடு இருந்தால் போதும்."

"நான் போய்ப் பேசி பார்க்கிறேன் குமரா..."

"வேண்டாம்... பொருந்தா திருமணம் பொருத்தம் இல்லாது போய்விட்டது ஐயா. இனியாவது அவள் நிம்மதியாக இருக்கட்டும்." என்றுரைத்தவன் எல்லோரையும் அழைத்துக் கொண்டு தனது ஊரை நோக்கி பயணமானான்.

சிவகுமரன் தனது கைகளில் உறங்கி கொண்டிருந்த மகனை பார்த்தான். புட்டிப்பால் குடித்துத் தனது பசியை ஆற்றிக் கொண்ட சிசு சிறிது நேரத்தில் தனது அன்னையை மறந்து உறங்கி போனது. ஆனால் அதன் தகப்பனால் தான் தனது மனைவியை மறக்க முடியவில்லை. மனைவியின் உருவத்தில் இருக்கும் அவர்களது மகவை அவன் தினமும் பார்க்கும் போது எல்லாம் அவளது ஞாபகம் எழுந்து அது அவனுக்கு நித்திய தண்டனையை அளிக்கப் போகின்றது... அதை நினைத்தவனது இதயத்தில் சுளீரென்று வலி எழுந்தது.

"இதைவிடப் பெரிய தண்டனையை நீ எனக்குத் தந்திருக்க முடியாதுடி அம்முலு..." என்று முணுமுணுத்தவனின் விழிகளில் இருந்து கண்ணீர் விடாது வழிந்து கொண்டிருந்தது.

"நீ என் அருகிலே
இருந்த போது பறந்தவன்
நீ என் தொலைவிலே
பிரிந்தபோது சிதைந்தவன்
போதும் உன்னாலே
தூள் தூளாய் உடைகிறேன்
போதும் உன்னாலே
என்னோடு அழுகிறேன்

ஏதும் என்னோடு
இல்லாமல் போகட்டும்
நீ என் கைகோர்த்து
வாழ்ந்தால் போதுமே"

தொடரும்...!!!

## அத்தியாயம் : 24

இன்று மருத்துவமனையில்....

"சார்..." என்ற பதட்டமான குரலில் மூடியிருந்த விழிகளைத் திறந்த சிவகுமரன் தன் முன் பதட்டமாக நின்றிருந்த ஆகாஷை கண்டவன் வேதனையுடன் அவனைப் பார்த்தான்.

"எப்படியாச்சு சார்?" என்று கேட்ட ஆகாஷின் குரலில் பதற்றம் நிறைந்திருந்தது. அபிஷரிகா அவனது உயிர் தோழி அல்லவா...!

"தெரியலை ஆகாஷ்... நான் நியூஸ் பார்த்து தான் வந்தேன்." என்ற சிவகுமரனின் குரல் துக்கத்தில் கமறியது.

"அபி இப்போ எப்படி இருக்கிறாள்?"

"ட்ரீட்மெண்ட் போயிக்கிட்டு இருக்கு." என்ற சிவகுமரன் மேலே எதுவும் பேசவில்லை. அவனது மடியில் அமர்ந்திருந்த ப்ரஷன்ஜித்தை நோக்கி தனது கைகளை நீட்டினான் ஆகாஷ். அவனோ வர மறுத்துத் தந்தையிடம் ஒன்றினான். அதைக் கண்டு ஆகாஷ் யோசனையுடன் சின்னவனைப் பார்த்தான்.

"ப்ரஷன் என் கூடவே இருக்கட்டும்." என்றான் சிவகுமரன்...

ஆகாஷ் அங்கே சற்று தள்ளி அமர்ந்திருந்த யமுனாவை கேள்வியாய் பார்த்தபடி அவள் அருகே சென்றான். மற்றவர்களும் இறுக்கமாய் அமர்ந்திருப்பதை அவன் மனதில் குறித்துக் கொண்டான்.

"யம்ஸ், என்னாச்சு...? ஏன் எல்லோரும் ஒரு மாதிரியா இருக்கீங்க?" அவன் கேட்டதும் தான் தாமதம் யமுனாவின் விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது. அவளது கண்ணீர் அவனைச் சுட்டெரித்தது.

"ப்ச், நான் இருக்கும் போது நீ அழலாமா பேபி?" என்றபடி அவள் அருகே அமர்ந்தவன் சுற்றியிருப்பவர்களைக் கண்டு

கொள்ளாது அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். அனைவரும் அவர்களைக் கவனிக்கும் மனநிலையில் இல்லை. யமுனா தேம்பியபடி நடந்ததை அவனிடம் கூற... ஆகாஷுக்கு சிவகுமரன் மீது கோபம் வந்தது.

"இதோ வந்திர்றேன் யம்ஸ்..." என்றவன் எழுந்து நேரே சிவகுமரன் முன் போய் நின்றான்.

"நீங்க பேசியது எதுவும் சரியில்லை சார். அபி எனக்குப் பிரெண்ட் தான். அதுக்காக அவள் செஞ்சது எல்லாம் சரின்னு சொல்ல மாட்டேன். தப்பு தான்... அவள் செஞ்சது எல்லாமே தப்பு தான். அவளுக்காக நீங்க உங்க வீட்டு மனுசங்களைத் தூக்கி எறிஞ்சது எனக்குப் பிடிக்கலை. அவளா தான் உங்களை விட்டு போனாள். நீங்க இல்லை. அப்போ நீங்க தடுமாறி நின்னப்போ உங்களைத் தாங்கியது உங்க குடும்பம் மட்டும் தான். அவள் இல்லை. அபிக்கு நடந்தது விபத்து. அதுக்கு எதுக்கு மத்தவங்க கிட்ட கோபப்படுறீங்க? இவ்வளவு நடந்தும் உங்களுக்கு வேறு பெண்ணை நிச்சயம் பண்ண போறாங்கன்னு தெரிஞ்சு இருந்தும் அவள் வாயை திறக்கலை. அந்தளவுக்கு அவள் அழுத்தம். அப்படிப்பட்டவளுக்காக நீங்க ஏன் இப்படி நடந்துக்கிறீங்க? உங்களோட காதலுக்கு எதிர்காலம் இல்லை. அது மட்டும் தான் என்னால் உறுதியா சொல்ல முடியும்." ஆகாஷ் படபடவெனப் பேசி கொண்டே போக...

"ஆகாஷ்..." சிவகுமரன் சற்று குரலை உயர்த்தி அவனை அதட்டினான். சிவகுமரனின் விழிகள் அடக்கப்பட்ட வேதனையில் சிவந்து போயிருந்தது.

"அவளைப் பத்தி நீ சொன்னது எல்லாம் பொய் ஆகாஷ்... இப்போ கொஞ்ச நேரத்துக்கு முந்தி 'சிவூ... இருட்டாயிருக்கு... ரொம்பப் பயமாயிருக்குடா...'ன்னு என் கையைப் பிடிச்சிட்டு சொன்ன அபி தான் மெய். நான் தான் அவளைப் புரிஞ்சிக்கலை... புரிஞ்சிக்கலை..." என்று புலம்பியவனின் முகத்திலும், குரலிலும் அத்தனை

வேதனை இருந்தது. அதைக் கண்ட ஆகாஷ் திகைத்துப் போனான்.

"சார்..."

"இப்போ எதுவும் என் கிட்ட கேட்காதே. எனக்கே பல விசயங்கள் புரியலை. ப்ளீஸ்..." என்றவனை ஆகாஷ் மேலும் தொந்தரவு செய்யவில்லை.

"ப்ரஷனையாவது என் கிட்ட வர சொல்லுங்க... நீங்க சொன்னா தான் அவன் கேட்பான்." என்ற ஆகாஷை பார்த்த சிவகுமரன் மகனிடம்,

"ஆகாஷ் அங்கிள் கூடப் போ ப்ரஷன்..." என்று கூற... சின்னவனோ தந்தையின் கழுத்தை கட்டி கொண்டு,

"ம்ஹூம், நீங்க என்னை விட்டு போயிருவீங்க." என்று மறுக்க...

"அப்பா எங்கேயும் போக மாட்டேன்... நீ ஏதாவது சாப்பிட்டுட்டு வா..." சிவகுமரன் மகனுக்கு ஆறுதல் கூற... சின்னவன் சரியென்று தலையசைத்துவிட்டு ஆகாஷுடன் சென்றான்.

சிவகுமரன் மீண்டும் விழிகளை மூடி கொண்டு அமர்ந்தான். அவனது காதுகளில் ஆகாஷின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்தது. 'இது விபத்து தானா?' அவனது மனதில் கேள்வி எழுந்தது. ஏனோ இல்லையென்றே அவனுக்குத் தோன்றியது. தன்னவளின் மனதை கொன்று அவளது உயிர் பறிக்க இருந்ததை நினைத்து அவனது மனம் ரணமாக வலித்தது.

'ஆகாஷ், நீ சொன்னது எல்லாம் சரி தான்... அபியாகத் தான் என்னை விட்டு போனாள். அபியாகத் தான் எனக்கு விவாகரத்து கொடுக்க முன்வந்தாள். தவறுகள் எல்லாமே அவளுடையது தான்... ஆனால் அவள் கோவிலில் பணிவிடை செய்தது. சற்று முன் எனது குரல் கேட்டு அவள் கண் விழித்தது. அதற்கு அடுத்து அவள் எனக்குக் கொடுத்த முத்தம்... எனது கையை விடாது இறுக்கி பிடித்திருந்தது...

இதை எல்லாம் விட அந்த வார்த்தைகள்... என்னை உயிரோடு கொல்கின்றதே. அவளைப் பத்தி நல்லா புரிஞ்சவன் நான் தான்னு இறுமாப்பில் இருந்தேனே. ஆனா இப்போது தான் தெரிகிறது, நான் அவளைக் கொஞ்சமும் புரிஞ்சிக்கலைன்னு... நந்தகுமார் சார் சொன்னதைக் கூட நான் சரியா புரிஞ்சிக்கலை. அபியின் வாழ்க்கையை மேலோட்டமாகப் பார்த்தால் எல்லாமே சரியாக இருக்கிறது. ஆனால் உள்ளுக்குள் என்னயிருக்கிறது? என்பது அவள் மட்டுமே அறிந்த ரகசியம். நான் எனது அன்பால், காதலால் அவளது மனப்பெட்டகத்தின் பூட்டினை உடைத்து அவளை மனம் திறக்க வைப்பேன்.' என்று மனதிற்குள் உறுதியாகக் கூறி கொண்டவனுக்கு அவளது இதழொற்றலும், இறுகிய கைப்பிடியும் மீண்டும் மீண்டும் நினைவில் எழுந்து அவனைக் கொல்லாது கொன்றது. அதுவே சொல்லாமல் சொல்லியது அவளுக்கு அவன் எந்தளவிற்கு முக்கியமென்று...!

சிவகுமரனுக்கு அடுத்து வந்த மணித்துளிகள் பெரும் போராட்டத்துடன் கழிந்தது. மருத்துவர் வந்து அபிஷரிகா ஆபத்துக் கட்டத்தைத் தாண்டிவிட்டாள் என்று கூறியதும் தான் அவன் நிம்மதியுற்றான்.

"நான் போய்ப் பார்க்கலாமா?" என்று அவன் கேட்க...

"தாராளமா... ஆனா அவங்களுக்கு நினைவு திரும்பக் கொஞ்ச நேரம் எடுக்கும்."

"ஓகே டாக்டர்..." என்றவன், "டாக்டர், பிரைவேட் ஹாஸ்பிட்டலுக்கு அபியை மாத்தலாமா?" என்று கேட்க...

"அவங்க கண் முழிச்சு ரூமுக்கு மாத்தும் போது இது பத்தி முடிவு எடுக்கலாம்." என்ற மருத்துவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

சிவகுமரன் உள்ளே சென்று மனைவியைப் பார்த்தான். தலை மற்றும் வலதுகாலில் கட்டு போட்டு படுத்திருந்தவளை கண்டு அவனது கண்கள் கலங்கியது. அவளது தலையை மென்மையாய் வருடி விட்டவன் பின்பு

அவளது கையை எடுத்து இறுக பற்றிக் கொண்டான். அவனது கண்ணீர் அவளது கை மீது சொட்டு சொட்டாகச் சொட்டியது.

"உன் மனசுல என்ன தான்டி நினைச்சுக்கிட்டு இருக்க? இவ்வளவு நாளா உனக்கு என்னைப் பிடிக்கலை. உன்னோட அந்தஸ்துக்கு நான் தகுதியானவன் இல்லைன்னு தான் நீ விலகி போனதா நான் நினைச்சுக்கிட்டு இருந்தேன். ஆனா உன்னோட முத்தம் அப்படியில்லைன்னு சொல்லுதுடி. உனக்கு என்னை அவ்வளவு பிடிக்குமா? அப்படியிருந்தும் ஏன்டி என்னை விட்டு விலகி போன? எனக்கு உன்னை மட்டும் தான் பிடிக்கும். அது ஏன் உனக்குப் புரியாம போச்சு? நீ என்னை விட்டுப் போனால் நான் செத்து போவேன்னு உனக்கு ஏன் தோணாம போச்சு? நம்ம மகனுக்காகத் தான் நான் நடைப்பிணமா வாழ்ந்துக்கிட்டு இருக்கேன். ஏன்டி இப்படிப் பண்ணின? ஏன்? ஏன்? ஏன்?" என்று கேள்விகளை அவளிடம் கேட்டவன் அவளது கையில் முகம் புதைத்து குலுங்கி குலுங்கி அழுதான்.

அப்போது அவனது தோளை ஒரு கரம் ஆறுதலாய் பற்றியது. திரும்பி பார்த்தவன் அங்கே நின்றிருந்த பொன்னம்பலத்தைக் கண்டு உடைந்து போய் அவரை அணைத்துக் கொண்டு கதறிவிட்டான். பேத்தியின் நிலையைக் கண்டு அவனை விட அவர் தான் அதிகம் உடைந்து போனார். அவரும் அவனை அணைத்துக் கொண்டு கதறிவிட்டார்.

"ஐயா..." அவன் திகைப்புடன் அவரைப் பார்த்தான்.

"எப்படி எல்லாம் வாழ்ந்து இருக்க வேண்டிய பொண்ணு... இப்போ இப்படி..." அவரால் துக்கத்தைத் தாங்கி கொள்ள முடியவில்லை. தனது துக்கத்தில் கரைந்தவன் தனது ஐயாவின் துன்பத்தை உணராது ஏதேதோ பேசிவிட்டோமே என்று அவன் தனக்குள் நொந்து போனான்.

"குமரா, உன் வாழ்க்கையில் இருந்து என் பேத்தியை அப்புறப்படுத்திட்டு வேறு பொண்ணைக் கொண்டு வர என்

மனசு என்ன பாடு பட்டுச்சுன்னு எனக்கு மட்டும் தான் தெரியும். எனக்கு மட்டும் ஆசையா குமரா? என் பேத்தி வாழ்க்கையை அழிக்க... அவள் உன்னுடன் சந்தோசமாக வாழ்ந்தால் உன்னை விட நான் தான் அதிகம் சந்தோசப்படுவேன். ஆனா அவள்...??? அவளுக்காக நீ உன் வாழ்க்கையை இழந்து தவிப்பது சரியா? வேணி இடத்தில் இருந்து யோசிச்சு தான் என் மனசை கல்லாக்கிட்டு இந்த முடிவு எடுத்தேன். இனி உனக்குப் பிடிக்காததை நாங்க யாரும் செய்ய மாட்டோம். நீயும் எங்களை வெறுத்துடாதே. எங்களுக்கு உன்னையும், ப்ரஷனையும் விட்டா யாரிருக்கா?" எல்லாம் பெற்ற பெரிய மனிதர் தன்னிடம் இறைஞ்சுவதைக் கண்டு அவனால் மனம் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

"ஏதோ ஒரு கோபத்தில் நான் அப்படிப் பேசிட்டேன். என்னை மன்னிச்சிருங்க ஐயா... நானும், உங்க பேத்தியும் சந்தோசமா வாழ்வோம். அதை நீங்க பார்க்கத்தானே போறீங்க." என்று சிறு புன்னகையுடன் கூறியவனைக் கண்டு அவருக்கும் புன்னகை தோன்றியது.

"எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரி..." என்றவர் அவனது கரத்தில் அழுத்தம் கொடுத்துவிட்டு வெளியில் சென்றார். அவர் சென்றதும் அவனது விழிகள் மனைவியைப் பார்த்தது.

"சீக்கிரம் கண் முழிச்சு பாரு அம்முலு..." ஆசையும், ஆதங்கமுமாய்க் கூறியவன் அவளது நெற்றியில் முத்தமிட வந்தவன் அங்குக் கட்டு போட்டிருப்பதைக் கண்டு அவளது கன்னத்தில் அழுந்த முத்தமிட்டுவிட்டு வெளியில் வந்தான்.

நேரே வெளியில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த வேணியின் முன்பு வந்து நின்றான் சிவகுமரன். மகனை கண்டதும் அவர் நிமிர்ந்து பார்த்தார். அவரது விழிகளில் கண்ணீர் நிரம்பி இருந்தது.

"குமரா, இப்படியாகும்ன்னு நான் நினைச்சு கூடப் பார்க்கலை." என்றவரின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"ப்ச் விடுங்கம்மா... விபத்துக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை. தவறு முழுவதும் என்னிடம் தான். அபி பத்தி தெரிந்து தான் கல்யாணம் பண்ணினேன். அந்த வாழ்க்கையைத் தக்க வச்சுக்க எனக்குத் தான் தெரியாம போச்சு. இனி நான் பார்த்துக்கிறேன். நீங்க எல்லாம் வீட்டுக்கு போங்க. ப்ரஷனையும் கூட்டிட்டு போங்க." என்க...

"அண்ணய்யா..." என்றபடி யமுனா, சரஸ்வதி, அம்ரிதா மூவரும் அவனை அணைத்து கொண்டனர்.

"சாரி..." என்று சிவகுமரனின் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டது.

"அங்கிள், அப்பாவுக்குக் கோபம் போயிருச்சா?" ப்ரஷன்ஜித் ஆகாஷிடம் ரகசியமாய்க் கேட்டான்.

"அப்படித்தான் நினைக்கிறேன்." ஆகாஷும் சின்னவன் காதில் ரகசியம் பேசினான்.

"அப்போ நான் தாத்தா, பாட்டி, வேணி பாட்டி, அத்தைங்க கூட இருக்கலாமா?" என்று ஏக்கத்துடன் கேட்டவனை வாத்யல்சத்துடன் பார்த்த ஆகாஷ்,

"இருக்கலாம் ப்ரஷன்... அவங்களும் உன் கூடவே எப்பவும் இருப்பாங்க." என்று சின்னவனை முத்தமிட்டு கூற...

"ஐய், ஜாலி..." என்று ப்ரஷன்ஜித் சந்தோசத்தில் குதிக்க... அவனது ஆரவாரத்தில் சிவகுமரன் திரும்பி மகனை பார்த்தான். அவன் என்ன? என்பது போல் ஆகாஷை பார்க்க...

"எல்லோர் கூடவும் ஒண்ணா இருக்கப் போறோம்ன்னு ஒரே சந்தோசம்."

"ப்ரஷன், இங்கே வா..." சிவகுமரன் மகனை அழைக்க... அவனும் ஓடி வந்தான். சிவகுமரன் அவனைத் தூக்கி அணைத்துக் கொண்டான். அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்த போதும் மகனிடம் மனைவியைப் பற்றி எப்படிக் கூறுவது? என்று குழப்பமாக இருந்தது. அவர்கள் இருவரது

சந்திப்பு சிறு உறுத்தல் கூட இல்லாது இனிமையாக இருக்க வேண்டும். அதை எப்படிச் சாத்தியமாக்குவது? என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது.

ஒரு நாள் முழுவதும் சிவகுமரனை தவிக்க விட்டு விட்டு மறுநாள் அபிஷரிகா கண் விழித்தாள். அவள் கண் விழித்ததும் முதலில் அவள் கண்டது அவளது கணவனைத் தான்... அவளையும் அறியாது இதழ்களில் புன்னகை பூத்தது.

"சிவூ..." என்று அவள் மெல்லமாய் முணுமுணுக்க... அவளையே கவனித்துக் கொண்டிருந்தவன் அவளிடம் இருந்து வந்த அசைவில் அவள் அருகே பரபரப்பாய் விரைந்து வந்தான்.

"அம்முலு..." தனது ஒட்டுமொத்த காதலையும் ஒற்றை வார்த்தையில் தேக்கி வைத்துக் கொண்டு அவன் அவளை அழைக்க... அவள் விழி விரித்து அவனைப் பார்த்தவள் அடுத்த நொடி மெல்ல மயங்க துவங்கினாள். அவன் பதட்டத்துடன் மருத்துவரை அழைத்து வர.. அவர் வந்து அவளைப் பரிசோத்து விட்டு அவள் நன்றாக இருப்பதாகவும், இந்த மயக்கம் மருந்தின் வீரியத்தில் வந்த மயக்கம் என்று அவர் கூற...

"இனி எந்த ஆபத்தும் இல்லையென்றால் நாங்க அபியை பிரைவேட் ஹாஸ்பிட்டலுக்குக் கூட்டிட்டு போறோம்." என்று அவன் கூற... அவரும் அதற்குச் சம்மதித்தார்.

பின்பு ஆகாஷை வைத்து சட்ட பிரச்சனைகளைச் சமாளித்து அபிஷரிகாவை சென்னையில் இருந்த பிரபல தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கிருந்த மருத்துவர்கள் மீண்டும் அவளைப் பரிசோதித்து விட்டு அவள் நலமாக இருப்பதாகக் கூறினர்.

"அவங்க உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை மிஸ்டர். சிவகுமரன். ஆனால் அவங்க வலதுகாலில் எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கு. அவங்க எழுந்து நடமாட குறைந்தது இரண்டு அல்லது மூன்று மாதங்களாகலாம். அதுவரை

அவங்களைச் சின்னக் குழந்தை போல் பார்த்துக்கோங்க. ஒரு வாரம் கழிச்சு எங்க ஹாஸ்பிட்டல் ஆர்த்தோ ஸ்பெசலிஸ்ட் கேம்ப் முடிஞ்சு வர்றாங்க. அவங்க தினமும் பேஷண்ட்டை செக் பண்ணுவாங்க... டோன்ட் வொர்ரி..." தலைமை மருத்துவர் எளிதாகக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். ஆனால் சிவகுமரன் தான் அதிர்ந்து போய் நின்றிருந்தான்.

பட்டாம்பூச்சி போன்று சிறகடித்துப் பறந்து கொண்டிருந்த அபிஷரிகாவை எண்ணி அவன் மனம் கலங்கினான். 'ப்ச், கால் தானே உடைந்து போயிருக்கு. என்னமோ காலே போன மாதிரி ஒப்பாரி வைக்கிற.' அவனது மனசாட்சி அவனை அடக்கியது. மருந்தின் வீரியத்தில் உறங்கி கொண்டிருந்த அபிஷரிகாவை பார்த்தபடி அவள் அருகே அமர்ந்திருந்தான் சிவகுமரன். அப்போது அங்கு வந்து சேர்ந்தான் ஆகாஷ்...

"சார், வீட்டுக்குப் போய்க் குளிச்சிட்டு வாங்க..." என்று அவனை வீட்டிற்குப் போகச் சொல்ல... சிவகுமரனோ,

"வேண்டாம் ஆகாஷ்... அபி எந்நேரம்ன்னாலும் முழித்துக் கொள்வாள். அப்போது நான் இங்கே இருக்கணும்." என்று கூற...

"நான் டாக்டர் கிட்ட விசாரிச்சிட்டு தான் இங்கு வந்தது. அபி கண்விழிக்க நாளை ஆகலாம்ன்னு சொன்னாங்க. அதனால் நீங்க பயப்படாம வீட்டுக்கு போங்க." ஆகாஷ் கூறியதும் சிவகுமரன் அரைகுறை மனதோடு வீட்டிற்குச் செல்ல ஆயத்தமானான். கதவு நோக்கி சென்றவனை ஆகாஷின் குரல் தடுத்து நிறுத்தியது.

"சார், முகத்தில் இருக்கும் தாடியை ஷேவ் பண்ணிட்டு வாங்க... அபி முழிச்சு பார்க்கும் போது உங்களைப் பார்த்துப் பயப்படப் போகிறாள்." என்று ஆகாஷ் கத்தி கிண்டலடிக்க...

"போடா அரட்டை..." என்றவனது உதடுகளில் அவனையும் அறியாது புன்னகை தோன்றியது.

சிவகுமரன் வீட்டிற்கு வந்த போது அன்று ஞாயிறு என்பதால் ப்ரஷன்ஜித் வீட்டில் இருந்தான். தந்தையைக் கண்டதும் அவன் ஓடிவந்து அணைத்துக் கொண்டான். மகனுடன் பேசியபடி அறைக்கு வந்தவன் அவனைக் கட்டிலில் அமர வைத்துவிட்டு குளியலறைக்குச் சென்றுவிட்டான். அவன் குளித்து முடித்து மீண்டும் வெளியில் வரும் போது ப்ரஷன்ஜித் அங்கேயே இருந்தான். மகனை கண்ட சிவகுமரன் யோசனையுடன் அவன் அருகில் அமர்ந்தான். ப்ரஷன்ஜித் அவன் அருகில் அமர்ந்து அவனது நெஞ்சில் சாய்ந்து கொண்டு,

"ப்பா, ஷாப்பிங் போகலாமா?" என்று கேட்டான்.

அவனிடம் எப்படிச் சொல்வது? 'உன் அன்னை நினைவு இல்லாது மருத்துவமனையில் இருக்கிறாள்' என்று... அவன் கனத்த மனதுடன் மகனை இறுக்கி அணைத்துக் கொண்டான். மகனிடம் அவனது அன்னையைப் பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும். அப்போது தான் இருவரது சந்திப்பில் இருவருமே காயப்படாது தப்ப முடியும். இல்லையென்றால் யாராவது ஒருவர் காயப்பட நேரிடலாம். யார் காயப்பட்டாலும் வலி என்னவோ தனக்குத் தான் என்பதை உணர்ந்த சிவகுமரன் மகனிடம் மனைவியைப் பற்றிச் சொல்ல ஆயத்தமானான்.

"ப்ரஷன்..."

"ம், சொல்லுங்க..." தந்தையின் அலைப்பேசியை ஆராய்ந்து கொண்டே அவன் கூற...

"உன் அம்மாவை பத்தி நீ கேட்டுட்டே இருப்பியே. உனக்கு உன் அம்மாவை பார்க்கணும் போலிருக்கா?" தந்தை கேட்டதும் அவன் கண்களில் மின்னல் மின்ன அலைப்பேசியைக் கீழே போட்டுவிட்டு தந்தையை ஆர்வமாகப் பார்த்தான்.

"எஸ்ப்பா... அம்மாவை பார்க்கணும்." என்ற மகனது ஆர்வ குரலே சொல்லாது சொல்லியது அவனது ஆழ்மனதின் ஏக்கத்தினை...

சிவகுமரன் அலைப்பேசியை எடுத்துப் 'பிரைவேட் ஃபோல்டர்'இல் சேமித்து வைத்திருந்த மனைவியின் புகைப்படத்தை மகனிடம் காட்டினான்.

"இவங்க அபி ஆன்ட்டி..." மகன் குழப்பத்துடன் தந்தையை ஏறிட்டான்.

"இல்லை ப்ரஷன்... இவங்க தான் உங்கம்மா..." சிவகுமரன் சொன்ன அடுத்த நொடி ப்ரஷன்ஜித் அலைப்பேசியைக் கட்டிலில் வைத்துவிட்டு எழுந்தவன் வேகமாகப் பால்கனி நோக்கி சென்றான். மகனது செயலில் சிவகுமரன் திகைப்புடன் அவனைப் பார்த்திருந்தான். பின்பு சுதாரித்துக் கொண்டு அவன் மகனின் பின்னே சென்றான். அங்கு ப்ரஷன்ஜித் நாற்காலியில் தலையைத் தொங்க போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தான். அவன் அருகே மண்டியிட்டு அமர்ந்த சிவகுமரன்,

"ப்ரஷன்..." என்று மகனை அழைக்க... சின்னவன் விழிகளில் நீரோடு தந்தையை ஏறிட்டுப் பார்த்தான். மகனது கண்ணீர் தந்தையை உலுக்கி விட்டது.

"ப்ரஷன்..." என்று அவன் கூக்குரலோடு மகனை அணைத்துக் கொண்டான்.

"அம்மா தான் என்னைப் பிடிக்காம விட்டுட்டு போயிட்டாங்க. அதான் அவங்க என்னைப் பார்த்தப்போ ஒண்ணுமே சொல்லலை. ஆனா நீங்க எனக்குச் சொல்லியிருக்கலாமேப்பா... அவங்க தான் என் அம்மான்னு. நான் அவங்களை ஆன்ட்டின்னு கூப்பிட்டுட்டேனே. அது தப்பாப்பா...?" சின்னவன் விழிகளில் கண்ணீரை தேக்கி வைத்துக் கொண்டு கேட்க...

"யார் மேலேயும் தப்பில்லை கண்ணா... எல்லாம் விதி மேல் தான் தவறு." சிவகுமரன் மகனை தேற்றியவன்,

"அம்மா முன்னாடி இப்படி எல்லாம் பேச கூடாது. அவங்க மனசு கஷ்டப்படுவாங்க..." என்று மெல்ல எடுத்துரைக்க...

"அவங்களுக்குத் தான் என்னைப் பிடிக்காதேப்பா..." மகனது குரலில் ஏக்கம் இழையோடியது.

"தப்பு கண்ணா... அம்மாவுக்கு உன்னை ரொம்பப் பிடிக்கும். உன்னைப் பிடிக்காமல் தான் உன்னைக் கூட்டிட்டு போய் டாய்ஸ், சாக்லேட், ஐஸ்க்ரீம் எல்லாம் வாங்கிக் கொடுத்தாங்களா?"

"அப்போ அவங்க ஏன் என் கிட்ட அவங்க தான் என்னோட அம்மான்னு சொல்லலை?" மகனது புத்திக்கூர்மையை மனதிற்குள் மெச்சிய சிவகுமரன்,

"அது... அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையில் சின்ன மனஸ்தாபம். அதனால் தான் அவங்க உன் கிட்ட எதுவும் சொல்லலை. அம்மா ரொம்ப நல்லவங்க கண்ணா. அப்பா தான் அம்மாவை புரிஞ்சிக்காம அவங்களுக்குத் தண்டனை கொடுத்துட்டேன்." என்ற சிவகுமரனின் விழிகள் கலங்கியது.

"நோப்பா... நீங்க குட் தான். அம்மாவும் குட் தான். ப்ரஷனும் குட் தான். காட் தான் வெரி பேட். இனி நாம ஹேப்பியா இருப்போம்." என்று தந்தையைத் தேற்றினான் அந்தத் தகப்பன்சாமி. சிவகுமரன் மனம் நெகிழ்ந்தபடி மகனை அணைத்த கைகளை மேலும் இறுக்கி கொண்டான்.

"ப்ரஷன்... அம்மாவை பார்க்கும் போது இது மாதிரி எல்லாம் கேட்க கூடாது. இதுவரை அவங்க ரொம்பக் கஷ்டப்பட்டுட்டாங்க. இனி நீ தான் அவங்களைச் சந்தோசமா வச்சுக்கணும்."

"ஷ்யூர்ப்பா... பாஸ்ட் பத்தி பேச மாட்டேன். ஒன்லி ப்ரசன்ட் மட்டும் தான் பேசுவேன்." புரிதலுடன் கூறிய மகனை 'இவன் என் மகன்' என்று பெருமிதம் பொங்க பார்த்தான் அந்தத் தகப்பன்.

"ப்பா, அம்மாவை பார்க்க போகலாமா?" சின்னவன் ஆவல் பொங்க கேட்டான். இத்தனை வருடங்கள் மனதில் பூட்டி

வைத்த ரகசிய கதைகளை அன்னையிடம் பகிர்ந்து கொள்ளும் ஆர்வம் அவனிடம்...

இப்போது மனைவி இருக்கும் நிலையைப் பார்த்தால் மகன் பயந்து போவான் என்று எண்ணிய சிவகுமரன், "இப்போ இல்லை ப்ரஷன்... உனக்கு லீவ் விடும் போது... இப்போ நீ உன் எக்சாமை நல்லபடியாக எழுது." என்று கூற...

"ஓகேப்பா..." என்று ப்ரஷன்ஜித் சந்தோசத்துடன் தலையாட்டினான்.

"இனி கொஞ்ச நாளைக்கு என்னால் அடிக்கடி வீட்டுக்கு வர முடியாது. அதனால் நீ அடம்பிடிக்காம நல்ல பிள்ளையா இருக்கணும்." என்று மகனுக்கு அறிவுறுத்தியவன் மருத்துவமனைக்குக் கிளம்பினான்.

****************************

ஒரு வாரம் அபிஷரிகா கண் விழிப்பதும், மயங்குவதுமாக இருந்தாள். ஒரு வாரம் கழிந்த நிலையில் அன்று தான் அபிஷரிகா முழுவதுமாக உணர்வுபெற்று விழிகள் திறந்தாள். தான் பிழைத்தது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதைவிடக் கணவன் தன்னருகிலேயே இருந்தது அவளுக்கு வேதனையாக இருந்தது. விபத்து நடந்து சிகிச்சை பெறும் முன் சிவகுமரன் அழுதபடி அவளைக் காண வந்த காட்சி அவளுள் புகைப்படலமாய் எழுந்தது. அதன் பின் தான் அவனை முத்தமிட்டது நினைவுக்கு வந்து அவளை வெட்கம் கொள்ளச் செய்தது. 'மட்டி, மட்டி... என்ன காரியம் பண்ணியிருக்க? இப்போ இவன் முகத்தில் எப்படி விழிப்பது?' என்று அவள் தன்னைத் தானே திட்டி கொண்டிருந்தாள்.

"காலில் எலும்பு முறிவு... கவலைப்பட ஒன்றுமில்லை. சரியாகிரும்ன்னு டாக்டர் சொல்லியிருக்காங்க." மனைவியின் விழிகள் அவளது கால் கட்டில் நிலைத்திருப்பதைக் கண்டு சிவகுமரன் அப்படிக் கூற... அப்போது தான் அவள் தனது நிலையை உணர்ந்தாள். வலதுகாலில் போடப்பட்டு இருந்த பெரிய கட்டு அவன்

சொன்னதை நிரூபித்தது. வலி தெரியமாலிருக்க மருந்து உட்கொண்டு இருந்ததால் அவளுக்கு வலி தெரியவில்லை.

'கடவுளே, இன்னும் என்னை என்னென்ன அவஸ்தைப்பட வைக்கப் போகின்றாயோ?' என்று வேதனையுடன் விழி மூடியவளுள் கழிவிரக்கம் சுரந்தது.

"எல்லாம் சரியாகிரும் அம்முலு." கணவனது 'அம்முலு' என்ற அழைப்பில் அவள் விலுக்கென்று விழிகளைத் திறந்தாள். ஒற்றை அழைப்பு அவனது உயிர்க்காதலை பறைச்சாற்ற போதுமானதாய் இருந்தது. இதை இத்தனை நாள் அவள் புரிந்து கொள்ளாது போனது தூரதிர்ஷ்டமே...!

தன்னையே பார்த்துக் கொண்டிருந்த மனைவியைப் பார்த்து அவன் வாஞ்சையுடன் புன்னகைக்க... அவள் தான் பதிலுக்குப் புன்னகைக்க முடியாது தடுமாறினாள். அவளது தடுமாற்றத்தை உணராதவன் போல் அவன் அவள் அருகே அமர்ந்து அவளது தலையை வருடி கொடுத்தான்.

"ரொம்ப யோசிக்காதே..." அவன் சொல்லி கொண்டிருக்கும் போதே அறை கதவு தட்டப்பட்டது. அவன் அவளை விட்டு விலகாது திரும்பி பார்த்தான்.

ஒரு இளம்பெண் அறை கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள். அவள் அணிந்திருந்த வெள்ளை மேலாடை அவள் ஒரு மருத்துவர் என்று அடையாளம் காட்டியது. அவள் பெயர் நந்தனா... அபிஷரிகா நந்தனாவை அடையாளம் கண்டு கொண்டாள். வேணி ஆகாஷ், யமுனா நிச்சயத்தின் போது கூறிய வார்த்தைகளைக் கொண்டு அவள் நந்தனா பற்றிய முழுவிவரங்களையும் சேகரித்து விட்டாள். நந்தனா கணவனுக்கு ஏற்றவள் என்று நம்பிய பிறகே அவள் விவாகரத்திற்குச் சம்மதித்தது. சிவகுமரனுக்கு நந்தனாவை அடையாளம் தெரியவில்லை. அவன் முன்னே பின்னே அவளைப் பார்த்திருந்தால் தானே.

"ஹாய் மிஸ்டர். சிவகுமரன்... நீங்க எப்படி இங்கே?" என்று கேட்டுக் கொண்டே வந்த நந்தனா படுக்கையில் இருந்த அபிஷரிகாவை கண்டதும் அவளுக்கு எல்லாம் புரிந்து

போனது. ஏனெனில் நந்தனாவுக்குச் சிவகுமரன், அபிஷரிகா பற்றி எல்லாம் சொல்லப்பட்டு இருந்தது. சிவகுமரன் நந்தனாவை புரியாது பார்த்தபடி எழுந்து நின்றான்.

"நீங்க...?" அவன் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்.

"ஐயம் நந்தனா... டாக்டர். நந்தனா." என்றவள் அவனுக்கு இருகரங்கள் கூப்பி வணக்கம் தெரிவித்தாள். அன்னை கூறிய அவளது பெயர் கூட அவனுக்கு நினைவில் எழவில்லை.

"ஓ... சீஃப் டாக்டர் சொன்ன ஆர்த்தோ ஸ்பெசலிஸ்ட் நீங்க தானா? வாங்க டாக்டர்." என்று அவன் அவளை வரவேற்க... இப்போது அவள் மனதிற்குள் துணுக்குற்றவளாய் குழப்பத்துடன் அவனைப் பார்த்தாள். இருந்தாலும் அவனைக் கண்டு புன்னகை புரிந்தவள்,

"எஸ்... அது நான் தான்..." என்றவள் தன்னை அவனிடம் காட்டி கொள்ளாது அபிஷரிகாவை பரிசோதித்தாள்.

சிவகுமரனுக்கு நந்தனாவை பற்றித் தெரியாது இருப்பது கண்டு அபிஷரிகா என்ன மாதிரி உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை. அவள் பார்த்திருந்த ஆண்கள் எல்லாம் மனைவி அருகில் இருக்கும் போதே மற்ற பெண்களைக் காமத்துடன் பார்ப்பவர்கள்... அத்தகைய ஆண்கள் மத்தியில் அவளது கணவன் சற்று வித்தியாசமானவனே...! அவளுக்குக் கணவனை நினைத்துப் பெருமையாக இருந்த அதே சமயம் வேதனையாகவும் இருந்தது. இவ்வளவு அருமையான கணவனுடன் வாழ அவளுக்குக் கொடுத்து வைக்கவில்லையே. அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது.

"போன்ஸ் ஜாயினாகக் கொஞ்ச நாட்கள் எடுக்கும். மற்றபடி எந்தப் பிரச்சனையும் இல்லை." என்று சிவகுமரனிடம் கூறிய நந்தனா தான் யார் என்பதைக் காட்டி கொள்ளாது அவனிடம் இருந்து விடைபெற்றாள்.

"டாக்டர் சொன்னதைக் கேட்ட தானே... கவலைப்படாம இரு..." என்ற சிவகுமரனை கண் இமைக்காது பார்த்தவள்,

'நீ பக்கத்தில் இருக்கும் போது எனக்கு என்ன கவலை சிவூ...?' என்று தனக்குள் கூறி கொண்டாள்.

"டாக்டர் ரொம்ப அழகாயிருக்காங்கல்ல..." மனைவி திடுமெனக் கூறிய வார்த்தையில் சிவகுமரன் திடுக்கிட்டு போய் அவளைப் பார்த்தான்.

"சொல்லு சிவூ? அழகா இருக்காங்கல்ல..."

"தெரியலை..." என்றவன் அவளுக்காகச் சூடாகப் பால் கலந்து கொண்டு வந்து கொடுத்தான். அதைக் குடிக்காது அவனைப் பார்த்தவள்,

"அதெப்படி தெரியாது போகும். பார்த்தாலே தெரியுதே..." என்று இடக்குமடக்காகக் கேட்டவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"நான் பார்க்கலை..." என்றான் அழுத்தமான குரலில்...

"மிஸ் பண்ணிட்ட சிவூ..." என்றவளை கண்டு அவனது விழிகள் கேள்வியாய்ச் சுருங்கியது.

"நீ டாக்டரை சைட் அடிக்கும் பாக்கியத்தைத் தவற விட்டுட்டேன்னு சொன்னேன்." என்றவளை கண்டு அவன் ஒன்றும் பேசாது பாலை புகட்டினான். அவளோ அவனை யோசனையுடன் பார்த்தபடி பாலை பருகினாள். அவனும் அதே போல் யோசித்துக் கொண்டிருந்தான். மனைவியின் 'பொசசிவ்னஸ்' குணம் அவனுக்கு நன்கு தெரியும். அப்படியிருந்தும் அவள் இப்படிப் பேசுகிறாள் என்றால்...??? அவனுள் எச்சரிக்கை மணி அடித்தது. ஆனாலும் அவன் அமைதி காத்தான்.

அதன் பின்னர்க் கடந்த மணித்துளிகளில் இருவருமே கடந்த காலத்தைப் பற்றிப் பேசவில்லை. விலக நினைத்திருக்கும் அவள், கடந்த காலத்தைப் பற்றிப் பேச விரும்பவில்லை. வாழ நினைக்கும் அவன், கடந்த காலத்தைப் பற்றிப் பேசி இப்போது இருக்கும் நிலையை

மோசமாக்கி கொள்ள விரும்பவில்லை. அவள் அவனை விட்டு விலகி செல்ல நினைக்க... அவனோ வாழ வேண்டி அவளை நெருங்கி வந்தான்.

சிறிது நேரத்தில் அவள் மருந்தின் வீரியத்தில் நன்கு உறங்க துவங்க... அவன் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தான். அவளது மனதில் என்ன இருக்கிறது? என்று அவனுக்குத் தெரியவில்லை. என்ன இருந்தாலும் அவனது வாழ்வு அவளுடனே... அதில் அவன் உறுதியாக இருந்தான். மீண்டும் அவள் கண்விழித்த போது சிவகுமரன் அவளிடம் வந்து,

"சாப்பிடுறியா? இப்போது திட உணவு எடுத்துக்கலாம்ன்னு சொல்லியிருக்காங்க..." என்று கேட்க...

"சிவூ..." என்று அவள் அவஸ்தையுடன் அவனை அழைத்தவள்,

"நர்ஸ் யாராவது இருந்தால் கூப்பிடு..." என்க...

"ஏன்...?" அவன் புரியாது அவளைப் பார்த்தான். அவளுக்கு இயற்கை உபாதையில், இயலாமையில் கோபம் வந்தது.

"சொன்னால் கேள்... போய் நர்ஸ் யாராவது இருந்தால் கூட்டிட்டு வா..." என்று கோபமாய்க் கத்தியவளை ஒரு நொடி பார்த்தவன் பின்பு அவளுக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு அவள் அருகில் வர...

"வேண்டாம் சிவூ..." மறுப்பாய் தலையசைத்தவளின் விழிகளில் இருந்து கண்ணீர் விடாது வழிந்தது.

"நான் உன் கணவன் தானே... உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன?" என்று அவன் கேட்க...

"நமக்கு விவாகரத்தாகப் போகிறது..." அவள் மெல்ல முணுமுணுக்க...

"இன்னுமாகவில்லையே..." என்றவன் அவளுக்கு எல்லாம் சரி செய்து கொடுத்தான். அந்த நொடி அவளது அகங்காரம், திமிர் எல்லாம் அவளை விட்டு போயிற்று. ஏற்கெனவே

காதலாய் அவனிடம் சரணடைந்து இருந்தவள் இப்போது சேயாய் அவனிடம் சரணடைந்தாள்.

அடுத்து வந்த நாட்கள் சிவகுமரன் அவளுக்குப் பணிவிடைகள் செய்ய... அவள் மறுக்காது அதை ஏற்றுக் கொண்டாள். அவனும் சிறிதும் முகம் சுளிக்காது அவளுக்கு அனைத்தும் செய்தான். இப்போது அவள் சற்று தேறி வந்திருந்தாள். தனக்காகப் பார்த்து பார்த்துப் பணிவிடை செய்பவனுக்குத் தான் என்ன கைம்மாறு செய்வது? என்று அவள் தனக்குள் யோசித்துக் கொண்டே இருந்தாள். இன்னும் சில நாட்களில் அவள் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அதற்குள் அவள் அவர்களது உறவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தினமும் அவளைப் பார்க்க வரும் நந்தனா சிவகுமரனுடன் ஆர்வத்துடன் பேசுவதைப் பார்க்கும் போது அவளுக்குக் கோபம் வரும் அதேசமயம் இருவரது ஜோடி பொருத்தத்தையும் கண்டு அவள் ரசிக்கத்தான் செய்வாள். வெவ்வேறான மனநிலையில் இருந்தவள் தனது மனம் மாறும் முன்னர் அவனுக்கு நல்லது செய்ய நினைத்தாள். இல்லையென்றால் காதல் கொண்ட மனம் வெட்கத்தை விட்டு அவனிடம் காதல் யாசகம் வேண்டி கெஞ்சும் அபாயம் இருக்கிறது.

அன்று அபிஷரிகா சிவகுமரனிடம் மெல்ல பேச்சு கொடுக்க ஆரம்பித்தாள்.

"சிவூ..."

"சொல்லு அம்முலு..."

'அம்முலுன்னு கூப்பிட்டு என்னைக் கொல்லாதேடா.' என்று மனதிற்குள் துன்பமாய் அரற்றியவள்,

"நந்தனா பத்தி என்ன நினைக்கிற...?" என்று கேட்க...

"நினைக்கிறதுக்கு என்ன இருக்கிறது?" அவன் எச்சரிக்கையுடன் பதில் அளித்தான்.

"உன் அம்மா உனக்குப் பார்த்து இருக்கும் பெண் அவள்... இப்போது சொல்... அவளைப் பத்தி நீ என்ன நினைக்கிற...?" அவன் ஒன்றும் சொல்லாது இரு கைகளையும் கட்டி கொண்டு அவளைக் கூர்ந்து பார்த்தபடி அமர்ந்திருந்தான்.

"சிவூ, நீ நந்தனாவை கல்யாணம் பண்ணிக்கோ... அவள் தான் உனக்குச் சரியான பொருத்தம். உன்னை மாதிரியே பொறுமை, நிதானம், சிரிச்ச முகமாக இருக்கிறாள்." இதைச் சொல்லும் போதே அபிஷரிகாவின் விழிகள் கலங்கியது. அவள் மனதிலோ தாங்கொண்ணா துக்கம் எழுந்தது. கணவன், கயவன் என்றால் அவனை விலக்கி வைக்கலாம்... ஆனால் கணவன், காதலன் என்றால் அவனை விலக்கி வைப்பது கொடுமை அல்லவா!

அவளையே பார்த்திருந்த சிவகுமரனின் விழிகளில் இருந்து அவளது விழிகளில் துளிர்த்த விழிநீர் தப்பவில்லை. அதைக் கண்டு அவனது மனம் வேதனை அடைந்தது. அவளுக்குப் பதில் கூறாது அவள் அருகே கைகளைக் கொண்டு வந்து அவளது முகத்தைத் தனது கைகளில் தாங்கியவன் அவளது விழிகளோடு தனது விழிகளைக் கலக்கவிட்டு,

"வலிக்குதா?" என்று கேட்டவனின் இரு கைகளின் கட்டை விரல்கள் உயர்ந்து அவளது விழிகளின் ஓரம் துளிர்த்த கண்ணீரை மென்மையாகத் துடைத்துவிட்டது. அவளது வலியை உணர்ந்தவனின் மனதில் அதைவிடப் பெரும் வலி எழுந்தது.

எங்கே வலிக்கிறது? என்று அவனும் கேட்கவில்லை. இங்கே வலிக்கிறது என்று அவளும் பதில் கூறவில்லை. ஆனாலும் வலி எங்கே? என்பதை இரு காதல் நெஞ்சங்களும் உணர்ந்திருந்தது.

"ம், ரொம்ப..." என்றவள் எங்கே? என்று சொல்லாது அமைதி காத்தாள். அவனும் அவளையே பார்த்திருந்தான். பின்பு அவன் பெருமூச்சு விட்டபடி அவளை விட்டு விலகி,

"நீ என்ன சொன்னாலும் நான் கேட்பேன் அம்முலு. இப்போது என் திருமணத்தைப் பத்தி கேட்கிறாய். உன் வார்த்தையை மீறும் தைரியம் எனக்கு என்றுமே இருந்தது இல்லை. உன் ஆசையை நிறைவேற்றி வைக்கிறேன்." என்று புன்னகையுடன் கூறியவனின் விழிகளில் இருந்தது என்ன...!!!

கணவனது வார்த்தைகள் அவளுள் உயிர் வலியை ஏற்படுத்திய போதும்... அவனுக்காக அவள் அந்த வலியை தாங்கி கொண்டு வெளியில் புன்னகை புரிந்தாள்.

"ரொம்பச் சந்தோசம் சிவூ..." மகிழ்ச்சி போல் வலியுடன் கூறியவளை கண்டு அவனது விழிகள் இடுங்கிய போதும் அவனது புன்னகை மாறவில்லை.

தொடரும்...!!!

அத்தியாயம் : 25

தன்னருகில் அமர்ந்திருந்த கணவனைக் காதலோடு வருடியது அபிஷரிகாவின் விழிகள்... இருவரும் சேர்ந்து 'கேரவன்' மூலம் அவர்களது கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்தனர். அவளுக்கு விபத்து நடந்து ஒரு மாத காலமாகி விட்டது. அவளை வீட்டில் வைத்து வைத்தியம் பார்க்க சொல்லி மருத்துவமனையில் இருந்து அனுப்பி வைத்துவிட்டனர். சென்னையில் இருக்கும் அவளது இரு வீட்டிற்கும் அழைத்துச் செல்லாது சிவகுமரன் அவளை ஓய்வு எடுப்பதற்காகக் கிராமத்திற்கு அழைத்துச் செல்கின்றான்.

"இங்கே இருந்தால் மீடியாக்காரங்க தொந்தரவு இருக்கும். நாம் நம்ம கிராமத்துக்குப் போயிரலாம்." என்று அவளிடம் உறுதியாகக் கூறியவன் பொன்னம்பலம் மூலம் அன்றே ஊடகங்களுக்கு முறையாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டு விட்டு அவளை அழைத்துக் கொண்டு வந்துவிட்டான். ஊடகங்களைப் பொறுத்தவரையில் அபிஷரிகா ஓய்விற்காக வெளிநாட்டிற்குச் சென்றிருக்கிறாள் என்று மட்டுமே சொல்லப்பட்டு இருந்தது.

தனக்காகப் பார்த்து பார்த்து ஒவ்வொன்றையும் செய்யும் கணவனைக் கண்டு அவளுக்குக் காதலோடு பெருமிதமும் சேர்ந்து கொண்டது. அவள் அவனைத் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி சொன்னவுடன் அவன், 'உனக்காகத் திருமணம் செய்து கொள்கின்றேன்.' என்று கூறிச் சம்மதித்தது கண்டு அவளுக்குக் கோபம் வரவில்லை. மாறாகக் கணவன் மனதில் தான் இருந்த போதும் தனக்காக அவன் திருமணம் செய்யச் சம்மதித்தது கண்டு அவளுக்குச் சந்தோசமாகத் தான் இருந்தது. இதோ இப்போது அவள் அவனிடம் 'செத்துப்போ' என்று கூறினால் கூட அடுத்த நொடி அவன் உயிரை விட்டு விடுவான். அது அவளுக்கு நன்கு தெரியும். அந்தளவிற்கு அவன் தன்னை நேசிக்கின்றான் என்பதை உணர்ந்தவளுக்கு அவன் மீதான நேசம் பல்கி பெருகியது.

"என்ன அம்முலு...?" அவளது பார்வையை உணர்ந்தார் போன்று சிவகுமரன் அவளைத் திரும்பி பார்த்தான்.

"ஒண்ணுமில்லை சிவூ..." என்று அவள் தலையசைக்க... அவளை விழிகள் இடுங்க பார்த்தவன் ஒன்றும் பேசாது தனது கையை நீட்டி அவளை அணைத்து தனது நெஞ்சத்தில் சாய்த்துக் கொண்டான். அங்கே அவர்கள் இருவரை தவிர வேறு யாருமில்லை. ஓட்டுநர் மட்டும் வண்டி ஓட்டி கொண்டிருந்தார். அதனால் அவளும் நன்றாக அவனது நெஞ்சில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். அவளது செய்கையில் அவனது உதடுகளில் புன்னகை மலர்ந்தது. இருவரது மனதிலும் அவர்களது மகன் அபிஷரிகாவை சந்தித்த தினம் ஓடியது.

அவள் ஓரளவு குணமாகியதும் அவளைக் காண்பதற்காகச் சிவகுமரன் ப்ரஷன்ஜித்தை அழைத்து வந்தான். மகனை கண்டதும் அவளது விழிகளில் கண்ணீர் நிரம்பியது. தான் அவனைத் தவிர்த்த கணங்களை நினைத்து அவளது மனம் வேதனையில் தவித்தது. மகனுக்குப் பாலூட்ட மறுத்த அவளது நெஞ்சங்கள் இப்போது கனத்து பாரமாகி போனது போன்ற ஒரு உணர்வு அவளுள். தாய் என்ற சொல்லுக்கே அவமானம் அல்லவா அவள்... குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது.

"ம்மா..." என்றழைத்த ப்ரஷன்ஜித் ஓடிவந்து அவளை அணைத்துக் கொண்டான். எந்தக் கேள்வியும் கேட்காது தன்னை 'அம்மா' என்றழைத்த மகனை கண்டு அவள் மனம் நெகிழ்ந்து போனவளாய் தானும் அவனை இறுக அணைத்து கொண்டாள்.

"ப்ரஷூ, ஐயம் சாரி... சாரி..." என்று முணுமுணுத்தவளின் தோளின் மீது சிவகுமரன் ஆறுதலாகக் கை வைத்தான். கணவனை ஏறிட்டு பார்த்தவளின் விழிகள் கலங்கி போனது.

"பழசை நினைக்காதே அம்முலு." என்றவன் விழிகளால் மகனை கவனிக்கும்படி கூறினான்.

"அம்மா மேல் கோபம் இல்லையே." என்று கேட்ட அன்னையைப் பார்த்த ப்ரஷன்ஜித் பின்பு தனது தந்தையைப் பார்த்தான். சிவகுமரன் மகனை கண்டு 'இல்லை' என்பது போல் தலையசைக்க... அதைப் பின்பற்றி மகனும் 'இல்லை' என்று கூறினான்.

"நீ இல்லைன்னு சொன்னாலும் நான் செஞ்சது தப்பு தான் ப்ரஷூ... நான் உன்னை விட்டுப் போயிருக்கக் கூடாது. அந்த நேரம் நான் மூளை மரத்துப் போய்ச் செயலிழந்து போய்விட்டேன். மீண்டும் சுயவுணர்வு அடைந்த போது என்னை விட்டு எல்லாம் போயிருந்தது. எல்லாமே கைவிட்டு போயிருந்தது." என்றுரைத்தவளின் வார்த்தைகளின் அர்த்தம் அப்போது அவனுக்குப் புரியவில்லை. புரியும் போது நிச்சயம் அவன் குற்றவுணர்ச்சியில் தவிக்கப் போகின்றான் என்பது மட்டும் உறுதி...

"ப்ச், அம்முலு..." சிவகுமரன் அவளுக்கு மீண்டும் மகனை ஞாபகப்படுத்த... அவள் தன்னைத் தேற்றிக் கொண்டு மகனை கொஞ்சினாள்.

தந்தையை மறந்து அம்மாவும், மகனும் தங்களுக்கான தனி உலகில் இருந்தனர். ப்ரஷன்ஜித்திற்கு அன்னையிடம் பேச அத்தனை கதைகள் இருந்தது. அவனது வாய் ஓயாத பேச்சு அவனது ஏக்கத்தினை அப்பட்டமாய்ப் பறைச்சாற்றியது. ஆனால் இதுநாள் வரை ஒரு நாள் கூட மகன் தன்னிடம் அவனது ஏக்கத்தினைக் காட்டாது இருந்தது கண்டு சிவகுமரனின் விழிகள் கலங்கியது. இந்தச் சின்ன வயதில் மகன் தனக்காக அவனது அம்மா பாசத்தை அடக்கி கொண்டதை நினைத்து அவனது இதயம் இரண்டாகப் பிளந்தது போல் வலித்தது. மகனுக்காகவாவது தான் அபிஷரிகாவிடம் தழைந்து போயிருக்க வேண்டுமோ? என்று இப்போது அவனுக்குத் தோன்றியது. நடந்து முடிந்ததை எண்ணி வருந்தி பயனில்லை. இனி நடப்பது நன்றாக நடக்க வேண்டும் என்று அவனது மனம் பிரார்த்தித்தது.

அப்போது தன்னைச் சந்தித்த மகன் தன்னிடம் தான் அவனை விட்டுச் சென்றது பற்றி ஒரு வார்த்தை கூடக் கேட்காததற்குக் காரணம் கணவன் மட்டுமே என்பது அவளுக்கு நன்கு தெரிந்திருந்தது. அதை இப்போது நினைத்து பார்த்தவளுக்குக் கணவன் மீது காதல் பெருக்கெடுத்தது.

"ப்ரஷூ என் கிட்ட ஒரு வார்த்தை கூடக் கேட்கலை. ஏன் என்னை விட்டு போனீங்கன்னு...?" அவள் அமைதியை கலைத்து பேச ஆரம்பித்தாள்.

"அவன் மட்டுமா? நானும் தான்..." என்றவன் குனிந்து மனைவியைப் பார்த்தான். அதே நேரம் அவளும் அவனை ஏறிட்டு பார்த்தாள். இருவரது விழிகளும் கலந்தது.

'ஏன் கேட்கலை சிவூ?' அவள் மனதிற்குள் அழுதாள்.

'அதுக்கான காரணத்தை இப்போ கூடச் சொல்ல மாட்டியா அம்முலு?' அவனது மனம் ஊமையாகக் கதறியது.

இருவருமே தங்களது மௌனத்தைக் கலையவில்லை. கலைவதற்கான நேரம் இதுவல்லவோ...!

இருவரும் கிராமத்தில் இருக்கும் வீட்டிற்கு வந்து சேர்ந்த போது மதியமாகி இருந்தது. மனைவியைத் தனது கைகளில் தூக்கி கொண்டு கீழே இறங்கிய சிவகுமரன் பின்பு அவளைச் சக்கர நாற்காலியில் அமர்த்தினான். அங்குப் பத்மா இருவரையும் வரவேற்று ஆரத்தி எடுத்தாள்.

"பாவா நல்லாயிருக்கீங்களா?" என்று அவனிடம் கேட்டவள் அவளிடம்,

"சின்னம்மா, இப்போ உடம்புக்கு பரவாயில்லையா?" என்று அவளது நலம் விசாரித்தாள். இப்போது அவளுக்குப் பத்மா மீது கோபம் வரவில்லை.

"ம், நல்லாயிருக்கேன்... நீ எப்படியிருக்க? உன் கணவன், குழந்தைகள் எல்லோரும் நல்லாயிருக்காங்களா?" என்று

கேட்டவளை பத்மா வாயை பிளந்து அதிசயமாகப் பார்த்தாள்.

"சின்னம்மா, என் கிட்டேயா பேசுனீங்க?" அவள் ஆச்சரியமாய் அபிஷரிகாவை பார்த்தாள்.

"ம், உன்னிடம் தான் பேசினேன்." என்றவள் கலகலத்து சிரிக்க... மனைவியின் சிரிப்பினை தாயின் வாஞ்சையுடன் பார்த்திருந்தான் சிவகுமரன்.

"இப்படியே பேசிட்டு இருந்தால் எப்படி? பத்மா, போய்ச் சாப்பாடு எடுத்து வை..." என்று பத்மாவிடம் உத்தரவிட்டவன் அவள் சென்றதும் மனைவியிடம் திரும்பி,

"உள்ளே போகலாமா...?" என்று கேட்க... அவள் சம்மதமாய்த் தலையசைத்ததும் அவன் நாற்காலியை உருட்டி கொண்டு சென்றான்.

"பத்மா எப்படி இங்கே?"

"நான் தான் வரவழைத்தேன். எனக்கு உன்னைப் பார்க்கவே நேரம் சரியாக இருக்கும். என்னால் வீட்டு வேலை பார்க்க முடியாது. நாம் இங்கே இருக்கும் வரை அவளை இங்கே இருக்கச் சொல்லியிருக்கிறேன்."

"அவளுடைய குழந்தைகள்?"

"அவளுடைய அம்மா பார்த்து கொள்வார்கள்."

அதற்கு மேல் அவள் ஒன்றும் பேசவில்லை. இருவரும் வீட்டிற்குள் வந்தனர். அறைக்குள் நுழைந்ததும் அவன் அவளை நாற்காலியில் இருந்து தூக்கி கட்டிலில் அமர வைத்தான்.

"சிவூ..."

"என்னம்மா...?"

"பாத்ரூம் போகணும்..." என்றவளை கண்டு முகம் சுளிக்காது அங்கேயும் அவளைத் தூக்கி சென்று உள்ளே

விட்டவன் வெளியில் நின்று கொண்டான்.

மருத்துவமனையில் நோயாளியாய் இருந்த வரை அவனது சேவகத்தை அனுமதித்தவள் கொஞ்சம் உடல் தேறியதும் கூச்சம் காரணமாகத் தனிப்பட்ட வேலைகளைத் தானே செய்யப் பழகி இருந்தாள். அவளது உணர்வுகளை மதித்து அவனும் ஒன்றும் சொல்லவில்லை.

"சிவூ..." அவள் குளியலறையில் இருந்து அழைக்க... அடுத்த நொடி அவன் உள்ளே சென்று அவளைத் தூக்கி கொண்டு அறையினுள் வந்தான்.

"உன்னை ரொம்பப் படுத்துறேன் இல்லையா?" என்றவளை பார்த்தவன்,

"முதலில் படுத்தியதற்கு இது கொஞ்சம் குறைவு தான்..." என்க..

"சிவூ..." என்று அவள் கண்கள் கலங்க அவனைப் பார்க்க... அவனது இதழோரம் சிரிப்பில் துடித்ததைக் கண்டு அவளுக்கும் சிரிப்பு வந்தது.

"கொஞ்ச நேரத்தில் பயமுறுத்திட்ட சிவூ..." என்றவளை அவனது கைகள் ஆதரவாய் அணைத்துக் கொண்டது. அதை உணர்ந்தவள் எந்தவித எதிர்ப்பும் காட்டாது அவனது அணைப்பில் பாந்தமாய் அடங்கினாள்.

அவள் அவனைத் திருமணம் செய்யச் சொன்னவள் தான்... அவனும் அதற்குச் சம்மதித்தவன் தான். ஆனாலும் இருவரும் ஒருவரை விட்டு ஒருவர் விலகி செல்லவில்லை. அதற்குச் சாக்கு, அவளுக்கு உடம்பு சரியில்லை என்பது...

மறுநாள் காலையில் சிவகுமரன் அபிஷரிகா குளிப்பதற்குத் தேவையானவற்றை எடுத்து வைத்தவன், அவளைக் குளியறையில் இருந்த நாற்காலியில் அமர வைத்துவிட்டு, அடிப்பட்ட அவளது காலை அருகில் இருந்த குளியல் தொட்டி மீது வைத்தவன்,

"காலை மட்டும் நனைக்காதே..." என்று அவளிடம் அறிவுறுத்திவிட்டு குளியலறையை விட்டு வெளியேறினான். மேலும் அங்கேயே இருந்து அவளைச் சங்கடப்படுத்த அவன் விரும்பவில்லை.

அவளது தலையில் இருந்த காயம் இப்போது நன்கு ஆறியிருந்தது. நெற்றியோடு சேர்ந்து அடிப்பட்டு இருந்ததால் அவளது தலைமுடி தப்பித்தது. இப்போது நெற்றியில் இருந்த காயம் ஆறியிருந்த போதும் அதன் தழும்பு இன்னமும் மிச்சமிருந்தது.

அபிஷரிகா காலை நனைக்காது கவனமாகக் குளித்து முடித்தவள் உடைகளை மாற்றிக் கொண்டு கணவனை அழைத்தாள். சிவகுமரன் மீண்டும் வந்து அவளை அறைக்குள் தூக்கி சென்று கட்டிலில் அமர வைத்தவன் அவளது தலையில் சுற்றியிருந்த துண்டை அவிழ்த்து அவளது தலைமுடியை துவட்டி விட ஆரம்பித்தான்.

"எனக்குக் காலில் தான் அடிப்பட்டு இருக்கு சிவூ... கைகள் நன்றாகத் தான் இருக்கு..." என்றவளை குனிந்து பார்த்தவன்,

"அது எனக்குத் தெரியாதாக்கும்... பேசாமலிரு..." என்க...

அதே நேரம் அவளும் அவனை நிமிர்ந்து பார்த்தாள். இருவரது முகமும் வெகு அருகில்... இருவரது இதழ்களும் உரசிவிடும் தூரத்தில்... இருவரது விழிகளும் ஒன்றோடு ஒன்று கலந்து ஸ்தம்பித்துப் போனது. இருவரது மனதில் கடந்து சென்ற காதல் மேகங்கள் பெரும் இடியாய் முழக்கமிட்டு பேரிரைச்சலோடு மழையாய் இருவரது மனதில் காதலை ஆரவாரமாய்ப் பொழிந்தது. அதன் விளைவு அவனது கை அவளது தாடையை இறுக பற்றியது. அவளும் அவனது மனதினை உணர்ந்தவளாய் திகைப்புடன் அவனைப் பார்த்திருந்தாள். வாயை பிளந்தபடி திகைப்புடன் இருந்த மனைவியின் தோற்றம் அவனுள் எல்லையில்லா தாபத்தினைத் தோற்றுவித்த போதும் அவனால் அதைச் செயல்படுத்த முடியவில்லை. அவள் மீது அடங்காத மோகம் இருந்த போதும் அதைவிட

அவள் மீது தணியாத காதல் இருந்தது. அந்தக் காதல் அவனை யோசிக்க வைத்து. முன்பு போல் உணர்வுகளுக்கு அடிமைப்பட்டு அவளை இழக்க அவனுக்கு விருப்பம் இல்லை. அவளது உடலை கவர்வதை விட அவளது உள்ளத்தினைக் கவரவே அவன் பெரிதும் விரும்பினான். அவன் சட்டென்று அவளது முகத்தைத் திருப்பி அவளது கன்னத்தில் அழுத்தமாய்த் தனது இதழ்களைப் பதித்தான். அதில் உணர்வு பெற்றவள் அவனைத் தள்ளிவிட்டாள்.

"நீ என்னிடம் இப்படி எல்லாம் நடக்கக் கூடாது சிவூ..." என்று அவள் கண்டிப்புடன் கூறினாள்.

"ஏன்?"

"நாம் கணவன், மனைவி இல்லை சிவூ... நமக்கு விவாகரத்தாகப் போகிறது."

"என் மனைவிக்கு முத்தம் கொடுத்தேன் என்று நான் சொன்னேன்னா...?" அவன் ஒற்றைப் புருவத்தைத் தூக்கி கேள்வி கேட்க...

"சிவூ..." கணவன் ஏதும் தவறாகக் கூறி விடுவானோ என்று அவள் அவனைப் பயத்துடன் பார்த்தாள். அவனது காதல் மீது மலையளவு நம்பிக்கை இருந்தது. ஆனாலும் அவளுக்கு உள்ளுக்குள் பயமாக இருந்தது. அவனிடம் இருந்து தவறாக ஒரு சொல் வந்தாலும் அடுத்தக் கணம் அவள் தனது உயிரை விட்டு விடுவாள்.

"என்னுடைய முதல் குழந்தைக்கு முத்தம் கொடுத்தேன். மகள்களைப் பெற்ற அப்பாக்களுக்கு மட்டும் தான் தெரியும் முத்தம் காமத்தில் சேர்ந்தது இல்லை என்று... இப்போ நான் உனக்குக் கொடுத்த முத்தம் காமத்தில் சேர்ந்ததல்ல... காதலிலும் சேர்ந்ததல்ல... அன்பு மட்டுமே..." என்றவனது விழிகளில் தாய்மையே நிறைந்து வழிந்தது.

"சிவூ..." அபிஷரிகா உரக்க கத்தியபடி அவனது இடுப்பை கட்டிப்பிடித்துக் கொண்டு அவனது வயிற்றில் முகம்

புதைத்தாள். அவனும் தாயின் வாஞ்சையுடன் அவளை அணைத்துக் கொண்டான்.

நாட்கள் அதன் போக்கில் மெல்ல நகரத் துவங்கியது. சிவகுமரன் அபிஷரிகாவிற்காக மருத்துவரை வீட்டிற்கே வரவழைத்துப் பார்த்தான். அவர் வாரம் ஒரு முறை வந்து அவளைப் பரிசோதித்து விட்டு சென்றார். உடைந்த எலும்பு ஒன்றிணைந்து விட்டதாகக் கூறிய மருத்துவர் இனி கவலை இல்லை என்று கூறிவிட்டார். அதனால் நிம்மதியுற்றவனாய் சிவகுமரன் வீட்டில் இருந்தபடியே தொழிலை கவனிக்க ஆரம்பித்தான்.

அன்று சிவகுமரன் மனைவியை உண்பதற்கு அழைப்பதற்காக அவளது அறைக்குள் வந்தான். அபிஷரிகா பக்கவாட்டில் திரும்பி படுத்திருந்தாள். அவள் போர்த்திருந்த போர்வை விலகியிருந்தது. அவள் அணிந்திருந்த மேல் சட்டை மேலே ஏறியிருக்க... சட்டைக்கும், பாவாடைக்கும் இடைப்பட்ட இடைவெளியில் அவளது இடை பிரதேசம் வெண்மையாகப் பளிச்சென்று தெரிந்தது. அவளது வெண்ணிற இடையில் கருப்பு மலர் போன்று அழகாய் ஒரு மச்சம் பூத்திருந்தது. அதைக் காணும் போது எல்லாம் அவனது உணர்வுகள் தடுமாறும். இதோ இப்போதும் அவனது உணர்வுகள் தடுமாறிப் போனது. அவன் பூனை போல் மெல்ல அவளை நோக்கி அடி மேல் அடி வைத்து நடந்து வந்தான். அவனது கரம் அவளது இடையைத் தழுவும் முன் அபிஷரிகா அவனது வரவை உணர்ந்து திரும்பி பார்த்தாள்.

'அச்சோ, அபி தூங்கலையா?' அவன் மாட்டி கொண்ட தினுசில் திருதிருவென விழித்தான். அவள் அவனையும், அவனது கையையும் மாறி மாறி பார்த்தவள்,

"என்ன சிவா?" என்று கேட்க...

"இல்லை... போர்வை விலகியிருந்தது... அதான் போர்த்தி விடலாம்ன்னு..." அவன் தடுமாற்றத்துடன் இழுத்தான்.

"இதுக்கு எதுக்கு இவ்வளவு தயக்கம்?" என்றவள் தனது சட்டையை இழுத்துவிட்டுக் கொண்டு போர்வையைப் போர்த்திக் கொண்டாள்.

"சாப்பிட போகலாமா?" என்று அவன் கேட்க... அவள் சரியென்று சம்மதம் சொல்ல... அவன் அவளைத் தூக்கி சக்கர நாற்காலியில் அமர்த்தி உணவு கூடத்தை நோக்கி அழைத்துச் சென்றான்.

இருவரும் மௌனமாக உணவு அருந்தினர். அவனது முகத்தில் இருந்த சங்கடம் மறையவில்லை. அதை அவளும் கவனித்துக் கொண்டிருந்தாள்.

"சிவூ, நான் உன்னைத் தப்பா நினைக்கலை. நீ தான் சொல்லியிருக்கியே, நான் உனக்குக் குழந்தை மாதிரின்னு... அப்புறம் எதுக்கு ஃபீல் பண்ற?"

அவன் அவளை நிமிர்ந்து பாராது, "சில விசயங்களை, சில ஞாபகங்களை மறக்க முடியாது அம்முலு... நானும் மனிதன் தான்..." கரகரத்த குரலில் உரைத்தவன் எழுந்து சென்றுவிட்டான்.

அவனது வார்த்தைகள் உணர்த்திய அர்த்தத்தை உணர்ந்தவள் திகைத்து போனாள். அவளையும் அறியாது அவளது கரம் அவளது இடையை வருடியது. அதிலிருந்த மச்சம், அதில் கணவன் இட்ட எண்ணிலடங்கா முத்தங்கள் எல்லாம் ஞாபகத்தில் எழுந்து அவளைப் பெரிதும் இம்சித்தது. சில உணர்வுகள் மனதிற்குப் பிடித்தவர்களிடம் மட்டுமே தோன்றும். அதைச் சொல்லாது சொல்லிவிட்டு சென்ற கணவனைக் கண்டு அவளது மனம் காதலில் கனிந்தது. அவன் அவளையும் மறக்கவில்லை, அவள் சம்பந்தபட்ட விசயங்களையும் மறக்கவில்லை... அவளது முகம் மகிழ்ச்சியில் பூவாய் மலர்ந்து விகசித்தது.

"அம்முலு..." என்றவனது அழைப்பில் அவனை ஏறிட்டு பார்த்தாள் அவள்...

"சாரி..." அவளைத் தனியாக விட்டு விட்டு போனதற்கு வருந்தி மன்னிப்பு கேட்டவன் அவளைக் கை கழுவ செய்து பின்பு திண்ணைக்கு அழைத்து வந்தான்.

அபிஷரிகாவிற்கு அங்கு அமர்ந்திருப்பது மிகவும் பிடிக்கும். வீட்டில் அடைந்து கிடப்பவள் இயற்கையை ரசிப்பது இங்கு அமர்ந்து மட்டுமே... அதே போல் இப்போதும் அங்கே அமர்ந்து கொண்டு சுற்றுப்புறத்தை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தவள் மெல்ல கணவன் புறம் திரும்பி பார்த்தாள். அவன் அமைதியாக எதையோ வெறித்துக் கொண்டிருந்தான். அவனைக் கண்டதும் அவளது முகம் கனிந்தது.

"சிவூ, ப்ரஷூவை இங்குக் கூட்டிட்டு வரலாமே...? எனக்கு ரொம்பப் போர் அடிக்குது." அவனது மனநிலையை மாற்ற எண்ணி அவள் மகனை பற்றிப் பேசினாள். அவளைத் திரும்பி பார்த்தவன்,

"அவனுக்கு லீவு முடிஞ்சு ஸ்கூல் திறந்திருச்சு... லீவு போட்டால் வீணே அவனது படிப்பு கெடும்." என்று கூற...

"அதுவும் சரி தான் சிவூ... படிக்க வேண்டிய வயதில் நல்லா படிக்கட்டும்." என்றவள் தொடுவானத்தை வெறித்துப் பார்த்தாள். அவளது முகத்தில் மண்டியிருந்த வேதனையைக் கண்டவன்,

"என்ன அம்முலு? ஏன் ஒரு மாதிரியா இருக்க...?" என்று கேட்க...

"ப்ச், என்னுடைய சின்ன வயசை நினைச்சு பார்த்தேன்." என்றவள் மேலே ஒன்றும் கூறவில்லை. அவள் முதல் முறையாக அவளைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள். இப்படியே அவளைப் பற்றி முழுவதுமாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அவனுக்கு ஒரு உந்துதல் தோன்றியது.

"நீ ஏன் மேலே படிக்கலை? ஃபெயிலானவங்க எல்லாம் மேலே படிக்காமல் இல்லையே. நீ முயற்சி செய்து

இருக்கலாமே அம்முலு. ஏன் செய்யலை?"

"நான் முயற்சி செய்யலைன்னு யார் சொன்னது?" என்று பதிலுக்குக் கேள்வி கேட்டவளை அவன் திகைப்புடன் பார்த்தான்.

"உனக்கு ஒண்ணு தெரியுமா? சின்ன வயசில் நான் ரொம்ப நல்லா படிப்பேன். கிளாஸ் டாப்பர் நான் தான்."

"பின்னே எப்படி டென்த்தில் ஃபெயிலான?" அவன் பரபரப்புடன் கேட்டான். அவனைத் திரும்பி பார்த்தவள் விரக்தியாய் சிரித்தாள்.

"என்னைப் பற்றி முழுமையாகச் சொன்னால் தான் உனக்குப் புரியும் சிவூ... இதுவரை என்னைப் பற்றி நான் யாரிடமும் சொன்னது இல்லை. ஏனோ தெரியலை... உன் கிட்ட சொல்லணும் போலிருக்கு." என்றவள் மெதுவே தனது கடந்த காலத்தைப் பற்றி அவனிடம் கூறலானாள்.

"நானி என் கூடயிருந்த வரை எனக்கு எந்தப் பிரச்சனையும் வரலை. திடீர்ன்னு நானி வேலையில் இருந்து நின்னுட்டாங்க... அப்போ எனக்கு ஐஞ்சு வயசு தான். நான் எப்பவும் நானி கூடத்தான் படுப்பேன். அவங்க என் கூட என் ரூமில் தான் கீழே படுப்பாங்க. நான் அவ்வளவு பெரிய மெத்தையை விட்டுட்டு நானி கூடத்தான் கீழே படுத்துப்பேன். நானி அவங்க கூட எல்லாம் படுக்கக் கூடாதுன்னு எனக்கு எடுத்து சொல்வாங்க. ஆனா நான் கேட்க மாட்டேன். அம்மா வந்து என் கிட்ட, 'இனி நானி வேலைக்கு வர மாட்டாங்க. நீ தனியா தான் உன் வேலைகளைப் பார்த்துக்கணும். தனியா தான் படுக்கணும்.'ன்னு சொன்னாங்க. எனக்கு ரொம்பப் பயமாயிருந்தது. அப்பா கிட்ட போய்ச் சொன்னேன். அவர் அம்மா கிட்ட கேட்டார். அம்மா அப்பா முன்னாடி என்னைப் பார்த்துக்கிறதா சொன்னவங்க, தனியா என் கிட்ட வந்து 'உன்னை நீயே பார்த்துக்கிட்டா தான் நீ தன்னம்பிக்கையோட வளர முடியும்'ன்னு சொன்னாங்க. எனக்கும் அது நல்லதுன்னு பட்டது. அதனால் சரின்னு சொன்னேன்."

"அம்முலு, ராஜம் அம்மா ஏன் வேலையில் இருந்து நின்னாங்கன்னு உனக்குத் தெரியுமா?"

"அவங்க வேற வேலை கிடைச்சுப் போயிட்டதா சொன்னாங்க." என்றவளின் புருவங்கள் கேள்வியாய்ச் சுருங்கியது.

"அது பொய்..." என்றவன் அன்று சிங்கப்பூரில் ராஜம் அவனிடம் சொன்னதை அவளிடம் சொன்னான். அதைக் கவனமாகக் கேட்டு கொண்டவள் முகத்தில் வேதனை படர்ந்தது.

"நினைத்தேன்..." என்றவளை புரியாது பார்த்தவன்,

"என்னன்னு?" என்று கேட்டான்.

"தனுஜாவோட திட்டமாகத் தான் இது இருக்கணும்ன்னு..."

தனுஜாவை வார்த்தைக்கு வார்த்தை அம்மா என்று அழைப்பவள் இப்போது பெயர் சொல்லி அழைப்பது கண்டு அவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

"அதிசயமா இருக்கு... நீ இப்படிச் சொல்வது?"

"பட்டால் தானே புத்தி வருகிறது." என்றவள் அமைதியாகி போனாள்.

"உனக்கு ஒண்ணு தெரியுமா அம்முலு...?"

"என்ன சிவூ?" அவள் கேள்வியாய் அவனைத் திரும்பி பார்த்தாள்.

"நான் சொல்வதைக் கேட்டு நீ வருத்தப்படக் கூடாது. வேதனைப்படக் கூடாது." என்று பீடிகை போட்டவனைக் கண்டு,

"இதுக்கு மேல் வருத்தப்பட, வேதனைப்பட என் வாழ்க்கையில் ஒன்றுமில்லை சிவூ... நீ சொல்லு..." என்று அவள் அவனை ஊக்குவிக்க...

சிவகுமரன் அவளது அன்னை கீர்த்தனாவை பற்றிக் கூற ஆரம்பித்தான். அதைக் கேட்க கேட்க அபிஷரிகாவின் நெஞ்சில் பாரமேறிய ஒரு உணர்வு... தாய்க்கும், சிற்றன்னைக்கும் இருக்கும் வித்தியாசம் இப்போது அவளுக்குப் புரிந்தது. கானல் நீரை நம்பி ஏமாந்த முட்டாள் அவள்...

"அம்முலு..." அவன் அவளை உலுக்கவும் தான் அவளுக்கு நிகழ்காலம் உறைத்தது.

"இந்த விசயம் உனக்கு வருத்தமாகத் தான் இருக்கும். ஆனாலும் சொல்லாமல் இருக்க முடியலை." அவன் மிகுந்த வருத்தத்துடன் கூறியதை கண்டு புன்னகைத்தவள்,

"என் வாழ்க்கையில் மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது...? ஏன்? ஏன்? ஏன்? என்கிற கேள்விகள் என்னை எப்போதும் துரத்தும். ஆனால் அதற்கு இப்போது தான் விடை கிடைத்திருக்கிறது. ரொம்பத் தேங்க்ஸ் சிவூ... இதுக்காக நீ ஏன் வருத்தப்படுற...? இதெல்லாம் தான் என்னை வாழ்க்கையைத் தைரியமா எதிர்கொள்கிற தன்னம்பிக்கை மனுசியா மாத்தியிருக்கு." என்றவளின் விழிகளில் வலி தெரிந்தது.

"ஆனால் சில விசயங்களில் இருந்து என்னால் மீள முடியலை..." என்று வேதனையுடன் கூறியவளை கண்டு அவனும் வேதனை அடைந்தான்.

"ப்ச், எதுவும் பேச வேண்டாம்... விடு அம்முலு." என்று அவன் அவளைத் தேற்ற... அவளும் அமைதியாகி போனாள். அவளுடன் அவளது ரகசியமும் புதைந்து போனது.

*************************

"இன்னும் கொஞ்சம் சாப்பிடு அபி." தாத்தா பொன்னம்பலம் ஆப்பிள் பழத்தை வெட்டி பேத்திக்கு ஊட்டியபடி பாசத்தில் உருகி கொண்டிருக்க... காவேரி பேத்தியை மடியில் சாய்த்துக் கொண்டு கொஞ்சி

கொண்டிருந்தார். நொடியில் எல்லாமே தலைகீழாய் மாறிய ஒரு உணர்வு அபிஷாரிகாவினுள்...

இதற்கு எல்லாம் காரணமான கணவனை அவளது விழிகள் தேடியது. அவன் தனது அன்னையுடன் பேசி கொண்டிருந்தான். வேணி மட்டும் அவளிடம் எதுவும் பேசவில்லை. அமைதியாக இருந்தார். அவளும் அவரிடம் எதுவும் பேசவில்லை. ப்ரஷன்ஜித் அத்தைகளுடன் விளையாடி கொண்டிருந்தான்.

"போதும் தாத்தா..." என்றவள் பாட்டியின் மடியில் இருந்து எழுந்தமர்ந்தாள்.

"இன்னும் உடம்பு தேறலை பாரு..." என்று அவளது குச்சி கையை எடுத்து ஆட்டியபடி காவேரி கூற...

"இதுக்குப் பெயர் சீரோ சைஸ்... எவ்வளவு கஷ்டப்பட்டு உடல் எடையைக் குறைத்தேன் தெரியுமா பாட்டி?"

"என்ன சைஸோ? அப்போ தான் அழகாயிருந்த அபி..." காவேரி குறைப்பட்டுக் கொள்ள...

"பாட்டி... இப்போ நான் அசிங்கமா இருக்கேனா?" என்று அவள் இடுப்பில் இரு கைகளை வைத்தபடி பாட்டியை முறைத்தாள்.

"நீ எப்படி இருந்தாலும் அழகு தான் அம்முலு..." திடுமெனக் காதுக்கருகில் ஒலித்த கணவனது குரலில் அவள் திடுக்கிட்டு திரும்பினாள். சாசர் போன்று விரிந்திருந்த மனைவியின் விழிகளை ஊடுருவி பார்த்தபடி பொன்னம்பலம் அருகில் வந்தமர்ந்தான் சிவகுமரன்.

"என்ன அம்முலு, நான் சொல்வது சரி தானே?" என்று கேள்வி கேட்டவனைக் கண்டு அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

"போ சிவூ..." என்றவள் அங்கிருந்து ஓடிவிட்டாள்.

"ஹேய், பார்த்து, பார்த்து, கவனம்..." அவனது எச்சரிக்கை குரல் அவளைப் பின்தொடர்ந்தது.

ஆம், இப்போது அபிஷரிகாவின் உடைந்திருந்த கால் சரியாகி விட்டது. இதற்காகக் கடந்த நான்கு மாதங்களாக அவனும், அவளும் பட்ட பாடு, வேதனை சொல்லில் அடங்காதது. அதற்கு எல்லாம் பலனாக அவள் எழுந்து நடமாடுகின்றாள். இதோ இப்போது தனது மகனுடன் இணைந்து ஓடியாடி விளையாடி கொண்டிருந்த மனைவியைக் கண்ட சிவகுமரன் மனதிற்குள் கடவுளுக்கு நன்றி கூறிக் கொண்டான்.

"குமரா... அபியிடம் பேசிவிட்டாயா?" என்று கேட்ட பொன்னம்பலத்தைத் திரும்பி பார்த்தவன்,

"இன்னும் இல்லைங்கய்யா..." என்று கூற...

"எல்லா ஏற்பாடுகளும் செய்தாயிற்று. கடைசி நேரத்தில் அவள் முரண்டு பிடித்தால்...?"

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன்." என்றவன் எழுந்து சென்றுவிட்டான். பெரியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்.

"ஏய், நீ தான் அவுட்..." என்று மகனை பிடித்துக் கொண்டு கத்திய அபிஷரிகா பிடிமானம் இல்லாது கீழே விழ போனாள்.

"கவனமாயிரு என்று எத்தனை தடவை சொல்வது?" என்று அவளைச் செல்லமாய்க் கடிந்தபடி தூக்கி நிறுத்தினான் சிவகுமரன்... அது தான் வாய்ப்பு என்று ப்ரஷன்ஜித் அன்னையின் பிடியில் இருந்து நழுவி ஓட... அதைக் கண்டு அவள் சிணுங்கினாள்.

"எல்லாம் உன்னால் தான் சிவூ..." என்று சிணுங்கியபடி கணவனைப் பார்த்தவள் அவனது பார்வையின் மாற்றத்தை கண்டு திகைத்து நின்றாள்.

சிவகுமரன் மனைவியின் இடையின் மென்மையில் தன்னைத் தொலைத்தவனாய் அவளை இமைக்காது பார்த்திருந்தான்.

"சிவூ..." அவள் வெட்கத்துடன் அவனது கையை எடுத்து விட்டவள் அங்கிருந்து ஓடிவிட்டாள். சிவகுமரன் சிரித்தபடி தனது தலையைக் கோதி கொண்டான்.

இரவு உணவு முடிந்து சிவகுமரன் மனைவியைத் தேடி வந்தான். அவள் மகனை உறங்க வைத்து கொண்டிருந்தாள். நேரே அவள் முன் வந்து நின்றவன் அவளிடம்,

"நான் உன் கிட்ட பேசணும்..." என்க...

"சொல்லு சிவூ..." என்றவளை பார்த்தவன் பின்பு மகனை பார்த்தான்.

"ப்ரஷூ தூங்கி விட்டான். நீ சொல்லு..."

"நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்று அவன் நெத்தியடியாய் நேரிடியாக அவளிடம் கேட்டான்.

உலகத்திலேயே தன் மனைவியிடம் திருமணம் செய்ய வேண்டி சம்மதம் கேட்ட முதல் ஆள் நம் சிவகுமரனாகத் தான் இருப்பான்!!!

"பழைய மாலையில் புதிய பூக்கள்தான் சேராதா?
பழைய தாலியில் புதிய மூடுச்சுகள் போடாதா?
வாழ்கை ஒர் வட்டம் போல்
முடிந்த இடத்தில் தொடங்காதா?"

தொடரும்...!!!

அத்தியாயம் : 26

"நான் கேட்டதுக்கு நீ இன்னும் பதில் சொல்லலை அம்முலு."

வீட்டின் மொட்டை மாடியில் இருவரும் நின்று கொண்டிருந்தனர். சிலுசிலுவென்று வீசிய தென்றல் காற்றின் இதமும், பௌர்ணமி நிலவின் குளுமையும், யாருமில்லாத அந்த ஏகாந்த சூழலும் அத்தனை அழகாய் ரசிக்கும்படியாக இருந்தது. ஆனால் அபிஷரிகாவோ அதை ரசிக்க முடியாது தொலைதூர இருளை வெறித்துக் கொண்டிருந்தாள்.

கணவன் திருமணம் செய்து கொள்ள வேண்டி கேட்ட போது அவள் திகைத்து போனாள். சிவகுமரன் அப்படிக் கேட்டது அவளுக்குச் சந்தோசம் தான். ஆனால் அவளுக்கு அவனிடம் நிறையப் பேச வேண்டியிருந்தது. அதனால் ப்ரஷன்ஜித்தை மாமியார் வசம் ஒப்படைத்துவிட்டு இருவரும் மொட்டை மாடிக்கு வந்திருந்தனர்.

"அம்முலு, நான் கேட்டது காதில் விழுந்ததா?" என்றவனைத் திரும்பி பார்த்தவள் அவனுக்குப் பதில் சொல்லாது சற்று தள்ளி சென்று தரையில் அமர்ந்தாள். அவனும் மௌனமாக அவளின் பின்னே சென்று அவள் அருகில் அமர்ந்து சுவற்றில் சாய்ந்து கால்களை நீட்டி கொண்டான்.

"உனக்கு இந்த இடம் ஞாபகம் இருக்கா சிவூ?" என்றவளை அவன் புரியாது பார்க்க...

"இந்த இடத்தில் வச்சு தான் நீ எனக்கு மருதாணி வச்சு விட்ட..." அன்றைய நாளின் நினைவில் அவளது விழிகளில் மயக்கம் தோன்றியது. அன்று அவன் தொட்ட போது அவளது மேனி சிலிர்த்ததை இன்றும் உணர்ந்தார் போன்று அவளது மேனி சிலிர்த்தது. அவன் வியப்பாய் அவளைப் பார்த்திருந்தான்.

"அது மட்டும் தான் ஞாபகம் இருக்கா? மற்றது எல்லாம் இல்லையா?" என்றவனது பார்வை அவளது இதழ்களின்

மீது அழுத்தமாய்ப் பதிந்தது. அவனது பார்வையின் அர்த்தம் உணர்ந்தவள் போல் அவள் வெட்கமுற்றாள்.

"கங்கா கல்யாணத்துக்குப் பணம் தர்றேன்... அதுக்குக் கைம்மாறா நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு ஏதேதோ உன் கிட்ட சொல்லி கல்யாணத்துக்குச் சம்மதிக்க வைச்சேன். எனக்கே தெரியும் நான் நல்லா சொதப்பினேன்னு..." அவனுக்கும் அது நன்றாக ஞாபகத்தில் இருந்தது. அதை நினைத்து அவனது உதடுகளில் புன்னகை நெளிந்தது.

"அதுக்கு எல்லாம் என்ன காரணம்ன்னு தெரியுமா சிவூ?"

'தெரியாது' என்பது போல் அவன் தலையசைத்தான்.

"என்னோட அப்பா, அம்மா இறந்த வீட்டில் நான் குடிச்சிட்டு வந்தப்போ நீ என்னைத் தூக்கிட்டு போனியே. அது உனக்கு ஞாபகம் இருக்கா?" என்று கேட்டவளை பார்த்து சிரித்தவன்,

"நல்லா ஞாபகம் இருக்கு... மொடா குடிகாரின்னு நினைச்சேன்." என்று கேலி செய்ய... அவளோ அவன் கூறியதற்குக் கோபமோ, வருத்தமோ படாது அவனைக் கண்டு சிரித்தாள்.

"அப்போ நான் கீழே விழாம இருக்கிறதுக்காக நீ என்னைப் பாதுகாப்பா அணைச்சிக்கிட்ட... நானும் உன் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ஞ்சிக்கிட்டேன். அந்தப் போதையிலும் உன்னோட அணைப்பு எனக்கு அத்தனை பாதுகாப்பை கொடுத்தது. தாத்தா, பாட்டி பேசியது அரைகுறையா காதில் விழுந்ததை வச்சு நீ அவங்களுக்கு எத்தனை முக்கியம்ன்னு தெரிஞ்சிக்கிட்டேன். அதனால் தான் தாத்தா மாப்பிள்ளை பார்க்கிறேன்னு சொன்னப்போ நான் எதைப் பற்றியும் யோசிக்காம உன்னைக் கை காட்டினேன்."

"அம்முலு..." அவனுக்கு இது புதிய செய்தி... அவன் திகைப்பும், ஆச்சரியமுமாய் அவளைப் பார்த்திருந்தான்.

"ஆனால் நீ மறுத்த... அதனால் தான் எதையாவது சொல்லி உன்னை என்னிடம் தக்க வச்சுக்க நினைச்சு சொதப்பலா

ப்ளான் பண்ணினேன்."

"நீ என்னிடம் சம்மதம் கேட்கும் முன் நான் ஐயா கிட்ட சம்மதம் சொல்லிட்டேன் அம்முலு. ஆனாலும் உன்னிடம் விளையாண்டு பார்க்க ஆசைப்பட்டுத் தான் நான் உன்னைச் சீண்டியது."

"சிவூ..." என்றபடி அவள் மனம் நெகிழ்ந்து போய் அவனது தோளில் சாய்ந்து கொண்டாள். அவனும் அவளை அணைத்துக் கொண்டான்.

"இப்போ நான் சொல்றதை நீ நம்பணும் அம்முலு..."

"உன்னை நம்பாமலா? சொல்லு சிவூ."

"நான் உன் சொத்துக்கு ஆசைப்பட்டு உன்னைக் கல்யாணம் பண்ணிக்கலை அம்முலு... ஐயா தான் என் பெயருக்கு உன்னுடைய சொத்துக்களை எழுதி வச்சுட்டு என்னிடம் சத்தியம் வாங்கி விட்டார். எந்தக் காரணத்தைக் கொண்டும் சொத்துக்களை உன் பெயருக்கு மாற்ற கூடாதுன்னு சொல்லி அவருடைய கௌரவத்தைக் காப்பாற்ற சொன்னார். அதனால் தான் நீ சொத்து கேட்ட போது எல்லாம் நான் தர மறுத்து வேறு விசயம் பேசி உன் மனசை திசை திருப்பியது."

"தாத்தா என்னைப் பற்றிக் கணித்தது சரி தானே சிவூ.. எல்லாவற்றையும் அழிக்கப் பார்த்தேனே..." அவள் வருத்தத்துடன் கூற...

"ப்ச், அதை நினைக்காதே அம்முலு..." அவன் அவளைத் தேற்றினான்.

"இது எல்லாம் என்னுடைய சொத்துக்கள் இல்லை... எல்லாம் உன்னுடையது... உன்னுடைய வாரிசுகளுக்குப் போக வேண்டியது."

"என் வாரிசு யாருடா?" அவள் கோபமாய் அவனை ஏறிட்டு பார்த்து முறைத்தாள். அதைக் கண்டு அவன் மெல்ல சிரித்தான்.

"இன்னும் என்னால் நம்ப முடியலை அம்முலு... இவ்வளவு அந்தஸ்தான, அழகான மனைவி எனக்குக் கிடைப்பாள்ன்னு நான் கொஞ்சமும் நினைத்து பார்க்கவில்லை. எல்லாமே கனவு மாதிரி இருக்குது." என்றவன் கனவில் மிதந்தான்.

"நான் இன்னும் வேலைக்காரன் மனநிலையில் இருந்து மாறவில்லை. நீ என் தேவதை... நான் உனக்குச் சேவகம் பண்ணும் வேலைக்காரன். உன் சொத்துக்களைப் பாதுகாக்கும் வேலைக்காரன். அதனால் தான் சொத்துக்களைத் தர மறுத்தது. அதை நீ தவறா புரிஞ்சிக்கிட்ட... இப்போ உன் சொத்துக்கள் மட்டுமல்ல... நான் ஐடி கம்பெனி மூலம் சம்பாதிக்கும் அத்தனை சொத்துக்களுக்கும் நீ தான் சொந்தக்காரி. இனி பணம், சொத்து நமக்கு இடையில் வர வேண்டாம். இது எதுவும் எனக்கு வேண்டாம் அம்முலு. நீ மட்டும் எனக்குப் போதும்... இந்த அடிமையைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமா?" அவன் இறைஞ்சுதலுடன் கேட்க... அவளது விழிகள் விழிநீர் நிரம்பியது.

"சிவூ, உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்... என்னால் நீ காயப்படுறதை தாங்கிக்கிற சக்தி எனக்கு இல்லை. எனக்கு எப்படி என் காதலை விளக்குவதுன்னு தெரியலை. நான் சுவாசிக்கும் மூச்சுக் காற்றை விட நீ எனக்கு முக்கியம்." என்றவளை கண்டு அவனது நெஞ்சம் காதலில் கசிந்துருகியது. அவளை அணைத்திருந்த அவனது அணைப்பு மேலும் இறுகியது.

"ஆனால் என் கிட்ட சில குறைகள் இருக்கு... அது என்னை விட்டு போகாது சிவூ. நான் மண்ணுக்குள் போனாலும் மறையாது. அந்தக் குறைகள் நம் வாழ்க்கையைப் பாதித்து உன்னை உயிரோடு கொன்று விடுவோமோன்னு எனக்குப் பயமாயிருக்கு. நீ அந்த நந்தனாவை கல்யாணம் பண்ணிக்கோ சிவூ... ப்ளீஸ், எனக்காக..." அவள் மனமருக அவனிடம் கெஞ்சினாள். அவள் தனது காதலை விட அவனது நலனை பெரிதாக எண்ணினாள்.

"ப்ச், இப்படியே பேசிட்டு இருந்தேன்னு வையி... நான் உன்னைக் கடத்திட்டுப் போய்க் கல்யாணம் பண்ணிக்குவேன்." அவன் மிரட்டலை கூடக் கொஞ்சலாகக் கூற... அவனை இமைக்க மறந்து பார்த்தவள்,

"நான் பெண் இனத்துக்கே அவமானம் சிவு... நான் ஒரு குடிகாரி, சந்தேகப்பேய். நல்ல மனைவியாக நடந்துக்காதவள்... நல்ல தாயாகவும் நடந்துக்கத் தவறியவள். என்னைப் போய்..." என்றவளுக்கு மேலே பேச முடியவில்லை.

"போனது எல்லாம் போகட்டும் அம்முலு... இன்றைய நிலையை மட்டும் யோசித்துப் பார். உனக்கு என்னைப் பிடிக்கும். அதாவது நான் வேறெந்த பெண்ணைப் பார்த்தாலும் உனக்குப் பொசசிவ்னெஸ் தலை தூக்கி என்னைக் கொன்றுவிடும் அளவுக்கு... அதே போல் எனக்கும் உன்னைப் பிடிக்கும். நீ எப்படி இருந்தாலும்..." என்றவன்,

"முன்பு செய்த தவறை மீண்டும் செய்துவிடுவேனோ என்று நினைத்தால்... அதற்கு நான் உனக்குச் சத்தியம் பண்ணி தருகிறேன். என் உயிரே போனாலும் நான் உன்னை விட்டு பிரிய மாட்டேன்." என்று உறுதியான குரலில் கூற...

"சிவூ..." அவள் விழிகளில் விழிநீர் துளிர்க்க அவனைக் காதலோடு பார்த்தாள்.

"இப்போ தான்டி எனக்குப் புரிஞ்சது... இந்தப் பைத்தியக்காரி சிவூ மேல பைத்தியமா இருக்கிறாள்ன்னு... அதான் பைத்தியத்தைக் கல்யாணம் பண்ணி வைத்தியம் பார்க்கலாம்ன்னு இருக்கிறேன்." என்று கண்சிமிட்டி கூறியவனைக் கண்டு,

"சிவூ..." என்ற அவள் கதறலோடு அவனை அணைத்துக் கொண்டு அவனது நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள்.

"உண்மையில் நான் பைத்தியம் தான் சிவூ... சின்ன வயசில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களால் பாதிக்கப்பட்ட

பைத்தியம் நான்... நான்... நான் மன அழுத்தத்தில் இருக்கும் ஒரு மனநோயாளி. என்னுடைய நோய் எனக்குத் தெரிந்திருந்தும், அதுக்கான சிகிச்சை எடுத்தும், என்னால் அதில் இருந்து வெளியில் வர முடியலை. அது நம்ம வாழ்க்கையைப் பாதிச்சிருமோன்னு எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு சிவூ..." என்று கதறியவளை அவன் ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

"நான் இருக்கேன்ல அம்முலு... பயப்படாதே..." அவனது ஆறுதல் வார்த்தைகள் அவளுக்கு யானை பலத்தைத் தந்தது.

"ம், ம்..." என்றவள் அவனது நெஞ்சில் சொகுசாய் சாய்ந்து கொண்டு,

"என்னைப் பற்றி நான் உன்னிடம் இதுவரை எதுவும் சொன்னது இல்லை... இப்போது சொல்லவா?" என்று கேட்க...

"உனக்கு மனப்பாரம் குறையும்ன்னா நீ சொல்... இல்லைன்னா வேண்டாம். உன்னை நிறை குறையோடு ஏத்துக்க நான் தயாரா இருக்கேன். எனக்கு என் அம்முலு மட்டும் போதும்." என்றவன் அவளது உச்சந்தலையில் தனது முத்திரையை அழுத்தமாய்ப் பதித்தான்.

"இல்லை, நீ கட்டாயம் தெரிஞ்சுக்கணும் சிவூ..." என்றவள் தனது வாழ்வின் ரகசியத்தைக் கூற ஆரம்பித்தாள்.

"நானி வேலையில் இருந்து நின்னதும் நான் தனிமையாக்க பட்டேன். நமக்குன்னு யாருமில்லாத தனிமை ரொம்பக் கொடியது சிவூ... அதுவும் ஐஞ்சு வயசில் தனிமை ரொம்பவே கொடியது. அப்பாவுக்கு எப்பவும் பிசினஸ் தான். அவருக்குப் பாசம் இருந்தாலும் பெருசா வெளியில் காட்டிக்க மாட்டார். தினமும் பத்து நிமிசம் எனக்காக ஒதுக்குவார். அதுவே ரொம்பப் பெரிய விசயம். இப்படியே என் வாழ்க்கை கழிஞ்சது. ஒருநாள் டான்ஸ் கிளாஸ் போயிட்டுக் காரில் வந்துக்கிட்டு இருந்தேன். துணைக்கு டிரைவர் மட்டுமே... இரவு ஏழு மணி இருக்கும்.

ரொம்ப நேரமா கார் போயிக்கிட்டே இருந்தது... வீடு மட்டும் வரலை. நான் சந்தேகப்பட்டு டிரைவர் கிட்ட கேட்டேன். அவன் திடீர்ன்னு வண்டியை ஓரமா நிறுத்திட்டு என் கிட்ட தப்பா நடக்க முயற்சி பண்ணினான்." அந்த நாளின் ஞாபகத்தில் அவளது விழிகளில் கண்ணீர் சுரந்தது. அவளது வேதனையை, அதுவும் ஐந்து வயது சிறுமியின் வேதனையை உணர்ந்தவனாய் சிவகுமரனின் பிடி இறுகியது.

"வேண்டாம் அம்முலு... கஷ்டமாயிருந்தால் சொல்ல வேண்டாம்." என்றவனை அண்ணாந்து பார்த்தவள்,

"என்னைக் கண்டால் உனக்கு அருவருப்பா இருக்கா?" என்று கேட்க... அவன் 'இல்லை' என்று தலையாட்டினான்.

"நான் உன் மனசை தான் விரும்பறேன்." என்றவனை அவள் காதல் பொங்க பார்த்தாள். ஒருகாலத்தில் அவளை 'வி......ரி' என்று அழைத்து அவமானப்படுத்தியவன் இப்போது இப்படிக் கூறுவதற்குக் காரணம் அவனது காதல் அல்லாது வேறென்ன...!!! அவளது பார்வையை உணர்ந்து அவனது உதடுகள்,

"என்னை மன்னித்துவிடு..." என்று முணுமுணுத்தது.

"குடிகாரி... அதுவும் சினி ஃபீல்டில் இருப்பவளை பார்க்கும் போது அப்படித்தான் தோன்றும்."

"ப்ச்... உன்னை எனக்குத் தெரியாதா அம்முலு?" என்று அந்தங்கரமாய்க் கேட்டவனைக் கண்டு அந்த நாளின் நினைவில் அவளது கன்னங்களில் சிவப்பு ரோஜாக்கள் பூத்தது. அவனது கைவிரல்கள் தானாக எழுந்து அவளது கன்னத்தை ரசனையுடன் வருடி விட்டது.

"இப்படியே இருக்க எனக்கு ஆசை தான்... முழுவதும் சொல்லி முடித்துவிட்டு இருக்கலாம்..." என்றவள் மேலே சொல்ல ஆரம்பித்தாள்.

"எப்படியோ அவன் கிட்டயிருந்து தப்பிச்சு பின்சீட்டு வழியா கதவை திறந்திட்டு கீழே இறங்கி ஓட ஆரம்பிச்சேன். எங்கும்

இருட்டு... வழி எதுவும் தெரியலை. கண்மண் தெரியாம ஓடினேன். நின்னா அவன் வந்து பிடிச்சிருவானோன்னு பயந்து ஓடிக்கிட்டே இருந்தேன். கொஞ்ச தூரத்தில் வெளிச்சம் தெரிஞ்சது... அதை நோக்கி ஓடினேன். அங்கே போன பின்பு தான் தெரிந்தது, அது சுடுகாடுன்னு... அன்னைக்கு நைட் முழுவதும் தூங்காம அந்தச் சுடுகாட்டு இருட்டில் பயத்தோடு முழிச்சிட்டு இருந்தேன்." என்றவளது தேகம் இப்போதும் பயத்தில் நடுங்கியது. அவளது இருட்டிற்கான பயத்தை அறிந்தவன் மனதிற்குள் வேதனை கொண்டான்.

"மறுநாள் காலையில் கண் முழிச்சதும் அந்த ரோட்டில் தள்ளியிருந்த டீக்கடைக்கு வந்து அப்பாவுக்கு ஃபோனில் அழைத்து விசயத்தைச் சொன்னேன். என்னைத் தேடிட்டு இருந்தவர் உடனே என்னை வந்து அழைச்சிட்டு போனார்." அந்தச் சின்ன வயதில் அவளது மனதைரியத்தைக் கண்டு அவன் மெச்சி கொண்டான்.

"அப்பா கிட்ட நடந்ததைச் சொன்னேன். அவர் தலைமறைவா இருந்த டிரைவரை கண்டுபிடிச்சு அவனுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார். அதுக்குப் பிறகு அப்பா என் கூடக் கூடுதல் ஒட்டுதல் காட்டினார். இது தனுஜாவுக்குப் பிடிக்கலை."

"ஆமாம், கேட்கணும்ன்னு நினைத்தேன். அம்மா எப்போது தனுஜாவானது?"

"நான் உனக்குக் கொடுத்த செக்கை நீ பேங்க்கில் போட்டியா சிவூ?"

"இல்லை..."

"போட்டிருந்தால்... பணம் இல்லாது திரும்ப வந்திருக்கும்."

"என்ன சொல்ற?"

"ஆம், எனது சம்பாத்தியம் எல்லாத்தையும் அவங்க எடுத்துக்கிட்டாங்க..." என்றவளை அவன் அதிர்வுடன் பார்த்தான்.

"நம்ம கல்யாணம் முடிஞ்ச அன்னைக்கு நான் உன் கிட்ட சொத்துக்கள் கேட்டது கோபத்தில்... ஆனா அதுக்குப் பிறகு கேட்டது எல்லாம் நம்பிக்கையின்மையால், சந்தேகத்தால்... அவங்களோட துரோகத்தைத் தெரிஞ்சிக்கிட்டதுக்குப் பிறகு என்னால் யாரையும் நம்ப முடியலை சிவூ. அவங்க என் கிட்ட எப்படி எல்லாம் அன்பாய் பேசி நடிச்சாங்க தெரியுமா? எல்லாம் பணத்துக்காகத் தான்னு நினைக்கிறப்போ ரொம்ப வேதனையா இருந்தது. உயிரற்ற பணம் தான் முக்கியமா போச்சா? உயிருள்ள நான் முக்கியம் இல்லையா? அப்போ அவங்க என்னோட சித்தின்னு எனக்குத் தெரியாது. அவங்களை என்னுடைய சொந்த அம்மான்னு தான் நான் நினைச்சேன். பெத்த அம்மாவே பொய்த்து போகும் போது கணவன் எம்மாத்திரம் என்கிற எண்ணம் ஆழமாய் என் மனதில் வேரூன்றிப் போனது அப்போது தான். அதனால் தான் உன்னை ரொம்பப் படுத்தி எடுத்தேன். நான் செய்தது தவறு தான்... ஆனால் என்னால் யாரையும் நம்ப முடியலை."

"ப்ச், விடு அம்முலு... நடந்து முடிந்ததைப் பத்தி நினைக்காதே." அவன் ஆறுதல் கூறினான்.

"இப்போ அந்தச் சந்தேகம் எனக்கு இல்லை. நான் உன்னை முழுதாய் நம்புகின்றேன்." என்றவள் மேலே கூறலானாள்.

"என் பெயரில் பேங்கில் காசு கிடையாது... கையிலும் சின்னச் சின்ன நகைகள் தவிர வேறு எதுவும் கிடையாது. அதனால் தான் நான் வீட்டிலேயே இருக்க ஆரம்பித்தேன். திரும்ப நடிக்கணும்ன்னு கூடத் தோணலை."

"அவங்க இறந்த பிறகு பேங்கில் உள்ள அவங்க பணம் எல்லாம் உனக்கு வந்திருக்குமே."

"ம், வந்துச்சு... அதைத் தொட கூட எனக்குப் பிடிக்கவில்லை. எல்லாவற்றையும் ஆசிரமத்துக்கு எழுதி வைத்துவிட்டேன்."

"அது உன்னுடைய பணம் அம்முலு..."

"போகட்டும் விடு சிவூ..." பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதவளை கண்டு அவனுக்குப் பெருமிதமாய் இருந்தது.

"நீ கேட்டியே நான் ஏன் படிக்கலைன்னு... என்னை அவங்க சின்ன வயசில் இருந்து பார்ட்டிக்கு கூட்டிட்டுப் போய்ப் பழக்கிப்படுத்தி இருந்தாங்க... அங்கே ட்ரிங்க்ஸ் எடுக்கப் பழக்கினாங்க. க்ரேப் ஜூஸ்ன்னு பொய் சொல்லி என்னைக் குடிக்க வச்சாங்க... அதுக்குப் பிறகு நடிக்க வந்த பின்பு குடிக்கு அடிமையாகி போனேன். கண்டவன் கண்ட இடத்தில் தொடும் போது அத்தனை அருவருப்பாக இருக்கும். அதை மறக்கத்தான் குடிச்சது. அதுவே நிரந்தரமாகி விட்டது. ஆனா உன்னிடம் சத்தியம் செய்த பிறகு நான் குடிக்கவே இல்லை..."

"ஏய் பொய் சொல்லாதே..." என்றவனை வலியுடன் பார்த்தவள்,

"நீ உன் குடும்பத்தைப் பார்ப்பதற்காக என்னை அதே தனிமை இருளில் விட்டுட்டு போயிட்ட. மறுபடியும் அதே தனிமை... யாருமில்லா வெறுமை... மனம் வெறுத்து போயிருச்சு. அதனால் தான் குடிச்சேன். அதுக்குக் காரணம் நீ மட்டும் தான் சிவூ..."

"இனி உன்னை விட்டு எங்கேயும் போக மாட்டேன்டி..." என்றவனைக் கண்டு ஆறுதலாய் புன்னகைத்தவள்,

"எத்தனை பார்ட்டிக்கு போனாலும் கூட நான் நல்லா தான் படிச்சேன் தெரியுமா? அது அவங்களுக்குப் பிடிக்கலை போலும்... நான் பரீட்சைக்குப் படித்தாலே அவங்களுக்குப் பிடிக்காது. ஏதாவது சாக்கு சொல்லி அவங்க கூடப் படப்பிடிப்புக்கு கூட்டிட்டு போவாங்க... விடிய விடிய அங்கே ஷூட்டிங் பார்த்துட்டு வந்து எங்கே பரீட்சை எழுத... தூங்கி தான் வழிஞ்சேன். அதனால் தான் நான் சரியா படிக்காம ஃபெயிலானேன். அது அப்பாவுக்குக் கோபம். என் கூடப் பேசுறதை நிறுத்திட்டார். அப்போ எனக்குப் பதினைஞ்சு வயசு... சரியா கைட் பண்ண ஆளில்லை. எனக்கு இருந்த ஒரே ஆறுதல் அவங்க மட்டும் தான்... அவங்க தான் 'படிப்பு

முக்கியமில்லை... நடிக்க வா... உன்னை இந்த உலகமே கொண்டாடும்'ன்னு என்னை இந்த ஃபீல்டுக்கு கூட்டிட்டு வந்தாங்க..."

"உன் வயசை கண்டு மாதர் சங்கம் பொங்கலையா?" அவனுக்கு அவளைக் கண்டு பாவமாக இருந்தது.

"இல்லை... பொய் வயசு சொல்லி நடிக்க வந்தேன். முதல் படமே சூப்பர் ஹிட்... தொடர்ந்து ஐஞ்சு வருசம் நான் தான் தமிழ்நாட்டோட கனவு கன்னி... புகழ் என்னும் போதை என்னைக் கொஞ்சம் கொஞ்சமாய் மயக்க ஆரம்பிச்சது. அதில் நானும் கொஞ்சம் கொஞ்சமாய் மயங்க ஆரம்பித்தேன். அதுக்கு நான் கொடுத்த விலை என்னுடைய நிம்மதி..." என்றவள் அமைதியாகி போனாள். அவனும் அமைதியாக இருந்தான்.

"திரைத்துறையில் அங்கங்கள் காட்டி நாங்கள் நடிப்பதால் என்னவோ எல்லா ஆண்களின் பார்வைகளும் எங்களது ஆடையை நீக்கி எங்களது ஆடையில்லா உடலை கற்பனையில் கண்டு ரசிக்கும். ஒருத்தர் இரண்டு பேர் என்றால் பரவாயில்லை... எல்லோரின் பார்வையும் அப்படித்தான் இருக்கும். மனசு வெறுத்துப் போனது. அப்போ தான் பிரபல தயாரிப்பாளர் ஒருத்தர் அவரோட படத்தில் நான் நடிக்கணும்ன்னா நான் அவரை அட்ஜஸ்ட் பண்ணி போகணும்ன்னு சொன்னார்." அவள் கூறியதை கேட்டு அவளை அணைத்திருந்த அவனது கைப்பிடி இறுகியது.

"யாரது...?" அவனது குரல் கோபமாய் ஒலித்தது.

"மீதி கதையைக் கேட்டுட்டு பேசு சிவூ..." என்றவளை பார்த்தவன்,

"தீபனுக்கு நடந்த மாதிரியா?" என்று கேட்க...

"அதே தான்... யார் கிட்ட? இந்த அபி கிட்டேயேவா?" என்று கெத்து காட்டியவளை கண்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"உன் தைரியம் தான்டி உனக்கு அழகு..." என்று அவன் பாரட்டினான்.

"இந்த விசயத்தை அவங்க கிட்ட சொன்னேன். அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க தெரியுமா? சினி ஃபீல்டு இப்படித்தானாம். அட்ஜஸ்ட் பண்ணினால் தான் சைன் பண்ண முடியுமாம். இதுக்காகப் பெரிய தொகையை அட்வான்சா வாங்கிட்டதா சொன்னப்போ எனக்குக் கோபம் வந்தது. அப்போ தான் அவங்க மேல் ச்சீன்னு வந்தது. இவங்க இரண்டு பேருக்கும் பாடம் புகட்டணும்ன்னு முடிவு எடுத்து அந்தத் தயாரிப்பாளர் சொன்ன ஹோட்டலுக்குப் போனேன்... மீதம் எல்லாம் தீபனுக்கு நடந்தது தான். அதை அவனிடம் சொல்லி அவனை மிரட்டிவிட்டு வந்து அவங்களையும் மிரட்டினேன். இதை அப்பா கிட்ட சொன்னால் என்னாகும்ன்னு... அதில் அவங்க பயந்து போய் வாயை மூடிக்கிட்டாங்க. அப்போ கூட நான் அவங்களைத் தவறா நினைக்கலை. ஒரு நடிகையா அவங்களைக் கண்டு பரிதாபம் தான் பட்டேன். அவங்களுக்கு ஈசியா இருந்தது எனக்குக் கஷ்டமாயிருந்தது. ஆனாலும் அதுக்குப் பிறகு அவங்க கிட்டயிருந்து ஒதுங்கிட்டேன். இந்தச் சம்பவங்களால் தான் அவங்க இறந்தப்போ கூட நான் அழலை. அப்பாவோட இறப்பு மட்டுமே என்னைப் பாதிச்சது. ஒரு நடிகையா தாத்தா அவங்களைப் புறக்கணிச்சது தான் எனக்குக் கோபம் வந்தது. மற்றபடி அது பாசத்தில் இல்லை."

"எல்லாம் சொல்லி முடிஞ்சதா? இப்போ சொல்லு, நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?" என்று அவன் மீண்டும் கேட்க...

"பெட்ரோமாஸ் லைட்டே தான் வேணுமா?" என்று அவனைக் கிண்டலடித்தவள்,

"ஐயம் அன்பிட் ஃபார் மேரேஜ் சிவூ..." என்று விரக்தியுடன் கூற...

"அதை நான் சொல்லணும்..." என்ற சிவகுமரனின் விழிகள் ரசனையுடன் அவளை மொய்த்தது. அதில் அவள்

நாணமுற்றாலும் சுதாரித்துக் கொண்டு,

"என்னுடைய சின்ன வயசு காயங்கள் உன்னை நம்பாது சிவூ... நீ எந்தப் பெண் கூடப் பேசினாலும் என்னைச் சந்தேகப்பட வைக்கும். உன்னிடம் சண்டை போட வைக்கும்... நம்ம வாழ்க்கை நரகமா போயிரும். நீ நல்லவன்... உனக்கு ஏற்ற மாதிரி ஒரு நல்லவள் தான் உனக்கு மனைவியா வரணும். நான் வேண்டாம்... இதை நான் உணர்ந்து தான் சொல்றேன்." என்றவளை ஆழ்ந்து பார்த்தவன்,

"சரி, நீ சொன்னப்படி நான் வேறு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். அதைப் பார்த்து நீ என்ன மாதிரியா ஃபீல் பண்ணுவ?" என்றவனின் சட்டையை இரு கைகளால் இறுக்கி பிடித்தவள்,

"அடுத்த நொடி செத்துருவேன் சிவூ... அன்று விபத்து நடந்தது எப்படின்னு நினைச்ச? உனக்கு விவாகரத்து கொடுத்துவிட்டு... உன்னை வேறு பெண்ணுக்கு தாரைவார்த்து கொடுத்துட்டு... எனக்கு ஏதுடா வாழ்க்கை? அதான் மனம் வெறுத்து போய் நானே காரை கொண்டு போய் லாரி மீது மோதிவிட்டேன்..." என்று வலியுடன் கூறியவளை கண்டு அவன் அதிர்ந்து போனான். அவளை உயிராய் நேசிக்கும் அவனே அவளது உயிருக்கு எமனாகி போனானே!

"லூசாடி நீ... இனி இந்த மாதிரி எண்ணம் உனக்கு வரவே கூடாது." அவளை விட அதிக வலியுடன் கூறியவன் அவளை அணைத்துக் கொண்டான்.

"நான் வாழ வழி சொல்கிறேன். நீ என்னடான்னா சாக வழி சொல்கிறாய். வாழ்வோ? சாவோ? நாம ரெண்டு பேரும் சேர்ந்து சந்திப்போமே..." என்று அவன் கூற...

"நான் நல்ல தாய் இல்லை... நான் நல்ல பெண் இல்லை..." என்று மீண்டும் புலம்பியவளை முறைத்து பார்த்தவன்,

"உன்னை யாராவது ஏதாவது சொன்னார்களா? நீயா எதையாவது நினைச்சிட்டு புலம்பாதே." என்று அவன் அவளைக் கடிய...

"நீ சாதாரணமா சொல்லிட்ட சிவூ... என்னுடைய இந்தக் குணம் தான் உன்னையும், ப்ரஷவையும் பிரிய வச்சது..." என்றவளுக்கு அந்த நாள் நினைவில் அழுகை வந்தது.

"குழந்தைக்குப் பால் கூடக் கொடுக்க முடியாத அரக்கியா நான் மாறிட்டேன் இல்லையா? எந்தப் பெண்ணும் இப்படிப் பண்ண மாட்டாள் இல்லையா சிவூ? பெற்ற குழந்தை பசியை விடவா எனக்குச் சொத்துக்கள் முக்கியமாகப் போயிற்று?" என்று விடாது அரற்றியவளை ஆறுதலாய் அணைத்து கொண்டவன்,

"நீ சொத்துக்காக அப்படி நடந்து கொள்ளவில்லை அம்முலு... என்னிடம் உனக்கான இடம் எந்தளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத் தான் நீ அப்படிக் கேட்டது." என்றவனை அவள் திகைப்புடன் பார்த்தாள். அவளது மனதில் இருப்பதைக் கணவன் சரியாகச் சொல்லிவிட்டானே!

"முன்பு எனக்கு இது புரியவில்லை. ஆனால் இப்போது உன் கதையைக் கேட்கும் போது உன் மனது புரிகின்றது. உன்னுடைய அன்றைய நடவடிக்கைக்கான காரணமும் புரிகின்றது. பணம் உன் வாழ்க்கையைப் புரட்டி போட்டு இருக்கிறது. அதன் விளைவு தான் நீ கேட்டது... நான் தான் உன்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. 'சொத்துக்களை விட நீ தான் முக்கியம்.' என்று அப்போதே நான் கூறியிருந்தால் நமக்கு இடையே இந்தப் பிரிவுக்கு அவசியமே ஏற்பட்டு இருக்காது. உலக அனுபவம் இருந்தும் நான் தான் பக்குவம் இல்லாது நடந்து கொண்டேன் அம்முலு. என்னை மன்னித்துவிடு."

தவறு முழுமையும் தன் மீது தான் என்று தெரிந்திருந்தும் அவன் மீது பழி போட்டுக் கொள்ளும் கணவனைக் கண்டு அவளது இதயம் காதலாய் அவன் பால் சரிய ஆரம்பித்தது.

"நம் கல்யாணம் முடிந்த பிறகு ஒரு நாள் நான் மதியம் வீட்டுக்கு வந்த போது நீ கால்களைக் குறுக்கி கொண்டு உறங்கி கொண்டு இருந்தாய். மனதில் பாதுகாப்பின்மை காரணமாகத் தான் அப்படி உறங்குவது. அத்தோடு உன்னுடைய குணமும் விசித்திரமாக இருந்தது. அப்போதே தீர்மானித்து விட்டேன். உன்னைப் பற்றி விசாரிப்பது என்று... ஆகாஷின் அப்பா நந்தகுமாரிடம் விசாரித்தேன். அவரும் உன்னுடைய வாழ்க்கையில் ஏதோ மர்மம் இருப்பதாய் கூறினார்."

"தனுஜா மேல் சந்தேகம் வந்திருக்கும்."

"இருக்கலாம்... அதனால் தான் அவர் ராஜம் அம்மாவை பற்றி விசாரித்து என்னிடம் கூறியது. உன் பிறந்தநாள் சர்ப்ரைசாகத் தான் நான் அவரை அழைத்து வந்தது." தனக்காகக் கணவன் எவ்வளவு யோசித்துச் செயல்பட்டு இருக்கிறான் என்பதை அறிந்தவள்,

"தேங்க்ஸ் சிவூ..." என்று மகிழ்ச்சியுடன் அவனது கன்னத்தில் முத்தமிட்டாள்.

"இதுவரை நான் ஒரு பிறந்தநாள் கூடக் கொண்டாடியது இல்லை. உன்னுடன் கொண்டாடியது தான் முதல் முறை... என்னுடைய ஒவ்வொரு பிறந்தநாள் கொண்டாட்டத்தின் போதும் தனுஜாவுக்கு உடம்பு சரியில்லாது போகும். அதனால் கொண்டாடியது இல்லை." என்றவளின் வருத்தம் அவனுக்குப் புரிவதாய்...

"இனி உன்னுடைய பிறந்தநாளை ஜாம் ஜாமென்று கொண்டாடி விடலாம்." அதைக் கேட்டு அமைதியானவள் மீண்டும் பேச ஆரம்பித்தாள்.

"நான் உன்னிடம் சொத்துக்கள் கேட்டது நீ எந்தளவுக்கு என்னைக் காதலிக்கிறாய் என்பதை அறிந்து கொள்வதற்காகத் தான்... 'சொத்துக்களை விட நீ தான் முக்கியம் அம்முலு.'ன்னு நீ சொல்ல மாட்டியான்னு நான் ஒவ்வொரு தடவையும் எதிர்பார்ப்பேன். ஆனா நீ சொன்னதே இல்லை. அந்த மன அழுத்தம் பிரசவத்தின்

போது வெடித்துச் சிதறி விட்டது. அதுக்கு நான் குழந்தையைப் பகடைகாயாக மாற்றியது தவறு தான்... ஆனால் அந்தக் குழந்தைக்காகத் தானே நீ என் காலில் விழுந்து கதறின... நான் அதுக்கா ஆசைப்பட்டேன் சிவூ...? நான் ஆசைப்பட்டது உன் காதலை மட்டும் தானே... அதுக்கான அத்தாட்சியை எதிர்பார்த்தது தவறா? அதனால் தான் குழந்தை கூட நம்மைப் பிரிக்க வந்த எமனாகத் தான் பார்த்தேன். என் குழந்தைன்னு அறிவு சொன்ன போதும்... மனசு அதைக் கேட்கலை. ஏன்னா என் மனசு பூரா நீ தான் நிறைஞ்சிருக்க... நீ தான் எனக்கு முக்கியம். குழந்தையைக் காட்டியாவது உன் காதலை தக்க வச்சுக்கணும்ன்னு தான் நான் அப்படி வெறியோடு கேட்டது. நான் நினைச்சப்படி நீ சொத்துக்களைக் கொடுத்த... ஆனா அதுவும் குழந்தைக்காக... எனக்காக இல்லை... அந்த நொடி நான் செத்துப் போய்விட்டேன் சிவூ... உனக்கு நான் முக்கியம் இல்லை... குழந்தை தான் முக்கியம்ன்னு தெரிஞ்சப்போ..."

"ப்ளீஸ் அம்முலு, வருத்தப்படாதே... அவன் அடுத்தவன் கிடையாது. நம் குழந்தை."

"என் பிரச்சனைக்கு ட்ரீட்மெண்ட் எடுத்து பிறகு இப்போது புரியுது... ஆனா அப்போ புரியலையே..." என்று அழுகையில் உதட்டினை பிதுக்கியவளை கண்டு அவனுக்குப் பாவமாக இருந்தது.

"எல்லாத்துக்கும் காரணம் அதிகப்படியான காதல் தான்... இப்படிக் காதலிக்கும் பெண் யாருக்கு கிடைக்கும் சொல்... அப்படிப்பட்ட அற்புதமான உன்னை எப்படி என்னால் விட முடியும்?"

"இந்தக் காதல் கிறுக்கு தான் உனக்கு வேணுமா சிவூ? எப்ப வேணும்ன்னாலும் மீண்டும் பைத்தியம் பிடிக்கலாம்." அவள் நாசுக்காக அவனுக்குத் தனது மனநிலையை எடுத்துரைத்தாள்.

"பைத்தியம் தானே... அதுவும் என் மீது தானே... பிடிக்கட்டும், பிடிக்கட்டும்..." என்றவனது குரலில் மட்டுமல்லாது

விழிகளிலும் காதல் நிறைந்து வழிந்தது. அவனது காதலுக்கு அவள் கொஞ்சமும் நியாயம் செய்யவில்லையே.

"இத்தனை காதலை என் மீது ஏன் வைத்தாய் சிவூ? என்னை எனக்கே பிடிக்கவில்லை... நான் அசிங்கம்... அதனால் தான் சொத்துக்களை மீண்டும் உங்களிடம் ஒப்படைத்து விட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறிவிட்டேன்."

மனைவி கோவிலில் பணிவிடை செய்து கஷ்டப்பட்டதை மனக்கண்ணில் கண்டவன் அவளை விட அதிகமாய்க் கஷ்டப்பட்டான். அவளது கையைப் பற்றி மென்மையான உள்ளங்கையை வருடி கொடுத்தவன்,

"வேலை செய்யும் கையா இது? நாலாயிரம் பேருக்கு வேலை கொடுக்கும் கை இது... நான் உயிரோடு இருக்கும் போது நீ ஏன்டி இப்படிக் கஷ்டப்பட்ட? இதைக் கேட்டும் நான் உயிரோடு இருக்கேனே." கழிவிரக்கத்தில் கரைந்தவனைக் கண்டு,

"எனது தவறுக்கான தண்டனை அல்லது பிராயச்சித்தம் இப்படி எது வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். நான் அந்தப் பணியை விரும்பி தான் செய்தேன் சிவூ... சிறு முகச்சுணக்கம் கூட இல்லாது தான் செய்தேன். உனக்கும், மகனுக்கும் செய்த பாவத்திற்கான பரிகாரம் அது..."

"போதும்டி... தப்பே செய்யாது இரண்டு பேரும் அனுபவிச்ச தண்டனை போதும்... இனியும் நாம் கஷ்டப்பட வேண்டாம். இனி நான் உன்னை விட்டு பிரிய மாட்டேன்." என்றவன் அவளை இறுக்கி அணைத்துக் கொண்டு உச்சி முகர்ந்தான்.

"இன்னும் நான் கல்யாணத்துக்குச் சம்மதிக்கவில்லை..." குறும்பாகக் கூறியவளை கண்டு,

"இதுநாள் வரை ராமனாக இருந்தாயிற்று... இனி ராவணனாக அதிரடி காட்ட வேண்டியது தான்..." என்றவனை உற்று பார்த்தவள்,

"பார்றா..." என்று கேலி செய்ய...

"நீ விரும்பினாலும், விரும்பவில்லை என்றாலும் உன்னைக் கடத்திட்டு போயாவது கல்யாணம் பண்ணத்தான் போகிறேன் பார்..." என்று அதிதீவிர குரலில் காதலோடு கூறியவனைக் கண்டு அவளுக்கும் சம்மதித்தால் தான் என்ன என்று தோன்றியது.

"சிவூ, எனக்கு ரொம்பப் பயமாயிருக்கு... இந்த வாழ்க்கையை என்னால் காப்பாற்றிக் கொள்ள முடியுமான்னு?"

"நான் இருக்கேன்ல அம்முலு..."

"நான் என்ன தவறு செஞ்சாலும் நீ என்னைக் கண்டிச்சு திருத்து. இல்லை அடிச்சு திருத்து சிவூ... என்னை விட்டு மட்டும் போய்விடாதே... அப்படி நீ போனால் நான் செத்து போயிருவேன்." என்றவளை அவன் மனம் கனக்க அணைத்துக் கொண்டான்.

அன்று அவளைப் புரிந்து கொள்ளாது தான் அவளை விட்டு பிரிந்ததை இப்போது நினைத்து பார்த்தவனுக்கு மனம் வலித்தது. இனி எந்தக் காரணம் கொண்டும் அவளை விட்டு பிரிய கூடாது என்று அவன் முடிவு எடுத்தான்.

"நிச்சயம் உன்னைத் திருத்துவேன். ஆனால் என் முத்தத்தால் கண்டித்து, எனது அணைப்பால் அடித்துக் காதலாய் உன்னைத் திருத்துவேன்." என்று கண்சிமிட்டி குறும்பு புன்னகையுடன் கூறியவனின் புன்னகை அவளையும் தொற்றிக் கொண்டது...

தொடரும்...!!!

## அத்தியாயம் : 27

இன்று சிவகுமரன் மற்றும் அபிஷரிகாவின் திருமணநாள்... ஆம், முதல் திருமண நாளும், இரண்டாவது திருமணநாளும் ஒரே நாளில் இருக்குமாறு பார்த்துக் கொண்டான் சிவகுமரன். அதை அவன் அபிஷரிகாவிடம் கூறிய போது அவள் நெகிழ்வுடன் அவனைப் பார்த்தாள்.

"ஏன் சிவூ?"

"என் தேவதை பெண் என் கை சேர்ந்த நாளை மாற்ற எனக்கு விருப்பம் இல்லை." என்றவனை அவள் காதல் பெருக பார்த்தாள்.

"நான் உன்னைப் புரிஞ்சிக்காம ரொம்பக் கஷ்டப்படுத்திட்டேன் சிவூ... நீ கட்டிய தாலிக்கு மரியாதை கொடுக்காம..." மேலே சொல்ல போனவளின் வாயை தனது கை கொண்டு பொத்தியவன்,

"தாலியை நான் தானே கழட்டினேன்... அப்போதும் நீ தவறு செய்துவிடக் கூடாது என்று நினைத்து தான் நானே தாலியை கழட்டியது. ஐயா முன்னாடி நீ தலைகுனிஞ்சு நிற்க கூடாது என்று நினைத்து பழியை என் மீது போட்டு கொண்டேன்." என்றவனைக் கண்டு அவளது நெஞ்சம் நேசத்தில் விம்மியது.

"எப்படிச் சிவூ, நீ இப்படி எல்லாம் பாசம் வைக்கிற..."

"தாலி என்பது உனக்கும், எனக்கும் திருமணமாகி விட்டது என்பதற்கான அடையாளம். அதைக் கழட்டி விட்டால் மட்டும் நம் பந்தம் இல்லாது போகுமா? நீ இங்கே இருக்கிறாய் பெண்ணே..." என்று அவன் தனது இதயத்தைக் காட்ட... அவள் அவனது நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டாள்.

"முதல் முறை நடந்த தவறுகளை இப்போது நாம் திருத்தி கொள்ளலாம். ஐயா, அம்மா கிட்ட அப்போ கல்யாண பண்ணிய நேரம் சரியில்லைன்னு இப்போ திரும்பக் கல்யாணம் பண்ணிக்கப் போறோம்ன்னு சொல்லியிருக்கேன். கேட்டால், நீயும் அதையே சொல்லு."

"அதே நாளில் என்றால் அவங்களுக்குச் சந்தேகம் வரலையா?"

"அதே நாள் தான்... ஆனால் நேரம் வேறு..." என்று கண்சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது.

அதை நினைத்து பார்த்தபடி புன்னகையுடன் பட்டுப்புடவையைக் கட்டி கொண்டிருந்தாள் அபிஷரிகா. திருமணத்திற்காகச் சிவகுமரன் அவளுக்குப் புதிய பட்டுப்புடவையை வாங்கிக் கொடுத்திருந்தான். ஆனால் அவள் அதைக் கட்டவில்லை. முதல் திருமணத்திற்கு வாங்கிய புடவையையே கட்டி கொண்டாள். அதை அவள் சென்ட்டிமெண்ட்டாக உணர்ந்தாள். புடவையைக் கட்டி கொண்டு, அதற்குப் பொருத்தமான நகைகளை அணிந்து, லேசாக ஒப்பனைகள் செய்து கொண்டவள் கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். அவள் எப்போதுமே அழகு தான்... இப்போது காதலில் முகம் விகசித்து இன்னமும் அழகாய் இருந்தாள். இதற்கு எல்லாம் காரணம் அவளவன் என்றால் மிகையில்லை.

அறையை விட்டு வெளியில் வந்தவளை ஆகாஷின் ஆர்ப்பாட்ட குரல் வரவேற்றது...

"இன்றாவது பெண் போல் வெட்கப்பட்டு நிலத்தைப் பார்த்து நடந்து வா பேப்..." என்று அவன் அவளைக் கிண்டலடிக்க...

"யாரது என் மனைவியைக் கிண்டலடிப்பது..." என்றபடி அங்கு வந்த சிவகுமரன் அவளை அணைத்துக் கொள்ள... அவள் அவனது நெஞ்சில் சலுகையாய் சாய்ந்தபடி,

"பாரு சிவூ..." என்று சிணுங்க... அதைக் கண்டு எல்லோரும் வாய்விட்டு சிரித்தனர். சிவகுமரனின் விழிகள் மனைவியை ரசனையுடன் பார்த்தது.

"புதுப் புடவை கட்டலையா?"

"இல்லை... இது தான் பிடிச்சியிருக்கு..." என்றவளை அவன் காதலோடு பார்த்தான்.

ஆகாஷ் அவனது பெற்றோருடனும், கங்கா தனது கணவன் மற்றும் நான்கு வயது மகளுடன் திருமணத்திற்கு வந்திருந்தார்கள். எல்லோரும் குல தெய்வ கோவிலுக்குச் செல்ல... இவர்கள் இருவரும் மகனுடன் தனியே காரில் சென்றனர். ப்ரஷன்ஜித் உற்சாகமாய் வளவளத்தபடி வந்தான். பெற்றோரின் திருமணம் அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஏனென்று புரியாத வயதாக இருந்தாலும் பெற்றோர் சேர்ந்து விட்டார்கள் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. சிறிது நேரத்தில் மூவரும் கோவிலை வந்தடைந்தனர்.

சுற்றிலும் குடும்பத்தினர் நின்றிருக்க இருவரும் குல தெய்வத்தின் முன் விழி மூடி நின்றிருந்தனர். இருவரது மனதிலும் 'இம்மையிலும், மறுமையிலும், எப்பிறப்பிலும் (சிவூ) (அபி) துணையாக வேண்டும்' என்று வேண்டி கொண்டனர். கோவில் அய்யர் பூஜை செய்து தாலியை எடுத்துக் கொண்டு வந்து சிவகுமரன் கையில் கொடுத்தார். அன்று அவன் கட்டிய அதே தாலி... அதைக் கண்டு அவளது விழிகள் கலங்கியது. அவன் விழிகளால் அவளுக்கு ஆறுதல் கூறியபடி கையிலிருந்த தாலியை அவளது கழுத்தருகே கொண்டு சென்றவன் அவளது கழுத்தில் இருந்த அவனது சங்கிலியை கண்டு இனிமையாக அதிர்ந்தான். அவனது பார்வையைக் கண்டவள்,

"என்னைப் பொறுத்தவரையில் இது தான் தாலி சிவூ..." என்று கூற...

"இதுநாள் வரை நான் கவனித்துப் பார்க்கலையே."

"நீ ரொம்ப நல்லவன் சிவூ... என் கண்கள் தாண்டி பார்த்தது இல்லை." என்று கண்சிமிட்டியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது. பின்பு அவளிடம்,

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கச் சம்மதமா அம்முலு?" என்று கேட்க...

"சம்மதம், சம்மதம், சம்மதம்..." என்று சந்தோசத்துடன் ஆர்ப்பரித்தவளின் சந்தோசம் அவனையும் தொற்றிக் கொள்ள... அவன் மனமகிழ்வுடன் அவளது கழுத்தில் தாலி கட்டினான்.

எல்லோரும் அட்சதை, மலர்களைத் தூவி அவர்களை ஆசிர்வதிக்க... ப்ரஷன்ஜித்தும் தனது கைகளில் இருந்த மலர்களை உற்சாகமாய்ப் பெற்றோர் மீது தூவினான்.

"தேங்க்ஸ்டி..." என்ற சிவகுமரன் மனைவியின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட... அவள் உணர்ச்சிவசப்பட்டவளாய் விழிகள் கலங்க அவனைப் பார்த்தவள் சட்டென்று அவனது காலில் விழுந்து பணிந்தாள். அவளது செய்கையில் அவன் தான் பதறிப் போனான்.

"அம்முலு, என்னதிது? எழுந்திரு..." என்க... அவனை அண்ணாந்து பார்த்தவள்,

"என்னுடைய தப்பை எல்லாம் மன்னிச்சிரு சிவூ..." என்று மன்னிப்பு வேண்ட...

"நீ தவறே செய்யவில்லை என்கிறேன்... இதில் மன்னிப்பு எங்கே இருந்து வந்தது?" என்று அவன் கடிந்தபடி அவளைத் தூக்கி நிறுத்தினான்.

இருவரையும் மனநிறைவுடன் பார்த்திருந்தனர் அவர்களது குடும்பத்தினர். இனி அவர்களது வாழ்க்கையில் சந்தோசம் மட்டுமே என்கிற எண்ணமே அவர்களுக்கு நிம்மதியை தந்தது. மீண்டும் எல்லோரும் கிளம்பி வீட்டிற்கு வந்தனர். அவர்களுக்குத் தாத்தாவின் வீட்டில் ஆரத்தி கரைத்து வரவேற்க ஏற்பாடு செய்திருந்ததைக் கண்ட அபிஷரிகா,

"இது எனது பிறந்தவீடு..." என்றவள் அருகில் இருந்த சிவகுமரனின் வீட்டை சுட்டிக்காட்டி,

"அது தான் எனது புகுந்த வீடு." என்க... சிவகுமரன் வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"உன்னோடது எல்லாமே எனக்குப் பிடிக்கும் சிவூ..." அவனது பார்வையை உணர்ந்தவளாய் அவனது பாவை கூற... அவன் தான் நெகிழ்ந்து போனான்.

"இந்தச் சாமானியனை, உன் அந்தஸ்துக்குச் சிறிதும் பொருத்தம் இல்லாதவனை எப்படிடி இந்தளவுக்குக் காதலிக்க முடியுது?"

"காதல் கிறுக்கு இப்படித்தான் கிறுக்குத்தனமாய்க் காதலிக்கும்." என்று குறும்புடன் கூறியவளை கண்டு,

"மொத்ததில் என்னைக் கிறுக்கு பிடிக்க வைக்கின்றாய்..." அவளது எழிலில் மனதை பறி கொடுத்தவனாய் அவன் கூறினான்.

அபிஷரிகாவின் விருப்பப்படி சிவகுமரனின் வீட்டின் முன் ஆரத்தி கரைத்து வரவேற்று அவளை உள்ளே அழைத்துச் சென்றனர். அதிக ஆடம்பரமில்லாத மிகவும் எளிமையான வீடு. அதுவே அவளுக்குப் பிடித்துப் போயிற்று.

"விளக்கேற்றும்மா..." காவேரி பேத்தியை அழைக்க...

"சிவூ, நான் விளக்கேற்றவா?" என்று கேட்டவளை அவன் புரியாது பார்த்தான்.

"இதென்ன கேள்வி அம்முலு... ஏற்று..." என்று அவன் கூற...

"அதுக்கான தகுதி எனக்கு இருக்கா சிவூ?" என்றவளது விழிகள் கலங்கி சிவந்து போனது. அவளது வார்த்தைகளில் அவனுக்கு அன்று தான் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. மானசீகமாகத் தலையில் அடித்துக் கொண்டவன்,

"உன்னை விட யாருக்கும் தகுதி இல்லை. வா..." என்றவன் தானே அவளைப் பூஜையறைக்கு அழைத்துச் சென்றான். கணவனது வார்த்தையில் அவளது மனம் சமாதானமாகியது.

அபிஷரிகா கணவனது வீட்டில் விளக்கேற்றிய பின்பு இருவரும் சேர்ந்து பெரியவர்கள் காலில் விழுந்து

ஆசிர்வாதம் வாங்கினர். சிவகுமரன் தனது அன்னையின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கும் போது மனைவியை விழ சொல்லவில்லை. ஆனால் அவள் ஞாபகமாய் அவனுடன் சேர்ந்து விழுந்தாள். சிவகுமரன் குனிந்தபடி மனைவியை ஆச்சரியத்துடன் திரும்பி பார்க்க...

"உனக்குப் பிடித்தது எல்லாம் எனக்குப் பிடிக்கும்... அன்றே உன் அம்மா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினேனே. ஞாபகம் இல்லையா?" என்று அவள் கேட்க... அவனது விழிகள் ஆச்சரியத்தில் இன்னமும் விரிந்தது.

"அந்தளவுக்கு உன்னைப் பிடிக்கும் சிவூ..." என்றவளை அவன் காதலோடு பார்த்தான்.

"கீழே குனிஞ்சிட்டு என்ன ரொமான்ஸ் பண்ணிக்கிட்டு இருக்கீங்க... போதும் போதும் எழுந்திருங்க..." ஆகாஷ் அவர்களைக் கிண்டலடித்தான். வருங்கால மருமகன் சொன்னது கண்டு வேணியும்,

"பதினாறு பெற்றுப் பெருவாழ்வு வாழுங்கள்." என்று அவசரமாக ஆசிர்வாதம் செய்ய... இருவரும் சிரித்தபடி எழுந்தனர்.

"ஒரு சின்னப் பையனை வச்சிக்கிட்டு இப்படி எல்லாம் ரொமான்ஸ் பண்ண கூடாது..." என்று கூறியபடி ஆகாஷ் ஏக்கத்துடன் யமுனாவை பார்த்தான். அவள் வெட்கத்துடன் தங்கையின் பின் சென்று மறைந்து கொண்டாள்.

"சீக்கிரம் கல்யாணம் பண்ண வேண்டும் என்றால் நீ தான் பெரியவங்க கிட்ட சொல்லணும். அதுக்காக எங்களை ரொமான்ஸ் பண்ண கூடாதுன்னு சொல்வியா?" அபிஷரிகா நண்பனிடம் பாய்ந்தாள்.

"அதை உன் புருசன் கிட்ட சொல்லு..." ஆகாஷ் சிவகுமரனை கேள்வியோடு பார்த்தான்.

"சீக்கிரமே வச்சிரலாம்..." என்ற சிவகுமரனின் முகம் தெளியவில்லை. அதை ஆகாஷ் கவனித்து விட்டான். பிறகு கேட்டுக் கொள்ளலாம் என்று விட்டு விட்டான்.

கங்கா தனது குடும்பத்தினருடன் ஊருக்கு கிளம்பி செல்ல... ஆகாஷும் அவனது பெற்றோருடன் கிளம்பினான். அதற்கு முன் சிவகுமரனிடம் தனியே பேசினான்.

"கல்யாணம் பத்தி பேசும் போது ஏன் ஒரு மாதிரியா இருந்தீங்க சார்?"

"அது வந்து..."

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்க..."

"நானும், அபியும் சேர்ந்திருந்து உங்க கல்யாணத்தை முன்னிருந்து நடத்தணும்ன்னு நான் விருப்பப்படுறேன். ஆனா இப்போது இருக்கும் சூழ்நிலையில்..." என்று தயங்கிய சிவகுமரனை புரியாது பார்த்த ஆகாஷ்,

"இப்போ தான் எல்லாம் சரியாகி விட்டதே சார்..." என்று கேட்க...

"இல்லை ஆகாஷ்... இன்னும் சில பிரச்சனைகள் சரியாகலை."

"பரவாயில்லை சார்... நாங்க காத்திருப்போம்." என்று புரிதலுடன் கூறிய ஆகாஷை அவன் நன்றியுடன் பார்த்தான்.

சிவகுமரன் மீண்டும் வீட்டினுள் வந்த போது பொன்னம்பலம் பேத்தியிடம் கேட்டுக் கொண்டிருந்தார்...

"இங்கே ஏசி கிடையாது. சில வசதிகள் குறைவு அபி... பேசாம நீயும், குமரனும் நம்ம வீட்டுக்கு வந்திருங்க..." என்று கூற...

"இல்லை தாத்தா... சிவாவோட வீடு எப்படி இருந்தாலும் எனக்குப் பிடிக்கும். அவனை நேசிக்கிற மாதிரி தான் அவனுடைய வீட்டையும் நேசிக்கிறேன். நாங்க இங்கேயே இருக்கிறோம்." என்று அவள் கூற... அதைக் கேட்டபடி வந்தவன் மனைவியின் காதலில் உருகித்தான் போனான்.

அதே போல் தனது அன்னை, தங்கைகளுடன் அவள் பாந்தமாகப் பொருந்தி போனதை கண்டவனுக்கு அத்தனை இதமாக இருந்தது. இதைத் தானே அவன் தனது மனைவியிடம் இருந்து எதிர்பார்த்தது.

அன்றிரவு உணவை மொட்டை மாடியில் வைத்து நிலா சோறு சாப்பிட வேண்டும் என்று அபிஷரிகா அடம்பிடித்தாள். அவளது விருப்பத்திற்கேற்ப எல்லோரும் அங்கே சென்றனர். மகனை மடியில் அமர்த்திக் கொண்டு கணவன் அருகில் அமர்ந்திருந்தாள் அபிஷரிகா. அந்தக் கணம் அவளுக்குச் சொர்க்கத்தில் இருப்பது போலிருந்தது. மகிழ்ச்சி, மகிழ்ச்சி, மகிழ்ச்சி மட்டுமே அவளது மனதில்...

வேணி எல்லோருக்கும் உணவை உருட்டி கொடுத்தவர் அபிஷரிகாவின் முறை வந்ததும் அவரது கை தயக்கத்துடன் தேங்கியது. அவளோ தனது கையை நீட்டியபடி அவரைக் கேள்வியாகப் பார்த்தாள்.

"என்னை மன்னிச்சிருங்க சின்னம்மா..." பெரும் தயக்கத்துடன் அவர் தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டார்.

"அதெல்லாம் முடியாது..." என்று பட்டென்று கூறியவளை கண்டு எல்லோரும் திகைத்து போயினர். ஆனால் சிவகுமரன் புன்சிரிப்புடன் மனைவியைப் பார்த்திருந்தான். அவளைப் பற்றித் தான் அவனுக்கு நன்கு தெரியுமே... நிச்சயம் மனைவி தனது அன்னையைக் காயப்படுத்த மாட்டாள் என்கிற நம்பிக்கை அவனுக்கு மலையளவு இருந்தது.

"நீங்க என் மேல் கோபப்பட்டு என் சிவூக்கு வேறு பொண்ணு பார்த்தீங்கல்ல..." அவளது வார்த்தைகளைக் கேட்டு அவர் தனது அநாகரீக செயலை எண்ணி மனம் வெதும்பி தலைகுனிந்தார்.

"அதுக்குத் தண்டனை உண்டு..." என்றவள் கணவன் புறம் திரும்பி,

"தண்டனை கொடுக்கணும் தானே சிவூ..." என்று கேட்க... அவன் அவளைப் பற்றி அறிந்தவனாய் புன்சிரிப்புடன் சம்மதமாய்த் தலையசைக்க... அடுத்த நொடி அபிஷரிகா எம்பி வேணியின் கன்னத்தில் முத்தமிட்டு,

"என்ன தண்டனைன்னா... இனி நீங்க என்னைச் சின்னம்மான்னு கூப்பிட கூடாது. அபின்னு தான் கூப்பிடணும்." என்று மிரட்டுவது போல் அன்பு கட்டளை இட்டவளை கண்டு வேணியின் விழிகள் கலங்கி போனது. இத்தனை வருடங்கள் தனது மகனின் காத்திருப்பு சரியே என்று அவருக்குத் தோன்றியது. இந்த அன்பிற்காக மகன் எத்தனை வருடங்கள் வேண்டுமானாலும் காத்திருக்கலாம் தப்பே இல்லை என்றே அவர் எண்ணினார்.

"கூப்பிட்டா போச்சு சின்... இல்லை இல்லை அபி..." என்று சிரித்தபடி கூறினார் வேணி... அதைக் கண்டு எல்லோரும் நிறைவுடன் சிரித்தனர்.

இரவு உணவு முடிந்து எல்லோரும் படுக்கச் செல்ல... அபிஷரிகா கணவன், மகனுடன் அறைக்குள் நுழைந்தவள் அறையின் தோற்றம் கண்டு திகைத்து போனாள். சிவகுமரன் தூங்கியிருந்த மகனை கட்டிலில் படுக்க வைத்துவிட்டு நிமிர்ந்தவன் மனைவி அப்படியே நிற்பதை கண்டு,

"தூங்கலையா அம்முலு..." என்று கேட்க...

"சிவூ, இதை எல்லாம் எப்போ வாங்கின?" என்றவளின் விழிகள் அங்குப் புதிதாய்ப் போடப்பட்டிருந்த கட்டில், ஏசி அனைத்தையும் வலம் வந்தது.

"உனக்காக எதையும் செய்பவன் நான்... இதைச் செய்ய மாட்டேனா..." என்றுரைத்தபடி அவள் அருகில் வந்தவன்,

"ஐயா கிட்ட நீ பேசினதை கேட்டேன்." என்று விளக்கம் கொடுக்க...

"இதை எல்லாம் செய்யணும்ன்னு அவசியம் இல்லை சிவூ... எப்படியிருந்தாலும் நான் அட்ஜஸ்ட் பண்ணிக்குவேன்."

கடந்த ஐந்தாண்டுகளாக அவள் வாழ்ந்த வாழ்க்கை முறை பற்றித் தான் அவன் ஏற்கெனவே கேள்விப்பட்டு இருந்தானே... அவனது கரங்கள் அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டது. அவன் அணைத்தபடி அப்படியே இருக்க... அவள் அவனை ஏறிட்டு பார்த்து,

"தூங்கலாமா?" என்று கேட்க...

"ம், வா..." என்றவன் அவளை அழைத்து வந்து படுக்கையில் அமர வைத்து அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"குட்நைட்..." என்க...

அவனது செய்கையில் குழப்பம் அடைந்தவள் மகன் அருகில் இருப்பதால் எதுவும் கேட்க தோன்றாது அமைதியாகப் படுத்தாள். வெகுநேரம் உறக்கம் வராது தவித்தவள் பின்பு எழுந்து கணவன் புறம் சென்று அவனுக்கு அருகிலிருந்த சிறு இடத்தில் படுத்துக் கொண்டு அவனை அணைத்து கொண்டாள். அவளது அணைப்பில் அவனது தூக்கம் கலைந்தது.

"என்னடா...?"

"தனியே படுப்பது ஒரு மாதிரியாக இருக்கு சிவூ..." என்றவளை பார்த்தவன் பின்பு மகனை ஓரமாய்ப் படுக்க வைத்துவிட்டு அவனுக்கு அணைவாகத் தலையணை வைத்தவன் பின்பு மனைவி புறம் திரும்பி படுத்து அவளை அணைத்துக் கொண்டான். கணவனது அணைப்பில் அவளுக்கு வேறு எந்தச் சிந்தனைகளும் தோன்றவில்லை. வெகுநாட்களுக்குப் பின் அவள் நிம்மதியாக உறங்கினாள். அவன் தான் விடிய விடிய அவளை யோசனையுடன் பார்த்திருந்தான்.

************************************

மறுநாள் காலையில் எழுந்த சிவகுமரன் நன்கு உறங்கும் மனைவி, மகனை பார்த்தவன் இருவருக்கும் முத்தமிட்டுவிட்டு கட்டிலை விட்டு இறங்கினான். பிறகு குளிப்பதற்காகக் கிணற்றை நோக்கி சென்றவனுக்கு

இன்றைய நாளை போன்று அற்புதமான நாள் வேறில்லை என்றே தோன்றியது. அவனுக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது. ஆனாலும் அவனது மனதினோரம் மனைவி பற்றிய சிறு நெருடல் ஒன்று இருந்து கொண்டே இருந்தது. அவன் அதைப் பற்றி யோசித்தபடி கிணற்றில் குளித்துக் கொண்டிருந்தான். அப்போது அருகில் 'தொப்'பென்ற சத்தம் கேட்டது. அவன் பதறி போய்த் திரும்பி பார்த்தான். அங்கே அவனது எண்ணத்தின் நாயகி அவனைக் கண்டு புன்னகைத்து கொண்டிருந்தாள்.

"இப்போது தான் கால் சரியாகி இருக்கு... இந்த நேரத்தில் மேலேயிருந்து குதிச்சிருக்க... உன்னை..." என்று அவளைக் கடிந்தவன் நீரில் இருந்து அவளை இழுத்துக் கொண்டு வந்து படியில் அமர வைத்து அவளது வலக்காலை பற்றி ஆராய்ந்தான். அவள் அவனது செய்கையைப் புன்னகையுடன் பார்த்திருந்தாள்.

"எனக்கு ஒண்ணும் இல்லை சிவூ பையா..." அவள் சிரித்தபடி அவனது ஈரம் சொட்டிய முன்னுச்சி முடியை கலைத்து விளையாடினாள். அவளை ஏறிட்டு பார்த்தவன்,

"ஒண்ணும் இல்லையா? அன்னைக்கு நீ கிணற்றில் மூழ்கிய பயம் எனக்கு இன்னமும் இருக்கு. உனக்கு எல்லாமே விளையாட்டா போச்சில்ல..." அவன் கோபத்துடன் அவளைக் கடிந்தான்... அவனது அந்தக் கோபத்திலும் அவள் மீதான அக்கறை தான் அதிகம் இருந்தது.

அவளோ கணவனது கோபத்தினைச் சட்டை செய்யாது அவனது உதடுகளில் இருந்து அவளது இதழ்களில் மீது சொட்டிய நீரை தனது இதழ் மடித்து உள்ளிழுக்க... அவளது செய்கையில் அவனது கோபம் பறந்து போக... அவனது பார்வை கணவன் பார்வையாக மாற ஆரம்பித்தது. அவன் மெல்ல அவளை நோக்கி குனிந்தான். அவனது செயலை வரவேற்பது போல் அவள் விழி மூடி அனுமதி அளித்தாள். அப்போது அவனது கண்களில் அவன் கட்டிய தாலி கயிறு விழுந்தது. அடுத்த நொடி அவனது அத்தனை

உணர்வுகளும் அறுந்து விழ... அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் அருகில் அமர்ந்தான். அபிஷரிகா விழிகள் திறந்து கணவனைப் பார்த்தாள். அவன் ஏதோ யோசனையுடன் அமர்ந்திருப்பதைக் கண்டு அவளுக்குப் பயம் பிடித்துக் கொண்டது.

"சிவூ..." அவளது அழைப்பில் அவன் திரும்பி பார்த்தான்.

"நான் ஏதாவது தப்பு பண்ணிட்டேனா?" என்று கேட்டவளை கண்டு அவன் புரியாது விழித்தான்.

"நீ விலகி இருப்பதைப் பார்க்கும் போது எனக்குப் பயமாயிருக்கு சிவூ... நீ இப்படி விலகியிருந்து எனக்குத் தண்டனை கொடுத்து விடாதே."

"ச்சேச்சே, அப்படி எல்லாம் இல்லை." என்றவன் இடது கையால் அவளை அணைத்துக் கொண்டு வலதுகையால் அவளது கையைப் பற்றி அதில் அழுந்த முத்தமிட்டான். அவனது இதழொற்றலில் அவளது அலைப்புற்ற மனம் அமைதியானது.

"உனக்குத் தண்டனை கொடுத்தால் அது எனக்குக் கொடுக்கிற மாதிரி. இனி இப்படிப் பேசாதே."

"பிறகு ஏன்?" அவள் புரியாது அவனை ஏறிட்டாள்.

"எனக்கு மினி மீல்ஸ் வேண்டாம். ஃபுல் மீல்ஸ் தான் வேண்டும்." என்க...

"நீ என்ன சொல்றன்னு எனக்குப் புரியலை."

"புரியாமல் இருப்பதே நல்லது." என்றவன் அவளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான்.

அன்றே எல்லோரும் சென்னைக்குக் கிளம்பி சென்றனர். மகனை மற்றவர்களுடன் அனுப்பி வைத்த சிவகுமரன் தனியே மனைவியுடன் பயணமானான். இருவருக்கும் மட்டுமேயான தனிமை... அவள் கணவனது தோளில் சாய்ந்தபடி அந்தக் கணத்தை அனுபவித்துக் கொண்டு வர... அவன் தான் எதையோ யோசித்தபடி வந்தான்.

சென்னை அடைந்ததும் சிவகுமரன் அவர்களது வீட்டிற்குச் செல்லாது அவள் மட்டும் தனியே குடியிருக்கும் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அவள் கேள்வியாய் அவனைப் பார்த்தாலும் எதுவும் கேட்கவில்லை. காரிலிருந்து இறங்கி வீட்டினுள் வரும் வரை இருவரிடமும் எந்தப் பேச்சும் இல்லை. இருவரிடையே கனத்த மௌனம் நிலவியது.

"உட்கார் அம்முலு..." என்றவனின் குரலுக்கு அடிபணிந்து சோபாவில் அமர்ந்தவளுக்கு இதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போவது போல் அவளுக்குத் தோன்றியது.

சிவகுமரன் மனைவியின் அருகில் அமர்ந்து அவளது கைகளை மன்னிப்பு கேட்பது போல் இறுக பற்றிக் கொண்டான். அவனது செயலில் அவனை ஏறிட்ட அபிஷரிகாவின் விழிகள் கலங்கி இருந்தது. அவளது கலக்கத்தைக் கண்டவனுக்குப் பேச நா எழவில்லை. அவன் தான் நினைத்ததைப் பேச பெரிதும் தயங்கினான். அவனது தயக்கத்தைக் கண்டவள் தனது கலக்கத்தை விட்டொழித்துவிட்டு,

"நீ எது செய்தாலும் அது என் நன்மைக்காகத் தான் இருக்கும். உன் காதல் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது சிவூ... நீ மனசில் இருப்பதைச் சொல்லு." என்று அவள் அவனை ஊக்கப்படுத்தினாள்.

"இந்த நம்பிக்கை ஒன்று போதும் அம்முலு..." என்றவன் ஒரு நொடி பேசாதிருந்தான். பிறகு மெல்ல பேச ஆரம்பித்தான்.

"நம் திருமணம், நம் மகன் இரண்டும் உன்னுடைய கேரியருக்கு இடையூறாக இருக்கக் கூடாதுன்னு நான் நினைக்கிறேன். அதனால் நீ இங்கே இருப்பது தான் சரியாக இருக்கும்."

இது அவள் கூறியது தான்... ஆனால் கணவனின் வாய்மொழியாகக் கேட்கும் போது மிகவும் கஷ்டமாக இருந்தது. இப்போது புதிதாய் ஒப்பந்தம் செய்திருக்கும் படங்களின் எண்ணிக்கை வேறு அவளைப் பயமுறுத்தியது.

இடையில் விபத்து ஏற்பட்டு அதன் விளைவாகப் படப்படிப்பு எல்லாம் தடைப்பட்டு இருக்கிறது. அவளுக்குமே என்ன செய்வது, என்ன சொல்வது என்று தெரியவில்லை. அதேசமயம் கணவன், மகனை பிரிந்திருப்பதும் வேதனையாக இருந்தது.

"நம் வாழ்க்கை உன் கையில் தான் இருக்கிறது அம்முலு... இந்த நொடி நீ எல்லாத்தையும் உதறிட்டு வந்தாலும் எனக்குச் சந்தோசம் தான். அதேசமயம் உனக்கு உன்னுடைய கேரியர் முக்கியமா தோணுச்சுன்னா அதையும் நான் சந்தோசமா ஏத்துக்குவேன்." என்றவனை அவள் தவிப்புடன் பார்த்தாள்.

"ஒருமுறை உன்னுடன் வாழ்ந்துவிட்டால் அதுக்குப் பிறகு என்னால் உன்னைப் பிரிய முடியாது அம்முலு... அதன் பிறகு நான் வாழும் என் வாழ்க்கை முழுமையும் நீ வேண்டும். மீண்டும் கண்ணாமூச்சி ஆட்டமாட எனக்கு விருப்பம் இல்லை. நான் சொல்வது உனக்குப் புரிகிறதா அம்முலு? எனக்கு மினி மீல்ஸ் வேண்டாம்... ஃபுல் மீல்ஸ் தான் வேண்டும்." இப்போது அவன் கூறியதற்கான அர்த்தம் புரிந்ததில் அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

"எல்லாமே உன் விருப்பம்... உன் முடிவு... நான் எந்த விதத்திலும் உன்னைத் தொந்தரவு பண்ண மாட்டேன். ப்ரஷன் பற்றி நீ கவலைப்படத் தேவையில்லை. நான் அவனைப் பார்த்துக் கொள்கிறேன். எனக்கு நீ வேண்டும் தான்... நீ என்றால் உன்னோடு, உன்னோடு அடையாளமும் சேர்ந்து வேண்டும். எனக்கு என் மனைவி அம்முலுவும் முக்கியம். அவள் உயிராக நேசிக்கும் நடிகை அபிஷரிகாவும் முக்கியம்."

"சிவூ..." அவனது வார்த்தைகள் கொடுத்த தாக்கத்தில் அவள் உணர்ச்சிவசப்பட்டு அவனை இறுக அணைத்து கொண்டாள்.

"இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னு எனக்குத் தெரியலை சிவூ... குழப்பமா இருக்கு." என்றவளை ஆறுதலாய்

அணைத்து கொண்டவன்,

"உனக்காக நான் என் ஆயுள் முழுமைக்கும் காத்திருக்கத் தயார் அம்முலு... நீ கிழவியானாலும் இந்தக் கிழவன் சிவூ உனக்காகக் காத்துக்கிட்டு இருப்பான்." என்றவனது வார்த்தையில் இருந்தது எல்லாம் காதல், காதல், காதல் மட்டுமே...!

காதல் உடல் சார்ந்ததல்ல... அது மனம் சார்ந்தது என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கும் கணவனைக் கண்டு அவளுக்குக் காதல் பெருக்கெடுத்தது. இதோ இப்போது கூட அவன் நினைத்தால் அவளிடம் கணவனாக உரிமை எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் அதைச் செய்யாது கண்ணியம் காக்கும் கணவனைக் கண்டு அவள் மனம் மகிழ்ந்து போனாள்.

கணவனுக்காக எதையாவது செய்ய வேண்டும் என்று அவளது காதல் மனம் தவித்தது. ஆனால் என்ன செய்வது என்று தான் அவளுக்குத் தெரியவில்லை!!!

****************************

அபிஷரிகா தனது கை விரல்களை மாற்றி மாற்றி எண்ணி கொண்டிருந்தாள். எப்படி எண்ணினாலும் கை விரல்களின் எண்ணிக்கை ஒன்று தானே. அவளுக்குச் சலிப்பாக இருந்தது. விசயம் ஒன்றுமில்லை... நாளை கணவன், மகனை காண்பதற்காகக் காத்திருக்கும் மணித்துளிகளைத் தான் அவள் எண்ணி கொண்டிருந்தது. அன்று அவளை வீட்டில் விட்டு விட்டு போன சிவகுமரன் அதன் பிறகு அவளை அடிக்கடி வந்து பார்த்துவிட்டுச் சென்றான். மகனும் அவ்வப்போது வந்து போவான். மகனிடம் என்ன கூறியிருந்தானோ தெரியாது... அவன் அன்னையைத் தன்னுடன் வருமாறு அழைக்கவில்லை. அவர்களது குடும்பத்தினரும் அவர்களைப் பற்றி அறிந்தவர்களாய் அவர்களது விசயத்தில் தலையிடாது அமைதியாக ஒதுங்கி கொண்டனர்.

இதோ இப்போதும் அபிஷரிகா கணவன், மகனை பற்றித் தான் நினைத்து கொண்டிருந்தாள். சிறிது நேரம் யோசித்துக் கொண்டிருந்தவள் இது வேலைக்கு ஆகாது என்றெண்ணி கணவனுக்கு அழைத்தாள். மறுபக்கம் அவன் எடுத்ததும் அவள் குறும்புடன்,

"ஷிவாரிகா புரொடக்சனா?" என்று கேட்க... அதைக் கேட்டு சிவகுமரனுக்குச் சிரிப்பு வந்தது.

அபிஷரிகாவுக்குத் தொழில் பற்றி ஒன்றும் தெரியாததால் அவள் தயாரிப்பு நிறுவனத்தை மீண்டும் கணவன் வசம் ஒப்படைத்துவிட்டாள். தயாரிப்பு நிறுவனம் மட்டுமல்ல அவர்களது சொத்துக்கள் எல்லாமே இருவரது பெயருக்குச் சரிசமமாகப் பிரிக்கப்பட்டு இருந்தது. இது எல்லாமே அவனது ஏற்பாடு தான். எதிலுமே தாங்கள் பிரிய கூடாது என்பதில் அவன் மிகவும் தீவிரமாக இருந்தான். அவளது காதல் ஒரு மாதிரி என்றால்... அவனது காதல் வேறு மாதிரி...

"ஆம், ஷிவாரிகா புரொடக்சன்ஸ் தான்... ஷிவாரிகாவை புரொடியூஸ் பண்ணும் புரொடக்சன்ஸ் தான்..." என்று இருபொருள்படக் கூறியவனைக் கண்டு அவளது முகம் வெட்கத்தில் சிவந்து போனது.

"இப்படி ஃபோனில் குடும்பம் நடத்தினால் குழந்தை பிறக்காது சிவூ..." அவள் அவனை நக்கலடித்தாள். அதைக் கேட்டு அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"என்ன விசயம் சொல்லு? இந்த நேரத்தில் கூப்பிட்டிருக்க...?"

"ப்ரஷூ என்ன பண்றான்?" அவளது குரலில் பாசம் இழையோடியது.

"தூங்கிட்டு இருக்கான். காலையில் பேசு..."

"நான் உன் கூடப் பேசத்தான் அழைத்தேன்."

"ம், சொல்லு..."

"ப்ச், என்ன சொல்லு...? ஏதாவது நச்சுன்னு இச் ஒண்ணு கொடுடா..." என்று அவள் சிணுங்க...

"நேரில் வந்து கொடுக்கவா? அதுக்குப் பிறகு நீ என் கூடவே வந்திரணும். டீல் ஓகேவா?" என்றவனைக் கண்டு அவள் அமைதியாகி போனாள்.

"மௌனம் சம்மதத்துக்கு அறிகுறியா?"

"இல்லை... இல்லை..." அவள் அவசரமாக மறுக்க... அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"என்ன விசயம் சொல்லு அம்முலு...?"

"நம்ம புரொடக்சனில் நான் ஒரு படமே பண்ணலாம்ன்னு இருக்கேன்."

"வாவ், உனக்கு இல்லாத படமா? மோஸ்ட் வெல்கம் மை ஸ்வீட் ஹார்ட்." அவன் உண்மையான சந்தோசத்துடன் ஆர்ப்பரிக்க...

"நீ தினமும் ஷூட்டிங் ஸ்பாட்டுக்கு வரணும் சிவூ..." அவளது மனதில் இருப்பது அவனுக்குப் புரிய ஆரம்பித்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது,

"தினமும் வந்தால் நியூஸ்பேப்பரில் 'நடிகை அபிஷரிகாவுக்கும், தொழிலதிபர் சிவகுமரனுக்கும் கள்ளத்தொடர்பு'ன்னு கொட்டை எழுத்தில் செய்தி போடுவான் பரவாயில்லையா?" என்று கேலியாய் கேட்க...

"பரவாயில்லை..."

"உனக்கு என்னம்மா சாதாரணமா சொல்லிட்ட... ஆனா என் மனைவிக்கு இந்த விசயம் தெரிந்தால் கதக்களி ஆடிவிடுவாள்." என்று அவன் சிரிப்பை அடக்கி கொண்டு கூற...

"சிவூ..." என்று சிணுங்கியவளிடம்,

"நீ என்னைத் தினமும் பார்க்க இது ஒரு சாக்கு. அப்படித்தானே..." என்று சிரித்தவன்,

"யாரை பற்றியும் எனக்குக் கவலை... நான் வருகிறேன். நாளையே அக்ரிமெண்ட்டில் சைன் பண்ணலாமா?" என்று கேட்க...

"ம்ஹூம், அக்ரிமென்ட் படிச்சு பார்க்க ஒரு நாள், அதைப் பற்றி விவாதிக்க ஒரு நாள், அதுக்குப் பிறகு தான் சைன் பண்ணுவேன்."

தன்னைச் சந்திப்பதற்காக விதம் விதமாய் யோசிக்கும் மனைவியைக் கண்டு அவனுக்குக் காதல் அதிகரித்தது. அடுத்த நொடி அவன் மனைவி கேட்ட முத்திரையை அலைப்பேசி வாயிலாக அவளுக்கு அனுப்பி வைத்தான். அதை விழிமூடி சொட்டு சொட்டாய் தன்னுள் கிரகித்துக் கொண்ட அபிஷரிகா,

"தேங்க்ஸ் சிவூ, தேங்க்ஸ்..." என்றவளின் குரல் உருகி குழைந்திருந்தது. அவளது எண்ணவோட்டத்தை அறிந்தவனாய் அவன் அவளிடம் சிரிக்கச் சிரிக்க வேறு கதைகளைப் பேசி அவளின் மனதை மாற்றிய பிறகே அலைப்பேசியை வைத்தான்.

அன்று ஒரு படத்துவக்க விழாவிற்கு அபிஷரிகா கிளம்பி கொண்டிருந்தாள். இதற்குச் சிவகுமரன் வருவதாகக் கூறியிருந்தான். அதனால் அவள் சிரத்தை எடுத்துத் தன்னை அழகாக அலங்கரித்துக் கொண்டாள். சந்தன நிற புடவை அவளது எலுமிச்சை நிறத்திற்கு அத்தனை அழகாக இருந்தது. தனது அழகின் மீதான கர்வத்துடனும், தன்னைக் கண்டதும் கணவனது விழிகளில் தோன்றும் மயக்கத்தின் மீதான பெருமையுடனும் அவள் விழா நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தாள். ஆனால் அங்கே அவளது கணவன் அவளது வரவினை அறியாது அந்தப் படத்தின் நாயகியுடன் சுவாரசியமாகப் பேசி கொண்டிருந்தான். அந்தக் காட்சியைக் கண்ட நொடி அபிஷரிகாவினுள் உறங்கி கொண்டிருந்த 'பொசசிவ்னெஸ்' மீண்டும் தலை தூக்க ஆரம்பித்தது.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 28

காரை ஓட்டி கொண்டிருந்த சிவகுமரன் மனைவியைத் திரும்பி திரும்பி பார்த்தபடி வந்தான். அவளது அதிகப்படியான அமைதி அவனுள் கிலியை மூட்டிய போதும் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது இருந்தான். அபிஷரிகாவோ கொதிக்கும் மனநிலையில் கொதித்துக் கொண்டிருந்தாள். அவளை எதிர்பார்க்காது, அவளது வரவினை எதிர்பார்க்காது கணவன் அந்த நடிகையுடன் பேசி கொண்டிருந்தது அவளுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. அவளைக் கண்ட பிறகு கணவனது பார்வை அவளைத் தவிர வேறு யாரையும் பார்க்கவில்லை தான்... அது அவளுக்கு ஆறுதலாக இருந்த போதும் மனதில் ஏனோ கடுப்பு இருந்து கொண்டே இருந்தது. அதனால் தான் அவள் தனது காரில் ஏறாது அவனது காரிலேறினாள். ஊடகங்கள் எல்லாம் இருவரையும் மாற்றி மாற்றிப் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டது. அவளுக்கு இருந்த மனநிலையில் அவள் எதையும் கண்டு கொள்ளவில்லை. அவனும் இந்த விசயத்தைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. மனைவியுடன் தானே கிசுகிசு எழுத போகிறார்கள் என்று நினைத்தவன் அதை மகிழ்ச்சியுடனே வரவேற்றான்.

"அம்முலு, இந்தப் புடவையில் ரொம்ப அழகாயிருக்கடி..." என்றவனைத் திரும்பி பார்த்தவள் அவனை முறைத்து விட்டு மீண்டும் திரும்பி கொண்டாள்.

'என்னாச்சு இவளுக்கு...?' அவன் யோசித்தபடி சாலையில் கவனத்தைப் பதித்தான்.

அவளது வீட்டில் அவளை இறக்கிவிடும் போதும் அவள் எதுவும் பேசவில்லை. அதை உணர்ந்தவன் மனம் கேட்காது காரை விட்டு இறங்கி அவளின் பின்னேயே வந்தான். கணவனின் வருகையை அவள் உணர்ந்தாலும் தனது

நடையை நிறுத்தவில்லை. வீட்டிற்குள் இருவரும் நுழைந்ததும் அவள் கதவை மூடிவிட்டு அவனையே பார்த்தாள். அவனும் புரியாது அவளைப் பார்த்தான்.

"கிஸ் மீ சிவு..." என்றவளை வியப்பாய் பார்த்தவன் அவள் அருகே வந்து நெருங்கி நின்றான்.

"முத்தம் கொடுத்தால் மொத்தமாய் எடுத்து கொள்வேன்... வசதி எப்படி?" என்று அவன் குறும்புடன் கேட்க...

"இப்ப கிஸ் கொடுக்கப் போறியா இல்லையா?" அவள் அவனைக் கடுப்புடன் பார்த்தாள்.

"என்னாச்சுடி எதுக்கு இந்தக் கோபம்?" அவளது பிடிவாதம் அவனுக்குப் புரியவில்லை.

"எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும். நீ என்னை அவாய்ட் பண்ணிட்டு அவள் பின்னாடி போகலாம்ன்னு பார்க்கிறியா?" அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றியபடி அவள் கோபத்துடன் கேட்க... அப்போது தான் அவனுக்கு மூளையில் 'பல்ப்' எரிய ஆரம்பித்தது. அவளது கோபத்தைத் தான் தேவையில்லாது கிளப்பி விட்டதை உணர்ந்தவன் அடுத்த நொடி அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

"விடு என்னை... விடுடா என்னை..." என்று அவள் அவனது அணைப்பில் இருந்து திமிற துவங்கினாள். அவளது திமிறலை எல்லாம் அசால்ட்டாய் அடக்கியவன் அவளை மேலும் தன்னுடன் இறுக்கி அணைத்துக் கொண்டு அவளது உச்சந்தலையில் தனது உதட்டினை அழுத்தமாய்ப்

பதித்தான். அவனது அணைப்பு கொடுத்த ஆறுதல், பாதுகாப்பில் அவள் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கினாள்.

"ஏன்டா அவள் கூடப் பேசின...?" என்று மீண்டும் மீண்டும் கண்ணீர் குரலில் கேட்டவளின் நிலையைக் கண்டு அவனுக்கும் கண்ணீர் துளிர்த்தது. அந்த நொடி அவளைக் கண்டு அவன் கோபம் கொள்ளவில்லை. மாறாக அவன் மீதான அவளது ஆழமான காதலை தான் அவன் உணர்ந்தான்.

"ப்ச், இதுக்கு எல்லாம் கோபப்படுவாங்களா அம்முலு...? அந்தப் பொண்ணு கிட்ட பேசியது மரியாதை நிமித்தமாய்... மற்றபடி வேறு எதுவும் இல்லை. ஆனால் எனக்கு நீ வேறு... உன்னோட இடத்தை எந்தப் பெண்ணாலும் நிரப்ப முடியாது."

"நிஜமா?"

"இதில் எல்லாம் யாராவது பொய் சொல்வாங்களா?"

"எனக்கு என்னமோ பயமாயிருக்கு சிவூ..." என்றவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள். அவன் அவளை அழைத்து வந்து சோபாவில் அமர வைத்து தானும் உடன் அமர்ந்தான்.

"எதுக்கு இந்தப் பயம் அம்முலு? நான் எப்பவுமே உன்னுடையவன் தான்... இவ்வளவு பயம் இருக்கிறவள் எல்லோர் முன்னும் ஒரே ஒரு வார்த்தை சொன்னால் தான் என்ன?"

"என்ன வார்த்தை சிவூ...?"

"மிஸ்டர். அபிஷரிகா நான் தான்னு எல்லோர் முன்பும் நீ சொன்னால் அதுக்குப் பிறகு யாரும் என்னிடம் உரிமை கொண்டாடிட்டு வர மாட்டாங்க. ஏன்னா என் ரௌடி பேபி பத்தி எல்லோருக்கும் தெரியும்." என்று புன்னகைத்தவனைக் கண்டு அவளுக்கும் சிரிப்பு வந்தது.

"நான் உன்னை ரொம்பப் படுத்துறேன் இல்லையா?"

"நீ வேணும்ன்னு தானே வலிய விளம்பரம் கொடுத்து உன்னை வரவழைச்சேன். அதனால் என்னைப் படுத்துவதற்கு உனக்கு ஃபுல் ரைட்ஸ் இருக்கு..." என்றவனை அவள் விழி விரிய ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"வீட்டில் இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி நெருக்கடி கொடுத்தப்போ மறுக்க வழியில்லாம ப்ரஷனை கை காட்டினேன். அவன் என்னடான்னா என்னை இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கோங்கன்னு சொல்றான்."

"இந்த விசயத்தில் ப்ரஷூ மேல் எனக்குக் கோபம் இருக்கு..." என்று கோபத்தில் முறுக்கி கொண்டவளை அணைத்து கொண்டவன்,

"அவன் என்னை மட்டுமே நினைத்துப் பார்த்தான். உன் கூட இருந்திருந்தால் நீ படும் கஷ்டத்தையும் அவன் உணர்ந்திருப்பான். அதுவும் ஒரு விதத்தில் நல்லது தான்..." என்க...

"எப்படி?" அவள் புரியாது அவனைப் பார்த்தாள்.

"உன் பொசசிவ் குணம் தான் எனக்குத் தெரியுமே... அந்த இன்டர்வியூ பார்த்து நிச்சயம் நீ என்னைத் தேடி வந்து சண்டை போடுவன்னு ஒரு நப்பாசை தான்..."

"இடைப்பட்ட ஐந்து வருடங்களை நீ மறந்துட்ட சிவூ..." என்றவளின் விழிகளில் அத்தனை வலி தெரிந்தது.

"என்னைத் தேடினியா அம்முலு?" அவளது வலி உணர்ந்தவன் அவளைத் திகைப்பாய் பார்த்தான்.

"ம், ம்... ரொம்ப..." என்றவளுக்கு அழுகை முட்டி கொண்டு வந்தது.

"சாரிடி சாரி... அந்த நேரத்தில் எனக்கு எதுவுமே ஓடலை. கையிலிருக்கும் குழந்தை, அதன் நலன் மட்டும் தான் மனசில் இருந்தது. அவனை வளர்த்து ஆளாக்குவது மட்டும் தான் என் நினைவில் இருந்தது. நீ என்னைப் பிடிக்காது விலகி போனதால் என் எண்ணத்தில் இருந்து நீயும் பின்னுக்குப் போயிட்ட... ஐஞ்சு வருசம் வேறெந்த சிந்தனையும் இல்லாது ஒருவித தவ வாழ்க்கை தான் வாழ்ந்தேன். மீண்டும் திருமணம்ன்னு சொன்னதும் தான் எனக்கு உன் ஞாபகம் வந்தது. உன் மேல் கோபமும் வந்தது. ஆனா இப்போ அதை எல்லாம் நினைச்சு ரொம்ப வருத்தப்படுறேன் அம்முலு..."

"விடு சிவூ... தவறு எல்லாம் என் பெயரில் தான்..."

"இல்லை, இல்லை... என் பெயரில் தான்..."

"சரி, நாம இரண்டு பேருமே தவறு செய்திருக்கிறோம். போதுமா?"

"போதும் போதும்..." என்றவன் மேலே தொடர்ந்தான்...

"அதுக்குப் பிறகு தான் நந்தகுமார் சாரை தேடி போனேன். அவர் தான் உன்னைப் பற்றிச் சொன்னார்." அவளுக்குக் கோவிலில் வேலை கிடைக்கச் செய்தது, தன்னிடம் இருந்து பணம் பெற்று அவர் அவளுக்கு உதவியது என்று எல்லாம் கூறியவன்,

"அவர் இது பத்தி என்னிடம் சொன்னதே இல்லை. நான் கேட்கவும் தான் சொன்னார். அவர் சொன்னதும் ரொம்பவே கஷ்டமா போயிருச்சு... உன்னைக் கஷ்டப்பட விட்டுட்டு நான் மட்டும் சொகுசா வாழ்ந்திருக்கேனே என்று என் மேலே எனக்குக் கோபம்... அதனால் தான் உன்னோட நடிப்புத் தாகம் தெரிந்து ரவியை மீண்டும் அனுப்பினேன். என் எண்ணம் நிறைவேறியது. அப்பவும் நாம சேர்ந்து வாழணும்ன்னு எல்லாம் நினைக்கலை. உன்னை நல்ல நிலைமைக்குக் கொண்டு வரணும்ன்னு தான் நினைச்சேன்."

"அதான் பார்த்தேனே மேடையில் வச்சு டிவோர்ஸ் கேட்டியே." அவள் கோபத்துடன் கழுத்தை வெட்டி கொண்டு அவனை ஒரு பார்வை பார்த்தாள்.

"ஹா ஹா... நான் வரும் போது அம்மணி பார்த்த பார்வை அப்படி இருந்தது... உன் கண்ணில் இருந்த மயக்கம் எனக்கு அப்படி ஒரு சந்தோசத்தைக் கொடுத்தது. அதான் உன்னைச் சீண்டி பார்த்தேன்." என்று அவன் சிரித்தான்.

"அது உன் கிட்ட மட்டும் உண்டான மயக்கம் சிவூ... அத்தனை எளிதில் தெளியாது." அவளது வார்த்தைகளில் அத்தனை காதல் சொட்டியது.

"தெளியணும்ன்னு யார் சொன்னது... தெளியவே வேண்டாம்..." என்றவன்,

"நான் ஒண்ணு சொல்லவா? உனக்கு மட்டும் தான் பொசசிவ் குணம் இருக்குன்னு நினைக்காதே. எனக்கும் இருக்கு. அன்னைக்குப் படப்பிடிப்பில் அவன் உன் ஜாக்கெட்டை கிழிச்சப்போ எனக்கு வந்த கோபத்துக்கு..." அதை நினைத்து பார்த்தவனுக்கு இப்போதும் கோபம் வந்தது.

"அது நடிப்பு தானே சிவூ... அவன் வேணும்ன்னே பண்ணலை."

"அது அறிவுக்குத் தெரிஞ்சாலும் மனசுக்கு தெரியலையே. அப்படியொரு கோபம் வந்தது. நீ பொசசிவ்னெஸை வெளிப்படையா காட்டுகிறாய். நான் வெளியில் காட்டலை... அவ்வளவு தான் வித்தியாசம். இப்போ சந்தேகம் தீர்ந்ததா?"

"ம், ம்..." என்றவளை அணைத்துக் கொண்டு,

"இனி பெண்களைக் கண்டால் பத்தடி தூரம் தள்ளி நிற்கிறேன் போதுமா?" என்று அவளது காதோரம் குனிந்து அவன் கூற...

"அப்படி எல்லாம் வேண்டாம். நீ இயல்பாய் இரு சிவூ... நான் என் குணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் மாற்றிக் கொள்ள

முயற்சிக்கிறேன்." என்று புரிதலுடன் கூறியவளை அவன் நிறைவுடன் பார்த்தான்.

***************************

அலுவலகத்தில் இருந்த சிவகுமரன் தான் கேட்ட செய்தியை அறிந்து அத்தனை சந்தோசம் கொண்டான். மீண்டும் மீண்டும் கேட்டு உறுதி செய்து கொண்டவன் அடுத்த நொடி மனைவிக்கு அழைத்தான். மறுமுனையில் அவள் எடுத்ததும்,

"எங்கே இருக்க அம்முலு...?" என்று கேட்க...

"வீட்டில் தான் சிவூ... லேட் நைட் ஷூட்டிங் முடிச்சு இப்போ வந்தேன்."

"ஓகே... இப்போ நான் உன்னைப் பார்க்க வருகிறேன்." கணவன் கூறியதும் அவளது சோர்வெல்லாம் காணாமல் போனது. அவள் உற்சாகமாக அவனை வரவேற்க தயாரானாள்.

அடுத்தச் சில நிமிடங்களில் வீட்டின் அழைப்பு மணி சத்தத்தில் அபிஷரிகா முகம் மலர வந்து கதவை திறந்தாள். அவள் நினைத்தபடி சிவகுமரன் தான் அங்கு நின்றிருந்தான்.

"சிவூ..." பெரும் புன்னகையுடன் தன்னை வரவேற்ற மனைவியைப் பார்த்தபடி உள்ளே நுழைந்தவன் கதவை தாளிட்டுவிட்டு திரும்பிய அடுத்த நொடி அவளை உற்சாகத்துடன் தூக்கி சுற்றியிருந்தான்.

"வாழ்த்துகள் அம்முலு..." என்ற கணவனை அபிஷ்ரிகா புரியாது பார்த்தாலும் அவனது மகிழ்ச்சி அவளையும் மகிழ்ச்சியடையச் செய்து அவளது முகத்தை மலர செய்தது. அவள் சந்தோச மிகுதியில் குனிந்து அவனது நெற்றியில் முத்தமிட... சிவகுமரன் விழிகள் மூடி மனைவியின் முத்தத்தை அனுபவித்து ரசித்தான்.

"சிவூ, நான் அம்மாவாகப் போகிறேனா?" மனைவியின் குரலில் அவனது மோனநிலை கலைந்தது. அவன் விழி திறந்து அவளைப் புரியாது பார்த்தபடி கீழே இறக்கிவிட்டான். அவள் எச்சரிக்கையுடன் அவனை விட்டு சற்று தள்ளி நின்றவள்,

"நீ குழந்தை உண்டாகி இருக்கியா சிவூ...?" என்று நமட்டு சிரிப்புடன் கேட்க... அவள் கூறியதை கேட்டு முதலில் திகைத்தவன் பின்பு,

"அடிங்..." என்று அவன் நாக்கை துருத்தியபடி கையை ஓங்கி கொண்டு அவளை அடிக்க வர...

"நீ திடீர்ன்னு வாழ்த்துச் சொன்னால் நான் அப்படித்தான் இடக்குமடக்காக யோசிப்பேன்." என்று கணவனைக் கேலி செய்தவள் அவனது கைகளுக்கு அகப்படாமல் அவனுக்குப் பழிப்பு காட்டியபடி கலகலவெனச் சிரித்தபடி ஓடினாள். இரண்டே எட்டில் அவளை எட்டிப்பிடித்துத் தனக்குள் அடக்கியவன்,

"உன்னை என்ன செய்கிறேன் பார்..." என்றவனின் பிடியில் இருந்து அவள் திமிறினாள்.

"விடு சிவூ... தப்பு உன் மேல் தானிருக்கு..." என்று கலகலவெனச் சிரித்தவளை வாஞ்சையுடன் பார்த்திருந்தவன்,

"உனக்குச் சிறந்த நடிகைக்கான தேசிய விருது கிடைச்சிருக்கு. அதுவும் ஷிவாரிகா படத்திற்கு..." என்று கூற... அவன் சொன்னதைக் கேட்டு அவள் இனிய அதிர்ச்சியில் பேச்சற்று போனவளாய் அவனை இமைக்க மறந்து பார்த்திருந்தாள்.

"ரொம்பச் சந்தோசமா இருக்கு அம்முலு... நீ சாதிச்சிட்ட..." என்றவனின் நெஞ்சில் சுகமாய்ச் சாய்ந்து கொண்டு,

"இதுக்குக் காரணம் நீ தான் சிவூ..." என்றவளுக்கு அதீத மகிழ்ச்சியில் கண்ணீர் துளிர்த்தது.

"நடிப்புக்கான உன்னுடைய அர்ப்பணிப்பு தான் இதற்குக் காரணம். இன்னொன்னு உனக்குத் தெரியுமா? சிறந்த படத்துக்கான விருதும் ஷிவாரிகாவுக்குத் தான் கிடைச்சிருக்கு. இரட்டிப்பு சந்தோசம்." என்றவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாய் இருந்தது. அவளுக்குமே சந்தோசமாக இருந்தது.

ஜனாதிபதி கையால் விருது வாங்கிய போது அபிஷரிகாவிற்கு இப்பிறவிக்கான பயனை அடைந்துவிட்டது போல் தோன்றியது. அந்தளவிற்கு அவள் நடிப்பை நேசித்தாள். அவளது எண்ணம் அறிந்து கணவன் தனது உறவை, உரிமையை விட்டு கொடுத்து விலகியிருப்பது அவளுக்குச் சந்தோசத்தைக் கொடுத்த போதும் ஏதோ ஒன்றை இழந்தார் போன்று அவளுள் வலி தோன்றுவதை அவளால் தவிர்க்க முடியவில்லை. இதற்கு

எல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அவள் மனதில் உறுதி எடுத்து கொண்டாள்.

அபிஷரிகா சென்னை வந்ததும் தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று அவளைப் பேட்டி எடுக்க அழைத்தது. அவள் மட்டுமல்ல, படத்தின் தயாரிப்பாளர் சிவகுமரன், இயக்குநர் ரவி மற்றும் அதில் நடித்த கதாநாயகன் அனைவருக்கும் அழைப்பு விடுத்திருந்தது. பேட்டியின் போது அபிஷரிகா கதாநாயகன் அருகில் அமராது அவளது நாயகன் அருகில் அமர்ந்தாள். சிவகுமரன் இதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை. மனைவியைப் பற்றித் தான் அவனுக்குத் தெரியுமே. ரவியைத் தவிர, மற்றவர்கள் அனைவரும் புருவங்களை உயர்த்தினர். அடுத்து அவள் செய்த செயல் மற்றவர்களை மட்டுமல்லாது சிவகுமரனையும் ஆச்சரியப்படுத்தியது. அவள் கணவனது கரத்தோடு தனது கரத்தினைக் கோர்த்தபடி அவன் அருகில் நெருங்கி அமர்ந்தாள். பேட்டி ஆரம்பமானது... படத்தைப் பற்றிய கேள்விகள், பதில்கள் முடிந்ததும் அபிஷரிகா பேச ஆரம்பித்தாள்.

"இந்த விருதை எனது கணவருக்குச் சமர்ப்பிக்கிறேன்..." என்று அதிரடியாய் ஆரம்பித்தவளை கண்டு எல்லோரும் திகைத்துப் போய்ப் பார்க்க... சிவகுமரன் மனைவியைப் புன்னகையுடன் பார்த்திருந்தான்.

"மிஸ்டர். சிவகுமரனோடு என்னை இணைத்து எத்தனையோ கிசுகிசுக்கள் வந்திருக்கிறது. அதை நாங்க மறுத்ததும் இல்லை... ஆமோதித்ததும் இல்லை. ஆனால் இப்போது நான் அதை ஆமோதித்துப் பேச வந்திருக்கிறேன். ஆம், மிஸ்டர். சிவகுமரன் தான் என்னுடைய கணவர். ஏழு வருடங்களுக்கு முன் எங்களுக்குத் திருமணம் நடந்தது. இப்போது ஆறு வயதில் எங்களுக்கு ஒரு மகன் இருக்கிறார். என்னுடைய

வெற்றிக்கு முழுக்க முழுக்கக் காரணம் எனது கணவர். ஆணின் வெற்றிக்குப் பின் பெண் இருப்பது போல், என்னுடைய வெற்றிக்குப் பின் எனது கணவர் இருக்கிறார். இவரைப் போன்று ஒரு கணவர் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்கணும்." என்றவளின் குரலில் தான் எத்தனை கம்பீரம்! எத்தனை காதல்...!

அவள் கூறியது அவளது கணவனுக்கு மட்டுமல்ல அனைவருக்குமே இனிய அதிர்ச்சி தான்...தங்களது உறவை ஊரறிய செய்த மனைவியைச் சிவகுமரன் மன நெகிழ்வுடன் பார்த்திருந்தான். அவனுக்கு வேண்டியது இது தானே... அவளது விழிகள் பதிலுக்குக் கணவனைக் காதலோடு வருடி கொடுத்தது. பேட்டி கண்டு கொண்டிருந்த மக்கள் அனைவருக்கும் அவர்களது திருமணச் செய்தி தெரிந்துவிட்டது. பேட்டி முடிந்து வெளியில் வந்த அபிஷரிகாவின் கையைப் பற்றிய சிவகுமரன்,

"நம்ம வீட்டுக்கு போகலாமா?" என்று கேட்க... அவள் விழிகளில் விழிநீர் துளிர்க்க சந்தோசத்துடன் தலையசைத்தாள்.

வீட்டிற்கு வந்தவளை முறையாக ஆரத்தி சுற்றி வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றனர். அன்னையின் வருகையைக் கண்டு ப்ரஷன்ஜித் சந்தோசத்தில் ஆர்ப்பரித்தான். அதைவிட அவள் அங்கேயே இருக்கப் போவதாகக் கூறிய போது அவன் எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்தான். அன்று முழுவதும் அவன் அன்னையுடனே சுற்றிக் கொண்டு திரிந்தான். மகனது ஏக்கம் புரிந்து அவளும் அவனை அரவணைத்து கொண்டாள். இருவரது பாசப்பிணைப்பிற்கு இடையில் சிவகுமரன் கூட வராது தள்ளியே நின்றிருந்தான்.

இரவு அபிஷரிகா மடியிலேயே படுத்து ப்ரஷன்ஜித் உறங்கிவிட... சிவகுமரன் அவனை எடுத்துப் படுக்கையில் போட முயன்ற போது,

"இருக்கட்டும் சிவூ..." என்றவளது விழிகள் மகனை பாசத்துடன் வருடி கொண்டிருந்தது. மனைவியின் மனநிலையை உணர்ந்தவனாய் அவள் அருகில் அமர்ந்தவன் அவளைத் தனது தோளில் சாய்ந்து பின்னால் இருந்து அணைத்துக் கொண்டான்.

"இதை நான் எதிர்பார்க்கவே இல்லை அம்முலு... ரொம்பச் சந்தோசமாயிருக்கு..." என்றவனை அண்ணாந்து பார்த்தவள்,

"இதுக்கு மேல் உன்னையும், மகனையும் விட்டுப் பிரிந்திருக்க என்னால் முடியலை சிவூ..." என்றவளது விழிகள் கலங்கி போயிற்று.

"நீ என்னைத் தேடி வருவதற்காகத் தான் நான் இத்தனை நாள் காத்திருந்தேன். இனி நீயே நினைச்சாலும் நான் உன்னைப் போக விட மாட்டேன்." என்றவன்,

"இதனால் உன் கேரியர் பாதிக்காதா அம்முலு?" என்று கேட்க...

"கேரியர் போதும்ன்னு முடிவு எடுத்துட்டேன் சிவூ... அதையும் மீறி வரும் படங்களை மட்டும் நடித்தால் போதும். உன்னையும், மகனையும் விட எனக்கு என்னோட கேரியர் முக்கியம் இல்லை." என்றவளை கண்டு அவனது மனம் காதலாய் நிறைந்து போனது. அவன் இதைத் தானே எதிர்பார்த்தது.

அதற்கு அடுத்து வந்த நாட்களில் வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் சென்றது... அபிஷரிகாவின் திருமணம் விசயம் தெரிந்திருந்தாலும் அவளது நடிப்புத் தொழில் பாதிக்கப்படவில்லை. கதையை மட்டும் நம்பி, கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படும் அழுத்தமான கதைகள் அவளைத் தேடி வந்தது. அப்படிப்பட்ட படங்களை மட்டுமே அவளும் தேந்தெடுத்து நடித்தாள். அதேபோல் வீட்டிலும் கணவன், மகனை கவனித்துக் கொண்டு சிறந்த இல்லத்தரசியாகவும் அவள் ஜொலித்தாள். இதற்கு எல்லாம் அவளுடன் சிவகுமரன் உறுதுணையாக இருந்தான் என்றால் மிகையில்லை.

அன்று இடைவிடாத படப்பிடிப்புக் காரணமாகக் களைத்து போய் வெகு சீக்கிரம் உறங்க சென்றுவிட்டாள் அபிஷரிகா. அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது அவளது கன்னத்தில் ஏதோ ஊர்வது போன்று தோன்றியது... அதைத் தட்டிவிட்டவள் மீண்டும் உறக்கத்தில் ஆழ்ந்தாள். மீண்டும் மீண்டும் ஏதோ ஊர்வது போல் தோன்ற அவள் மெல்ல கண்விழித்துப் பார்த்தாள். அதற்காகவே காத்திருந்தார் போன்று சிவகுமரன் அவளது நெற்றியில் முத்தமிட்டு,

"ஹேப்பிப் பேர்த்டே பொண்டாட்டி..." என்று ரகசிய குரலில் வாழ்த்து கூற... அவளது தூக்கம் தூர போனது.

"தேங்க்ஸ் சிவூ..." என்றவள் மகிழ்ச்சியுடன் அவனை அணைத்து கொண்டாள். அவன் சிரித்தபடி விலகி எழுந்தவன் அருகில் இருந்த மேசையில் இருந்த பெட்டியை எடுத்து அவளிடம் நீட்டினான்.

"அப்போ இருந்த வசதிக்கு வைர மோதிரம் மட்டும் தான் போட முடிஞ்சது. இப்போ தான் நான் நினைச்சதை செய்ய

முடிஞ்சது."

அவள் அவனைப் பார்த்தபடி பெட்டியை திறந்தாள். அதில் வைரத்தாலான கழுத்தணி, வளையல் எல்லாம் இருந்தது. அதை எல்லாம் மூடி வைத்தவள்,

"எனக்கு இது எல்லாம் வேண்டாம். எனக்கு வேண்டியது..." என்றவள் தனது ஆள்காட்டி விரலை அவனை நோக்கி நீட்டினாள். அவளது விரலை பிடித்து அதில் முத்தமிட்டவன்,

"அதற்காகத் தானே ப்ரஷனை அம்மாவிடம் விட்டு விட்டு வந்தது." என்று கண்ணடித்தவனின் திட்டத்தை அறிந்தவள் வாய்விட்டு சிரித்தாள்.

"நீ சரியான ஃப்ராடு சிவூ..." என்று அவள் கிளுக்கி சிரிக்க...

"இந்த விசயத்தில் ஃப்ராடாக இருந்தால் தான் வேலைக்காகும்."

"இப்படியே நீ பேசிட்டு இருந்தால் எதுவும் வேலைக்கு ஆகாது..." என்றவள் அதிரடியாய் அவனது உதட்டினை சிறை செய்தாள்.

ஆனால் சிவகுமரன் அவளைப் போன்று அதிரடியாகச் செயல்படாது மென்மையாய் அதேசமயம் அழுத்தமாய்த் தனது காதலை மனைவிக்கு நிரூபித்தான். முன்பு கூடியது போல் அதிரடி இல்லாது அத்தனை நிதானம் அவனிடத்தில்... அரிய பொக்கிசத்தைக் கொண்டாடுவது போல் அவன் அவளைக் கொண்டாடி மகிழ்ந்தான். அன்று

உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டு இருந்தவர்கள் இன்று காதலாய் கட்டுண்டு இருந்தார்கள்.

காமத்தை தாண்டிய அவர்களது காதல் இனிவரும் காலங்களில் அவர்களைக் காயப்படுத்தாது என்று நம்புவோமாக...!

*******************************

வெகு வருடங்களாகத் தந்தையின் அறை மூடியிருந்ததால் அதைத் திறந்து சுத்தப்படுத்திக் கொண்டிருந்தாள் அபிஷரிகா. அப்போது அவள் தனுஜாவின் நாட்குறிப்பை கண்டவள் யோசித்தபடி அதைப் பிரித்துப் பார்த்துப் படித்துப் பார்த்தவள் அதிர்ச்சியில் சிலையாய் சமைந்தாள். அடுத்த நொடி அவள் நாட்குறிப்பை அங்கேயே போட்டுவிட்டு தங்களது அறைக்கு ஓடி வந்தாள். வந்தவள் உடனே தனது அலைப்பேசியை எடுத்து கணவனுக்கு அழைத்தாள்.

"எனக்கும் உன் ஞாபகமாகவே இருக்கு அம்முலு... லீவு போட்டுட்டு வரவா?" கணவனது வார்த்தைகளில் இருந்த காதல் கூட அவளுக்கு உறைக்கவில்லை.

"சிவூ, நீ உடனே கிளம்பி வா..."

"என்ன விசயம் அம்முலு?" அவளது குரலில் இருந்த பதற்றம் அவனைப் பயப்பட வைத்தது.

"வா சிவூ..." என்றவள் அலைப்பேசியை வைத்துவிட... அவன் என்னவோ ஏதோவென்று பதறிக் கொண்டு

அடுத்தப் பத்து நிமிடத்தில் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும்,

"சிவூ..." என்று அவள் அவனை அணைத்துக் கொண்டு அழ... அவனோ புரியாது விழித்தாலும் பதிலுக்கு அவளை அணைத்து ஆறுதல் படுத்த தவறிவில்லை.

"என்னாச்சு அம்முலு?"

"தனுஜா..." என்று தேம்பியவளை கண்டு புரியாதவனாய்,

"அவங்களுக்கு என்ன?"

"அவங்க தான் அப்பாவை கொன்னிருக்காங்க..." அவள் கூறியதை கேட்டு அவன் அதிர்ச்சி அடைந்தான்.

"என்ன சொல்ற?" அவள் தனுஜாவின் நாட்குறிப்பை படித்தது பற்றி அவனிடம் கூறினாள்.

"தனுஜா திட்டம் போட்டு தான் அப்பாவோட வாழ்க்கையில் வந்திருக்கிறாள். அப்பா அம்மாவை ஊரில் விட்டுட்டுப் பிரிஞ்சியிருக்கிறது தெரிஞ்சு அவள் அப்பாவை மயக்கி இருக்கிறாள். இவங்க கல்யாணம் பண்ணிக்கிட்ட செய்தி கேட்டு அம்மா தற்கொலை பண்ணிக்கிட்டது தான் உனக்குத் தெரியுமே. அதுக்குப் பிறகு அப்பா நடைபிணமா போயிட்டார். என்ன இருந்தாலும் அவர் ஒரு நொடி பொழுதாவது அம்மாவை நேசிச்சிருப்பாரு இல்லையா? அவர் அம்மா நினைவா இருந்தது தனுஜாவுக்குப் பிடிக்கலை. குழந்தை பிறந்தால் சரியாகிருவாருன்னு நினைச்சு தனுஜா டாக்டரை பார்க்க போயிருக்கிறாள்.

அப்போ தான் அவளுக்குக் குழந்தை பிறக்காது என்கிற விசயமே தெரிஞ்சிருக்கு. அதை எப்படியோ அப்பா கேள்விப்பட்டு இது தான் சாக்குன்னு என்னை அவரோடு கூட்டிட்டு வந்துட்டார். அப்போ தாத்தா தனுஜாவை நடிகைன்னு ரொம்பக் கேவலமா பேசியிருக்கார். அந்த வார்த்தைகள் தான் என்னுடைய வாழ்க்கையைச் சீரழிச்சிருச்சு சிவூ... எந்த நடிப்பு தொழிலை தாத்தா கேவலமா பேசினாரோ அதே தொழிலில் என்னைக் கொண்டு வரணும்ன்னு அவள் அப்போதே தீர்மானித்து விட்டாள். அப்பா முன்னாடி பாசமா இருக்கிற மாதிரி நடிச்சிட்டு அவர் போனதுக்குப் பிறகு என் கிட்ட வேறு மாதிரி நடிச்சிருக்கிறாள். இதை நானும், அப்பாவும் உணராது நம்பி ஏமாந்து போனோம்." என்ற மனைவியைக் கண்டு அவனுக்கு இரக்கம் சுரந்தது.

"வேண்டாம் விடு அம்முலு..." என்று அவன் கூற...

"நான் கடந்த காலத்தைத் திரும்பி பார்ப்பது இல்லை சிவூ... ஆனா இப்போ படிச்ச விசயத்தை என்னால் ஜீரணிக்க முடியலை. வீடியோ வச்சு நான் அவளை மிரட்டினேன் இல்லையா? அது அவளை ரொம்பப் பாதிச்சு இருக்கு. நான் எப்படியும் அப்பா கிட்ட விசயத்தைச் சொல்லிருவேன்னு பயந்து இவங்க முந்திக்கிட்டாங்க. ஆமாம், அப்பாவோட காரிலிருந்த ப்ரேக்கை கழட்டி விட்டிருக்காங்க. ஏன்னா அப்பா இறந்தால் சொத்து முழுவதும் அவங்க கைக்கு வந்திரும்ன்னு தப்புகணக்கு போட்டிருக்காங்க... ஆனா அப்பாவுக்கு வச்ச ஆப்பில் அவங்க எப்படிச் சிக்கிக்கிட்டாங்கன்னு தான் தெரியலை."

"உங்கப்பா அவங்களை உடன் வர சொல்லி அழைச்சு இருக்கலாம். அவங்களும் தவிர்க்க முடியாது உடன் சென்றிருக்கலாம்."

"ம், இருக்கலாம் சிவூ... அப்பா ரொம்பப் பாவம்..."

"பொண்டாட்டி இருக்கும் போது வேறு பெண்ணைத் தொட்டது அதைவிடப் பாவம் அம்முலு... உங்கம்மாவுக்கு அவங்க ரெண்டு பேர் செய்த துரோகம் தான் இதற்குக் காரணம். இதில் வருந்த ஒன்றுமில்லை."

"அது என்னவோ உண்மை தான் சிவூ... ஏன் எல்லா ஆண்களும் இப்படி இருக்காங்க சிவூ?" வலியுடன் கேட்டவளை கண்டு அவனுக்கும் வலித்தது.

"ஒட்டுமொத்தமா எல்லா ஆண்களையும் அப்படிச் சொல்லாதே அம்முலு. உன் தாத்தா இல்லையா... இவ்வளவு ஏன் நான் இல்லையா...? நல்லவங்களும் இருக்கத்தான் செய்றாங்க. என்ன ஒண்ணு, நல்லவங்களை விடக் கெட்டவங்களோட எண்ணிக்கை தான் இங்கு அதிகம்."

"நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி சிவூ..."

"நான் மட்டுமென்ன..." என்றவனின் பார்வை கணவன் பார்வையாக மாறியது.

"வேண்டாம் சிவூ... நான் இன்னும் குளிக்கலை..."

"அதுக்கென்ன நான் குளிப்பாட்டி விடறேன்டி..." என்றவன் அவளை மேலே பேசிவிடவில்லை.

தொடரும்...!!!

## அத்தியாயம் : 29

சிவகுமரனும், அபிஷரிகாவும் இணைந்து ஆகாஷ் மற்றும் யமுனாவின் திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்தனர். எல்லோரும் எதிர்பார்த்தபடி அபிஷரிகா சிறந்த மருமகளாக நாத்தனாரின் திருமணத்திற்குப் பம்பரமாய்ச் சுழன்று சுழன்று வேலை செய்து கொண்டிருந்தாள். சிவகுமரன் அவளை ஓய்வெடுக்கச் சொல்லி கடிந்த போதும் அவள் கேட்கவில்லை. திருமணம் முடிந்ததும் ஆகாஷ் தோழியைக் கிண்டலடித்தான்.

"நல்லவேளை நீ சீக்கிரமா சார் கூடச் சேர்ந்தது. இல்லைன்னா நான் கிழவனானாலும் பிரம்மச்சாரியா தான் இருந்திருக்கணும்." என்று கேலி செய்து சிரிக்க...

"சிவூ, இவன் எதுக்கு இப்படிச் சொல்றான்?" என்று அவள் சிணுங்கினாள். கணவனிடம் மட்டும் அவள் சிறுபிள்ளை தான்... சிவகுமரன் ஆகாஷிடம் தான் கூறியதை கூறியவன்,

"எனக்கு நம்பிக்கை இருந்தது, நீ என்னைத் தேடி வருவன்னு... அதான் ஆகாஷிடம் காத்திருக்கச் சொன்னேன். அதே போல் நீயும் என்னைத் தேடி வந்துட்ட..." என்று கூறியவனைக் கண்ணிமைக்காது பார்த்தாள் அவள்... அவனது நம்பிக்கைக்குத் தான் எத்தனை சக்தி...!!!

"நிச்சயம் உன் நம்பிக்கையை நான் காப்பாத்துவேன் சிவூ..." என்றவள் அவனது தோளில் சாய்ந்து கொள்ள...

"முதல்ல எங்களுக்கு ரொமான்ஸ் பண்ண இடத்தைப் பிக்ஸ் பண்ணிட்டு அப்புறம் நீங்க ரெண்டு பேரும்

ரொமான்ஸ் பண்ணுங்க..." ஆகாஷின் கிண்டலில் அனைவரும் வாய்விட்டு சிரித்தனர்.

இரவு யமுனாவை ஆகாஷின் வீட்டில் விட்டு விட்டு எல்லோரும் தங்களது வீட்டிற்குத் திரும்பினர். சிவகுமரன் பொன்னம்பலத்திடம் திருமணக் கணக்குகளைப் பற்றிப் பேசிவிட்டு அறைக்கு வரும் போது ப்ரஷன்ஜித் உறங்கியிருந்தான். அபிஷரிகா குளித்துவிட்டு அறைக்குள் வந்தாள். அவளைப் பார்த்துச் சன்னமாக விசிலடித்தவன்,

"டூ மினிட்ஸ்..." என்றுவிட்டு குளியலறைக்குள் புக...

"நீயென்ன நூடில்சா சிவூ..." என்று அவள் அவனைக் கிண்டலடித்தாள்...

"உனக்கு இருக்கிற வாய்க்கு... வந்து கவனிச்சிக்கிறேன்டி..." என்றவன் கதவை அடைத்துக் கொண்டான்.

சொன்னபடி இரண்டே நிமிடத்தில் குளித்துவிட்டு வந்தவன் அவளைத் தனது கைகளில் ஏந்தி கொண்டு தங்களது பிரத்யேக அறைக்குச் சென்றான். அவனையே பார்த்திருந்தவள்,

"பாவா..." என்று அவனை அழைக்க... அவன் சுற்றும் முற்றும் பார்த்தபடி,

"என்னையவா சொல்ற?" என்று கேட்டான்.

"ம், ம்... யமுனா ஆகாஷை பார்த்து பாவான்னு கூப்பிட்டாள். அதான் எனக்கும் ஆசையா இருந்தது."

"வேண்டாம் அம்முலு... அது வேறு யாரையோ கூப்பிடற மாதிரியிருக்கு. நீ சிவூன்னே கூப்பிடு... அது தான் கிக்கா இருக்கு." என்று கண்சிமிட்டி சிரித்தவன் மனைவியைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான்.

"சிவூ, இப்போ இது வேண்டாம்." என்றவளை அவன் வியப்பாய் பார்த்தான். அவனை விட அவள் தான் இதில் அதிகம் ஆர்வம் காட்டுவது.

"என்னடி ஆச்சு? ஆர் யூ ஆல்ரைட்? இதுக்குத் தான் அதிக வேலை பார்க்காதேன்னு சொன்னேன்." அவன் அவளைக் கடிந்து கொண்டான்.

"இது அதில்லை சிவூ... வேறு..." என்றவளை அவன் விழிகள் இடுங்க பார்க்க... அவள் அவனது கையை எடுத்து தனது வயிற்றில் மீது வைத்து அவனை ஆர்வமாகப் பார்த்தாள்.

"ஹேய் உண்மையாவா?" அவனுக்குச் சந்தோசத்தில் என்ன செய்வது என்று தெரியவில்லை.

"ஆமா சிவூ, இப்பத்தான் கன்ஃபார்ம் பண்ணினேன்." என்றவள் வெட்கத்துடன் தனது முகத்தை அவனது நெஞ்சில் புதைத்து கொண்டாள்.

"இந்தத் தடவை எனக்கு உன்னை மாதிரி ஒரு பெண் குழந்தை வேணும் அம்முலு."

"வேண்டாம் சிவூ... அது என்னை மாதிரி அடங்காப்பிடாரியா வரும். சொன்ன பேச்சு கேட்காது." என்று மறுத்தவளை குனிந்து பார்த்தவன்,

"உன்னை மாதிரி பைத்தியக்காரத்தனமா என் மேல் அன்பு வைக்குமே..." என்று அவன் காதலோடு கூற... அவளது எதிர்மறை குணத்தைக் கூட நேர்மறையாக எண்ணும் கணவனைக் கண்டு அவளது காதல் தான் அதிகரித்தது.

"நாளைக்குச் செக்கப் போகலாம். உனக்கு எதுவும் வேலை இருக்கிறதா?" என்று அவன் கேட்க... அவள் இல்லையென்று தலையசைத்தாள்.

அவன் அவளை அணைத்துக் கொண்டு படுத்தான். அவன் அணைப்புக் கொடுத்த பாதுகாப்பில் அவள் நிம்மதியாய் விழி மூடினாள்.

மறுநாள் எல்லோரிடமும் விசயம் சொன்னதும் சந்தோசப்பட்டனர். ப்ரஷன்ஜித்,

"எனக்குத் தங்கச்சி பாப்பா தான் வேணும்..." என்று சந்தோசத்தில் ஆர்ப்பரித்தான்.

"என் மகனும் என் கட்சி..." என்று மனைவியிடம் கூறி சிரித்தான் சிவகுமரன்...

இருவரும் மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரை பார்த்தனர். ப்ரஷன்ஜித் பிரசவத்தைப் பார்த்த அதே மருத்துவர் தான் அவர்... ஏனெனில் அவர் தான் புகழ் பெற்ற மகப்பேறு மருத்துவர்... இருவரையும் கண்டதும் அவர்

புன்னகையுடன் வரவேற்றார். அவருக்கு அபிஷரிகாவை நன்கு அடையாளம் தெரிந்திருந்தது. அபிஷரிகாவை பரிசோதித்து அவள் கர்ப்பமாக இருப்பதை உறுதி செய்தவர் அவளுக்கு மருந்துகள் எழுதி கொடுத்துவிட்டுச் சிவகுமரனை பார்த்தார்.

"வாழ்த்துகள் மிஸ்டர். சிவகுமரன்... உங்க கிட்ட ஒண்ணு சொல்லணும் சார்..." அவர் என்ன சொல்ல போகிறார் என்பதை அறியாது இருவரும் அவரைப் புன்னகையுடன் பார்த்திருந்தனர்.

"உங்க மனைவியைப் பத்திரமா பார்த்துக்கோங்க... அவங்க கிட்ட ஆயிரம் தவறுகள் இருந்தாலும் நீங்க அவங்களை அநாதை மாதிரி விட்டுட்டுப் போனது தவறு..." என்றவரை அவன் குழப்பத்துடன் பார்க்க... அவளோ வேதனையுடன் பார்த்திருந்தாள். பழைய நினைவுகள் அவளைச் சுனாமியாய்ச் சுழற்றியடித்தது.

"அன்னைக்கு நீங்க பாட்டுக்கு அபியை தனியா விட்டுட்டு போயிட்டீங்க... டியூட்டி டாக்டர் ரவுண்ட்ஸ் போகும் போது தான் அபி மயங்கி கிடப்பதை பார்த்திருக்காங்க. எவ்வளவு நேரம் மயங்கி இருந்தாங்களா தெரியாது. ஹை பிபி... பிரசவமான உடல் வேறு... ரொம்பக் கஷ்டப்பட்டுத் தான் அவங்களை உயிர் பிழைக்க வைத்தோம். இது மாதிரி ஒரு தவறு இனி நடக்காம பார்த்துக்கோங்க." அவர் கூறியதை கேட்டு அவனது விழிகள் கலங்கி சிவந்து போனது.

"இனி நான் கவனமா பார்த்துக்கிறேன் டக்டர்..." என்றவன் எழுந்து வெளியில் செல்ல...

"தப்பு எல்லாம் என் மேல் தான் டாக்டர்... அவரை ஒண்ணும் சொல்லாதீங்க..." என்றவள் தானும் வெளியில் வந்தாள்.

வீடு வரும் வரை இருவருமே எதுவும் பேசவில்லை. அறைக்கு வந்தும் அமைதியாக இருந்தவனைக் கண்டு அவளுக்குப் பாவமாக இருந்தது.

"தப்பு என் பெயரில் தான் சிவூ... நான் தானே இதுக்கு எல்லாம் காரணம்..." என்றவளை அவன் அடுத்த நொடி இறுக அணைத்திருந்தான்.

"என்னை மன்னிச்சிருடி... மன்னிச்சிரு..." என்று மன்னிப்பு கேட்டவனின் விழிகளில் இருந்து விழிநீர் உருண்டோடியது.

"விடு சிவூ... நீ அதைப் பத்தி பேசினால் எனக்கும் அழுகை அழுகையா வருது..." என்றவள் அழுகையில் தேம்பினாள். அவனது கை உயர்ந்து அவளது தலையை ஆறுதலாய் வருடி கொடுத்தது.

"என்னுடைய திமிருக்கு நான் ரொம்பவே அனுபவிச்சிட்டேன் சிவூ... என் மகனுக்குப் பால் கொடுக்க மறுத்ததற்குத் தண்டனையா தினமும் பால்கட்டி ரொம்ப அவஸ்தைப்பட்டேன் சிவூ... ரொம்பவே..." என்று பெருங்குரலெடுத்து அழுதவளின் வேதனையில் அவன் தனது வேதனையை மறந்தவனாய்,

"அதுக்கு எல்லாம் சேர்த்து வைத்து நம் மகளை நன்றாகப் பார்த்துக்கோ அம்முலு. இப்படி நீ அழுதுட்டு இருந்தால் நம் மகளும் அழுவாள். நம்ம பொண்ணு பாவமில்ல." அவனது இந்த வார்த்தைகள் வேலை செய்தது. அவள் தனது விழிகள் துடைத்துக் கொண்டு,

"அழலை சிவூ..." என்று விழிகளில் விழிநீரோடு புன்னகைத்தவளை கண்டு அவனது மனதில் இரக்கம்

சுரந்தது.

அவள் அவனைக் காதலித்ததைத் தவிர வேறு என்ன தவறு செய்தாள்? அந்தக் காதலை புரிந்து கொள்ளாது தானும் அவளை வாட்டி வதைத்து இருக்கிறோமே என்று அவன் தன்னைத் தானே வருந்தி கொண்டான். இனிவரும் காலங்களில் தனது காதலால் அவளைக் குளிப்பாட்ட வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டான்.

*********************************

ஏழாம் மாதம் நடக்கும் போது அபிஷரிகாவிற்கு ஊரை கூட்டி வளைக்காப்புச் செய்தான் சிவகுமரன். முதல் குழந்தைக்கு எதுவெல்லாம் செய்யத் தவறினார்களோ அதை எல்லாம் இந்தக் குழந்தைக்குச் செய்தார்கள். வளைக்காப்பு முடிந்து அலங்கார தேவதையாய் அறைக்குள் வந்த அபிஷரிகா சோர்வுடன் இருப்பதைக் கண்டு சிவகுமரன் அவளைக் கட்டிலில் அமர்த்தினான்.

"இன்னைக்கு என் பொண்ணு என்ன சொல்கிறாள்?" என்றபடி அவன் மனைவியின் வயிற்றின் மீது காதை வைக்க... தந்தையின் குரலில் வயிற்றில் இருந்த சிசு உற்சாகத்தில் துள்ளி குதித்தது.

"ஷிவா சந்தோசமா இருக்கேன்னு சொல்கிறாள்." அவன் மனைவியை நிமிர்ந்து பார்த்துக் குதூகலித்தான்.

இரண்டாவது குழந்தைக்கு அவள் தாய்மையை உணர்ந்தாலோ இல்லையோ அவன் ஒவ்வொரு நொடியும் அவளுக்குத் தாய்மையை உணர்த்தினான்... ஒவ்வொரு மாதமும் குழந்தையின் அசைவை அவளுக்குச் சொல்லி

கொடுத்து குழந்தையைப் பற்றிப் பேசி அவள் மனதில் குழந்தை மீதான பாசத்தை வளர்த்தான். மனதளவில் மனைவியாய் இருந்தவளை அவன் தாயாய் உணர செய்தான். அதற்கு நல்ல பலன் இருந்தது. மனைவி என்கிற எண்ணத்தை மீறி அவளுள் தாய்மை உணர்வு மிளிர்ந்தது.

"நீ அதை ஃபீல் பண்றியா அம்முலு?" கேட்டவனின் தலைமுடியை கலைத்து விளையாடியவள்,

"ம், ம்..." என்று நாணத்துடன் புன்னகைத்தாள். அவன் எழுந்தமர்ந்து அவளது காலை எடுத்து தனது மடியின் மீது வைத்துக் கொண்டு அதை மெல்ல பிடித்துவிட ஆரம்பித்தான்.

"அம்முலு, வெயிட் போட்டுருச்சுன்னு கவலையா இருக்கா?" தாய்மையின் பூரிப்பில் இருந்தவள் அவனது கண்களுக்கு அழகாகத் தான் தெரிந்தாள். ஆனால் அவளது நடிப்பு தொழிலை நினைத்து அவனுக்குக் கவலையாக இருந்தது.

"கவலைப்படாதே சிவூ... இருக்கவே இருக்கு டிவி சீரியல்... ஆபிஸ் டைம்... தொந்தரவே கிடையாது." என்று எளிதாக எடுத்துக் கொண்டு கலகலவெனச் சிரித்தவளை கண்டு அவனது முகத்திலும் புன்னகை தோன்றியது.

அடுத்து இரு மாதங்கள் கழித்து ஒருநாள் நள்ளிரவு பொழுதில் அபிஷரிகாவிற்குப் பிரசவ வலி எடுத்து அவள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள். அவளைப் பிரசவ அறைக்கு அழைத்துச் சென்றதும் சிவகுமரன் அவளை விட்டு விலகி வெளியில் செல்ல முயன்றான்.

"சிவூ..." மனைவியின் பலகீனமான குரலில் அவன் திரும்பி பார்த்தான். அவள் வலியில் அரற்றுவதைக் கண்டு அவனது விழிகளிலும் நீர் நிரம்பியது. அவள் அருகே விரைந்து வந்தவன்,

"சொல்லும்மா..." என்றபடி அவளது கரத்தை ஆறுதலாய்ப் பற்றினான்.

"ரொம்ப வலிக்குது சிவூ..." என்றவளை கண்டு அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவளது வலியை வாங்கிக் கொள்வதாக இருந்தால் அவன் வாங்கித் தாங்கி கொள்வானே! அவனது வேதனையைப் பார்த்தவள்,

"நீ போ சிவூ... உன்னைப் பார்த்தால் நான் பலகீனமாகி போவேன்..." என்க... அவன் தனது வேதனையை உதறி தள்ளிவிட்டு அவளுக்குத் தைரியமூட்டினான்.

"என்னுடைய பலகீனத்தை நான் இதுவரை யாரிடமும் காட்டியதில்லை சிவூ... ஆனால் உன்னிடம் காட்டாது இருக்க முடியவில்லை..." என்றவள் வலியில் அவனது கரத்தை இறுக்கமாய்ப் பற்றிக் கொண்டாள்.

அன்று அவள் ப்ரஷன்ஜித் பிரசவத்தின் போது உடனிருக்க விடாது தன்னைத் துரத்தி விட்டதற்கான காரணம் இப்போது தான் அவனுக்கு உறைத்தது.

"உன் பலவீனத்தை நீ என்னிடம் காட்டும் போது அது ஆயிரம் மடங்கு பலமாக உன்னிடமே திரும்பி வரும் அம்முலு..." என்றவன் அவளுக்குத் தைரியம் கூற... அவனது தைரியம் அவளுக்கு யானை பலத்தைக் கொடுத்தது.

அடுத்தச் சில மணித்துளிகளில் அவள் அழகான பெண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். தகப்பனை உரித்து வைத்து பிறந்திருந்தாள் அவர்களது மகள்... சிவகுமரன் மகளைக் கூடக் காணாது மனைவியின் கரத்தினை இறுக பற்றியபடி கண்களில் கண்ணீர் கரை கட்டி நிற்க மனைவியிடம்,

"தேங்க்ஸ் அம்முலு..." என்க...

"மகள் யாரை மாதிரி இருக்கிறாள் சிவூ..." குழந்தையைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்ததால் அவளிடம் காட்டவில்லை.

"இன்னும் நான் பார்க்கலை..." என்றவனை இமைக்க மறந்து பார்த்திருந்தவள்,

"என்னை அவ்வளவு பிடிக்குமா சிவூ?" என்று கேட்க...

"நீ தான்டி என்னோட முதல் குழந்தை... உன்னைப் பிடிக்காது இருக்குமா?" என்று அவன் விளையாட்டாய் அவளது நெற்றியில் முட்டியபடி கேட்டான். இப்படிப்பட்ட தாயுமானவனைப் புரிந்து கொள்ளாது விலகி போன தனது மடமையை எண்ணி அவள் தனக்குள் வருந்தினாள்.

"எனக்கு அம்மா, அப்பா எல்லாம் நீ தான் சிவூ..." என்றவள் விழி மூடி தனது முகத்தோடு அவனது முகத்தை அழுத்தமாய்ப் பதித்துக் கொண்டாள். இருவரது மனதிலும் அத்தனை நிறைவு...! திடுமெனக் குழந்தையின் அழுகையில் அவர்களது மோனநிலை கலைந்தது.

"பேபிக்குப் பீட் பண்ணு அபி..." மருத்துவர் குழந்தையை அவளிடம் கொடுக்க... அவள் ஆசையுடன் மகளை வாங்கித் தாய்மை உணர்வோடு தாய்ப்பால் கொடுத்தாள். அந்தக் கணம் அவளது முகத்தில் எல்லையில்லாத ஆனந்தம், நிம்மதி ஏற்பட்டது.

குழந்தை பிறந்ததை அறிந்து அனைவரும் சந்தோசப்பட்டனர். ப்ரஷன்ஜித் தங்கையை விட்டு நகரவில்லை. தந்தை அன்னையைக் கண்ணும் கருத்துமாய்ப் பார்த்துக் கொள்வது போல் அவன் தனது தங்கையைப் பார்த்துக் கொண்டான்.

மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த அபிஷரிகாவை ராஜம் முன்னின்று ஆரத்தி கரைத்து வரவேற்றார். அவரைக் கண்டதும் அவள்,

"நானி..." என்று சந்தோசத்தில் சிறுபிள்ளை போன்று கூச்சலிட்டபடி அவரை அணைத்து கொண்டாள்.

ராஜத்திடம் ப்ரஷன்ஜித்தும் நன்கு ஒட்டி கொண்டான். அவர்களது மகன், மகளை வளர்க்கும் பொறுப்பை ராஜம் மனமுவந்து ஏற்றுக் கொண்டார். இனி அவர் இங்கேயே இருக்கும்படி சிவகுமரன் வேண்டி கேட்டுக் கொண்டான். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

"நானி, தனுஜா செய்த தவறுக்கு நான் உன் கிட்ட மன்னிப்பு கேட்டுக்கிறேன்." ஒருநாள் தனிமையில் அபிஷரிகா ராஜத்திடம் மன்னிப்பு கேட்டாள்.

"அதற்கு நீயென்ன செய்வ அபிம்மா... விடு." என்றவர் அதை அப்படியே விட்டு விடச் சொன்னார்.

சரியாக மூன்று மாதம் கழித்துச் சிவகுமரன், அபிஷரிகா தங்களது மகளுக்கு 'ஷிவாரிகா' என்று பெயர் வைத்தனர். அன்றிரவு ராஜத்திடம் குழந்தைகளை விட்டு விட்டு அபிஷரிகா கணவனைத் தேடி வந்தாள். அங்கே அவன் மடிகணினியில் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தான். அவன் அருகில் தொப்பென்று அமர்ந்தவள்,

"உனக்கு வர வர பொறுப்பே இல்லை சிவு..." என்க...

"அப்படியா சொல்கிறாய் அம்முலு... என்ன பொறுப்பு இல்லை... சொல், சரி செய்து கொள்கிறேன்." அவன் புன்சிரிப்புடன் கூற...

"பார், இப்போது கூடப் பொறுப்பில்லை... அழகான மனைவி இப்படி அருகில் வந்து அமர்ந்தும் நீ என்னைக் கண்டுக்காம லேப்டாப்பை நோண்டிக்கிட்டு இருக்க.. நான் இதைத் தான் சொன்னேன்... உனக்குக் கொஞ்சமும் பொறுப்பில்லை என்று..." அவளது நோக்கம் புரிந்தவனாய் அவன் மடிகணினியை அணைத்துவிட்டு அவளை அணைத்துக் கொண்டான்.

"இப்போ ஓகேவா?"

"ம்ஹூம்..." என்றவள் அவனது உதடுகளில் தனது முத்திரையைப் பதிக்க... அடுத்த நொடி அவன் அவளது செயலை தனதாக்கி கொண்டான். வெகு நேரம் கழித்து அவளை விடுவித்தவன்,

"தூங்கு அம்முலு..." என்று கூற... அவள் அவனை முறைத்து பார்த்தாள்.

"ப்ச், சொன்னால் கேட்கணும் அம்முலு... உன் உடல்நிலையைப் பார்க்கணும்..." என்றவனின் தலையில் வலிக்காது கொட்டியவள்,

"அதைத் தானேடா பார்க்க சொல்கிறேன்..." என்றவளது குரலில் கோபமே இல்லை... மாறாகக் கிறக்கமே இருந்தது.

"இப்போ வேண்டாமே..." அவன் தயங்கினான்...

"வேணும்... அவ்வளவு தான்..." என்று அடம்பிடித்தவளை அவன் வாய் கொள்ளா சிரிப்புடன் தனது கைகளில் அள்ளி கொண்டான்.

அவளுக்கு அவனை விட்டிருக்க முடியாது... அவன் என்றுமே அவளுடன் இருக்க வேண்டும். அவள் ஒரு காதல் கிறுக்கு என்றால் மிகையில்லை...!!!

************************************

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு...

இன்று வீட்டிற்கு வரும் போதே அபிஷரிகா மிகவும் சந்தோசமாக இருந்தாள். இப்போது அவள் திரைத்துறையில் தவிர்க்க முடியாதவளாகி விட்டாள். நடிப்பு, படத்தயாரிப்பு என்று அவள் எப்போதும் பிசியாகி இருந்தாள். அத்தோடு திரைத்துறையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு என்று தனியே ஒரு அமைப்பு நிறுவி அதைச் சிறப்பாக நடத்தி வருகிறாள். ஆரம்பத்தில் அதைக் கண்டு எள்ளி நகையாடியவர்கள் அதிகம். ஆனால் சிவகுமரன் அவளுக்குப் பக்கபலமாக இருந்தான். அந்த அமைப்பின்

மூலம் இளம் நடிகை ஒருத்திக்கு ஏற்பட்ட பாலியியல் சீண்டலுக்குச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுக் குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்த போது தான் ஒட்டுமொத்த திரையுலகமும் அவளைத் திரும்பி பார்த்தது. அன்று முதல் புதிதாய் நடிக்க வந்த பெண்களுக்கு இந்த அமைப்புத் தைரியத்தைக் கொடுத்தது. 'வாய்ப்பு வேண்டுமானால் படுக்கைக்கு வா' என்றழைக்கும் ஆண்களின் வயிற்றில் புளியை கரைத்தது. மொத்தத்தில் அவள் திரையுலகை ஆட்டிப்படைத்தாள். இதற்கு எல்லாம் காரணம் சிவகுமரன் அவளுக்கு அளிக்கும் தைரியம் தான்.

இன்றும் அதே போல் ஒரு வழக்கில் வெற்றி பெற்றவள் அந்த விசயத்தைக் கணவனிடம் பகிர்வதற்காக மகிழ்ச்சியுடன் வீட்டிற்கு வந்தாள். அவளைப் போன்றே அவளது மகள் ஷிவாரிகாவும் அன்று பள்ளியில் நடந்த விசயங்களைத் தந்தையிடம் கூறுவதற்காக அவனது வரவினை எதிர்பார்த்து ஆவலாகக் காத்திருந்தாள்.

"அப்பா வருவதற்குள் ஹோம்வொர்க்கை செஞ்சு முடிங்க..." என்று மகனுக்கும், மகளுக்கும் உத்தரவிட்டவள் யமுனாவை காண சென்றாள்.

யமுனா பிரசவத்திற்காகத் தாய்வீடு வந்திருந்தாள். ஆகாஷ் விட மாட்டேன் என்ற போதும் அவள் அழுது அடம்பிடித்து வந்து விட்டாள். யமுனா ஒன்று சொன்னால் அதற்கு ஆகாஷிடம் மறுப்பேது.

அபிஷரிகா மீண்டும் அறைக்கு வந்த போது இருவரும் வீட்டுப் பாடத்தை முடித்து விட்டிருந்தனர். இருவரையும் அழைத்துத் தன்னருகே அமர வைத்தவள் மகளுக்குக் 'குட் டச்' 'பேட் டச்' பற்றிச் சொல்லி கொடுக்க ஆரம்பித்தாள்.

"உன்னை க்ளீனா, ஹெல்த்தியாக வைத்து கொள்வதற்காக நானும், அப்பாவும் உன்னைத் தொடலாம். அது சேஃப் டச்.... இதேது அன்சேஃப் டச்ன்னா என்னன்னா... உன் அனுமதி இல்லாமல் உன்னை யாராவது தொடுவது... அதாவது சம்பந்தம் இல்லாது உன்னைத் தொட்டு பேசுவது... அப்படி யாராவது நடந்துக்கிட்டால் நீ உடனே அங்கே இருந்து ஓடிவந்து விடணும். இல்லைன்னா கத்தி கூச்சல் போட்டு மற்றவங்க கவனத்தைக் கவரணும். என்ன நான் சொல்றது புரியுதா ஷிவா?"

ஷிவாரிகா பெண் குழந்தை என்பதால் அபிஷரிகா மிகவும் கவனத்துடன் அவளை வளர்த்தாள். பொல்லாத இந்த உலகத்தை நினைத்து அவளுக்கு அத்தனை பயம். அதற்கு நேர்மாறாய் சிவகுமரன் மகளை மகனுடன் கராத்தே வகுப்பிற்கு அனுப்பி வைத்தான். அவன் மகளை மகனை போன்றே தைரியத்துடன் வளர்த்தான்.

அதே போல் மகனிடம் திரும்பியவள், "நீ பெண்களுக்கு மதிப்பு கொடுத்து நடந்துக்கணும் ப்ரஷூ. பெண் தானே என்று இழிவாக எண்ண கூடாது... அவங்களும் உன்னைப் போன்று சக மனுசி தான்." என்று அவனுக்கு அறிவுரை கூறினாள்.

பெண் குழந்தைக்கு அறிவுரை கூறி வளர்ப்பது போல் ஆண் குழந்தைக்கும் அறிவுரை கூறி வளர்ப்பது நல்லது என்றே அவள் கருதினாள்.

"எஸ்ம்மா... நீங்க சொன்னது எனக்கு நல்லா ஞாபகத்தில் இருக்கு... இன்னைக்குக் கிளாசில் ஒரு பொண்ணு ஸ்கர்ட்டில் ப்ரீயர்ட்ஸ் கறை பட்டிருந்தது. அதைப் பார்த்து என் பிரெண்ட்ஸ் எல்லோரும் சிரிச்சாங்க. அந்தப் பொண்ணு அவமானத்தில் அழுதிருச்சும்மா. நான் தான்

அவங்களைச் சத்தம் போட்டு அடக்கினேன். கறை பட்டால் என்னம்மா? மண்ணில் புரண்டு விளையாடும் போது ஏற்படும் கறை மாதிரி தானே அது... நான் இதைச் சொன்னதுக்கு டீச்சர் என்னைப் பாராட்டினாங்கம்மா..." என்ற மகனை பார்க்கும் போது அவளுக்கு அத்தனை பெருமையாக இருந்தது. சிவகுமரனை போன்றே ப்ரஷன்ஜித் பொறுமையானவன், பக்குவமானவன்... இந்தப் பன்னிரெண்டு வயதில் அவனது பக்குவம் சற்று அதிகமே...

"என் சம்மத்து ப்ரஷூ கண்ணா..." என்று அவள் மகனை பாராட்டி முத்தமிட...

"சமத்து அண்ணா..." என்றபடி ஷிவாரிகாவும் சகோதரனின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"எப்பப்பாரு எனக்குப் போட்டிக்கு வர்றதே உனக்கு வேலையா போச்சு..." அவள் மகளிடம் காய...

"நீங்க தான் எப்பப்பாரு என் கூடப் போட்டிக்கு வர்றீங்க." மகளும் பதிலுக்குச் சிலிர்த்து கொண்டாள்.

"எப்பப்பாரு அம்மாவுக்கும், பொண்ணுக்கும் சண்டை தானா?"என்று கேட்டபடி சிவகுமரன் அறைக்குள் நுழைந்தான்.

"அப்பா..." என்றபடி மகனும் மகளும் அவனது இரு தோள்களிலும் தொற்றிக் கொள்ள...

"சிவூ..." என்றபடி மனைவி அவனை அணைத்துக் கொண்டு நெஞ்சில் சாய்ந்து கொண்டாள்.

"சிவூ, நான் உன் கிட்ட முக்கியமான விசயம் சொல்லணும்." அவள் ஆரம்பிக்க...

"அப்பா, நானும் முக்கியமான விசயம் சொல்லணும்..." என்று மகளும் போட்டி போட்டாள்.

"என்னடி முக்கியமான விசயம்? அவள் என் கூடச் சண்டை போட்டாள்... இவள் என் கூடச் சண்டை போட்டாள்ன்னு... இதுவா முக்கியமான விசயம்..." அன்னை மகளிடம் வம்பு பேச...

"பாருங்கப்பா..." சின்னவள் சிணுங்க...

"இப்போ அம்மா டைம் இல்லை... இப்போ என்னோட பேபி டைம்... நீ சொல்லு பேபி..." என்று மகளிடம் கூறியவன் மனைவியிடம் விழிகளால் மன்னிப்பை யாசித்தான்.

"உனக்காக விடறேன்..." என்றவள் கணவனுக்காகக் காபி கலக்க சென்றுவிட்டாள்.

இரவு குழந்தைகள் இருவரும் உறங்கியதும் சிவகுமரன் மனைவியை எழுப்பினான்.

"ஏய் தூங்குமூஞ்சி எழுந்திருடி..." என்க...

"அர்த்த ராத்தியில் தூங்காம என்ன பண்ணுவாங்க...? எதுக்கு எழுப்பின...?" என்றவள் அவனைத் தூக்க கலக்கத்துடன் பார்த்தாள். அவன் அவள் கண்முன் இருசக்கர வாகனத்தின் சாவியை ஆட்ட... அதைக் கண்டதும் அவளது தூக்கம் பறந்து போனது. அவள் உடனே எழுந்து கிளம்பி வந்தாள்.

சிவகுமரனின் கைகளில் இருசக்கர வாகனம் கிழக்கு கடற்கரை சாலையில் காற்றைக் கிழித்துக் கொண்டு வேகமாகப் பறந்தது. சிறிது தூரம் வந்தவன் வேகத்தைச் சற்று குறைத்துவிட்டு மனைவியிடம்,

"என்னமோ சொல்லணும்ன்னு சொன்னியே... இப்போ சொல்லு... இது என் அம்முலுக்கான டைம்..." என்க... அதைக் கேட்டு அவளது முகத்தில் புன்னகை விரிந்தது. அன்று நடந்ததை அவள் அவனிடம் சுவாரசியமாகக் கூற... அவனும் கவனமாய்க் கேட்டுக் கொண்டான்.

"அம்முலு, என்னைக் கெட்டியா பிடிச்சுக்கோ..." அடுத்து அவன் செய்யவிருப்பதை உணர்ந்தவளாய் அவள் மகிழ்ச்சியுடன் அவனை இறுக்கமாய் அணைத்துக் கொண்டு அவனது தோளில் நாடி பதித்துச் சாலையைப் பார்த்தாள்.

அடுத்த நொடி அவன் பைக்கை ரேஸ் செய்து வண்டியின் முன் சக்கரத்தை மேலே தூக்கி இருந்தான். பின் சக்கரத்தை மட்டும் ஆதாரமாகக் கொண்டு வண்டி சீறலுடன் சாலையில் வேகமாகச் செல்ல... அதைக் கண்டவள்,

"ஹேய்..." என்று சந்தோசத்தில் கத்தி ஆர்ப்பரித்தாள்.

அவன் மீண்டும் சாதாரணமாக வண்டி ஓட்டியதும் அவள் அவனது காதோரம் கிசுகிசுப்பாய், "அன்னைக்கு மாதிரி ஒரு ஸ்ட்ராங் கிஸ் கொடேன் சிவூ..." என்று கிறக்கத்துடன் கேட்க...

"ம்ஹூம், முடியாது... ரூமுக்கு வா... விதவிதமாய்க் கிஸ் கொடுக்கிறேன்." என்று அவன் மறுக்க...

"போடா..." என்று அவள் பொய் கோபம் கொள்ள...

"அன்று உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டு இருந்த சிவூ இவன் இல்லை... இவன் உள்ளத்திற்கு மட்டுமே, அதுவும் என் அம்முலு உள்ளத்திற்கு மட்டுமே அடிமையானவன்..." என்று கூறியவனின் கூற்றில் இருந்த காதலை உணர்ந்தவள் அவனை இறுக்கி அணைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

வழியில் இருந்த டீக்கடை முன் வண்டியை நிறுத்தியவன் அவளுக்கு டீ வாங்கிக் கொடுத்தான். அவளை உற்று கவனித்த கடைக்காரர்,

"நீங்க நடிகை அபிஷரிகா தானே..." என்று சந்தேகமாகக் கேட்க... அவள் கணவனைத் திரும்பி ஒரு நொடி பார்த்துவிட்டு பின்பு அவர் புறம் திரும்பி,

"இல்லைங்க... நான் இவரோட மனைவி..." என்க...

சிவகுமரன் காதலோடு மனைவியின் தோளில் கை போட்டு அணைத்துக் கொள்ள... அவளும் காதலோடு அவன் தோளில் சாய்ந்து கொண்டாள். கடந்த காலத்தில் காதலை

தொலைத்தாலும் நிகழ்காலத்தில் அந்தக் காதலை சரியாகப் புரிந்து கொண்டு மீண்டும் தங்களது இணையுடன் இணைந்த இவர்களது காதலும் போற்றுதலுக்கு உரியது தான்... இந்தப் புரிதலான காதல் அவர்களது வாழ்வின் இறுதிவரை இருக்கும் என்று வாழ்த்தி விடைபெறுவோமாக...!!!

"இம்மையும் நீயே மறுமையும் நீயே என்னுயிர் காதல் நீயே,

நீயின்றி ஊரும் உறவும் இல்லை உறவாட நீ வேண்டுமே,

உயிரின்றி உடலும் உணர்வும் இல்லை உயிர் மூச்சாய் நீ வேண்டுமே,

உனக்காகப் பிறந்தேனே உன்னுடன் வாழவே,

பிரியாமல் இருப்பேனே உன்னுடன் வாழவே,

நீயே நீயே என் காதல் நீதானே,

நீயே நீயே என் வாழ்வும் நீதானே..."

முற்றும்...!!!